226828

சிவோஹம்.

# மாமௌனமணிக்கோவை

என்ற

# மெய்ஞ்ஞான அநுபூதிரஸம்

10 MAR

இஃது

மதுரை ஜில்லா, பெரியகுளம், வராகநதி,

வடகரையில் எழுந்தருளியிருக்கும்

## மௌனகுருசுவாமிகள்

திருவருள்புரிந்தருளியதை,

பெரியகுளம், வடகரை, தொட்டப்பநாயக்கனூர்

ஜெமீந்தார் திவான் பஹதூர்

**V. ராமபத்திர நாயுடு** அவர்களால்,

பெரியகுளம், ஸ்ரீ மீனம்பிகை அச்செந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு. **1000** காப்பிகள்)

*All rights reserved.*

**1923.**

## அபிப்பிராயம்.

இந்நூலருளிச்செய்திரானின்ற மௌனகுருசுவாமிகள் இந்த டவுனிற்கு வந்து சுமார் 19-வரு ஆகின்றது எனக்கு நன்றாய்த்தெரியவரும். சுவாமிகள் வந்த தேதி முதல் நாளது வரையிலும் வாக்குத்தொனிக்கப் பார்த்ததேயில்லை கேள்வியுமில்லை. இந்நூல் ஷை சுவாமிகள் திருக்கரத்தாலேயே முற்றிலும் எழுதி முற்றுப்பெற்றது. ஷை சுவாமிகள் இரகசியத்தை உணரமுடியாமையால் சுவாமிகள் நாட்டிய கருத்திற்கு வேறுபடாமலே உள்ளதை உள்ளபடியே அமைக்கப்பட்டதென்னக் காண்கவுமிங்ஙன். பின்வருமாறு.

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இந்த நூலிற்கு எல்லா பாத்தியதையும் அடையப்பெற்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் அடியில் கையொப்பமிட்டிருப்பவரின் அனுமதியின்றி எவரும் புதிப்பிக்கவாவது அச்சிடவாவது கூடாது

ஷை நூலின்கண் அடக்கம் வசனம் **3**, செய்யுட்கள் **3282**
ஆக வகை இரண்டுக்கும் **3285**.

இப்படிக்கு,
திவான்பஹதூர்,
**V. இராமபத்திர நாயுடுகாரு,**
வடகரை, தொட்டப்பநாயக்கனூர்,
ஜெமீந்தார்.

## பிழை திருத்தம். B

| பக்கம். | பாட்டு. | வரி | பிழை. | பிழை திருத்தம். |
|---|---|---|---|---|
| 4 | 10 | 2 | வொழுகும்வஸ்தி | வொழுகும்வஸ்து |
| 10 | 4 | 1 | யகண்டாநுபவ, | வகண்டாநுபவ |
| 1i | 0 | 28 | ரகசியம் | இரகசியம் |
| 18 | 7 | 2 | சிலயோகமே | சிவயோகமே |
| 25 | 0 | 10 | ரகசியம் | இரகசியம் |
| 26 | 4 | 2 | வள்ளவோர் | வள்ளலோர் |
| 35 | 9 | 2 | சுட்டுச்கடங்கா | சுட்டுக்கடங்கா |
| 55 | 9 | 1 | நிரவிசறபம் | நிர்விசற்பம |
| 77 | 3 | 1 | பொரி | பொறி |
| 82 | 10 | 2 | இப்பாலெப்பாலென் றதின் மெங்கு [ல்லா | இப்பாலப்பாலென்ற தின்றெங்கு [ல்லா |
| 103 | 10 | 4 | சொல்லவும்சொல்லி | சொல்லவுஞ்சொல் லி |
| 105 | 6 | 2 | இரவினைக்கெடுத்த | இருவினைகெடுத்ததே |
| 109 | 10 | 8 | அற்புதமே [தே | வற்புதமே |
| 110 | 6 | 3 | கனிபரித்து ரசம் | கனிபறித்திரஸம் |
| 112 | 1 | 3 | துர்குணர்க்கும் | துற்குணர்க்கும் |
| 128 | 5 | 2 | சோதித்தாத்துறங்கி | சோதித்தறத்துறந்து |
| 160 | 28 | 5 | சாதலறு [ற்கிற் | காதலுறும் [நிற்கிற் |
| 186 | 140 | 1 | மனப்பறை | மணப்பறை |
| 196 | 36 | 2 | மணைளெங்கு | மணைளெங்கு |
| 212 | 2 | 2 | சுயானுபூதி | சுவானுபூதி |
| 219 | 41 | 6 | தாக்சி | தாக்கி |
| 261 | 17 | 1 | துக்கரூபம் | துக்கவுருவம் |
| 262 | 28 | 1 | சிலதொந்தம் | சிவதொந்தம் |
| 299 | 42 | 3 | பீரம்ம | பிரம்ம |
| 383 | 2 | 1 | மன்றாகில் | மற்றாகில் |
| 390 | 10 | 1 | கிரியர்க்கனுடா | கிரியர்க்கனுகிடா |
| 401 | 4 | 1 | துணர்ந்து | துடர்ந்து |
| 410 | 12 | 2 | பாராதீதனம் [த்து | பாராதீனம் [து |
| 442 | 5 | 4 | தெவ்ளிவடிவத்தெம் | தெள்ளிவடித்தெடுத் |

# அட்டவணை.




| செய்யுள் இலக்கம். | செய்யுளின் பெயர். | செய்யுள் பக்கம். | செய்யுள் அடிகள். | செய்யுள் தொகை. |
|---|---|---|---|---|
| ௦ | அயிக்கியமாமணிப்போற்றிமாலை ... | ... | 2 | 72 |
| 1 | அகவல் .... ... | 244 | 1 | 108 |
| 2 | அங்கக்கூறு .... ... | 260 | 2 | 30 |
| 3 | அஞ்ஞானநிலை .... ... | 230 | 3 | 32 |
| 4 | அடங்காவியப்பு .... ... | 372 | 4 | 4 |
| 5 | அத்வைதப்பள்ளி .... ... | 263 | 2 | 29 |
| 6 | அதிதீவிரப்பக்குவசீடன் ... | 84 | 4 | 16 |
| 7 | அநகம் ... ... | 80 | 4 | 10 |
| 8 | அநுபூதிப்பதிகம் .... ... | 33 | 4 | 12 |
| 9 | அநுபூதிஉபதேசஆனந்தம் ... | 91 | 2 | 18 |
| 10 | அநுபவானந்தப்புகழ்ச்சி ... | 128 | 2 | 54 |
| 11 | அபயம் .... .... | 422 | 8 | 10 |
| 12 | அபேதபேழதை .... ... | 237 | 2 | 50 |
| 13 | அபேதகெம்பீரம் .... .. | 338 | 4 | 4 |
| 14 | அமிர்தம் .... ... | 252 | 4 | 32 |
| 15 | அமிர்தசஞ்சீவி .... ... | 371 | 4 | 4 |
| 16 | அருட்கண்ணூட்டியஅற்புதக்கயிறு | 28 | 4 | 14 |
| 17 | அருட்குருநோக்கத்தாலபேதமுற | 348 | 4 | 4 |
| 18 | அருட்கூவுமானந்தம் .... ... | 99 | 1 | 36 |
| 19 | அருட்புகழ் .... ... | 212 | 2 | 17 |
| 20 | ஷை .... ... | ... | 3 | 52 |
| 21 | ஷை .... ... | ... | 16 | 8 |
| 22 | அருள் ... | 60 | 4 | 10 |
| 23 | அருளொளிவானந்தாநுபூதி ... | 38 | 2 | 25 |
| 24 | அபேதக்கும்மி .... ... | 293 | 4 | 63 |
| 25 | அயிக்கிய சுபாவவுரிமை ... | 347 | 4 | 6 |
| 26 | அறிவினங்கறத்தல் .... ... | 400 | 4 | 28 |
| 27 | ஆனந்தக்களிப்பு .... ... | 272 | 4 | 16 |
| 28 | ஆனந்தக்களிப்பு .... ... | 445 | 4 | 20 |
| 29 | இருப்பு .... ... | 75 | 4 | 10 |
| 30 | இறையின்பெருந்தகைமை ... | 397 | 2 | 35 |
| 31 | உபதேசக்கோலாட்டம் ... | 54 | 2 | 21 |
| 32 | ஊர் .... ... | 396 | 4 | 10 |
| 33 | ஊர்க்குருவி .... ... | 82 | 4 | 10 |
| 34 | கிளி .... ... | 125 | 2 | 33 |
| 35 | கிழவிகிழவன் .... ... | 265 | 2 | 30 |
| 36 | குருசீஷர்லக்ஷியம் .... ... | 140 | 2 | 22 |
| 37 | குருசீடன்பக்குவம் .... ... | 9 | 4 | 1 |
| 38 | குருசிஷ்யர்குரவன்குரத்தி ... | 388 | 4 | 10 |
| 39 | குருமணிஹாரம ... | 429 | 1 | 108 |
| 40 | குருமணித்தாலாட்டு ... | 415 | 2 | 36 |
| 41 | குருமுறை ... | 109 | 6 | 10 |
| 42 | குயில் .... ... | 56 | 4 | 9 |
| 43 | குருவல்லபம் .... ... | 46 | 8 | 16 |
| 44 | குருவணக்கம் .... ... | 7 | 4–8 | 6–3 |
| 45 | குருவருட்பிரமானந்தச்சுடர்மவுலிக் | 322 | 2 | 45 |
| 46 | ஸகஜநிஷ்டை .... ... | 369 | 4 | 6 |
| 47 | சத்துமணிக்கோவை .... ... | 360 | 4 | 7 |
| 48 | சத்பநிலை .... ... | 165 | 4 | 164 |
| 49 | சமாசசுபாவசையோகம் ... | 364 | 4 | 4 |
| 50 | சமாதிநிலை .... ... | 147 | 16 | 10 |
| 51 | ஜாதகம் .... ... | 77 | 4 | 10 |

| செய்யுள் இலக்கம். | செய்யுளின் பெயர். | செய்யுள் பக்கம். | செய்யுள் அடிகள். | செய்யுள் தொகை. |
|---|---|---|---|---|
| 52 | சாதனை விருப்பம் ... ... | 437 | 4 | 4 |
| 53 | ஜாதி .... ... | 70 | 4 | 11 |
| 54 | சாமான் .... ... | 365 | 4 | 4 |
| 55 | சிவஞானமணி ஹாரம் .... ... | 341 | 4 | 4 |
| 56 | சிவயோகானந்தம் .... ... | 18 | 2 | 17 |
| 57 | சிவவேடம் ... ... | 89 | 4 | 10 |
| 58 | சீடன்முறைமைகுருவணக்கம் ... | 413 | 8 | 1 |
| 59 | சீடனருள்விருப்பம் .... ... | 418 | 2 | 41 |
| 60 | சீடன்வினாஞானச்சிந்து ... | 307 | 3 | 17 |
| 61 | சீடனுருகல் .... ... | 353 | 4 | 16 |
| 62 | ஜெயசங்கு .... ... | 19 | 2 | 32 |
| 63 | சுருதிமுடிவினற்புதம் ... | 334 | 4 | 6 |
| 64 | சூஸ்திரத்வசுகிர்தம் .. ... | 68 | 4 | 10 |
| 65 | சொச்சொரூபானந்தக்களிப்பு ... | 408 | 4 | 28 |
| 66 | சொரூப்பூஜாவிதி .... ... | 275 | 1 | 32 |
| 67 | சொரூபமகிழ்ச்சி ... | 228 | 1 | 30 |
| 68 | சொரூபானந்தத்திருப்பள்ளியெழுச் | 101 | 8 | 10 |
| 69 | சொரூபானந்தப் புகழ்ச்சி ... | 112 | 4 | 12 |
| 70 | சோறு .... ... | 136 | 2 | 43 |
| 71 | ஞானம் .... ... | 87 | 4 | 10 |
| 72 | ஞானசித்தி .... ... | 241 | 2 | 16 |
| 73 | தத்துவஞானமகிமை .... .... | 10 | வசனம் | |
| 74 | தத்வதரிசனம் .... ... | 436 | 4 | 4 |
| 75 | தத்வவமிர்தம் ... .. | 243 | 6 | 3 |
| 76 | தத்வமாமந்திரம் ... ... | 315 | 1 | 50 |
| 77 | தயிர் ... ... | 331 | 2 | 33 |
| 78 | தாலாட்டு ... ... | 35 | 2 | 32 |
| 79 | திருப்பள்ளியெழுச்சி ... ... | 425 | 8 | 10 |
| 80 | திருப்பள்ளியெழுச்சி ... ... | 428 | 8 | 5 |
| 81 | தீர்த்தம் ... ... | 339 | 2 | 11 |
| 82 | துவிசர் ... ... | 383 | 4 | 19 |
| 83 | துவிதமறுத்தல் ... ... | 374 | 4 | 8 |
| 84 | துறவு ... ... | 142 | 4 | 6 |
| 85 | ஷை வேறு .... ... | 143 | 8 | 10 |
| 86 | தெருட்டேனளித்தல் ... ... | 350 | 4 | 6 |
| 87 | தெருளின்மணி ... ... | 373 | 4 | 5 |
| 88 | தேகவேஷம்நீற்றல் ... ... | 72 | 4 | 10 |
| 89 | தேசிகஹாரம் ... ... | 104 | 8 | 9 |
| 90 | தேசிகஇரேசிப்பு ... ... | 345 | 4 | 6 |
| 91 | தேசிகனருளைச்சேர்ந்துகொளித்தல் | 440 | 4 | 6 |
| 92 | தேசிகநிர்ணயம் .... ... | 375 | 4 | 8 |
| 93 | தேசிகன்மகிமை ... ... | 433 | 2 | 18 |
| 94 | தேசிகவின்பம் ... ... | 444 | 4 | 10 |
| 95 | தேசிகனுபதேசமகிழ்வு ... | 435 | 4 | 6 |
| 96 | தேசிகர்செயலின்சீர்மை ... | 22 | 2 | 24 |
| 97 | தேசிகர்திருவருள்பூர்த்தித்தபுதுமை | 390 | 2 | 34 |
| 98 | தேசிகர்திருப்பாதத்தின்மஹத்துவ | 356 | 4 | 4 |
| 99 | தோழிமார்ஆனந்தக்கண்ணி ... | 14 | 2 | 36 |
| 100 | நற்கதிமகிழ்ச்சி ... ... | 344 | 4 | 6 |
| 101 | நிர்க்குணக்கண்ணி ... | 317 | 2 | 51 |
| 102 | நிர்ணயமகிழ்ச்சி .... ... | 31 | 4 | 12 |
| 103 | நிர்விகற்பலீலை, .... ... | 51 | 8 | 10 |

| செய்யுள் இலக்கம். | செய்யுளின் பெயர். | செய்யுள் பக்கம். | செய்யுள் அடிகள். | செய்யுள் தொகை. |
|---|---|---|---|---|
| 104 | நிர்விகற்பமேமுத்திஸ்தானம் ... | 349 | 2 | 8 |
| 105 | நிர்ச்சின்னத்தட்டான் ... ... | 377 | 2 | 68 |
| 106 | நித்தியபூஷணம் ... ... | 368 | 4 | 6 |
| 107 | நித்தியவிருப்பம் ... ... | 358 | 4 | 4 |
| 108 | நூலின்மகிமை ... ... | 9 | 4 | 5 |
| 109 | நூலினுண்மை ... ... | 5 | 8 | 5 |
| 110 | நெய் ... ... | 44 | 2 | 18 |
| 111 | பண்டிதன் ... ... | 114 | 2 | 40 |
| 112 | பாங்கிபார்கண்ணி ... ... | 132 | 4 | 46 |
| 113 | பாசனைறைக்கறக்குதல் ... | 96 | 4 | 14 |
| 114 | பாலன்விவேகம் ... ... | 289 | வச | னம் |
| 115 | பிரம்மமுத்துமுடிசூட்டல் ... | 361 | 4 | 6 |
| 116 | பிராமணத்வமுரைக்கும்பல்லி ... | 64 | 4 | 22 |
| 117 | புருஷார்த்தகுருஉபதேசமகிமை | 336 | 4 | 8 |
| 118 | பேதம்நீற்றல் ... ... | 257 | 4 | 16 |
| 119 | பேரானந்தக்கண்ணி ... ... | 248 | 2 | 43 |
| 120 | பேரின்பம் ... ... | 352 | 4 | 6 |
| 121 | போதவியல்பு ... ... | 393 | 4 | 16 |
| 122 | போதவிளக்கம் ... ... | 441 | 4 | 4 |
| 123 | பொய்யகற்றிப்பொருள்புணர்த்தல் | 326 | 4 | 32 |
| 124 | பொருள் ... ... | 62 | 4 | 10 |
| 125 | பொருள்மந்திரம் ... ... | 224 | 1 | 112 |
| 126 | பொருள்வணக்கம் ... ... | 1 | 8 | 13 |
| 127 | பொருளிலக்கணம் ... ... | 442 | 4 | 10 |
| 128 | போற்றிப்பதிகம் ... ... | 311 | 4 | 10 |
| 129 | போற்றிப்பதிகம் ... ... | 413 | 4 | 10 |



| செய்யுள் இலக்கம் | செய்யுளின் பெயர். | செய்யுள் பக்கம். | செய்யுள் அடிகள். | செய்யுள் தொகை |
|---|---|---|---|---|
| 130 | மதி ... ... | 40 | 4 | 20 |
| 131 | மந்திரம் ... ... | 79 | 4 | 10 |
| 132 | மயில் ... ... | 117 | 2 | 31 |
| 133 | மயினு ... ... | 73 | 4 | 10 |
| 134 | மருந்து ... ... | 304 | 4 | 21 |
| 135 | மாமௌனகீதை ... ... | 152 | 8 | 43 |
| 136 | மாணுக்கன்வினுஆசிரியன்விடை ... | 405 | 2 | 34 |
| 137 | முமுட்சுக்களை அழைத்தல் ... | 356 | 4 | 6 |
| 138 | மெய்ஞ்ஞானதீபம் ... ... | 313 | 3 | 16 |
| 139 | மெய்ஞானப்பால் ... ... | 342 | 4 | 4 |
| 140 | மெய்ஞானநிலை ... ... | 234 | 3 | 22 |
| 141 | மௌனஔஷதம் ... ... | 340 | 4 | 4 |
| 142 | மௌனக்கும்மி ... ... | 92 | 4 | 22 |
| 143 | மௌனசூடாமணி ... ... | 363 | 4 | 4 |
| 144 | மௌனப்பதிகம் ... ... | 309 | 4 | 10 |
| 145 | மௌனமணிப்பதிகம் ... ... | 438 | 4 | 11 |
| 146 | மௌனஅடைக்கலம் ... ... | 357 | 2 | 8 |
| 147 | மௌனவாக்கியம் ... ... | 190 | 4 | 128 |
| 148 | வஸ்து தந்திரமகிழ்வு ... ... | 120 | 3 | 34 |
| 149 | வஸ்துமதப்பார்ப்பாத்தி ... | 268 | 2 | 46 |
| 150 | வஸ்துவானந்தத்திருப்பள்ளியெழு | 106 | 8 | 10 |
| 151 | வாடாமலர் ... ... | 335 | 4 | 6 |
| 152 | வாழ்வு ... ... | 387 | 4 | 10 |
| 153 | விவேகபத்தி நிர்ணயம் ... | 25 | வச | னம் |
| 154 | வீடு ... ... | 58 | 4 | 13 |

## மனிதரோடெவ்வுருத்தோற்றங்களையுங் கருணைகூர்ந்தளித்தல்.

## அயிக்கியமாமணிப்போற்றிமாலை.

அண்டமாயாருயிராயமர்ந்துநின்றவற்புதமணியைக்
கண்டமறத்தானையணிந்துகருத்திற்றுப்போற்றுவோமே 1

தூண்டாமணித்தீபமதாய்ச்சொலிக்குஞ்ஜோதிமணியை
ஈண்டுகலந்தணிந்திரண்டற்றதாய்ப்போற்றுவோமே 2

அத்துவைதமாகவமர்ந்தருளுமபேதமஹாமாமணியைச்
சுத்தாசுத்தமறவணிந்துசுகாந்தமதாய்ப்போற்றுவோமே 3

அன்னியமொன்றுமில்லாவமர்ந்தருளுமசங்கமணியை
யுன்னியமுற்றணிந்துரிமையதாய்ப்போற்றுவோமே 4

பொறிபுலனுக்கப்பாற்பொருந்திநின்றபொய்யாமணியைக்
குறிகுணமறவணிந்துகோலாகலமதாய்ப்போற்றுவோமே 5

பந்தமோக்ஷரகிதமதாய்ப்பதிந்திலங்கும்பாவாதீதமணியை.
சந்ததமாய்க்கோத்தணிந்துஸகஜமுறப்போற்றுவோமே 6

இருக்குமுதல்நான்குந்தேடியேங்குமின்பாதீதமணியைப்
பெருக்கமுடனேயணிந்துபிரீதியுற்றுப்போற்றுவோமே 7

முப்பாழுக்கப்பாலப்பால்முழங்குந்துரியாதிதமணியைச்
செப்பாத்தொடுத்தணிந்துசின்மயமாய்ப்போற்றுவோமே 8

வாசாமகோசரமாய்வாழுகின்றவபாரதுய்யமணியைக்
கூசாதணிந்தொன்றாய்க்கொளித்துறப்போற்றுவோமே 9

அந்தர்முகமாயமர்ந்தருளுமபரோக்ஷாநுபூதிமணியைச்
சுந்தரசுயம்பாயணிந்துசுபாவசித்தாய்ப்போற்றுவோமே. 10

நிரதிசயநிர்ணயமாய்நின்றிலங்குநிற்பின்னமணியைப்
பிரதிதியாயணிந்துபோராண்மையுற்றுப்போற்றுவோமே. 11

பராதீனம்பற்றுப்பதிந்தருளும்பாரமார்த்திகமணியை
நிராகுலமதாயணிந்துநிர்ச்சின்னமுறப்போற்றுவோமே. 12

நிராசைப்பெருக்காய்நிறைந்தருளும்நிராகாரமணியைப்
பிராகிரியமாயணிந்துபிரம்மஞானமதாய்ப்போற்றுவோமே 13

சிவயோகப்பொலிவிற்றெளிந்திலங்குஞ்சிவஞானமணியைத்
தவவேடமதாயணிந்துசம்பூரணமாய்ப்போற்றுவோமே. 14

மௌனசுபாவமதாய்மகிழ்ந்துளமாமர்ம்மமணியைத்
தமனமறவணிந்துதாழ்மையதாய்ப்போற்றுவோமே 15

தெருளேவடிவமாய்த்தேங்கிநின்றசிற்பிரகாசமணியைப்
பொருளுறவணிந்துபோதம்பதையாய்ப்போற்றுவோமே 16

சுகாரம்பசொஸ்தமதாய்த்துலங்கிநின்றசுடர்மணியை
விகாரமறவணிந்துவிஞ்ஞானமதாய்ப்போற்றுவோமே. 17

சாரச்சையோகமதாய்த்தழுவிநின்றசைதன்யமணியைப்
பூராயமுற்றணிந்துபொருந்தியதாய்ப்போற்றுவோமே. 18

ஆண்பெண்ணலியுமின்றியமர்ந்தருளுமரூபமணியைக்
காண்பாணுதியறணிந்துகைவல்யமுறப்போற்றுவோமே 19

உள்ளத்துறவோர்க்குணர்வரியமாவுல்லாஸமணியைக்
கள்ளமறெடுத்தணிந்துகாலாதீதமதாய்ப்போற்றுவோமே 20

தீர்க்கதெரிசனத்திற்றேறிவிளைந்ததிவ்யஜெயமணியைப்
பார்த்தெடுத்தணிந்துபரமகேவலமாய்ப்போற்றுவோமே 21

கூட்டிப்பிரிக்கறியாப்புணர்ந்துநின்றபுருஷார்த்தமணியை
நாட்டிமாறாதணிந்துநண்பதுவாய்ப்போற்றுவோமே 22

சத்துமயமாய்த்தனித்துநின்றசம்ரசசுபாவமணியை
வத்துமயமதாயணிந்துவாழ்ந்துறப்போற்றுவோமே 23

ஒளியிருளுமற்றுயர்ந்துளமஹாரத்னமணியைக்.
களிப்புற்றெடுத்தணிந்துகதிதானுறப்போற்றுவோமே. 24



இனிதினிதாயெங்குமிருந்திலங்குமேகாந்தமணியைக்
கனிவுடனெடுத்தணிந்துகற்பனையறப்போற்றுவோமே. 25

சருவமுள்ளும்புறம்புந்தங்கிநின்றசத்யதயாளமணியைப்
பருவமுடனணிந்தொன்றாய்ப்பதிவுறப்போற்றுவோமே. 26

சிறுமைபெருமையற்றுச்சிறந்திலங்குஞ்சிங்காரமணியைப்
பொறுமையுடனணிந்துபோக்குவரத்தறப்போற்றுவோமே.

கரைகடந்தெங்குங்கலந்துநின்றுளமாகருணைமணியை
நிரையுரையிலாதணிந்துநிற்குணமாய்ப்போற்றுவோமே. 28

விதிவிலக்கற்றுவிளங்குகின்றவித்தகவினோதமணியைப்
பதிவாயெடுத்தணிந்துபரஸ்பரமாய்ப்போற்றுவோமே. 29

குறிக்காப்பஜிக்காமற்கூடும்பெருந்தகைமைமணியைப்
பிறிக்காதெடுத்தணிந்துபின்னமறப்போற்றுவோமே. 30

சூக்ஷாதிசூட்சுமதாய்த்துலங்குஞ்சுத்தசூதானமணியைச்
சாக்ஷாத்காரமாயணிந்துசாஸ்வதமுறப்போற்றுவோமே. 31

சுயாதீனமங்களமாய்த்துலங்கிநின்றசுபிக்ஷமணியை
நியாயமுடனணிந்துநிஷ்களங்கமதாய்ப்போற்றுவோமே. 32

மெய்ஞ்ஞானவித்ததுவாய்மேவிநின்றவிகிர்தமணியைச்
சுஞ்ஞானமதாயணிந்துதுல்லியமதாய்ப்போற்றுவோமே. 33

நிருவிகற்பநுட்பமதாய்நின்றிலங்குநிற்றொந்தமணியைக்
கருவிகரணமோயவணிந்துகர்ம்மமறப்போற்றுவோமே. 34

அரியதோரிரகஸியமாயமர்ந்திலங்குமாவருள்மணியை
விரியாக்குவியாதணிந்துவீடதுவாய்ப்போற்றுவோமே. 35

புரையறவெங்குமதாய்ப்பொருந்திநின்றபூர்த்திமணியை
யுரையறவெடுத்தணிந்துசிதமதாய்ப்போற்றுவோமே. 36

அன்புமிகுத்துச்சொரிந்தழகாய்த்திரண்ட திரள்மணியை
யின்புறவெடுத்தணிந்தேகாந்தமதாய்ப்போற்றுவோமே. 37

நிற்சின்னசொஸ்தமதாய்நின்றிலங்கும்நேமமணியைப்
பொற்புறவெடுத்தணிந்துபுனிதமதாய்ப்போற்றுவோமே. 38

ஏகபோகநிர்ணயமாயிருந்திலங்குமிங்கிதமாமணியைச்
சோகமறெடுத்தணிந்து துலக்கமுறப்போற்றுவோமே. 39

விராகம்விருப்பின்றியொன்றாய்விளங்கும்விற்பனமணியைச்
சீராகமதாயெடுத்தணிந்து தற்பதமாய்ப்போற்றுவோமே 40

நிரவயவமாகநிறைந்திலங்கும்நித்யநிறஞ்சனமணியைப்
பரவசமாயெடுத்தணிந்துபரபிரம்மமதாய்ப்போற்றுவோமே

ஆறாறுக்கப்பாலமர்ந்திலங்குமநிர்வசனியமணியை
வேறாகவெடுத்தணிந்துவித்தகமாய்ப்போற்றுவோமே 42

காருணியமயமதாய்க்கனிந்தொழுகுங்கதிமாமணியைத்
திராணியாயெடுத்தணிந்துசிவமதுவாய்ப்போற்றுவோமே 43

நிராவரணமாகநின்றிலங்கும்நிர்நாமநிஜமாமணியை
விராமமதாயணிந்துவிதேகமுற்றுப்போற்றுவோமே. 44

கங்குல்பகலற்றுக்கடந்திலங்குங்கருணைகடாக்ஷமணியைத்
தங்குதலறவணிந்து தற்பிரகாசமதாய்ப்போற்றுவோமே 45

விருத்திரகிதமதாய்விளங்கிநின்றவிசேஷமணியை
யவிருத்தியதாயணிந்திசைநழுவாப்போற்றுவோமே. 46

நுண்ணியமென்மைமயமதாய்நோன்மைமிகுஞ்சுயமணியை
யெண்ணிடாதெடுத்தணிந்திறுமாப்புற்றுப்போற்றுவோமே47

அணுவுந்தானதுவாயமைந்துநின்றவரியதோர்மணியைக்
கண்மும்பிரியாதணிந்துகரைந்ததுவாய்ப்போற்றுவோமே 48



சமயமெல்லாந்தேடிச்சலித்தேங்குஞ்சமயாதீதமணியை
யமைவுறவெடுத்தணிந்தகலாதுற்றுப்போற்றுவோமே 49

கூர்மைமிகுமஹத்துக்கள்கோத்தணிந்துகொளிக்குமணியை
யோர்மையுடனேயணிந்துறுதியுற்றுப்போற்றுவோமே 50

வேஷாதிகளின்றிவிளங்குகின்றவிலக்ஷணமணியைக்
கோசாதிகடந்தணிந்துகுலாவியதாய்ப்போற்றுவோமே 51

பாசமொன்றுமின்றிப்பதிந்தொழுகும்பரிசுத்தமணியை
நேசமுற்றெடுத்தணிந்துநிராலம்பமாய்ப்போற்றுவோமே 52

தோஷமொன்றும்பற்றறியாச்சுத்தசுகந்தமணியை
நாசமறவணிந்திருந்துநன்கதுவாய்ப்போற்றுவோமே 53

கருத்திற்கிசைந்திலங்குங்காணாக்காக்ஷிக்கண்மணியைத்
திருத்தமுடனேயணிந்துதீர்மானமதாய்ப்போற்றுவோமே54

மாயாமனமிறந்தோர்மதிப்பறமதித்தமறாமதிமணியைச்
சாயாமலெடுத்தணிந்துசையோகமதாய்ப்போற்றுவோமே 55

குருவுத்திசுவானுபவத்தாற்கூடி திரண்டகோமளமணியைக்
கருவமறவணிந்துகாணாக்கண்ணதுவாய்ப்போற்றுவோமே

பேரின்பம்பொழிந்துபிழம்பாய்த்திரண்டபிரம்மமணியைப்
பூரிபுற்றெடுத்தணிந்துபூர்த்தியதாய்ப்போற்றுவோமே. 57

ஒழிவினிலொடுங்கிநின்றவ்யோமாதீதவூக்கமாமணியை
விழியாமூடாதெடுத்தணிந்துவியப்புற்றுப்போற்றுவோமே

சிந்தனையும்பற்றறச்சிறந்துதெளிந்தசிற்சொரூபமணியைக்
கொந்தளிப்புடனணிந்துகூட்டுறவாய்ப்போற்றுவோமே. 59

திக்காதிக்கெட்டாநின்றுசிறந்தசிவப்பிரகாசமணியைப்
பக்குவமாயணிந்தழகுபார்த்ததுவாய்ப்போற்றுவோமே. 60

பரிசமுதலனுகரியாப்படர்ந்தோங்கும்பாக்கியமணியை
முரிவறவெடுத்தணிந்துமோனமதாய்ப்போற்றுவோமே. 61

அகம்பிரமாஸ்மியென்றமைந்தளவநிர்வாச்சியமணியை
ஜகாகிதமாயணிந்துசாதனுசாத்யமாய்ப்போற்றுவோமே 62

நிஷ்கிரியாசொஸ்தமதாய்நின்றிலங்குநித்தியமணியை
விஸ்தாரமதாயணிந்துவிதரணமாய்ப்போற்றுவோமே. 63

பிணிதோஷமனுகரியாப்பெருகியபேரானந்தமணியைத்
துணிவுற்றணிந்துசெர்ப்பிரகாசமதாய்ப்போற்றுவோமே 64

உதயஸ்தமனமுமின்றியொளிருகின்றவோர்மைமணியை
யிதமியமாயணிந்திருதிகொண்டுளதாய்ப்போற்றுவோமே 65

ஜில்ஜிலுப்புடனேகுளிர்ந்துதேங்கிநின்றதெருள்மணியை
ஜெலிஜொலிக்கணிந்துதோற்றமறப்போற்றுவோமே. 66

உண்மைமயமதாயோங்கிவொருமையுற்றவுரவுமணியைப்
பண்மையதாயணிந்துபாங்குறத்தான்போற்றுவோமே. 67

கொள்ளாதுதள்ளாதாய்க்கொஞ்சும்பிரமானந்தமணியை
யுள்ளாருத்தலுடனணிந்துத்தமமாய்ப்போற்றுவோமே 68

அஷ்டசித்திக்கெட்டாவபேதசித்திசித்திசீத்திமணியை
விஷ்டமுடனெடுத்தணிந்திருப்புற்றுப்போற்றுவோமே 69

மஹாமௌனபிரகஸியமாய்மகிழ்ந்தருளுமதியாமணியை
சகாமியமறவணிந்துசதானந்தமதாய்ப்போற்றுவோமே 70

பாவபுண்ணியம்பற்றுப்பதிந்திருந்தபரஞ்ஜோதிமணியை
பாவணமாயெடுத்தணிந்ததீதமதாய்ப்போற்றுவோமே. 71

கண்டவர்தன்விண்டிடாக்கலந்திரேசித்துக்கமழுமணியை
மண்டநமராயணிந்துமாமாக்ஷிமையாய்ப்போற்றுவோமே. 72

சிவோஹம்.

சிவோஹம்.

# மௌனகுருசுவாமி

திருவருள்புரிந்தருளிய

# மாமௌனமணிக்கோவை

என்ற

# மெய்ஞ்ஞான அநுபூதிரஸம்.

1 U MAR '926

---

## நூலின்வரலாறு:

வஸ்துநிர்ணய அநுபூதியநுசூதம்.

பொருள்வணக்கம்.

அந்தர்முகமுகவுரையுமதீதபோதமஹாமொக்ஷமாகு
மமைந்தபடியமைந்ததுவேவபேதநியமநித்யமாகுந்
தொந்தபந்தபகிர்முகத்தைத்துறந்ததுவேயாகுந்
துய்யமஹாசொரூபமதாய்த்தோய்ந்ததுவேயாகுஞ்
சந்ததமாவிறுமாப்பாலறையாமலறைந்ததுவேயாகுந்
தத்துவமாய்ச்சார்ந்தஸகஜநிஷ்டாநுபூதியுமேயாகுஞ்
சொந்தமுகமுகமற்றமுகமேமுகமாவஸ்துவசமுற்றிங்ஙன்
சுதந்திரபூர்த்தியதாய்த்தோய்ந்துவணங்குவோமே. 1

மொழியாமல்மொழிந்தமைந்தமுதல்நூலாமிதற்கு
முகவுரையேவஸ்துவன்றிமுன்னிலையுமின்றேயின்று
சலியாமாவிடமிருந்திருந்துஸ்தாபித்ததாகுமாகுஞ்
சஞ்சலமேதாக்கர்தசாம்பிராஜ்யசத்யத்வமிதுவேயாகுஞ்
ஜொலியாமல்ஜொலிக்கின்றதிர்விகர்பநிமலமேயாகுஞ்
சொல்லுதற்குமெட்டாததுவநிஷ்களங்கசுகந்தமேயாகுங்

ஜொளியாமற்கொளிக்கின்றகோமளவஸ்துவசமுற்றிங்ஙன்
குணரகிதந்தானாய்க்குலாவிவணங்குவோமே.

அபாரமஹாவரீதரியவசங்கலகண்டாநுபவத்வம்
அபரோக்ஷாநுபூதிவிளைந்தவபேதமாபிரம்மத்வம்
விகாராதியனுகாவிதேகபோராண்மைவிமலத்வம்
விஞ்ஞானஸ்திதிநிதியாவிளங்குகின்றவிசேஷத்வம்
பகாரப்பதமமைந்தபரஸ்பரமரப்பாவாதீதத்வம்
பக்குவபாகமதாய்ப்பரவிபரிபூரணபசுத்வஞ்
சுகாரம்பசுபிக்ஷசுத்தசுதந்திரவஸ்துவசமுற்றிங்ஙன்
சுவாநுபவந்தாந்தானாய்ச்சுகித்துவணங்குவோமே.

சுத்தபரிபூரணமாய்த்துலங்குகின்ற
சுயஞ்சோதிநிராவரணசொரூபவல்ல
சத்ததுவாய்நிறைந்துள்ளஸகஜபோத
சாம்பிராஜ்யரகஸியமாமகிமையான
அத்வைதசமரசசுவாநுபூதிவமலதூய
வானந்தாதீதமாவரியசாந்ததிவ்ய
சத்தமற்றமாமௌனவஸ்துவசமுற்றிங்ஙன்
றதாகாரம்தாயுருகித்தானாய்வணங்குவோமே.

அபாரமஹாஜிதேந்திரியவகண்டயோக
மரிதரியதேஜசுவாயமர்ந்தமாயேகஞ்
சுகாரம்பநிஷ்கிரியாதுரியதாதீதபோகந்
துய்யமஹாசுகாதீதசொஸ்தசுயபாகம்
நிராகாரசின்மயமாய்ரேசித்தசினேகம்
நித்தியமாய்நின்றிலங்கும்விதேகமாயூகம்
பகராப்பாஸ்பரம்பதிந்துறும்வஸ்துவசமுற்றிங்ஙன்
பண்புற்றுத்தானதுவாய்வணங்குவோமே.

அபேதமஹாநிர்க்குணமாயமர்ந்தவஸ்து
வபரோக்ஷசுதந்திரமாயமர்ந்தவஸ்து



விகாதமொன்றுமில்லாவபிரம்மவஸ்து
வீடதுவாய்விளங்குகின்றவிசேஷவஸ்து
சூதானசூஸ்திரமாய்ஜொலிக்கும்வஸ்து
சுபிஷசுபிக்ஷமதாய்ச்சொக்கும்வஸ்து
தாவனமாய்த்தனித்தருளும்வஸ்துவசமுற்றிங்ஙன்
றங்கித்தானதுவாய்வணங்குவோமே.

எல்லாமுள்ளும்புறம்புமிலங்குவஸ்து
ஏகாந்தவினியதுவாயிருந்தவஸ்து
சொல்லொண்ணப்பேரின்பசுகிர்தவஸ்து
சுட்டொழிந்துசுயம்பாகஜொலிக்கும்வஸ்து
விள்ளாமாவித்தகமாய்விளைந்தவஸ்து
விரிதலுடன்குவிதலற்றுவிளங்கும்வஸ்து
ஸல்லாபசத்தியமாவஸ்துவசமுற்றிங்ஙன்
சார்ந்ததுவாய்த்தழுவியுறவணங்குவோமே.

நாமரூபரகிதமதாய்நல்கும்வஸ்து
நனப்புமறப்பற்றதுய்யஞானவஸ்து
நேமமுறும்நிற்றொந்தநிமலவஸ்து
நீக்கமற்றநிர்விகற்பநிச்சயவஸ்து
தாமதாதிரகிதமாய்த்தனித்தமாவஸ்து
தாமுறும்பொக்ஷமாய்த்தங்குமாவஸ்து
ஊமென்னுமுரியதோர்வஸ்துவசமுற்றிங்ஙு
னுள்ளபடியிருந்ததுவாய்வணங்குவோமே.

நிற்சின்னபுருஷார்த்தநிமலவஸ்து
நிற்றொந்தகேவலமாய்நிற்கும்வஸ்து
கற்பனாரகிதமதாய்க்கலந்துளவஸ்து
காலாதீதகோமளமாய்க்கனிந்தவஸ்து
அற்பமுமேயன்னியமுமாகாதவஸ்து
ஆசாரமனாசாரமற்றமாமௌனவஸ்து

துப்பறத்துறந்திலங்கும்வஸ்துவசமுற்றிங்ஙன்
சுயம்போதநிரஞ்சனமாய்த்துலங்கிவணங்குவோமே. 9

உன்னவெட்டாப்பேராண்மையுற்றவஸ்து
வொளிவிருளுங்கறந்தோங்கிவொழுகும்வஸ்து
எண்ணரியவிறுமாப்பாயிசைந்திருந்தவஸ்து
இழிவுயர்வுமில்லாதுமிருந்திலங்கும்வஸ்து
நண்ணுகின்றசித்ததுவாய்நடிக்கும்வஸ்து
நலந்தீங்கிரண்டுமற்றுமிங்ஙனல்கும்வஸ்து
துன்னுகின்றசொஸ்தவஸ்துவசமுற்றிங்ஙன்
றுணிந்ததுவாய்க்கரைந்துருகிவணங்குவோமே. 10

மஹாமௌனசிவஞானமதிமந்திரவஸ்து
மாற்றுதற்றமாபொருளாய்மகிழ்ந்தவஸ்து
தாகர்திவிலக்ஷணமாய்த்தனித்ததாகாரவஸ்து
சர்வமதாய்ச்சார்ந்துநின்றசத்யத்வவஸ்து
போகாதிரகிதமதாய்ப்புணர்ந்தபுனிதவஸ்து
பொறிபுலனிற்கெட்டாதாய்ப்பூண்டமாவஸ்து
ஏகாங்கினியமாவஸ்துவசமுற்றிங்ங
னென்றுணையதுதானாயிருந்துவணங்குவோமே. 11

பந்தமோக்ஷாகிதமதாய்ப்பரவும்வஸ்து
பரமார்த்தபவுஷதுவாய்ப்பதிந்தவஸ்து
விந்தைவினோதங்களற்றுவிளங்கும்வஸ்து
விபரீதசங்கையொன்றுமேவாமாவஸ்து
அந்தமாதிநடுவிறந்தவிரூபமாவஸ்து
அஞ்ஞானசூனியமாயமர்ந்துளவஸ்து
சுந்தரதுய்யமஹாவஸ்துவசமுற்றிங்ஙன்
சூக்ஷ்மமாநுட்பசூதானமதுதானாய்வணங்குவோமே. 12

மெய்ஞ்ஞானமேதாவியானவஸ்து
மெய்தானாய்நின்றிலங்கும்பிரம்மவஸ்து



உய்யும்பொருள்தானானையுந்துதிவஸ்து
வோருணர்வாயொழுகின்றவுரியவஸ்து
செய்கையொன்றுமில்லாமற்றீர்ந்தவஸ்து
சிதானந்தமங்களமாய்த்தீர்ந்ததீர்க்கவஸ்து
ஐயமறவிருந்திலங்குமபேதவஸ்துவசமுற்றிங்ங
னருள்மயமாக்கரைந்ததுவாய்வணங்குவோமே. 13

சிவோஹம்.

## நூலினுண்மை.

சத்தியமாய்ச்சாற்றுமற்சாற்றியவிச்
சாஸ்திரமாவாக்கியத்தின்சாரமதுவுஞ்
சத்தியமாசத்தானபிரம்மமல்லாற்
சந்தேகவிகற்பங்களனுவுமிலவேயில்லை
நித்தியமாய்நின்றுறுமநுபூதியந்தூதம்
நிர்ணயமாவமிர்தமிஞ்சிமகிழ்ந்தாலம்
உத்தியுறவுள்ளபடியுயர்ந்ததாகு
முறுதியிதேயென்றுணையுண்மையுண்மை. 1

வாக்கற்றறைந்ததிந்தமௌனபாஷ்யம்
வரையற்றிருந்தபொருளதனுள்ளருத்தந்
தாக்குற்றதனிமெய்ஞ்ஞானநுபூதிரஸந்
ததும்பியுற்றபேரானந்தப்பெருக்கிதாகும்
நீக்கற்றநிர்விகற்பரேசிப்பின்நிறைவிதாகும்
நினைப்பற்றநித்யத்வநிமலசொஸ்தமாகும்
ஊக்கமுற்றவுறுதிபுருஷார்த்தமிங்ஙன்சத்ய
முள்ளபடியமைந்ததிதுயுண்மையாணையாணை. 2

பரம்பராபரப்பிரம்மாகவியத்தைதயிங்ஙன்
பகராமற்பகர்ந்ததிதுபக்குவரறிந்துய்ய.

திரஸ்திரமென்றுணைவிம்முறைமொழுகுவோர்கள்
தீர்க்கமாதெரிசியுமாய்த்திருமோக்ஷசொரூபியாவர்
நிரதிசயம்ஸ்திதிநிதிமாநிஷ்களங்கதீதவாழ்வுள்ள
நிலையானஜெயஞ்ஜெயம்நிச்சயமேநிஜம்நிஜம்
அரகரஸ்வாதந்திரியம்பெற்றபெருஞ்செருக்காமிவ்
வபரோக்ஷாநுபூதியிதேயநிந்தடையுமுண்மையுண்மை. 3

எல்லாமுமாயானனையேகயினியசத்ய
மிருந்தபடியிருந்ததுவேயின்பாதீதநித்யம்
வல்லமஹாமௌனவஸ்துநிர்ணயமாபத்யம்
வழுத்துதற்குமெட்டாமாசுயவபாரவுத்யங்
கொள்ளாமாகொள்கையதாய்க்கொளிக்கும்பாத்யங்
கோலாகலமாவதீதபோதங்கொண்டமாவகத்யஞ்
ஸல்லாபஸந்ததசமரசமாய்த்தங்குமிவ்வயித்யஞ்
சம்பூரணசுயசொரூசமிதேசத்யஞ்சத்யஞ்சத்யம். 4

நிற்சகுணநிராவரணநிரதிசயானந்த
நிராகாரநிற்குணநிர்விஷயசுகாதீதவமல
நிஷ்கிரியாநிர்ச்சலனநிர்நாமவபரோக்ஷ
நிர்விகாரவத்வைதநிராலம்பவபேதபோத
நிர்ச்சங்கநித்யமாசமயாதீதஸந்ததசொஸ்த
நிர்வேத்தியநிரவயவவமிர்தநிர்லக்ஷிய
நிற்சத்தநிர்வாச்சியநிரஞ்சனயாதியந்தமத்யரகித
நிஷ்பிரபஞ்சமாசத்தாய்நின்றதிங்ஙனுண்மையுண்மை. 5

சிவோஹம்.



பொருளறிபொருளுமாகிப்பூரணநிறைவாயெங்கு
மொருதனிவெளியாய்த்தானேயோங்கியசுடருமாகி
மருள்தெருளிரண்டுமில்லாமதிதெளிமதியாய்நின்ற
குருபரன்மலர்த்தாளிணைக்குடியெனக்கொண்டுவாழ்வோம்.(1

ஒருபொருள்பலவாயெங்குமுருவமாய்த்தோன்றிநிற்க
அருள்கொடுத்திருளையோட்டியபேதமாய்த்தனியாய்க்காட்டி
இருவினையறவேநோக்கியென்னையும்பொருளாய்ச்செய்த
குருபரன்மலர்த்தாளிணைக்குடியெனக்கொண்டுவாழ்வோம்.(2

சுற்றமாய்நிர்மலமாய்ஜோதியாய்ச்சுடருமாகி
மற்றில்லாப்பொருளாயெங்குமதிப்பறநின்றுமோங்கி
பற்றில்லாவுறவுமாகிப்பதியென்னும்பதமமைத்த
முற்றுணர்குருதாளிணைமுத்தியென்றழுந்திவாழ்வோம். (3)

சத்தியசிற்சொரூபமாய்ச்சாற்றரியமௌனமாய்த்தனியாய்
நித்தியநியமந்தானாய்நீங்காதவின்பமாய்நிறைவாய்
சுத்தசைதன்யமாய்த்தோன்றாமற்றோன்றிநின்ற
சித்திரப்பதுமைபொத்தசின்மயகுருவின்றாளிற்சிவோஹமெ
ன்றிருந்துவாழ்வோம். (4)

என்னையும்விழுங்கியேயேகமாயிருந்தான்சிவோஹம்
பின்னையுமிரண்டறப்பிரம்மமாய்ப்பிணைத்தான்சிவோஹம்
உன்னையேவுண்மைவுறவென்றோதினான்சிவோஹந்
தன்னையேகாட்டித்தானாகச்சமைத்தான்சிவோஹம். (5)

நிர்மலசொரூபமேநீயேநானென்றான்சிவோஹம்
நிஷ்களங்கவஸ்துவேவதுநான்நீயென்றான்சிவோஹஞ்
சொல்லறச்சொல்லியுஞ்சும்மாபாய்க்கலந்தான்சிவோஹஞ்
சொல்லறும்மௌனமுந்தானாய்ச்சுகித்தான்சிவோஹம். (6)

அத்துவைதவஸ்துவேசொப்பிரகாச
மதுவானாயென்றான்சிவோஹம்
அகண்டாஸயேகமேசிற்பிரகாச
மதுநீயானாயென்றான்சிவோஹம்
ஆனந்தாதீதநித்தியப்பிரம்மமே
வதுநீநானென்றான்சிவோஹம்
அருளைப்பொருள்நீயெனவேவசைவுமற
வமைத்தான்சிவோஹம்.

சுத்தமாநித்யப்பூரணவிதேகப்பொருளதுநீ
சுபாவமென்றான்சிவோஹஞ்
சும்மாவிருக்கின்றசைதன்யவஸ்துவேநீ
சுயம்பென்றான்சிவோஹஞ்
சுட்டுக்குமெட்டாச்சொரூபந்தானதுவெனச்
சொல்லாமற்சொன்னான்சிவோஹம்
சுத்தப்பிரம்மமதுவதுவாய்வாழ்கவெனச்
சுதந்திரமாய்ச்சோதித்தான்சிவோஹம். (8)

சத்தியஞ்சத்தியமதுநீசத்துவென்னத்
தாழாமைத்தந்தான்சிவோஹஞ்
சத்தியஞ்சத்தியஞ்சதானந்தம்நீயெனவுமழியாமா
ஸகஜமளித்தான்சிவோஹஞ்
சத்தியஞ்சத்தியஞ்சர்வமேயெனமெய்ச்
சாதனமுரைத்தான்சிவோஹஞ்
சத்தியஞ்சத்தியஞ்சிவோஹஞ்சிவோஹமெனமெய்யாய்
ஸ்தாபித்தான்சிவோஹம். (9)

## சிவோஹம்.

மேலருளிச்செய்திராநின்ற குருவணக்கத்தின்கருத்து பக்குவிகள் மெய்ஞ்ஞான குருவை அடைந்து அக்குரு



பரனருட்பிரஸாதம் ஊட்டப்பெற்று மெய்ஞ்ஞானத்தை அடையவேண்டுமென்பதாமென்றுணர்க.

## குருசீடன்பக்குவம்.

ஞானமதங்கொண்டநற்சிங்கங்கெர்ஜித்து
ஆனபக்திமதயானைக்கூட்டத்திலதுநோக்கத்
தானெனுமதயானைதானுற்றுத்தற்போதம்போய்த்
தோணுமலொடுங்கிச்சொரூபத்திற்கரைவதுவேகுருசீடன்.

## சிவோஹம்.

கருத்து:—புருஷசிங்கம்போற்குருவும் மதயானைபோற் சீடனெனக்காண்க.

## நூலின்மகிமை.

முத்தெனுமோர்பொருளெடுக்கமுடிடுஞ்சிப்பிநாசம்
சத்தெனுமேற்பொருள்தொடுக்கச்சடமெனுஞ்சத்துநீசம்
சித்தெனுஞ்சீருள்திடக்கச்சிவமெனும்வஸ்துநேசம்
வித்தெனுங்கூர்முளைமலர்காய்கனியாய்விளைவிக்குமிந்த
நூலே. (1)

அனித்தியஜடத்தைநீக்கிபகமதைப்பிரம்மாக்குஞ்
சனித்திடுமாயைபோக்கிச்சமரசசுபாவஸகஜந்தாக்குந்
தனித்துறுஞ்சுயம்பதாக்கித்தத்துவதாழாமைதேக்குந்
தொனித்திடர்மாமௌனமாக்கிச்சொரூபமாயமைக்குமிந்
நூலே. (2)

கானலைநீரென்றெண்ணுங்கற்பனையறவேபோக்குந்
தானிலையழிக்குந்தமசுராஜசினையுந்தனிச்சத்துவமதிலடக்குங்
கோனிலைகொளிக்குமெய்ஞ்ஞானக்குரவனையுறவிங்காக்கும்
மேனிலையளித்தபாரமெய்ப்பொருள்புணர்த்துமினியமாவிந்
நூலே (3)

அரியமாவபேதமாக்கிபகண்டாநுபவவதீதமாக்குந்
துரியமாவயிக்கியந்தாக்கித்துரியாதீதந்தோய்த்ததாக்கும்
பெரியமாநிரதிசயந்தேக்கிப்பிரிவறப்பிணைத்தொன்றாக்கும்
உரியமாசுதிசமைத்தொழிவிலொடுக்குமுறுதிமாவிந்நூலே.

துவிதமிறந்ததுவுந்தூயசுஞ்ஞானசூரியனெழுந்ததுவுங்
வெளியுமிரவுபகலற்றதுவுங்காலாதீதகமனங்கலந்ததுவுங்
நவிலரிமஹாமௌனம்நட்டதுவும்நனப்புமறப்பற்றதுவு
மவியாவருந்தவமாமெய்ஞ்ஞானநுபூதிரஸமென்றமைவோம்.

சிவோஹம்.

## தத்துவஞானமகிமை.

### வசனம்.

தத்துவதரிசனம் நித்தியபூரணமென்னும் வாக்கியப்படி யாதொருவர் தத்துவசோதனைபண்ணி முப்பத்தைந்து தத்துவங்களைக்காரியதுவிதப் பொய்யாமெனக்கண்டுமந்தப் பொறி புலன் கரணங்கள்வழியுந்தான்செல்லாதுதடுத்து இராகத்துவேஷாதிகளின்றியுங்குலபேதமின்றியும், நாமரூபாதிதனை முப்பத்தாறுகந்து தத்துவத்தையுள்ளபடி மிச்சமாகக்கொண்டு



அது தானென்றும் அதுவே பிரம்மமென்றும் அதுவே சத்தியமென்றுந்துணிந்து தேகாபிமானமின்றிச் சிறுபுற் புழு முதற்றானையிருக்கப்பட்ட பிரம்மத்தைத்தவிர வேறல்லவென்றும் அந்தமாம்ஹா தன்னறிவே சாக்ஷியாய்த் தானானே யாவுமாயிருந்துவிளங்காநின்ற யாதொருவனுண்டோ அவனைத்தான் சமதரிசனி,பவவிமோசனி,யென்றிடத்தகும். அவன் சகல நாமரூப பேதங்களிலும், அபேதமா யுள்ளும் புறம்பிலும் புணர்ந்து நாமரூபசூனியனாய் நின்று விளங்காநின்ற சுயசொரூபி அவனன்றோ தன்னையே பூஜிப்போன். அன்னியமற்றவன் அநித்தியமிறந்தவன், நித்தியமுற்றவன், நீங்கிடா ஸகஜ நிஷ்டாநுபூதியுற்றோன், கருணைகைவல்யன், காலாதீதசிரோமணி, களங்கரகித கருத்தினன், கருதரிய நிர்விகற்பன் கர்ம்மங்கடந்த நிஷ்கிரியோன், நிர்விஷயசுத்தமுற்றோன் நிராகாரவபேதன், நிர்த்தொந்தநிமலன், நிர்ச்சங்கநேசன், சுத்தமாகேவலபோதபூரணன், நிர்விகாரவழகினையுடையோன், நிரஞ்சன சுதந்தரன், சுகதுக்கரகிதமுற்றோன் தூயவகத்துறவோன், துரியாதீதபுருஷார்த்தன், சுயம்பிரகாச சைதன்யன் சுகாரம்பசுகிர்தன், சுகாதீதசுயம்பு, சீதளம் பொருந்திய வழகினையுடையோன், பரிமளசுகந்தபக்குவமுள்ளோன், பகரரிய மஹாமௌனசாத்தியம் பெற்றோன், சமயாதீதரகஸியன் சத்தாய்த்தனித்தருளிய சத்தியன், திரிகுணரகிதஸாம்பிராஜ்யன், சிதானந்தசின்மயன், சித்தசாந்தசிற்பரன், சிவயோகதயாநிதி, நிர்நாமநிர்ப்பயன், நீக்கமற்றிலங்கும் சர்வாந்தர்யாமி, சம்பூரண சையோகன், பற்றின்றித் தனித்தோன், பரமசுகிர்தபக்ஷன், சச்சிதானந்தபாக்கியன், சைவநிர்மலன், தற்போதரகிதன், அமிர்தசஞ்சீவியமிர்தன் அத்வைதபிராமணத்வன், அஞ்ஞானசூனியமலன், மெய்ஞ்ஞான விதேககைவல்யன், தேடுதற்கரியமாகேவல ரகஸியபோதமா மெய்ஞ்ஞான பண்டிதனையல்லவோ தத்துவஞானியெற்றறிஞர்கள்நாமமற்றநாமங்களாற்புகழப்படுவோன்

பூஜிக்கப்படுவோன், 'பூஜிக்கப்படுவோன், மாயாவறிவிலிகள்
ஸ்தூலத்தைநோக்கித் தூஷிக்கப்படுவோராம், இந்த மஹா
அத்வைதனன்றோ தேகத்தோடிருந்தாலும் விதேககைவல்ய
சொரூபியென்னல் ஐயமின்மை, சத்தியமேயாம், அழிவிறந்த
சித்தியடைந்தோரென்னல் மெய்யேயாம். அளவிறந்த சத்தி
யடங்கியிருக்குமென்பது முன்மையேயாம். அவரப்படி
யிருந்தாலும் பாமரனைப்போற்பாவனையுற்றுக்காட்டுவோராம்
ஆண் பெண்ணலியென்னுஞ்ஜட்பாவனையற்றோராம்தூய்வபே
தக்குழந்தையைப்போற் கொஞ்சத்தக்க வருளுடையோராம்,
நிர்விகற்ப செருக்குமதமுடையோராம், நீங்காச் சுயபூரணமா
வழிகொழுகியவர், திரிகுணமாகிய திரிமூர்த்திக்கு மறியவரி
தான சுத்தகேவலசின்மாத்திரன்,' இவரையன்றோ முமுட்சு
கள் மஹா சொரூபமெனக்கண்டகமகிழ்வுகொண்டு ஆனந்த
பரவசமாகிக்கண்ணீர் ததும்பவயமிட்டுக் கதறுவர், மண்
ணிற்புரண்டுமழுவர், தேகத்தை மறந்து ஸ்தோத்திரம் பண்
ணுவர், மஹா அந்தவழகிய சொரூபமயமாய்க்கரைந்து கரைந்
துருகுவர், பின்னுமென்ஜென்மஸாபல்யதெய்வமேயென்றும்
ஆசாரவுபசாரங்களோடு பூஜைபுரிவர், இன்னரிய முமுட்சு
கள் வணங்கத்தக்க தெய்வமிதுவன்றோ மஹாமாநான்கு
மறையும் புகழும், ஆஹா, அருமையாகிய இந்த மாதத்துவ
ஞானியை அறிஞராகிய முமுட்சுகள் மட்டுமல்லோ சத்திய
மிதுவென நம்பியவ்வழியிற் பின்பற்றிச்செல்லுவர், இந்த
மஹா அற்புதத்தையறியக்கடவீராக, அந்தத்தத்துவஞானி
தேகத்தையிழந்தோரென்பது நிச்சயமேயாம் தனிச்சித்தாய்
த்தனியாய்த்தனித்தவராம். ஸ்தூல விகார பாவனையால்
பெண்ரூபத்தைநோக்கி ஆண்ரூபமிச்சிக்கிறதும் ஆண்ரூபத்
தை நோக்கிப்பெண்ரூபமெச்சிக்கிறதும் மாமிசவிச்சையா
மென்றுகண்டுகளைந்து மிஞ்சினபடியினாலும் ஸ்தூலமசத்திய
பந்தமென்றும் சூழ்மாவஸ்து எங்கணுமுள்ளது அது நா
னென்னுள்ளந்துறந்திருக்கு மஹீரானதலால் அவரைச் சைவ



சொரூபியெனத்தகும் இவர் பாவனாரகிதரானதால் நித்திய
பிரமணசுயம்புவென்று புகழத்தகும். இப்படி விளங்கா
நின்ற மெய்ஞ்ஞானந்தனி இந்த மா மெய்ஞ்ஞானஞ்சகலமான
பேர்களுக்குமடையப்பொதுவாய் நின்றிலங்குமாதலாலிதை
ப் புருஷதேகமுடையவர்களுமடையலாம் பெண் தேகமுடை
யவர்களுமடையலாம் சத்தியஞ் சந்தேகமின்மை அரியமா
அறிவுயேகமானதால் நிற்சந்தேகமாய்ஞானத்தைக்கைகொள்
வீராக, விதுவுண்மையுரை நான்குமறையுமொப்புக்கொள்ளு
ம் மஹாமெய்ஞ்ஞானிகளுமுறுதிகூறுவர் நம்புங்கள். இது
விப்படியிருக்கச்சிலது போலிகள் புருஷன்றானிதையடைய
முடியும். பெண்ணுக்கு இது தகாதென்றுஞ்சொல்லிப்
புலம்புவார்கள். தன்னையுணரான்புலம்பும் போதவின்மை
ஆண்பெண்ணென்றும் விதித்தகற்பனையானது புலாலைக்குறி
த்ததல்லால் புருஷார்த்தத்தைக்குறித்ததன்றே புருஷார்த்த
வஸ்து ஆணோ பெண்ணோ. அலியோ ஆணுமல்ல பெண்ணு
மல்ல அலியுமல்லவே அபேதவ்ரியமெய்யறிவே புருஷார்த்த
சைதன்யமல்லவோ? யாதொருவர் சுயபோதத்தோடுகூடிய
ஆண் தேகமோ அல்லது பெண் தேகமோ இந்த மெய்ஞ்
ஞானத்தையதிதீவிரமாகவடைகின்றார்களோ அவர்களே புரு
ஷனென்று சப்திக்குஞ்சத்தத்திற்குகந்தவர்கள். அதுவின்றி
புருஷன் வடிவம் புருஷனாகாது. பெண் வடிவம் பெண்ணா
காது. இந்த ஸ்தூலம் பஞ்சகோசத்திற்குட்பட்டது. மா
மஹா மெய்ஞ்ஞானமாவது பஞ்சகோசரகிதம் ஆனதால்,
யாருமே அடையலாம். இதற்கொஞ்சமேனுஞ் சந்தே
கம்வேண்டாம். ஆண் ரூபமல்லாது பெண் ரூபம் வராது.
பெண் ரூபமல்லாது ஆண் ரூபம் வராது. இரண்டுஞ்
சையோகப்பட்டபடியினாலுருத்தோன்றலாயிற்று. இரண்டு
விதவுருவிலுந்தத்துவங்கள்கூடக் குறையவுமில்லையாம். உ
ணவுபேதமில்லையாம் உணர்வோயேகம் இத்தையார் தானடை
யக்கூடாது சர்வத்திலுமுன்னும் புறம்பும் புணர்ந்து நிற்கின்

றதே அரியமா பூரண வஸ்து அதெங்கிருக்குமென்கிராது. இதைச் சத்தியமாக நம்பிச் சந்தேக விபரீதங்களை நீக்கி ஞானசாதகம் பண்ணக்கடவீர்களாக, பரிபூரண ஞானத்தை யடையக்கடவீர்களாகவென்றும் இந்த சத்தியமா மெய்ஞ்ஞானத்தைச் சொல்லாமற் சொல்லியளித்தருளிய மௌனமஹா வாக்கியம், இத்தைத்தானாகப்பூண்டுகொண்டு, நித்தியமாய் வாழ்ந்துமிருக்கக்கடவீரென்றுங் கருணைபொழியப்பட்ட கைவல்யமா வநுபூதிவிளைந்தகாலாதீத மௌனமந்திரஞ் சிவோஹஞ் சிவோஹஞ், சத்தியம், சத்தியஞ் சதானந்தஞ் சிவோஹம்.

சிவோஹம்.

---

## தோழிமார் ஆனந்தக் கண்ணி.

காணாதுகண்டேனடிதோழிமாரே தன்னைக்
கண்டசுகமென்னசொல்வேன்றோழிமாரே. 1

சும்மாவிருக்கச்சொன்னார்தோழிமாரே உண்மை
சொன்னசுகமென்னசொல்வேன்றோழிமாரே. 2

ஆசைகொண்டேன்கூடிவாழ்ந்தேன்றோழிமாரே மோன
மசைவுமிறந்தவிடந்தோழிமாரே. 3

ஊமைகண்டகனாப்போலாச்சுத்தோழிமாரே நானும்
ஊமையென்னுமுறுதிகொண்டேன்றோழிமாரே. 4



காமமறக்கறந்ததுண்டுதோழிமாரே பொல்லாக்
காலமுங்கடந்ததடிதோழிமாரே. 5

தூராதிதூரமடிதோழிமாரே அந்தத்
தூரமுஞ்சமீபம்டிதோழிமாரே. 6

வெட்டவெளிப்புருஷனடிதோழிமாரே நானும்
வெட்கங்கெட்டுநின்றேனடிதோழிமாரே. 7

கைக்குள்வளர்நெல்லிக்கனிதோழிமாரே என்னைக்
கைவிடவுமாட்டாரடிதோழிமாரே. 8

என்புருஷனம்பலத்திற்றோழிமாசே அவ
ரென்னைக்கொண்டாட்டுகின்றார்றோழிமாரே. 9

நட்டுவருமாகிநின்றார்தோழிமாரே ஆட
நானுந்தாசியாகிநின்றேன்றோழிமாரே. 10

சிற்பரத்திலாட்டிக்கொண்டார்தோழிமாரே நானும்
சின்மயமாயாடிநின்றேன்றோழிமாரே. 11

தத்துவமசியென்னுந்தோழிமாரே அந்தத்
தாளமதிலாடச்சொன்னார்தோழிமாரே. 12

தன்பதியாமென்புருஷன்றோழிமாரே நானுந்
தானாகியாடிநின்றேன்றோழிமாரே. 13

ஊருமில்லைப்பேருமில்லைத்தோழிமாரே ஏக
மொருத்தியாயாடுகின்றேன்றோழிமாரே. 14

தந்திரமாய்த்தனிக்கச்சொன்னார்தோழிமாரே அந்தத்
தந்திரந்தனென்னசுகந்தோழிமாரே. 15

போக்கும்வரத்துமில்லைத்தோழிமாரே பரி
பூரணமாயாக்கிப்போட்டார்தோழிமாரே. 16

கஞ்சனத்திற்றன்முகம்போற்றோழிமாரே தன்னைக்
காட்டியல்லொவுகந்துநின்றார்தோழிமாரே. 17

நானதுவாயாகும்வண்ணந்தோழிமாரே உண்மை
ஞானமதையூட்டிப்போட்டார்தோழிமாரே. 18

சுட்டாச்சொரூபமென்றுந்தோழிமாரே சுய
ஞ்சொரூபமுடிசூட்டிப்போட்டார்தோழிமாரே. 19

உள்ளத்தொடுங்கிநின்றார்தோழிமாரே நானு
முள்ளபடியானேனடிதோழிமாரே. 20

மதிவளர்போதமடிதோழிமாரே அதீத
மதிப்புக்கடங்காதடிதோழிமாரே. 21

சுத்தசுயநித்தியமேதோழிமாரே இத்தைச்
சொல்லவுமொவ்வாதடிதோழிமாரே. 22

குணங்குறிரகிதமடிதோழிமாரே தனிக்
குறிக்கவுமெட்டுமோடிதோழிமாரே. 23

பாவித்தார்பாவமடிதோழிமாரே சுத்தப்
பாவாதீதமென்றேபொருந்தோழிமாரே. 24

நாமென்னுஞ்சுயசொரூபந்தோழிமாரே நித்யம்
நாணமுமற்றதடிதோழிமாரே. 25

துறந்தோர்மஹத்துவமேதோழிமாரே தாயஞ்
சூட்டொழிந்துநின்றதடிதோழிமாரே. 26



ஒன்றையுபமானிக்கத்தோழிமாரே வே
றொன்றுமேயில்லையடிதோழிமாரே. 27

களங்கரகிதமென்றேதோழிமாரே தன்னைக்
கண்டப்படுத்திக்கொண்ணேதோழிமாரே. 28

இருளைக்கடந்துவிட்டாற்றோழிமாரே பொரு
ளேகமதாகுமடிதோழிமாரே. 29

நிர்ப்பயநிர்விகர்ப்பந்தோழிமாரே இத்தை
நேசித்துக்காணுமடிதோழிமாரே. 30

அம்மம்மாரகசியந்தோழிமாரே சத்ய
வதீதமோனமடிதோழிமாரே. 31

பாவாதீதம்பதியென்றாற்றோழிமாரே ஏக
பாவனைவுபாயமடிதோழிமாரே. 32

பாவனைமுதிர்ந்துவிடிற்றோழிமாரே நித்ய
பாவாதீதம்பொருந்துமடிதோழிமாரே. 33

விதேககைவல்யந்தோழிமாரே இத்தை
விள்ளவுங்கூடுமோடிதோழிமாரே. 34

சூக்ஷ்மமீதென்னென்றேதோழிமாரே மா
சூழ்ச்சிவரிதரிதுதோழிமாரே. 35

அதுவானாலதுதானடிதோழிமாரே ரகஸ்ய
மசையாதிருந்துவிடுதோழிமாரே. 36

சிவோஹம்.

ஞானவெள்ளம்பொங்குகின்றசிவயோகமே மஹா
ஞானவலங்காரமென்னோசிவயோகமே. 1

ஊனமற்றவாழ்வேசுயசிவயோகமே தனி
யுள்ளும்புறம்புகந்ததென்னோசிவயோகமே. 2

தத்துவக்களைகளைந்தசிவயோகமே சுத்த
தத்துவமாய்நின்றதென்னோசிவயோகமே. 3

ஓமெழுத்ததாயமர்ந்தசிவயோகமே மஹா
வுன்னவின்பம்பொங்குதென்னோசிவயோகமே. 4

அத்துவைதமானபெருஞ்சிவயோகமே நித்ய
வற்புதவகண்டமென்னோசிவயோகமே. 5

மோனமதம்பூண்டெழுந்தசிவயோகமே ஞான
மோனந்தானாய்முடிந்ததென்னோசிவயோகமே. 6

ஆனந்தமயமதான்சிவயோகமே சுத்த
வானந்தாதீதமென்னோசிவயோகமே. 7

ஜோதிப்பெருஞ்ஜோதியானசிவயோகமே மா
ஜோதியாய்ஜொலித்ததென்னோசிவயோகமே. 8

சத்தியமதாய்விளங்குஞ்சிவயோகமே சுத்த
சத்துஸாம்பிராஜ்யமென்னோசிவயோகமே. 9

பூரணமதாயிலங்குஞ்சிவயோகமே பரி
பூரணமாய்ப்பூண்டதென்னோசிவயோகமே. 10

கருணைப்போதம்பொங்குகின்றசிவயோகமே அருட்
கருணைமயமானதென்னோசிவயோகமே. 11



சிவமாய்த்தெளிந்துநின்றசிவயோகமே மஹா
சிவயோகயோகமென்னோசிவயோகமே. 12

அமிர்தமயமாயெழுந்தசிவயோகமே சுய
வமிர்தப்பிழம்பிதென்னோசிவயோகமே. 13

ஆணும்பெண்ணுமலியுமற்றசிவயோகமே சுத்த
வரூபமாயமர்ந்ததென்னோசிவயோகமே. 14

முத்தர்க்குமுத்தாயணிந்தசிவயோகமே ஞான
முத்தர்மயமானதென்னோசிவயோகமே. 15

ஸந்ததமாய்நின்றிலங்குஞ்சிவயோகமே சத்ய
ஸந்ததமாயானதென்னோசிவயோகமே. 16

எங்குமுள்ளதாயிருக்குஞ்சிவயோகமே நித்ய
மெல்லாமானவிறும்பென்னோசிவயோகமே. 17

சிவோஹம்.

---

## ஜெயசங்கு.

இராகம் கல்யாணி—தாளம் ஆதி.

காணக்காணும்விடுகண்டோமென்றூதுதுசங்கே
கண்டாகிதமதாய்நின்றோமென்றூதுதுசங்கே. 1

மாயாமாயையைஜெயித்தோமென்றூதுதுசங்கே
மதியாமதிப்பாயானோமென்றூதுதுசங்கே. 2

முப்பாழுக்கப்பாலமர்ந்தோமென்றூதூதுசங்கே
முன்னிலையுமறத்துறந்தேமென்றூதூதுசங்கே. 3

நன்றுதீதற்றிருந்தோமெறூதூதுசங்கே
ஞானமதச்செருக்குற்றோமென்றூதூதுசங்கே. 4

இன்றுமற்றற்றிசைந்தோமென்றூதூதுசங்கே
யிருந்தவிருப்பதாயிருந்தோமென்றூதூதுசங்கே. 5

ஆதிநடுவந்தமற்றோமென்றூதூதுசங்கே
அரூபவமலமாயமர்ந்தோமென்றூதூதுசங்கே. 6

சங்கைவிதிகளறவெரித்தோமென்றூதூதுசங்கே
ஸகஜாநுபூதியுமானோமென்றூதூதுசங்கே. 7

விட்டவிடத்தினிலொட்டினோமென்றூதூதுசங்கே
விட்டுமொட்டிடாதானோமென்றூதூதுசங்கே. 8

எல்லாங்கடந்ததாயிருந்தோமென்றூதூதுசங்கே
யெல்லாமாயுமுற்றோமென்றூதூதுசங்கே. 9

போதம்பதையாப்புணர்ந்தோமென்றூதூதுசங்கே
போதமாமொக்ஷமுற்றோமென்றூதூதுசங்கே. 10

எதிரியற்றுமிருந்தோமென்றூதூதுசங்கே
யேகாந்தசுயம்பாயிசைந்தோமென்றூதூதுசங்கே. 11

காலரகிதமதாயானோமென்றூதூதுசங்கே
கதியுறுங்கதியுமானோமென்றூதூதுசங்கே. 12

ஆறாறுக்கப்புறத்தானோமென்றூதூதுசங்கே
அற்புதநிர்ச்சின்னமுற்றோமென்றூதூதுசங்கே. 13



அதீதப்பேராண்மைவசமானோமென்றூதூதுசங்கே
அரிதினுமரியதாயமர்ந்தோமென்றூதூதுசங்கே. 14

தோன்றுதொடுங்காதானோமென்றூதூதுசங்கே
தொந்தரகிதமாய்நின்றோமென்றூதூதுசங்கே. 15

சுட்டொழிந்தவிறுமாப்பானோமென்றூதூதுசங்கே
துய்யபிரம்மந்தானாய்ஜொலித்தோமென்றூதூதுசங்கே. 16

சித்தஞ்சலியாநிரஞ்சனமுற்றோமென்றூதூதுசங்கே
தீர்க்கசின்மயந்தானாய்த்தெளிந்தோமென்றூதூதுசங்கே. 17

ஸந்ததமாகத்தனித்தோமென்றூதூதுசங்கே
சங்கற்பரகிதமானோமென்றூதூதுசங்கே. 18

வேதங்கடந்துவிளைந்தோமென்றூதூதுசங்கே
வேடரகிதமதாயானோமென்றூதூதுசங்கே. 19

உத்தமபெரியதாயுகந்தோமென்றூதூதுசங்கே
வுள்ளதுள்ளதாயுற்றோமென்றூதூதுசங்கே. 20

கர்மத்திற்கப்பாலிருந்தோமென்றூதூதுசங்கே
களங்கரகிதமதாயானோமென்றூதூதுசங்கே. 21

சத்தியநிராகாரமுற்றோமென்றூதூதுசங்கே
சாஸ்வதந்தாந்தானதாயானோமென்றூதூதுசங்கே. 22

எல்லாம்நம்முள்ளிருக்குதென்றூதூதுசங்கே
யெல்லாமுள்ளும்புறம்பிசைந்தோமென்றூதூதுசங்கே. 23

நித்தியவஸ்துவாய்நிறைந்தோமென்றூதூதுசங்கே
நிராவரணநியமமானோமென்றூதூதுசங்கே. 24

சுத்தமஹாநிற்பயமானோமென்றூதுசங்கே
ஜோதிமயமதாய்ஜொலித்தோமென்றூதுசங்கே. 25

சிறிதுபெரிதுமறச்சிறந்தோமென்றூதுசங்கே
ஜிதேந்திரியதிவ்யமுற்றோமென்றூதுசங்கே. 26

பெருகாவற்றுப்பேரின்பம்பெற்றோமென்றூதுசங்கே
பேரானந்தப்பிழம்பாயுற்றோமென்றூதுசங்கே. 27

மாற்றுரைநிரையற்றுற்றோமென்றூதுசங்கே
மதுராங்கமஹாதத்துவமானோமென்றூதுசங்கே. 28

உதியாதொடுங்காதுற்றோமென்றூதுசங்கே
அறுதிநிர்விகற்பமானோமென்றூதுசங்கே. 29

பாவனாதீதம்பதிந்தோமென்றூதுசங்கே
பரமகேவலபாக்கியமுற்றோமென்றூதுசங்கே. 30

விதேகமாமடியிலேறினோமென்றூதுசங்கே
விஷயாகிதமதாய்ச்சுகித்தோமென்றூதுசங்கே. 31

நித்தியவாஸனமிட்டோமென்றூதுசங்கே
நீங்காத்ததாகாரமானோமென்றூதுசங்கே. 32

சிவோஹம்.

## தேசிகர் செயலின் சீர்மை.

முளைக்கோட்டு மெட்டு.

என்னுடையகோமானவனெங்களூர்மாவசிச
னென்னையன்றேபூட்டங்கட்டிருந்துவாழ்ந்தான்சரசன். 1



பல்லுயிரின்முற்றினுமாய்ப்பதித்தானெங்களிராஜன்
பண்பொடுமென்னையிசைத்துப்பார்நாமென்றானேசன். 2

போதமென்றயாபொருளைப்பொருத்தினான்விசேஷன்
பொறுமைதனில்மிகுபிரியம்பூண்டானென்பிரகாசன். 3

முப்பத்தாறிற்கப்பால்வைத்துமுத்தமிட்டான்சித்தன்
மோனமஹாமுறைமையோடுமுடிசூட்டிட்டான்முத்தன். 4

அன்னமேகேளபேதமதாயலங்கரித்தான்சித்தன்
னவனெனக்குப்பிரீதியன்றோயவனேயான்காண்சுத்தன். 5

என்னுரிமைமன்னனிவனெங்குமுள்ளோனென்னே
என்னையல்லோவெனக்களித்திருமாப்புற்றான்கண்ணே. 6

சொல்லாச்சுகவின்பக்காரசீசுகிர்தனெந்தன்மன்னன்
ஜோடித்தான்பார்தன்மயமாய்ச்சொஸ்லவழலவண்ணன். 7

போக்குவரத்தற்றமாடிபுதிப்பித்தானென்மன்னன்
பூரணமாய்ப்புணர்த்தியென்னைப்பூட்டினானிற்சின்னன். 8

தன்னுறுதிதாக்கும்போதுதரித்தானெந்தன்மன்னன்
றன்னியாயம்பெருந்தகைமைதங்கினதவ்வண்ணம். 9

கொள்ளவில்லாத்தள்ளவில்லாக்குரவனெந்தன்மன்னன்
கோமளபுருஷார்த்தமாகக்கொளிகொளித்தோந்திண்ணம்.

ஸந்ததமாஸல்லாபமாய்த்தனித்தானெந்தன்மன்னன்
ஸகஜமதாயேகோபித்துத்தகித்தோமந்தவண்ணம். 11

புன்னகைமீபூரிப்புடன்பொருந்தினனென்மன்னன்
புனிதமஹாபூர்த்தியதாய்ப்பூண்டோம்நிற்பின்னம். 12

கருணையொடுகலந்துமென்னைக்கையடித்தான்மன்னன்
கருத்ததற்குமிசைந்திணங்கிக்காலமற்றோமென்றே. 13

உள்ளும்புறம்ஸ்தாபித்தென்னையுறுதிசெய்தான்மன்ன
னுண்மைபாரெனக்குரியோனுன்றாதொன்றென்றே. 14

மாமஹத்வமாக்ஷிமையாய்மருவினானென்மன்னன்
மாசுமற்றமௌனசூஸ்திரம்வாய்த்ததுபாரென்றே. 15

சும்மாசும்மாசுகிக்கும்வல்லசுயம்புவெந்தன்மன்னன்
சுதந்திரமாய்ச்சூடிக்குலாவிஜொலிஜொலித்தோமென்றே 16

மெய்ஞ்ஞானமாபராஸ்பரமாய்விளைவுசெய்தான்மன்னன்
மேதாவிதன்னருட்கோலமாய்மேவிக்களித்ததென்றே. 17

துரியாதீதபீடமேற்றிச்சொகுசுசெய்தான்மன்னன்
துய்யபிரம்மாகலியமாய்த்தோய்ந்ததுபாரென்றே. 18

சலியாவிடந்தாவளமாய்ஸ்தாபித்தானென்மன்னன்
சம்பன்னமாசத்தியமாய்த்தங்கிக்கொளித்ததென்றே. 19

இறுவரையம்பாகிதாரகயென்னைரேசித்தான்மன்ன
னென்னுறவிற்கிவன்றகுந்தோழனன்னபாரமென்றே. 20

மன்னன்மாதவியுமல்லேலான்மஹாமௌனமன்னன்
மஹாநட்பவசியமதாய்வாழ்வுகொண்டதென்றே. 21

ஜீவோபாதிதீர்ந்தவிடத்திற்றெய்வமெந்தன்மன்னன்
ஜெயம்ஜெயஞ்சின்மயமாய்த்தீர்ந்தோமிந்தவண்ணம். 22

அரியபிரம்மஞானமென்றழைத்தமைத்தான்மன்னன்
னகண்டபரிபூரணமென்னத்வைதமென்றே 23

சின்றபில்லாபற்றபோதசினேகமுற்றான்மன்னன்
சீர்மைமாஜீதேந்திரியஞ்செப்பவொண்ணாதென்றே. 24

சிவோஹம்.



## சிஷ்யன் வினா—குரு விடை.

என்னுடைய பாபாமய விருவினையுடைத்தாகிய கொடிய விருளைக்கறப்பதற்குத் திருவருளையுருவாய்த் திரண்டெழுந்தருளிய மர்ம்மமா திவ்ய தத்வஞான ஔஷத மென்னுமென்னினிய மௌனதேசிகவமிர்தப்பிழம்பே! சுவாமி! அடியேனொரு விஞ்ஞாபனம் அதுயாதுதானெனின் அரியமாவுரிமையாகிய ஒரு விவேகியானவர் சத்திய சமரச சுவாபமாயிருந்துள்ள தெய்வபக்தி செய்யவேண்டிய முறைமையாவது யாது? சுவாமி அதை நன்றாயெனக்கிங்ஙன் விளங்கும்படியாகவும் மிகவுஞ் சுலபமாய்ச் சாதிக்கக்கூடியதாகவும் மஹா நட்பரகசியமுள்ளதாகவும் 'எனைதப்புணர்ந்தாலின்றென்றதற்கு நிகரில்லாததோ அப்பேர்ப்பட்ட அபாரமுடைத்துள்ளதாகவும் கிருபை கூர்ந்தநுக்கிரகித்தருளவேண்டுமென் மாமெய்ஞ்ஞான் தெய்வமே யெனக்கைகுவித்துத் தலைகுனிந்து வணங்கி நின்றனன். அடே புனிதா எனது அன்பினிற்குகந்த அழகுசிரோமணியாகிய அபேதபோத சிவஞானதிவ்யமே வருக வருக இதோ கேட்டுணருக்கடவாயாக அதிதீரமாவல்லவனே உரியமாவுறுதியாயிருந்துள்ள சத்திய தெய்வபக்தியாவது எதுவென்றாலோ அதையுமிங்ஙனம் நன்றாயறையக்கேட்டறியுமரிய மா மெய்ஞ்ஞான சுயபுனிதபுத்திரனே அனேகவித நாமரூபபேதமாய்த் தோனுகின்ற மன்னுயிர் யாவையுந் தன்னுயிராகத் தழுவுதலன்றோ மாமஹா பெருமை மிகுந்தருளிய நித்திய தெய்வபக்தியாமென்ன யாதொருஐயமின்றிக்காண்பாய் எனது திவ்ய சிவஞானமென்னும் வல்லபமா புருஷார்த்தனேயிங்ஙன். எனதுரிமைக்குகந்துள்ள மா அரிய மெய்ஞ்ஞான தேசிக சுயசொரூப சுதந்திர துய்யமா அற்புதமே சுவாமி அடியேனொருவிண்ணப்பம். ' அது யாதெனின் தாங்கள் அருளிச்செய்தபடியே ஒருநீரா பக்திபண்ணி வருவாராகில் அந்த பக்திமுதிர்ந்து நிலைத்துநின்றுவிடுமாகில்

அதனாலதற்கதனாலுண்டாகின்ற கைவல்யமான சித்தியாவது யாது சுவாமி? அடே சிவஞானமாமணிப்பதக்கமே கேள், இன்னரியமா திவ்ய நிர்ணயபுத்தியாவது முதிர்ந்து நிலைத்துவிடுமாகிலன்றோ மைந்தனே நாமரூப சகிதமாயிருந்துள்ள ஜீவோபாதியான மாயாமய பேதமிங்ஙனிறந்துபோம். அபேதபோதபூரணம் பூர்த்தியாகிப் பொருந்திக்கொஞ்சும். அதனாற்றுக்க நிவர்த்தியாகிவிடும். அரிதரிய மா பேரின்பம் பொங்கித்ததும்பிப் போக்குவரத்தறவும் நிறைந்து நின்றிலங்கும் புனித திவ்ய நிர்விகற்ப நிமல மா மெய்ஞ்ஞான சாதகராகிவிடுவர்கள். அதனாலிங்ஙன் சுத்த வாசாமகோசர அபார மௌன சுபாவ பிரம்ம சித்திபடைந்து ஸந்தத சாட்சாத்கார மா மஹா மோக்ஷ சொரூபியாயிருந்து விளங்குவரென்பது சத்தியமேயாம். இதை உறுதியோடுணரக்கடவாயாக எனது துய்யமெய்ஞ்ஞான சுகந்த புத்திர புனிதபோதா; என்னுரியமாவுத்திக்குகந்தொழுகிப் கருணை முகிலென்னுங்கதி நிதி ஸ்திதிக்கதிபதியாகிய அரிய கிருதார்த்த சுயகிருபாலுவே சுவாமி. அடியேனின்னொரு விண்ணப்பம் அதற்குமிங்ஙன்றிருவுளம் பற்றவேண்டுமெனது தெய்வமே அதுயாதெனின், தாங்களருளிச்செய்திராநின்ற ஜீவோபாதி குணதோஷங்கள் யாது சுவாமி? அடே எனது புனிதகோமள புருஷார்த்த சிவஞான சிரேஷ்ட புத்திரா, இதோ கேட்கக்கடவாயாக. மாயாமயமாகிய ஜீவோபாதி குணதோஷங்கள் யாதெனின், இதை நன்றாயறியுமிங்ஙன், அதாவது நான் மேல் குலத்தோன், அவன் கீழ்குலத்தோன், நான் புருஷன், அவள் பெண், நான் மேலான ஜென்மம், அவன் கீழான ஜென்மம், இவளென் பெண்சாதி, அவளென் வேலைக்காரி, அவளென் தாய், அவளென்மகள், இது மாடு, அது யானை, இது குதிரை, அது கழுதை, இது குரங்கு, அது புலி, இது கரடி, அது நாய், இது பூனை, அது எலி, இது புழு, அது பாம்பு, இது கிளி, அது விருக்ஷம், இது செடி, அது புல்,



இது பூண்டு, அது விஷம், இது பால், அது சிறிது, இது பெரிதென்றும் அரியமாவுண்மையை யறியாமலிழந்து கற்பனைசகிதமுற்று நாமரூப கைவல்யமாகியும் இன்னம் நானாவித பேதங்களோடு கூடி மாயாமயமாகிய மயக்க விருணாற்றுழலுவதன்றோ அஞ்ஞான ஜீவோபாதி குணதோஷமாமெனக்காண்பாயெனது மாகதி கைவல்லிய நிரஞ்சன புனித புத்திர சிவஞானமே, என்னரியமா அகண்டாநுபவ அபரோக்ஷாநுபூதியாகிய தூய சுதந்தரமே சுவாமி. இந்த மாயாமயமாயிருந்துள்ள அசுத்தவனித்திய துக்காகாரமான ஜீவோபாதி குணதோஷங்கள் தீருவதற்கும் இந்திரிய நிக்கிரகம் பண்ணுமெப்படி, அந்த மாயா ஜீவோபாதி குணதோஷங்கள் நசிக்குஞ்சுவாமி. அதை நன்றாயெனக்குத் தெரியும்படியாக அருள்புரியவேண்டுமென்தெய்வமே. அடே துவித சூனிய சுபாவமா அபேத அழகொழுகிய ஞானரஞ்சித அத்வைதஸ்வரூப சூடாமணி மணியாகிய சொஸ்த சுயமாதிர சிவஞான புத்திரனே கேள். மன்னுயிர் யாவையுந் தன்னுயிராகத் தழுவி உள்ளும் புறம்புந்தானாகவே பூண்டு நிறைந்து நின்றுவிடுவாராகில் மாயாமய துவிதமாயிருந்துள்ள முன்னிலை இறந்துபோம் பொறிபுலன்கள் யாவும் அபேதபோத நிர்விகற்பத்திற் கரைந்துபோய்விடுமிங்ஙன் சுத்தகேவல சின்மாத்திர சுயசத்தாய் மிஞ்சிநிற்கும் அதுதானன்றோ இந்திரிய நிக்கிரகங்கேள். அந்த மஹாவரிய இருப்பே சுத்த தத்வஞானமெனக் காண்பாயெனது கர்மாகித கருத்தினையுடைய புத்திர புனிதா எனது துய்ய சுகந்த சுபிக்ஷ சுகாரம்ப ஜோதிமாமதி சுதந்திர திவ்ய ஜிதேந்திரிய தீபமே சுவாமி இங்ஙன் தாங்கள் அருளிச்செய்திரானின்றபடியே ஒழுகுதல் மிகவும் இலேசாகயிருக்கின்றது போற்றோனுகின்றனன். அது மஹா சூட்சுமத்திலுஞ் சூட்சுமமாயிருந்து சாதிக்கவேண்டியதாயிருக்கின்றதே சுவாமி. தேகேந்திரியாதிகளாற் செய்யப்பட்ட தொழில்போன்றதல்லவே. [illegible]

கடினமாயிருக்கின்றதே சுவாமி. இது யாருக்குப் பொருந்தும் யாருக்குப்பொருந்தாது சுவாமி, அடே பதையாப்பதம் பதிந்த பக்குவபாகபாக்கிய சிவஞானமே கேள் அதிக மடமையாகிய தாமதகுணத்தோடு கூடியுழலுகின்ற பாபமன மயக்கர்களுக்கு மிகவுங் கடினமாய்த்தோனும், அதிகபயமுண்டாகும், இதை நிலைநிறுத்தமுடியா அது, நழுவிப்போம். இதுவன்றி சுத்தகேவல சத்வகுணமுடைத்துள்ள நுண்ணிய அறிஞர்களுக்குரொம்பவும் இலேசாகச்சித்தியாகும். அவர்கள் குணரகித முற்றிருந்து ஜொலிப்பர்களென்பதுவு முண்மையேயாம். உறுதியாயுணர்ந்து நம்பக்கடவாயாக எனது சிவஞானபோதபுத்திராவிங்கன், என் பேரருட்டாக வெழுந்தருளிய மாபெருந்தகைமையென்னும் பேரானந்த விறுமாப்பே சுவாமி, இன்னிலையை அடையுங்கால் மற்ற கொள்கையெல்லாஞ் ஜீவேர்பாதியாக முடிந்துவிட்டதே சுவாமி. இதி வென்ற புதுமை நினைப்பு மறைப்புமிங்ஙன் மாண்டுவிட்டதே சுவாமி. எனது போத பூரண புருஷார்த்த பொக்ஷமே யெனவுங் குருமௌனவதீதத்திற் புணர்ந்து இரண்டறரேசித்திங்ஙன் சுத்தசுயம்பாக ஜொலித்தனன். சொஸ்தமா சிஷ்யன்.

சிவோஹம்.

அருட்கண்ணூட்டிய அற்புதக்கயிறு

இராகம் — பியாகு — தாளம் — ஆதி

1 ஓடும்மனத்தையொடுக்கிவிறுக்கிட
வுரியானோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
காடுமிடமெல்லாமறிவாய்த்திரித்திட்ட
நல்கயிற்றாண்டிகண்ணூட்டி.

2 தேடும்விஷயத்தைத்தீண்டாதிறுக்கிட
தீரனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது



ஊடுருவியெல்லாமென்றாய்த்திரித்திட்ட
வூமென்னுங்கயிற்றாண்டிகண்ணூட்டி.

3 சாடும்பொறியாதியைத்தடுத்தறவிறுக்கிட
சமர்த்தனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
கூடுமபேதமாய்க்கூட்டித்திரித்திட்ட
கூறொண்ணாக்கயிற்றாண்டிகண்ணூட்டி.

4 வாடுங்குணமலமரிக்கதைவிறுக்கிட
வள்ளவோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
கூடென்னுங்கோசத்தைக்குலைத்துத்திரித்திட்ட
குணாதீதக்கயிற்றாண்டிகண்ணூட்டி.

5 ஆடும்பதைப்பதைவடக்கியுமிறுக்கிட
யறிஞனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
கேடறும்பேரதமாய்க்கிளப்பித்திரித்திட்ட
கேவலக்கயிற்றாண்டிகண்ணூட்டி.

6 பீடுறுமிராகாதிபிதற்றுதமிருக்கிட
பெரியானோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
வீடென்னும்விதேகமாய்விசைத்துத்திரித்திட்ட
விஞ்ஞானக்கயிற்றாண்டிகண்ணூட்டி.

7 சூடென்னும்விகற்பத்தைத்துடைத்தறவிறுக்கிட
சொரூபனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
கூடும்நிர்விகற்பங்கொண்டுதிரித்திட்ட
குறிக்கொண்ணாக்கயிற்றாண்டிகண்ணூட்டி.

8 மூடும்பொய்ப்பாசத்தைமுற்றறவிறுக்கிட
முனிவனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது

பாடும்நிற்பாசமாய்ப்பதிவுறத்திரித்திட்ட
பரப்பிரம்மக்கயிற்தாண்டிகண்ணூட்டி.

9 வடுவென்னுந்துவைதத்தைவாட்டியுமிறுக்கிட
வல்லானோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
தொடுதல்விடுதலிர்க்கப்பாற்றிரித்திட்ட
சுதந்திரக்கயிற்தாண்டிகண்ணூட்டி.

10 மடுவெனுஞ்சுகதுக்கமருவாதிறுக்கிட
மன்னனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
தொடுசேறுமதனையதந்தோய்த்துத்திரித்திட்ட
சுகாதீதக்கயிற்தாண்டிகண்ணூட்டி.

11 கோடென்னும்விதிவிலக்குடியறவிறுக்கிட
கூரவனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
காடென்னும்விதிவிலக்கருகத்திரித்திட்ட
காலாதீதக்கயிற்தாண்டி கண்ணூட்டி.

12 கடுகடுப்புறுஞ்சினத்தைக்கட்டியுமிறுக்கிட
கர்த்தனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
கொடுமையுறும்பேதத்தைக்குன்றத்திரித்திட்ட
குருவட்கயிற்தாண்டிகண்ணூட்டி.

13 அடுக்கிடுமுன்னிலையறவதைவிறுக்கிட
யன்பனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
படுகுழியென்னுமுப்பாழ்ப்பற்றத்திரித்திட்ட
பாவாதீதக்கயிற்தாண்டிகண்ணூட்டி.

14 இடுகிடென்னும்நினைவைகிழம்பாதிறுக்கிட
கிராமனோர்கயிறிட்டான்கண்ணூட்டியது
தடுப்பறும்பூரணமாய்த்தாக்கித்திரித்திட்ட
தத்துவக்கயிற்தாண்டிகண்ணூட்டி.

சிவோஹம்.



1 ஏகமாகண்ணிணையிருவினையொட்டாதை
யெல்லாந்துறந்துமிலங்கிபதுய்யத்தை
தேகாதிரகிதத்தைதிவ்யமாவின்பத்தை
சேர்ந்ததாய்ரேசிக்கிற்சிறந்ததேநானதாய்.

2 வேதாதீதமஹாவிஞ்ஞானவிமலத்தை
வீடாய்விளங்கியவிசேஷவித்தகத்தை
கோதறுஜோதியாகுணாதீதபோதத்தைக்
குறைவறநோக்கக்கொளித்ததேதானதாய்.

3 பேசாப்பிரம்மாகஸ்யவபாரத்தைப்
போனந்தமாபெருந்தகைமையதைச்
சோராச்சுகந்தமாசுதந்திரசொஸ்தத்தை
தூங்காத்தூக்கமதாய்த்தூங்கத்தானனதே.

4 நித்தியமாசுத்தநிரஞ்சனதீபத்தை
நினைப்புமறப்புமிறந்தமாபோதத்தை
யுத்திக்கிசைந்தவென்றொருதனிவுண்மையை
யுன்றுதிருத்திடவொத்துத்தானனதே.

5 ஆறாறுந்தாண்டியவானந்தாதீதத்தை
யசங்கமாபூரணயத்வைதசாந்தத்தை
வேறொன்றுமாகிடாவிளங்குந்தத்துவத்தை
விதேகமாய்ப்பொருந்திடவீடதுவானதே.

6 நாமரூபரகிதமென்சொஸ்தத்தை
நாசமனுகாச்சுகாரம்பசுகந்தத்தை
நேமநிர்விகற்பநிற்தொந்தநேசத்தை
நீங்காப்புணர்ந்திடநின்றதேதானதாய்.

7 காலங்கடந்தமாகருணைப்பிழம்பினை
கர்மமகிரதமாகைவல்யக்கனியதை
கோலாகலமாகுரவர்மெய்ஞ்ஞானத்தைக்
கொண்டிடத்தானதாய்க்கூடிவிளைந்ததே

8 மோக்ஷசாம்பிராஜ்யமுடிவற்றமுடிவதை
முன்னிலைரகிதமாய்முழுங்குமௌனத்தை
சாட்சாத்காரமாசமரசபாவத்தை
ஸாரமாய்ப்பொருந்திடத்தானதுவானதே

9 டணதயாப்பதவியைப்பாவனுதீதத்தைப்
பற்றறப்பற்றிடும்பரமமாசுகிர்தத்தை
யுதையமஸ்தமனமொன்றில்லாவுண்மையை
யொட்டிப்புணர்ந்திடவுகந்ததேதானதாய்

10 ஒருணர்வாகவுயர்ந்தபேராண்மையை
வுள்ளதில்லென்றுமோதப்படாததை
காருண்யந்ததும்பியகருணைப்பெருக்கதை
கலந்திட்டதானதாய்க்கனிந்துநிறைந்ததே

11 உள்ளத்துறவோர்க்குணர்வானபிரம்மத்தை
யொப்பனைகளற்றகற்பனாதீதத்தை
விள்ளப்படாதவிதேககைதன்யத்தை
மேவியதாகிடவிளைந்ததேசத்யமாய்

12 அறிவின்மயமதாயழுகிடும்பெருமையை
யானந்தபோதமாய்க்கொஞ்சிடும்நேர்மையை
விரிதல்குவிதலுமற்றமாமகிமையை
விகாரரகிதமாய்விசைக்கத்தானதே

சிவோஹம்.



ஒழியாமணித்தீபங்குளிர்ந்தோங்குஞ்சிவயோகந்
தெளியுந்தெளிமோனஞ்சிவயோகந்திருக்கோவில்
அழியாப்பதம்லிங்கஞ்சிவானந்தமெய்ப்பூஜைக்
கழியாக்களிப்பாயமர்ந்தவெந்தன்கண்ணேசிவயோகம். 1

மொழியாமொழியமிர்தம்மஹாமோனஞ்சிவயோகம்
வொழியாவொளிர்தூபம்மனமோடாநிலையோகம்
வெளியாம்வெளித்தேனமந்தமெய்யேயபிஷேகம்
அழியாமதியளித்தவெந்தனன்பேசிவயோகம். 2

சுழியாஞ்சுழிமுனையாஞ்சுயஞ்ஜோதிசிவயோகம்
பழியாம்பலிமனமாம்பரஞ்சுடராம்பரதெய்வம்
விழியாம்விழிப்பொருளாமெய்ஞ்ஞானஞ்சிவபோதம்
அழியாவின்பமளித்தவெந்தனன்பேசிவயோகம். 3

ஒழியாவொளிவறிவாஞ்சிவமாகுஞ்சிவயோகம்
வழியாம்வழிக்குருவாம்மஹாவருளேபொருளுறவாம்
தெளிவாம்மதித்தெளிவாஞ்சித்தம்நிறைவேசித்தியாகுஞ்
ஜொலியாவின்பஞ்ஜொலித்தவெந்தன்ஜோதிசிவயோகம். 4

போதவொளிஹாரம்பொருட்ஞானஞ்சிவயோகம்
வேதமெட்டாநேசஞ்சத்யவிசைப்பேரகபோகம்
ஆதல்நிலம்வாழ்வாமந்தவமைப்பேபுருஷார்த்தம்
நீதமுடிதரித்தவெந்தன்னிஜமேசிவயோகம். 5

சூடாமணிவொளிர்வேரொட்டொளிர்ஜொலிப்பேசிவயோகம்
வாடாமலர்மணமேமஹாமஹத்தேவரும்பொருளே
தேடாமஹாசெருக்கேசிவக்கனிபிழிந்தவமிர்தே
நாடாநாட்டப்பசுகோமேலெந்தன்னன்பேசிவயோகம். 6

நீங்காவொளிலகஜம்மஹாநிஷ்டைசிவயோகம்
வாங்காநிர்விகற்பம்மஹாவஸ்துவருள்நேமம்
தூங்காத்தூக்கமின்பஞ்சுயசித்திநித்யவாழ்வாம்
பாங்காய்ப்பதமுடிந்தவெந்தன்பண்பேசிவயோகம். 7

பதையாவொளிபரமாம்பரப்பிரம்மஞ்சிவயோகம்
விதையாவித்துவிளைவாம்நிர்விஷயம்பாருபதமாம்
புதையாநிதிவரசேஜெயம்போக்குவரத்திலதாம்
இதையம்பொங்குமினிதேவெந்தனியல்பேசிவயோகம். 8

உண்மையொளியுணர்வாம்மாவொழியாச்சிவயோகம்
நன்மைதின்மைகறந்தமஹாநன்கேசுதானந்தம்
புன்மைக்கெட்டாப்பொருளாமஹாபுனிதசத்யசுகந்தம்
பண்மைபூண்டுபதிந்தவெந்தன்பண்பேசிவயோகம். 9

சலியாச்சித்தவொளிவாம்பூரூச்சத்யஞ்சிவயோகம்
அழியாமுத்திப்பதமாம்மஹாவதீதஞ்சையோகந்
தெளிந்தமஹாசெருக்காந்திரிகுணரகிதமிருமாப்பாம்
மெலியாச்சுத்தகளிப்போடுறைவென்மிருதேசிவயோகம். 10

மாசறுஞ்ஞானமொழிவாமாமஹத்வஞ்சிவ்யோகந்
தேஜஸ்மிகுவின்னழகாந்தெருட்சித்தேவலங்காரந்
தோஷநாசமொழுக்கமிச்சூஸ்த்ரஞ்சும்மாவிருப்பாம்
கோசபாசமற்றவெந்தன்குறிப்பேசிவயோகம். 11

காலாதீதவொளிவேர்டொளிர்க்கலப்பேசிவயோகங்
கோலாகலமலாகிதங்கொஞ்சுமின்பமினிதாம்
மாழாத்ததாகாரம்மஹாமௌனஞ்சுகாதீதம்
வாழாவாழ்வாயமர்ந்தவெந்தன்மகிழ்வேசிவயோகம். 12

சிவோஹம்.



இராகம்—நீலாம்புரி.

நிறைந்தபரம்பொருளே நிஷ்காமியக்கனியே
வுரையும்நிரையுமில்லா என்னுறவேகண்வளரீர் 1

தூங்காததூக்கமே துரியாதீதப்பொருளே
நீங்காதவின்பமே என்னிஜமேகண்வளரீர் 2

மௌனரகஸியமே மஹாமோனந்தங்குமிடமே
கமனமாகுளிகையே என்கருத்தேகண்வளரீர் 3

அருளேயருளொளிவே அனந்தாதீதமென்னும்
பொருளறியும்பொருளே என்போதமேகண்வளரீர் 4

சொல்லவொண்ணாச்சுகமே சொரூபானந்தப்பெருக்கே
யல்லும்பகலுமற்ற என்னன்பேகண்வளரீர் 5

அழியாநிதியே வகண்டமேவருட்பாகே
யொழியாதபேரின்பமே என்னுள்ளமேகண்வளரீர் 6

சதுர்மறையுந்தேடரிய சாஸ்வதமாநிற்பயமே
கதிமயமதாயக்கலந்த என்கண்ணேகண்வளரீர் 7

சுத்தமேபிரம்மமே ஜோதிப்பிரகாசமே
சித்தமேநி[illegible] என்சின்மயமேகண்வளரீர் 8

வெட்டவெளிப்பொருளே என்மெய்யுணர்வேசத்தியமே
சுட்டுச்கடங்கா வென்சொரூபமேகண்வளரீர் 9

அகண்டவொளிவே ஆன்மாவேஜோதியே
கடந்தகாலாதீதமே என்சின்மணி[illegible]யேகண்வளரீர் 10

மும்மலத்தைச்சுட்டெரித்து மோனமெனும்வெளிகட்டுஞ்
சின்மாத்திரப்பொருளே என்செல்வமேகண்வளரீர் 11

முத்தாணிமுத்தே முழுதுணரும்பூரணமே
சுத்தநிர்விகற்பமே என்சுயஞ்ஜோதிகண்வளரீர் 12

மாற்றறியாப்பொக்ஷமே மதிப்போர்மதிவிளக்கே
காற்றறியாத்தீபமே ஏன்கண்மணியேகண்வளரீர் 13

அருளேயருளொளிவே அகண்டமேயேகமே
பொருளேயொழியாவென் பரிபூரணமேகண்வளரீர் 14

சத்தியமேயுண்மையே தானானதன்மயமே
சுத்தநிர்க்குணமேயென் சுயஞ்ஜோதிகண்வ்ளரீர் 15

உண்மையுறவே ஓமென்னும்பிரணவமே
நன்மையருள்விருந்தே என்னானந்தமேகண்வளரீர் 16

கரைகடந்தவெள்ளமே கருணைபொழிமுகிலே
யுறையுந்தொண்டருள்ளமே. என்யோகமேகண்வளரீர் 17

கண்டார்கொண்டகோலமே காரணமேகருத்தே
தொண்டர்கொண்டாட்டமே என்சுகமேகண்வளரீர் 18

குருமணிச்சிம்மாஸனமே கொலுவரசேயேகமே
ஒருவரசுநிகரில்லா வென்மாமணியேகண்வளரீர் 19

ஜோதிச்சுடரே சுடர்பரந்தசுடர்க்கொழுந்தே
ஜாதிமணிக்கோவையே என்ஸகஜமேகண்வளரீர் 20

உள்ளமுணர்கோவிலே வதினுறையுந்திருவுளமே
கள்ளமறுஞ்சுயம்பே என்கனியேகண்வளரீர் 21



சத்துற்றசத்துமற்ற தன்பதியேயசிபதமே
சுத்தபரமாயோனமே வென்சொரூபமேகண்வளரீர் 22

சோராதவின்பமே சும்மாவிருக்குமென்சுகமே
பேசாநுபூதியே என்பேரின்பமேகண்வளரீர் 23

திடமேசிவமேதிவ்ய திடஞானிசேவைகொண்டோ
ரடையுமஹாவாக்கியமே என்னருட்ஜோதிகண்வளரீர் 24

தீர்த்தஸ்தலவதீதமேதிவ்ய செப்பாவரூபலிங்கமே
பார்க்குமகமுகப்பொருளே பரப்பிரம்மமேகண்வளரீர் 25

பூரணமேஞானமே புண்ணியமேபூஜாவிதியே
காரியகர்ம்மங்கடந்த வென்கண்மணியேகண்வளரீர் 26

காணாதோர்காக்ஷியே கர்ம்மமற்றமெய்ப்பொருளே
தோணாதோர்தோற்றமே என்சுயமேகண்வளரீர் 27

விழியாவிழிக்கண்ணே மெய்மௌனவற்புதமே
அழியாவருளளித்த வென்னருளொளிவேகண்வளரீர் 28

விஞ்சைமருந்தே விஞ்ஞானமந்திரமே
அஞ்சாதமெய்யரசே என்னருஞ்சிவமேகண்வளரீர் 29

சின்மயமேசிற்பரமே சிவயோகத்தினொளிவே
தன்மயமேதற்பரமே என்சர்வமுமேகண்வளரீர் 30

அடையும்பொருளே யடைக்கலமேகாவலே
வுடையாருடையதுவே. என்னுள்ளமேகண்வளரீர் 30

சத்தியமாய்ச்சார்ந்தோரச் சத்தியமாவர்மெய்யே
நித்தியமாததாகாரமே வென்னிமலஜோதிகண்வளரீர் 32

சிவோஹம்.

ஒளியினியொளியேயொருதனிச்சுடரேயுமெனுமாவேயும்
அழிவிலாவொளியேயசையாமணியேயற்புதமேபொருளே 1

கழிவிலாவின்பமேகனிந்தகனியேகனிந்தொழுகும்ரஸமேயுந்
தெளிவளர்மெய்யேச்சிற்பரச்சிவமேசிவயோகமேயருளே 2

மலியாமலரேமதியாமணமேமணமறும்பொருளேயோஞ்
சலியாவுறவேசலியாக்கனியேயென்சந்ததமிருந்தருளே 3

வெளியாமொளியேமெய்யேசுடரேவிளைநல்லருளேயோங்
கொளியாக்கொளிப்பேருணுநீதமேயென்கோமளம்வந்தருளே

ஒழியாவொளியேயொருதனிமுத்தேயுமெனுமொளியேயும்
விழியாவிழியேமெய்யேமெய்யேவெளியேயோமருளே 5

அழியாவொளியேயளிக்குமருளேயகமேயருளேயோங்
கழியாக்களிப்பேகருணைநிதியேகருணைபொழிந்தருளே 6

சுத்தமேயொளியேஜோதிச்சுடரேசொரூபமேநிஜமேயும்
நித்தியநிஜமேநிர்மலவொளியேயென்னிஜமேநிஜமருளே 7

தோணுவொளியேதோணும்நிறைவேசுகமேசுயமேயோங்
காணத்தவமேகண்டாருறவேயென்கண்மணியொளியேவா 8

பேசாவொளியேபெருமைச்சுடரேபெருமையருளேயும்
நேசாநுநேசம்நிஜமேநிஜமேநிறைந்தருளும்பொருளே 9

சித்தமொளியேசித்தம்பரமேசித்திநிறைவேயுஞ்
சுத்தமென்னொளியேசுகமேசுகமேஜோதிசுபமருளே 10

காணுங்கண்ணேகண்ணினொளியேகதியேபொருளேயுந்
தோணுவொளியேசுடரேசுடரேசுபமேபொழிந்தருளே 11



மெய்யாமொளியேமெய்யேபொருளேமெய்யேயருளேயும்
ஐயமிலையென்னழியாவொளியேயழியாநிதியருளே 12

வெளியாந்தேனேவெளியாமமுதேவெளியேயொளியேயும்
ஒழியாவுணர்வேயொளியேயுறவேயுமென்றிருந்தருளே 13

சின்மயவொளியேசித்திரநிறைவேசின்மயக்கனியேயோந்
தன்மயநிறைவேதற்பதமணியேஸந்ததம்வந்தருளே 14

ஞானமேயொளியேநானெனுமருளேஞானமேயருளேயுந்
தேனருளினியேதெவிட்டாவொளியேதிவ்யமிருந்தருளே 15

கொஞ்சும்பதமேகொஞ்சுமொழியேகுணமறும்பொருளேயு
மஞ்சாப்பதியேயருமைக்கொழுந்தேயென்னன்பேவந்தருளே

சோராவொளியேசொரியாமலரேசுபமேயருளேயோம்
வாராய்மணியேமதியாவரமேவந்தருளுங்கனமே 17

பேராவொளியேபேசாநிதியேபெருங்குருவமுதேயோம்
வாராய்நிஜமேமதியெனுமொளியேவந்தருளுமுறவே 18

அன்பறிவேயழியாவொளியேயகண்டமேயான்மாவு
மின்பம்நிறைவேயெல்லாஞ்சிவமேயேகமேவந்தருளே 19

ஜோதிச்சுடரேசுடரேயொளியேசுகமேசுகமேயோஞ்
ஜாதிமணியேயொளியேஸாரமேசர்வமும்வந்தருளே 20

நானேயதுவேநானேயொளியேநானெனும்பொருளேயுந்
தானேதனியேதனித்தவொளியேதனியேவந்தருளே 21

குருவேயொளியேகுணமிலியருளேகுணமறுஞ்சிவமேயும்
அருளேயருளேஐயமிலியேயென்னருளேநிறைந்தருளே 22

சத்தேசத்தேசத்தியவொளிவேசத்தியநிறைவேவோம்
பற்றியபற்றேபற்றறுமொளிவேபரஞ்ஜோதிபதிந்தருளே 23

தன்னந்தனியேதத்துவவொளிவேசர்வமேதானேவோம்
பின்னமிலியேபேசாமொழியேயென்பெருமையுறைந்தருளே

சத்தியந்தானேசத்தியவொளிவேசத்தியம்பொதுவேவோம்.
நித்தியந்தானேநிச்சயமிதுவேயென்னிஜமேநிஜமேவா. 25

சிவோஹம்.

---

## மதி.

அடிநான்காய்த்தப்பிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

மௌனமெழுந்தோருருவதாகிக்
கதிகாட்டவந்ததோமதியே
மாறிடாவஸ்துதன்னையளித்துத்
தானாக்கிக்கொண்டதோமதியே. 1

காணக்கிடையாமெய்ஞ்ஞானரகசியங்
கைகாட்டவந்ததோமதியே
காணுமாமதியேபூரணமாகித்தன்னைக்
காட்டிக்கலந்ததோமதியே. 2

விதிவிலக்கிறந்தவிமலபரமுருவாய்ப்
பொருள்விள்ளவந்ததோமதியே
விமலபரமதாயாக்கியளித்தத்துவாத
விருந்ததோமதியே. 3



சுத்தநித்யசுயம்புவெழுந்தருட்
சொரியவந்ததோமதியே
சுட்டிடாரகசியமென்னையுந்தானாக்கத்
தோன்றிநிறைந்ததோமதியே. 4

வாக்குமனமணுகாப்பூரணமுருவாய்
மருள்கெடுக்கவந்ததோமதியே
வாக்குமனதைப்பொருளிலொடுக்கியும்
பொருளாகிவாழ்ந்ததோமதியே. 5

சமயாதீதப்பரம்பொருளுருவாகியுஞ்
ஜாடைகாட்டியழைத்ததோமதியே
சர்வமுந்தானெனக்காட்டியுந்தன்னைத்
தானுகந்துகொண்டதோமதியே. 6

சத்துச்சித்தானந்தந்திரண்டுருவாகித்
தன்னைக்காட்டிக்களித்ததோமதியே
சச்சிதானந்தமெய்ச்சத்தாக்கியுந்
தனிச்சத்தாகநிறைந்ததோமதியே. 7

பரஸ்பரமானசைதன்யமெழுந்து
பரமாக்கவந்ததோமதியே
பரமார்த்தபிரம்மபரமாக்கியும்
பதைப்பறவிருந்ததோமதியே. 8

குணங்குறியிறந்தவத்வைதவரூப
முருக்கோலங்கொண்டதோமதியே
குணங்குறிநீக்கிதந்தன்னைக்கொடையாய்க்
கொடுத்துக்குளிர்ந்திருந்ததோமதியே. 9

மறைநான்குக்காணுமாவிதேக
முருவாய்வந்ததென்கொலோமதியே
மறைக்குமெட்டாமாசூக்ஷமாக்கியு
மதுவாகவிருந்ததோமதியே. 10

தற்பதலக்ஷியமோருருவதாகியுந்
தத்வமாக்கவந்ததோமதியே
தத்வமசியின்லக்ஷியமதாகித்
தானாய்த்தனித்துக்கொண்டதோமதியே. 11

சிற்சொரூபசிவபோதமுருவாகிச்
சின்மயமாக்கவந்ததோமதியே
சிற்பிரகாசமேவெல்லாமுமாகிச்
சிறந்துவாழ்ந்ததோமதியே. 12

நிராகாரசிதானந்தமோருருவதாகி
நானெனமொழியறமொழிந்ததோமதியே
நிராகாரசொரூபமாயாக்கியுமசைவறவது
நேசித்திருந்ததோமதியே. 13

வரவுபோக்கற்றமாசுயம்புவெழுந்துமா
மஹத்தாக்கவந்ததோமதியே
வரத்துபோக்குமிறந்துந்தனியாய்
வாழ்ந்துமிருந்ததோமதியே. 14

அறிவாயிருந்தவகண்டமுருவாகியுமறிவை
யறிவிக்கவந்ததோமதியே
அறிவினிலறிவாய்நிறைந்தும்பேரறிவதா
யமர்ந்தவாழ்ந்துவாழ்ந்ததோமதியே. 15



துரியநிலத்தைக்கடந்தசத்யமுருத்
தோன்றிவந்ததென்கொலோமதியே
துரியாதீதத்திலாழ்ந்தியுந்தானாய்த்
தோய்ந்ததென்கொலோமதியே. 16

கற்பனையற்றமாகாரணபிரம்மமுருக்
காட்டிவந்ததென்கொலோமதியே
கற்பனைபோக்கிக்காரணமாக்கிமா
காரணமாகவிருந்ததோமதியே. 17

கர்ம்மங்கடந்தவேதாதீதமுருக்
கலந்துவந்ததென்கொலோமதியே
கர்ம்மிக்கனுகாநிஷ்கர்ம்மமதாகியுங்
களித்துச்சுசித்ததோமதியே. 18

சுத்தவபேதநிர்விகற்பமுருத்
தோன்றிவந்ததென்கொலோமதியே
சுத்தநிர்விகற்பமாக்கியளித்துஞ்
சொல்லறவிருந்ததென்கொலோமதியே. 19

சொல்லறுஞ்சொல்லைசொல்லாமற்சொல்லத்
தோன்றிவந்ததென்கொலோமதியே
சொல்லறநித்தியசுதந்திரமாய்ச்சொக்கிச்
சுகித்துவாழ்ந்ததோமதியே. 20

சிவோஹம்.

இராகம்—தந்நியாசி.

பல்லவி.

நெய்வாங்கலையோ அம்மம்மா நெய்வாங்கலையோ

1 மெய்யாம்பசுவினெய் மெய்யாயெடுத்தது
வுய்யும்படிக் கொருபடியம்மம்மா நெய்

2 கட்டிக்கறந்தது வெட்டிக்கடைந்தது
வெட்டிப்பரந்தது வெல்லாமுண்ணும்நெய் நெய்

3 சுட்டுக்கடங்கா சுத்தப்பசுநெய்
மட்டுக்கடங்கா வாசனைகொஞ்சுது நெய்

4 மோனவிறகினால் மூட்டியுருக்கும்நெய்
ஞானந்திரண்டநெய் நலலநெய்யம்மம்மா நெய்

5 சத்துத்திரண்டநெய் சத்தியமானநெய்
சுத்தர்சுகிக்கும்நெய் சும்மாவிருக்கும்நெய் நெய்

6 பந்தவியாதியோர் பத்தியங்காக்கும்நெய்
பாவனைதீர்த்தோர் பருகிச்சுகிக்கும்நெய் நெய்

7 சுத்தசொரூபநெய் சுந்தரவாஸம்நெய்
சித்தங்களிக்கும்நெய் சின்மயமானநெய் நெய்

8 வஞ்சகர்காணாநெய் மாமதுறைந்தநெய்
யஞ்சலென்றாளும்நெய் யம்மம்மாநல்லநெய் நெய்

9 தன்னந்தனித்தநெய் தானாய்வடிந்தநெய்
பின்னமில்லாதநெய் பேசாப்பெருமைநெய் நெய்



10 உண்டால்ருசிக்கும்நெய் யுண்டால்வராதுநெய்
கண்டார்கொண்டநெய் கண்மணியானநெய் நெய்

11 தேறித்தெளிந்தநெய் தெளியவடித்தநெய்
சோராக்கமழும்நெய் சொரியக்குறையாநெய் நெய்

12 பாலாய்க்கறந்தநெய் பாலைக்கடைந்தநெய்
மேலாம்பசுவின்நெய் மெய்யம்மாநல்லநெய் நெய்

13 முத்தாருந்தும்நெய் முத்திவிருந்துநெய்
சித்திநிறைந்தநெய் தித்திப்புள்ளநெய் நெய்

14 சமயங்கடந்தநெய் ஸமரசப்பானைநெய்
மடமைதீர்க்கும்நெய் மந்திரநெய்யம்மா நெய்

15 யோகந்திரண்டநெய் வுள்ளேயுருக்கும்நெய்
யேகமாய்பொங்கும்நெய் ஏகாந்தநெய்யம்மா நெய்

16 கண்ணுக்குக்கண்ணுநெய்-கருணைபொழிந்தநெய்
விண்ணுக்குமேலாம்நெய் மெய்யம்மாநல்லநெய் நெய்

17 சாஸ்திரங்காணாநெய் [illegible]
வேற்றறியாதநெய் விளைந்ததுநல்லநெய் நெய்

18 மதத்தைக்கடந்தநெய் மாற்றறியாதநெய்
சாற்றப்படாதநெய் சத்தியமெந்தனெய் நெய்

சிவோஹம்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
### இரட்டைக்குறள்வெண்செந்துறை.

1 தொந்தவினையெல்லாமுருகும்படிசெய்யுச்
சொரூபநெருப்பிடவுந்
தோணாத்தோற்றமாய்ச்சொக்கும்படிசெய்ய
ஜோதிவிழிநோக்கவும்
பந்தமழித்துப்பதைப்பறவிங்ஙனம்
பதியாய்ப்பதித்திடவும்
பக்குவபண்டிதமாமௌனரல்லது வேறொரு
பரமனாற்செய்யலாமோ.

2 ஆணவகாமியமடியோடுநீற்றிங்ங
னருட்கண்டிறந்திடவு
மங்குமிங்குமெங்குந்தானையமர்த்தியு
மகண்டமதாயாக்கவும்
வேணாதுதந்துவிருத்தியொடுக்கிமா
விதேகமாய்வைத்திடவும்
விமலமாமௌனவித்தகர்க்கல்லது வேறொரு
வீசனாற்செய்யலாமோ.

3 வாக்காதிகர்ம்மமரித்திடவிங்ஙனம்
வாரியணைத்திடவும்
வரத்துபோக்கற்றவஸ்துவதாக்கிப்பின்
வாழ்த்தியமிர்தூட்டவுந்
தாக்கும்நல்லானந்தமாக்கியளித்தென்னைச்
சர்வமதாக்கிடவுஞ்



4 கரணமலங்குணங்குறியறபோக்கிநற்
கருணைக்கண்ணொளிவீசவுங்
காலாகிதமாய்க்கலந்தருளூட்டியுமா
கதிமனைகுடியேற்றவு
மிரணமத்தமெனுமிராகாதியுமிங்ங
னிறக்கவிறுக்கிடவு
மினியமாமௌனயேகாந்தர்க்கல்லது வேறொரு
ஈசனாற்செய்யலாமோ.

5 தோற்றும்நாமரூபந்துறந்திடத்தூற்றிமா
துரியஹாரஞ்சூட்டவுந்
துற்சங்காரகிதசுபாவமுதாக்கிசுகாந்த
துய்யசிவமாக்கவுஞ்
சாற்றுதற்கரியலந்ததமாக்கிங்ஙன்
சத்தாய்ச்சமைத்திடவுஞ்
சம்பூரணமாமௌனர்க்கல்லது வேறொரு
சங்காராற்செய்யலாமோ.

6 தேகோகம்நீக்கிச்சிவபோகமாக்கிநற்
றிருவருட்டேக்கிடவுஞ்
சித்தசலனமறுத்துப்பின்னிங்ஙனஞ்
சின்மயசித்தாக்கவும்
மோகாதிபோகங்கள்முற்றுமுனிந்தற
முன்னிலைபோக்கிடவும்
முழுதுணர்மாமௌனமுத்தர்க்கல்லது வேறொரு
முகுந்தனாற்செய்யலாமோ.

7 கர்த்திருத்வநாசம்பண்ணியுமிங்ஙனங்
கர்ம்மமறக்காயவுங்
காண்பான்காணுங்காக்ஷியுறவுற்றுரிய
கருத்தோடிசைத்திடவுங்

திருப்தி பூர்த்தித்துத் தெளிவுறத் தேக்கிங்ஙன்
திவ்யமாவமிர் தூட்டவுந்
தீர்க்கமா மௌனதேசிகர்க்கல்லது வேறொரு
தேவராற் செய்யலாமோ.

8 நாசமற்ற நித்யத்வமாக்கிவலைத் தொன்றாய்
ஞானவொளி மேவுறவும்
நாமரூபாகி தனன்கதுவாக்கிங்ஙன்
நாணீயெனக்காட்டவும்
யோகசந்தோஷமற முனிந்ததை நீற்றிங்ஙன்
முடிவிலொடுக்கிடவும்
முத்தியா மௌனமுனிவர்க்கல்லது வேறொரு
மூவராற் செய்யலாமோ.

9 போதநிர்விகற்பம் பொருத்தியுமிங்ஙனம்
புகழ்ந்து விளையாடவும்
புண்ணியபாவமிரண்டறநேர்க்கித்தான்
புன்சிரிப்புக்கொள்ளவும்
மாதகைமையென்னும் பேரின்பந்தாக்கிமா
மறைத்துவமறத்தாக்கவும்
மர்ம்மமா மௌனசொரூபர்க்கல்லது வேறொரு
மகேசனாற் செய்யலாமோ.

10 ஸகஜாநுபூதிநிஷ்டைதந்துமிங்ஙனஞ்
ஸந்ததமாக்கிடவுஞ்
சமயாதீதமஹாசமத்துவமாக்கிமகிழ்ந்து
தழுவிக்களித்திடவும்
பிசகாநுரூதம்பெருக்கியுமிங்ஙனம்
பெருமைபிறப்பிக்கவும்
பிரம்மமா மௌனசுகந்தர்க்கல்லது வேறொரு
பிரம்மனாற் செய்யலாமோ.



11 பொங்கித்ததும்புமா பூரணமாக்கிங்ஙன்
புருஷார்த்தம் புணர்த்திடவும்
போதநிரஞ்சன தீபமேற்றிவெங்கும்
புரையறப்பூட்டிடவு
மிங்கிதசொஸ்தவியல்பாயமைத்திங்ங
னிடையறவிசைத்திடவு
மின்பாதீதமா மௌனர்க்கல்லது வேறொரு
ஈசனாற் செய்யலாமோ.

12 நிராகாரமாக்கிநித்தியலங்காரம்
நேர்த்தியாய்ச்செய்திடவும்
நிற்குணமயமாய்நேசித்திருத்திங்ங
னீங்காநிலைகாட்டவும்
பாரோடாறுறுக்கப்பாலமைத்துமா
பதமாய்ப்பதித்திடவும்.
பரஸ்பரமா மௌனபண்டிதர்க்கல்லது வேறொரு
பரமனாற் செய்யலாமோ.

13 சுயம்புமெய்ஞ்ஞானமுடியிணைச்சூட்டிங்ஙன்
சுட்டறத்தோய்த்திடவுஞ்
சும்மாவிருக்குமெய்யாசனமிட்டுரிமைமா
சுத்தபிரம்மமாக்கவும்
ஜெயஜெயசையோகமாக்கியுமிங்குநற்
சீர்மைசிறப்பிக்கவுஞ்
ஸ்ரீதேந்திரியமா மௌனதேசிகர்க்கல்லது வேறொரு
தேவராற் செய்யலாமோ.

14 காணாதகண்ணைத்திறந்துகளித்திங்ஙன்
கைகோத்தாட்டிடவுங்
கண்மணிவாவெனத்தூக்கிமடியிட்டுங்
கண்டுகண்டுகண்வைக்கவும்

மானாபிமானமறவுங்கெடுத்ததீதமா
மங்களம்பாடிடவும்
மஹத்துவமாமௌனமந்திரர்க்கல்லது வேறொரு
மகேசனாற்செய்யலாமோ.

15 அரியதோர்மாக்ஷிமையபாரமதாக்கிநல்
லழகிட்டானந்திக்கவு
மசங்கமாயானவழகதைக்கண்டிங்ங
னடடாவெனமெச்சவும்
பிரியாமாதுரியர்தீதத்தொடுக்கிட்டுரிய
பேரரசாக்கிடவும்
பெம்மான்மாமௌனசுவாமிக்கல்லது வேறொரு
பிரம்மனாற்செய்யலாமோ.

16 நிற்பயஞ்சூட்டிமாநிரந்தரமாக்கிங்ங
னிற்சின்னமலர்சூட்டவும்
நிர்நாமவத்வைதபூட்டினைப்பூட்டிமா
நிற்பின்னமாக்கிடவுஞ்
சிற்பிரகாசமாதேஜசுவேற்றிவினிய
சிற்சொரூபமாக்கவுஞ்
சிவசாந்ததிவ்யமாமௌனர்க்கல்லது வேறொரு
தேவராற்செய்யலாமோ.

சிவோஹம்.

கருத்து:—மேலருளிச்செய்திராநின்ற குரு வல்லபத்தின் கண் தேவர், மூவர், முகுந்தன், பரமன், பிரம்மன், மகேசன், ஈசன், சங்கரர், சம்புவென்றும் கற்பனை நாமங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றனன். இந்த நாமங்கள் உண்மையில் இன்றென்க்காண்கவும், ஆனதால் உரியமா மெய்ஞ்ஞான குரு



வைத் தவிர வேறொருவராலும் பிரம்ம உபதேசம் பண்ண அதிகார மில்லையாமென்றும் ஆசிரியர் மெய்ஞ்ஞானியாக விருக்கவேண்டுமென்றும் அந்த மெய்ஞ்ஞான குருவின் மகிமையைக்கூறும்பொருட்டாக ஏற்பட்ட கற்பனை நாமமென் றறியவும் உண்மை நாமரூப ரகிதமென்றுணரவும்.

## நிர்விகற்பலீலை.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
### இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பாசாடவியறுத்துப்பதமருள்பெரும்பொருட்
பதிபதிந்தோமென்றிடுசுகாந்தம்
பாராப்பார்வையாய்ப்பார்க்கவுகந்தோர்க்குப்
பரஸ்பரமானோமென்றிடுசுகாந்தம்
கோசாதிமுப்பானைந்திற்கும்பாற்
குவிந்தோமென்றிடுசுகாந்தம்
குரவர்குலாமொடுகுலாவியுமிக்கோலங்
கொண்டோமென்றிடுசுகாந்தம். 1

வேதம்நான்கிற்குமப்பால்விளைந்தவிளைவாய்
விளைவுற்றோமென்றிடுசுகாந்தம்
விள்ளாமாமஹாவித்தகவித்தாய்
விசைந்தோமென்றிடுசுகாந்தம்
சாதகசாத்தியமுற்றும்விதேகமாய்ச்
சார்ந்தோமென்றிடுசுகாந்தம்
சையோகசாஸ்வதஸகஜவதீதமாய்த்
தனித்தோமென்றிடுசுகாந்தம். 2

அபேதபோதவபாரபரப்பிரம்மமதுவா
யமர்ந்தோமென்றிடுசுகாந்தம்
அசங்கஸ்ரூபநிராவரணந்தானா
யணிந்தோமென்றிடுசுகாந்தம்
சுபேட்சைமுதலேழுந்தனதாகப்பூண்டுஞ்
ஜொலித்தோமென்றிடுசுகாந்தம்
சுபாவஸமரஸஸுகந்தம்புரிந்துமா
சொரூபமுற்றோமென்றிடுசுகாந்தம். 3

கண்ணொளிகண்ணைக்கலந்துமெல்லாமாய்க்
களித்தோமென்றிடுசுகாந்தம்
காலரகிதமஹாகோலாகலமதாய்க்
கலந்தோமென்றிடுசுகாந்தம்
என்னொளிவொழியாவிருளொளிகறந்து
மிருந்தோமென்றிடுசுகாந்தம்
யெண்ணுதற்கெட்டாவின்ரியமாவஸ்துவா
யிணைந்தோமென்றிடுசுகாந்தம். 4

குருபரன்புணர்ச்சியாற்குன்றாமகிழ்ச்சியாய்க்
கொளித்தோமென்றிடுசுகாந்தம்
குன்றாக்குறியாப்பேரின்பச்செருக்குக்
கொண்டோமென்றிடுசுகாந்தம்
சர்வமுள்ளும்புறம்புந்தானெனப்பேராண்மை
சாதித்தோமென்றிடுசுகந்தம்
ஸந்ததநித்தியசுவானுபூதிவிறுமாப்புத்
தரித்தோமென்றிடுசுகாந்தம். 5

கண்டமறத்துறந்துகளங்கரகிதமாய்க்
களித்தோமென்றிடுசுகாந்தம்
கர்மத்திற்கப்பாலிருப்புமும்பொருளாய்க்
கடந்தோமென்றிடுசுகாந்தம்



விண்டுறுந்திரிபுடிவிஷயமறக்கறந்து
விள்ளாதுற்றோமென்றிடுசுகாந்தம்
விமலசுகாதீதவித்துறும்வித்தாய்
மேவினோமென்றிடுசுகாந்தம், 6

வல்லமாசைதன்யமஹத்துறுமஹத்தாய்
வசித்தோமென்றிடுசுகாந்தம்
வள்ளலருளியமாற்றில்லாவாழ்வதாய்
வாழ்ந்தோமென்றிடுசுகாந்தம்
நல்லமாமஹாத்தாகாரம்நம்முளதுளதாய்
நன்கானோமென்றிடுசுகாந்தம்
நானேநானாய்விளங்கியசத்தியம்
நாமேயென்றிடுசுகாந்தம். 7

அத்வைதசுதந்திரவரியதுரியாதீத
மமர்ந்தோமென்றிடுசுகாந்த
மன்பினுமன்பாய்ப்பெருகியகருணையி
லாழ்ந்தோமென்றிடுசுகாந்தம்
சுத்தவத்வைதஜோதிமாஸுகந்தந்
தோய்ந்தோமென்றிடுசுகாந்தம்
சுந்தரவழகியசுயம்பிரகாசமாய்ச்
சுகித்தோமென்றிடுசுகாந்தம். 8

புண்ணியபாவரகிதபூரணந்தானாய்ப்
பூண்டோமென்றிடுசுகாந்தம்
புனிதமாபுருஷார்த்தந்தாந்தானெனப்
புணர்ந்தோமென்றிடுசுகாந்தம்
அன்னியசொந்தமற்றவபரோக்ஷாஹார
மணிந்தோமென்றிடுசுகாந்தம்
அனித்தியரகிதமாதத்வந்தானா
யமைந்தோமென்றிடுசுகாந்தம். 9

பெரிதுசிறிதற்றபேசாமாபெருமை
பெற்றோமென்றிடுசுகாந்தம்
பெரிதினும்பெரிதாயிருந்துளவிருப்பைப்
பிரியாதுகந்தோமென்றிடுசுகாந்தம்
அரிதுவரிதரியவற்புதவினியதா
யமைந்தோமென்றிடுசுகாந்தம்
யதுவதுவதுவாகவமைந்துளரகஸிய
மானோமென்றிடுசுகாந்தம். 10

சிவோஹம்.

## உபதேசக் கோலாட்டம்.

### இராகம் முகாரி—தாளம் ஆதி.

கோலேனாக்கோலே, திருவருட்கோலேனாக்கோலே.
கோலேனாக்கோலே, சின்மயக்கோலேனாக்கோலே. 1

திருவுளக்கனிவின்றிற், கனிந்தகனிரஸமேகமடா
சின்மயப்பாகாச்சே, கிழவாதித்துப்புண்ணுமடா. 2

உண்மைக்கனிதானாப், பொங்கிவுருகிவடிந்ததடா
நன்மைதீமையற்று, கிழவாநன்றாய்நீயுண்ணுமடா 3

சுத்தச்சொரூபமாச்சே, கனிரஸஞ்சுவையுமிகுதியாச்சே
சுட்டுக்குமெட்டாதடா, கிழவாசுட்டாதேவுண்ணுமடா. 4

மும்மலம்வீணாச்சே, சோதிமுக்குணம்போகலாச்சே
நிர்மலம்நிஜமாச்சே, கிழவாநிச்சயமுண்ணுமடா 5

பூதமேபொய்யாச்சேசித்திரப்பூரணம்நிஜமாச்சே
காரணம்ருஜியாச்சே, கிழவாகனிவாகவுண்ணுமடா. 6



கண்டதும்வீணாச்சே, மெய்யைக்கண்டதுந்தானாச்சே
உண்டதுமுணர்வாச்சே, கிழவாவுள்ளதைவுண்ணுமடா. 7

நீங்காச்சுகமாச்சே, நிச்சயம்நின்றதும்பொருளாச்சே
தூங்கர்மற்றூங்குமடா, கிழவாசோராமலுண்ணுமடா. 8

நிர்விசற்பமாச்சே, நித்தியம்நிறைந்ததும்நிஜமாச்சே
கருவிகரணம்போச்சே, கிழவாகதியிதுவுண்ணுமடா. 9

ஞானமதங்கொள்ளுமே, வருட்டானாகப்பொங்குமேபார்
மோனமமதையுற்றுக்கிழவாமுழுதுமாயுண்ணுமடா. 10

சத்தியமுண்மையாச்சே, மெய்யைச்சந்தித்தால்மெய்யாச்சே
சித்தியுஞ்சிவமாச்சே, கிழவாசிந்தித்துக்கொள்ளுமடா. 11

விட்டாற்குறையாச்சே, மெய்யைத்தொட்டாலுமுறவாச்சே
கிட்டாப்பொருளாச்சே, கிழவாகிட்டியேவுண்ணுமடா. 12

போனால்வராதுபோச்சே, அடடாபொங்கிவடியலாச்சே
காணாக்காக்ஷியாச்சே, கிழவாகண்டுநீவுண்ணுமடா. 13

உளியிட்டகல்ஜடமேஐயோவுப்பிட்டபாண்டம்போச்சே
கதியிட்டகுருபதத்தை, கிழவாகண்டுநீவுண்ணுமடா. 14

மோனரகஸியமேவுண்மைமுன்னிலையற்றவிடங்
காணாதைக்காணுமடா, கிழவாகளிப்புறவுண்ணுமடா. 15

சோதிக்கெட்டாதாச்சே, சத்தைச்சுட்டிக்காட்டாதாச்சே
சாதிக்கத்தாமதாச்சே, கிழவாசத்தியமுண்ணுமடா. 16

ஒடிவுழன்றாற்போச்சேமெய்யைவுற்றுற்றுநாடலாச்சே
தேடியலையாதாச்சே, கிழவாசின்மயமுண்ணுமடா. 17

பட்டப்பகலித்தாச்சே, பாடுபட்டாற்றெரியலாச்சே
கிட்டாதென்றாற்போச்சே, கிழவாகிட்டியேவுண்ணுமடா. 18

ஓயாவொளிவாச்சேசின்மயமுற்றதுபொருளாச்சே
வாயைத்திறவாதே, கிழவாமந்திரமுண்ணுமடா. 19

பக்தர்ருஜியாச்சேவுத்தமம்பாவிக்குமெட்டாதாச்சே
சுத்தர்சுகிக்கலாச்சே, கிழவாசும்மாநீவுண்ணுமடா. 20

என்னுணேயென்னதாச்சேசத்யமெங்குமேநின்றதாச்சே
தன்னுணேதன்னதாச்சே, கிழவாசத்தியமுண்ணுமடா. 21

சிவோஹம்.

கருத்து:—மேலருளிச்செய்திராநின்ற உபதேசக்கோலாட்டத்தின்கண் கிழவா கிழவா, யென்ற பதத்தினருத்தம் அதிதீவிர பக்குவசீடனெனக்காண்க.

## குயில்.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

1 அருள்பெருகிச்சொரூபமதாயாகியுணர்வாகி
லாணவாதிகளிறந்துமசங்கமாகுமாகிற்
சர்வமென்னுமுடையபிரம்மமுறவதாகுமாகிற்
சாற்றுவிடஞ்சார்ந்ததென்றுங்கூவுமருட்குயிலே.

2 நாமரூபமற்றபொருள்நாமதுவாயாகிற்
ஞாலமுதலெப்பொருளாய்நட்டுநிற்குமாகிற்
கோமளகுறவனருட்கொண்டுகொள்ளுமாகிற்
குன்றுவஸ்துநாமதென்றுங்கூவுமருட்குயிலே.



3 சித்திரம்போலசைவற்றசெல்வந்தங்குமாகிற்
றீரவல்லஜெயமருவிச்சேர்க்கைசேருமாகிற்
றந்திரமாசாட்சாத்காரந்தழுவிப்பூணுமாகிற்
றனித்தவிடம்நாமதென்றுங்கூவுமருட்குயிலே.

4 சுட்டறக்கலந்துபோதஞ்சொக்கிநிற்குமாகில்
ஜோதியென்னும்பூரணத்வந்தோய்ந்தொழுகுமாகிற்
கட்டறக்கலந்துமொன்றாய்க்கரைந்தழுந்துமாகிற்
கைவல்யமானதென்றுங்கூவுமருட்குயிலே.

5 போக்குவரத்தற்றபரம்பொருந்திநிற்குமாகிற்
பொறுமைமிகுபொக்ஷமாய்ப்பூண்டுகாக்குமாகிற்
றுக்குஞ்சதானந்தவெள்ளந்தங்கிநிற்குமாகிற்
றத்துவமாய்ச்சார்ந்தோமென்றுகூவுமருட்குயிலே.

6 விதேகமென்னுமோனந்தங்கிமேவியாளுமாகில்
விள்ளாமாவின்பமர்ம்மமிலைசந்துவாழுமாகிற்
றதேகநிஷ்டைதாக்கித்தாளுப்த்ததும்பிமகிழுமாகிற்
சந்ததசாத்யம்பெற்றதென்றுங்கூவுமருட்குயிலே.

7 அத்துவைதவகண்டஞானஞ்சித்திபெற்றிடுமாகி
லானந்தாதீதந்தானையமர்ந்துகொஞ்சுமாகிற்
சுத்தமென்னும்நித்யத்வஞ்ஜொலித்துநிற்குமகிற்
றூங்காத்தூக்கந்துடர்ந்ததென்றுங்கூவுமருட்குயிலே

8 கருவிகரணாதியாவுங்கரைந்தமலமாகிற்
காலமுறுங்கர்ம்மபந்தங்கடந்துநீறதாகில்
நிருவிகற்பநேமம்பூண்டுநேசித்தமருமாகில்
நித்யத்வம்நேசமென்றுங்கூவுமருட்குயிலே.

9 நிருணயமாசுயம்பதுவாய்நிலைந்துநிற்குமாகில்
நிஷ்களங்களங்கசின்மயமாய்நிலைத்துவாழுமாகிற்
கருணையென்னுங்கதிகனிந்துகருத்திற்கிசையுமாகிற்
கருதவொண்ணாதானதென்றுங்கூவுமருட்குயிலே.

சிவோஹம்.

## வீடு.

### அடிகாண்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை

1 அருவமலமாகினதோரெங்கள்குடிவியல்பு
வபேதமெனுமெங்கள்தெருவீதியகமமைப்பு
பருவமிகுபக்குவமாய்ப்பதிந்ததனிருப்பு
பகாரியதாயிலங்கும்பதவியெங்கள்வீடு.

2 முன்னிலையுமற்றிருக்குமெங்கள்மனைமுகப்பு
முக்குணத்தைவேறுக்குமெங்களின்பஞ்சிறப்பு
நன்னிலையும்நழுவாநிற்குமெங்கள்வாசலமைப்பு
நாடாநாட்டமுற்றமஹாநன்கதெங்கள்வீடு.

3 குருமணியிழைத்திருக்குமெங்கள்மணிமேடை
கூறுவந்தர்முகமருளுங்குரவருள்மாடி
சருவமெனுமரங்கதனிற்றனித்தமஹாபீடஞ்
சஞ்சலமணுகாவிதங்குந்தங்குமெங்கள்வீடு.

4 தொண்டருறவாகிவிளையாடுமெங்கள்வீடு
தொண்டருணர்வாயமைந்தஜோதியருள்வீடு
கண்டவரைவிழுங்கிவிடுங்கருணையெங்கள்வீடு
கண்டதுவேபொருளதாகுங்கைவல்யமஹாவீடு



5 மோனமென்னும்நிலைகதவுயெங்கள்சுயம்வீடு
முத்தராணிஞானமணியொளிவுகொஞ்சுமோசை
ஞானமெனுமிரத்தினத்தையிழைத்திருக்குந்தாணு
மெய்ஞ்ஞானமெனுந்தயிலமதிலிட்டதெங்கள்வீடு.

6 சுத்தமெனும்நித்தியமாய்த்துலங்குமெங்கள்வீடு
சுத்தாசுத்தரகிதமதாய்ச்சொக்குமெங்கள்வீடு
சித்திரம்போலசைவுமறச்சேர்ந்ததெங்கள்வீடு
சித்திதிவ்யபூரணத்வந்தேக்குமெங்கள்வீடு.

7 எம்மதமுமெட்டாதோங்குமெங்களருள்வீடு
யெப்பொருளுந்தானாயெங்குமிலங்குமெங்கள்வீடு
மும்மலத்தைச்சுட்டெரிக்குமெங்கள்படியேற்ற
முத்தியெனும்விருந்தளிக்குமெங்கள்திருக்கோவில்.

8 ஓயாமணிவோசையிடுமெங்களுயர்வீடு
ஓமெனுமணிவிளக்குமோயாதெங்கள்வீடு
தூயமென்னுந்துரியக்குயில்கூவுமெங்கள்வீடு
துரியாதீதமெனுஞ்சுகந்தமயிலாடுமெங்கள்வீடு.

9 சிவோஹமெனுஞ்சூட்சுமக்கொடிகட்டுமெங்கள்வீடு
சிவோஹமெனுமாசனமுஞ்சேர்த்ததெங்கள்வீடு
தவயோகயோகரெல்லாந்தழுவுமெங்கள்வீடு
தத்துவசுயம்பதுவாய்த்தனித்ததெங்கள்வீடு.

10 நித்யமதாய்மெத்தையொன்றுபோடுமெங்கள்வீடு
நிர்மலமாய்த்தூங்காமற்றூங்குமெங்கள்வீடு
உத்திக்குமுகந்துமொன்றியொழுகுமெங்கள்வீடு
வுன்னதபோராண்மைபூண்டுயர்ந்ததெங்கள்வீடு.

11 பத்தரெல்லாங்கைகாட்டும்பாசமெங்கள்வீடு
பக்குவமாய்க்கூட்டிவைக்கும்பான்மையெங்கள்வீடு
வித்தகம்விளைந்தமைந்தவிதேகமெங்கள்வீடு
விசேஷமஹாவீரத்வமிசைந்ததெங்கள்வீடு.

12 தவனமொன்றுமணுகாதெங்கள்சாஸ்வதமாவீடு
தானேதானாய்த்தகைமைபூண்டசத்யமெங்கள்வீடு
மௌனமென்றமந்திரத்னதயோதமெங்கள்வீடு
மௌனமதாயதிலிருத்தியாளுமெங்கள்வீடு.

13 நோன்மைமிகுமறிஞர்கூடிநகருமெங்கள்வீடு
நுட்பமுறுந்துப்புரவாய்நோக்குமெங்கள்வீடு
நான்குமறைதேடுமெங்கள்நல்லதோர்மாவீடு
நானதுவுமேகோபித்துநட்டதெங்கள்வீடு.

சிவோஹம்.

## அருள்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
### இரட்டைக்குறள் வெண்செந்துறை.

இருளறவருள்ஞானமெழுந்து
நின்றதென்றிடருளே
இருவினைபோகச்சொரூபமே
வுருவாகினதென்றிடருளே. 1

போக்குவரவில்லாப்பூரணமாகி
பொருந்திநின்றதென்றிடருளே
பொய்கெடச்சதானந்தம்
பொங்கிநிறைந்ததென்றிடருளே. 2



வாக்குமனமறமெய்ஞ்ஞானம்
வாய்த்ததென்றிடருளே
வாக்குமனமும்பொருளாகி
வாழ்ந்ததென்றிடருளே. 3

சொல்லவொண்ணாதசுகத்தைக்கண்டு
சுகித்தோமென்றிடருளே
சொல்லுக்குமெட்டாச்சொரூபமே
நாமானோமென்றிடருளே. 4

மாற்றவொண்ணாதமதிமகிழ்
மதியானோமென்றிடருளே
மாற்றப்படாதவிஞ்ஞானப்பொருளாய்
வசித்தோமென்றிடருளே. 5

சாஸ்திரங்களுமோனவிதேகத்தைச்
சார்ந்தோமென்றிடருளே
சாஸ்திரங்காணாச்சத்யவிதேகமே
நாமானோமென்றிடருளே. 6

நாமெனும்பொருளையறிந்தவிடத்திலும்
நம்வீடிதென்றிடருளே
நாமரூபமிறந்தவிடத்தினில்
நம்வாழ்வதென்றிடருளே. 7

சுட்டுக்கெட்டாச்சூஸ்திரமாடியிற்
சொக்கிநின்றோமென்றிடருளே
சுட்டியுங்காணாசூஸ்திரவஸ்துவே
நாமானோமென்றிடருளே. 8

சின்மயத்தொட்டிலிற்றூங்காமற்றூங்கிச்
ஜெயம்பெற்றோமென்றிடருளே
சிற்பிரகாசமேதானாகியெங்குஞ்
சிறந்தோமென்றிடருளே. 9

சுத்தமேநித்தியசைதன்யநிலத்தைச்
சொந்தமென்றிடருளே
சுத்தவரியபிரம்மமதாகிச்
சொல்லறவிருந்தோமென்றிடருளே. 10

சிவோஹம்.

## பொருள்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை

ஆணவமூலமாய்க்காமியம்பிறந்ததது
மாயையாகவிரிந்ததுபொருளேயந்
தாணவமிறந்தாறாறும்போகுமது
தானுமானதுபொருளே. 1

திரிகுணவழியினிற்றுவிதமுதித்ததது
தோன்றிவுருவாகிநின்றதுபொருளே
திரிகுணம்நசித்தாற்றொண்ணூற்றாறு
மிறந்துபொருள்தானுமானதுபொருளே.. 2

குணங்குறியிறந்தத்வைதமாவுள்ளத்
துறவென்னும்பொருளானதுபொருளே
குணமென்னுங்குறிதானுமறநித்யத்தனியதாம்
விஞ்ஞானமென்னும்பொருளே. 3



பொறிபுலன்யாவும்போனவிடத்திலுமெய்ஞ்ஞானம்
பூரணமானதுபொருளதுபொருளே
பொறிபுலன்பொருளிற்கரைந்தவிடத்தில்மெய்ப்
பொருளதுவானதுபோதமாபொருளே. 4

தேகாதிபிரபஞ்சம்பொய்யென்றறிந்தாலது
புறத்துறவதுவானதுபொருளருள்பொருளே
தேகாதியாவுந்திரிசியமென்றுணர்ந்தாற்
றெளிந்துசிவமானதுசிவமதுபொருளே. 5

சித்தஞ்சலியாநின்றவிடத்திற்புத்திநிர்விகற்பஞ்
சிறந்துநின்றதுபொருளே
சித்தம்புத்திபொருளிலொடுங்கியுஞ்ஞானஞ்
சித்தியாகிநிறைந்ததுபொருளே. 6

அதுவிதுவென்னுஞ்சொல்லுமிடத்தினில்த
துவிதமுற்றதுசொல்லறும்பொருளே
அதுவிதுவென்னுஞ்சொல்லிறந்தவிடத்தினிற்பொரு
ளபேதமுற்றதுபொருளினும்பொருளே. 7

அறிவினிலறிவுசேர்ந்தவிடத்தினிலந்த
வறிவேசொரூபமாகிநின்றதுபொருளே
அறிவேயருளாய்நிறைந்தவிடத்தினிலந்த
வறிவேசுயசொரூபமானதுபொருளே. 8

போதம்பிறந்துமெய்ப்போதமுமாகியும்
பொருளிற்பொருளாயமர்ந்ததுபொருளேதற்
போதமிறந்துசத்ததுவாகிலதுவதுவது
தன்பதியானதுதானதுபொருளே. 9

சத்யமேநித்யமாய்நிறைந்தவிடத்தினிலுமது
சத்தென்னும்பொருளதுவேபொருளேசுய
சுத்யமேதானாகியொடுங்குமிடத்தினிலதுவத்
தானதுவாகுந்தானதுபொருளே. 10

சிவோஹம்.

## பிராமணத்வமுரைக்கும்பல்லி.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை

ஐந்துமாறுமைந்துமற்றுமரூபமாகுமாகி
லத்வைதசுயம்பதுவாயமர்ந்தருளுமாகிற்
சிந்தனைகள்பொருந்தாதுற்றுசிறந்தொழுகுமாகிற்
சிற்சொரூபபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 1

புருடன்பெண்ணலியுமற்றுப்பொருந்திநிற்குமாகிற்
போதமயமாகியெங்கும்புணர்ந்துபூண்டிடுமாகில்
சருவ்முள்ளும்புறம்புமாகித்தனித்துவிடுமாகிற்
சத்தியமாபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 2

மறைகடைந்துவடித்தெடுத்தவமிர்தமாகுமாகில்
மறைக்குமெட்டாச்சத்ததுவாய்வசித்துவிடுமாகிற்
கரைகடந்தபூரணமாய்க்கரைந்துகொள்ளுமாகிற்
களங்கரகிதபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 3

காண்பான்காக்ஷியற்றுத்ததாகாரமாகுமாகிற்
கண்டமற்றகண்டமதாய்க்கரைந்துருகுமாகில்
வீண்பாவனைவிராப்பகலும்வெந்துநீறதாகில்
விள்ளொண்ணாப்பிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி



நனைப்புமறப்பற்றுமுள்ளத்துறவுநல்கிடுமாகில்
நன்குதீங்குமற்றுச்சும்மாநல்கிவிடுமாகி
விணக்கமுற்றுநிர்விகற்பமிசைந்துநிற்குமாகி
வின்பாதீதபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 5

நீக்கமற்றஸகஜநிஷ்டைநிலைத்துவிடுமாகில்
நித்யத்வந்தானதுவாய்நின்றுகொள்ளுமாகில்
வாக்குக்கெட்டாமௌனமேவெள்ளமருளித்தேங்குமாகில்
வகுக்கொண்ணாப்பிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி.

கீழ்மேலும்நடுவுமற்றதாகிநிற்குமாகிற்
கிட்டந்தூரமற்றதுவாய்க்கிட்டிக்கொள்ளுமாகில்
வாழ்வுற்றநிரந்தரமாய்வாழ்ந்துநிற்குமாகில்
வரிசையுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 7

தோணுதற்றசுகாதீதமதாய்த்தோய்ந்துநிற்குமாகிற்
றொருந்தமற்றரகஸியமாய்ச்சொக்கிவிடுமாகி
லோதுதற்றரகஸியமாயோங்கிவாழுமாகி
லுண்மையுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 8

நிர்விஷயகாலாதீதமுகந்துகொள்ளுமாகில்
நிஷ்கிரியாமலரகிதம்ரேசித்திடுமாகிற்
சர்விகற்பமற்றுத்தானாய்த்தரித்துநிற்குமாகிற்
சமரசமாபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 9

சமயாதீதசைதன்யந்தானாகிவாழுமாகிற்
சாஸ்வதநிராலம்பந்தங்கித்துங்கமாகில்
நிமயமற்றிவிதேகசித்திரேசிக்காளுமாகிற்
நிமலமுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி 10

தத்வநிரஞ்சனமாய்ச்சார்ந்துவிடுமாகிற்
றப்போதசூனியமாய்த்தனித்தருளுமாகிற்
சுத்தநிர்விகாரமதாய்த்தோய்ந்துநிற்குமாகிற்
சுதந்திரமாபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 11

உபாதியற்றபரஸ்பரமாயுறைந்துநிற்குமாகி
லுண்டல்லவென்றதற்றோங்கிவாழுமாகில்
விதிவிலக்கிரண்டுமற்றுவிளங்கிநிற்குமாகில்
வித்தகத்தின்பிராமணத்வம்நாமெனச்சொல்மல்லி. 12

அன்னியமுஞ்சொந்தமற்றதாகிநிற்குமாகி
லப்பிரகாசமற்றதாயுமழியாவாழுமாகி
லெண்ணுதலுமெண்ணுதற்றுமிருந்துவிடுமாகி
லெண்ணரியபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 13

பந்தமுத்தியற்றதுற்றதாகிநிற்குமாகிற்
பார்வையப்பார்வையற்றதாகிவாழுமாகிற்
ஸந்ததமுந்தானாயுற்றுத்தனித்துவிடுமாகிற்
சத்தமற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 14

சுட்டொழிந்தநிராவரணஞ்சூட்டிக்கொள்ளுமாகிற்
சுயம்பாயுற்றதுரியாதீதந்தோய்ந்துவிடுமாகிற்
கட்டொழிந்தநிரதிசயங்கலந்துகாணுமாகிற்
கதியாயுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 15

செய்கையுஞ்செய்விக்கையற்றதாகிவிடுமாகிற்
றீரபுருஷார்த்தந்தானாய்த்தேங்கிநிற்குமாகில்
மெய்மையுற்றபொருளதுவாய்மேவிவாழுமாகில்
மேன்மையுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 16



நிர்நாமநிற்பயமாய்நின்றுவிடுமாகில்
நிர்ஜகநியமமுற்றுநிறைந்துகொள்ளுமாகிற்
கற்பனாரகிதமதாய்க்கலந்துநிற்குமாகிற்
கணிக்கொணாபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி.

நிர்ச்சின்னகேவலமாய்நிறைந்துநின்றிடுமாகில்
நிராசையுற்றுத்தாந்தானாய்நின்றுகொள்ளுமாகிற்
பரிசமற்றபாக்கியமாய்ப்பதிந்துவாழுமாகிற்
பற்றுதற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 18

போக்குவரத்தற்றதுற்றுப்பூண்டுகொள்ளுமாகிற்
புண்ணியபாவமுமற்றபொக்ஷமாகுமாகில்
வாக்குக்கெட்டாவ்யோமாதீதமகிழ்ந்துதுங்கமாகில்
வசமாயுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 19

சிறிதுபெரிதற்றதுற்றுச்சிறந்தொழுகுமாகிற்
சித்துசத்துச்சதானந்தந்தேங்கிவாழுமாகிற்
குறிக்கெட்டாநிரவயவங்குலாவியொழுகுமாகிற்
குற்றரகிதபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 20

நீநானென்றதற்றறிவாய்நின்றிலங்கிடுமாகில்
நிர்த்திரியந்தானாயுற்றுநின்றுவிடுமாகில்
வாவாவெனுந்தியானமதுவுமரித்துநிற்குமாகில்
வாழ்வாயுற்றபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 21

குரவனருள்பொங்கிக்கொஞ்சிக்குலாவிதங்குமாகிற்
கோதுமற்றசின்மயமாய்க்குவிந்துகொள்ளுமாகில்
வருணபேதரகிதவஸ்துமகிழ்ந்துதானாய்வாழ்கில்
வாய்த்தமாபிராமணத்வம்நாமெனச்சொல்பல்லி. 22

கருத்து:—மேலருளிச்செய்கிராகின்ற பிராமணத்வ மென்னும் செய்யுள்களின் இலக்கணமியாதென்றால் மனிதரென்ற பதம் பொதுவானதென்றும் அதில் ஆண் ரூபமோ அல்லது பெண் ரூபமோ யாதொரு புனிதர் ஜீவோபாதி குணதோஷங்களைத்துறந்து தத்துவஞானியாய் விளங்கப்பட்டுள்ளதுறவோர் யாரோ அவ்வறிஞரே பிராமணத்வம் பொருந்தின பிராமணரென்பதாம். இது சுருதிகளின் நிர்ணய தீர்மானமெனக்காண்க

சிவோஹம்.

## ஸூஸ்திரத்வசுகிர்தம்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவக்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சொல்லுகின்றசொல்லும்பொருளாய்ச்சொல்லிறந்திடுமாகிற்
சொச்சொரூபசுயம்புதானுச்சொக்கிப்பொருந்திடுமாகில்
வல்லவல்துவல்லபத்தில்மருவித்தோய்ந்திடுமாகில்
வழுத்தொண்ணாஸூஸ்திரத்வம்வாய்த்ததென்றிடுசுகிர்தம். 1

அபேதபோதவலங்காரமாயமர்ந்துகொண்டிடுமாகி
லசங்கமுற்றுள்ளும்புறம்புமமர்ந்துநின்றிடுமாகில்
விதேகமஹாவிமலசொஸ்தமேவிப்பூண்டிடுமாகில்
விஷயரகிதஸூஸ்திரத்வம்விளைந்ததென்றிடுசுகிர்தம். 2

ஸூக்ஷ்மத்தின்ஸூக்ஷ்மமாய்ஜொலித்திலங்கிடுமாகிற்
றுய்யமஹாமௌனபூரணஞ்சூட்டிநின்றிடுமாகிற்
சாஸ்திரமாவதீதபோதந்தங்கிக்கொண்மாகிடுகிற்
சர்வசத்யஸூஸ்திரத்வங்கங்கிற்றென்றிடுசுகிர்தம். 3



முன்னும்பின்னும்நடுவுமற்றமுத்திமூடிடுமாகில்
முக்குணத்திற்கப்பாலமைந்துமோனமுற்றிடுமாகில்
நண்ணும்பிரம்மாஸம்பிழிந்துநன்றாயுண்டிடுமாகில்
நன்குமஹாஸூஸ்திரத்வம்நாமேயென்றிடுசுகிர்தம். 4

சுட்டுதலைச்சுட்டுநீற்றிச்சும்மாவிருந்திடுமாகிற்
ஸௌகந்தமஹாவமிர்தசித்திதொட்டுக்கட்டிடுமாகில்
விட்டுப்பிரியாநிர்விகற்பம்விரும்பிக்கூடிடுமாகில்
விள்ளப்படாச்ஸூஸ்திரத்வமிசைந்ததென்றிடுசுகிர்தம். 5

நீங்காஸகஜநிஷ்டைபூண்டுரேசித்திருந்திடுமாகில்
நித்யத்வநிற்பயமாய்நின்றுகொண்டிடுமாகில்
வாங்காத்ததர்காரமங்குமருவிப்புணர்ந்திடுமாகில்
வகுக்கொண்ணாச்ஸூஸ்திரத்வம்வஸ்யமென்றிடுசுகிர்தம். 6

துள்ளும்பதைப்புத்துறந்துசுயஞ்ஜோதியுற்றிடுமாகிற்
றுக்கசுகரகிதமாகத்தோய்ந்துசுகித்திடுமாகில்
சல்லாபமாதுரியாதீதந்தரித்துவாழ்ந்திடுமாகிற்
சமயாதீதஸூஸ்திரத்வந்தாந்தாமென்றிடுசுகிர்தம். 7

நாசதோஷரகிதமாகநட்டுநின்றிடுமாகில்
நணப்புமறப்பற்றதாகநாடாநாடிடுமாகில்
வேஷம்பற்றுவித்தகமாய்விளங்கிப்பூண்டிடுமாகில்
விருத்திசூன்யஸூஸ்திரத்வமிணைந்ததென்றிடுசுகிர்தம். 8

அலக்ஷியமணுவுமொட்டாவபாரம்பூண்டிடுமாகி
லரியசுகாதீதமதாயமர்ந்துகொண்டிடுமாகில்
விலக்ஷணபுருஷார்த்தமதாய்மேவிநின்றிடுமாகில்
விதிரகிதஸூஸ்திரத்வம்விளக்கமென்றிடுசுகிர்தம்.

பாவாதிதம்பதியப்பதிந்தும்பதமதாகிடுமாகிற்
பாசபந்தரகிதகோமளம்பற்றுப்பற்றிடுமாகில்
போவாமென்னும்புகழ்ச்சியற்றுப்பூண்டுற்றிடுமாகில்
போதமறொசூஸ்திரத்வம்பொருத்தமென்றிடுசுகிர்தம். 10

சிவோஹம்.

## ஜாதி.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

தேஜசுபமுத்தருள்பெருகித்திரண்டதெங்கள்ஜாதி
நிர்வல்லபுருஷார்த்தமாய்ச்சிறந்ததெங்கள்ஜாதி
வாசனாதோஷமற்றும்வாழ்ந்ததெங்கள்ஜாதி
வரம்புகெட்டஜாதிநாமெனவாழ்த்திநில்ஜோதி. 1

விதித்தகர்மமொன்றுக்குமடங்காவித்தகமெங்கள்ஜாதி
விதிக்காவிதியாய்விளங்கிநிற்கும்விமலமெங்கள்ஜாதி
ஓதியுணர்ந்துந்துப்புக்கெட்டதுரிமையெங்கள்ஜாதி
யுதியாவொடுங்காஜாதிநாமென்றொழியாதோதுஜோதி. 2

காலநேரமிடமொன்றுங்காணாதெங்கள்ஜாதி
கண்டங்கெட்டுநின்றுமெங்குங்காணுமெங்கள்ஜாதி
கோலமுற்றுங்கெட்டதெங்கள்கூரவொன்னுஞ்ஜாதி
குலமுங்கெட்டஜாதிநாமெனக்கொஞ்சிச்சொல்ஜோதி. 3

எல்லாமுள்ளுமிருப்போமெங்கள்ஜாதிகெட்டஜாதி
யெல்லாமெங்களுள்ளிருக்குமீனங்கெட்டஜாதி
கள்ளங்கெட்டுள்ளும்புறம்புங்கலந்ததெங்கள்ஜாதி
கட்டுக்கெட்டஜாதிநாமெனக்கனிந்துரைத்திடுஜோதி. 4



வெட்கரோசமுற்றுங்கெட்டவிவேகமெங்கள்ஜாதி
விஷயங்கெட்டுத்தனித்ததெங்கள்விலக்கமற்றஜாதி
பங்கமுற்றுங்கெட்டதெங்கள்பதையாப்பாஜாதி
பற்றுதற்றஜாதிநாமெனப்பதிவாய்ச்சொல்ஜோதி. 5

குணங்குறிகள்கெட்டதெங்கள்கோரமற்றஜாதி
குலவுபொறிபுலன்களற்றுக்கூடுமெங்கள்ஜாதி
கணமேனுமறப்புநனைப்புக்காணாதெங்கள்ஜாதி
கணிக்கெட்டஜாதிநாமெனக்காட்டிச்சொல்ஜோதி. 6

பெரிதுசிறிதுமற்றதெங்கள்பேதங்கெட்டஜாதி
பேசவாக்குக்கொவ்வாதெங்கள்பெருமைபூண்டஜாதி
வாரியெடுக்கலாகாதெங்கள்வகுப்புக்கெட்டஜாதி
வரத்துப்போக்கற்றஜாதிநாமெனவழகாய்ச்சொல்ஜோதி. 7

ஆணும்பெண்ணுமலியுமற்றவரூபமெங்கள்ஜாதி
யச்சங்கெட்டுமெங்கெங்குமடைந்ததெங்கள்ஜாதி
தோணுத்தோற்றகேவலமாய்த்தோய்ந்ததெங்கள்ஜாதி
தொந்தங்கெட்டஜாதிநாமெனத்துணிவாய்ச்சொல்ஜோதி. 8

அஞ்ஞானமுற்றுங்கெட்டதெங்களசங்கமெனுஞ்ஜாதி
யாணவமறக்கொளிக்குமெங்களரியதுரியாதீதஜாதி
ணையுஞ்சிந்தைகெட்டதெங்கள்நாணமற்றஜாதி
நாட்டங்கெட்டஜாதிநாமெனநன்றாய்ச்சொல்ஜோதி. 9

பாசமுற்றுங்கெட்டதெங்கள்பரிசமெட்டாஜாதி
பக்ஷாபக்ஷங்கெட்டபரமார்த்தமெங்கள்ஜாதி
வேஷமுற்றுங்கெட்டமாவிதேகமெங்கள்ஜாதி
வேதாதீதஜாதிநாமெனவெளியாய்ச்சொல்ஜோதி. 10

எண்ணியெட்டயெட்டாதெங்களின்பாதீதஜாதி
யென்னென்னசொல்லவில்லாவினிதவெங்கள்ஜாதி
தன்னந்தனியாகிநின்றுத்தனித்ததெங்கள்ஜாதி
ததாகாரஜாதிநாமெனத்தாளம்போடுஜோதி. 11

சிவோஹம்.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

அங்கத்திட்டுமழியும்வெண்ணீறணிந்திடவுமாட்டோ
மத்வைதானுபூதியுமணிந்துமகலமாட்டோம்
பங்கதேகமுருத்திராக்ஷம்படவணிந்தும்பகட்டோம்
பக்குவமாகூடாமணியைப்பதித்துமாறமாட்டோம். 1

ஸ்தூலத்திற்குச்சோமன்சூட்டிஜோடித்திடவுமாட்டோஞ்
சொரூபநிஷ்டைப்பட்டுப்பூட்டிசுபாவழகாய்த்தனிப்போங்
காலம்நேரவிதிவகுத்துங்கர்மப்பொய்யைக்காட்டோங்
காலாதீதநித்தியமாய்க்களித்துச்சுகித்துஜொலிப்போம். 2

வஞ்சப்பொறிபுலன்களோடுமருவிக்கூடிடாட்டோம்
மஹத்வமிகுதத்துவமாய்மகிழ்ந்துகூடிச்சுகிப்போம்
நஞ்சொத்ததுர்ச்சங்கத்தைநாடிப்போற்றமாட்டோம்
நன்குநீங்குமற்றசத்தாய்நாணமற்றுச்சுகிப்போம். 3

அஞ்ஞானமற்றுப்பருத்தினூலையணிந்துபூணூல்காட்டோ
மரியதுய்யமெய்ஞ்ஞானப்பூணூல்கண்டமுற்றுந்தரிப்போ
மையமுற்றுச்சகுணமதையணுகித்தீண்டிடமாட்டோ
மபேதமுற்றுச்சமயாதீதமாகத்தானாய்த்தனிப்போம் 4

வேதமொப்பாவாக்கியத்தைவிரித்துமுரைக்கமாட்டோம்
வேதாதீதமௌனமதாய்மேவிக்கலந்துமிருப்போம்
போதமற்றபொய்ப்போதனைபுகன்றிடவுமாட்டோம்
பேர்தபரிபூரணமாய்ப்பொருந்திவெங்குந்தரிப்போம். 5

அறிவுகெட்டபகிர்முகத்தையடுத்துநோக்கமாட்டோ
மறிவாயுற்றவந்தர்முகமாய்பார்ந்துதுங்கிக்களிப்போம்
பிரித்துவைத்தஜாதிபேதம்பேசிப்பிதற்றமாட்டோம்
பெரிதாயுற்றசத்தியமாய்ப்பேணித்தானாய்த்தனிப்போம். 6



பொய்ப்புராணபோதனைக்கும்பொருந்திணங்கமாட்டோம்
பொய்யாமறைவடித்தவதீதப்போக்ஷமாகத்தனிப்போ
முய்யாப்பேருரைக்குகந்துமொழுகிமயங்கமாட்டோ
முய்யும்பொருள்தானதாகவோங்கிவாழ்ந்துமிருப்போம். 7

அந்தமாதிநடுவெனவுமளவுக்கெட்டிடமாட்டோ
மளவுக்கெட்டாச்சுயஞ்ஜோதியாயச்சமின்றிசுகிப்போஞ்
சொந்தமன்னியமெனத்துடர்ந்துதொந்தங்கொள்ளமாட்டோ
ஞ், சொச்சொரூபவிதேகமதாய்துங்கித்தானாய்த்தனிப்போம்

கள்ளவேடதேகமீதினிற்கட்டுவேடம்பூட்டோங்
களங்கவேடாகிதமாகக்களைந்துமுருகிக்கலப்போம்
பொல்லாவேடமுலகமயங்கப்போட்டுமருட்டமாட்டோம்,
போதவொளிதீபமேற்றிப்பொருளைத்தானாய்த்தரிப்போம். 9

நாமரூபபேதமுற்றுநம்போதம்பதைக்கமாட்டோஞ்
ஞானஸந்ததமுற்றுநனப்புமறப்பதையுந்துறப்போம்
நேமமற்றகற்பனையைநேசித்திடவுமாட்டோம்
நீங்காச்சுயததாகாரம்நிறைந்துமதுவாய்ச்சுகிப்போம். 10

சிவோஹம்.

## மயினு.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சுருதிகறந்துகாய்ச்சிவுறைதயிராதாகுமாகிற்
றுய்யவுத்தியாற்கறந்துருட்டிவுருக்குமாகி
ஓறுதிகுருவநுபவமுமுகந்துநிற்குமாகி
லுள்ளொழுக்கம்நம்மதெளவுகந்துசொல்மயினு. 1

கூறிக்குகின்றதிரிமூர்த்தியுங்குணமூன்றதாய்க்கறக்கிற்
கோலமற்றகுணமாகிதங்கூடிக்குலாவிச்சிறக்கில்
விரிக்குகின்றகாலங்காமமெல்லாமாண்டிறக்கில்
விள்ளாநம்மொழுக்கமெனவிளம்பிவிடுமயிளு 2

உதித்துத்தோன்றுமலக்ஷியங்களொழிந்துவிடுமாகி
லுதிப்புமற்றலக்ஷியநித்யமோங்கித்துங்கமாகில்
மதிப்புக்கெட்டாவமிர்தவெள்ளமருவிமூடுமாகில்
மரித்திடாநம்மொழுக்கமெனமகிழ்ந்துசொல்மயிளு. 3

மண்டலங்கள்முற்றும்பொய்யாய்மாண்டுவிடுமாகில்
மாறிச்சொல்லுந்திக்குமெட்டுமழிந்துமேகமாகிற்
பிரித்துகணிக்குங்கண்டமற்றகண்டங்கூடுமாகிற்
பெரிதுநம்மொழுக்கமெனப்பெருமைகூறுமயிளு. 4

தொனிக்குகின்றசத்தப்பரிசமைந்துஞ்சத்திலயிக்கிற்
றுள்ளுகின்றபுலன்மலங்களதிலொடுங்கிநசிக்கிற்
கணிக்குகின்றகாரணமொடுமிராகாதியுமரிக்கிற்
கதிகதிநம்மொழுக்கமெனக்களித்துக்கூவுமயிளு. 5

வகுத்துவிதித்தஜாதிபேதமற்றுமபேதமாகில்
வந்ததும்போவதுமற்றுமகிழ்ந்துசுயம்பதாகிற்
றொகுத்தபந்தகர்மமியாவுஞ்சுட்டுவெண்ணீறாகிற்
சுதந்திரம்நம்மொழுக்கமெனச்சொல்லிவிடுமயிளு. 6

நாடிடுந்துர்ச்சங்கமற்றுஞானமதஞ்சூடில்
நாடுவதும்நாட்டமின்றிநல்கிவாழுமாகி
லூடுருவியெல்லாமாகிவுகந்துகொள்ளுமாகி
லொழியாநம்மொழுக்கமெனவுரைத்துவிடுமயிளு. 7

பூண்டுதித்ததேகங்கள்ளவேடமெனத்துறக்கிற்
பொருந்துகின்றவின்பதுன்பம்பொய்யாமெனக்கறக்கில்
நீண்டுதித்தவாசனையைநிஜத்திற்போட்டுக்கரைக்கில்
நிச்சயம்நம்மொழுக்கமெனநிகழ்த்திவிடுமயிளு. 8



குறித்துரைக்கும்நாமரூபங்குடிபிடுங்கிடுமாகிற்
குலவுகின்றசத்ததிலுங்குடியேறிடுமாகில்
தரித்துமங்குஞ்ஸகஜாநுபூதிதங்கிடுமாகிற்
றத்துவம்நம்மொழுக்கமெனச்சாற்றிவிடுமயிளு. 9

ஐயமற்றுத்துய்யவஸ்தாயணிந்துமழகுபார்க்கி
லத்வைதஸுகந்தவாஸமதிலுமேற்றிக்களிக்கிற்
றெய்வசுத்தபிரம்மநடனமாடியதுவாய்ச்சுகிக்கிற்
றீர்க்கம்நம்மொழுக்கமெனத்தெளிவாய்ச்செப்புமயிளு. 10

சிவோஹம்.

# இருப்பு.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை

தெளிவொளிநிரஞ்சனமாய்ச்சிறந்ததெங்களிருப்பு
திக்குமற்றுநின்றிலங்குஞ்சொருக்கடங்காக்களிப்பு
தொனிக்கொண்ணுமௌனவீறுமாப்பெங்களிருப்பு
தொந்தமற்றநிராகாரமாய்ஜொலிக்குமஹாக்களிப்பு. 1

ஆதிநடுவந்தமற்றவதீதமெங்களிருப்பு
யத்வைதபூரணமாயமர்ந்தொழுகுங்களிப்பு
நீதியுற்றநிர்க்குணமாய்நின்றதெங்களிருப்பு
நித்தியமாயுறைந்திலங்குநிராலவின்பக்களிப்பு. 2

சுத்தநிர்விகற்பமதாய்த்தோய்ந்ததெங்களிருப்பு
சுட்டொழிந்துமுற்றுமானசொரூபவின்பக்களிப்பு
தத்துவச்சுடர்மணியாய்த்தனித்ததெங்களிருப்பு
சர்வமும்மாய்நின்றிலங்குஞ்சத்தியச்சுயக்களிப்பு. 3

நிஷ்கிரியாசுயம்பதுவாய்நிலைத்ததெங்களிருப்பு
நிராவரணபரஞ்சோதியாய்நின்றவருட்களிப்பு
சொஸ்தமுறும்பாவாதீதஞ்சூழ்ந்ததெங்களிருப்பு
சூதானசுகாதீதமதாய்ச்சொக்குமிந்தக்களிப்பு. 4

காலாதீதநிர்மலமாய்க்கலந்ததெங்களிருப்பு
களங்கமுற்றும்ரகிதமாகிக்கனிந்ததிந்தக்களிப்பு
கோலமற்றவிதேகபோதங்கொண்டதெங்களிருப்பு
கொஞ்சம்வஸ்துதானதாகக்குலாவுமிந்தக்களிப்பு. 5

நிரதிசயானந்தமதாய்நின்றதெங்களிருப்பு
நிர்விஷயானந்தாதீதநிரந்தரமாங்களிப்பு
அற்புதமாநிர்ச்சலனமானதெங்களிருப்பு
யசங்கமுற்றுத்ததாகாரமானதெங்களிருப்பு, 6

தூயசுத்ததுரியாதீதந்தோய்ந்ததெங்களிருப்பு
துய்யவுள்ளத்துறவுபூண்டசுயம்புமஹாகளிப்பு
நேயமுற்றலகஜாநுபூதியெங்களிருப்பு
நிர்ச்சங்கபிரம்மமதாய்நிற்குமிந்தக்களிப்பு. 7

நிற்பயப்பேராண்மையதாய்நின்றதெங்களிருப்பு
நிர்ச்சத்தசத்ததாகிநிகழுமிந்தக்களிப்பு
விற்பன்னமெய்ஞ்ஞானமதம்பூண்டதெங்களிருப்பு
வித்தகத்தின்வித்ததாகிவிளைந்ததிந்தக்களிப்பு. 8

நிர்நாமசைதன்யமுற்றதெங்களிருப்பு
நிர்விகாரசித்தியுற்றுநிற்பதிந்தக்களிப்பு
யெப்பவுமேசும்மாவுற்றிருக்குமெங்களிருப்பு
யேகாந்தமினிதினிதுவின்பசொஸ்தக்களிப்பு. 9



குருவருட்சிம்மாஸனத்திற்கொலுவதெங்களிருப்பு
குறிக்கொருசின்னமின்றிக்குளிர்ந்தொழுகுங்களிப்பு
மறுக்கவேறுமாற்றுமில்லாமதியாமெங்களிருப்பு
மங்களமமங்களமுமற்றதிந்தக்களிப்பு. 10

சிவோஹம்.

## ஜாதகம்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பிறந்ததிறந்ததற்றதெங்கள்பேதமைதீர்ந்தஜாதகம்
பேசுங்கிரகமெனன்பதையும்பிழையாய்நீற்றஜாதகந்
துறவுகண்டுவீடுபுகுந்துதுங்குமெங்கள்ஜாதகந்
தூயசுத்தயோகஜாதகஞ்சொல்லொண்ணாக்கண்டிடு. 1

ஜகஜீவபரமற்றுச்சத்தாய்த்தனித்ததெங்கள்ஜாதகஞ்
சாதுசங்கமுறவுசேர்ந்துசம்பாஷணைபண்ணுஞ்ஜாதக
மகமகமென்றதற்றுமறிவோடமர்ந்ததெங்கள்ஜாதக
மழியாயேகாஜயோகமமைந்தஜாதகங்கண்டிடு. 2

பொறிபுலன்மலங்குணம்பொருந்தாதெங்கள்ஜதகம்
போதமயமாய்க்கணிக்கப்பொருந்துமெங்கள்ஜாதகஞ்
சிறிதுபொல்லாவிராகாதிக்குந்தெரியாதெங்கள்ஜாதகஞ்
சித்துசிவயோகமமைந்தசிவஞானஜாதகங்கண்டிடு. 3

காலநேரம்விதிவிலக்குங்காணாதெங்கள்ஜாதகங்
கண்டமற்றுகணிக்கக்கூடுங்கடந்தமஹாஜாதகங்
கோலங்குறிநாமரூபங்கொள்ளாதெங்கள்ஜாதகங்
கொஞ்சம்பிரம்மயோகமமைந்தகுருவர்ஜாதகம்கண்டிடு. 4

மூவேழுமூவிரண்டுமுணரொவ்வாதெங்கள்ஜாதக
முப்பத்தாறிற்கப்பாலிருந்து மூளைத்துநிறைந்தஜாதகஞ்
சாலவுமேழாம்பூமிதனிற்றனித்திருந்ததெங்கள்ஜாதகஞ்
ஸகஜாநுபூதியோகமமைந்தஜாதகங்கண்டிடு. 5

உள்ளுணர்வாயுள்ளபடிவோங்கிவுகந்ததெங்கள்ஜாதக
மொன்றிரண்டென்னுவிடத்திலுறைந்ததெங்கள்ஜாதகம்
வல்லமஹாமௌனசாத்தியமடைந்ததெங்கள்ஜாதகம்
வல்லதிரவஸ்துயோகமமைந்தஜாதகங்கண்டிடு. 6

வேதம்நான்குங்கடைந்தெடுத்தவேதாதீதமெங்கள்ஜாதகம்
வேறுமற்றுஸந்ததமாய்விளைந்தமஹாஜாதகம்
பேதரகிதகுரவனருட்பிரியாதோங்குமெங்கள்ஜாதகம்
பெரிதுமஹாமௌனயோகமமைந்தஜாதகங்கண்டிடு. 7

சூதானசூஸ்திரமாய்ஜொலித்ததெங்கள்ஜாதகஞ்
சுகாரம்பமயமதாகத்தோய்ந்துகனிந்தஜாதகஞ்
சீதளவமிர்தம்பொங்கித்திரண்டதெங்கள்ஜாதகஞ்
சிற்சொரூபயோகமமைந்ததிவ்யஜாதகங்கண்டிடு. 8

வஞ்சபேதவுபாதியற்றுவளர்ந்ததெங்கள்ஜாதகம்
வாதபேதமற்றவிடத்தில்வருக்கவுகந்தஜாதகந்
துங்கமஹாசுயம்பதுவாய்ஜொலிக்குமெங்கள்ஜாதகந்
துய்யவிதேகயோகமமைந்தசுத்தஜாதகங்கண்டிடு. 9

மால்முதலானயனைத்திரிகுணமாய்மறுத்ததெங்கள்ஜாதகம்
மஹாமர்மவத்துவைதமடைந்தோங்குமெங்கள்ஜாதகம்
வாழ்வுமாறுநித்தியமாய்வாழ்வுபெற்றதெங்கள்ஜாதகம்
வாங்காத்ததாகாரயோகமமைந்தஜாதகங்கண்டிடு. 10

சிவோஹம்.



அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

துவிதமோட்டித்துடிப்பறுத்துத்துறந்ததெங்கள்மந்திரந்
துள்ளுமனக்குரங்கைக்கட்டிங்சுட்டதெங்கள்மந்திரங்
கவியும்பொல்லாச்சங்கற்பத்தைக்களைந்ததெங்கள்மந்திரங்
கங்குல்பகலற்றதெங்கள்கதிமௌனமந்திரம். 1

ஆசாபாசதோஷமோட்டியடக்குமெங்கள்மந்திர
மறிவையுருட்டித்திரட்டிவொன்றாயளிக்குமெங்கள்மந்திரம்
பேசாநுபூதிபுரிந்துபெருக்குமெங்கள்மந்திரம்
பெரிதுபெரிதுபோராண்மைபெற்றதெங்கள்மந்திரம். 2

போதராஜயோகப்பட்டம்பொருத்துமெங்கள்மந்திரம்
புன்மைகெடத்தன்மயமாய்ப்பொழியுமெங்கள்மந்திரஞ்
சாதனைகள்முற்றுந்தந்துதாங்குமெங்கள்மந்திரஞ்
சத்தியமாயாக்கியளித்தமைக்குமெங்கள்மந்திரம். 3

அஷ்டசித்திகடந்தெங்களபேதசித்திமந்திர
மரியவல்லதீரத்வமமைந்ததெங்கள்மந்திரந்
துஷ்டவாதனைகள்முற்றுந்துறந்ததெங்கள்மந்திரந்
துய்யமஹாமௌனமெங்கள்தொந்தரகிதமந்திரம். 4

விட்டுத்தொட்டுவிலகாதெங்கள்விள்ளாமஹாமந்திரம்
வியர்த்தமற்றுத்துலங்குமெங்கள்விழியாமூடாமந்திரங்
கட்டுக்கெட்டாக்கடந்ததெங்கள்கருத்திற்கனிந்தமந்திரங்
கண்ணேகண்ணாயுற்றதெங்கள்காலரகிதமந்திரம். 5

முப்பாழுக்குமப்பால்நின்றுமுடிந்ததெங்கள்மந்திரம்
முத்திரத்தினும்விளைந்ததெங்கள்மொழியாமஹாமந்திரந்
தப்பொன்றுமணுகாதெங்கள்சதாவுதயமந்திரந்
தானேதானாயிருந்ததெங்கள்தற்போதருளியமந்திரம். 6

இருந்ததில்லையென்றதற்றுமிருந்ததெங்கள்மந்திர
மின்றுமன்றுமென்றதற்றுமியங்குமெங்கள்மந்திரம்
பொருந்துசதாபூரணமாய்ப்பூண்டதெங்கள்மந்திரம்
பொருள்மயமாய்நின்றதெங்கள்போதமௌனமந்திரம் 7

பகுக்கெடுக்கெட்டாவின்பம்பதிந்ததெங்கள்மந்திரம்
பரமமஹாரகஸியமாய்ப்பரவுமெங்கள்மந்திரஞ்
சகுணசமயவுபாயங்களைச்சாராதெங்கள்மந்திரஞ்
ஜனிக்குமாயைரகிதமெங்கள்சதானந்தமந்திரம். 8

வாடாக்குளிராவளர்ந்ததெங்கள்மகிமைபூண்டமந்திரம்
வற்றுப்பெருகாநிறைந்ததெங்கள்மௌனவமிர்தமந்திரங்
கூடாமஹாகூட்டுறவாய்க்குலாவுமெங்கள்மந்திரங்
கூகூவென்னேகுறிக்கொண்ணாக்கூடும்மௌனமந்திரம். 9

அடடாவத்வைதமழியாதோங்குமெங்கள்மந்திர
மயலாய்விட்டுத்தேடுவோர்க்குமடங்காதெங்கள்மந்திரஞ்
ஜடவுபாதிதேஹோகிக்கித்தரிக்காதெங்கள்மந்திரந்
தத்துவமெய்ஞ்ஞானிதானுய்த்தனித்தமௌனமந்திரம். 10

சிவோஹம்.

## அந்நம்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

எல்லாங்களைந்துமெல்லாமுற்றுமேகமாகுமாகி
லேகாந்தவினிதுதானுமிலங்கிக்கொஞ்சுமாகிற்
சொல்லவில்லாநிர்மலமாய்த்தோய்ந்தருளுமாகிற்
சொச்சொரூபம்நம்மழகெனஜோடித்தாடந்நம். 1



அநித்யமடியோடற்றுமழியாதாகிவிடுமாகி
லரியமஹாவமலமாகியமர்ந்தருளுமாகில்
ஜனிக்குமாயைதனைவணங்கித்தலைகுனியுமாகிற்
சம்பூரணஸகலம்நாமெனச்சார்ந்துகொஞ்சந்நம். 2

தோற்றும்வேடமுற்றுந்துறந்துதுய்யவஸ்துவாகிற்
சொல்லிறந்தசூஸ்திரமாய்ஜொலித்துமகிழுமாகி
லேற்றங்குறைவில்லாதுற்றுமிலங்கிக்கொஞ்சுமாகி
லெட்டாநம்மழகிதுவெனவிசைந்தாடுமந்நம். 3

கோசவிகாரரகிதமுற்றுக்குளிர்ந்துகழுவுமாகிற்
குருகுலாம்வாஸம்பூண்டுகுலாவிக்கொஞ்சுமாகில்
நேசநிர்விகற்பமுற்றுநிறைந்தொழுகுமாகில்
நீங்காநம்மழகிதுவெனநிச்சயஞ்சொல்லந்நம். 4

சோகமோகமிறந்ததுவாய்த்தேர்ந்துகனிக்குமாகிற்
சொக்கியமாசொக்கதுவாய்ச்சொக்கிரசிக்குமாகிற்
றுகாதிகளொன்றுமின்றிச்சலிக்கொஞ்சுமாகிற்
சாற்றரிதாநம்மழகெனச்சத்தியஞ்சொல்லந்நம். 5

வேஷமெட்டாசுத்தசத்தாய்மேவிபூண்டிடுமாகில்
விந்தைகளெனுதமற்றவிடத்தில்வீற்றிருந்திடுமாகில்
நாசரகிதசாஸ்வதமாய்நாடிக்கொண்டிடுமாகில்
நசியாநம்மழகிதுவெனநடனமாடிடுமந்நம். 6

துப்பறத்துறந்தெங்குஞ்சூழ்ந்துபொங்கிடுமாகிற்
றுரியாதீதமாடிமீதிற்றூங்காத்தூங்கிடுமாகி
லொப்பறவுகந்ததாகியொழியாவாழ்ந்திடுமாகி
லோதொண்ணாநம்மழகெனவோங்கிக்கூவுமந்நம். 7

மனிதரூபந்தெய்வமென்ன மறைபுகன்றிடுமாகில்
மற்றரூபமுமதுவெனவேமகிழ்ந்துபூண்டிடுமாகிற்
றுணிவுபயமுற்றுங்கெட்டுச்சொல்லாமௌனமாகிடுமாகிற்
றுடிப்பிறந்தவழகுநாமெனத்தொனியாத்தொனியங்கம். 8

போததீபமேற்றிப்போருட்பூஷணம்பூண்டிடுமாகிற்
பொய்யாமணிக்கோவைகோத்துப்பொருந்தணியுமாகில்
வேதமெட்டாவித்தகமாய்மேவித்துங்கிடுமாகில்
விலகிடாநம்மழகிதுவெனவிறைந்துசொல்லங்கம். 9

இருளொளிவுமிரண்டுமற்றுவிருந்திலங்கிடுமாகி
லிப்பாலப்பாலென்றதின்மெங்குமாகிடுமாகிற்
றருணமெனுஞ்சொப்பிரகாசந்தங்கித்துங்கிடுமாகிற்
சத்யம்நம்மழகுபாரெனச்சாற்றுமஹாவங்கம். 10

சிவோஹம்.

## ஊர்க்குருவி.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
### இரட்டைக்குறள் வெண்செந்துறை.

கண்டத்துறுங்கருப்பைநீற்றுக்கருத்திற்கிசையுமாகிற்
கால்மாறுநடைநடந்துகாணக்கண்டிடுமாகிற்
றிரண்டர்குலாங்கூட்டுறவுதொட்டுநின்றிடுமாகிற்
றிருந்தமுற்றுந்துறந்தெனச்சொல்லூர்க்குருவி. 1

பண்டமறியாவாலனைக்கூட்டின்பற்றுநீங்கிடுமாகிற்
பரமஞானகூட்டிலிருந்துபதிவாய்வாழ்ந்திடுமாகிற்
றெண்டமிட்டுமிராகாதிகள்சேவித்துவணங்குமாகிற்
செப்பரியதெய்வஸபைசிறந்ததாமூர்க்குருவி. 2



கூட்டிக்குறைக்காவிடத்திற்கூடுகூடிக்கட்டிடுமாகிற்
குரவர்போடுமொட்டிற்சிக்கிக்கொக்கரித்திடுமாகில்
லீட்டிவைத்தவிருப்பைவிட்டுநழுவாநின்றிடுமாகில்
நாட்டமற்றவிடங்கூடென்னும்நவிலுமூர்க்குருவி. 3

பொய்யாவிடத்திற்பொருந்திநின்றுபுதுமைபூண்டிடுமாகிற்
புனிதமஹாமர்ம்மங்கண்டுபுன்மைநீங்கிடுமாகிற்
றுய்யமுற்றுச்சொரூபநிலந்தொட்டுநின்றிடுமாகிற்
றாங்காத்தூக்கம்நம்கூடெனத்துடர்ந்துநில்லூர்க்குருவி. 4

பறக்குமிறகுபாழதாகிப்புதைப்பிறந்திடுமாகிற்
பாழுமாயாமுட்டைவெடித்துப்பறவைகூடிடுமாகிற்
சிரசுகாலுடலும்மற்றுத்தெளிந்துமாடிடுமாகிற்
சிவயோகம்நம்கூடெனச்செப்புமூர்க்குருவி. 5

அந்தரமாயமர்ந்துதன்னையறிந்துபூண்டிடுமாகி
லபரோக்ஷாநுபூதியுமணிந்தும்நீங்கிடாதாகில்
தந்தரமஹாசூஸ்திரமாய்த்தனித்துநின்றிடுமாகிற்
சாராச்சாருமிடங்கூடெனச்சாற்றுமூர்க்குருவி. 6

அசரசரமுற்றும்புணர்ந்துவபேதமுற்றிடுமாகி
லப்பாலொன்றுமற்றதாகிவழகுதங்கிடுமாகில்
ஸரஸமாவுல்லாஸமுற்றுத்தானாய்நின்றிடுமாகிற்
சங்கைரகிதம்நம்கூடெனச்சப்தியூர்க்குருவி. 7

எட்டாவிடத்திலிசைந்தந்தவினிதுபொங்கிடுமாகி
லெளிதாயுற்றும்பிரம்மவித்தையிருப்பிருந்திடுமாகில்
நட்டமஹாவத்வைதம்நன்குபூண்டிடுமாகில்
நம்நாமேநம்கூடெனநாட்டுமூர்க்குருவி. 8

அவயவங்கள்சூனியமாயமர்ந்துநின்றிடுமாகி
லாரோபசங்கைமுற்றுமழிந்துமிஞ்சிடுமாகிற்
சமயபேதபீதிகெட்டுச்சத்தாய்நின்றிடுமாகிற்
சாஸ்வதம்நம்கூடெனத்தனித்துச்சொல்லூர்க்குருவி 9

தோணுத்தோற்றரகஸியமாய்த்தோய்ந்துதுங்கிடுமாகிற்
சுபேட்சைமுதற்றுரியசித்திஜொலித்துச்சொக்கிடுமாகிற்
காணுக்காணுந்துரியாதீதங்கலந்துபொங்கிடுமாகிற்
கைவல்யம்நம்கூடெனக்கருத்தாய்க்காட்டூர்க்குருவி. 10

சிவோஹம்.

## அதிதீவிரபக்குவசீடன்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள்வெண்செந்துறை

ஆருறுக்கப்புறத்திலாக்கியளித்துமங்கிருத்திடல்வேண்டு
மதீதமெனும்பொருளெனவேவழுகுதந்திடல்வேண்டுங்
கூறுமறைக்குமெட்டாதாக்கிக்குடியமைத்திடல்வேண்டுங்
கோமளமாசொஸ்தமதாய்க்குறியுமற்றிடல்வேண்டும். 1

அபாரசுத்தபிரம்மமாக்கிவங்குவைத்திடல்வேண்டு
மசங்கமஹாவத்வைதஹாரஞ்சூட்டிடல்வேண்டுஞ்
சோராக்கமழும்நித்யமலரைச்சொரிந்துமாடிடல்வேண்டுஞ்
சோபனஸுகந்தம்பூடித்தொந்தரகிதமுற்றிடல்வேண்டும்.2

சுட்டுமற்றஜோதிமயமாய்ஜொலிக்கமைத்திடல்வேண்டுஞ்
சுகாரம்பவமிர்தமூட்டிச்சுயம்பதாக்கிடல்வேண்டுங்
கட்டுமற்றவமலமதாய்க்கலந்திருந்திடல்வேண்டுங்
கடந்தபரபிரம்மமெனக்கதியாய்க்கணித்திடல்வேண்டும். 3



சுத்தநிஷ்களங்கமாக்கித்துரியாதீதமமைத்திடல்வேண்டுந்
துய்யமாமௌனரத்தினஞ்ஜோடித்திணைத்திடல்வேண்டு
முத்தமமாஸகஜநிஷ்டைவுகந்துசூட்டிடல்வேண்டு [ண்டும்.
முள்ளும்புறம்புமொத்ததாக்கிவோம்பிரம்மமென்றிடல் வே

ஸந்ததமாசத்ததாக்கிச்சத்யசாதனமிட்டிடல்வேண்டுஞ்
சங்கைரகிதமாக்கியளித்துத்ததாகாரஞ்சூட்டிடல்வேண்டும்
பந்தம்பற்றுப்பரமதாக்கிப்பதையாப்பதமமைத்திடல்வேண்டு
பகாப்பரஞ்சுடராகப்பாங்காய்ப்பதித்திடல்வேண்டும். [ம்

போதநிர்விகற்பஞ்சூட்டிப்புதையாபொக்ஷமாக்கிடல்வேண்டு
ம், புனிதமஹாபுருஷார்த்தமதாய்பொருத்திநிறுத்திடல்வே
ண்டும், கோதறுஞ்சைதன்யமாக்கிக்கூட்டிக்குவித்துவைத்தி
டல்வேண்டுங், கூடாப்பிரியாமனையிலமைத்துக்குன்றுக்கோ
லமிட்டிடல்வேண்டும். 6

சிற்சொரூபபீடந்தந்துசின்மயக்கிரீடஞ்சூட்டிடல்வேண்டுஞ்
சிதானந்தக்கொடியுமேற்றிச்சிவயோகப்பட்டங்கட்டிடல்வே
ண்டுங், கற்பனாரகிதமாக்கிக்காணுக்கண்ணையீந்திடல்வேண்டு
ங், காலாதீதமேயெனவுங்கடுங்கணிதமிட்டிடல்வேண்டும். 7

பாவபுண்ணியமற்றதாக்கிபக்குவப்பதியமைத்திடல்வேண்டு
ம், பரஸ்பரமாசூடாமணியைப்பண்பாய்ப்பூட்டிடல்வேண்டுந்
தாவனமாநித்யமாக்கிச்சம்பூரணசாத்யஞ்சூட்டிடல்வேண்டுந்
தத்துவபிரகாசமெனவுந்தனித்தத்வமூட்டிடல்வேண்டும். 8

விழியாமூடாவிடத்திற்கூட்டிவிளையாட்டுக்காட்டல்வேண்டும்
விஷயரகிதமாக்கியங்குமெச்சிநகைத்திடல்வேண்டு
மழியாமஹாமௌனமாக்கியநுபவமலமென்றிடல்வேண்டு
மபேதவொளியொளிவதாகவுசைவ்றஸ்தாபித்திடல்வேண்டும்

தூயமாநிரஞ்சனமாய்ஜொலிக்கவைத்திடல்வேண்டுஞ்
சுதானசுதந்திரமாய்ச்சுயஞ்ஜோதியாக்கிடல்வேண்டும்
நேயாநுபூதிதந்துநிஷ்கிரியாநிலையைநாட்டிடல்வேண்டும்
நிர்நாமசுயம்பேயென்றும்நெடும்நியமமிட்டிடல்வேண்டும் 10

என்னுணையென்னைத்தானமீய்ந்தேதன்பெற்றிடல்வேண்டு
மேகமாகுழன்னையானுயுகந்தளித்திடல்வேண்டுங்
தன்னுணைத்தன்னைத்தானேதனித்துப்பூட்டிடல்வேண்டுஞ்
சையோகமாசாஸ்வதமாய்த்தனித்துவைத்திடல்வேண்டும் 11

பெரிதினும்பெரிதாக்கிப்பேராண்மைதந்திடல்வேண்டும்
பேதாதீதமாக்கிமஹாபெருமைபொருத்திடல்வேண்டுஞ்
சிறிதுபெரிதுமற்றதாக்கித்தெருட்செருக்கமைத்திடல்வே
ண்டுஞ், சிவோஹஞ்சிவோஹமெனுந்திவ்யசீர்மையிட்டிடல்
வேண்டும். 12

நிச்சயம்நிச்சயமெனரேசித்துநின்றிடல்வேண்டும்
நிராகாரமாக்கிமஹாநீக்கமின்றிவைத்திடல்வேண்டு
மெச்சமயத்திற்குமப்பாலிசைத்திருத்திவைத்திடல்வேண்டு
மேகாந்தமிதுவெனுமினிதுத்தாளமிட்டிடல்வேண்டும். 13

முழுதுணர்ந்துமுழுதுமானமுத்திமுத்தேவென்றிடல்வேண்
டும், மொழியாமொழியால்மொழிந்தபடிமுழுதுமுற்றேமெ
ன்றிடல்வேண்டும், பழுதுமற்றபாக்யமெனப்பறைசாற்றிப்
புகன்றிடல்வேண்டும், பராபரமேவெனவும்பக்குவமாகமமை
த்திடல்வேண்டும். 14

வித்தகமெய்ஞ்ஞானமென்றுவிரைவிலேற்றிடல்வேண்டும்
விதேகமஹாவித்தெனவும்விதியாவிதியாய்விதித்திடல்
வேண்டுஞ், சுத்தபாவாதீதமென்றுதோன்றுதொடங்காதிரு
த்திடல்வேண்டுஞ், ஸாகந்தமஹாவஸ்துவெனச்சுயதூயமிட்
டிடல்வேண்டும். 15



ஜெயஞ்ஜெயஞ்ஜெயமெனவுமழியாஜெயந்தந்திடல்வேண்டுந்
தீரஸ்தாபனபூரணமாய்த்தீர்க்கஞ்சூட்டிடல்வேண்டுஞ் [ஞ்
சுயஞ்சுயஞ்சுயமெனவுஞ்சொரூபசோபனம்பாடிடல்வேண்டு
ஜோதிமஹாமௌனமெனச்சுத்தவரமுமிட்டிடல்வேண்டும்.

சிவோஹம்.

## ஞானம்.

### அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

தன்னைமறைத்தமறப்பைத்திறந்துதன்னைக்கண்டிடுமாகிற்
ஸமரசசுவாநுபூதிதங்கித்துங்கிடுமாகிற்
சின்னுபின்னமற்றுத்திருஷ்டிதோஷம்நீங்கிடுமாகிற்
சித்திதத்வஞானமெனதீர்க்கங்கொடுஞானம். 1

இராகாதிகுணதோடங்கெட்டினிதுபோதமூடிடுமாகி
லேகபோகசுதந்திரமாயிருப்புமுற்றிடுமாகிற்
கோராதிகள்முற்றுங்கெட்டுக்குறியிறந்திடுமாகிற்
குன்றாச்சித்திஞானமெனக்கூவிச்சொல்லிடுஞானம். 2

இந்திரியப்பாட்டைபுல்லெழுந்துமூடிடுமாகி
விச்சாரகிதமாகவுற்றிருந்திலங்கிடுமாகிற்
சுதந்திரமாஞானயோகஞ்சூழ்ந்துநின்றிடுமாகிற்
சுத்தஞானஞ்சித்தியெனச்சூட்டிச்சொல்லிடுஞானம். 3

தோன்றுஞ்ஜாக்கிராதியற்றுத்துரியம்பூண்டிடுமாகிற்
றேனைத்தோற்றத்துரியாதீதஞ்சொக்கிமூடிடுமாகிற்
சாற்றொண்ணாமௌனந்தங்கித்தனித்துத்துங்கிடுமாகிற்
சத்யஞானஞ்சித்தியெனச்சாற்றிச்சாற்றிடுஞானம். 4

அனித்தியவிதிகளற்றுத்தானாயகண்டமுற்றிடுமாகி
லாவரணரகிதமாயமர்ந்துநின்றிடுமாகிற்
றொனிக்கக்கூடாச்சுயஸகஜந்தொட்டுத்துங்கிடுமாகில்
ஜோதிஞானஞ்சித்தியெனத்தூங்காத்தூங்கிடுஞானம். 5

வேஷமொன்றும்பற்றாதாகிமேவிநின்றிடுமாகில்
வேறுமற்றவித்ததாகிவிளைவுகொண்டிடுமாகில்
நாசதுவிதமணுகாதாகிநட்டுப்பூண்டிடுமாகில்
நன்குசொரூபஞானஞ்சித்திநவிலாநவிலுஞானம். 6

பாழின்முன்னிலைகடந்துபதையாப்பதிந்திடுமாகிற்
பாராப்பரமாகலியத்தைப்பார்க்கப்பார்த்திடுமாகி
லோராயுன்னவ்யோமாதீதமுகந்துதங்கிடுமாகி
லூறுதிஞானஞ்சித்தியெனவுகந்துபூண்டிடுஞானம். 7

தொனிக்குகின்றதிரிபுடியுந்துறந்துநின்றிடுமாகிற்
றுலங்குமஹாவத்வைதந்தோய்ந்துமூடிடுமாகிற்
றனிக்கத்தனிக்குஞ்சத்தியமாய்த்தங்கித்துங்கிடுமாகிற்
சம்பூரணஞானஞ்சித்தியெனச்சார்ந்துநின்றிடுஞானம். 8

உருவபேதமற்றசத்தாயுற்றிபூண்டிடுமாகி
லுத்தமமாபுருஷார்த்தந்தானாயோங்கிநின்றிடுமாகிற்
கருதரியகருத்ததுவாய்க்கலந்துகொண்டிடுமாகிற்
கடந்தஞானஞ்சித்தியெனக்காணாக்கண்டிடுஞானம் 9

உள்ளந்துறந்துள்ளதுவாயுள்ளும்புறம்புமொத்திடுமாகி
லுள்ளதுள்ளதாகத்தானாயுண்மைபூண்டிடுமாகி
லில்லதுள்ளதிரண்டுமற்றிருப்பிருந்திடுமாகி
லெல்லாமுற்றஞானஞ்சித்தியிசைந்துநின்றிடுஞானம். 10

சிவோஹம்.



அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

போதமெழுந்தபேதமாகிப்பொருந்திநின்றிடுமாகிற்
போதமேபொருள்தானதாகிப்பூரணம்பூண்டிடுமாகில்
வேதம்நான்கிற்கப்பாலுற்றுவிளங்கித்துங்கிடுமாகில்
வித்தகசிவவேடமெனவிரைவாய்ச்சொல்லதீதம் 1

அவவேடமறத்துறந்துமமலவேடமாகிடுமாகி
லகண்டதுரியம்பூண்டதுவாயங்கிருந்திடுமாகிற்
றவவேடமேகம்நாமெனத்தனித்திலங்கிடுமாகிற்
ஸமரஸருள்வேடம்நாமெனத்தானாய்ச்சொல்லதீதம் 2

கள்ளவேடமனமிறந்துகளங்கரகிதமுற்றிடுமாகிற்
கற்பனைகள்முற்றுமறக்கறந்துமிஞ்சிடுமாகிற்
பொல்லாமாயைப்புலையரொடும்பொருந்தாநின்றிடுமாகிற்
புருஷார்த்தபுனிதவேடம்பொருந்திப்பூண்டிடுமதீதம் 3

நாசரகிதஸகஜநிஷ்டைநன்குநக்கிடுமாகில்
நனப்புமறப்புமற்றதுற்றுநழுவாநின்றிடுமாகி
லாசாபாசதோஷமற்றுமபேதம்பூண்டிடுமாகி
லமலவேடமிதுவாமெனுமமர்ந்துமோததீதம் 4

சமயவேடமுற்றுங்கெட்டுச்சத்யசத்தாய்நின்றிடுமாகிற்
சதானந்தசுயம்புதானாய்த்தனித்துறைந்திடுமாகில்
விஷயகிரதவித்துமுளைத்துவிளைவுகொண்டிடுமாகில்
விள்ளாவேதகவேடம்பாமெனவிரைவாய்ச்சொல்லதீதம் 5

சுத்தமெய்க்குருபரனைத்தொட்டுத்தோய்ந்திடுமாகிற்
றுய்யமாகுரவனருட்சூழ்ந்துசொக்கிடுமாகிற்
சித்தமதுசலியாதுற்றுத்தெளிந்துநின்றிடுமாகிற்
சிவராஜவேடம்நாமென்னத்தீர்க்கங்கொடுமதீதம் 6

கரைகடந்தோரளவுமின்றிக்கனிந்தொழுகிடுமாகிற்
கலந்துததாகாரமதாய்க்கரைந்துகொண்டிடுமாகிற்
புரையர்குலாங்கூட்டுறவுபொருந்தாநின்றிடுமாகிற்
புனிதமஹாவஸ்துவேடம்பொருத்தமென்றிடுமதீதம். 7

நாமரூபாகிதமுற்றுநாடாநாட்டமுற்றுமாகில்
நாணமுற்றுமற்றதுற்றுச் சிவஞானந்தங்கிடுமாகில்
நேமநிர்விகற்பமுற்றுநித்யநிறைவுகொண்டிடுமாகில்
நிச்சயம்நம்வேடமெனநிகழ்த்திநில்லதீதம். 8

எட்டாதெட்டும்மாடியதனில்விருப்பிருந்திடுமாகி
லெண்ணரியசத்யத்வமிசைந்துதுங்கிடுமாகி
லொட்டாவொட்டுமொட்டிவெட்டிவொருமைபூண்டிடுமாகி
லுத்தமம்நம்வேடமென்றுற்றிகூறுமதீதம். 9

அதீதமஹாவசங்கமுற்றுவபாரமாகிடுமாகி
லனித்தியமனுகாதொன்றுயடங்காதுற்றிடுமாகிற்
றுதிக்கொண்ணுஜோதிமௌனஞ்ஜொலித்துநின்றிடுமாகிற்
றுய்யபிரம்மவேடம்நாமெனச்சொல்லறச்சொல்லதீதம். 10

சிவோஹம்.



பியாண்டு மெட்டு.

தானேதானேதானேதானேதானதுவேதானடா
சர்வம்பிரம்மம்பாரடாசத்தியமேதானடா. 1

பாருபாருபாருபாருபார்ப்பதெல்லாந்தானடா
பரமானந்தமேகூடடாபரமாகவேதாஞ்சேரடா. 2

நாடுநாடுநாடுநாடுநானதுவாய்த்தானடா
நாதாந்தமேசேரடாநற்கதியதுவேதானடா. 3

சூடுசூடுசூடுசூடுஜோதிமலர்சூடடா
சொரூபபதிதானடாசுயசொரூபந்தோயடா. 4

கூடுகூடுகூடுகூடுகுரவனருட்கூடடா
கூட்டிவழிகாட்டிச்சேற்குங்குரவனடிபூணடா. 5

அங்குயங்குயங்குயங்குயங்குமிங்குந்தானடா
துங்கும்பொருள்தங்குமருள்சங்கையறத்தானடா 6

நானேநானேநானேநானேநானுமுற்றுநில்லடா
தானேதானுந்தானுமாகித்தனித்துநின்றுகொள்ளடா, 7

ஜோதிஜோதிஜோதிஜோதிஜோதிபூண்டதென்னடா
யாதியந்தந்தாங்கடந்தயத்துவைதந்தானடா. 8

வேதம்வேதம்வேதம்வேதம்வேதங்காணுமெய்யடா
ஸாதுஸங்கந்தானடைந்ததத்துவமேதானடா. 9

ஓடுமோடுமோடுமோடுமோடும்மனங்கொல்லடா
சூடும்பொருள்சூட்டும்நிலைசும்மாவிருநீயடா. 10

ஞானஞ்ஞானஞ்ஞானஞ்ஞானமதேதானடா
நானதுவுமேகமுற்றநன்னிலைமைதானடா. 11

உள்ளுவுள்ளுவுள்ளுவுள்ளும்புறம்நீயடா
அல்லும்பகல்தானுமற்றயானந்தமேதானடா 12

சத்துசத்துசத்துசத்ததுவாய்நில்லடா
சித்தஞ்சாந்தமாகிநிற்குஞ்சிற்பரமேதானடா 13

சித்திசித்திசித்திசித்திசின்மயமாய்நில்லடா.
நித்யசுத்தஞ்சுயமதாகிநின்றுவிளையாடடா. 14

மோனம்மோனம்மோனம்மோனம்மோனமாகிநில்லடா
யானோமானோமையமின்றசையாதிருந்துபாரடா. 15

சொல்லுசொல்லுசொல்லுசொல்லுசொல்லிறந்தசொல்லடா
நில்லுவள்ளல்சொன்னமுறைநீயதுவேதானடா 16

மெய்மெய்மெய்மெய்மெய்யதுவாய் நில்லடா
வுய்யும்வழிஐயமில்லைவோஞ்சிவமேதானடா 17

ஆனோமானோமானோமானதுவேமெய்யடா
தானவனுந்தானவனாய்த்தனித்ததுவேதானடா. 18

சிவோஹம்.

## மௌனக்கும்மி.

கும்மியடியுகண்ணேகும்மியடி சித்தங்
குவியகும்மியடியுமடி
தம்மிடுதலறத்தன்னைக்காட்டுஞ் சுத்த
தத்துவமாகுமேமௌனக்கண்ணே. 1



பொறிபுலனோடாமற்கட்டுமடி அருட்
பூரணமாகவேபொங்குமடி
நெறியுற்றுநேர்மையாகுமடி தூய
நிச்சயங்காணடிமௌனக்கண்ணே. 2

குருவினருட்கொண்டுகூடிடடி தெருட்
கோலாகலமதாய்க்கொள்ளுமடி
கருவிகருணங்களோயும்டி காணாக்
காட்சியைப்பாரடிமௌனக்கண்ணே. 3

சித்ரம்போலசையாநில்லுமடி நித்ய
சின்மயமாகவேசெல்லுமடி
பத்ரமாய்ப்பதிந்துகொள்ளுமடி ஞானம்
பக்குவமாகுமேமௌனக்கண்ணே. 4

வாய்ஞ்ஞானம்வீணதாய்ப்பேசாதடி மஹா
வாசாமகோசரங்கொள்ளுமடி
தூயமெய்ஞ்ஞானமிர்துண்ணுமடி சத்யஞ்
சுதந்திரமாகுமேமௌனக்கண்ணே. 5

பேதாபேதத்தறக்கொல்லுமடி சுத்தப்
பிரம்மமயமுற்றுநில்லுமடி
சாதுசங்கஞ்சார்ந்துகொள்ளுமடி பொருட்
சாத்தியமாகுமேமௌனக்கண்ணே. 6

ஆணவகாமியமுமாகாதே மாயை
யற்றவிடமிதுசொல்லாதே
தானதுவானமாசைதன்ய லக்ஷிய
தீழர்மையாகுமேமௌனக்கண்ணே. 7

ஒன்றிரண்டென்றுஞ்சொல்லாதே உண்மை
யுற்றவிடத்தையும்விள்ளாதே
நன்றுதீதென்றுந்தள்ளாதே அபேத
நன்கிதுவாகுமேமௌனக்கண்ணே. 8

சாஸ்திரங்கற்றாலுமாகாதே ஜாதிச்
சங்கையுற்றாலுறவாகாதே
சூஸ்திரங்கற்றல்லோசும்மாவிருக்க மெய்ச்
சூழ்ச்சியுமாகுமேமௌனக்கண்ணே. 9

சுட்டுக்கடங்காமாவெள்ளமடி மெய்யன்
றொட்டுக்காட்டவங்கடங்குமடி
கட்டுக்கடங்காக்கருணைதாண்டி ஞானக்
கட்டுக்கடங்குமேமௌனக்கண்ணே. 10

வாக்கினைமோனமதாக்குமடி காரணம்
வசமாய்க்காட்டத்திறக்குமடி
நீக்கமொன்றில்லாநிமலமாய் மௌன
நிர்ணயமாகுமேமௌனக்கண்ணே. 11

நெருப்பாறுமயிர்ப்பாலமடி ஞான
மேறிநடக்கதுதாங்குமடி
மறுத்துரையாமல்மெய்ஞ்ஞான மாடிக்கி
மகிழ்ந்ததிலேறடிமௌனக்கண்ணே. 12

சும்மாவிருக்குமெய்மாடியடி அத்தைச்
சுட்டிக்காட்டவுமெட்டாதடி
அம்மம்மாசும்மாவருள்மயமாய் லிங்க
னசையாதமைந்திடுமௌனக்கண்ணே. 13



அண்டபிண்டசராசரமானதுவும் மோனங்
கொண்டகோலமன்றோகாணுமடி
விண்டிடாவிமலவிலக்கணத்வம் அருட்
கொண்டுகாணடிமௌனக்கண்ணே. 14

ஞானக்கெளியதுநெருப்பிற்கூடாம் விஞ்
ஞானக்குஞ்சொன்றுவாழ்ந்ததடி
மோனமுடிசூட்டிநில்லுமடி நித்ய
முத்திகைவல்யமௌனக்கண்ணே. 15

விதிவிலக்கற்றொன்றாயானதடி மெய்
வித்தகம்பெற்றுமிசைந்ததடி
கதியும்பந்தமுமற்றதடி மௌனங்
கலந்துகாணடிமௌனக்கண்ணே. 16

சொல்லாப்பொருளைச்சொல்லாதடி ரூப
மில்லாப்பொருளாகநில்லுமடி
கொள்ளாவிரதமேகொள்ளுமடி உண்மை
கூடிக்கொளிக்குமௌனக்கண்ணே. 17

மூக்குநுணியுற்றுத்தன்னைநோக்குமடி மெய்
முத்திரைமோனத்திறக்குமடி
சூக்குமசுத்தசுபாவசுதந்திரந் தானாய்ச்
சூழ்ந்துஜொலிக்குமேமௌனக்கண்ணே. 18

விஞ்ஞானகுருவைமேவுமடி அருள்
மெய்ஞ்ஞானமாகவேகூடுமடி
அஞ்ஞானந்தானேயோடுமடி நித்
யானந்தமாகுமேமௌனக்கண்ணே 19

நான்மறைதேடிக்காணாநானுமடி மௌன
நாதனருட்கொண்டுகாணுமடி
தோணாவின்பந்தோணாத்தோணுமடி சத்தைத்
தொட்டுநில்லடிமௌனக்கண்ணே. 20

விகற்பமுற்றதுபொய்ப்பேதமடி நிர்
விகற்பமுற்றதுமெய்யபேதமடி
அகப்பற்றற்றதருட்போதமடி போத
மமைத்தமையடிமௌனக்கண்ணே. 21

ஞானம்பூரணமேகமடி மோன
ஞானந்தானாய் முடிந்ததடி
ஊனமற்றமாசிவோஹமடி பொரு
ளுள்ளபடியாச்சேமௌனக்கண்ணே. 22

சிவோஹம்.

## பாசனரைக்கறக்குதல்.

"கல்லார்க்கும்" என்ற மெட்டு.

விடையமிகும்பந்தனரைமேவிடவுங்கூடாகூடி
லடையும்பொருள்பொருந்தாமாவருளதுவுங்குன்றும்
நடைகள்கெடுஞ்ஞானம்விடும்நாடாய்நன்மதியே
யிடையறவேநிறையுமெந்தனேகாந்தவிறுமாப்பே. 1

மடைமிகுமருளர்களைமருவிடவுங்கூடாமருவி
லுடையபொருள்மறையுஞ்சித்தமொடுங்காதங்குவிரியுந்
தடைகள்தருந்துவிதமெழுஞ்சாராய்நன்மதியே
கொடையிலுங்கருணைபொழிகுணாதீதவிறுமாப்பே. 2



கபடமிகுஞ்சூதுவளர்காமிகளைக்கூடாயது
நிமிடமதிற்கண்டமாக்கிநீங்குமபேதபோதம்
குபதங்குலாமிதுவைச்சற்றுங்கூடாய்நன்மதியே
தபனமறயேகமாகித்தனித்தவென்னிறுமாப்பே. 3

இருளுடையமருளாளரையிசைந்தொழுகக்கூடாவது
தெருளுடையவரும்பொருளைத்திரையெனவேமூடும்
நெருளுடையபாசனரைநெருங்காய்நன்மதியே
அருளுடையவகண்டானந்தமானவிறுமாப்பே. 4

தேகோகமெனவேவாழுஞ்சிதடரையுங்கூடாயது
சிவோஹமெனுந்தனையிழந்துதேகமதைக்காக்கும்
மோகந்தங்குஞ்சமயரிவர்முனிந்துதள்நன்மதியே
யேகமாகவெங்குமானவேகாந்தவிறுமாப்பே 5

மலமிகும்புரையரோடுமகிழ்ந்துறவுக்கூடாவது
பலமிகவுங்குன்றுஞ்சித்தம்பதைக்குமனமாகும்
நலமிகவுங்கண்டறியாரவரைநாடாய்நன்மதியே
அழகுமிகும்பூரணமாயமர்ந்தவென்னிறுமாப்பே. 6

ஜாதிபேதத்துவேஷமுறுஞ்சங்கமதைக்கூடாயது
ஜோதிஞானபூரணத்தைத்தூஷித்ததுவாகும்
நீதியுடனவர்களையும்நீக்கிநில்லாய்நன்மதியே
ஆதியந்தம்நடுவுமின்றியமர்ந்தவென்னிறுமாப்பே. 7

ஆசைமிகுந்தோஷனரையணுகிடவுங்கூடாவது
கோசம்பயில்மோகமதைக்குறிக்குமதுவாகா
வேஷம்பொல்லாப்பொல்லாலிதுவிரும்பாய்நன்மதியே
நாசமற்றவத்துவைதீவென்ஞானவிறுமாப்பே. 8

போதமற்றதுவிதனரைப்பொருந்திவாழ்கக்கூடாவது
வேதமுற்றுந்தேடும்போதம்வெளியதுவுமாகா
காதலுற்றமயலினரைக்கலக்காய்நன்மதியே.
வோதுதற்றவிதேகந்தாயுறைந்தவிறுமாப்பே. 9

நாமரூபமுற்றுவுள்ளரஞ்ஞானிகளைக்கூடாயது
நேமமுற்றநிர்மலத்தைநிந்தித்ததுவாகும்
போதமற்றபோகினரைபொருந்தாய்நன்மதியே
காதலற்றபிரம்மானந்தங்கனிந்தவென்னிறுமாப்பே. 10

பாவனைகளுற்றுவேறாய்ப்பார்ப்பவரைக்கூடாயது
வேதனைகளுற்றுமஹாபிரம்மதைகூடும்
வாதனைகளுற்றவரைமருவாய்நன்மதியே
சாதனைகள்முற்றுமானசைதன்யவிறுமாப்பே. 11

கரும்மிகும்பொய்யனரைக்கலந்தொழுகக்கூடாவது
சிறுமைதரும்பெரும்பொருளைத்தெரிந்தறியவொட்டா
உறுதியிலரிவர்தங்களைவொதுக்கிடாய்நன்மதியே
சுருதியாதிகண்டறியாசுகாதீதவிறுமாப்பே. 12

ஜோதியுற்றசொரூபஞானசுயம்பவரைக்கூடுவது
வோதியுற்றவுண்மைஞானமுகந்துதன்னைக்காட்டுஞ்
ஜாதியற்றசத்தியனைச்சாரும்நன்மதியே
நீதியுற்றசொரூபஞானவென்நித்யவிறுமாப்பே. 13

வாவாவாசாதுசங்கமருவிடவுங்கூடுமது
சோசோபனம்பாடிமஹாசொரூபமதயாக்கும்
ஆஹாவானந்தங்கொண்டாடும்நன்மதியே
தாந்தாமெனத்தனித்தததாகாரவிறுமாப்பே. 14

சிவோஹம்.



பியாண்டு மெட்டு.

தன்னந்தன்னந்தனதானேதானேதானேதனதானேம். 1
பொங்கிப்பொங்கித்ததும்புதுபார்பூரணமாகப்புசிப்போமே 2
எங்குமெங்கும்பாவுதுபாரெல்லாந்தானுய்ச்சுகிப்போமே. 3
பாரும்பாரும்பரமதுவேபரவிப்பரவித்தேங்குதுபார் 4
சாருஞ்சாருஞ்சர்ஜனரேசர்வஞ்சாந்தம்புசிப்போமே. 5
கள்ளங்கள்ளங்கூடாதேமாயாகர்மங்கிட்டநாடாதே 6
அல்லும்பகலுமில்லாதேயசையாவமிர்தம்புசிப்போமே 7
கல்லங்கல்லுமுருகுதுபார்கருணைவெள்ளம்பாயுதுபார். 8
அள்ளியள்ளியருந்துவோமேஐயேயெல்லாம்வாருமே. 9
உள்ளுமுள்ளுங்குளிருதுபார்ருள்ளும்புறமும்நிறையுதுபார்.
தெள்ளித்தெள்ளித்திரளுதுபார்ஜெகத்தீர்வாரும்புசிப்போமே
நில்லும்நில்லும்நித்தியமேநிறைந்தவமிர்தம்புசிப்போமே. 12
மெல்லமெல்லவாருமேமெய்யேயதுவாய்ச்சுகிப்போமே. 13
பேதம்பேதங்கூடாதேவகம்பிரமஞ்சித்திவாடாதே. 14
தன்னந்தன்னந்தனியிதுவேதனித்தவமிர்தம்புசிப்போமே;
இன்பமின்பம்வாருமேயேகமேகஞ்சேருமே. 16
சுட்டாச்சுட்டாச்சுகமிதுவேசூழ்ந்தமிர்தம்புசிப்போமே. 17
உண்மைவுண்மைவுரையிதுவேயுண்மையுறவேவுறவாமே.18
இன்றுமன்றில்லாதேயெல்லாந்தானுய்ச்சுகிப்போமே. 19

அஞ்சோமஞ்சோம்வாருமேயழியாவமிர்தம்புசிப்போமே. 20

மெய்யேமெய்யைச்சேருமேமெய்யேவின்பஞ்சுகிப்போமே

ஓடியோடிவாருமேவோர்கோமுந்திப்போகுமே. 22

ஸாதுஸாதுவாருமேசத்யவொளியைச்சேருமே 23

தானேதானேதனிதானேசாருஞ்சாருஞ்சத்தியமே. 24

சேருஞ்சேருந்திருவருளைச்சேர்ந்தமிர்தம்புசிப்போமே. 25

நம்பிநம்பிவாருமேநாதன்றனைச்சுகிப்போமே. 26

ஐயமையம்வேண்டாமேயையமின்றிவாழ்வோமே. 27

போனாற்போனால்வாராதேதேகம்போகுமுந்திவாருமே. 28

பூதம்பூதம்பொய்யிதேபொய்யைத்தேடிப்பொருந்தாதே. 29

வாதம்வாதம்வேண்டாமேமதியாமதுவைப்புசிப்போமே. 30

கண்ணேகண்ணேவாருமேகாணுக்கண்ணைக்காணுமே. 31

உண்ணுமுண்ணும்வாருமேவொளியாவின்பஞ்சேருமே. 32

மோசமோசம்போகாதேமொழியாவமிர்தம்புசிப்போமே. 33

நேசம்நேசம்வாருமேநித்யந்தானைச்சுகிப்போமே 34

ஆனோமானோம்வாருமேயானோமதுவேயானோமே. 35

ஞானஞ்ஞானம்வாருமேஞானவமிர்தம்புசிப்போமே. 36

சிவோஹம்.



எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இராகம்—பூபாளம்.

இருள்கொடுமருளினையனுகிடாதெரித்து
மிணையடிதந்தின்னருளினைப்பெருக்கித்
தெருளுறுமதிகொளுந்தீபமுமேற்றிச்
சின்மயமாக்கியவரிதரிதென்னே
அருளொடுமர்நித்யநல்லாஸனமழுத்தி
யழகுறுமானந்தமளித்தருள்கண்ணே
பெரும்பொருளேயெனதுள்ளக்களிப்பே
பேரருளேபள்ளியெழுந்தருளாயே. 1

வினையுறுந்தேகாதியானென்றிருந்த
வினையறுவிமலபரமதுவாக்கி
யுளதெனவிலதெனவிரண்டறநோக்கி
யுகந்தென்னைச்சத்தாயுணர்த்தியவரசே
கணையுறுங்காமாதியாவையுங்கடந்துநற்
கதிதருங்காரணக்கண்மணியுறவே
தனதெனுமரும்பொருளாகியமதியே
சத்தியமேபள்ளியெழுந்தருளாயே 2

திரிகுணமலம்பொறிபுலன்களையுருக்கிச்
சிதானந்தறிவினைபொருளுறப்பெருக்கி
யரிதரிதாகியவானந்தமூட்டி
யத்வைதமருளியவற்புதமறியேன்
பெரிதுசிறிதற்றபேராண்மைவிளைவே
பெருமைபெருகியபேரருட்டேனே
துரியங்கடந்துறுமெய்ஞ்ஞானச்சுடரே
தூயமேபள்ளியெழுந்தருளாயே. 3

அப்போடுப்பெனக்கரணத்தைக்களைத்
தளவிலாதகண்டமதாக்கிங்கமைத்துத்
துப்பற்றதுய்யமாமணிக்கோவைகோத்த
தொல்லைமென்னென்றுதுணிந்துயான்புகழ்வே
னட்போடேனையாளநாடிட்டநண்பே
நனப்பறத்துலங்கியஞானமெய்ப்பண்பே
வொப்பிடொன்றிலாவுரியதோரியல்பே
வுன்னதமேபள்ளியெழுந்தருளாயே 4

இராகத்துவேஷாதியறவிங்ஙனொழித்
திருவினைகளைந்தும்பொருளதுவாக்கி
சராகசமரசசையோகஞ்சமைத்த
சாமர்த்யபண்டிதஞ்சாற்றொண்ணவரிதே
நிராகாரகோமளநேமமென்னுறவே
நிற்பின்னப்பெருக்கதாய்நின்றிடும்நிறைவே
பாதீனம்பற்றிடாப்பதிந்தகத்துறவே
பரமார்த்தமேபள்ளியெழுந்தருளாயே 5

தெருள்பொழிமுகிலெனச்சிறந்தசின்மயத்
திருவுருட்டிரண்டுருவாகிவந்தரிய
குருமணியிழைத்துச்சிம்மாஸனமமைத்துக்
கொலுவரசாக்கியகுறிப்பிதென்கொலோ
பொருள்ஜோலிக்கத்வைதம்பொருத்துங்களிப்பே
பொறுமைக்களஞ்சியப்போதமெய்க்கொளிப்பே
மருளொழிமருந்தெனும்மௌனமாசெழிப்பே
மாறுமஹத்துவமேபள்ளியெழுந்தருளாயே 6

சுருதிகள்சதகோடியறையினுமதுவாகா
சொரூபமேயெனையாளவதுவினில்மருவிய
அருமையின்பெருமையையள்விடாதாகையாற்
கருணையின்பெருமையைமகிழ்காணுதென்னே



உறுதிநியமமாயுயர்ந்தவென்னழகே
வொழுகியபேரின்பவமிர்தப்பிழம்பே
கருதியகருத்தினிற்கலந்தூறிங்கிதமே
கைவல்யமேபள்ளியெழுந்தருளாயே. 7

நான்மறைதேடிக்காணுநாணுமதீதம்
நன்குறவாகிங்ஙனவின்றமாநலினம்
ஆண்பெண்ணலியறுமரூபமாய்த்தோய்த்
தமைத்துளவலங்காரமபாரமீதென்னே
பான்மைமிகுத்துறும்பாஞ்சுடர்க்கொழுந்தே
பக்குவமெய்ஞ்ஞானம்பதிந்தோங்குமொழுங்கே
ஊன்றியுணர்வோர்க்கொட்டுமென்னழகே
வுரியநற்றேசிகமேபள்ளியெழுந்தருளாயே 8

சுத்தநிஷ்களங்கசுகாதீதவஸ்து
சொல்லறுமௌனமேசொல்லறவந்துஞ்
சத்தியம்நீயெனச்சாற்றியவின்பஞ்
சத்தியஞ்சத்தியஞ்சொல்லறும்மொழியே
பக்தரும்முக்தரும்பாவிநின்றேத்தும்
பரப்பிரம்மமேவெனதானந்தக்களிப்பே
உத்தமருளமதாயுறைந்திடுமுறவே
வோம்பரமேபள்ளியெழுந்தருளாயே. 9

சித்தசலனமறுந்திருப்பள்ளிக்கோவிற்
றிருவுளமதனிலசைவறுஞ்சுயம்போற்
சுத்தநிர்மலந்தூங்காததூக்கஞ்
சொல்லவும்சொல்லிலாசூக்ஷ்மமீதென்னே
முத்தர்க்குகந்தருள்மோனமெய்முத்தே
முன்னிலையற்றவென்முழுதெனும்வித்தே
சத்தத்திற்கெட்டாமாசைதன்யவஸ்தே
சமரசமேபள்ளியெழுந்தருளாயே. 10

சிவோஹம்.

## எண்சீரடியாசிரியவிருத்தம்,

### இராகம்—சுருட்டி, தாளம்—மிஸ்ரம்.

மாற்றவொண்ணாதமாமணிநிறைவே
மாதவமேகனியொழுகுஞ்சுவையே
போற்றுவாருள்ளம்பொருந்துமறிவே
புண்ணியமேநித்யப்பூரணப்பொருளே
தோற்றப்படாதசொரூபமுமாகினாய்
ஜோதிப்பிரகாசம்பொருந்துமொளிவே
சாற்றப்படாதமௌனமேயருளே
சத்தியமேபொருள்சற்குருமணியே 1

நீக்கமொன்றில்லாநிர்மலக்கொழுந்தே
நித்தியமேசுயமுத்திவிருந்தே
ஊக்கமெனுமதிதீவிரருறவே
வோமென்றெழுந்தப்ரணவச்சுடரே
தாக்குநல்லானந்தம்பொங்கும்நிதியே
தத்துவஞானஞ்சொரிந்தமுகிலே
போக்குவரவில்லாப்பொருளருள்பொருளே
போதந்திரண்டெழுஞ்சற்குருமணியே. 2

ஓங்கும்நீநானெனுமோமெனுமுறவே
வோங்காரமிட்டுமெழுந்ததெளிவே
நீங்காநிஷ்டையுள்விளைந்தமாவித்தே
நீங்காவுறவாகிநின்றிடும்நிஜமே
தூங்காமற்றூங்குந்துரியமென்னிறைவே
சுத்தமேநித்தியஜோதியொளிவே
வாங்காநிர்ணயம்வாய்த்தவென்னுணர்வே
வல்லபமெனுமர்ம்மசற்குருமணியே. 3



மருமொழியில்லாமதுராங்கவருளே
மஹத்துவமேபேசாமகிமையின்பாகே
கருமொழியீதெனமொழியாமொழியே
கைவல்யமேசுயகாரணப்பொருளே
பருவமிகுந்தவருண்ணும்ருஜியே
பக்குவமாகிச்சுரந்திடுந்தெளிவே
அருமையுறும்நித்யானந்தப்பொலிவே
யருளேபொருளெனுஞ்சற்குருமணியே. 4

என்னையெனக்கேயளித்தசுயமே
யெங்கினுந்தானாயிருந்திடுந்தனியே
உன்னையுணக்கேகொடுத்தேனபய
முன்னையுந்தானாயுகந்திடுமுறவே
துன்னும்நற்பொருள்தானாய்முன்னிலையில்லா
துன்னும்நற்பொருளாகித்துலங்கிடுஞ்சுடரே
கண்ணும்மொளிவெனக்கலந்திடும்மதியே
கண்ணுண்மணியெனுஞ்சற்குருமணியே 5

இருளையொழித்ததேயேகாந்தவொளிவே
யிருவினைகெடுத்ததேயென்மணியரசே
யருளையளித்ததேயருள்மிகும்பொருளே
யானந்தஞ்சொரிந்ததேயருட்பெருஞ்ஜோதி
கருணைபொழிந்ததேகதியருள்கதியே
கருணைபெருகியகருணையங்கடலே
தெருளையளித்ததேசிவமருள்சிவமே
சின்மயமணியெனுஞ்சற்குருமணியே. 6

அருளேயெவையுமாகினவருளே
யருளேயறிவாயமைந்திடுஞ்சுயமே
மருளைத்தெருளாக்கிமர்த்திடும்மருந்தே
மருள்கெடச்சிவமாகிச்சிறந்திடுஞ்சிவமே

பொருளையுறவெனப்பொங்கிடும்முதலே
பொருளேதனியாகிநின்றிடும்நிஜமே
இருளொடுமொளிவுமிரண்டறுமதியே
யென்மணியாசெனுஞ்சற்குருமணியே 7

சொரூபசுயமானசுகமெனுஞ்சுகமே
சொரூபவிருந்தெனுஞ்சொறிந்திடுமமிர்தே
பொருந்தும்பொருளெனப்பொருந்தும்பொருளே.
பொருந்தியும்நின்றிடும்பூரணநிறைவே
விரும்புமழகெனவிளங்கியவெளியே
விமலருஜியாகிவிளங்கிடுந்தேனே
மருளையணுகிடாமருந்தெனுந்தெருளே
மஹத்தேமதியெனுஞ்சற்குருமணியே. 8

நீயேநானெனும்நிர்விகற்பமானேம்
நீயேநானெனும்நீங்காமாநிறைவே
தானேதானெனுந்தனித்திடுந்தனியே
தானேவஸ்துவெனுஞ்சர்வக்கனியே
தேனேசிவாஸஞ்சேருமெய்வினிதே
தேனேமகிழ்ந்துதிரண்டிடுஞ்சுவையே
தோணென்றோணுமாசுத்தவரூப
சொல்லறும்மௌனமர்சற்குருமணியே. 9

சிவோஹம்.

## வஸ்துவானந்தத்திருப்பள்ளியெழுச்சி.

### இராகம்—பூபாளம்.

ஜெயஜெயநித்யநற்சின்மயமணிசேர்
சிதானந்ததேசிகாவென்சீர்மைநிறைவா
யயலொன்றும்பிரிவறதகண்டமதுகண்
ணதீதமதாகத்தன்னருளினைத்தொழுவோம்



மயலறவறிவெழப்பெருகியசொரூபா
மஹத்துவந்தங்கியமாவிறுமாப்பே
பயமறுதெருளினைப்பொழிந்தநிர்விஷயா
பரப்பிரம்மமேபள்ளியெழுந்தருளாயே 1

பொருளுறுபோதநன்னழகொழுகிடமா
பொருளாதுவுறைந்தநன்புரையறநிறைவா
யொருகுறைவுமணுகாப்பெருநிதிபொங்கு
பவமறுபரிசெனப்பரவினபரமே
விருளறுமொளிவெளிவுகந்தனவெல்லா
மிலங்கிடுமதுரங்கஞ்சொரிந்திடுஞ்சுயம்பா
யருளுறுகருணையிலாழ்த்தியுமாள்வா
யகண்டற்புதமேபள்ளியெழுந்தருளாயே. 2

உளமதுதுறந்தெழக்கனிந்தநற்கனிவா
வுகந்துளமூட்டியவமிர்தப்பிழம்பா
நிலவதுவொளிவுபோற்றுறந்தமெய்ஞ்ஞான
நினைவறவணுகியபதையாநிர்மலமே
தழலதுபோற்சுடுங்காமாதியாவுந்
தரியாதுநீற்றியதத்துவக்குரவா
பலமறைகண்டிடாபாவனாதீதாப்
பரஞ்சுடரேபள்ளியெழுந்தருளாயே. 3

பதமிடுகதிமனைவழகிடுவழிகண்
டகமதுகறந்தருளழகுறுகருணா
நிதமதுவிலகிடாநீதனதாகி
நீநானதர்கநிறைந்தனனேகா
மதமொடுதியானதிதுதிசெய்துங்காணா
மதங்கெடும்மாமோனசிவயோகஞான
தனுதனதனவெனநடமிடும்பரமா
தத்துவமேபள்ளியெழுந்தருளாயே. 4

இகபரமெனவிருவகையதாபோதும்
விதமறப்பரமதாயிருந்தனனுளதாய்
சுகமொடுபகைகெடவளவிடாவதுவாய்ச்
சுயமதாயழியாதமுறைதருமிறைவா
பகலொடுமிரவறவிதிகெடநிதியா
பகரவும்பெயரில்லாப்பரவியபரையா
தகதகதகவெனவொளிதரும்பிரியா
ஸந்ததமேபள்ளியெழுந்தருளாயே. 5

அண்டபிண்டசராசரமொன்றாய்
நின்றனன்றனியதாநீங்கிடாதெங்குந்
தொண்டருந்தூயருங்கண்டதுகொண்டு
தூயதுவாகப்புணர்ந்தனரெல்லாங்
கண்டதுகேட்டதுகாணாதுமாகக்
கலந்தருட்காக்ஷியின்ரகஸியமென்னே
விண்டிலர்கண்டிடதுறையும்விதேக
விசேஷமேபள்ளியெழுந்தருளாயே. 6

ஆதிநடுமுடியாதொன்றுமில்லா
வானந்தாதீதமாயமர்ந்தனனென்றுஞ்
ஜோதிநிஷ்களங்கசுயம்புளதுளதா
துகளறுஞ்சைதன்யசுயம்பிரகாசா
நீதியனீதிவிரண்டறவெழுந்து
நிர்த்தொந்தமுற்றநிச்சயநிமலா
வுபாதிக்குகந்திடாவொழுகிடுமுத்தா
வொருதனியேபள்ளியெழுந்தருளாயே. 7

வலிதெனுந்தவமுறயரிதெனுஞ்சிவமெழ
வெளிதெனும்நகைபுரிபெரியமாமுனிவா
தெளிவதாயொழிகிடச்சிவஞ்சிவமெனுமாட
கலீர்க்கலீரெனுந்தொனியிடுதோசைபுனிதா



குளிர்ந்தநன்மொழியொடுதழுவியகருணை
குலாவியபொருளிணைச்சொரிந்திடும்பெரியா
அழிவறவொருவரமிடவந்தவலியா
அசங்கமேபள்ளியெழுந்தருளாயே. 8

குருமணியிடுகோவையொருதனியணிஹாரங்
கரைநிரைவுரைகாணாவொருமொழிவிளைவா
தரும்பலனதுகொடையிடையறவுருகிடுந்
தயையெனத்தகும்பெரும்பரிபூரணா
பருவமுறவணுகுமதுநிறைகுறைகெட
பரவியபொருள்தாயருளியததாகாரா
சருவமுமாணுவெனத்தாழாமைபுரிந்த
சதானந்தமேபள்ளியெழுந்தருளாயே. 9

சுபசுபமங்களமென்சுதந்திரவஸ்து
சுயமாகவிருந்தனன்னருட்கொடியேற்றிக்
கபடொன்றும்பொருந்திடாகதியெனும்பொருள்கண்
ணதுவெனத்துணிந்தநன்னழகெனும்நிறைவா
விபரீததுவிதமறவேர்பிடுங்கி
விகற்பமறநிர்விகற்பமதாக்கி
அபயமென்றெனைத்ததாகாரஞ்செய்த
அற்புதமேபள்ளியெழுந்தருளாயே. 10

சிவோஹம்

## குருமுறை.

ஏகமெனுங்குளிதனில்மண்ணையெடுத்துக்கொள்வோ
மேகாந்தமெனுங்குடத்தைப்பண்ணியுங்கொள்வோஞ்
சோகமோகமெனும்விறகைவெட்டிக்குவிப்போஞ்
சொரூபமெனும்நெருப்பிட்டுசுட்டுமெடுப்போம்
பொறிபுலனெனுமாரவைப்பிடித்துமடைப்போஞ் சுய
போதக்குரவர்குலாமீபாமென்றுஞ்சூடும்பரமே. 1

பூரணமென்றபொருளைப்பூட்டிக்கொள்வோம்
பொய்யென்றகர்மங்களைச்சுட்டுநீற்றுவோம்
நானென்றவாணவத்தைப்பிடித்துக்கொல்வோம்
நாமரூபமிரண்டையும்நாசம்பண்ணுவோம்
மனமென்றபேதக்குரங்கைப்பிடித்துமடைப்போம் நித்ய
மகிமைக்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 2

வித்தென்றபிரம்மந்தானாயிருந்துகொள்வோம்
விஷயமென்றவாஸனையைப்பஸ்பம்பண்ணுவோந்
தசமென்றநாடிகளைப்பகுத்துந்நிறுத்துவோஞ்
சத்தென்றவறிவாகிமிஞ்சிக்கொள்ளுவோம்
வலம்பண்ணிச்சித்தத்தைச்சலியாமலிசைப்போஞ் ஞான
வள்ளற்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 3

ஜீவனீசன்பாசமென்றும்நீக்கிப்போடுவோஞ்
சின்மயமுந்தானாகிநிறைந்துகொள்ளுவோந்
தாமதமுமிராஜதமும்போக்கிமிஞ்சுவோந்
தானதுவுமேகமுற்றுவாழ்ந்துசுகிப்போம்
பேதமற்றபிரம்மசித்தியாக்கிக்கொள்ளுவோஞ் சுத்த
பிரம்மக்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 4

முன்னிலைச்சுட்டொழிந்தமோனமாகுவோம்
முன்னும்பின்னுமழியாச்சைதன்யமாகுவோந்
தோணாதுசுத்தநிஷ்களங்கமாகிச்சுகிப்போஞ்
சுட்டொழிந்துபோனவிடம்நாமேயாகுவோந்
தாமென்றதாழாமைநிர்விகற்பமாகுவோந் திவ்ய
சத்தியக்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 5

ஒட்டாதவொட்டுப்போட்டுவஸ்துப்பிடிப்போ
மோரமென்றபொருளதுவாயொடுங்கிவாழுவோ
மெட்டாக்கனிபறித்துரஸம்பிழிவோ



மேகாந்தப்பாகுபண்ணிவிருந்துமளிப்போம்
விட்டவிடத்தையுந்தொட்டுறவாக்குவோம் அருள்
விமலக்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 6

அத்வைதவருள்மணிக்கோவையிடுவோ
மானந்தமாயணிந்துமழகுபார்ப்போம்
நித்தியக்கல்யாணங்கொண்டுமாடுவோம்
நீங்காதநிஜந்தானாய்மிஞ்சிவாழுவோம்
பெற்றிடாப்பெருமைபெற்றுசொக்கிச்சுகிப்போஞ் சத்ய
பேரின்பக்குரவர்குலாம்யாமென்றும்பேசும்பரமே. 7

எதிரியற்றசுயவரசுமுடியுஞ்சூட்டுவோ
மெண்ணரியவிறுமாப்புக்கொண்டுஞ்சுகிப்போ
முளதெனவிலதெனவொன்றும்மொழியோ
மோதரியவதீதமாயோங்கிவாழுவோஞ்
ஞானஞேயஞாதுருவுமற்றும்மிருப்போ மதீத
ஞானக்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 8

வேதங்காணாவிமலமாயாகிச்சுகிப்போம்
விள்ளொணாரகஸியமாய்விளையாடுவோந்
தேகாதியாவையும்நீக்கிமிஞ்சுவோந்
தேடுவதுந்தேவையுமற்றுமிருப்போம்
நாடும்பொருளும்நாட்டமின்றிச்சும்மாவிருப்போ மபேத
நன்குக்குரவர்குலாம்யாமென்றுஞ்சூடும்பரமே. 9

பேதர்பித்தரெனவேடம்பூண்டுகொள்வோம்
பேதரெல்லாம்நிந்திக்கச்செய்கைகாட்டுவோந்
தூயமெய்யருடன்கூடியாடிக்கொஞ்சுவோந்
தூங்காததூக்கத்திற்சொக்கியுமிருப்போம்
ஓயாதுபிரம்மவமிர்தமுண்டுகளிப்போ மழியா
வுண்மைக்குரவர்குலாம்மென்றுஞ்சூடும்பரமே. 10

சிவோஹம்.

நற்குணர்க்கும்நற்றவர்க்கும்நலமருளும்நலமேதனை
நாடுவர்க்குந்தேடுவர்க்குஞ்ஞானக்கண்ணளிக்குங்கண்ணே
துர்குணர்க்கும்நற்குணமேதோன்றெழுந்தசுடரே நித்ய
தூயமெனும்பொருள்கொளிக்குந்துரியசொஸ்தசுயம்பே. 1

சொல்லாற்குஞ்சொல்பவற்குஞ்சொல்லிறந்தசொல்லே சுத்த
சொரூபஞானவருள்மணியேஜோதியெனுஞ்சுகமே
எல்லார்க்கும்பொருளதாகியெழுந்துநின்றவினிதே அதீத
யென்னரசேயென்னுணர்வேயெங்குமானநன்கே. 2

சிவயோகவமிர்தம்பொங்கித்திரண்டொழுகும்பாகே. திவ்ய
சின்மயமாய்ப்பாகுசெய்தசிதானந்தமெனும்ருசியே
தவயோகந்தனில்விளைந்தசத்தெனுமென்னறிவே தனித்
தத்வமதாய்த்தகைமைதந்தசைதன்யமணியே. 3

நிறைவுகுறைவுமின்றிநின்றிலங்கும்பொருளே வேறு
நீக்கமறும்நிர்ணயமாய்ரேசித்தவென்னிஜமே
மறைகாணாத்தேடுகின்றமஹத்துவமாமஹத்தே நான்கு
மறைக்குமப்பால்மகிழ்ந்துநின்றமாஜோதிலிங்கமணியே. 1

போக்குவரத்துமில்லாப்பூரணத்தின்விளைவே நித்ய
போதமதாயெங்குமானபுனிதமெனும்பொருளே
தாக்குமாதன்பதியைத்தானறிந்ததனியே அது
தானதுவாய்ப்பொருந்திநின்றஜாதிலிங்கமணியே. 5

ஒன்றாகிப்பலவானவோமென்னும்பொருளே அருட்
கொண்டார்க்குத்தானாகிக்கொளிக்குமெந்தன்கொளிப்பே
நன்றாகித்தீதுமின்றிநன்குபூண்டமாநன்கே சுத்த
ஞானமதாய்நட்டுநின்றநாமமெதன்னும்நண்பே. 6



கர்ம்மமெனுமஞ்ஞானங்கடந்துநின்றகனிவே சுய
காரணமதாகியொன்றாய்க்கலந்துதோய்ந்தவமிர்தே
பர்வரெல்லாங்கொண்டாடிப்பஜிக்குமெந்தன்பண்பே மூப்
பாழெனுமுன்னிலையறப்பறித்தெரிந்தவென்பதியே. 7

குருமணிகோவைபோட்டுக்கொஞ்சுமதிமயிலே ஞானக்
கோவிலுள்ளில்வீற்றிருக்குங்குருமௌனத்தேனே
தெருள்மணிபுனைந்துவிளையாடுகின்றசிவமே துய்ய
தேஜஸமயமாயெங்குஞ்சிறந்துநின்றஜெயமே 8

ஞானமெனுமிராச்சியத்தையாளும்பெரும்பொருளோ சுஞ்
ஞானக்கொடிகட்டியாளுமேகசக்ரவென்பதியே
ஊனமின்றிவுயர்ந்துநின்றவுரிமையெனும்நிதியே மா
வொப்பிலாதானந்தந்தந்தவுறுதியெனுமுணர்வே. 9

அருள்பழுத்தவந்தர்முகத்தேராலங்கரிக்குமழகே நுண்
ணறிவுமயமாயிலங்குமரியதுல்யமென்மகிழ்வே
பொருளழுத்தப்பொருளாயிங்குபூண்டெழுந்தபுகழ்வே சுத்த
புன்சிரிப்புப்புரிந்துபோதம்பொருத்தியாண்டவுளதே 10

மோனமெனும்வெள்ளம்பொங்கித்ததும்பிநின்றமுடிவேயரு
ஞானமெனுந்தேனையுண்டதுதானுமானவென்வடிவே [ள்
நானாணையுண்மையிதுநன்குபூணென்னன்கே ஞானம்
நட்டுநில்லுந்தெரியுமெய்ஞ்ஞானமெனுமுறவே 11

மெய்யாணைமெய்யுணரமெய்யதாவேயாகும் அருட்
மெய்யாயபொருளதுவாய்ப்பொருந்திநின்றுவாழே
உய்யாணையுன்னைக்கண்டாலுறுதிமாமெய்ஞ்ஞானந் தனி
யுன்னாணையதுதானுள்ளதுவாய்வாழே 12

சிவோஹம்

## நொண்டிச்சிந்து மெட்டு.

பண்டிதனுருவெடுத்தாண்டி மாயா
பந்தமுமாகாதென்றுஞ்சொன்னாண்டி. 1

கண்டுதெளியுமென்றாண்டி தன்னைக்
கண்டுமறியமருந்துதந்தாண்டி. 2

ஐம்பூதவிகாரமென்றாண்டி ஸ்தூல
மனித்தியமாமிசந்தோலெலும்பென்றாண்டி. 3

தொந்தமுண்டாமோவென்றாண்டி நிர்த்
தொந்தம்நீயாகுமென்றுசொன்னாண்டி. 4

கோசம்நீயாமோவென்றாண்டி பஞ்ச
கோசமும்நீயல்லவென்றுஞ்சொன்னாண்டி. 5

பொறியைப்பிரிக்கச்சொன்னாண்டி ஐம்
பொறியும்நீயல்லதள்ளுமென்றாண்டி. 6

புலனைக்களையச்சொன்னாண்டி அனித்யப்
பொய்யென்றுமதைநீக்கச்சொன்னாண்டி. 7

இராகத்துவேஷம்நீயாமோவென்றாண்டி வீ
ணிப்பதின்மூன்றைநீக்குமென்றாண்டி. 8

திரிகுணம்நீயோசொல்லுமென்றாண்டி சுத்த
திரிகுணாகிதம்நீயாகுமென்றாண்டி. 9

மலமூன்றுந்தாமோவென்றாண்டி தனி
நிர்மலமென்றேநிறுத்திவைத்தாண்டி. 10



கரணத்தையொடுக்கச்சொன்னாண்டி பொய்க்
காரியமியாவுமித்தையென்றாண்டி. 11

நாசமித்தேகமென்றாண்டி நிராகார
நசியாச்சத்துநீயாகுமென்றாண்டி. 12

காரணம்நில்லுமென்றாண்டி சுய
காரணந்தானாய்ச்சுகிக்கச்சொன்னாண்டி. 13

அறிவாய்தனிக்கச்சொன்னாண்டி மெய்
யறிவாய்மிஞ்சிருக்கச்சொன்னாண்டி. 14

சாதனையிதாகுமென்றாண்டி இத்தைச்
சாதிக்கச்சர்வமும்நீயாகுமென்றாண்டி. 15

முன்னிலைபொல்லாதென்றாண்டி ஞானந்
தன்னிலைகண்டுதனிக்கச்சொன்னாண்டி. 16

தன்னிலையசங்கமென்றாண்டி மோனஞ்
சத்தியமான்விதேகமென்றாண்டி. 17

பாவிக்கலாகாதென்றாண்டி யகண்டம்
பரஸ்பரவபாரமிதாகுமென்றாண்டி. 18

கோதில்லாசத்துவென்றாண்டி நித்யங்
குறியொன்றுமில்லாவத்துவென்றாண்டி. 19

பதைப்பைவதைக்கச்சொன்னாண்டி போதம்
பதைப்பறப்பூரணமென்றுஞ்சொன்னாண்டி. 20

போக்குவரத்தற்றுயென்றாண்டி மஹா
புதுமையைக்காட்டிப்பொருத்திவைத்தாண்டி. 21

சுருதிகள்காணாதென்றாண்டி மெய்ச்
சொரூபஞானியோர்சொல்லிலாகுமென்றாண்டி. 22

ஓமோமென்றுரைத்தாண்டி நித்ய
வ்யோமாதீதமென்றுஞ்சொன்னாண்டி. 23

என்னுக்குள்நீயுமென்றாண்டி ஏக
முன்னுக்குள்யானென்றொடுங்கிநின்றாண்டி. 24

சுயம்பிரகாசமென்றாண்டி சைதன்ய
சுயம்பதுவாகச்சொக்கவைத்தாண்டி. 25

என்னையேகமென்றாண்டி தனி
யென்னையெல்லாநீயாகுமென்றாண்டி. 26

விகற்பமுண்டோவென்றாண்டி நிர்
விகற்பமென்றேதனியாக்கிவைத்தாண்டி. 27

சுட்டாதேயென்றுஞ்சோன்னாண்டி அத்தைச்
சுட்டாதுபாயஞ்சொல்லிவைத்தாண்டி. 28

அத்வைதமிதாகுமென்றாண்டி சத்
யானந்தாதீதம்நீயாகுமென்றாண்டி. 29

வீடொன்றுகட்டித்தந்தாண்டி நித்ய
விஞ்ஞானமெத்தையும்போட்டுவைத்தாண்டி. 30

தூங்காமற்றூங்குமென்றாண்டி சதா
தூங்காத்தூக்கத்திற்சொக்கவைத்தாண்டி. 31

சொல்லாததைச்சொல்லிவைத்தாண்டி சுத்த
சொரூபமதாக்கிச்சுகிக்கவைத்தாண்டி. 32

விள்ளாதேயென்றுஞ்சொன்னாண்டி கேவலம்
விள்ளாவிடத்தில்வெட்கிநின்றேண்டி. 33

சூதானமென்றுஞ்சொன்னாண்டி மா
சூதானமாகவடக்கிக்கொண்டேண்டி. 34



சத்தியமென்றுஞ்சொன்னாண்டி அச்
சத்தியமாகத்தனித்துக்கொண்டேண்டி. 35

சும்மாவிருக்கச்சொன்னாண்டி சூக்ஷ்மஞ்
சும்மாவிருவென்றசொல்லறமமைத்தாண்டி. 36

ததாகாரமிதாகுமென்றாண்டி சத்யத்
ததாகாரமாகத்தனித்துக்கொண்டேண்டி. 37

சுகாதீதமீதாகுமென்றாண்டி அந்தச்
சூஸ்திரம்பூண்டுசொக்கிநின்றேண்டி. 38

காட்டிக்கலந்துகொண்டாண்டி சுத்தக்
களங்கரகிதமாய்க்கனிந்துகொண்டேண்டி. 39

போக்குவரத்தற்றதென்னேடி நித்ய
பூரணமாகப்பூண்டதென்னேடி பண்டித 40

சிவோஹம்.

## மயில்.

இராகம்—செஞ்சுருட்டி, தாளம்—ஆதி.

### கோலாட்டம்.

தானேதானானே மயிலே தானேதானானே
தானேதானானே மயிலே தானேதானானே. 1

தானேதானானேமயிலேசுஸ்வரந்தாளமிசைத்துக்கொள்ளு
தேஜசுமாதோகையைமயிலேதெளிவாய்விரித்துநில்லு. 2

தத்தோந்தரமெனவேமயிலேதனித்ததாய்நின்றுகொள்ளு
சுத்தசொரூபமயமாய்மயிலேதோன்றொடுங்காநாடு. 3

ஜோதிவெளியிற்சேருமயிலேசுயம்பிரகாசம்பொங்கு
மாதியந்தம்நடுவுமற்றுமயிலேவதீதமாயமர்ந்துமாடு. 4

நாமரூபரகிதம்மயிலேநாமாய்த்தனித்துக்கொள்ளு
நேமமாரகஸியமாய்மயிலேநீயோராளவின்றியாடிநில்லு. 5

ஆசுத்தகங்காரம்போக்குமயிலேயங்குநம்முண்மைதோணுஞ்
ஜொலித்திடுந்தானாய்மயிலேசுயம்பதாய்நின்றுமாடு. 6

சுருதிமாவனத்திற்செல்லுமயிலேசுத்தமாகுருவைக்காட்டு
முறுதிமாஜோதிமயமாய்மயிலேவொளிவாயிலங்கியாடு. 7

கற்பனாரகிதத்தேறுமயிலேகற்பனையற்றுக்கூவு
சொப்பிரகாசந்தானாய்மயிலேதோகையைப்பரப்பியாடு. 8

காலைப்பதத்தில்வைத்தும்மயிலேகலீர்க்கலீரெனச்சேருஞ்
சோலைமலர்குளிர்ஸுகந்தம்மயிலேஸொகுசாய்நின்றுமாடு. 9

காலத்திற்கப்பால்நில்லுமயிலேகண்டம்மடிந்துவிடுங்
கோலாகலமாகியதாய்மயிலேகொண்டாட்டமாடிநில்லு. 10

என்மதிக்குஞ்சரமேமயிலேயெங்கும்நீசிங்கம்பாரும்
பண்புமுற்றவரசேமயிலேபாராமற்பார்த்தங்குமாடு. 11

ஏலேலோயென்நிதியேமயிலேயிருப்பிலிருந்துகொள்ளு
தாலேலோதாலேலோமயிலேசத்யமாவூஞ்சலாடு. 12

சரிகமதவநமதனியெனவேமயிலேசாதகம்பூண்டுகொள்ளு
முரியமாபொருட்பதியாய்மயிலேவொழியாதாடிக்கொள்ளு.

ஸந்ததநிர்குணமேமயிலேசத்யமாமாடியேறும்
பந்தமுற்றும்நசிக்கும்மயிலேபாவாதீதம்பதிந்துமாடு. 14

கருணைப்பன்னீரைத்தெளிமயிலேகழியாமாஹாரம்பூணு
மிருவினைவுருகியோடும்மயிலேயேகாந்தங்கூடியாடு. 15



ஜாக்கிரமாயாதூக்கம்மயிலேவதைச்சாதித்தற்சொப்பனம்பார்
நீக்கறதிலழுந்திடல்சுழுத்திமயிலேநீயறிவாய்விழித்துமாடு.

விழித்தமெய்யறிவுதுரியமயிலேவிட்டிடாப்பூண்டிநில்லு
மளித்திடுந்துரியாதீதம்மயிலேயங்குநீநீங்காதாடு. 17

முப்பாழும்பாழாய்த்தள்ளுமயிலேமுடிந்தவப்பாலுந்தள்ளு
செப்புமப்பாலுந்தள்ளுமயிலேசெப்பாமாமௌனமாடு. 18

ஸந்ததவிஸ்ராந்திமயிலேதங்குமாமாசுகந்தஞ்
சொந்தமாபரிபூரணம்மயிலேசும்மாசுகித்துமாடு. 19

போதமாபூரணமேமயிலேபோக்குவரத்துண்டோசொல்
சாதகஞ்சாத்தியமாச்சோமயிலேஸரஸமாய்ப்பூண்டுமாடு. 20

இம்முறைவிசைவதற்குமயிலேவென்னைப்பிரிந்திடாதே
தம்முறைத்தாக்கிக்கொள்ளும்மயிலேதத்வம்புணர்ந்துமாடு.

அரூபவபேதஜோதிமயிலேவங்குநீயமர்ந்துநில்லும்
மருவிப்புணர்ந்துகொள்ளும்மயிலேமௌனமாமந்த்ரமாடு.

என்னுளக்கண்மணியேமயிலேயென்னைப்பிரியாநில்லுந்
தன்னுணர்வாகிவிடும்மயிலேதங்கிநீகுலாவியாடு. 23

சின்மயஜீதேந்திரியம்மயிலேதெளிவாயுகந்துநில்லும்
நிர்ணயமாகிவிடும்மயிலேநீங்காபுணர்ந்துமாடும் 24

ஒன்றிரண்டென்றதாகும்மயிலேவொளிவிருளற்றுநில்லு
நன்றுதீதிறந்துபோகும்மயிலேநாடாமல்நாடியாடும் 25

ஆட்டமீதென்னென்றேமயிலேயடங்கமகிழ்வதென்றே
கூட்டவேறில்லாதென்றேமயிலேசுத்தமாய்த்தோய்ந்தாடு

சும்மாயாடாமலாடுமயிலேசூல்திரஞ்சூழ்ந்துகொள்ளும்
அம்மம்மாவென்னென்றேமயிலேயாந்தானாயிசைந்துமாடு

சொல்லச்சொல்லில்லாமயிலேமயிலேசூஸ்திரரகஸியமா
வள்ளற்குருமணிக்கோவைமயிலேமாறுத்தரித்துநீயாடு 28

மெய்வீடுசேருமுபாயம்மயிலேமெய்ஞ்ஞானியன்றியாகா
உய்வழிவுண்மையாகும்மயிலேவுணர்ந்துபொருந்தியாடு 29

அழியாச்சித்திமயிலேமயிலேவகலாதுகந்துகொள்ளு
மொழியாப்பெரும்வாழ்வாய்மயிலேவொருமித்துரிமையாடு

சும்மாசும்மாவென்றதெல்லாம்மயிலேசொஸ்தமினிருப்பு
அம்மயமாய்மயிலேமயிலேமயிலேயதுவாயமர்ந்துமாடு 31

சிவோஹம்

## வஸ்துதந்திரமகிழ்வு.

இராகம்—எதுகுலகாம்போதி, தாளம்—ஆதி.

அத்வைதாதீதத்தேயமர்ந்தமாசொஸ்தம்பா
ரற்புதசொஸ்தமடி அடியம்மா
ளற்புதசொஸ்தமடி. 1

அற்புதசொஸ்தமாயமர்ந்தவிடத்திற்சுய
சிற்பிரகாசமடி அடியம்மாள்
சிற்பிரகாசமடி, 2

சிற்பிரகாசமதாய்த்தேங்குமிடத்திலன்றோ
நிற்பயம்பூண்டதடி அடியம்மாள்
நிற்பயம்பூண்டதடி. 3

நிற்பயம்பூண்டெங்கும்நிறைந்தவிடத்திலன்றோ
வற்பமுமவேறல்லடி அடியம்மா
ளற்பமும்வேறல்லடி. 4



அற்பமும்வேறில்லாதமர்ந்தவிடத்திலிங்஁ஙன்
நிற்பதுபோதந்தானடி அடியம்மாள்
நிற்பதுபோதந்தானடி. 5

நிற்பதுபோதமதாய்நீங்காவிடத்தில்மாயா
கற்பனைமாண்டதடி அடியம்மாள்
கற்பனைமாண்டதடி. 6

கற்பனாகிதமதாய்க்கலந்தவிடத்தில்மோன
சக்கரபாடுதடி அடியம்மாள்
சக்கரமாடுதடி. 7

சக்கரந்தானாய்த்தனித்தவிடத்தில்மாறாச்
சொக்கதுபூண்டதடி அடியம்மாள்
சொக்கதுபூண்டதடி. 8

சொக்கியசொக்கதாய்ச்சுகிக்குஞ்சுகிப்பிற்றுய்ய
மிக்கோலமென்னைபாரடி அடியம்மா
ளிக்கோலமென்னைபாரீடி. 9

இக்கோலங்கோலமற்றிருந்தவிருமாப்புப்பார்
தக்கமாசத்யந்தானடி அடியம்மாள்
தக்கமாசத்யந்தானடி. 10

தக்கமாசத்யத்வந்தங்குந்தனிப்பிற்சாற்றும்
முக்காலரகிதங்காணடி அடியம்மாள்
முக்காலரகிதங்காணடி. 11

முக்காலரகிதமாய்முடிந்தவிடத்திலன்றோ
துக்காதிரகிதம்பாரடி அடியம்மாள்
துக்காதிரகிதம்பாரடி. 12

துக்காதிரகிதமாய்த்தோய்ந்தவிருப்பிலன்றே
சிக்காதிரகிதந்தானடி அடியம்மாள்
சிக்காதிரகிதந்தானடி. 13

சிக்காதிரகிதமதாய்ச்சிறந்தசெருக்கதனிற்
பக்வம்பதைப்புமல்லடி அடியம்மாள்
பக்வம்பதைப்புமல்லடி. 14

பக்குவம்பதையாமாபதம்பதமாய்ப்பதிந்ததிதைக்
குக்குறிகுறிக்கவல்லடி அடியம்மாள்
குக்குறிகுறிக்கவல்லடி. 15

குக்குறிகுறிக்கவில்லாக்கொளிக்குங்கொளிப்பதையும்
விக்குதுசொல்லவல்லடி அடியம்மாள்
விக்குதுசொல்லவல்லடி. 16

விக்கிவிம்மிப்பொங்கிவெள்ளியுள்ளுமாகியன்றே
கக்கிடமீழுதில்லடி அடியம்மாள்
கக்கிடமீழுதில்லடி. 17

கக்கீடத்தான்மீண்டுவராக்களங்கரகிதத்தன்றே
வொக்கக்கரைந்ததங்கடி அடியம்மா
வொக்கக்கரைந்ததங்கடி. 18

யொக்கக்கரைந்துளவொருதனிதனிதன்னைப்
பிக்கத்தான்பிரியுதில்லடி அடியம்மாள்
பிக்கத்தான்பிரியுதில்லடி. 19

பிய்க்கத்தான்பிரிவிறந்தபேராண்மையினியததாய்ச்
சுகிக்கச்சுகாதீதமென்னேடி. அடியம்மாள்
சுகிக்கச்சுகாதீதமென்னேடி 20



சுகிக்குஞ்சுகாதீதமதாய்த்தோய்ந்துஜொலிக்கிலங்கு
பஜிக்கப்பதம்வேறுமல்லடி அடியம்மாள்
பஜிக்கப்பதம்வேறுமல்லடி. 21

பஜிக்கப்பதம்வேறில்லாப்பதிந்தமாரகலியம்பார்
ஜெபிக்காஜெபிக்கத்தானடி அடியம்மாள்
ஜெபிக்காஜெபிக்கத்தானடி. 22

ஜெபிக்காஜெபிக்கத்தானாய்த்தேர்ந்துதெளிவதாகிற்
கொளிக்காக்கொளிக்குந்தானடி அடியம்மாள்
கொளிக்காக்கொளிக்குந்தானடி. 23

கொளிக்காக்கொளித்துத்தன்னைக்கொண்டுநின்றுவிடில்
விழித்துமூடுவதில்லடி அடியம்மாள்
விழித்துமூடுவதில்லடி. 24

விழித்துமூடுவதற்றுவிளங்கிவிருக்கிலிங்ஙன்
ஜொலிக்குந்தனையுங்காணடி அடியம்மாள்
ஜொலிக்குந்தனையுங்காணடி.. 25

ஜொலிக்குந்தனையுங்கண்டாற்சொல்லிறந்தவிடஞ்
சலிக்காதிருக்குங்காணடி அடியம்மாள்
சலிக்காதிருக்குங்காணடி. 26

சலிக்குஞ்சலிப்பிறந்துததாகாரமானாலன்றே
பலிக்கும்பதவியங்கடி அடியம்மாள்
பலிக்கும்பதவியங்கடி. 27

பலித்தமாபதவியைப்பதவியீதென்றொரு
விதிப்பங்கும்விதிக்கக்கூடாடி அடியம்மாள்
விதிப்பங்கும்விதிக்கக்கூடாடி. 28

விதிப்பொன்றும்வித்தியாமாவிதேகமயமதாகி
ஆதிப்பங்கனையும்பாரடி அடியம்மாள்
ளாதிப்பங்கனையும்பாரடி. 29

உதிப்போடொடுங்குதற்றுவொளிவிருள்கறந்துறப்
பதிப்பதங்கனதீதந்தானடி அடியம்மாள்
பதிப்பதங்கனதீதந்தானடி. 30

பதிந்ததீதமெனப்பகராப்பதிந்துவிடில்
முதிர்ந்தமாமௌனமீதடி அடியம்மாள்
முதிர்ந்தமாமௌனமீதடி. 31

முதிர்ந்தமாமௌனநித்யமுடியடிநடுவின்றதாய்ப்
பதிந்தபாவாதீதமென்றேடி அடியம்மாள்
பதிந்தபாவாதீதமென்றேடி. 32

பதிந்தபாவாதீதந்தானைப்பதிவுற்றுபதிந்துவிடில்
பதிகதிபந்தமில்லடி அடியம்மாள்
பதிகதிபந்தமில்லடி. 33

பதிகதிபந்தாபந்தம்பற்றுவிருப்பிலிங்ங
னதிலதுவமையுந்தானடி அடியம்மா
ளதிலதுவமையுந்தானடி. 34

சிவோஹம்



## கோலாட்டம்.

இராகம்--செஞ்சுருட்டி தாளம்—ஆதி

அரியமெய்ஞ்ஞானக்கிளியேயொன்றறையக்கேட்டுக்கொஞ்சு
பெரியமாமௌனபாஷைகிளியேபேச்சறப்பழகிக்கொள்ளு 1

ஓரேவோரக்ஷரமேகிளியேவோங்கிநிறைந்ததெங்கும்
பாராப்பார்த்துப்பழகுகிளியேபதைப்பைவதைத்துக்கொஞ்சு

வாக்காதிக்கப்பாலன்றோகிளியேவசித்திடுங்கூடுகாணும்
பாங்காய்த்தூங்காமற்றூங்குகிளியேபக்குவங்கூடிக்கொஞ்சு

பொய்யாப்போதக்கிளியேயுண்மைபுருஷார்த்தம்புகழக்கேளு
மையமற்றுத்தனியாய்க்கிளியேயழியாநானீயாய்க்கொஞ்சு 4

கோசக்கூட்டைநீக்குகிளியேயருட்குருபரன்கூட்டிற்புகு
வாஸமேகாந்தமாகுங்கிளியேமாறுமருவிக்கொஞ்சு 5

சர்வமுள்ளும்புறம்புங்கிளியேதானைப்புணர்ந்துநில்லும்
நிர்ணயம்நிலைத்துக்கொள்ளுங்கிளியேநிர்விகற்பங்கொஞ்சு 6

என்னைப்பிரிந்திடாதேகிளியேயிசைந்திடுஞ்ஸகஜநிஷ்டை
தன்னையளித்தெழுந்தகிளியேதத்துவம்புணர்ந்துகொஞ்சு 7

சங்கற்பமுற்றுந்தள்ளுகிளியேதத்துவதெய்வங்கூடுந்
துங்கந்தெய்வந்தானைக்கிளியேசொப்பிரகாசங்கொஞ்சு 8

போக்குவரத்தறவுபாயங்கிளியேபுணருமெங்குந்தனியாய்த்
தாக்குமவ்வஸ்துவதாய்க்கிளியேசம்பூரணம்பூண்டுகொஞ்சு

அரியதோர்பிரம்மவித்தைகிளியேயரிதினுமரிதேயாகும்
பிரியாதுருகிநீயாய்க்கிளியேபிசகிடாக்கொஞ்சித்தங்கு 10

ஒட்டினலொட்டிக்கொள்ளுங்கிளியேவொட்டிவுணராதாகுஞ்
சுட்டுமொழிந்துபோகுங்கிளியேசூஸ்திரங்கூடிக்கொஞ்சு 11

தன்னிலைகண்டாயானாற்கிளியேமுன்னிலைமாண்டுபோகும்
முன்னிலைதன்னிலையுங்கிளியேமுனிந்துநீமிஞ்சிக்கொஞ்சு 12

நிராசைப்பேரின்பவெள்ளங்கிளியேநிறைந்துததும்புதுபார்
சோராப்புணர்ந்துநீயுங்கிளியேதோய்ந்துகரைந்துகொஞ்சு

சூடாமணிக்கிளியேவொருசூக்ஷமஞ்சூட்டக்கேளும்
வாடாமலர்முடித்துக்கிளியேமாறுமகிழ்ந்துகொஞ்சு 14

ஸந்ததநித்தியமேகிளியேதனித்திங்குவிளையாடுவோம்
மங்களமங்களமுங்கிளியேமற்றுப்புணர்ந்துகொஞ்சு 15

சீருதிகுருவுத்தியொத்துக்கிளியேசூதானமாகச்சூட்டு
முறுதிவுண்மைஎன்னுணைகிளியேஒருமித்திருந்துகொஞ்சு

ஒன்பதுவாயற்கூட்டைக்கிளியேவொழியத்துறந்துநில்லுந்
தன்பதியேகமாகுங்கிளியேசத்தாய்க்கலந்துகொஞ்சு 17

வேதாதீதக்கிளியேவரியவிதேகக்கனியமுதருந்தும்
பேதரகிதமாகுங்கிளியேபேரின்பம்புணர்ந்துகொஞ்சு 18

கொஞ்சும்பொருளதாகக்கிளியேகுருவருள்கொடுக்கதாகு
மஞ்சாப்புணரும்பதங்கிளியேயங்கிங்கெங்குங்கொஞ்சு 19

அத்வைதக்கூடுகட்டுகிளியேவகண்டமாயதிற்பொருந்து
சுத்தமாநிஷ்களங்கங்கிளியேசொரூபமாய்க்கோஞ்சிநில்லு 20

எவ்வூரிருந்துவந்தாய்கிளியேயெவ்வூரெனக்குச்சொல்லு
மவ்வூரடைந்துநீயுங்கிளியேவானந்தாதீதங்கொஞ்சு 21

ஓடிப்பறக்காவிடங்கிளியேவுன்னூர்பூரணமாகும்
நாடாமல்நாடிக்கொஞ்சுகிளியேநனப்புமறப்புமறும் 22



மாபிரம்மரகஸியமேகிளியேமாற்றவேறின்றுகாண்பாய்
சாதகமாகப்பூண்டுகிளியேசையோகமுற்றுக்கொஞ்சு 23

நிரஞ்சனதீபமேற்றுக்கிளியேநீயதாய்நின்றுகொள்ளும்
பரஸ்பரசமயாதீதங்கிளியேபாக்கியம்பாவிக்கொஞ்சு 24

ஆனந்தாதீதம்பாருங்கிளியேயங்கொன்றுமறையக்கூடாத்
தோணுக்கரைந்ததாகுங்கிளியேதொந்தரகிதங்கொஞ்சு 25

பாவாதீதக்கிளியேகிளியேஞானபண்டிதமிம்முறைகேள்
போதமுறிந்திடாமற்கிளியேபுருஷார்த்தம்பூண்டுகொஞ்சு. 26

சஞ்சலரகிதமிதேகிளியேதனித்துமிருந்துபாரு
மஞ்சாவதீதமாகுங்கிளியேயறிவோடிருந்துகொஞ்சு 27

துரியமாகூட்டிற்புகுகிளியேசுட்டங்கொழிந்துவிடும்
தெரியாதுரியாதீதங்கிளியேநீயாய்ச்சுகித்துக்கொஞ்சு 28

சத்தியமெய்க்கிளியேகிளியேதன்னையுணர்ந்தாயோசொல்
நித்தியமென்னுணைகிளியேநிச்சயம்நேர்மைகொஞ்சு 29

ததாகாரமாகிளியேகிளியேதானாய்க்கரைந்துகொள்ளு
நிவாததீபம்போற்றானாய்க்கிளியேநீநின்றுகொஞ்சும் 30

இம்முறைசத்யம்நம்புகிளியேயென்னுணைவீடுசேர்க்குஞ்
சங்கைகள்விதிப்பாயானாற்கிளியேசாஸ்திரமுனிந்துசபிக்கும்

சத்தியமாவத்வைதங்கிளியேசார்ந்திடுஞ்சத்யமாகும்
நித்யமிதென்னுணைகிளியேநிச்சயமாகிக்கொஞ்சு 32

மெய்ஞ்ஞானவமிர்தமிதுகிளியேமேவிவுகந்துகொள்ளு
மம்மயமாகிவிடுங்கிளியேவத்துவாயிசைந்துகொஞ்சு 33

சிவோஹம்

## இராகம்—கேதாரகௌளம்

ஒன்பதுவாயலுடனோருருவமதாய்வந்ததையு
முற்றுணர்ந்துருகிற்றுள்ளுமுள்ளந்துறந்ததடா. 1

பத்துமூன்றுமாறுங்கூடிவோர்பாலரூபமானதையும்
வித்தறிந்தேழைந்தைத்துறக்கிற்சுத்தவிமலபரமுற்றதடா. 2

காமாதியுடன்கூடித்துவிதக்கண்டமதாய்க்கண்டதையும்
நேமமுடன்றுறந்துநிற்கில்நீங்காவகண்டமுற்றானதடா. 3

இராகாதிபதினாறைச்சுகவின்பமதாய்க்கொண்டதையும்
பாராதீனமென்றறத்துறக்கிற்பரமானந்தமேகூடுதடா. 4

ஜாதிபேதமுற்றுப்பொல்லாச்சங்கையுற்றிருந்ததையுஞ்
சோதித்தரத்துறங்கிற்கிற்சுயசொரூபமதாய்ச்சொக்குதடா. 5

இருவினைப்பகுதியினால்மாயாவின்பதுன்பமுற்றதையுங்
கருதியறத்துறந்துநிற்கிற்போதங்களங்கமற்றுவாழுதடா. 6

விகற்பமுற்றுவிதவிதமாய்விரும்புஞ்சுகமனைத்தையுமே
நிகர்வநெருப்பிட்டுநீற்றுவிடிற்சுத்தநிர்விகப்பங்கூடுதடா. 7

பாவித்துப்பலபலவாய்வீண்பாவியாய்ப்பதிந்ததையும்
ஆவியுற்றறத்துறந்துநிற்கிற்சுயவரூபமுற்றமைந்ததடா 8

உன்னியுன்னிவேறதுவாய்ப்பொய்யுறுதியுற்றிருந்ததையு
மெண்ணியறத்துறந்துநிற்கில்வஸ்திறுமாப்பிசைந்ததடா 9

காலமூன்றெனக்கணித்துமாயாகருமமுற்றிருந்ததையுஞ்
சாலவூன்றித்துறந்துநிற்கிலபேதசாம்பிராஜ்யமுற்றதடா 10

அண்டபிண்டசராசரத்தையனேகரூபமதாய்க்கண்டதையும்
விண்டுமறத்துறந்துநிற்கிற்சுத்தவிதேகமுற்றுவிளங்குதடா



பொறிபுலனாதியினாற்பொருந்தும்பொய்விஷயத்தையு
மறிந்தறத்துறந்துநிற்கில்மீஹாவபாரமுற்றுவாழுதடா 12

மாதர்மக்கள்மைந்தரெனமாயாமையலுற்றிருந்ததையுந்
தீதரென்றறத்துறந்துநிற்கிற்போதம்சீர்மையுற்றுவாழுதடா

வேளைநேரம்நிமிடமெனவீண்விதிவகுத்தகணிதத்தையும்
பாளையென்றறத்துறந்துநிற்கிற்சுத்தபாவாதீதம்பதிந்ததடா

பொட்டுடன்மையிட்டுமாடைபூடணம்பூண்டழகதையும்
விட்டுமறத்துறந்துநிற்கிலருட்கொட்டியழகானதடா 15

சங்கையுற்றுக்கற்பனையாய்ச்சாதித்தவீண்சாதனையை
நன்கையுற்றறத்துறந்துநிற்கில்நலந்தீங்கற்றுப்போனதடா

தொடுதல்விடுதலுற்றுத்தனைச்சுட்டிச்சுட்டிப்பார்த்ததையுஞ்
சடுதியுற்றுத்துறந்துநிற்கிற்சுயசத்தாயுற்றுவாழுதடா 17

வெண்ணீறுந்தாவடமும்வேட்வெண்காவிபூண்டதையும்
எண்ணியறத்துறந்துநிற்கிற்றூயவேகாந்தமுற்றானதடா 18

நட்டணைகள்கொண்டுபொல்லாநாட்டமுற்றிருந்ததையும்
விட்டுமறத்துறந்துநிற்கிலபேதவெள்ளம்பொங்கிமூடுதடா

நாமரூபமுற்றுப்பொல்லாநாணவெட்கமுற்றதையும்
நேமமுற்றறத்துறக்கிற்றூயநிற்சின்னமுற்றுவாழுதடா 20

ஓடமெனத்தேகமதைபூட்டியோட்டிக்கொண்டலைந்ததையும்
நாடகமென்றறத்துறந்துநிற்கில்வஸ்துநடனமிட்டாடுதடா

காடுமலைகுகைதேடிமாறுக்கவலையுற்றலைந்ததையுஞ்
சூடும்வேடமென்றறத்துறக்கிற்சுத்தசுயம்புமயமுற்றதடா

தலையின்மயிரதனைச்சடைப்பாரமேற்றித்திரிந்ததையு
முலைவுவேடமென்றறத்துறக்கிற்சுயவுறுதியுற்றுவாழுதடா

கமண்டலம்யோகதண்டுமாருக்கரத்தில்வைத்திருந்ததையுந்
துவண்டவேடமெனத்துறக்கிற்றீயசுபாவமுற்றுவாழுதடா

சித்தசுத்திபண்ணிடாமற்சிவபூஜையெனக்கொண்டதையுஞ்
சுத்தவுத்தியாலதைத்துறக்கிற்றூயசுதந்திரமாய்வாழுதடா

காயசித்திபண்ணெண்ணிக்கண்டநஞ்சுண்டிருந்ததையும்
மாயமென்றறத்துறந்துநிற்கில்மாமர்மமுற்றுவாழுதடா 26

கஞ்சாவபின்கள்ளருந்திஞானக்கருத்திழந்துநின்றதையு
மஞ்சாதறத்துறந்துநிற்கிற்றூயவருட்போதைபூண்டதடா 27

வித்தியாகருவங்கொண்டுவீண்துவிததர்க்கமுற்றதையுஞ்
சத்யமுற்றறத்துறந்துநிற்கிற்சுத்தசமரசமாய்வாழுதடா 28

மாயைசித்திதனைவிரும்பித்தனைமாறுபாடுசெய்ததையுந்
தூய்மையுற்றறத்துறக்கிற்சுத்தசொரூபசித்திசூழ்ந்ததடா

விஷயமுற்றவிகற்பசுகமறியாவிச்சையுற்றுச்சுகித்ததையும்
நிசயமுற்றறத்துறந்துநிற்கிற்சுத்தநிர்விஷயம்பூண்டதடா 30

மாசுற்றமும்மலத்தைமாயாமயக்குற்றுத்தழுவினதை
தேஜயுற்றறத்துறந்துநிற்கிற்சிவசொரூபசித்தியானதடா

கோபமொடுபொய்களவுபொல்லாக்கொலையாதிபுரிந்ததையும்
பாபமென்றறத்துறந்துநிற்கிற்சுத்தபரஸ்பரமாய்வாழுதடா

நாசமுறுந்தேகாதியைபொழியாநானெனப்பூண்டதையும்
பாசமென்றறத்துறந்துநிற்கிற்றூயபரமாயுற்றுவாழுதடா 33

கிரியையுற்றன்னியமாய்த்தனைக்கீழ்மேலாய்க்கண்டதையு
மறிவையுற்றறத்துறந்துநிற்கிற்சுத்தவதீதமுற்றுவாழுதடா

தற்சங்கத்துடன்கூடிமாயாதுக்கமுற்றிருந்ததையுஞ்
நிற்சங்கமுற்றுத்துறந்துநிற்கிற்றூயநிற்குணமாய்நின்றதடா



பஞ்சகோசகுகைக்குட்டன்னைப்பாவித்துப்பாழானதையு
மஞ்சாதறத்துறந்துநிற்கிற்பொருளடங்காதுற்றுவாழுதடா

போக்குவரத்துற்றுற்றுப்பொய்ச்சமயநெறிபுகுந்ததையுஞ்
சூக்மமுற்றுத்துறந்துநிற்கிற்சுயசுபாவநிஷ்டைசூழ்ந்ததடா

ஆதிநடுவந்தமெனவீணளவுபண்ணிவைத்ததையுஞ்
சோதித்தறத்துறந்துநிற்கிற்றூயசொஸ்தமுற்றுவாழுதடா

யோகமெனவாசிதனையோராளவுபண்ணிவைத்ததையு
மோகமென்றறத்துறந்துநிற்கிற்றூயமோனமுற்றுவாழுதடா

திரிகுணத்தின்வழியிலுற்றுசித்தசலனமுற்றிருந்ததையுந்
துரியந்தொட்டுத்துறக்கிற்றுரியாதீதந்தொட்டுறைந்ததடா

தேசிகனார்திருநோக்கைச்சதாதெரிசித்துப்பூண்டுநிற்கில்
மாசற்றறத்துறந்திலங்கிநித்யமங்களமாய்வாழுதடா

மெய்ஞ்ஞானதேசிகனார்மெய்மாமௌனவாக்கியத்தை
சுஞ்ஞானமுற்றுச்சூடிநிற்கிற்றுல்யசுயம்புற்றுவாழுதடா 42

அத்துவைததேசிகனாரமலவகண்டாநுபூதியதையும்
உத்தியுற்றுணர்ந்துநிற்கிற்சுயவுறுதியுற்றமைந்ததடா 43

சுத்தப்பிரம்மதேசிகனார்துய்யசுவானுபூதிசூஸ்திரத்தை
சத்தமற்றுணர்ந்துநிற்கிற்சாட்சாத்காரமுற்றுவாழுதடா 44

வஸ்துவானதேசிகனார்வாங்காநுபூதியநுசூதத்தைச்
சொஸ்தமதாயுணர்ந்துய்கிற்றூயஜோதிஹாரஞ்சூழ்ந்ததடா

முத்தியுற்றதேசிகனார்தன்னைமுனிந்தருள்முனிவதையுஞ்
சத்யமுற்றுணர்ந்துநிற்கிற்றேறுஞ்சந்தேகமற்றதடா 46

நிர்விஷயதேசிகனார்சதாநேசித்தொன்றாய்த்தழுவினதை
சர்வதாவுணர்ந்துநிற்கிலடங்காத்தகைமைபொங்கிமூடுதடா

சத்தியமாதேசிகனார்சர்வக்கயிறிட்டுறக்கட்டினதை
பத்தியமாயுணர்ந்துநிற்கிற்றாயபரஞ்ஜோதியுற்றதடா 48

போதஞானதேசிகனார்சுத்தபுன்சிரிப்புப்பூண்டதையுஞ்
சாதனையுற்றுணர்க்துநிற்கிலரியலந்ததமுற்றதடா 49

ஜோதிஞானதேசிகனார்தன்னைத்தொட்டுமுத்தமிட்டதையுஞ்
சாதுரியமுற்றுணர்ந்துநிற்கிற்சுத்தசாம்பிராஜ்யமுற்றதடா

காலாதீததேசிகனார்கருணைக்கண்ணாலேநோக்கினையுந்
தரிழாமையுற்றுணர்ந்துநிற்கிற்றாயததாகாரமுற்றதடா 51

பாவாதீததேசிகனாரேகபாவனைபோற்பாவித்ததை
யோவாதுற்றுணர்ந்துநிற்கிலொருபாவனையுமற்றதடா 52

அரூபமாயமைந்ததுவுஞ்சுத்தவத்துவைதமுற்றதுவுஞ்
சொரூபசொஸ்தசுதந்திரமாசுயஞ்ஜோதியுற்றுவாழுதடா 53

நாசமற்றதானதுவும்பிரம்மஞானம்நட்டுறைந்ததுவுந்
தோஷமற்றபூரணமாய்த்துரியாதீதந்தொட்டுவாழுதடா 54

சிவோஹம்.

## பாங்கிமார்க்கண்ணி.

இராகம்—நாதநாமக்கிரியை, தாளம்—ஆதி.

இன்பதுன்பமற்றவராம் பாங்கிமாரே அவ
ரிஷ்டம்வைத்தகாரணங்கேள் பாங்கிமாரே. 1

கற்புடையவெந்தனுக்குப் பாங்கிமாரே மாயா
கற்பனைகெடுக்கவந்தார் பாங்கிமாரே. 2

மனதைக்கரைத்துவிட்டார் பாங்கிமாரே அவர்
மையலிலேசொக்கிப்போனேன் பாங்கிமாரே. 3



புருஷார்த்தமென்றணைத்தார் பாக்கிமாரே அவர்
புருஷனல்லபெண்ணுமல்ல பாங்கிமாரே. 4

ஸந்ததமும்மையல்கொண்டேன் பாங்கிமாரே அவர்
ஸகஜமாய்ச்சிக்கிப்போனார் பாங்கிமாரே. 5

மௌனமென்றுமுத்தமிட்டார் பாங்கிமாரே மௌன
மயமாய்நிறைந்துநின்றேன் பாங்கிமாரே. 6

இன்பமுறக்கிட்டிப்போனேன் பாங்கிமாரே அவ
ரெட்டிநின்றொட்டேனென்றார் பாங்கிமாரே. 7

பார்க்கெண்ணியானெழுந்தேன் பாங்கிமாரே அவர்
பதைபதைத்தோடிப்போனார் பாங்கிமாரே. 8

பாராதுபார்த்திருந்தேன் பாங்கிமாரே அவர்
பக்ஷமுற்றொப்பிருந்தார் பாங்கிமாரே. 9

ஒன்றிற்குமிணங்கமாட்டார் பாங்கிமாரே அவ
ரொப்புவார்சுட்டொழிந்தாற் பாங்கிமாரே. 10

கன்னியென்றெனையழைத்தார் பாங்கிமாரே அவர்
கர்ம்மமற்றபிரமசாரி பாங்கிமாரே. 11

ஒடுங்காருதியாரம்மா பாங்கிமாரே அவர்
ரொத்துப்பூரணமானோம் பாங்கிமாரே. 12

இனிமேற்பிரியமாட்டார் பாங்கிமாரே அவ
ரென்னுணையேகமாகும் பாங்கிமாரே. 13

நலந்தீங்குக்கொவ்வமாட்டார் பாங்கிமாரே அவரை
நாம்சேருமுபாயங்கேளும். பாங்கிமாரே. 14

நிராசையுற்றவிடத்திற் பாங்கிமாரே அவர்
நிச்சயமாய்வீற்றிருப்பர் பாங்கிமாரே. 15

சட்டாமாமாடிதனிற் பாங்கிமாரே அவர்
தூங்காமற்றூங்குவரே பாங்கிமாரே. 16

இஷ்டம்வேணுமானாற்கேளும் பாங்கிமாரே அவரை
யிட்டழைத்துச்சுட்டவேண்டாம் பாங்கிமாரே. 17

கட்டுக்கடங்கமாட்டார் பாங்கிமாரே அவர்
கருத்திற்கிசைந்திருப்பர் பாங்கிமாரே. 18

மோசம்மோசம்மாயாஜாலம் பாங்கிமாரே இவர்
முன்னிலைக்கிக்கள்வராகும் பாங்கிமாரே. 19

விள்ளரப்பத்தியக்காரர் பாங்கிமாரே இவர்
விதேகசையோகரம்மா பாங்கிமாரே. 20

அவயவமொன்றுமில்லார் பாங்கிமாரே இவரை
யடுத்தால்விழுங்கிடுவர் பாங்கிமாரே. 21

தேனுண்டவண்டதுபோற் பாங்கிமாரே அவர்
சேர்ந்துகலந்துகொள்வர் பாங்கிமாரே. 22

நுட்பமஹாரகஸியம் பாங்கிமாரே அவர்
நோக்கரியநோக்கக்காரர் பாங்கிமாரே. 23

அப்பில்நுரைகுமிழிபோற் பாங்கிமாரே அவ
ரனேகவுருக்காட்டிமறைப்பர் பாங்கிமாரே. 24

வந்தவழிகண்டுணர்ந்தாற் பாங்கிமாரே அவரை
வரப்போகவெண்ணவேண்டாம் பாங்கிமாரே. 25

ஆவரணமணிந்துகொண்டு பாங்கிமாரே அவ
ராடுகின்றார்மாயாஜாலம் பாங்கிமாரே. 26

தூயவறிவாற்றுடர்ந்துபாரும் பாங்கிமாரே அவர்
சுத்தசொரூபியாகும் பாங்கிமாரே. 27



தனையளித்தெனையுகந்தார் பாங்கிமாரே நித்யந்
தானவரும்பிரிவிறந்தோம் பாங்கிமாரே. 28

அவரன்றியணுவுமில்லை பாங்கிமாரே அவ
ரல்லார்போலேமாற்றிடுவர் பாங்கிமாரே. 29

எனக்குகந்தவிறுமாப்புக்காரர் பாங்கிமாரே அவ
ரெனையன்றிவேறுமல்ல பாங்கிமாரே. 30

பேதரகிதரம்மா பாங்கிமாரே அவர்
பெற்றபெருமைதானென்னே பாங்கிமாரே. 31

ஏகாந்தவின்பக்காரர் பாங்கிமாரே அவ
ரெனைநீங்கிவாழ்கமாட்டார் பாங்கிமாரே. 32

போதங்கொண்டபோதைக்காரர் பாங்கிமாரே அவரைப்
பொருந்திநின்றால்மாறமாட்டார் பாங்கிமாரே. 33

வீடுவாசலொன்றுமிலார் பாங்கிமாரே அவர்
வெட்கம்வெட்கஞ்சொல்லாதானாற் பாங்கிமாரே. 34

தனையறிந்துதானுமானாற் பாங்கிமாரே அவர்
தன்னோடுதான்பேசுவரோ பாங்கிமாரே. 35

பேசாப்பெருமைக்காரர் பாங்கிமாரே அவர்
பேரானந்தப்பெருஞ்செருக்கர் பாங்கிமாரே. 36

மஹத்துவமாவிறுமாப்புக்காரர் பாங்கிமாரே அவர்
மற்றொன்றுஞ்சொல்லமாட்டார் பாங்கிமாரே. 37

பெண்டுபிள்ளையொன்றுமிலார் பாங்கிமாரே இவர்
பெருமைதானென்னேபாரும் பாங்கிமாரே. 38

உண்டுறங்கவிதியில்லார் பாங்கிமாரே இவர்
யோகந்தானென்னேபாரும் பாங்கிமாரே. 39

குறிக்கொண்ணுபஜிக்கொண்ணு பாங்கிமாரே இவரைக்
கூடும்வழிமோனமம்மா பாங்கிமாரே. 40

பந்தமோக்ஷமொன்றுமிலார் பாங்கிமாரே தன்னைப்
பார்த்தும்பாராதபார்வை பாங்கிமாரே. 41

பந்தநொந்தமுற்றுமற்றுற் பாங்கிமாரே இவர்
பதைப்பற்றுகூடிவாழ்வார் பாங்கிமாரே. 42

பாங்கிபாங்கியென்றமொழி பாங்கிமாரே சுத்த
பரவசானந்தமம்மா பாங்கிமாரே. 43

சுயசொரூபவானந்தப்புகழ்ச்சி பாங்கிமாரே இது
துவிதமாகாசொரூபமயம் பாங்கிமாரே. 44

தன்னைப்பிரியாசாமர்த்தியம் பாங்கிமாரே இது
தானுனயத்துவைதம் பாங்கிமாரே, 45

ஸகஜாநுபூதிசத்யம் பாங்கிமாரே இதைத்
தவரிடாப்பூண்டுகொள்ளும் பாங்கிமாரே. 46

சிநேஹம்.

## சோறு.

### சொரூபநிஷ்டை கூடும் விதம்.

இராகம்—புன்னாகவராளி, தாளம்—ஆதி.

சோறுகொண்டுவந்தேனக்கக்கா
சொரூபனைக்காணீரோ. சோ 1

பாரினைவிற்றான்பரமதாயுற்றான்
பேரினையற்றான்பிரம்மமாயுற்றான் சோ 2



கூறிடவெட்டான்குணங்குறியற்றான்
வேறிணையற்றான்விமலமாயுற்றான் சோ 3

காரியங்கெட்டான்காணாதுங்கண்டான்
பேரின்பமுற்றான்பெருமைமர்பெற்றான் சோ 4

கோசநெல்லறுத்தேன்குத்திக்களைந்தே
னேசமாய்ச்சமைத்தேனீங்கிடானுண்டிட சோ 6

உன்னுதற்கெட்டானுயர்நிலமுற்றான்
பின்னுமுன்னற்றான்பேச்சறவிட்டான் சோ. 5

விஷயக்காய்பரித்தேன்விமலமாய்ச்சமைத்தேன்
றோசையும்வார்த்தேன்றொட்டுன்னக்காணேன் சோ 7

பொறிபுலன்றுத்தேன்புதுமையாய்ச்சமைத்தே
னறுசுவைகளைந்தேனழகாய்ப்படைத்தேன் சோ 8

காணாதிபறித்தேன்கர்ம்மாதிவருத்தே
னிராகாதிபிழிந்தேனின்பமாய்ச்சமைத்தேன் சோ 9

கண்டம்வருத்தேன்கருணைநெய்க்கொட்டினே
னுண்டைதிரட்டினேனுகந்திடக்காணேன் சோ 10

நிராசைப்பாலெடுத்தேன்நித்யக்கனிபிழிந்தேன்
ஸரஸத்தேன்கலந்தேன்சத்துத்திரட்டினேன் சோ 11

விதேகலட்டுச்செய்தேன்விள்ளாப்பாகும்போட்டேன்
பதையாதும்படைத்தேன்பார்த்துன்னக்காணேன் சோ 12

போதப்பச்சடிசெய்தேன்பூரணவடைபோட்டேன்
பேதமுருக்கிட்டேன்பேரில்லானுகந்திட சோ 13

பாசதோஷமறுத்தேன்பதைத்யாவமிர்தஞ்செய்தேன்
நேசக்கூட்டுமிட்டேன்நித்தியனுகந்திட சோ 14

மும்மலக்கிழங்கறுத்தேன்மோனதூழிதஞ்செய்தேன்
சம்மதமுற்றளித்தேன்சமயமனுகாணுண்ண சோ 15

சினமாப்பிசைந்தெடுத்தேன்றெளிந்தப்பளம்போட்டேன்
மனமறப்பொறித்தேன்மதிப்பிலான்மகிழ்துண்ண சோ 16

கும்பாவிளக்கிவைத்தேன்குளிரப்பரிமாறினே
னின்பாதீதமானேனிசைந்துமின்பமுறவே சோ 17

ஸ்தூலவிகற்பமற்றேன்றுய்யநிர்விகற்போன்
காலாதீதப்பையல்கண்டால்வரச்சொல்லுங்கள் சோ 18

ஞானமதச்செருக்கன்நலந்தீங்குமற்றபையல்
மானாபிமானமற்றேன்வந்தால்வரச்சொல்லுங்கள் சோ 19

வருவான்வருவானென்றுவரவையெதிர்பார்த்தேன்
பெருமைப்பெருஞ்செருக்கன்பேசாதிருந்துவிட்டான் சோ

சுட்டிச்சுட்டியழைத்தேனெட்டியெட்டிப்போனான்
விட்டுச்சும்மாவிருந்தேன்வெட்கிச்சையோகமுற்றான் சோ

சுட்டுமொழிந்தவுள்ளிற்றூங்காமற்றூங்குவாண்டி.
விட்டுவிலகிடாதேமேவிங்கழைத்துவாடி சோ 22

குணங்குறியற்றபையல்கூட்டிக்குறைக்கொட்டான்
மனமற்றுத்துய்யமாகிவஸமாயழைத்துவாடி சோ 23

என்னுணையெனக்குகந்தானெனைநீங்கிருக்கமாட்டான்
சொன்னான்சொன்னசொல்லறசொஸ்தமாசுதந்திரம் சோ 24

தோணாத்தோற்றக்காரன்சூதாயேமாற்றிடுவன்
காணாக்கண்வழிசென்றுங்கலந்துமழைத்துவாடி சோ 25

விஷயாகிதமுற்றால்விலகிடாச்சொக்கிடுவ
னசையானென்னுணைவிட்டறிவோர்டழைத்துவாடி சோ 26



நேசானுபூதியுற்றால்நீங்காதுறைந்திடுவன்
சாம்பாண்டிவேடமிட்டாற்சமர்த்தனடங்கமாட்டான் சோ 27

உணர்வோடுசென்றாயானாலுமக்குமிசைந்திடுவன்
புணர்ந்தாற்பிரியமாட்டான்பூரணவழகனம்மா சோ 28

பசிதாகமொன்றுமிலான்பார்ப்போர்க்கமிர்தமாவ
னசியாநித்யம்மம்மாநாடியழைத்துவாடி சோ 29

பாமறப்பார்வையுற்றாற்பசப்பியேமாற்றிடுவன்
பரமார்த்தமாகப்பார்த்தாற்பதையாதுசிக்கிடுவன் சோ 30

அவனைவசியம்பண்ணவறையவேகேளுமம்மா
மலரணைநிர்விகற்பம்மாறாதுசொக்கிடுவன் சோ 31

ஸரஸவுல்லாஸக்காரன்சங்கற்பமாகாதங்கே
பரஸ்பரமாகச்சென்றாற்பாதைமேற்கண்டிடலாம் சோ 32

வாக்காதிதொனித்தாக்கால்வரவேவ்வரமாட்டா
னேக்கறும்மௌனமாய்நோகாதழைத்துவாடி சோ 33

அபேதப்பத்தியமுற்றழைத்தாற்கூடிவருவன்
விதேகமாமாளிகைக்கிவிட்டிடாக்கொண்டுவாடி சோ 34

கூவியழைத்திடாதேகொட்டிக்கெடுத்திடுவன்
பாவிக்கவடங்காப்பையல்பக்குவத்தோடுகொண்டா சோ 35

நினைப்புமறப்புக்கூடாநீநானென்றுமாகாத்
தனைத்தானுறவுசேர்த்துஸகஜமாய்க்கொண்டுவாடி சோ 36

நீயவனைச்சேர்வென்றால்நிஷ்கிரியைப்பொடிதூவு
முனையும்பிரியமாட்டானுகந்துசொக்கிப்போவன் சோ 37

வந்தவழியைப்பற்றிமாறாத்சென்றாலங்கு
சொந்தவிடந்தெரியுந்தொந்தமகன்றிலங்கும் சோ 38

என்னம்மாரகலியமியம்பினுலிருப்புறுன்
பின்னமறக்கூடிப்பேசாச்சுகித்திட்டடி சோ 39

ஸந்தநிஷ்களங்கன்சர்வசையோகராஜன்
சொந்தமாததாகாரன்சூட்டடிதானதாய் சோ 40

ஏகபாவனையுற்றுலிசைந்துதனித்திடுவ
ஞகாததையும்விட்டம்மம்மாசும்மாவிரடி சோ 41

அத்வைதசாதமம்மாவமிர்தமிதுகொள்ளுஞ்
சுத்தசுகாதீதஞ்சுகித்துச்சும்மாயிரடி சோ 42

என்னுளையுகந்துநில்லுமிம்முறைசத்தியமே
யுன்னைவுகந்தளிக்குமுகந்திடுமுத்தியதாய் சோ 43

சிவோஹம்.

## குருசிஷர்லக்ஷியம்.

ஒன்றுசொன்னலந்தொன்றுயுறுபவனுண்மையிற்பக்குவனே
ஒன்றுரைத்தாலதைஒழியவிட்டலைபவனுண்மையிழந்தவனே

என்றுமிலாதையிசைந்துபிடித்தவனிருளுறும்பொய்யிவனே
யென்றுமுளதாயிருந்துசுகிப்பவனென்னொளிகண்ணிவனே

அத்வைதகுருவடியகலாதிருப்பவனருளுறும்பொருளிவனே
யத்வைதகுருவினையகலவிட்டலைபவனையய்யோபாழிவனே 3

குருவருள்மொழிக்கிமறுமொழிபுகலான்குருவருள்பூண்ட
[வனே
குருவருள்மொழிக்கிமறுமொழிபுகல்பவன்குதற்கமாபாதக
[னே 4



சத்தியமென்னைப்பிரியாதிருப்பவன்சையோகசத்தியனே
சத்தியமென்னைப்பிரியவிட்டலைபவன்சலித்திடுமசத்திவனே 5

திரிகாலமற்றுச்சதாகாலமுற்றவன்செல்வச்சிகாமணியே
திரிகாலமுற்றுத்தியங்கித்தவிப்பவன்சீச்சீயனித்தியனே 6

மதியாமதியாய்மருவிச்சுகிப்பவன்மதிமிகும்மஹத்திவனே
மதியாமதியைமறையவிட்டுழல்பவன்மாமிசப்பொதியிவனே

என்வழிகண்டிசைந்துபுணர்ந்தவனென்னருட்சித்திவனே
என்வழிதவிர்த்திருள்வழிசென்றவனிடிகுழிவிழுந்தவனே 8

காணுக்கண்ணைக்கண்டுகளித்தவன்கண்ணுண்மணியிவனே
காணுக்கண்ணைக்காணுதிழந்தவன்கண்ணிலாவந்தகனே 9

உண்மையுரையையொட்டியுணர்பவனொருதனிவுறவிவனே
வுண்மையுரையையொழியவிட்டுருகுவனுயிரில்லாஜடமிவ
[னே் 10

பொருளில்லாப்புத்ரைப்புணர்ந்துமயங்குவன்புன்மையறிவில
[னே
பொருளைப்பொருளாய்ப்பூண்டுசுகிப்பவன்புருஷார்த்தபூபதி
[யே 11

நாசரகிதமென்னைக்கலந்துமிருப்பவனுனவனுனவனே
நாசகோசத்தைநானெனச்சாதிப்போன்நாசதேகியிவனே 12

எல்லையிறந்தவென்னைப்புணர்ந்தவனவனேகமாயோகிகாணே
யெல்லைகட்டியிருந்துபாவிப்போனிசைந்திடான்றள்ளிவனே

சாஸ்வதமென்னைச்சார்ந்துசுகிப்பவன்சையோகியாமிவனே
சாஸ்வதமென்னைத்தவிரவிட்டலைபவன்சாதனமற்றவனே 14

நித்தியதெய்வம்நீயெனக்காட்டுவோனிற்குணகுருபரனே
நித்தியமற்றுமசத்தியங்காட்டுவோனெறியிலன்றள்ளிவனே

சிவயோகிதன்னைச்சிவமாயணிபவன்றெளிவுறுங்குருபரனே
சிவமதைவேறாய்த்தெரியாதுரைப்பவன்சிதடவிருளிவனே

தத்துவகுருபரன்சத்யமாயானவன்தத்துவச்சுடரிவனே
தத்துவகுருபரன்சத்யமறிந்திடான்சத்திலாஜடமிவனே. 17

உத்தமதேசிகனொழுக்கமறிந்தவனுண்மையுணர்ந்தவனே
உத்தமதேசிகனொழுக்கமறிந்திடானொளியிலன்றள்ளிவனே.

ஸந்தததேசிகன்சாற்றுமாரகஸியஞ்சார்ந்தோன்சத்திபனே
ஸந்ததமிழந்துதற்போதமுற்றவன்சஞ்சலன்றள்ளிவனே. 19

மாற்றிலாவெனைமகிழ்ந்துதரித்தவன்மங்களசுயம்பிவனே
மாற்றுரைபண்ணிமதிப்புப்படுத்துவன்மடமைதள்ளிவனே.

பாவாதீதமெனைப்பதிந்துபுணர்ந்தவன்பக்குவபண்டிதனே
பாவனைபண்ணிப்பதைத்துழலுவோன்பாழினும்பாழிவனே.

களங்கரகிதமெனைக்கலந்துசுகிப்பவன்கைவல்யரகஸியனே
களங்கமாயுற்றுக்கதறியுமலைபவன்கசடனுந்தள்ளிவனே. 22

சிவோஹம்

## துறவு.

மறவெனுமிருளைநீற்றமதிதெளிதுறவேஞான்ம்
பரமெனுந்துறவுசுத்தஞ்சுகம்நித்யநிஜமேயாகு
மரவெனுங்கயிற்றைநோக்கியறவன்றுகயிறுகண்ட
திரம்பெறும்மெய்ஞ்ஞானமைந்தாசிறந்திடுந்துறவுகாணே. 1

திரிவிதகாரணத்திற்குந்தேடரிதாகுந்தன்னை
யரியதோர்விமலமாகவறிந்ததுவாயிருந்து
பிரிவறவுருகியேகபிரம்மமாயசங்கமுற்றுக்
குறியறப்பொருந்திநிற்குமிக்கோலமேதுறவுமைந்தா. 2



மாசற்றசொரூபமதாய்மாசுறுங்கோசமற்று
நாசமுமற்றசத்தாய்நவிலவுமிடமோவின்றி
நேசமுமுற்றுநீங்காநிர்விகற்பபூரணமாய்த்
தோஷமுமற்றிலங்குஞ்சொரூபஞானமேதுறவுமைந்தா. 3

பொய்யுறும்பந்தம்நீற்றல்புறத்துறவதுவதாகு
மெய்யுறும்வஸ்துதானாய்மேவிடலகமதுதுறந்ததாகு
மையமொன்றின்றித்தானாயதீதமாய்நிறையுமிந்தத்
துய்யமெய்ஜோதிஞானந்துறவிதுவாகுமைந்தா. 4

கற்பனையாவுமாயாகானலிநீரெனவேநோக்கி
துப்பறவதனைநீற்றுச்சுயமதாய்த்தன்னைக்கண்டு
சிற்பிரகாசமோங்கிச்சின்மயமுற்றிருந்தமா
வொப்பறுமமலஞானமுகந்திடுந்துறவுமைந்தா. 5

வேறு

செப்புகின்றநாமரூபமணுவேனுமுதியாதகற்றியதாய்ச்
சிற்சொரூபசிதானந்தபரஞ்சுடராயகண்டமுற்றகலாநின்
றொப்புவமையற்றகுணரகிதமாயுகந்துதனிவாழ்வதாகியதா
யெப்பவுமேயசைவிறந்தபரஞானமைந்தாவிருந்தபடிதுறவு
[தாணே. 6

வேறு

ஓதவொண்ணாவிதேகமதாயுரையிறந்த
மோனமெனயுறையுமுரவதாகி
யேதுமிலாப்பரவெளியாயிருந்ததனை
யிருந்தபடியிருந்துகாண்விருந்ததாகிக்
காலநேரமொன்றினுக்குமடங்காக்
காலாதீதமதாயிருந்துசும்மா
வாழுகின்றவஸ்துஞானமைந்தா
மஹத்தானதுறவிதுவேதுறந்துகாணே. 7

உளதிலதெனவெலாமொழித்தொருங்கே
வோருணர்வதாகவதாய்ச்
சலனமிறந்துள்ளனதாய்சாஸ்வத
நிர்விகாரசைதன்யமதுவதாகுமதுவாய்த்
துலங்குஞ்சுகாதீதமுறுஞ்சூக்ஷ்ம
மரிதினுமரிதரியாகஸியமதாகியதா
யிலங்குமிந்தபிரம்மஞானமைந்தா
விருந்துளதுதுறவுகாணே 8

நான்மறைக்குமெட்டாநனவினுக்குமணுகா
நலந்தீங்கினுக்குங்காணா
வீண்பாவனைக்குமடங்காவிதிவிலக்குமறியா
பிரம்மவித்தையதாகிக்
காண்பானுங்காக்ஷியுமறவிருந்து
கரைந்துருகித்ததாகாரமதாயான
பர்வாநீதமெய்ஞ்ஞானம்மைந்தா
பகரவரிதாகுமிதுதுறவாந்துடர்ந்துகாணே. 9

அறையுமறைவழியாலரியபாவுத்தியதா
லுரியமெய்க்குருநோக்கலொன்றியசாதனையாற்
கரையிறந்ததுய்யபேரொளியோடொன்றிக்
களங்கரகிதமுற்றுச்சுயம்பாயெங்கும்
நிறைந்தபேரின்பமெய்வாழ்வதாய்
நீக்கமொன்றின்றிப்பொருந்தியபூரணமா
யுறைந்தசத்தியஞானமைந்தா
வுகந்தருளுந்துறவிதுவேவுகந்துகாணே. 10

வேறு

தேகமொடுபொறிபுலன்காரணங்களைவேறுவேறதாய்வேறப்
போக்கி, விதேககேவலசுத்தசத்தாய்மிஞ்சினவின்றுறந்ததுற
வோனுருந், தீதிறந்தயத்துவைதவஸ்துவென்றேகமிலனமல



லனதீத, தீர்க்கமுள்ளசுகசொரூபமிவனெனச்செப்பும்வேத
மியாவும், பேதமில்லாவிவ்வுருவையரூபவகண்டமெனப்பெரு
மைமிகுந்தவத்தோற்குமட்டுந்தோணுமிந்தமாரகஸியந்தான
ல்லாற்,போதமிழந்துமயங்குமாயாதுவிதற்குப்பொய்யுறுந்தே
கமேதோணும்மைந்தா, சீதளபோதமொடுபொருந்துமிப்புது
மைமிகும்புருஷார்த்தஞ்சிறந்திடுந்துறவுகாணே. 11

கசமதுவைமசகமுண்ணக்கண்டேனென்றுலறிஞரதைக்
கவலையுறநோக்குவரோகாணீர்பொல்லா
விஷயமுறுந்துவித்தாற்மெய்ஞ்ஞானம்வெளியெனவும்
விளம்பும்புராணமதுமெய்யதாமோவறியீரந்தறியாவீ
ணசம்பயின்றசேயதற்கரியதொருகரும்பினிரதமதையு
மறிந்ததற்குமுட்டுமோவபத்தமென்னேநித்தியமா
நிஜமதுவைநிச்சயிக்குமத்துவைதநூல்குருயுத்திசுவாநுபவ
மல்லால்,மசகதுவிதமறியாமெய்ஞ்ஞானம்மைந்தாமதக்கிரிபோ
ற்றுறந்துவாழ்வாய். 12

என்னுளக்கனியேவிரண்டறும்மருந்தே
வினியசொப்பிரகாசவினிதினுமினிதே
தன்னுமெய்ச்சொரூபசுகமெய்ஞ்ஞானவாழ்வே
சுயம்பெனுந்தனியமலநாயகமே
கண்ணுண்மணியேகருத்தருள்விளைவேதிரி
காலமுங்கடந்தவென்னருட்கோவே
பெண்ணுதற்கரியமுத்தியிருப்பதற்காலயமெது
வெனவெனக்கருள்புரிந்திடல்வேண்டுந்தேவதேவே. 13

அன்னியமொன்றுமிலாதென்தருமைமைந்தனேநீ
யறையுமாவாக்கியவருமையிதென்னேவறையக்கேளு
மெண்ணரியநீயும்நானுமிரண்டறவேகபரிபூரணமா
யிலங்குமிந்தாலயமேபேரின்பமுறுங்கோவில்கண்டாய்

தன்னியனேயதுதானுபசைவுமறச்சாதித்தலரிதரிய
வமலவிதேககைவல்யவசங்கவாழ்வதுவுமாகுமிந்த
வுன்னரியவதீதவிறுமாப்பேவுகந்தருளுமரியமாநித்திய
முத்தியும்நீயதாகும்நீயுமதாயுகந்துகாண்பாய்கண்ணே. 14

நிர்விஷயகுணாதீதநிர்விகற்பமலரகிதநிஷ்கிரியோநித்யமுக்
நிராகாரநிரஞ்சனநிர்த்தொந்தோசமயாதீத [தோ
சுத்தவகண்டபாவாதீதயேகபரிபூரணஜோதிஞானமேயெனை
சுயசொரூபமாக்கியமாவற்புதமீதென்னோவென்னன்பே [ச்
நித்தனேயானுனக்கொருகைமாறுசெய்யவோநீயான்வேறாய்
நீக்கமொன்றுமறியேன்நிறைந்தவென்மதியுறவேயழியா
சத்கதுவாகக்கடவதெனவெனைஸ்தாபித்தளித்தருளியவென்
சத்தியஞானதேசிகசிவமணியேசர்வம்நமோநமோசிவோஹம்

எங்கினுமுளதாயானெனுமறிவதுவாயருள்மெய்ஞ்ஞானந்
தங்குபூரணமாய்த்தனையன்றிவேறிலாததாய்வேறொன்றாய்ச்
சுட்டுமந்த (மங்குங்குறிக்கடங்காததாய்வாழ்த்தவுமோர்வ
சனமிலாததுவாயகலாக் (கங்குல்பகலற்றதுவாய்க்கதிக்குகந்
தமனையுமதாய்விகற்பதுவிதமாயா (பங்கமொன்றுமிலாஸந்த
தமாய்ப்பாவிக்கவொவ்வாததுவாய்நீங்கா (துங்குபக்குவசுயம்
பாகமதாயறியாத்துடிப்பிறந்தசுகாதீதமதாயிருந்தருளுஞ்சுய
சொந்தமதாய்த்துலங்குஞ்சுத்தபரஞ்ஜோதிசொரூபஞானசூ
டாமணியையேகமா (தொந்தமுமற்றவந்தமஹாமாமணியை
ஹாரமதாய்ச்சூட்டித்தன்னையலங்கரித்தசொரூபக்கண்ணே 16

சிவோஹம்.



## பதினாறு சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஜீவபாவத்தையும்நாமரூபத்தையுமகற்றியரிய
சித்தாயறிந்திருந்ததுசமாதி
சிறுபுற்புழுமுதற்றானெனவறிந்துஞான
சின்மயமுற்றிருந்ததுசமாதி
சினமனமறத்துறந்துசித்தஞ்சலியாதசத்தாய்ச்
சிறந்துசுகித்திருந்ததுசமாதி
சீறியெழுந்துகுதிக்கின்றவாணவயானையைப்புருட
சிம்மம்போற்றடுத்திருந்ததுசமாதி
சித்திரம்போலுற்றசைவறவிளங்கியுமமல
சிற்சொரூபமுற்றிருந்ததுசமாதி
சிவஞானபோதத்தைகுருமொழிந்தபடிதெரிசித்தரிய
சிவமாயுறைந்திருந்ததுசமாதி
சித்திநிலையறிந்துமாசொந்தமெய்ஞ்ஞானசுய
சித்திபெற்றிருந்ததுசமாதி
சிவானந்தவத்வைதநிஷ்களங்கசைதன்யமா
சிவநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 1

சத்தொடுமுப்பத்தியாறெனக்கண்டுகளைந்துமிஞ்சுமா
சத்தாய்த்தனித்திருந்ததுசமாதி
சங்கற்பமியாவையுமுதியாக்கெடுத்தந்தமாசுய
சையோகமுற்றிருந்ததுசமாதி
சந்திரனைகஞ்சட்டிகுடநீரெல்லாம்பிரதிபலனச்
சந்திரன்னேகமெனச்சார்ந்திருந்ததுசமாதி
சர்வமுந்தானெனவறிவினிற்பிரியாதபேத
சம்பூரணமுற்றிருந்ததுசமாதி
சாஸ்திரந்தேடியுமறியாமோர்னவிதேகவிமலமாய்ச்
சலனமிறந்திருந்ததுசமாதி
சற்குருதெரிசனம்முத்தியென்றுணர்ந்திந்த

சாதனைவிலகாதுறைந்ததுசமாதி
சத்தியந்தானெனவிரண்டறக்கலந்துருகியந்தமா
சத்தியமுற்றிருந்ததுசமாதி
சர்வமுந்தானெனக்கண்டுபொருந்தினமஹா
சம்பூரணநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 2

சுட்டிடுந்துர்ச்சங்கமுற்றையும்நீற்றிட்டுமரிய
சுத்தசுயமாய்த்தோய்ந்திருந்ததுசமாதி
சுயபோதமெய்ஞ்ஞானியழகடித்தாமரையகலாது
சுட்டறத்தொழுத்கொண்டிருந்ததுசமாதி
சுட்டொழியச்சொல்லியசொல்லைப்பழகியந்த
சுட்டொழிசொல்லுமிறந்திருந்ததுசமாதி
சுயஞ்ஜோதிஞானத்தையிடையறப்பொருந்திட்டந்த
ஜோதியாய்ச்சுகித்திருந்ததுசமாதி
சுகதுக்கமற்றிலங்குந்துரியபூமியைச்சிந்தித்தந்த
சுத்தநிர்குணமுற்றிருந்ததுசமாதி
சுழுத்திமயலஞ்ஞானமோகமதங்களைக்கெடுத்துஞான
சுழுத்தியுற்றுசுகித்திருந்ததுசமாதி
சுயம்பெனுந்தன்பதிசுயவ்ராசுமுடிசூட்டிநித்ய
சுயம்பாய்த்தனித்திருந்ததுசமாதி
சுகாதீதகேவலசுயம்புசைதன்யமா
சொரூபநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 3

முன்னிலையற்றுமோர்பாஸ்பாரகலியமா
மோனமுற்றிருந்ததுசமாதி
முன்னும்பின்னுமிறந்தசாஸ்வதவசங்கமாய்
முடிவுபெற்றிருந்ததுசமாதி
முடிவுபெறமொழியாமல்மொழிந்ததைக்கேட்டந்த
மொழிந்தபடிமுழுதுமானதுசமாதி
முடிசூட்டிவாழும்பிரம்மவரசைப்பிடித்தந்த



முடிந்தகொடிகட்டிருந்ததுசமாதி [பற்றிவிஷய
முனிவோர்கள்பதமொழுகுமெய்ஞ்ஞானக்கனலினைப்
முற்றையும்நீற்றிருந்ததுசமாதி
முடிவுறுந்துரியாதீதத்திற்கரைந்துருகிமா
மூதறிவுற்றிருந்ததுசமாதி
மூடிடுமஞ்சனந்தொட்டிடாவகற்றிவரிய
முத்திகுருவருட்பிரியாதிருந்ததுசமாதி
முடியடிநடுவற்றமோனபாவாதீதமஹாமா
முத்திஞானநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 4

காடுமலையோடாதுமனதெனுங்குரங்கைஞானக்
கயிறிட்டுக்கட்டிவைத்திருந்ததுசமாதி
கையுள்ளங்கனியெனப்பொருளினைத்தனதாய்க்
கண்டுகொண்டிருந்ததுசமாதி
காரணகாரியமிரண்டற்றதீதமாய்க்கலந்துபின்
காண்பானுங்காக்ஷியுமிறந்திருந்ததுசமாதி
காந்தங்கொள்கருந்தாதுபோற்பிரிவறவபேதமாய்க்
களங்கரகிதமுற்றிருந்ததுசமாதி
கருதரியநிராகாரவின்பமயமாகியங்குமாறுக்
களித்துச்சுகித்திருந்ததுசமாதி
கானலினீராமெனவிவ்வுலகபந்தமுற்றுமறக்
காய்ந்தெரித்திருந்ததுசமாதி
காலநேரநிமிடமெனவகுத்தகற்பனைகடந்தக்
காலத்தைக்காலாலுதைத்திருந்ததுசமாதி
கண்டங்கண்டமெலாமகண்டமாய்த்திருத்தியசுய
கதியொழுகும்நிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 5

அமிர்தமெனுமெய்ஞ்ஞானசுகவாரிதனில்வாய்மடுத்
ததைவுண்டதுவானதுசமாதி
அஞ்ஞானப்பேய்யினர்கள்காணாதகாக்ஷியாய்மா
வமலமுற்றிருந்ததுசமாதி

அறிஞர்குலாங்கொண்டாடவரியதொருசாக்ஷியா
யங்குமிங்குமெங்குமானதுசமாதி
ஐயமொன்றின்றிச்சுகாரம்பசுகிர்தமா மஹா
வருட்போதமுற்றிருந்ததுசமாதி
அசைவிறந்தேகமாயோரளவின்றித்ததும்பியு
மபாரமுற்றிருந்ததுசமாதி
அகிலமொடுபரமின்றியதுவிதுவெனலுமின்றி
யதீதமுற்றிருந்ததுசமாதி
அண்டபிண்டசராசரமியாவுந்தானதா
யடக்கிநிறைந்திருந்ததுசமாதி
அநித்தியமொட்டிடாச்சிவராஜயோகியர்க
ளடைந்தொழுகும்நிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 6

வேதத்திற்கதீதமாய்விளங்கியமாரகஸியத்தை
மேவிச்சுகித்திருந்ததுசமாதி
வித்தகக்குரவனருள்மெய்மௌனவாக்கியத்தை
விட்டுவிலகாதுறைந்ததுசமாதி
விதிவிலக்கொவ்வாதவினிமீநுட்பவறிவதாய்
விகாரமற்றிருந்துசமாதி
விஷயமெனும்பேதத்தையணுகிடாத்துறத்தியே
வீடுறவீற்றிருந்ததுசமாதி
வித்தையாலவித்தையைவேரொடுகளைந்தற
வித்தகவித்தாய்விளைவுகொண்டதுசமாதி
விரும்பும்சுகதுக்கங்களணுவேனுமுதியாது
விருப்புவெறுப்பற்றிருந்ததுசமாதி
விரிதலொடுகுவிதலற்றத்துவைதவமலமாய்
விதிவிலக்கற்றிந்ததுசாமாதி
விரோதமொன்றின்றிலங்குந்தத்துவமெய்ஞ்ஞான
விமலமாநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே.



போதவிளைவாகின்றநிராசையெனும்பூமியைப்
பொருந்திவிளைந்திருந்ததுசமாதி
பொய்மீறிவளர்கின்றபாசாடவியதனை
போதநெருப்பிட்டுநீற்றிருந்ததுசமாதி
போக்கொடுவரத்தற்றநிர்ச்சலனவஸ்துவாய்
பொருந்தியசைவிறந்ததுசமாதி
பொறுமையெனும்பூஷணமணிந்தந்தமா
போதம்பதைப்பற்றிருந்ததுசமாதி
பொன்னொன்றுபரணம்பலபலநாமரூபமெனப்
பொருந்துபேதாகிதமுற்றிருந்ததுசமாதி
பொறிபுலன்கரணங்கள்போனவழிசெல்லாது
புரைகெடத்தடுத்திருந்ததுசமாதி
பொங்குஞ்சிதானந்தவெள்ளத்திற்கரைந்துருகிப்
போனவிடந்தெரியாதிருந்ததுசமாதி
பொக்ஷந்திரட்டிட்டருட்பூஷணமணிந்தோர்
பொருந்தியமாநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 8

மருளாளர்கொண்டாடுமிவ்வுலகநடையாவுமே
மயக்கமெனமாற்றிருந்ததுசமாதி
மயலெனும்பேதமாடுந்துவிதவின்பத்தைமுள்ளி
மலர்த்தேனெனத்தடுத்திருந்ததுசமாதி
மதுவுண்டகுரங்கதுபோல்மாயைவசங்கூடியே
மாயாமயமாகாதிருந்ததுசமாதி
மாறிடாசுழல்காற்றுத்துரும்பதுபோலுகலமென
மயக்கவழப்பமுற்றுமற்றிருந்ததுசமாதி
மதமெனுஞ்சங்கையைவேரொடுபிடுங்கியறவத்த
மதாகிதமுற்றிருந்ததுசமாதி
மானபிமானங்களணுவேனுமுதியாவரூப
மாறுவேடம்பூண்டதுசமாதி
மங்களமமங்களமிரண்டும்பொருந்திடாமாயா

மறப்புநனைப்பற்றிருந்தது சமாதி
மதியமிர்தந்திரட்டிட்டுமாறுந்துண்டுகளித்தோர்
மருவுமாநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 9

பாழானவுலகமெனும்பேதமுறும்பாவனையைச்சுத்த
பரப்பிரம்மமதாய்மாற்றிப்பதிந்திருந்தது சமாதி
பஞ்சபூதசையோகமிதுவெனக்கண்டுமாரகஸிய
பரஸ்பரமுற்றிருந்தது சமாதி
பலபலவிதமாய்ப்பாவிக்கும்பாவனைமுற்றையும்வீண்
பாழெனத்துறந்தபேதமுற்றிருந்தது சமாதி
பஞ்சிவிடுநெருப்பெனதூர்ப்பந்தத்தைநீற்றியேமாயா
பந்தசூனியமுற்றிருந்தது சமாதி
பட்டுடன்பொட்டிட்டுநடிக்கும்பெண்வேடபுருடனைப்
பாவனையெனத்தெளிந்திருந்தது சமாதி [போனுலக
பங்கமுறுஞ்ஜடபாவனைமுற்றுமற்றுநிஷ்களங்க
பக்குவம்பெற்றிருந்தது சமாதி
பண்டையுடன்பின்காலம்நிகழெனுந்திரிகாலமாய்ப்பகு
பாவனைமுற்றுமற்றிருந்தது சமாதி [த்தந்தப்
பாவபுண்ணியமிரண்டற்றுநின்றிலங்கும்பரி
பூரண்மாநிஷ்டையெனுஞ்சமாதியிதுவே. 10

சிவோஹம்.

## மாமௌனகீதை.

### சத்தியவணக்கம்.

மெய்ஞ்ஞானரஸந்திரண்டுவிளைந்தெடுத்த
மிளிர்விமலசிந்தாமணியைவத்துவைத
விஞ்ஞானவிசேஷபரிபூரணக்கோலவகோரத்து
விலகாப்பூர்த்திபூட்டியதையறியாத்துவித



அஞ்ஞானசூனியமாயமர்ந்தருளுந்தன்னை
யலங்கரித்தவானந்தாதீதரகஸியமா
சுஞ்ஞானசுயசொரூபமாமௌனகீதைதனைத்
தொழுதொன்றாய்வணங்கிவாழ்வோம் 1

வேறு

பகரும்பொருளேகமாகும்பதியறிந்துந்
தெளிவுபெறத்தனியுமாகுந்தனியதுவே
வருள்ஞானந்தனியாகக்காணலாகு
மழியாச்சைதன்யமதுவேதானாய்த்தோனு
மிதுதானேசொரூபமெனுந்தியானமாகு
மிதுதானேசின்மயமதாகும்மைந்தா
துணிவானமோனமதேசிவானந்தஞ்
சுயமானபொருள்தானேசிவோஹந்தனித்துநில்லே 2

ஞானமில்லாத்துவிதிகுறையெதுநீகேளுஞ்
ஞாலமதிலீசனையும்நீசனென்பன்
பாலறியான்பாலையுமேதண்ணீர்வெள்ளையென்பன்
பாலகனேபாமரனைச்சேரவொண்ணு
ஊனமிலாஞானமதுவெதுநீகேளும்மைந்தா
வுண்மைதனில்நீசனன்றீசனாகுந்
தோனுகின்றபேதமெல்லாம்பூதமைந்தேயாகுஞ்
சொல்லவொண்ணுச்சொரூபமதேயேகம்நில்லே. 3

உண்மையெனும்பொருளறியுமுபாயங்கேளு
முறுதியருள்மெய்ஞ்ஞானிசேவைவேண்டு
மருமைமிகும்பொருளெளிதில்வஸமேயாகு
மதைத்தவிரவேறுவழியிலவேயில்லை
மறுபொருளும்நிகரில்லாமஹத்தின்பார்வை
மஹத்தானமோக்ஷத்திற்கூட்டிச்சேர்க்குஞ்
சுயசுகந்தமஹான்வாக்கியமேசொரூபானந்தஞ்
சுத்தபரிபூரணமாய்ச்சுகித்துவாழ்வாய்மைந்தா. 4

பொருளுறவாகும்விதம்நிர்விகற்பமாகும்
பொருந்துகின்றசாதனையேசொரூபநிஷ்டை
அருவமலமானபெரும்பிரியாநிஷ்டையாகு
மபேதமெனும்பொருளாகியதுவேயாகும்
பிரியாதவருள்தானேஸகஜநிஷ்டையாகுந்
பெற்றவனேபிரம்மமெனமதிக்கலாகுந்
துரியசுயசுத்தமெனுஞ்சுகசொரூபஞ்
சொரூபத்திற்கலந்துருகிவாழ்வாய்மைந்தா. 5

சித்திரம்போலசைவற்றமோனநிஷ்டை
சின்மயமேதானாகித்தனித்துநிற்குஞ்
சித்தமுமேசலியாதுநிற்குஞ்சும்மா
சிவயோகநிஷ்டையிதுசேர்ந்துநில்லுஞ்
சுத்தநிஷ்களங்கமதாயபேதமதாக்குஞ்
சும்மாவிருக்கின்றநிஷ்டையாகுஞ்
சத்தியமேயணுவேனுமையமில்லைமைந்தா
சத்தியமேயாகிவதுவாயமர்ந்துகொள்வாய். 6

பார்க்கின்றபார்வையெல்லாமகமுகமேபாரும்
பரப்பிரம்மந்தானாகிநிறைந்தேநிற்கும்
நீக்கமிலாப்பார்வையினாற்றனைத்தனிக்கும்பாரு
நிச்சயமேதிடமாகித்துணிவாய்நில்லுஞ்
சூக்ஷமமாய்ரகஸியத்திற்கூட்டிச்சேர்க்கும்
சொல்லொண்ணாமௌனத்திற்சொக்கிப்போகும்
வாட்டமிலாபிரம்மநிஷ்டையிதுவேயாகும்மைந்தா
மாற்றறியாப்பொருளாகித்தனித்துவாழ்வாய். 7

நீயதுவாய்வாழும்பிரம்மநிஷ்டைதன்னை
நீதனித்துப்பழகிவரவதுவேயாகுங்
காதலொடும்பிரியாமற்கலந்துநில்லுங்
கைவல்யமாகுமதுசுயமாய்த்தானே



பாராதபார்வைவைத்துப்பாரும்பாரும்
பரமார்த்ததரிசனமேதோணுமற்றேனுஞ்
சாராமற்சாருவதேதசையோகம்மைந்தா
சாதித்துப்பூரணமாயிருந்திடாயே. 8

உள்ளபடியாகும்விதமின்னங்கேளு
முள்ளதுவாயதுதானாய்த்தானதுவாய்
நில்லதுவேநீயாகியேகமாகும்
நிரந்தர்மாம்பொருளாகும்நிஜமேயாகுஞ்
சுதந்திரமாய்வாழுகின்றஞானமாகுஞ்
சுதந்திரமேசுயமானவிஞ்ஞானமாகுந்
தகும்பிரம்மந்தானாகிச்சுகித்துவாழும்மைந்தா
சற்றேனுஞ்சந்தேகம்வைத்திடாதே. 9

ஜாதிகுலம்பிறப்பிறப்புபந்தமுத்தி
சற்றேனுமுதியாதுதுறந்திருந்து
ஏதையுமேநினையாமல்நினைவுந்தள்ளி
யேகாந்தந்தனியாகிவிருந்துகொள்ளு
சூதானமாகவிருதவிர்ந்திடாதே
சுயசாந்தசைதன்யசுயம்பேயாவாய்
சீர்மைஜெயமின்னிஷ்டைசிற்பிரகாசம்மைந்தா
சித்திரம்போலசையாதுமிருந்துவாழ்வாய். 10

இவ்விதமாய்ச்சொல்லியதோர்நிஷ்டைதன்னை
யெப்போதும்பிரியாமலேகமாகிநில்லும்
விதவிதமாய்த்தோனுகின்றதோற்றமெல்லாம்
விஞ்ஞானநெருப்பிட்டுநீற்றுப்போடு
தனியாகிநித்தியமாய்ச்சதானந்தமாகுஞ்
சாஸ்வதப்பொருள்தானாயொளிவுகொஞ்சும்
மலையாதேயென்னாணையுண்மைமைந்தா
மஹத்தானபிரம்மமதாய்வாழ்ந்திருப்பாய். 11

இம்முறைக்கிப்பத்திபமேவியம்பக்கேளு
மில்லாதசிற்றின்பம்முறிவுநீக்குப்
பொல்லாதபொறிபுலனையடக்கியாளும்
பொருந்துகின்றதற்குணமேநசித்துப்போகும்
விள்ளாதபொருள்தானேசேர்ந்துவாழும்
விமலபரவலியுள்ளவதிதீவிரமுண்டாஞ்
சொல்லிறந்தபேரின்பசுகமேயாகிமைந்தா
சுகமாகவெப்போதுஞ்சுகித்துவாழ்வாய் 12

நிர்ணயம்நீயாகும்விதமின்னங்கேளும்
நிராசையென்றவிரதமதைநிறுத்திநில்லு
மசையாதேநிர்விகற்பநிஷ்டைகூடி
மதுதானேபிரியாதவருளுந்தானுமாகு
மலையாதேதுணிந்தபேதமாகிநில்லுநில்லும்
மயக்கமெல்லாந்தீரும்மர்ம்மந்தானும்மருவிநிற்குஞ்
சுயமானசுகந்தானேசுத்தப்பிரம்மம்மைந்தா
சுத்தபரிபூரணமாய்ச்சுகித்துவாழ்வாய். 13

அத்துவைதமெதுவென்றுங்கேளுங்கேளு
மபேதமெனும்பொருளாகிநிறைந்தேநிற்குஞ்
சுத்தநிர்மலமாகிநிர்விகற்பமாகுஞ்
சுயமாகிநிற்கின்றபொருளுமாகும்
நித்தியமேசொரூபமெனநிற்கும்நிற்கும்
நித்தியமேநிஜமானசத்துமாகுமாகுஞ்
சத்தியமேயிதுதானேயத்வைதம்மைந்தா
சத்தாகியெப்போதும்நிறைந்துவாழ்வாய். 14

நிஷ்டைநிலைகூடும்விதம்நிகழ்த்தக்கேளும்
நிஷ்களங்கம்நீயதுவாயேகாந்தந்தனியிருந்து
கஷ்டமதாய்மனதடக்கிவருத்தத்தோடுங்
கைவல்யமாகும்வரையடக்கியாளுந்



துஷ்டமனமாயையெழுந்துதிக்கும்போதுந்
துரியமெனும்மெய்ஞ்ஞானவாளெடுத்துநில்லுஞ்
சிஷ்டமறுஞ்ஜெகந்திரணமென்றறவெறுத்துமைந்தா
சின்மயப்பொருள்தானாய்ச்சிறந்துவாழ்வாய். 15

பொருளதுநீயாகும்வரைகஷ்டத்தோடும்
பொருந்துகின்றதுக்கசுகந்தூரத்தள்ளுந்
தடையெதுவும்நேருமாகிலறிவாய்நில்லுந்
தடையதுவுந்தானாகிக்கரைந்தேபோகு
மடையும்பொருள்மட்டுமிஞ்சித்தனியேநிற்கு
மதுதானேதானானவிஞ்ஞானமாகு
மதுதானேசுதந்தரஞ்சுயசொரூபம்மைந்தா
வதுவாகியெப்போதுமிருந்துவாழ்வாய். 16

ஒருபொருளாயொருநிறைவாயுரைத்தநிஷ்டை
யொருமொழியேமற்றதெல்லாம்நீற்றதாகும்
அருள்மொழியேயகண்டமதாய்நின்றதாகு
மருள்மொழியேமலமகற்றும்பொருளுமாகும்
பெருமொழியேபேசொண்ணாமௌனமாகும்
பெருமொழியேபேரின்பசுகமேயாகுங்
குருமொழியேவிருளொழித்தசொரூபம்மைந்தா
குருமொழியேசதானந்தமிருந்துவாழ்வாய். 17

ஒருமொழியேமுன்னிலையுமற்றதாகு
மொருமொழியேவஸ்துவென்றதுணிவுமாகு
மொருமொழியேதன்பதியாயமர்ந்ததாகு
மொருமொழியேமொழியவொண்ணாமௌனமாகு
மொருமொழியேவேற்றறியர்வருளுமாகு
மொருமொழியேமொழியாமல்மொழிந்ததாகு
மொருமொழியேதானாகும்நிஜசொரூபம்மைந்தா
வொருமொழியாயெப்போதுமிருந்துவாழ்வாய். 18

இந்தமொழிவியம்பவென்றாற்சேளுங்கேளு
மிந்தமொழியதிதீவிரதத்திற்றங்குந்தங்கு
மிந்தமொழியறியவென்றாற்கேளுங்கேளு
மிம்மொழியாயிருக்கின்றகுருவைச்சேரு
மிந்தமொழிதன்பெருமையறியாததாகுமாகு
மிந்தமொழிவெப்போதுமிருந்ததாகுமாகு
மிந்தமொழிமஹாமௌனமாகும்மைந்தா
விம்மௌனந்தானாகிருந்துவாழ்வாய். 19

தானெனும்நினைவுமுத்தலுதிக்காததாகுமாகுந்
தானதுவுமேகமெனமொழியாததாகுமாகுந்
தானுமுறப்பதைப்புமறுமோனமிதாகுமாகுந்
ததாகாரவிதேககைவல்யமிதாகுமாகு
மாதலினுவீதென்றுஞ்சுட்டாததாகுமாகு
மாதலினாற்றானதுவாய்ரேசித்ததாகுமாகு
மாதலினாற்சொல்லிறந்தசுயம்புமைந்தா
யதுவதுவாயிரகசியமாய்நிறைந்துவாழ்வாய். 20

அநீதமுற்றவமலபிரம்மமெய்ஞ்ஞானிதன்னை
யருமையுற்றபிராமணரென்றறையுவேத
முபாதியுற்றோர்ஜாதியினாற்பிராமணத்வ
மொழுகிடவுஞ்சாத்திரமுமொவ்வாதுதள்ளுஞ்
சுயாதிபத்தியசுயஞ்ஜோதிமாஞானிதானுந்
தொந்தமற்றபிராமணத்வமடைந்தோராகுஞ்
சமாதியுற்றசமரசசுபாவவஸ்துவவராகுமைந்தா
சமுசயமற்றுத்தான்றானாய்த்தழுவிவாழ்வாய். 21

அரியபிரம்மவிலக்கணவபாரமாஞானிதன்னை
யடுத்துசதாவகலாதுமமர்ந்துணர்வாகிநில்லு
முரிமைமிகுமெய்ஞ்ஞானமுறுதியுற்றங்கொழுகு
முண்மையெனும்பூரணத்வமொத்ததாயோங்கும்



பிரியாதாருயிருந்தானாய்ப்பிணைத்தொன்றதாக்கும்
பின்னமிலாப்பெருந்தகைமைபெருக்கிட்டருள்தேக்குந்
துரியமெனுமபேதபோதத்திற்றோய்த்துளதாக்குமைந்தா
தூயதுரியாதீதத்தொண்டிச்சுயம்புற்றிருந்துவாழ்வாய். 22

தூய்சுத்தசுதந்திரமாசுஞ்ஞானிசேர்க்கையதுகேளுந்
துய்யமாசொரூபசத்தாய்த்துலக்கித்துறவேற்றியாளுந்
தீயதனுகரணாதியாவுந்தெருளிலொடுங்கியறவதுமாளுந்
திவ்யமர்மஜிதேந்திரியஞ்ஜெயம்பெற்றதுவாழும்
நேயநேர்மைநிர்க்குணத்வம்நீங்காதுற்றிங்கதாளும்
நியதிபூண்டுநிரதிசயம்ரேசித்துநீக்கமற்றதுவாழுஞ்
சாயலெனுமரியநுட்பஞ்சாத்தியம்பெற்றமருமைந்தா
சத்யத்வந்தானதுவாய்த்தனித்துச்சமசரமாய்வாழ்வாய். 23

புண்ணியபாவரகிதபோதஞானிபுணர்வின்புதுமைதானும்
புருஷார்த்தமொக்ஷமதாய்ப்பொருத்திநிற்குமதுகாணுந்
தன்னிலைதந்துதாக்கித்தற்பதம்பூட்டித்தழுவியதுபூணுந்
தன்னினியதன்னருளாய்த்தனையுணர்த்தித்தானதுபேணுஞ்
சங்கிபமொவ்வாத்தாழாமைசமைப்பித்துத்தத்துவமாயூணுஞ்
சம்மியஞானமேற்றிசத்தியததாகாரமதாய்ஸ்தாபித்ததுபூணு
மன்னியமோரணுவுமில்லாவநிர்வசனியமாக்குமதுமைந்தா
வபரோக்ஷாநுபூதிபெற்றமர்ந்திங்ஙனிருந்துநீவாழ்வாய் 24

பான்மைமிகுந்தத்துவமாஞானிபழக்கமீயும்பலனதுகேளும்
பண்பருட்பருவமேற்றிப்பதமாய்ப்பதிவுறவதுபுணர்த்துங்
கேண்மையுடன்கிருபைகூர்ந்துகேவலமாவஸ்துவதாக்குங்
கீழ்மேல்நடுவற்றதுவாய்க்கிளப்பிச்சமமாயதுதானதாக்கும்
மேன்மையெனும்பேரின்பவிளைவேற்றிவீத்தகவித்ததாக்கும்
மெய்யென்னுமத்துவைதமிகுமிருதுவாய்விளக்கிசைக்கு
மாண்மைதருமகண்டமாக்குமதனுரியவியல்புதான்மைந்தா
வம்மயமாயமர்ந்தோங்கிவபேதகோமளமதுதானாய்வாழ்வாய்

புதுமைமிகுசாம்பிராஜ்யபோதமாமுத்தர்பொருத்தமதுதான்
புன்மையுறுஞ்ஜகவாசனைபதனைப்புணராதுறுத்ததமைக்குங்
கதுமைமிகுராகஸியமாய்க்கலப்பித்துக்காலாதீதமதாக்குங்
காமாதிகர்ம்மங்களைந்துகருணைகூர்ந்துகதிமிகுநமணமாக்கும்
முதுமைவிளமையறமுடிவிலதுமுடித்துமுடிவாழ்வதாக்கும்
முன்னிலையறுத்துமுழுதுறுமாசத்தாய்மொழியாதொடுக்கும்
பதுமைபோன்றசைவறவழுத்திப்பக்குவம்பாலிக்குமைந்தா
பதைப்பற்றபாவனாதீதந்தானாய்ப்பதிவுற்றிருந்துநீவாழ்வாய்.

இங்கமயமுறுமாவிங்கிதசுபாவயேகாந்தஞானியிணக்கமதுதா
னின்பாதீதவியல்பதுவாயிணைத்திரண்டறவலங்கரிக்கும்
பங்கமறக்குலைத்துப்பரமார்த்தசுகிகாமாய்ப்பதிவுதாக்கும்
பாசாதிகளைந்துபகாரியபேராண்மைபண்பொடுபதிப்பிக்குஞ்
சங்கமுறும்பாழணுகாத்தனிச்சின்மாத்திரமதுவாக்குஞ்
சவுந்தரசவுபாக்கியசைதன்யஸகஜசதானந்தவுரிமையாக்கு
மங்காதசையாநிவாததீபம்போலிருத்துமகிழுமதுமைந்தா
மர்ம்மமாமௌனமாக்ஷிமைமந்திரவிலக்கணமாய்நீவாழ்வாய்

பேதமுறுமுலகமொருமாயாஜாலமாகும்
பெருமைமிகும்நித்யத்தையொழித்தமித்தை
போதமுறுமெய்யிழந்துபொய்யைக்கொள்ளும்
போதமறச்சாதிக்கும்பொருளறியாவீணதாகுங்
காதலுறுஞ்சஞ்சலமேதாக்குமாயாமயற்
கானலிநீரிதுவெனவேகடந்தார்மேலோர்
தீதுறுமிவ்வுலகபந்தம்போக்கிமைந்தா
திரவல்லபொருளாகிச்சுகித்துவாழ்வாய். 28

அணிமாமுதல்வசித்துவத்தோடஷ்டசித்தியாவு
மழிவிறந்தவல்லசித்திக்கடிமைபூண்டதாகுந்.
துணிவுற்றநித்யத்வமடைந்தசித்தியீதாகுந்
துணிவுமற்றமயக்கமெல்லாமித்தையுமேயாகும்



பிணியுற்றதுவிதமாயாத்தோற்றமெலாம்
பேதமெனக்கண்டறிந்துகளைந்தார்மேலோர்
தனியுற்றபிரம்மசித்தியடைந்தோனாகிமைந்தா
தடையற்றவிறுமாப்பாயிருந்துவாழ்வாய் 29

காமியத்தினஷ்டசித்தியாவும்பொல்லாக்
கர்ம்மமெனக்கனவிலுமேவுறியாதுதள்ளி
நேமமுடனிடைவிடாதுநிர்விகற்போனாகி
நீங்காதிருப்பதுவேநிமலஞானசித்தி
வேறுபடாவஸ்துவதாய்க்கரைந்துருகி.
விலகாதுறைந்ததுவேவிதேகசித்தி
சாதனையாலெப்போதுந்தனித்துமைந்தா
தனியானசத்ததுவாயமர்ந்துவாழ்வாய். 30

போலிசெய்யுஞ்ஜாலமதைக்கண்டுலகமியாவும்
போதமற்றுமதிமயங்கிப்புலம்பும்பாரும்
பேதமுறுஞ்ஜகஜாலமதைக்கண்டுநீயும்
பேதித்துநீவேறுபிரியாதறிவோனாகித்
தீதுபொல்லாவஞ்சனையிதெனவேகண்டுதேறி
தீரவல்லபுருடனாயிருந்தசையானாகி
மோகாதிவினையென்றவனையணுகிடாதுமைந்தா
மொழியாதமௌனமதாயிருந்துவாழ்வாய். 31

நீநிமலபரமெய்ஞ்ஞானிதானானுங்கேளும்
நீங்கியும்வினோதங்காட்டிவேறுவாயானாற்
போதமதுபதைத்ததுவேபொய்யாய்ப்போகும்
போதமதுமாறிடும்பொருளதுவுந்துவிதமாகுங்
காமாதிசூழுஞ்சித்தஞ்சலித்ததுமனமதாகுங்
காணுத்துக்கமெல்லாம்வந்துதானுந்
தோணுதுமவ்வழியிற்றோய்ந்திடாதுமைந்தா
சுயபோதகேவலமாய்மிஞ்சிவாழ்வாய். 32

களங்கரகிதமுற்றமாவாகாயத்தின்கண்ணே
கடினமுறுமோர்வில்லைநாணங்கேற்றி
மடமடெனவளவிறந்தயஸ்திரத்தையேவி
மாறிடாதுசொரிந்தாலுமசங்காததுபோற்
றிரஸ்திரதத்துவமாமஹாஞானிதன்னைத்
தீயவிருளடுத்தங்கேதீண்டுமோசொல்
சுயமருள்சுத்தசுகாதீதசுயம்பாய்நீயும்மைந்தா
துறவுற்றுச்சும்மாவேசுகித்துவாழ்வாய். 33

நிர்க்குணநிர்விஷயநிர்விகாரியாகிநீயும்
நீங்காதுஸகஜநிஷ்டையுற்றோனாகி
கற்போலசையாதுறுதிபெற்றுங்
கலங்காததீரவல்லபாவாதீதமுற்
றெப்போதுமுள்ளபடியிருந்ததொன்றா
யேகபூரிபூரணமாயபாரமுற்றுச்
செப்பவுமேவொவ்வாதகாலாதீதமாகிமைந்தா
சித்திரப்பதுமையொத்தசையாதிருந்துவாழ்வாய். 34

வந்ததையும்போனதையும்வகுத்துநோக்கி
மறைவெனுமிருட்டிரையையறிவாற்றிறந்து
தொந்தமற்றநிஷ்கிரியோனாகமிஞ்சித்
துடருற்றபந்தமெலாஞ்சுட்டுநீற்றிச்
சிந்தையற்றசிசுவொத்துச்சிவராஜயோகஞ்
சிறந்தகைவல்யனாய்நிராகாரமுற்றுச்
சந்ததமுமழியாதசத்யனாகிமைந்தா
சதானந்தசுதந்திரனாயிருந்துவாழ்வாய். 35

கட்டையைப்போற்றேகத்தைநிமிர்த்துக்காட்டி
கண்ணதுவைவிழியாதுமூடிக்கொண்டு
நிஷ்டையெனப்பாவனைகள்காட்டினாக்கால்
நிஷ்டேரபந்தமதுநீக்கிப்போடு



நட்டணைகளொன்றினுமேபற்றானாகி
நாட்டமற்றநிராலம்பநிரந்தரனாய்க்
கட்டெதுவுமில்லாதுகந்துமைந்தா
காட்டொண்ணாரகஸியமாய்க்கலந்துவாழ்வாய். 36

கோசமொடுபொறிபுலன்கரணங்களையுங்
கோதில்லாவஸ்துவதிலமிழ்த்திப்போடு
நாசமில்லாவத்வைதவதீதமாகும்
நாணமற்றவிதேகமதாய்மிஞ்சிப்போகும்
பாசமொன்றுமில்லாதசொரூபநிஷ்டை.
பற்றியபூரணனாய்ச்சுகிக்கலாகும்
நேசமுற்றெப்போதும்பிரிந்திடாதுமைந்தா
நேசித்துநீயதுவாயிருந்துவாழ்வாய். 37

தோற்றமுற்றதுவிதமதுநசிப்பதற்குந்
தொந்தமற்றசுயயேகபாவனையேபண்ணினாக்கால்
நாட்டமுற்றபாவனையுமுதிர்ந்துமங்கே
நனவுமற்றுநழுவாமல்நழுவிப்போகும்
வாட்டமற்றபொருளதுவாய்மிஞ்சிநீயும்
மகிமையுற்றவிறுமாப்பாயிருக்கலாகும்
தேட்டமற்றசிவபோதமாகிநீமைந்தா
தெருளுற்றுத்ததாகாரமதாயிருந்துவாழ்வாய். 38

சாற்றுகின்றவிம்முறையின்படியேநீயுஞ்
சந்தேகமுற்றுமற்றுச்சாதனைசெய்
தோற்றுகின்றதுவிதபீதியனைத்தும்நீங்கிச்
சொரூபமுற்றேகாந்தசுயம்பேயாவாய்
வேற்றுமையுமற்றஜீவன்முக்தனாகியமேல்
விதேகமுத்திவந்தங்கேமேவிதிற்கு
மாற்றுதற்றமாக்ஷிமையுமுற்றோனாகிமைந்தா
மதிப்பற்றவதீதமதாயிருந்துவாழ்வாய். 39

விருப்புற்றுமுமூட்சுகள்யாவருமே
விடாதிதைப்பழகிவரவீடேசேர்க்கு
மறுப்புற்றகளங்கமெலாமாற்றியது
மதிப்பற்றதன்னையுமேவிளக்கிவைக்குங்
கறுப்புற்றபவபந்தமனைத்தையுமேஞானக்
கனல்சுட்டுவெண்ணீறாய்நீற்றிப்போடு
மிருப்புற்றிருந்தபடிவிருந்தோனாகிமைந்தா
வியல்புற்றநித்யமதாயிருந்துவாழ்வாய். 40

கூடுமலையூரென்றவிகற்பமியாவுங்
காணாதுசுட்டொழித்துக்கடந்துநீயுந்
தேடுவதுந்தேட்டமின்றித்தானேதானாய்த்
தெளிவுற்றசின்மயமாயமர்ந்துளதாய்
கேடென்றுமற்றதுரியாதீதமதாய்க்
கெம்பீரமுற்றபிரம்மானந்தங்கொண்டு
வீடுபெற்றபிரம்மவரியான்வரிட்டனாகிமைந்தா
விதேகமுற்றவிமலமதாயிருந்துவாழ்வாய்.. 41

அரியவஸ்துவநுபவத்தையருளின்நோக்கா
லறைந்தபடியணுவேனுமையுமின்றி
உரியவஸ்துதானதாகவுறுதிபெற்று
மொழியாதுபெருவெளியாய்ப்பூண்டதுவாய்
முரிவுமற்றமோனமதாயமர்ந்ததுவாய்
முடிவுபெற்றசாதனையுமுடிந்தோனாகி
குறியுமற்றவானந்தாதீதம்நீயாகிமைந்தா
குறைவற்றவகண்டமதாயிருந்துவாழ்வாய். 42

வேறு

அரியவஸ்துவமலவநுபவம்
பெருகிமுற்றும்பேரின்பந்ததும்பி
வுரியவஸ்துவதாகநிறைந்துள
தழிவுமற்றுமகண்டமதாகவும்



பிரிவுமற்றபேசாப்பெருமையா
யுறுதிவுற்றுயோதாவதீதமாய்
பெரிதுபெற்றபேரானந்தமாடுநஞ்
சொரூபமுற்றஜோதிசொரூபமே. 43

சிவோஹம்.

## சத்தியநிலை.

ஓடியலையவேண்டாம் மௌனமே
வுண்மையறிவதற்கே
தேடியலைந்தாலும் மௌனமே
திருவருள்காணுமோடி. 1

அண்டபிண்டமெல்லாம் மௌனமே
நின்றபொருளதுவே
கண்டுதெளிவாயே மௌனமே
கொண்டார்மோனமடி. 2

ஜீவ்பேதமெல்லாம் மௌனமே
திரிசியமாகுமடி
ஜீவபேதமற்றால் மௌனமே
சின்மயமாகுமடி. 3

தன்னையறியவென்றால் மௌனமே
தந்திரங்கேளடியோ
பின்னமுற்றஸ்தூலம் மௌனமே
பிரித்துமகற்றடியோ. 4

ஸ்தூலமாறுக்குள்ளே மௌனமே
தோணுமாறுறுமடி
ஸ்தூலமாறைநீக்கி மௌனமே
சொரூபமாய்மிஞ்சடியோ. 5

துரியபூமியுற்றால் மௌனமே
துர்ச்சங்கமாளுமடி
துரியங்கடந்தவிடம் மௌனமே
சொல்லாவிதேகமடி. 6

அரிய துரியாதீதம் மௌனமே
யசைவுமிறந்தவிடந்
தெரியவும்வேண்டுமானால் மௌனமே
தேடாதேசும்மாவிரு 7

உரியவஸ்துவடி மௌனமே
வோதாவதீதமடி
பிரிவறநின்றயானால் மௌனமே
பேசாதுவாய்க்குமடி. 8

நாடுமலைகளேது மௌனமே
நன்னிலைகண்டவர்க்கே
காடுமலைபோனால் மௌனமே
கண்டார்நகையாரோ. 9

பாவிக்கதெட்டாதொக்கும் மௌனமே
பாவாதீதமடி
சோதிக்கத்தானடியோ மௌனமே
சுட்டாதேவிட்டுவிடு. 10

பதைப்பைவதைக்கவேண்டும் மௌனமே
பற்றறநிற்கவேண்டும்
விதிக்கும்விதிகளெல்லாம் மௌனமே
வெயில்மஞ்சள்போன்றதடி. 11

விதிவிலக்கற்றதடி மௌனமே
விமலமாய்நின்றவிடம்



பதியுற்றபோதமடி மௌனமே
பரஸ்பரமானதடி. 12

தீர்த்தஸ்தலங்களெல்லாம் மௌனமே
தீராத்துவிதமடி
பார்த்திடலாகாதே மௌனமே
பார்த்தால்விகற்பமடி. 13

விகற்பமற்றவிடம் மௌனமே
நிர்விகற்பமுற்றதடி
உதிப்புமற்றபோதே மௌனமே
வுள்ளதுமாகுமடி. 14

காலாதீதமதை மௌனமே
காண்பதுந்தாமடியோ
வீணாயுன்னாதே மௌனமே
விட்டுநீசும்மாவிரு. 15

விட்டவிடத்தினிலே மௌனமே
வொட்டினால்வஸ்துவடி
யொட்டிவுணருமடி மௌனமே
யுண்மையிதாகுமடி. 16

பூதரூபமெல்லாம் மௌனமே
பொய்யுறும்பேதமடி
பூதபேதமற்றால் மௌனமே
பூரணசைவமடி. 17

சைவமானக்கால் மௌனமே
தத்துவதெய்வமடி
மெய்யிதநம்படியோ மௌனமே
மெய்யாகிவாழுமடி. 18

ஐயமுண்டானால் மௌனமே
யாராய்ந்துசொல்வாயே
தெய்வம்நீயடியோ மௌனமே
சிற்பிரகாசமடி. 19

சித்திபடிப்பாயானால் மௌனமே
மித்தையசத்தியமே
நித்தியசித்திபெற்றால் மௌனமே
நீங்காச்சொரூபமடி. 20

இன்னமுங்கேளடியோ மௌனமே
யேகமாயாவதற்கே
சொன்னபடிகேட்டால் மௌனமே
சூஸ்திரங்காண்பாயடி. 21

சுட்டிக்குறிப்பாயானால் மௌனமே
துவிதமிதாகுமடி
சுட்டுங்குறியுமற்று மௌனமே
சூஸ்திரஞ்சும்மாவிரு. 22

குப்பையிற்படுத்தாலும் மௌனமே
துப்புமறுமோபோடி
செப்பவொண்ணாதபொருள் மௌனமே
குப்பைதருமோவாடி. 23

உள்ளத்துறவுபூண்டால் மௌனமே
வுள்ளதுவாகுமடி
கள்ளத்துறவோர்க்கு மௌனமே
காணாதுதள்ளுமடி. 24

கற்பனைத்தோற்றமெல்லாம் மௌனமே
கண்டார்மயங்குவரோ



அப்பினிற்குமிழிவுரு மௌனமே
யானதுபோன்றதடி 25

என்னாணையேகமடி மௌனமே
யெல்லாமுந்தாமடியோ
தன்னாணையுண்மையடி மௌனமே
சத்தியம்நம்படியோ. 26

சத்தியமாவதற்கே மௌனமே
பத்தியங்கேளடியோ
யுத்தியநுபவமே மௌனமே
யொத்துநீநில்லடியோ. 27

சுருதிகள்கோடிசொல்லும் மௌனமே
சொன்னாலுமாகாதடி
உறுதிநல்லாசான்மொழி மௌனமே
வுன்னையுங்காட்டுமடி. 28

உன்னாலுன்னைக்காணா மௌனமே
உன்னாதிருந்தபடி
தன்னிலைவுன்னாவிடம் மௌனமே
முன்னிலையற்றதடி. 29

தன்னிலைமுன்னிலையும் மௌனமே
தானறயேகமடி
நன்னிலைசொல்லாவிடம் மௌனமே
யன்னிலைதாமடியோ. 30

அரியசிவமதாக மௌனமே
யறிஞனர்ச்சனையே
புரிந்திடல்வேண்டுமடி மௌனமே
போதமாய்மிஞ்சுதற்கே. 31

போதமெய்ஞ்ஞானியருள் மௌனமே
பூரணமாக்குமடி
பேதமுறுந்துவிதம் மௌனமே
பேசாதுமாளுமடி. 32

ஞானமதம்பிடிக்கும் மௌனமே
நாணமறும்விதேகந்
தூங்காத்தூக்கஞ்சொக்கும் மௌனமே
சூஸ்திரம்பாரடியோ. 33.

கொலைகளவுகட்காமம் மௌனமே
கோபம்பொய்யாகாதடி
நிலைபெறவேண்டுமானால் மௌனமே
நீக்கடியிதாறுமாகா. 34

கஞ்சாவபினெட்டி மௌனமே
கருத்தைமயக்குமடி
நஞ்சிதுவுண்ணலாகா மௌனமே
நாடாதுநீக்கடியோ. 35

புலிமானுயிர்வதைத்து மௌனமே
போடுவர்தோலாஸனம்
மலினநூல்வசனம் மௌனமே
மாற்றடிவீதொவ்வா. 36

ஜீவகாருண்யமுற்றால் மௌனமே
தேடுமோதோலடியே
பாமரவேஷமெல்லாம் மௌனமே
பாழெனத்தள்ளடியோ. 37

ஜீவான்மாதெய்வம் மௌனமே
தேகங்கோவிலடி.



கோவிலிடிப்பாயானால் மௌனமே
கொடியதீயதடி 38

பொல்லாவினைநீக்க மௌனமே
புலாலைவெறுத்துவிடு
சொல்வதைநம்படியோ மௌனமே
சொரூபமாயாவதற்கே 39

சொரூபநிஷ்டையிதே மௌனமே
சும்மாவிருந்தவிடம்
அரூபமாகிவிடு மௌனமே
யர்னந்தாதீதமடி. 40

சந்திரசூரியனும் மௌனமே
சாருஞ்சுழிமுனையுந்
தந்திரமந்திரமும் மௌனமே
சாராதுஞானமடி. 41

சுத்தநிராகாரத்தில் மௌனமே
சுழிமுனையேதடியோ
பற்றுமிடமுமுண்டோ மௌனமே
பரமாய்நிறைந்தவர்க்கே. 42

முற்றுந்துறந்தபோது மௌனமே
பற்றும்பொருளேதடி
சற்றுமசையாநில்லும் மௌனமே
ஸகஜநிஷ்டையுற்றே. 43

தேகாதிபொய்யெனவே மௌனமே
செப்புஞ்சுருதியெல்லாம்
மோகாதிவேண்டாமே மௌனமே
முற்றுந்துறந்துவிடு. 44

குழவிதனிற்றுறந்தால் மௌனமே
கொஞ்சுமெய்வஸ்துவடி
விரைந்துதுறந்துநில்லு மௌனமே
விஞ்ஞானமாகுமடி. 45

அநித்யநாமரூபம் மௌனமே
யறிவல்லமித்தையடி
ஜனிக்கும்மாயையடி மௌனமே
சாடாதேதள்ளிவிடு. 45

தோற்றமெல்லாம்நசிக்கும் மௌனமே
தோன்றுவதீதமடி
வேற்றறியாதவஸ்து மௌனமே
மேவிநீநில்லடியோ. 47

மேவியிருப்பாயானால் மௌனமே
வேறொன்றுங்காணாதடி
பூவிலுறைமணம்போல் மௌனமே
பொருந்தியபோதமடி 48

அத்வைதமாகுமடி மௌனமே
யகண்டசுயசொரூபம்
சத்தியமானதடி மௌனமே
சாதித்துச்சாரடியோ. 49

சந்தேகமுற்றாயானால் மௌனமே
வந்திடும்பந்தமடி
சந்தேகமுற்றுமற்று மௌனமே
பந்தமகற்றடியோ. 50

நீங்காநிர்விகற்பம் மௌனமே
நிஷ்டையிதாகுமடி



தூங்காமற்றூங்குமிடம் மௌனமே
சுத்தமாநிஷ்களங்கம் 51

களங்கரகிதமுற்று மௌனமே
காணுந்தனையும்பெற்று
விளங்கும்பெரிதாயுற்று மௌனமே
விதேகமாயாகடியோ. 52

நித்தியநிர்க்குணமே மௌனமே
நிர்மலமானதடி
சத்தியம்நீயடியோ மௌனமே
சமரசவாழ்வீதடி. 53

வாழும்பரம்பொருளாய் மௌனமே
மஹத்துவந்தங்குமடி
பேதமற்றபோதம் மௌனமே
பேசாப்பெருமையடி.

பெருமையுற்றவிடம் மௌனமே
பேருளானதடி
யருமையுற்றநீயும் மௌனமே
யகண்டமாய்வாழுமடி. 55

காசியிற்போயிறந்தால் மௌனமே
கதியென்றுஞ்சொல்வரடி
தோசிகள்சொல்லும்பொய்யை மௌனமே
தேசிகனேதுவனே 56

காசியில்வாழுபவர் மௌனமே
கதியடையாததென்னே
நேசித்துப்போகும்பாலர் மௌனமே
நிற்குங்கதியென்னேடி. 57

போலிஞானமதை மௌனமே
புராணம்புலம்புமடி
காலியெனத்தள்ளடி மௌனமே
காரணமீதல்லடி. 58

மேடமதுகுட்டிக்கி மௌனமே
மேற்றளிர்காட்டுமல்லா
லடியின்கரும்புருஜி மௌனமே
யறிந்தூட்டுமோடி. 59

அரியதேசிகனார் மௌனமே
யளிக்குமுத்திதனை
பெரியநதிதருமோ மௌனமே
பேதமைநம்பாதடி. 60

ஓதிவுணரவேண்டும் மௌனமே
யுண்மைதெரியவென்றால்
தேசிகன்ஞானமொழி மௌனமே
சேர்க்குங்கதியடியோ. 61

ஆறாறுக்கப்புறத்தே மௌனமே
யகண்டமுத்தியடி
சோராதவின்பமடி மௌனமே
சோதித்துச்சேரடியோ. 62

கருதவொண்ணாதவஸ்து மௌனமே
காசிக்குள்மட்டுமென்னே
வெறியர்பிதற்றுமொழி மௌனமே
வீணெனத்தள்ளடியோ. 63

சுட்டுமிறந்திடத்தில் மௌனமே
சொரூபசித்தியடி



விட்டுநீசும்மாவிரு மௌனமே
மெய்யாணைமுத்தியடி. 54

முத்திமோக்ஷம்வேண்டார் மௌனமே
முழுதுமாயானவர்கள்
நித்தியமானதடி மௌனமே
நிச்சயம்நம்படியோ. 65

அரியசொரூபமதை மௌனமே
யாரோபம்பண்ணாதடி
பரிமிதமற்றதுவாய் மௌனமே
பண்புற்றுவாள்வாயடி. 66

பார்ப்பவர்தெய்வமடி மௌனமே
பாராமற்பாருமடி
வார்த்தைவீதல்லவடி மௌனமே
மௌனமிதாகுமடி. 67

புராணம்புலம்புஞ்சாபம் மௌனமே
போதமெய்ஞ்ஞானஞ்சுடும்
பராதீனக்கண்டமதை மௌனமே
பாழதாய்ப்போக்குமடி. 68

அறியமெய்ஞ்ஞானவஸ்து மௌனமே
யளிக்குங்கொடையிதாகும்
மறுத்திடமறையுமுண்டோ மௌனமே
மர்ம்மமிதாகடியோ. 69

துவிதப்புராணமொழியை மௌனமே
சொரூபநெருப்பிலிடு
யவித்தையறவேணுமென்றால் மௌனமே
யத்வைதமாகடியோ. 70

சரிதையாசாரம் மௌனமே
சாலோகமாகுமென்பர்
கிரியைத்தொழிலன்றே மௌனமே
கிடைக்கும்சாமீபமென்பர். 71

யோகந்தந்திரமே மௌனமே
யொடுங்குஞ்சாரூபமென்பர்
மோகமிதனைநீக்கும் மௌனமே
முடியுமெய்ஞ்ஞானமடி. 72

உடையாரடையுஞ்ஞானம் மௌனமே
வோங்குஞ்சாயுஜ்யமென்ப
ரடைந்துகாணுமடி மௌனமே
யதீதமீதாகுமடி. 73

சாயுஜ்யமென்றுரைத்தால் மௌனமே
சங்கையடுக்குமடி
சூக்ஷாதிசூக்ஷமமடி மௌனமே
சொல்லறச்சும்மாவிரு 74

இம்முறைகேட்பாயானால் மௌனமே
யெளிதடிமெய்ஞ்ஞானம்
மெய்மறைகொண்டாடும் மௌனமே
மெய்யாகிவாழுமடி. 75

மனஞ்சினமிறப்பதற்கும் மௌனமே
மந்திரங்கேளடியோ
கணநிமிடமேனும் மௌனமே
கண்டப்படுத்தாதடி. 76

திரிசியநோக்கமெல்லாம் மௌனமே
சிவமதாய்நோக்குமடி



விரிந்தமனங்குவியும் மௌனமே
விஷயமுமாளுமடி. 77

புத்திநிர்விகற்பம் மௌனமே
பூண்டுகொள்ளுமடி
சித்தம்நிரஞ்சனத்தில் மௌனமே
சேர்ந்துநிற்குமடி 78

கருவிகரணமோயும் மௌனமே
காணுஞ்சுயமடியோ
உறுதியிதற்றுநில்லும் மௌனமே
வுபாயமிதாகுமடி. 79

மாயையுன்வசத்தில் மௌனமே
வாய்பொத்திநிற்குமடி
தூயபோதராஜனாய் மௌனமே
சுதந்திரமாகடியோ. 80

வாக்கினைமோனம்பண்ணு. மௌனமே
மற்றதெல்லாமொடுங்கும்
நோக்காமல்நோக்கடியோ மௌனமே
திட்பமிதாகுமடி 81

இன்னமுஞ்சொல்லுவதை மௌனமே
யிம்மென்றிங்குகேட்பாயே
சம்மதமுற்றுநீயும் மௌனமே
சாதனம்பண்ணடியோ. 82

ஏகாந்தஸ்தானமடி மௌனமே
எல்லாமாய்நின்றவிடம்
பேதமிறந்திருந்தும் மௌனமே
பிரம்மசாதனைநீசெய். 83

சாதனைவுற்றுநீயும் மௌனமே
சதாவும்பழகுமடி
போதனைமந்திரமே மௌனமே
பொருளாக்கிவைக்குமடி. 84

கண்டுகண்டுதன்னை மௌனமே
களங்கரகிதமுற்று
நின்றுதெளியடியோ மௌனமே
நிர்த்தொந்தமாகுமடி. 85

துறவிகளுறவிதாகும் மௌனமே
சொல்லுக்குமெட்டாதடி
மறையாமௌனவின்பம் மௌனமே
மகிழ்ந்துநீகொள்ளடியோ. 86

அகத்துறவினரை மௌனமே
யளவிடக்கூடுமோடி
மஹத்துவம்பாரடியோ மௌனமே
மதிப்புக்கடங்காதடி. 87

தலையைவளர்த்தாலாகா மௌனமே
தலைமொட்டையிட்டாலாகா
நிலையையுணர்ந்தபோது மௌனமே
நிற்குந்துறவடியோ. 88

பிச்சையெடுத்தாலாகா மௌனமே
பெரியபிரசங்கமெல்லாம்
அச்சமறவோதினும் மௌனமே
யாகாதுதள்ளுமடி. 89

காவியணிந்தாலாகா மௌனமே
கையிற்கமண்டலுத்தை



பாவித்தேந்தினாலும் மௌனமே
பற்றுமோதன்னையடி. 90

புலியின்றோலதனை மௌனமே
போர்வைபூண்டாலும்
அழியாப்பொருளிதாகா மௌனமே
யறிவையறிந்தாலாமே. 91

வேதப்புராணமோதி மௌனமே
வெண்ணீறணிந்தாலுஞ்
சாதனமீதாகா மௌனமே
சமயவுபாயமடி. 92

தகிக்குமக்கினியில் மௌனமே
தலைகீழாய்நின்றதினால்
பலிக்குமோபிர்ம்மவித்தை மௌனமே
பதைப்புக்கிடமடியோ. 93

அப்பில்மிதந்துகொண்டு மௌனமே
யரியதவமென்னடி
தப்பிதந்தள்ளடியோ மௌனமே
சாதகஜாலமடி. 94

பிருதிவியிற்குகைபண்ணி மௌனமே
பிணம்போற்றேகமதை
யுருட்டிமுடக்கினாலும் மௌனமே
வுதியாதுஞானமடி. 95

பொன்கட்டியுருத்திராக்கம் மௌனமே
பூண்டுபிரம்பேந்தி
கண்பூட்டிக்கதறினாலும் மௌனமே
காணாதுவுண்மையடி. 96

இந்தவிதங்களெல்லாம் மௌனமே
யேகாந்தமல்லவடி
பந்தமயக்கமடி மௌனமே
பாழெனத்தள்ளடியோ. 97

சுருதிகள்பின்சென்று மௌனமே
துறவையறியடியோ
அரியவுத்தியினால் மௌனமே
யநுபவம்பண்ணடியோ. 98

சொரூபமெய்ஞ்ஞானிபாதம் மௌனமே
தொடர்ந்துபிடியுமடி
உறுதிப்படுமடியோ மௌனமே
வுள்ளந்துறக்குமடி. 99

தெள்ளியவுள்ளமது மௌனமே
சிவமதுவாகுமடி
தள்ளாதேகொள்ளுமடி மௌனமே
சதானந்தமாகுமடி. 100

போதவிளக்கெடுத்து மௌனமே
பொய்யிருளைப்பிடிக்க
தேடியலைந்தாலும் மௌனமே
சிக்கங்கிருளேதடி. 101

தேகங்கெடுமென்றும் மௌனமே
தீர்மானங்கொள்ளடியோ
மோகமடியுமடி மௌனமே
முத்தனுமாவாயடி. 102

காந்தமெதிர்க்கண்டால் மௌனமே
கருந்தாதுசெல்லுமடி



காந்தந்தோன்றாவிடத்தில் மௌனமே
கருந்தாதுசெல்லாதடி. 103

பற்றும்பற்றிருந்தால் மௌனமே
பதைப்புக்கிடமடியோ
பற்றுமுற்றுமற்றால் மௌனமே
பதையாச்சொரூபமடி. 104

கடந்தோர்பேருள்ளமது மௌனமே
காணும்பெருமையடி
மடமைமனதினுக்கு மௌனமே
மயக்கமிதாகுமடி. 105

என்னப்பனென்னைக்காண்பான் மௌனமே
யெண்ணாமலெண்ணியடி
தன்னப்பன்றாமடியோ மௌனமே
தானாய்த்தனித்தவிடம். 106

புழுமுதலெல்லாமாய் மௌனமே
பொருந்துமெய்ஞ்ஞானமடி
யழுந்தீபோரடியோ மௌனமே
யமலமாய்மிஞ்சுமடி. 107

ஒப்பனைசொல்லவில்லை மௌனமே
வொன்றைக்குறிக்கவில்லை
கற்பனையல்லவடி மௌனமே
காணாமற்காணுமடி. 108

இருளறவோங்குங்குரு மௌனமே
வியம்புமாவாக்யப்படி
கரைந்துமுருகடியோ மௌனமே
கலந்துசொரூபமதாய். 109

சனகாதிமுனிவரெல்லாம் மௌனமே
சார்ந்தமெய்ஞ்ஞானமடி
கனஞ்சுருதிகளிக்கும் மௌனமே
கருத்தோடிருந்துபாரும். 110

அறிஞரணிந்துகொள்வர் மௌனமே
ஹாரமாக்கித்தன்னை
தெரிந்தபெரியோரெல்லாம் மௌனமே
திருவிளையாடல்கொள்வர். 111

என்வயசுநூற்றைம்பது மௌனமே
யென்றுஸ்தூலந்தட்டுவோன்
சின்னதேகோகிகாணுஞ் மௌனமே
சிவயோகியல்லதள்ளு. 112

பருத்தஸ்தூலமதை மௌனமே
பாவித்துக்காலஞ்சொன்னால்
விருத்திதேகமோகம் மௌனமே
விட்டிடாப்பற்றதடி. 113

அடங்கியெழுந்தேனென்று மௌனமே
யஞ்ஞானதேகிசொல்வன்
ஜடத்தைமூடித்திறந்தால் மௌனமே
சாம்பிராஜ்யஞானமோடி. 114

அத்வைதமெய்ஞ்ஞானம் மௌனமே
யடங்காதுதியாதடி
மித்தைமித்தைதள்ளும் மௌனமே
விழிமயக்கீதடி. 115

காளைக்குறிப்பிட்டு மௌனமே
நானடக்கமென்பன்



போலியெனத்தள்ளடி மௌனமே
பூரணஞானியல்ல. 116

காலநேரமேது மௌனமே
காலாதீதனுக்கு
ஸ்தூலம்நழுவினாக்கால் மௌனமே
தோணுமோமுத்தனுக்கு. 117

சொரூபஞானியொரு மௌனமே
ஸ்தூலத்திலிருப்பவனோ
அரூபசுயம்புகாணும் மௌனமே
யதீதமெய்ஞ்ஞானியடி. 118

ஸ்தூலம்நசிக்குங்காலம் மௌனமே
சொல்லுவாயானாக்கால்
தூயமெய்ஞ்ஞானியல்ல மௌனமே
துவிதவஞ்ஞானியடி. 119

சும்மாவிருப்பதற்கு மௌனமே
சொன்னவுபாயமெல்லாந்
தன்மயமோனமடி மௌனமே
சும்மாயிருந்துவிடு. 120

குறைவற்றசெல்வமென்றே மௌனமே
கோலமாமறைகள்
பறைசாற்றிபோற்றுதடி மௌனமே
பதைப்பற்றுசும்மாவிரு. 121

சும்மாவிருந்தோமென்ற மௌனமே
துடிப்புமறவுந்தள்ளி
யும்மயமாயுருகி மௌனமே
யதுவாயிருந்துவிடு. 122

சும்மாசும்மாவென்றால் மௌனமே
சூஸ்திரங்கண்டுகொள்ளு
தம்மாற்காணுமிடம் மௌனமே
சத்தியஞ்சும்மாவிரு 123

## கிரியைநீற்றல்.

அதீதமௌனமயம் மௌனமே
மறைவதைக்கேளடியோ
விதியாதிவீண்கர்ம்மம் மௌனமே
விரும்பாதேவிட்டுவிடு. 124

முன்னினைக்கப்பின்மறக்கும் மௌனமே
முடிவுகாணாதடி
கல்வினுங்கொடிதுகர்ம்மம் மௌனமே
கடிந்துதுறந்துநில்லு. 125

மூடமஞ்சனத்தோர் மௌனமே
முத்திவழியறியார்
குடித்துமயங்குவர்போல் மௌனமே
கூத்தாடுங்கர்ம்மமடி. 126

மனதுநினைப்பொன்று மௌனமே
வாக்குவேறோதுமடி
நோக்கும்பத்திபோலும் மௌனமே
நொடியில்மாறுமடி. 127

கர்ம்மக்குழிபந்தமே மௌனமே
கடந்தாலறிவுமயந்
துர்மலவிஷயமாளும் மௌனமே
தூயமாய்மேவடியோ. 128



மேவியிருப்பாயானால் மௌனமே
மீளாதுவிஷயமடி
பாவிக்கும்வீண்கர்ம்மம் மௌனமே
பாழாய்முடியுமடி 129

ஜாதித்துவேஷம்பண்ணும் மௌனமே
சங்கைவிதிக்குங்கர்ம்மம்
சோதித்துப்பார்த்தாயானால் மௌனமே
சுடுகாடுபோன்றதடி. 130

பிடித்திதைச்சாதிப்பதும் மௌனமே
பேதமைப்பாசமடி
குடித்தவெறியர்போலும் மௌனமே
கொண்டதையேகொள்வர். 131

வாக்காதிகர்ம்மமென்றே மௌனமே
வகுத்தார்பெரியோரெல்லாம்
நோக்கிவகுத்தகர்ம்மம் மௌனமே
நுகரவுங்கூடுமோடி. 132

சரிதைகிரியையென்பர் மௌனமே
சஞ்சலப்பட்டுழல்வர்
உரியவுண்மைமறையும் மௌனமே
வுத்தியாலுணர்ந்துதள்ளு. 133

சத்தியமுண்மைகேளும் மௌனமே
சங்கற்பங்காணாதடி
பத்தியம்நிர்விகற்பம் மௌனமே
பாக்கியம்நீங்காதடி. 134

விதிவிலக்கற்றதையோ மௌனமே
விதியதிற்கற்பித்தாக்கால்

கதியெங்கேகாணுமடி மௌனமே
கற்பிதம்பொய்யடியோ. 135

துரியாதீதப்பொருளை மௌனமே
தொட்டிடெட்டுமோடி
வுரியவிருகண்குருடன் மௌனமே
வொளிவுகண்டதொக்கும். 136

குவியாவிரியாதென்றால் மௌனமே
குவித்துவிரிக்கலாமோ
மதியற்றவீண்மயக்கு மௌனமே
மாற்றித்தனித்துவிடு. 137

நெல்நட்டுநீரைவிட்டால் மௌனமே
நீண்டுவிளையும்பலன்
கல்நட்டுநீரைவிட்டால் மௌனமே
காய்த்துப்பழுக்குமோடி. 138

சொல்லவும்வெட்கமடி மௌனமே
சொன்னாலுந்துக்கமடி
பொல்லாதுகர்மமடி மௌனமே
சொல்லாதுநீக்கடியோ. 139

மனப்பறைகொண்டடிப்பர் மௌனமே
பிணப்பறையாகமாறும்
நினைப்பறும்பிரம்மஞானம் மௌனமே
கணக்குருங்கர்மங்காணை. 140

தூயவறிவுடையோர் மௌனமே
துருசாய்த்துறந்திருப்பர்.
தீயபாசனர்கள் மௌனமே
தீரங்கர்மங்கொள்வர். 141



பொய்யைமெய்யென்றவர்க்கு மௌனமே
புண்யம்பொய்ப்புராணஞ்சொன்னால்
மெய்யைமெய்யென்றவரை மௌனமே
மெய்வேதங்கொண்டாடாதோடி. 142

ஓட்டைப்பாத்திரத்தில் மௌனமே
வோடும்நீர்நில்லா
காட்டிநீருண்ணுமென்றால் மௌனமே
கண்டார்மயங்குவரோ. 143

ப்ராணமடுக்கும்புண்யம் மௌனமே
போதமெழப்பொய்யடி:
காரணமீதல்லடி மௌனமே
காரியங்கர்மந்தள்ளு. 144

மெய்ஞ்ஞானதூயவர்க்கு மௌனமே
மேவியமுத்தியிதாம்
அஞ்ஞானகர்மியர்க்கும் மௌனமே
யாவதுமெங்கயடியோ. 145

நிஷ்கிரியைவஸ்து மௌனமே
நீங்கிடாவத்துவைதஞ்
சுட்டிடுந்துவிதத்திற்கும் மௌனமே
தொட்டுறவாகுமோடி. 146

குருடன்பிரயாணம் மௌனமே
கோல்முன்னீட்டல்
இருயிடைகுழியிருந்தால் மௌனமே
யென்னடிகோல்பண்ணும். 147

போதமிலான்குருடன் மௌனமே
ப்ராணங்கோலதாகும்

வோதும்பலன்குழியாம் மௌனமே
வுணர்ந்துகடந்துகாணும். 148

என்னாணையுண்மையடி மௌனமே
யேகாந்தமுற்றோர்காணும்
நிர்ணயமுற்றுப்பாரும் மௌனமே
நீயாயிருப்பாயடி. 149

நீயாயிருப்பாயானால் மௌனமே
நினைப்புமறைப்புமறும்
தூயமாமௌனந்தங்கும் மௌனமே
சூட்சிகண்டுணருமடி. 150

கண்டவரைக்கண்டால் மௌனமே
கதியென்னவேதமுறை
கொண்டவர்பின்சென்று மௌனமே
கூடியவ்வழியில். 151

கூடிச்சுகிப்பாயானால் மௌனமே
கூடுஞ்சுதந்திரமே
நாடியறிந்துபாரும் மௌனமே
நானாணையாகுமடி. 152

நானாணைநானாகில் மௌனமே
நாடவேறில்லையடி
தோணுமாரகலியமே மௌனமே
சொல்லறச்சும்மாவிரு. 153

சும்மாவிருப்பாயானால் மௌனமே
சுட்டொழிந்ததடி
நம்முறும்பிரம்மஞானம் மௌனமே
நன்குறவாகுமடி. 154



உடம்பைக்கழுவிக்கொண்டு மௌனமே
ஓதினால்மந்திரத்தை நீ
நடத்தைமனதழுக்கு மௌனமே
நாற்றமீதல்லவோடி. 155

மனதினழுக்கறுத்தால் மௌனமே
மந்திரமீதடியே
மனதினழுக்கிருந்தால் மௌனமே
மந்திரம்பொய்யடியோ. 156

மனதினழுக்கிருந்தால் மௌனமே
மலைவனம்போனாலாகா
மனதினழுக்கிறந்தால் மௌனமே
மலைவனந்தேவையோடி. 157

நிர்குணப்பாத்திரத்தில் மௌனமே
நிராகாரநீர்நிறைப்பி
துர்க்குணமனதழுக்கை மௌனமே
தோய்த்துக்கழுவடியோ. 158

சுத்தநிரஞ்சனமாய் மௌனமே
துலங்குமாசித்தடியோ
சத்ததுணர்ந்துகூடு மௌனமே
சந்ததஞ்சாரும்பத்யம். 159

பத்தியமுரியாநின்றால் மௌனமே
நித்தியமுத்தியடி
சத்தியதாழ்மையாய் மௌனமே
சாருங்காண்பூரணமே. 160

பூரணமாகவுற்றால் மௌனமே
போக்குவரத்துமறும்

நேராய்நிராவரணம் மௌனமே
நிற்குமசையாதடி. 161

அசையாவிடத்திலன்றோ மௌனமே
வமையும்போதமடி
மலையாதேயென்றனை மௌனமே
வஸ்துவாய்த்தனித்துவிடு. 162

தனித்தவிடத்திலன்றோ மௌனமே
தத்துவக்கொண்டாட்டம்
ஜனித்தமாயைமாளும் மௌனமே
சந்ததமாகுமடி. 163

சத்தியமிம்முறையில் மௌனமே
சாதிப்போர்முத்தரடி
நித்தியமென்றனை மௌனமே
நிச்சயங்கூடிடடி. 164

சிவோஹம்.

## மௌனவாக்கியம்.

உரையிறந்தமெய்ஞ்ஞானமதையுரைத்துரைத்துக்காட்டினுங்
கரையிறந்தவிஞ்ஞானமதைக்கண்டுமுண்ணவல்லீரே
வரையுரைத்தகர்மபந்தம்வரையறுக்காமண்டுகம்
பறையறைந்துகூவினும்பதியறிந்துவாழுமோ 1

சதுர்மறைகளோதுவீர்ஜாதிபேதம்பேசுவீர்
சதுர்மறையின்முடிவில்வாழுஞ்சத்ததென்றுமறிகிலீர்
பிதிர்முதலோர்மாண்டுபோனபிரமையதுவுந்தெரிகிலீர்
கதியொளிவருளொழுகும்ருட்கண்ணைக்கண்டுவாழுமே 2



ஆதியந்தமற்றதென்பீரபேதமாகத்தெரிகிலீர்
விதிவிலக்குமில்லையென்பீர்மெய்யதுவாயாகிலீர்
பதியுணர்ந்துவிதிவிலக்கைப்பற்றறுக்கவல்லீரே
கதிபெறவழியறியார்தனைக்காண்பதெங்ஙனெங்ஙனே 3

பூரணமேபூரணமேபொருளுமென்றுஞ்சொல்லுவீர்
பூரணத்தைமறந்துவிட்டுப்புவனமெங்குந்தேடுவீ
ரரவுகண்டதவளையைப்போலவஸ்தைப்பட்டுமாய்கிறீர்
துறவுகொண்டுவீடுசேரத்துறையறியாமாந்தரே 4

விட்டகுறைவேணுமென்றும்வெட்கிவெட்கிப்பேசுவீர்
விட்டகுறையெப்பவரும்விட்டுநின்றவீணரே
கட்டிவைத்தபொருளைவிட்டுக்கப்பலேறித்தேடுவீர்
பட்டிமாட்டிற்பாலிருக்கப்பாலுக்கழும்பாலரே 5

குருகுலத்தில்வாஸம்பண்ணக்குருவளித்தபொருளதாம்
அருள்கொடுத்திருள்கெடுத்தவபேதமானமந்திரம்
பொருள்கொடுக்கும்பொருளதாகும்பூரணமாய்நின்றிடும்
தெருள்கொடுக்குஞ்சிவமளிக்குஞ்சிவயநமசித்தியே 6

ஆதியந்தம்நடுவுமற்றவபேதமானமந்திரம்
பேதமற்றமெய்ஞ்ஞானிசேர்ந்துபேசாநின்றதந்திரம்
வேதமுற்றுந்தேடித்தேடிவெட்கிப்போனமந்திரங்
காதலுற்றுமுள்ளடக்கிக்கலந்துகொண்டுவாழுமே 7

தத்துவத்தைக்கண்டுகண்டுதட்டிவைத்துநிறுத்துமே
வத்துவைதமதுவேயாகிவபேதமுற்றுவாழுமே
சத்துமட்டுமிஞ்சிநின்றுதனித்துநிற்கும்பாருமே
வித்தகத்தையுற்றுற்றுமெய்யுணர்ந்துவாழுமே 8

பொருளைக்கண்டுபொருளுமாகபூரணத்தைச்சேர்கிலீ
ரருளைக்கொண்டிருளைக்கொல்லயருந்தவமுஞ்செய்கிலீர்
தெருளைக்கண்டுமொளிவைக்கூடிச்சின்மயமுமாகிலீ
ரருளைக்கொட்டுங்குருபதத்திலபேதமுற்றுவாழுமே. 9

காடுமலையோடுவீர்கங்கைநதிமூழ்குவீ
ரோடியோடியேங்கியுமோலமிட்டுத்தேடுவீர்
கேடுமுற்றமனதழுக்கைக்கெடுக்கவழிதெரிகிலீர்
வீடுகிட்டவகையறியாவேடம்மாறிவீணரே. 10

வேறு

பொறிபுலனைத்தடுக்கிலீர்பொருந்துந்துக்கங்கெடுக்கிலீ
ரறிந்துந்தன்னைபார்க்கிலீரறிவுயென்றுந்தெரிகிலீ
ருறுதிவுறுமாசானடிவுறுதிபூண்டும்நிற்கிலீர்
கருதிவழியருளடையாக்கர்ம்மியென்னுங்கர்ம்மியே. 11

யானைகெடக்குடத்திற்செங்கையோட்டிநின்றுந்தேடுவீர்
பானைகெடக்குயவன்செய்தபாவமென்றும்பேசுவீர்
பூனைகெடயெலிவயிற்றிற்புகுந்ததென்றுஞ்சொல்லுவீர்
தானேகெடத்தலைவன்மீதுதப்புச்சொல்லும்பாலரே. 12

சுத்தமெனும்நித்தியத்தைச்சுட்டிச்சுட்டித்தேடினும்
நித்தமெனுமத்துவைதம்நீங்கிநீங்கிமாறுமே
சத்தமற்றமோனவஸ்துசத்தத்திற்குங்காணுமோ
முத்தமிட்டுமுத்தருளுமோனமாமெய்ஞ்ஞானமே. 13

சித்திசித்திசித்தியென்றுந்தேடித்தேடிமயங்குவீர்
சுத்திசித்தம்பண்ணறியாத்தோசிதோசிதோசிகாள்
பத்தியெனுஞ்சித்தியற்றீர்பஞ்சபாதகசித்தியுமுற்றீர்
முத்தியெனும்மோனசித்திமுழுதுமுற்றுவாழுமே. 14



ஞானமென்றபூரணத்தைநாமறிந்துஞ்சித்திபாலுற்
றேனையுண்டவண்டெனவேசித்திசித்திசித்தியாமே [மே
தோணுகின்றதோற்றமியாவுஞ்சொரூபத்திற்கரைந்துபோ
தானதுவுமேகமானசம்பூரணமாசித்திசித்தியே. 15

துன்பமதையின்பமாகக்கொண்டுநின்றவானரம்
இன்பமதையென்றுகண்டுமின்பமுற்றுவாழுமோ
அன்புகொண்டுமன்புகந்தாலன்புமன்புஞ்சேருமே
கண்புதைந்துபோகுமுந்திகதியைக்கண்டுவாழுமே. 16

வேறு

உலகமுதற்பொருளதுவாயோங்கிநின்றமோனமே
அளவுபடாநின்றிலங்குமபேதமென்னுமெய்ஞ்ஞானமே
களவுகொண்டவஞ்ஞானமதைகளவறுத்துப்பாருமே
நிலவுகண்டகண்ணதுபோல்நீயறிந்துவாழுமே. 17

உறைந்ததயிர்பாலுமாகாவோரெழுத்திரண்டுமாகாக்
கரைந்தமோருந்தயிருமாகாகாய்ந்தநெய்யும்வெண்ணையாகா
நிறைந்தஞானந்துவிதமாகாநிர்மலமும்மலமதாகா
விரைந்துகண்டுபொருளதாகிவீடடைந்துவாழுமே. 18

வேறு

மும்மலத்தையொறுத்துமுக்குணத்தைப்போக்கினால்
நிர்மலமுங்கூடிவாழும்நிர்க்குணமுந்தேங்கிடும்
புல்மனமுமுருக்கியோடும்போதமுற்றபொருளிங்ஙன்
சொல்லிறந்ததாகிநின்றுஜொலித்திலங்குங்காணுமே. 19

துரியமெனும்பூமிகேளுந்துவிதமற்றுப்போனதாகு
மறிந்தறிவாயமர்ந்தவிடமபேதமுற்றுவாழுமே
தெரிந்தறிந்தாலேகமாகுஞ்சின்மயமேதானுமாகு
மரிதரிதுதுரியபூமியருள்ஞானமுற்றுக்காணுமே 20

துரியாதீதமெனுங்தூயமதிற்றுரியமெனும்நிலையுமில்லை
யரியபெருந்துரியாதீதமதிலாழ்ந்ததுவேமோனமே
பெரியபெருமோனமதைப்பேசவென்றாற்றானுமே
பிரியமதாயதிலுருகிப்பேசாவிடம்விதேகமே. 21

காயசித்திகாயசித்தியென்றுமென்றுங்கதறுவீர்
காயமதைக்காத்துக்காத்துக்கனலைமூட்டிநீற்றுவீ
ரூனுடம்பும்பந்தமென்றுமுற்றுணர்ந்துமறிகிலீர்
ஞானமில்லாவூமரேமெய்ஞ்ஞானவின்பமறியீரே. 22

கருவிகரணாதியாவுங்கட்டிவைத்துக்கொல்லுமே
நிர்விகற்பமுற்றுமொன்றாய்நிறைந்துவிளையாடுமே
யுருவிறந்தசொரூபமாகிவோங்காரத்திற்கூடுமே
கருவிருந்தவிடந்தெரிந்துங்கலந்துற்றும்வாழுமே. 23

மனமதுவேவிரியுமானால்மாயையென்னுந்துவிதமாகும்
மனமதுவேகுவியுமானால்மாமௌனமெனுமதீதமாகுங்
கணம்பிரியாவறிவாய்நின்றாற்காரணத்திற்பொருந்துமே
இனமறியாமனதிறந்தாலேகமேகம்பிரம்மயோகமே. 24

வேறு

யோகமதிற்சிறந்தசிவயோகமதேமெய்யதாம்
யேகமதாயாக்கியாளுமேகமானயோகமே
தேகமதைநீக்கியருள்விதேகமதிற்சேர்க்குமே
வேகம்வேகமாகியேவிரைவில்வீடுகூடுமே. 25

அஷ்டாங்கயோகமுற்றுமடங்கியாளும்விதேகமே
நிஷ்டாநுபூதிசொஸ்தநிஷ்களங்கசுயயோகமே
அஷ்டசித்திவிதேகமுத்தியதிலடங்கும்பாகமே
கஷ்டமில்லையுண்மையோகங்கைவல்யமாகுமாகுமே. 26



ஞானமெனும்பூரணத்தைநாடிநாடிப்பாருமே
நாமரூபமிரண்டும்போனால்ஞானமுள்ளிற்பேசுமே
தேனையுண்டபாகதுபோல்ஞானமுண்டங்காளுமே
யானைகண்டசிங்கமாகியானந்தித்துவாழுமே. 27

முன்னிலையைச்சுட்டொழித்துமுழுதுணர்ந்தஞானமே
தன்னிலையும்முன்னிலையுந்தானறவுங்காணுமே
யன்னிலையேபொருளுமதாயசைவிறந்தமோனமே
நன்னிலையைநாடிநாடிநாமதுவாய்வாழுமே. 28

திருவுளத்திற்றிருவுளத்தைச்சேர்த்துநிற்குஞ்சின்மயம்
அருள்பழுத்தமெய்ஞ்ஞானியுண்ணுமமிர்தவருட்பாகமே
மருள்கெடுத்தயன்பர்கண்டுவாழ்வுமுற்றபோதமே
யிருள்கெடுத்தேகமுற்றுமெங்குந்தானாய்வாழுமே. 29

வாக்குமனங்காணாதென்றும்வரைந்ததங்கேவேதமே
வாக்குமனந்தானிறந்தால்வாய்க்குமென்றருத்தமே
நோக்குந்தன்னைநோக்கத்தானும்நோக்கரியநோக்கமே
நீக்கமில்லாச்சொரூபமாகிநீயதுவாய்வாழுமே. 30

கோவிற்பள்ளிசற்சுமேகங்குளிர்ந்தசுத்தவுள்ளமே
ஆவிமர்ம்மபூரணத்வமசையாதமர்ந்தசுவாமிதூயமே
மேவிப்புணர்ந்தநிர்விகற்பம்மெய்ப்பூசையங்கதாகுமே
கூவிப்பாவித்தோலமிட்டாற்கூடுமோதான்பாலரே. 31

தாக்குமஹாநிஷ்கர்ம்மந்தன்னையுணர்ந்தாற்றங்குமே
போக்குவரத்தற்றுமென்றாய்ப்பொருந்திநின்றுதுங்குமே
சூக்குமமாய்த்தொடுத்துச்சேர்ந்தாற்சுட்டறதுதேங்குமே
நீக்குற்றறியாவோலமிட்டால்நிற்குமோபார்பாலரே. 32

ஜாக்கிரத்தையுண்மையாகச்சாதித்ததேதூக்கமாந்
தூக்கமதிற்றோணுகின்றதோற்றமேசொப்பனஞ்
சொப்பனத்திற்றோய்ந்துறுஞ்சுழுத்தியிருளஞ்ஞானமே
துரியவிழிப்பறிவதனிலிம்மூன்றுமில்லையில்லையே 33

அறிவுகெட்டகோடாரத்தையாரமிட்டுப்போற்றினு
மறிவுகெட்டகோடாரமணிந்துகொண்டுவாழுமோ
பெரிதையுற்றபிரம்மஞானம்பேதமைக்குமோதினு
மரிதரியவானந்தத்திலழுந்திருந்தும்வாழ்வரோ. 34

சுத்தநிர்மலத்திடத்திற்சோகமோகம்நாடுமோ
சுத்தநிர்மலத்திடத்திற்சுட்டுதலுந்தோணுமோ
சுத்தநிர்மலத்திடத்திற்றுர்மலமுங்கூடுமோ
சுத்தநிர்மலமதாகித்துவிதமற்றுவாழுமே. 35

மங்கைமங்கையென்றுநீர்சங்கையுற்றபாலரே
மங்கையெங்குதித்தனள்மணாளனெங்குஜனித்தனன்
மங்கைபூதம்நாலதோமணாளன்பூதமேழதோ
யெங்கேநாமரூபமேயிருந்ததேசொரூபமே. 36

பூதமைந்தும்ஸ்தூல்மாறும்பொருந்திவந்தரூபமே
பொறிபுலன்கரணமெல்லாங்கூடிவாழும்பாருமே
தீதரியாவான்மாயேகமங்குமிங்குமாகுமே
தெரிந்தறிந்தறிவதாகிஜீவபேதந்தீருமே. 37

ஜாதிஜாதியென்றதேதனையறியாவுபாதியே
ஜாதிபேதமேதுகாண்சர்வம்வஸ்துவாகுமே
ஜோதிமதியபாரமேசுயம்புநித்யவிதேகமே
வாதியாதேஜாதிமித்தைவஸ்துவிண்மையுண்மையே. 38



அறிவையுற்றபோதல்லவோவத்துவைதமாகுவீ
ரறியையுற்றபோதல்லவோவகண்டமுற்றுவாழ்குவீ
ரறிவுகெட்டபோதல்லோதுவிதமுற்றுமாழ்குவீ
ரறிவாயுற்றுநீருமேவதீதமுற்றுவாழுமே. 39

தத்துவமுணர்ந்தஞானிசத்தியப்பிராமணன்
றத்துவமுணர்ந்தஞானிசாஸ்வதமாநித்தியன்
றத்துவமுணர்ந்தஞானிசர்வமுமாயானவன்
றத்துவமுமானஞானியுண்மையுண்மைவஸ்துவே. 40

தத்துவமுணர்ந்தஞானிசைதன்யப்பிராமணன்
றத்துவமுணர்ந்தஞானிசர்வபரிபூரணன்
றத்துவமுணர்ந்தஞானிசங்கமற்றசின்மயன்
றத்துவமெய்ஞ்ஞானிசத்துண்மையுண்மைவஸ்துவே. 41

தத்துவமுணர்ந்தஞானிதத்துவப்பிராமணன்
றத்துவமுணர்ந்தஞானிசதானந்தநிர்ச்சலன்
றத்துவமுணர்ந்தஞானிசங்கையற்றநிர்மலன்
றத்துவமெய்ஞ்ஞானிநித்யமுண்மையுண்மைவஸ்துவே. 42

தத்துவமுணர்ந்தஞானிஸகஜநிஷ்டையுற்றவன்
றத்துவமுணர்ந்தஞானிதாணையுற்றசையோகன்
றத்துவமுணர்ந்தஞானிசச்சிதானந்தமானவன்
றத்துவமெய்ஞ்ஞானிதனியுண்மையுண்மைவஸ்துவே. 43

பூதபேதமுற்றபோதுபோதமற்றுப்பதைக்குமே
பூதபேதமற்றபோதுபோதமுற்றுப்பொருந்துமே
பூதபேதமுற்றபோதுபுலியமொன்றும்நாமமே
பூதபேதமற்றஞானிபிராமணரென்றாகுமே. 44

பூதபேதமுற்றபோதுவிகாரமுற்றுத்தோணுமே
பூதபேதமற்றபோதுவிகாரமற்றுக்காணுமே
பூதபேதமுற்றபோதுபொருந்தாத்துக்கம்பொருந்துமே
பூதபேதமற்றஞானிபிராமணருமாகுமே. 45

பூதபேதமுற்றபோதுநாமரூபமுதிக்குமே
பூதபேதமற்றபோதுசொரூபமாகலயிக்குமே
பூதபேதமுற்றபோதவித்தையுற்றுக்காணுமே
பூதபேதமற்றஞானிபிராமணருமாகுமே. 46

பூதபேதமுற்றபோதுவிகற்பமுற்றுப்பிரியுமே
பூதபேதமற்றபோதுவிகற்பமற்றுப்பொருந்துமே
பூதபேதமுற்றபோதுமனம்விரிந்துமதாடுமே
பூதபேதமற்றஞானிபிராமணருமாகுமே. 47

## அஞ்ஞான குரு.

பிறவியினிலந்தகன்பிரகாசங்கண்டுமொழிவனோ
பிறவியினிலந்தகன்கைப்பரிசமின்றிக்காண்பனோ
பிறவியினிலந்தகன்பிறப்பிறப்பறுப்பனோ
பிறவியினிலந்தகன்குரவனென்றுநாமமோ 48

மேடமதுகுட்டிக்கிமேற்கொழுந்தையன்றிக்காட்டுமோ
வேடமன்றிக்கிரியையில்விஷயம்நீக்கவறிவரோ.
தோடமுற்றதுவிதத்தையுந்தொட்டுத்தொட்டுக்காட்டுவர்
வீடுபெற்றவழியறியாவீணரென்னும்வியர்த்தரே. 49

தாவடங்கள்பூண்டுநீர்தடாகந்தோறுமுங்குவீர்
தடாகம்நீருபோன்றுநீர்தனையறிந்துதெளிகிலீர்
தடாகம்வாழுமண்டுகந்தனையறிந்துகொண்டதோ
தடாகம்நீருந்தம்முளேதெரிந்தறிந்துமுங்குமே. 50



சந்திசந்தியென்றுநீர்தண்ணீரள்ளித்தூற்றுவீர்
சந்தியென்றதேதுகேள்தனைவுணர்ந்ததாகுமே
புந்திபுலன்யாவுமற்றபொருளுறவேசந்தியே
பந்திபோஜனத்தையெண்ணிசந்தியென்னுசந்தியே. 51

சந்தியந்திமத்தியென்றுகாலமூன்றுபண்ணுவீர்
சந்தியந்தியற்றவஸ்துகாலமூன்றிற்காணுமோ
யந்தியாதிநடுவுமற்றயத்துவைதநித்யமே
சந்தியென்றகற்பனையிற்காணுமோசொல்பாலரே. 52

கையில்மாலையேந்துவீர்கண்ணைச்சற்றுமூடுவீர்
கையில்மாலைகாணுதேகருத்துப்புறம்போனதே
ஐயோபாவங்கண்ணைமூடியறிந்ததென்னவறைகுவீர்
துய்யகுருவுத்தியல்லாற்கையிற்மணிகாணுதோ. 53

குருவென்றுங்கோலம்பூண்டோர்குறிவிலக்கவறிகிலீர்
குருவென்றுங்கோலம்பூண்டோரறிவதாகிவாழ்கிலீர்
குருவென்றுங்கோலம்பூண்டோர்தூயவன்செய்பொம்மைகாள்
குருவென்றால்துவிதமற்றகுருபரன்காண்குரவனே. 54

வேதமோதுங்குருக்களேவேதாதீதமுற்றீரோ
வேதமோதுங்குருக்களேவிஷயவிச்சையற்றீரோ
வேதமோதுங்குருக்களேவிமலமாகப்பெற்றீரோ
வேதமோதுங்குருக்களேபேதமட்டுங்கற்றீரோ. 55

வேதமோதுங்குருக்களேவேதாதீதம்விதேகமே
வேதமோதுங்குருக்களேவேதாதீதம்விமலமே
வேதமோதுங்குருக்களேவேதாதீதமெய்ஞ்ஞானமே
வேதமோதுங்குருக்களேவிகற்பமற்றுவாழுமே. 56

வேதாதீதமுற்றவஸ்துவிகற்பமற்றதாகுமே
வேதாதீதமுற்றவஸ்துவிதிவிலக்குமற்றதாகுமே
வேதாதீதமுற்றவஸ்துவிள்ளவொண்ணாமௌனமே
வேதமோதுங்குருக்களேயபேதமுற்றுவாழுமே. 57

நாமரூபமற்றீரோஞானமதங்கொண்டீரோ
நாமரூபமற்றவஸ்துநாமதுவாய்க்கண்டீரோ
நாமரூபமுற்றுநீர்ஞானமற்றுப்போகிறீர்
நாமரூபமற்றுநீர்ஞானமுற்றுவாழுமே. 58

அத்துவைதபொருளதுமனேகனேகமேகமே
அத்துவைதபொருளதுமகண்டமுற்றவரூபமே
அத்துவைதபொருளதுமசங்கமுற்றதாகுமே
அத்துவைதபொருளதாயதீதமுற்றுவாழுமே. 59

## மெய்ஞ்ஞான குரு.

காட்டியானைகாட்டியல்லோகாட்டியானைபூட்டுவன்
கூட்டான்மாகாட்டியல்லோவகண்டான்மாவாக்குவன்
வீட்டினில்விளக்கைவைத்துவெளிச்சந்தேடும்வீணரே
கூட்டினிலிருக்கும்வஸ்துக்குரவன்காட்டக்காணுமே. 60

முன்னிலையுமற்றகுருதன்னிலையறிந்தவன்
முன்னிலையுமற்றகுருதன்பதியமர்ந்தவன்
முன்னிலையுமற்றகுருமுழுதுணர்ந்தபூரணன்
முன்னிலையுமற்றகுருமுத்திபெற்றகுருபரன். 61

அடைந்தவர்க்கருளளிப்பனத்துவைதமாக்குவ
னடைந்தவர்க்கருள்கொளிப்பனத்துவைதநித்திய
னடைந்தவர்க்கருள்ஜொலிப்பனதீதமுடிசூட்டுவ
னடைந்தவர்க்கருள்கொடுப்பனகண்டமுற்றகுருபரன். 62



அடைந்தவரைத்தன்மயமாயாக்கிவானந்திப்பவ
னடைந்தவரைத்தன்மயமாயாக்கிவைத்துக்களிப்பவ
னடைந்தவரைத்தன்மயமாயாக்கிவிளையாடுவ
னடைந்தவரைத்தன்மயமாயாக்குவனேகுருபரன். 63

அடைந்தவற்கருள்சொரியவருவுருவலானவ
னடைந்தவற்கருள்பொழியவத்துவைதமானவ
னடைந்தவற்கருள்கொடுக்கவசங்கமுற்றுவந்தவ
னடைந்தவரைச்சொரூபமதாயாக்குவனேகுருபரன். 64

அடைந்தவரைநிர்விகற்பமாக்கித்தானாயானவ
னடைந்தவரைநிர்விஷயமாக்கித்தானாய்நிற்பவ
னடைந்தவரைநிற்தொந்தமதாயாக்கிவதுவானவ
னடைந்தவரைநிற்குணமாயாக்குவனேகுருபரன். 65

நாமபரூமற்றபிரம்மஞானமதையூட்டுவ
னாபரூபமற்றபிரம்மரகஸியத்திற்கூட்டுவ
னாமரூபமற்றபிரம்மானந்தத்தீதச்சூட்டுவ
னாமரூபமற்றவஸ்துவாக்குவனேகுருபரன் 66

ஆசிரியன்கருணையதுவதீதமுறவுசேர்க்குமே
ஆசிரியன்கருணையதுவருள்பொருந்திநிற்குமே
ஆசிரியன்கருணையதுவகம்பிரம்மமதாயாக்குமே
ஆசிரியன்கருணையினாலகம்பிரம்மமுற்றுவாழுமே. 67

ஆசிரியன்கருணையினாலானந்தமுதிக்குமே
ஆசிரியன்கருணையினாலானந்தாதீதமாக்குமே
ஆசிரியன்கருணையினாலபேதமுறும்போதமே
ஆசிரியன்கருணையகம்போதமாகுமுண்மையே. 68

ஆசிரியன் கருணைவெள்ளமமலமாக்குந்தீர்த்தமே
ஆசிரியன் கருணைமொழியதீதமுறுஞ்சுத்தமே
ஆசிரியன் கருணைமொழியத்துவைதவமிர்தமே
ஆசிரியன் திருவடியையர்ச்சித்திடின்முத்தியே. 69

ஆசிரியன் கருணைநோக்கமசங்கமுறும்நோக்கமே
ஆசிரியன் கருணைநோக்கமரியவஸ்துவாக்குமே
ஆசிரியன் கருணைநோக்கமழிவிறந்தவிதேகமே
ஆசிரியன்பாதபூஜையரியபெரும்முத்தியே. 70

ஆசிரியனருளையன்றியடையவழிகாணுமோ
ஆசிரியனருளையன்றிபரியவஸ்துவாய்க்குமோ
ஆசிரியனருளையன்றியடையுமிடம்வேறதோ
ஆசிரியன் திருவடியைப்பிரிந்திடாதுமுத்தியே. 71

போதந்திரண்டிடிற்பொருள்தெருட்ஞானமே
போதந்திரண்டிற்பொருள்தெருட்பூரணம்
போதந்திரண்டிற்பொருளருட்போதமாம்
போதந்திரட்டியேபொருளதுவாகுமே 72

போதம்பொருந்திடிற்போதமெய்ஞ்ஞானமே
போதம்பொருந்திடிற்போதமெய்யறிவதே
போதம்பொருந்திடிற்பொய்யிருள்மாண்டதே
போதமதுமெய்யதாகப்பொருந்தியேவாழுமே. 73

போதம்பதையாப்பொருந்திடின்நேயதாம்
போதம்பதையாப்பொருந்திடின்மெய்யதாம்
போதம்பதையாப்பொருந்திடின்நித்தியம்
போதம்பதைப்பறப்பொருந்தியேநோயுமே. 74



போதம்பதைக்கிற்பொய்யிருளதுவதுவதாம்
போதம்பதைக்கிற்பொய்மலமதுவதுவதாம்
போதம்பதைக்கிற்பொறிபுலன்விரிந்ததாம்
போதம்பதைப்பறப்பொருளதுவாகுமே. 75

போதம்பதைக்கிற்பொய்யுறுமவித்தையாம்
போதம்பதைக்கிற்பொய்யுருந்துவிதமாம்
போதம்பதைக்கிற்பொய்யுறுங்கர்ம்மமாம்
போதம்பதைப்பறப்பொருளுறுமாவித்தையே. 76

போதம்பதைக்கிற்பொருந்தொண்ணுத்துக்கமாம்
போதம்பதைக்கிற்பொருந்தொண்ணுவிகற்பமாம்
போதம்பதைக்கிற்பொருந்தொண்ணுவிஷயமாம்
போதம்பதைப்பறப்பொருந்திடும்பொருளதாய். 77

போதம்பதைக்கிற்பொய்யுறும்மனமதாம்
போதம்பதைக்கிற்பொய்யுறுஞ்சினமதாம்
போதம்பதைக்கிற்பொய்யுறும்டம்பமாம்
போதம்பதைப்பறப்பூரணவஸ்துவே. 78

போதஞ்சிறந்திடிற்பொருளருள்விதேகமாம்
போதஞ்சிறந்திடிற்பொருளுறவுபூண்டதாம்
போதஞ்சிறந்திடிற்பொருளினும்பொருளதாம்
போதஞ்சிறந்திடிற்பொருளெனும்வஸ்துவே. 79

போதஞ்சிறந்திடிற்பொருந்திடுஞ்சத்ததாய்
போதஞ்சிறந்திடிற்பொருந்திடுஞ்சுத்தமாய்
போதஞ்சிறந்திடிற்பொருந்திடுஞ்சுயமதாய்
போதஞ்சிறந்திடிற்பொருந்திடுஞ்சொரூபமே. 80

போதஞ்சிறந்திடிற்பொருந்திடும்விமலமாய்
போதஞ்சிறந்திடிற்பொருந்திடுமமலமாய்
போதஞ்சிறந்திடிற்பொருந்திடுமிமலமாய்
போதநிர்மலமதாய்ப்பொருந்தியேவாழுமே. 81

போதஞ்சிறந்திடிற்றிரிகுணரகிதமே
போதஞ்சிறந்திடிற்றிரிகாலாதீதமே
போதஞ்சிறந்திடிற்றிரிமலரகிதமே
போதமெய்வஸ்துவாய்ப்பொருந்தியேவாழுமே 82

போதம்பொருந்திடிற்பொய்த்தோற்றமித்தையாகுமே
போதம்பொருந்திடிற்போக்குவரத்தற்றதாகுமே
போதம்பொருந்திடிற்பொருந்தும்பாவாதீதமாகுமே
போதம்பொருந்தியேபொருளதுவாய்வாழுமே. 83

போதம்பொருந்திடிற்புத்திநிர்விகற்பமே
போதம்பொருந்திடிற்பொருந்துந்திருவுள்ளமே
போதம்பொருந்திடிற்பொருந்துஞ்சின்மயமதே
போதம்பொருந்தியேபோதவஸ்துவாகுமே. 84

போதம்பொருந்திடிற்பொருந்தும்வேதாதீதமே
போதம்பொருந்திடிற்பொருந்துஞ்சுகாதீதமே
போதம்பொருந்திடிற்பொருந்துந்துரியாதீதமே
போதம்பொருந்தியேபொருட்போதமதாய்வாழுமே. 85

வேறு

பூதமைந்திற்கூடிவந்தஸ்தூலமாறுமாகுமே
போதமென்றராஜனங்கேவீற்றிருப்பான்பாருமே
பூதமாதிகாரணமெல்லாம்வேலைக்காரனாகுமே
போதமென்றயேகராஜனுமதுவாயாகுமே. 86



கருவிகாரணாதியாவுங்கூடிநின்றரூபமே
காணென்னுமோனராஜன்தங்கிருப்பான்பாருமே
துருசுபூண்டபேதமெல்லாம்போதராஜன்ஜாலமே
தொட்டவரைவிட்டகலானெங்குமானபோதமே. 87

அண்டபிண்டசராசரமும்போதங்கொண்டகோலமே
அண்டபிண்டசராசரமும்போதன்வாழும்மாடமே
அண்டபிண்டசராசரமும்போதன்போடும்வேடமே
அண்டபிண்டசராசரமுமறிவாய்மிஞ்சிவாழுமே. 88

கற்பிதமாந்தோற்றமெல்லாங்கன்னிகையின்மைந்தனே
கற்பிதமாந்தோற்றமெல்லாங்கன்றுபெறுவாவின்பால்
கற்பிதமாந்தோற்றமெல்லாங்காளைமாடுகருப்பம்போற்
கற்பிதமாந்தோற்றமெல்லாங்களைந்துபாரும்போதமே. 89

அகமதுவைநோக்கிடிலருளதுவுமாகுமே
அகமதுவைநோக்கிடிலருஞ்சிவமுமாகுமே
அகமதுவைநோக்கிடிலருளானந்தமதாகுமே
அகமதுவைநோக்கியேயருட்போதமாகிவாழுமே. 90

அகமதுவைநோக்கிடிலங்குமிங்குமெங்குமே
அகமதுவைநோக்கிடிலகம்பிரம்மமுற்றுநிற்குமே
அகமதுவைநோக்கிடிலசத்துமித்தையாகுமே
அகமதுவைநோக்கியேயகம்போதமுற்றுவாழுமே. 91

நிஷ்டையென்றால்வேறதேதோர்நீங்காவஸ்துபோதமே
நிஷ்டையென்றால்வேறதேதோர்நீங்காச்சுயபோதமே
நிஷ்டையென்றால்வேறதேதோர்நீங்காச்சத்துபோதமே
நிஷ்டைநிர்விகற்பபோதம்சீயதுவாய்வாழுமே. 92.

நிஷ்டையென்றால்வேறதோநிஷ்களங்கபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிர்ச்சங்கமுற்றபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிற்சொந்தமுற்றபோதமே
நிஷ்டையென்றால்நிர்விகற்பபோதமுற்றுவாழுமே 93

நிஷ்டையென்றால்வேறதோநிர்விஷயமுற்றபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிர்விகாரமுற்றபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிர்க்குணமுற்றபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிர்விகற்பமுற்றுவாழுமே. 94

நிஷ்டையென்றால்வேறதோநிராகாரமானபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிரந்தரமாம்போதமே
நிஷ்டையென்றால்வேறதோநிர்ச்சலனமுற்றபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநித்யபோதமுற்றுவாழுமே. 95

நிஷ்டையென்றால்வேறதோநிராசையுற்றபோதமே
நிஷ்டையென்றால்வேறதோநிர்மலமுற்றபோதமே.
நிஷ்டையென்றால்வேறதோநிரஞ்சனமாம்போதமே
நிஷ்டையென்றாற்றுவிதமற்றநிர்மலமாய்வாழுமே. 96

அகம்பிரம்மநிச்சயமேயகஞ்சொரூபமாக்குமே
அகம்பிரம்மநிச்சயமேயகண்டமதாய்நிற்குமே
அகம்பிரம்மநிச்சயமேயறிவாய்மிஞ்சும்போதமே
அகம்பிரம்மநிச்சயமேயபேதபோதநிஷ்டையே. 97

துறவிகளுறவுகொண்டசுயம்பிரம்மமகமது
துறவிகள்திருவுளமாய்த்திரண்டபிரம்மமகமது
துறவிகள்தழுவுமகம்பிரம்மமகமேதுவது
துறவிகள்சுதந்திரமாயினவ்கம்பிரம்மமே. 98



துறவிகள்துறவுகொண்டுதுலங்குமந்தர்முகமதே
துறவிகள்துறவுபூண்டசுத்தவஸ்துவகமதே
துறவிகள்துறவுகண்டுசுட்டுதற்றமோனமே
துறவிகள்துறந்துநின்றசுயமகம்பிரம்மமதுவதே. 99

துறந்தவர்பதியதானதூயவகம்பிரம்மமே
துறந்தவர்சுயமதானதூயபிரம்மமகமிதே
துறந்தவரிறுமாப்புறுஞ்ஜோதிவகம்பிரம்மமே
துறந்தவர்சொரூபபோதஞ்சொக்கும்பிரம்மநிஷ்டையே. 100

துள்ளுடகந்துறந்தெழுந்ததுய்யபிரம்மஞானிகள்
துய்யவஸ்துவவரெனவுஞ்சொல்லும்வேதம்நான்குமே
துய்யர்ஸ்தூலமிருப்பரோசொரூபமாகிநிற்பரோ
துய்யமாயாராயும்போதுசொரூபரெங்குமாவரே. 101

அபேதபோதநிர்விகற்பவத்துவைதநித்திய
மபேதபோதசத்தியமதீதமுற்றகேவல
மபேதபோதபூரணமகண்டமூற்றசின்மய
மபேதபோதவஸ்துவாயகண்டநிஷ்டைகூடுமே 102

மாயைமாயையென்றுநீர்மலைவனங்களோடுவீர்
மாயையேதுசொல்லுவீர்வஸ்துவன்றிவேறதோ
மாயைவந்தவழியுணர்ந்துவஸ்துவாகவல்லீரே
மாயாபித்தமருளரேவபேதமுற்றலாகுமே. 103

மனத்தினிலழுக்கைவைத்துமலைவனங்கள்கூடினும்
மனத்தினிலழுக்கைவெல்லமலைவனங்களோதுமோ
மனத்தினிலழுக்கைவென்றுமாயையற்றவல்லவ
ரனத்தையுஞ்சொரூபமாயணிவர்பிரம்மஞானியே. 104

மலைவனங்குகைபுகுந்துவாழும்புலிஞானியோ
மலைவனங்குகைபுகுந்துவாழும்நரியோகியோ
மலைவனங்குகைபுகுந்துவாழும்ஜெந்துதுறவியோ
மலைவனங்குகைகள்தேடிவாடுவாஞ்ஞானியே. 105

அகம்புறந்துறந்தபோதத்துவைதஞானமே
அகம்புறந்துறந்தபோதபேதமுற்றவிதேகமே
அகம்புறந்துறந்தபோதறிவாய்நிற்கும்போதமே
அகம்புறந்துறந்தவர்க்காரணியம்வஸ்துவே. 106

சிவயோகிசிவத்தைத்தானுயறிந்துமலங்கரித்தவன்
சிவயோகிசிவத்தைச்சிவமாலையாக்கிப்பூண்டவன்
சிவயோகிஜெகத்தைப்பரமாக்கிச்சிங்காரித்தவன்
சிவயோகிசிவமதாகச்சிறந்துமெங்குமாவனே. 107

முனிவர்சித்திமாயையென்றுமுனிந்தனர்மெய்ஞ்ஞானிகள்
முனிவர்சித்திமித்தையென்றுமுனிந்தனர்பிரம்மஞானிகள்
முனிவர்சித்திபந்தமென்றுமுனிந்தனர்சிவயோகிகள்
முனிவர்சித்திமித்தைமித்தைமுனிந்துமிஞ்சுமோனமே. 108

சித்திசித்திபிரம்மசித்திசித்திபெற்றசித்தியே
சித்திசித்திஞானசித்திசித்தியானசித்தியே
சித்திசித்திசிற்சொரூபசித்தியானசித்தியே
சித்திசித்திசித்திசிவமானமுத்திசித்தியே. 109

குக்கலொன்றுகூலதாகக்குறிப்பறிந்துமானிடர்
பக்குவமருந்துவங்கள்பண்ணுவரோபாரினில்
துக்கரூபதுவிதருக்குஞ்ஜோதிஞானந்தோயுமோ
திக்குதோறுந்தேடியேஜெகமாயையுற்றலைவரே. 110



என்னறியரூபங்களிலினிதுமனிதரூபமே
தன்னறியயேதுவென்றுணாற்றுமறைநான்குமே
உன்னுதலொழியவுற்றொருபொருளாயோங்குமே
நண்ணுகின்றபிரம்மஞானம்நாமதுவாயாகுமே. 111

சிற்புற்புழுமுதற்சிவமதன்றிவேறதோ
கருதரியதன்னையுற்றுக்காண்பவனேகர்த்தனே
உரியபோதம்பிரம்மமேவுளதுதானதாகுமே
வரிதரிதுவைத்துவைதமறிவாய்மிஞ்சிவாழுமே. 112

கைக்குமெட்டித்தருவதனைகமழும்நீரில்வளர்ப்பினுங்
கைக்குமெட்டித்தருவித்துங்கசப்புநீங்கித்திதிக்குமோ
பொய்க்காவரியவுண்மைஞானம்போலிகாதிலோதினுங்
கைக்குமெட்டித்தருவித்தொத்தகசப்பதங்கேகாணுமே. 113

பொய்யைமெய்யதாகக்காண்போர்புணரும்போதமெங்ஙனம்
பொய்யைபொய்யதாகக்காண்போர்பொய்யரெனவையமோ
பொய்யைப்பொய்யதாகநீக்கிபோதமுற்றபோதத்தால்
மெய்யைமெய்யதாகவேமேவினர்மெய்ஞ்ஞானியே. 114

மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடுமுத்தமே
மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடும்நித்தமே
மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடும்பத்தமே
மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடும்வித்தமே. 115

மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடுமுழக்கமே
மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடுந்துலக்கமே
மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடும்விளக்கமே
மோக்ஷம்விரும்புமுமுட்சுக்கள்முத்தமிடும்பழக்கமே. 116.

உரிமையொடுமுறுதிஞானமுணர்த்தும்மௌனவாக்யமே
உரிமையொடுமிறுதிஞானம்புணர்த்தும்மௌனவாக்யமே
உரிமையொடுங்கருதிஞானமமர்த்தும்மௌனவாக்யமே
உரிமையொடுமுறுத்திஞானமுயர்த்தும்மௌனவாக்யமே.

உரிமையொடழியாஞானங்கொடுக்கும்மௌனவாக்யமே
உரிமையொடொழியாஞானந்தொடுக்கும்மௌனவாக்யமே
உரிமையொடுங்கழியாஞானத்தடக்கும்மௌனவாக்யமே
உரிமையொடும்பழியாஞானமடுக்கும்மௌனவாக்யமே. 118

உரிமையொடுமபேதஞானமூட்டும்மௌனவாக்யமே
உரிமையொடும்போதஞானம்பூட்டும்மௌனவாக்யமே
உரிமையொடுநீதஞானங்காட்டும்மௌனவாக்யமே
உரிமையொடுமாதல்ஞானங்கூட்டும்மௌனவாக்யமே. 119

உரிமையொடுமகண்டஞானமளிக்கும்மௌனவாக்யமே
உரிமையொடுமடங்காஞானம்பலிக்கும்மௌனவாக்யமே
உரிமையொடுங்கடந்தஞானம்விழிக்கும்மௌனவாக்யமே
உரிமையொடும்படர்ந்தஞானஞ்ஜொலிக்கும்மௌனவாக்யமே

உரிமையொடும்பிரியாஞானம்பெருக்கும்மௌனவாக்யமே
உரிமையொடுமரியஞானம்நெருக்கும்மௌனவாக்யமே
உரிமையொடுந்துரியஞானஞ்சிறக்கும்மௌனவாக்யமே
உரிமையொடுங்குறியாஞானமுறக்கும்மௌனவாக்யமே 121

உரிமையொடுரியமெய்ஞ்ஞானமொட்டும்மௌனவாக்யமே
உரிமையொடுவிரியாவிஞ்ஞானமூட்டும்மௌனவாக்யமே
உரிமையொடுமரியசுஞ்ஞானந்திரட்டும்மௌனவாக்யமே
உரிமையொடுமறியாவஞ்ஞானமோட்டும்மௌனவாக்யமே.



அபரோக்ஷாநுபூதியுதாயசக்கும்மௌனவாக்யமே
அபரோக்ஷாநுபூதியதாய்த்தேக்கும்மௌனவாக்யமே
அபரோக்ஷாநுபூதியதாய்த்தாக்கும்மௌனவாக்யமே
அபரோக்ஷாநுபூதியதாய்க்காக்கும்மௌனவாக்யமே. 123

நிரதிசயம்நேர்மைபூட்டிநிறுத்தும்மௌனவாக்யமே
நிரதிசயம்நேர்மைநாட்டியுறுத்தும்மௌனவாக்யமே
நிரதிசயம்நேர்மைகாட்டிப்பொருத்தும்மௌனவாக்யமே
நிரதிசயம்நேர்மைகூட்டித்திருத்தும்மௌனவாக்யமே 124

பொறுமைமிகுபூரணமாய்ப்பொழியும்மௌனவாக்யமே
பொறுமைமிகுபூரணமாய்மொழியும்மௌனவாக்யமே
பொறுமைமிகுபூரணமாய்த்தெளியும்மௌனவாக்யமே
பொறுமைமிகுபூரணத்வங்கொளிக்கும்மௌனவாக்யமே.

மோக்ஷமென்னுஞ்சாக்ஷாத்காரமுடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுஞ்சந்ததமாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுஞ்ஸைகஜசத்யமுடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுஞ்சமரஸமாய்முடிக்கும்மௌனவாக்யமே.

மோக்ஷமென்னும்பிரம்மசத்தாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுமர்ம்மசத்தாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுமமிர்தசத்தாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுஞ்சுகிர்தசத்தாய்முடிக்கும்மௌனவாக்யமே

மோக்ஷமென்னுந்தூயசித்தாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுந்தூயவித்தாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷமென்னுந்தூயமுத்தாய்முடிக்கும்மௌனவாக்யமே
மோக்ஷபந்தரகிதவத்தாய்முடிக்கும்மௌனவாக்யமே. 128

சிவோஹம்.

### இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

மதுரங்கமிஞ்சியவமிழ்தப்பிழம்போமாவமிர்தாறல் உன்
கருணைததும்பியவருட்பிரவாகமோபெருகிமகிழ். 1

ஸுகிர்தஸுதந்திரவமலநதியிதுவோஸுகந்த மாமா
மணமிகுஞ்சுயாநுபூதிவிதுதானோவறையாயோ. 2

குணங்குறிமலமறவொழுகியவழகோவருளிய நின்
றெருளினைமருவிடவிளைதருங்கனிரஸத்திரள்தானோ. 3

தனதெனுந்தனைப்பெறதளதளதளவெனவொளிவளர் தன்
பதியதுபருகியுமருவிய்வநுபூதியிதுதானோ 4

உளதெனவிலதெனவுரையறநிரம்பியவுன்னிலைதானோ தன்
னுறுதியிற்கரைந்திடவொழுகியபெரும்பொருள்தான்றானோ.

கலகலகலவெனுமாடிடுமானந்தந்தன்னருள்தானோ தனி
யொருவொருபெருவெளிமருவியுவநுபூதிவிதுதானோ. 6

பகலொடுமிரவறப்பரவியபாஞ்சுடர்பாமிதுதானோ தனை
விலகிடாதுறைந்தருட்பதமிதுகதிகதிவிதுதானோ 7

நனவொடுமுறவறநாநீயெனும்றநலவுறவிதுதானோ நன்
ஞானமெய்ஞ்ஞானத்ததாகாரவநுபூதிவிதுதானோ. 8

விதியொடுவிலக்கறவிமலமருவியமாவிதேகமிதுதானோ தன்
னுதியாவொடுங்கிடாவொருதனிதனிமுதல்தான்றானோ. 9

துணிவொடுபயமறத்துலங்கியவரசுசுயமிதுதானோ துய்ய
சுகாதீதசுதந்திரமாமௌனவநுபூதிவிதுதானோ. 10

போக்கொடுவரத்தறப்பூண்டிடும்பூரணமிதுதானோ தனி
பொருந்திடுஞ்சத்தியபோதநிரஞ்சனந்தான்றானோ. 11

துக்கசுகமற்றநிற்றொந்தகேவல்சுய்மிதுதானோ மாமா
துப்பறத்துறந்திடுமத்வைதாநுபூதிசுயமிதுதானோ 12



குறைவொடுநிறைவறக்குமுகுமுகுமுவென்றருள்பொழிமுகி
[ல்தானோநின்
குளிர்மொழிசிதரியவடங்கிடாவானந்தமிதுதானோ. 13

வரையறவகமறமதுசொரிசுயமெனமாபெருநிதிதான்றானோ
னுரைகெடத்திரண்டிடுமொருதனிவநுபூதிவிதுதானோ [தன்

இகமொடுபரமறவிருவினைகரைந்துறைந்திலங்கியநிஜமிதுதா
னிசையதுபிசகிடாவினியகாலாதீதந்தான்றானோ. [னோதன்

அணலொடுகுளிரறவதீதமெனநிறையுமரும்பொருளிதுதா
னபாராகலியவசையாமாவநுபூதிதான்றானோ. [னோதன்

ஜெயஜெயஜெயஜெயமாஜிதேந்திரியஜெயமிதுதானோதன்
றேஜசுததும்பியதிவ்யமாவநுபூதிஜெயந்தான்றானோ. 17

### இராகம்—சங்கராபரணம் சாப்பு தாளம்.

கோசமற்றநேரம்பொருட்பொருளெனநீ
சோகமுற்றதேதுவின்வாய்வின்னாயென
யேகமுற்றபோதமிதோவிதோவென வருள்தாராயோ. 1

நாமரூபமற்றவேளைநமோநமோவெனமெய்ஞ்
ஞானம்பெற்றவென்னைவாவாவென
வேதமுற்றுங்காணப்பதம்பதமென வருள்புரிவாயே. 2

ஜோதியுற்றஜோதிசுயஞ்சுயமெனதனி
மௌனமுற்றபோதேயெல்லாமெல்லாமென
காதலுற்றுமென்னைஜெயஞ்ஜெயமென வருள்கூறாயோ 3

பாராபக்ஷமற்றுவொளிவெளியெனத்தாளங்
கொட்டியென்னைவிளையாடலாடலென
வேகமுற்றுந்தனிதனிதனியென வருள்குருநாதர். 4

குருவையுற்றவேளைகுணங்குணமெனநீ
துவிதமற்றபோதேயதுவதுவென
கிருபையுற்றுமென்னைத்தான்றுமென வருள்தருவாயே. 5

நிராசையுற்றபோதேதெருட்டெருளெனநீ
நானுயுற்றபோதேயருவருவென
பாவாதீதமுற்றவென்னைச்சிவஞ்சிவமென வருள்கூறுயோ. 6

அறிவையுற்றநேரமகமகமெனசுய
கருணைபெற்றயென்னைமணிமணியென
வுறவுமுற்றுஞ்சுகஞ்சுகமென வருள்தருவாயே. 7

மலமுமற்றயென்னைபரம்பரமென
மாவிதேகமுற்றபோதேகண்கண்ணென
சொரூபமுற்றயென்னைநிஜம்நிஜமென வருள்குருநாதா 8

ஒருமொழியுற்றயென்னைவோமோமெனநித்ய
நிறைவையுற்றபோதேமதிமதியென
கதியாயுற்றயென்னைக்கனிகனியென வருள்சொரிவாயே. 9

பெரிதையுற்றபோதேபிரம்மம்பிரம்மமென வழியா
நிதியையுற்றநேமம்நித்யம்நித்யமென
பதியாயுற்றயென்னைப்பதிபதியென . வருள்தருவாயே. 10

நிஷ்களங்கமுற்றபோதேநீநீயெனஸகஜ
நிஷ்டையுற்றவென்னையருயருளென
வசங்கமுற்றபோதேவெளிவெளியென வருள்புரிவாயே. 11

தானுயுற்றபோதேதத்தோந்தத்தோமென சுயம்
பாகவுற்றயென்னைச்சத்யஞ்சத்யமென
வுகண்டமுற்றபோதேவஸ்துவஸ்தென வருள்குருநாதா. 12

சிவோஹம்.



## பஞ்சரத்தினத் திருப்புகழ் மெட்டு.

திருவருளுருண்டுதிரண்டெழுந்தது
குருவருளுண்டுகொழுந்துபடர்ந்தது
யருளுருக்கொண்டகண்டமானது பொருளாகும். 1

பதிபதிகண்டுபாஞ்சுடரானது
வொளிவளர்நீண்டோங்கிவளர்ந்தது
கதியிதுவென்றுகண்டவர்கொண்டது அருளாகும். 2

மதிமிகுமன்பர்மகிழ்ந்துமுண்டது
கதியிதுவாகிக்கடந்துநின்றது
தெளிதெளிமோனந்திரண்டெழுந்தது சிவமாகும். 3

இருவினையற்றுமேகமாயருளரு
ளொருதனிமுத்தாயொளிவுகொண்டருள்
பருவங்கண்டுபாகதியீந்தருள் குருநாதா 4

சித்திரம்போலநிறைந்தசின்மயஞ்
சுத்தறிவாய்த்தோன்றிநின்றது
யுத்தமர்க்காகவுருவாய்வந்தது சொரூபமாகும். 5

பக்தர்காணப்பரமதாய்வந்தது
நித்யமாகநிறைந்துகொண்டது
முக்தர்கண்டுமோனமுற்றது ஒளிவாகும். 6

கருணைபொங்கித்ததும்பிநின்றது
கதிமடைதிறந்துபெருகவிட்டது
வொருதனிரத்னமொளிவுநின்றது சுயமாகும். 7

கிருபைகூர்ந்துமிருளையோட்டுமே
கிருபாநிதியேகிருதார்த்தம்நாட்டுமே
மறுமொழியில்லாமந்திரமூட்டுமே குருநாதா. 8

பரிமளமிகுந்தெழுந்தமணமே
பாகதித்தேனையூட்டியபாகே
பரம்பரம்பொருளாய்ப்பரமேவந்த பதிதானே. 9

அருளொளிமிகுந்தெழுந்தசுடரே
யானந்தமாகிப்பொழிந்தநிதியே
யழியாநிதியாயமர்ந்துநின்ற குணாதீதம். 10

குளிர்மிகுங்கனிவாய்க்கனிந்துநின்றது
குணமிகிரஸமேபொங்கிமகிழ்ந்தது
தினந்தினங்காச்சிவடித்துவந்தது பதமாகும். 11

கவலைகொண்டுமமலமாயென்னைக்
கருணைதந்தெனையாளுமையனே
யிருளைநீக்கியசிவமேசிவமே குருநாதா. 12

ஜோதியெழுந்துவிரிந்துநிறைந்தது
யாதியந்தமுமற்றுவாழ்ந்தது
நீதியன்பருறவுகொண்டது நிஜமாகும். 13

அறிவைவுருட்டித்திரட்டிவந்தது
யழகுபொருந்திநிறைந்துநின்றது
தளதளவென்றுதளிர்த்துவளர்ந்து பிரகாசம். 14

விட்டவிடத்திலுந்தொட்டுநின்றது
வெட்டவெளிக்கடல்பொங்கிமகிழ்ந்தது
யட்டாங்கயோகங்கொட்டிநிறைந்தது நிஜமாகும். 15

எட்டாப்பொருளையெட்டவருள்புரி
யொட்டாச்சொரூபமொட்டவருளருள்
கட்டித்தேனேகனிகனிரஸமே குருநாதா. 16

தேறியெடுத்துத்தெளிந்ததேஞானத்
தேனையும்விட்டுப்பிசைந்ததேவருட்
பாகுபதத்திலுறைந்ததேகனி யமிர்தாமே. 17



சுருதிகறந்துகடைந்தெடுத்தது
சொரூபநிறைவிற்காச்சிவடித்தது
சுயம்பரமாகவுகந்துகொண்டது தனிதானே 18

முத்திவிருந்தளிக்கும்பாகிது
முழுதுணர்பூரணமாகவிளைந்தது
சத்துக்களுண்ணுமமிர்தக்கட்டி கதியாமே. 19

நித்தியமதுவாய்நிறுத்தியாளுமே
நிர்மலமாக்கியாண்டருள்கூறுமே
சத்தியவொளிசைவசற்குணபதியே குருநாதா 20

அமலமாவருளையாவுமானது
வகண்டவொளிவேதானுமானது
சிவசிவநமவேசித்தியாய்நின்றது பரமாகும். 21

திமிதிமியென்றுந்தாளம்போடுது
தித்திமியென்றுமானந்தம்பாடுது
தத்தோந்ததிங்கிணந்தந்தனம்பாடுது தனதானே. 22

கடுகுதுரும்பெனவுலகைவென்றது
கதிகதிகதியெனத்தெருள்மதம்பூண்டது
நிஜநிஜமாகிநிறைந்துகொண்டது அறிவாயே. 23

உடல்பொருளாவியைத்தானம்வாங்குமே
வுன்னையேவுனக்குத்தத்தம்பண்ணுமே
யண்ணலேசிவமாகினமோனமே குருநாதா. 24

சத்தியநிர்க்குணஞ்சாந்தமாகுமே
சர்வமுமாகித்திரண்டுமோங்குமே
சுத்தமேநித்யந்தானுமாகுமே அறிவதாகும். 25

உத்தமந்தானுமுறவேயாகும்
மத்திபர்காணுமஹத்தேயாகுஞ்
சித்தங்களித்துவந்ததாகும் தெளிமோனம். 26

கொண்டார்கோலங்கொண்டதாகுந்
தொண்டாய்நின்றஜோதியாகும்
விண்டார்காணுமெய்யுமாகும் வெளிதானே 27

பண்புறும்பரம்பொருள்பதிந்தெழுந்தவா
பக்குவர்விரதங்கண்டமாமுனிவா
நண்புறுமென்னைநல்கிடும்வல்லவா குருநாதா. 28

முத்துவிளைந்துமுருகியுதிர்ந்தது
மோனமாலைக்கோவைபோட்டது
ஞானரத்தினமழுத்திநின்றது ஒளிவாகும். 29

வெளியிற்பூண்டுமழகுபார்த்தது
விமலபரத்தைத்தாணுக்கொண்டது
கமலவாலையம்பூட்டிவைத்தது தனமாகும். 30

திடமுறுகோயிற்றிறந்துபாருமே
ஜிலுஜிலுவென்றுமொளிவுகொஞ்சுமே
குளுகுளுவென்றுங்குளிர்ந்துவாழுமே சுகமாகும். 31

அளியளிமோனமகண்டமாகவே
தெளிதெளிஞானந்தெளியவருளுமே
கதிகதிநீயேகருணைபுரிவாய் குருநாதா. 32

கருமக்காகம்நவகோடிகூடினுங்
கருணைமொழியையெறியவோடுமே
திருவுளமணியேதெளிந்தமொழியே சிவயோகம். 33

விஷயாதிகாரணத்தைக்கட்டிவைத்தது
விஞ்ஞானசொரூபமாயெழுந்துநின்றது
தெளிந்தமதியேசிவமாய்நிறைந்தது சிவயோகம் 34



பருவமிருந்துஞானபானது
பக்குவமாகிச்சொரூபஞ்சேர்ந்தது
யருளேபொருளாபகண்டபானது சிவயோகம். 35

அழியாபிரம்மம்மளியளிசத்திய
மதுவேதாணுபறிந்ததுநித்தியங்
குணமறுங்குருவேதானுமானது சிவயோகம். 36

ஓமோம்நமநமவொருதனியானது
சிவசிவநமநமசின்மயமானது
அகம்பிரம்மம்நமநமவகண்டமானது சிவயோகம், 37

சதாசிவநமநம்சற்குருவானது
சைதன்யசிவநமதாணுபானது
தத்துவமசிநமசர்வமுமானது சிவயோகம். 38

ஆன்மாநமநமவதுவேயானது
வமலபரம்நமவருளேயானது
பிரஞ்ஞானம்நமவேபிரம்மமானது சிவயோகம். 39

ஏகம்நமவோமெங்குமானது
யருளேநமவோமறிவாய்வந்தது
பொருளேநமவோம்பூரணமானது சிவயோகம் 40

வேறு

அருவினுருவறக்கரைத்தகண்டமென்றுந்தனையுணர்ந்
தமலமயமாய்ப்பெருக்கியகம்பிரம்மமாக்கி
உறுதிபூண்டுரிமைதாக்கிவுன்னுமர்ம்மமுறவுந்தேக்கி
வுயர்வுதாழ்வறவுந்தேக்கிவில்லாஸமாக்கி
சுருதிமுடிசுயம்பதாக்கிசுபாவசுத்தசொந்தந்தேக்கி
தூயமிகுகருணைதாக்கிசுதந்தரசொஸ்தமாக்கி

இறுதிகொண்டேகமாக்கியெல்லாம்புறம்புள்ளுந்தேக்கி
விருளொழியுந்தன்னைநோக்கிவினிதினிதாக்கி
நிரதிசயம்நீங்காத்தேக்கிநானென்பதறவும்போக்கி
நிகரில்லாப்பதமுந்தாக்கிநிர்ணயநிதியாய்த்தேக்கி
ஒருமைபூண்டுன்னதமாக்கிவுசிதமஹாமௌனந்தாக்கி
வோரரசுகிரீடந்தேக்கிவொழியாவாழ்வதாக்கி
கருதரியபோதந்தேக்கிக்களங்காக்காலாதீதமாக்கிக்
காண்பானுதிகருகத்தாக்கிக்கமனமாக்கி
பெருமைமிகுங்குருபரமேபிரீதிநானுன்மடிமீதுதேங்கிப்
பிரிவறவிளையாடல்நன்றுகுருநாதா. 1

வேறு

விடையமெனுமடமைகெடவிமலமெனுங்கனலதேவி
வுடையபொருள்தனததாகவிழிபாராயோ
கடமையெனயாளவருளபயமெனவடைந்தநினை
தடையெதுவுமின்றியருள்சொரியாயோ
படையுடையபொறிபுலன்களடியதோடுவேர்பிடுங்கக்
கொடையதாகமோனவாள்தாராயோ
அடியர்குலமீதுறவாடிவிளையாடிவென்னை
யடிமுடியும்நடுவுமின்றிவருளாயோ
குடியதுவாயானும்நீயுங்குறியறவுமேகமாகி
விடியுதயமறுமெய்ஞ்ஞானமருள்வாயோ
அடியடிவாழ்வீதென்னப்படினமிகுபதமருளி
நடனமிடநலதருணம்நாடாயோ
அடடாவிதுசமயமாகும்மடமடெனவருள்பொழிய
சடசடெனவேகமதாய்ச்சாராயோ
அடவுடையமைந்தனெனயருமையுடனேதழுவி
திடமுறவிளையாடல்நன்றுநன்றுகுருநாதா. 2

வேறு.

ஜோதிமதிவளர்மோனமணியெனுஞ்
ஞானம்பெருகியசிவயோகா



தேனின்மொழியழகொடுதிருவடி
தழுவிமருவிடவருள்வாயே
சோகமொடுமதமியாவும்பொடிபட
சிவயோகக்கனவினையிடுநாதா
வேறுபடாதுனைக்கூடியிருந்திடமா
மோனவரம்பினைத்தாராயோ
ஓடியலைந்திடாமெய்ஞ்ஞானவமுதினை
வாரிச்சொரிந்தருள்புரிவாயே
ஆதிநடுமுடிவேதுமிலாவெனை
வாரிமடியினிற்போடாயோ
வேதமறைமுடித்தாதைமடியினி
விளையாடியாடிடவருளருளாயே
கோதுமணுவுமிலாமாஜோதிவிதேகமாய்ப்
பாகமருளருள்குருநாதா. 3

வேறு

கொடியவிருள்பொடிபடவேயிடிமினல்குமிரனுட
னிடையறவேவுருகுமழைபொழியாயோ
நெடியவருள்பெருகிக்கரைபுரளவேகமோன
வெள்ளம்பொங்கித்ததும்பிப்பூரணமாகாதோ
விடிவுதயஸ்தமனமின்றிவிமலகேவலமா
வீடுகொடையாகவருள்புரியாயோ
முடிவுபெறமுடிதரித்துமுடிவுகொடிவேற்றியதாய்
முடிவதீதசொரூபராஜ்யசுயவரசாளேனோ
கொடிதெனுமஞ்ஞானகர்ம்மம்பொடிபடவுமொருநிமிடங்
கூர்மெய்ஞ்ஞானவிழிதிறந்துகருணைசொரியாயோ
படிகம்போலுங்களங்கமறபளபளெனவழகொழுக
பதையாதபாவாதீதமதாய்வாழ்கேனோ
கடினமனங்கரணமொடுபொறிபுலன்கள்யாவுங்கெடமஹா
கருணையுடன்தழுவிமுத்தங்கொடாயோ

அடிமுடியுங்கடுவிறந்தவமலதாதைமடியதனி
லாடிவிளையாடநலதருணமிதுவருளருள்குருநாதா. 4

வேறு

விஷபத்தாற்காணொணததுமாயாவிகற்பத்தாற்பூணொணத
விமலவபேதத்தாலகமொணததுவகண்டஞானந் [து
துவேஷத்தாற்றுடரொணததுசோகமோகத்தாற்கூடொணு
சொரூபபோதத்தாற்பொருந்திநின்றதுசுயஞானந் [தது
தேகத்தாற்சேரொணததுதிரிகாணத்தாற்றுடரொணதது
விதேகத்தாற்விலகொணததுவிமலஞானம் [து
வேதத்தாலெட்டொணததுவிண்வாதத்தாலொட்டொணத
பாவாதீதத்தாற்பற்றிவாழ்ந்ததுபகரொவ்வாமெய்ஞ்ஞானம்
காலத்தாற்கணிக்கொணததுகாமக்குரோதத்தால்ஜெயிக்கொணதது
யேகத்தாற்பிரிக்கொணததுவிருளறியாஜோதிஞானஞ்
ஜாலத்தாற்றடுக்கொணததுதடையோகத்தாற்றொடுக்கொணு
சிவயோகத்தாலடக்கநின்றதுசின்மயஞானம் [தது
பூதபுலனுநிக்கிப்புணரொணததுபோலியோகிக்கித்தூரமான
யமலஞானிக்கித்தானுயானதுவதீதஞானம் [து
சரிசரிசமபததனிதனிதனதனதரிகிடதாந்தாமெனத்
ததாகாரமருவியதனிவாழ்வேவாழ்வே. 5

வேறு

மருளையுருக்கியர்தெருளைத்திரட்டியர்கதியுறப்பெருகியர்
மதியருள்பெருகியமதிவாழ்வே
அருளைப்பெருக்கியாகத்தைத்துறக்கியாமலம்கிறுத்தியர்
தெளிவுறுஞ்சித்தம்நிறைவாழ்வே
கருணைசிறக்கியர் கவலைநொருக்கியரறிவையிருத்திய
ரழகுறும்நிர்க்குணமமர்வாழ்வே [வர்
மலத்தையெரிக்கியர்மனத்தையொருக்கியர்சினத்தையெரித்த
ஜெயத்தைநிறுத்தியர்ஜெயஜெயஜெயவாழ்வே



ஜனனமறுக்கியர்தாகம்வெறுக்கியர்பொறியையறுக்கியர்
புலனைவிலக்கியர்பொதுநடனமிடும்பொதுவாழ்வே
மரணங்கெடுக்கியர்கரணமொடுங்கியர்காலங்கடக்கிய
ருளதாயிருக்கியருறவேனுமுறைவாழ்வே
தனதெனுஞ்செருக்கியர்சமயங்கெடுக்கியர்சலனமறுக்கியர்
சைவயோகம்பெருக்கியர்தனியெனுந்தனிவாழ்வே
நடனம்பெருக்கியர்நாணமறுக்கியர்பொருளைநிறுத்தியர்
நாடிவிளையாடல்நன்றுநன்றுகுருநாதா 6

ஒருபொருளாய்நிறைவுறவும்மருளனுகாவலியுறவுந்தெருள்
மருவிவொழுகிடவும்பளபளெனவருளொளிதரவுறவுங்குரும
ணிமணிஹாரமதுபுணர்வுறவுங்குறைநிறைவிலாதுறவுறவும்
பருவமிகுபகமுறவும்பகலிரவுமறவுறவும்பதம்பதியத்தனியு
றவுஞ்சருவியதாயுருகிடவுஞ்ஸகஜமதாயுறைந்துறவுஞ்சரூவ
மதாய்ப்பொருந்திடவுந்தமசுவொடுமூன்றறவுந்தடிக்குமல
முழுதறவுஞ்சலனப்பொறிபுலனறவுந்தடைகாணமதுகெட
வுஞ்ஜனித்தெழுமிராகாதியறவுறவுஞ்சமயநெறிகுறிகெடவு
ஞ்ஜடவுபாதிகுலமறவுஞ்ஜகஜீவபாமறவுஞ்சாதனங்களமைவு
றவுந்தங்குஞ்சிவம்நன்குறவுகிழங்குமதாய்ப்பொங்கிடவுஞ்சம
ரசதுரியந்துங்கிடவுஞ்ஸந்ததுரியாதீதசத்தியஞ்சமமுறவுஞ்
சமமௌனமழகுறவுந்தனததுஜொலிஜொலித்திருளொளியற
வுறவுந்தத்துவசுயசொரூபந்தாமெனவுமிசைந்துறவுறவுஞ்
சையோகஸுகந்தசுகாதீதந்தோய்ந்துறவுமதுவதுதாந்தானு
ய்ச்சொக்கிடவுந்துய்யமாமஹாகதிகதிவிதுதானெனச்சுய
சோபனமங்களகருணையோடெனையெடுத்துமிரண்டறவேசித்
தமைவுறப்பொருந்திமைந்தாமைந்தாநீநானெனமார்போடழு
த்திடல்மாநன்குநன்குமாமௌனஞானரஞ்சிதமங்களதேசிக
ஜெயசிவகுருநாதாநாதா. 7

---

வேறு

அடா அடாகட்டுக்கடங்காதது அடா அடாசுட்டுக்கொவ்வாத
விடாவிடாவிட்டுத்தொடாததுவிருளறியாதது [து
இடாயிடாயிட்டுக்குறியாததுயிடாயிடாயிஷ்டர்க்குறியது
தொடாதொடாதுஷ்டர்க்கரியதுசுகமிறவாதது
பொடாபொடாபொத்தப்படாததுபொடாபொடாபோற்றற்கு
சடாசாடாசத்தங்கடந்ததுசலிப்புறாதது [ரியது
கொடாகொடாகொடுக்கக்குறையாததுகொடாகொடாகூட்ட
கெடாகெடாகேவலமானதுகாலங்காணாதது [ப்படாதது
ஏடாயெடாயெடுக்கப்படாததுயெடாயெடாயேத்தக்குரியது
வடாவடாவாட்டமிறந்ததுமாவழகுகுன்றாதது
படாபடாபதைத்தைக்கடந்ததுப்டாபடாபகரப்படாதது
சூடாசுடாசுட்டவேறில்லாததுசுத்தநிர்விகற்பம்
ஓடாவொடாவோடிக்காணாததுவொடாவொடாவுன்னப்படா
நடாநடாநாட்டமிறந்ததுநனவுக்கெட்டாதது [தது
தனதனதத்திமிதிமிதிமிதிமியெனதனதனவெனததா
காரவிதேகமருவியசுகசுகசுகாதீதமெய்வாழ்வேவாழ்வே. 8

(கருத்து) மேலருளிச்செய்திராநின்ற அருட்புகழின் இலக்கணமாவது அதிதீவிரபக்குவசீடன்முழுதுணர்ந்தவனாய் மெய்ஞ்ஞானகுரு ஏகவாக்கியத்தைமட்டும் எதிர்பார்ப்ப னென்னக் காட்டும் பொருட்டெனக் காண்க.

சிவோஹம்.

## பொருள் மந்திரம்.

அங்குமிங்கும் நமோ நமோ. 1
ஆனந்தமாகும் நமோ நமோ. 2
சுத்தநிர்மலம் நமோ. நமோ. 3
சொரூபானந்தம் நமோ நமோ. 4



நித்யநிறைவே நமோ நமோ. 5
நிர்மலக்கனிவே நமோ நமோ. 6
சத்யவொளிவே நமோ நமோ. 7
சத்பமானதே நமோ நமோ. 8
சுத்தசொரூபம் நமோ நமோ. 9
ஜோதிதனியே நமோ நமோ. 10
அன்பாரிவே நமோ நமோ. 11
ஆன்மாதனியே நமோ நமோ. 12
இன்பம்நிறைவே நமோ நமோ. 13
எல்லாஞ்சிவமே நமோ நமோ. 14
ஞானவொளிவே நமோ நமோ. 15
ஞானவெளியே நமோ நமோ. 16
மோனந்தனியே நமோ நமோ. 17
முழுதுமாகும் நமோ நமோ. 18
சித்திரநிறைவே நமோ நமோ. 19
சின்மயச்சுயம்பே நமோ நமோ. 20
உத்தமருளமே நமோ நமோ. 21
ஓஞ்சிவநமவே நமோ நமோ. 22
கண்டாருணர்வே நமோ நமோ. 23
காணார்மறைவே நமோ நமோ. 24
கொண்டார்கோலம் நமோ நமோ. 25
குணமறுங்குணமே நமோ நமோ. 26
தொண்டர்மதியே நமோ நமோ. 27
ஜோதியருளே நமோ நமோ. 28
அழியாநிதியே நமோ நமோ. 29
அகண்டவொளிவே நமோ நமோ. 30
தத்துவப்பிழப்பே நமோ நமோ. 31
தற்பதமணியே நமோ நமோ. 32
அகமேபிர்ம்மம் நமோ நமோ. 33
ஆன்மாசொரூபம் நமோ நமோ. 34

சித்திமணியே நமோ நமோ. 35
சிற்பரக்கனியே நமோ நமோ. 36
தொண்டர்குலாமே நமோ நமோ. 37
சுயமேதெளிவே நமோ நமோ. 38
மதியாமதியே நமோ நமோ. 39
மதிப்போர்மதியே நமோ நமோ. 40
முத்தர்முடிவே நமோ நமோ. 41
மோனமொழியே நமோ நமோ. 42
மொழியாரஸமே நமோ நமோ. 43
திருவருட்சுவையே நமோ நமோ. 44
திருவருள்ரஸமே நமோ நமோ. 45
குணமிலிமணமே நமோ நமோ. 46
குளிர்மிகுஞ்ஜோதி நமோ நமோ. 47
பொருளறிபொருளே நமோ நமோ. 48
பூரணநிதியே நமோ நமோ 49
ஓமெனுமுறவே நமோ நமோ. 50
ஒளியாவொளிவே நமோ நமோ. 51
கருணைநதியே நமோ நமோ. 52
கருணைமழையே நமோ நமோ. 53
கருணாநிதியே நமோ நமோ. 54
கருணாரஸமே நமோ நமோ. 55
தத்வவமிர்தே நமோ நமோ 56
சத்துக்களறிவே நமோ நமோ. 57
உத்தமர்மகிழ்வே நமோ நமோ. 58
ஒருதனிமணியே நமோ நமோ. 59
ஓங்காரப்பொருளே நமோ நமோ. 60
சிவமருள்சிவமே நமோ நமோ. 61
சிவஞானக்கனியே நமோ நமோ. 62
சிவசிவமணியே நமோ நமோ. 63
சீர்மைப்பொருளே நமோ நமோ. 64



தன்பதியரசே நமோ நமோ. 65
சாந்தவொளிவே நமோ நமோ. 66
சமயங்கடந்தோய் நமோ நமோ. 67
சர்வக்கனியே நமோ நமோ. 68
இருவினையில்லா நமோ நமோ 69
ஏகாந்தவொளிவே நமோ நமோ. 70
சச்சிதானந்தமே நமோ நமோ. 71
சைதன்யமணியே நமோ நமோ. 72
புராணமனுகா நமோ நமோ. 73
பூரணமணியே நமோ நமோ. 74
கர்மங்கடந்தோய் நமோ நமோ. 75
காரணப்பொருளே நமோ நமோ. 76
வேதங்காணா நமோ நமோ. 77
மெய்யேவெளியே நமோ நமோ. 78
வெளியேவொளிவே நமோ நமோ. 79
விமலபரமே நமோ நமோ. 80
கிரியைக்கடங்கா நமோ நமோ. 81
கிருபாநிதியே நமோ நமோ. 82
கிருபைக்கடலே நமோ நமோ. 83
கிருதார்த்தவொளிவே நமோ நமோ. 84
அருட்பெருஞ்ஜோதி நமோ நமோ. 85
அற்புதமணியே நமோ நமோ. 86
அகண்டவுணர்வே நமோ நமோ. 87
அசையாமணியே நமோ நமோ. 88
கண்டார்மணியே நமோ நமோ. 89
கண்மணிவொளிவே நமோ நமோ. 90
கருத்திற்கிசைந்தோய் நமோ நமோ 91
கடந்தசிவமே நமோ நமோ. 92
மறையாவொளிவே நமோ நமோ. 93
மஹத்தேமதியே நமோ நமோ. 94

மந்திரப்பொருளே நமோ நமோ. 95
மங்களசுயம்பே நமோ நமோ. 96
சுந்தரவொளியே நமோ நமோ. 97
ஜோதியருளே நமோ நமோ. 98
நீங்காநிஜமே நமோ நமோ. 99
நிச்சயவுறவே நமோ நமோ. 100
பதியருள்பொருளே நமோ நமோ. 101
பராஞ்சுடர்க்கொழுந்தே நமோ நமோ. 102
பத்தியுறவே நமோ நமோ. 103
பரம்பரஞ்ஜோதி . நமோ நமோ. 104
பத்தர்ருஜியே நமோ நமோ. 105
பாவனாதீதமே நமோ நமோ. 106
பருகுவர்க்கினிதே நமோ நமோ. 107
பதையாவமிர்தே நமோ நமோ 108
பகசாத்திரளே நமோ நமோ. 109
லக்ஷியப்பொருளே நமோ நமோ. 110
ரஞ்சிதநன்கே நமோ நமோ. 111
ரகஸியமகிழ்வே நமோ நமோ. 112

சிவோஹம்.

கருத்து:—மேலருளிச்செய்திராநின்ற பொருள் மந்திரத்தில் நமோ நமோ என்ற வாக்கியத்தின் இலக்கணம் ஆன்மாமயமாகிய நானே நானே சிவஞ்சிவமென்பதாமெனக்காண்க.

## சொரூப மகிழ்ச்சி.

### பியாண்டு மெண்டே.

விதேகவமிழ்துவமிழ்துசுகாதீதமருவியசுத்தவமிழ்து. 1
அகண்டசொரூபவமிழ்துதன்னையதீதமாக்கியளித்தவமிழ்து.
விஷயாகிதவமிழ்துவிதுவிள்ளுதிற்கெட்டாவிமலவமிழ்து. 3
துவேஷமனுகாவமிழ்துநித்யசுகாரம்பமானசுயம்புவமிழ்து.



நிற்தோந்தமானவமிழ்துசத்யநிராகாரமாகநிறைந்தவமிழ்து 5
காலாதீதமாவமிழ்துநிஷ்களங்கமாகக்கலந்தவமிழ்து. 6
அமிர்தமுற்றவமிழ்துசுயானந்தாதீதவசங்கவமிழ்து 7
நிரஞ்சனமானவமிழ்துசுத்தநிர்விகற்பமுற்றவமிழ்து. 8
பகராமாமோனவமிழ்துசத்யபாவாதீதமானவமிழ்து. 9
கற்பனாதீதவமிழ்துநிஷ்காமியமாகக்கலந்தவமிழ்து. 10
நிராலம்பமானவமிழ்துசுத்தநிர்ச்சங்கமாகவுற்றவமிழ்து. 11
நிர்ச்சலமானவமிழ்துமாநிராசையாகநின்றவமிழ்து. 12
நிரவயவமானவமிழ்துசுத்தநித்தியமாகநிறைந்தவமிழ்து. 13
நிர்விகாரவமிழ்துநித்யபூர்ணமாகநிறைந்தவமிழ்து. 14
சுத்தவத்வைதவமிழ்துநிர்நாமதுய்யமாகஜொலிக்குமமிழ்து.
நிர்குணமானவமிழ்துநித்யநிர்மலமாகநிற்குமமிழ்து. 16
சுட்டொழிந்தவமிழ்துசுத்த்சுயம்பிரகாசதுலங்குமமிழ்து 17
சத்தாயமர்ந்தவமிழ்துசுயசைதன்யமாகத்தனித்தவமிழ்து 18
சிற்பிரகாசவமிழ்துநிர்ச்சிந்தனையாகத்தெளிந்தவமிழ்து 19
ஸந்ததமானவமிழ்துநிர்சந்தேகமானஸகஜவமிழ்து. 20
ரகசியமானவமிழ்துஞானரத்னஹாரம்நட்டவமிழ்து [து
போராண்மையுற்றவமிழ்துமாபெருஞ்செருக்குபோதையமிழ்
எண்ணவிறுமாப்பமிழ்துவினிதேகாந்தபோதையினியவமிழ்
துரியாதீதமாவமிழ்துவரியதுய்யபோதஞ்சொக்குமமிழ்து[து
தித்திக்குந்திவ்யவமிழ்துதூயதேஜசுபழுத்தொழுகுமமிழ்து
உத்தியாற்சிறக்குமமிழ்துசத்யமுன்னதுண்ணுமுரியவமிழ்து
முத்தர்க்குற்றவமிழ்துசுயூழ்ற்றுப்பொருந்துமோனவமிழ்து
வித்தகவிமலமமிழ்துநித்யவிஞ்ஞானிமுற்றுவிளங்குமமிழ்து

சத்தத்திற்கெட்டாவமிழ்துவுரியசம்பூரணமுற்றுற்றவமிழ்து
சின்னுபின்னமற்றவமிழ்துரகஸ்யஜிதேந்திரியமாகத்திரண்ட
[வமிழ்து

சிவோஹம்.

## அஞ்ஞான நிலை

பொய்யைமெய்யென்றுபுலையாட்டம்பூண்டோர்க்
குய்யும்போதமேதடி யதீதமே
உய்யும்போதமேதடி. 1

அஞ்ஞானம்பூண்டமூக்கைச்சேவிப்போர்க்கும்
மெய்ஞ்ஞானமங்கேதடி அதீதமே
மெய்ஞ்ஞானமங்கேதடி. 2

போதமிழந்துபுலம்புமனத்தோர்க்கும்
வேதவாக்கங்கொவ்வாதடி யதீதமே
வேதவாக்கங்கொவ்வாதடி. 3

அனித்தியதேகமியானென்றணிந்தோர்க்குத்
தொனிக்காச்சுயமேதடி யதீதமே
தொனிக்காச்சுயமேதடி. 4

நான்பெரியோரென்றுநாடும்பேதையார்க்கு
வீணுண்மைபாசமடி யதீதமே
வீணுண்மைபாசமடி. 5

ஜாதிமேற்கீழென்றுசங்கித்தலைவோர்க்கு
ஜோதிமதிதோயாதடி யதீதமே
ஜோதிமதிதோயாதடி. 6



வேதியரென்றேறுதிவிகற்பித்திருப்போர்க்கு
ழுபாதியங்கோயாதடி. யதீதமே
உபாதியங்கோயாதடி. 7

உபாதியற்றந்தணராயுள்ளந்துறந்தோர்க்கு
ஜாதிவேறங்கேதடி யதீதமே
ஜாதிவேறங்கேதடி. 8

ஜாதிபேதமற்றுத்தனித்திடமாட்டார்க்குப்
பீதியுந்தீராதடி யதீதமே
பீதியுந்தீராதடி 9

பட்டிமாடுமேய்த்துப்பால்மயமறியார்க்குக்
கட்டித்தயிரேதடி யதீதமே
கட்டித்தயிரேதடி.. 10

கட்டித்தயிரினைக்கடைந்திடமாட்டார்க்குக்
கொட்டிடநெய்யேதடி யதீதமே
கொட்டிடநெய்யேதடி. 11

கொட்டிடாப்பொல்லாவாசனைகொண்டோர்க்குச்
சுட்டிடாதங்கேதடி யதீதமே
சுட்டிடாதங்கேதடி. 12

வஞ்சகமுற்றுவாக்குத்தொனிப்போர்க்குச்
சஞ்சலம்நீங்காதடி யதீதமே
சஞ்சலம்நீங்காதடி. 13

களங்காரஸமுண்டுகலங்கித்தவிப்போர்க்கு
விளங்காமாவுண்மையடி யதீதமே
விளங்காமாவுண்மையடி. 14

மாயாமயம்மாய்மயங்கித்திரிவோர்க்குத்
தூயமயமேதடி யதீதமே
தூயமயமேதடி. 15

வேதாந்தமோதினிநிலக்குற்றோர்க்குப்
போதம்பதைக்குமடி யதீதமே
போதம்பதைக்குமடி 16

போதம்பதைப்புற்றுப்பொறிவழிபோவோர்க்கும்
மோகமடியாதடி யதீதமே
மோகமடியாதடி. 17

மோகமடிந்திடமுன்னிலைபோக்கார்க்கு
யேகமுஞ்சேராதடி யதீதமே
யேகமுஞ்சேராதடி. 18

ஏகாந்தமுற்றிங்கிருந்திடமாட்டார்க்குஞ்
சோகமுந்தீராதடி யதீதமே
சோகமுந்தீராதடி. 19

சோகாதிவிஷயந்துறந்திடறியார்க்குஞ்
சாகாதுபாசமடி யதீதமே
சாகாதுபாசமடி. 20

சாகாப்பாசபந்தந்தழுவிச்சுகிப்போர்க்கு
நீங்காவிகாரமடி யதீதமே
நீங்காவிகாரமடி. 21

நீங்காவிகாரம்நிலைநாட்டிநின்றோர்க்குத்
தூங்காத்தூக்கமேதடி யதீதமே
தூங்காத்தூக்கமேதடி 22



தூங்காத்தூக்கமதைத்துடர்ந்துபிடியார்க்கு
நீங்காவின்பமேதடி யதீதமே
நீங்காவின்பமேதடி 23

நீங்காவிருவினைநிலைநாட்டிக்கொண்டோர்க்கு
வாங்காப்பதமேதடி யதீதமே
வாங்காப்பதமேதடி 24

வாங்காப்பதம்பெற்றுவசித்திடமாட்டார்க்கு
நீங்காப்பாவனையடி யதீதமே
நீங்காப்பாவனையடி 25

நீங்காப்பாவனைகெடநிலைகண்டறியார்க்கு
தேங்காச்சாதனையடி யதீதமே
தேங்காச்சாதனையடி 26

தேங்காச்சாதனையைத்தேக்கிநிறுத்தார்க்கு
வாங்காவாசனையடி யதீதமே
வாங்காவாசனையடி 27

வாங்காவாசனையறமருந்துண்ணமாட்டார்க்கு
நீங்காப்போதமேதடி யதீதமே
நீங்காப்போதமேதடி. 28

நீங்காப்போதந்தானாய்நிலைத்திடமாட்டார்க்கு
வாங்காப்போதையேதடி யதீதமே
வாங்காப்போதையேதடி 29

வாங்காப்போதைகொண்டுவாழ்ந்திடமாட்டார்க்கு
நீங்காத்தாகங்காணடி யதீதமே
நீங்காத்தாகங்காணடி. 30

நீங்காத்தாகமதைநீற்றிடமாட்டார்க்கு
வாங்காப்பொருளேதடி யதீதமே
வாங்காப்பொருளேதடி 31

வாங்கப்பொருளாய்வசித்திடமாட்டார்க்கு
நீங்காச்சுயமேதடி யதீதமே
நீங்காச்சுயமேதடி. 32

## மெய்ஞ்ஞான நிலை.

போதச்சுடரேற்றிப்பொருள்மயம்பூண்டோர்க்குப்
பேதவிருளங்கேதடி யதீதமே
பேதவிருளங்கேதடி. 33

பேதவிருளற்றுப்பிரம்மமாய்நின்றோர்க்குச்
சாதனைசத்யமடி யதீதமே
சாதனைசத்யமடி. 34

சாதனைபூட்டியஸகஜாநுநிஷ்டர்க்கு
வேதனைமீளாதடி யதீதமே
வேதனைமீளாதடி 35

வேதனைமீண்டிடாவிசேஷவினோதர்க்கு
நாதன்றான்வேறல்லடி யதீதமே
நாதன்றான்வேறல்லடி. 36

நாதனேதானாய்நனப்புமறப்பற்றோர்க்குப்
போதனம்பூர்த்தியடி யதீதமே
போதனம்பூர்த்தியடி. 37



போதனம்பூர்த்தித்துப்பூஷணம்பூண்டோர்க்கு
சேதனவிளையாட்டடி யதீதமே
சேதனவிளையாட்டடி. 38

சேதனாசேதனமின்றிச்சிவமாய்த்தெளிந்தோர்க்குப்
போதம்பொருத்தமடி யதீதமே
போதம்பொருத்தமடி 39

போதபூரணமுற்றுப்போக்குவரத்தற்றோர்க்குக்
கூறொண்ணாதானதடி யதீதமே
கூறொண்ணாதானதடி 40

கூறொண்ணாமோனமாய்க்குலாவுமறிஞர்க்குச்
சாரொண்ணாசாத்யமடி யதீதமே
சாரொண்ணாசாத்யமடி. 41

சாரொண்ணாசாத்யஞ்சமைந்தசமர்த்தர்க்கு
வேறெண்ணமீளாதடி யதீதமே
வேறெண்ணமீளாதடி. 42

வேறெண்ணமொன்றின்றிவீற்றிருப்போர்க்குக்
கூறத்தான்குறியேதடி யதீதமே
கூறத்தான்குறியேதடி: 43

கூறுப்பேராண்மைகொண்டுகொளிப்போர்க்கு
யோரத்தான்வேறேதடி யதீதமே
யோரத்தான்வேறேதடி. 44

ஓராவுண்ணாதாயொழிகியுறைந்தோர்க்குச்
சோராவமிர்தமதடி யதீதமே
சோராவமிர்தமதடி. 45

சோராவமிர்தமாய்த்தோய்ந்துமிருப்போர்க்கு
மாறுப்போதைதானடி யதீதமே
மாறுப்போதைதானடி. 46

மாறுப்போதையுண்டவஸ்துமதத்தோர்க்கு
போஸ்தலம்வேறல்லடி யதீதமே
போஸ்தலம்வேறல்லடி. 47

பேராவகண்டமாய்ப்பெருகிநிறைந்தோர்க்குச்
சேரச்சிவம்வேறல்லடி யதீதமே
சேரச்சிவம்வேறல்லடி 48

சேரச்சிவம்வேறின்றிசிற்சொரூபமுற்றோர்க்கு
யேறக்குறவங்கேதடி யதீதமே
யேறக்குறவங்கேதடி. 49

ஏற்றங்குறைவற்றிலங்குமேகத்தோர்க்குச்
சாற்றச்சமம்வேறல்லடி யதீதமே
சாற்றச்சமம்வேறல்லடி. 50

சாற்றச்சமுமற்றதத்வமாஞானத்தோரிங்கு
போற்றப்பொருள்வேறல்லடி யதீதமே
போற்றப்பொருள்வேறல்லடி 51

போற்றப்பொருள்வேறில்லாப்பூண்டமாமுத்தர்க்கு
மாற்றப்பதம்வேறல்லடி யதீதமே
மாற்றப்பதம்வேறல்லடி. 52

மாற்றுப்பதந்தானும்மஹாமர்ம்மமுற்றோர்க்கு
வேற்றுவிதிவிலக்கேதடி யதீதமே
வேற்றுவிதிவிலக்கேதடி. 53



வேற்றுவிதிவிலக்கற்றவிதேகமயத்தோர்க்கு
ஆற்றலபாரமடி யதீதமே
யாற்றலபாரமடி. 54

சிவோஹம்.

## அபேதபோதபோதைவிறுமாப்பாற்றன்னொடுகளித்தல்.

இராகம்—காம்போதி—தாளம் ஆதி

அங்கமேதுமிலாவரூபப்பையலேடி தான்
றங்குமிடங்கேட்டுத்தனித்திங்ஙன்வந்தாண்டி. 1

கண்களேமானாபிமானங்கெட்டானடி யென்
கையைக்குலுக்கிக்களித்துமகிழ்ந்தாண்டி. 2

மங்கையேமன்னனறைந்ததைக்கேளடி மஹா
மௌனமயமென்றும்வாக்காதிகெடுத்தாண்டி. 3

எங்கெங்குந்தானாயிருந்தவென்னேசண்டி அரிய
யென்னையுமிங்ஙனமிக்கோலஞ்செய்தாண்டி, 4

நன்குமாமஹாஞானப்பையலேடி மாயா
சங்கமறுத்தென்னைத்தனிக்கவைத்தானடி. 5

பாங்காய்ப்பதைப்பைப்பறித்தெரித்தானடி. துய்ய
பாக்கியமென்சொல்வேன்பாங்கிநீபாரடி 6

நோக்காமல்நோக்கியும்நோகாதெடுத்தாண்டி மா
நுட்பமாயென்னைத்தானுகந்துபுணர்ந்தாண்டி. 7

என்னடிபெண்களேயினியமாலையண்டி இவ
னென்னைவிறுமாப்புவிப்படிக்கூடுமோ, 8

ஸகஜமாயென்னோடிசைந்தசையோகண்டி அவன்
சாமர்த்தியமஹாதத்துவந்தான்றுண்டி. 9

உதியாதொடுங்காதுயர்ந்தவல்லாலண்டி என்னைப்
பதியாய்ப்பதித்தும்பகலிரவறுத்தாண்டி. 10

பொய்யாப்புதுமைமாபுருஷார்த்தனென்னோடி என்னைப்
போக்குவரத்தறப்புதுமைதான்புரிந்தாண்டி. 11

போதமயமதாய்ப்பூண்டவென்புனிதண்டி மா
பொக்ஷபெட்டகமாய்ப்பூட்டிட்டானென்னோடி 12

என்னாமோபேரின்பப்பொடியொன்றுபோட்டாண்டி. அவ
னெண்ணப்படியென்னையிசைத்துக்கொண்டானடி. 13

அன்னமேமாமஹாவரியவபாரண்டி மஹா
நிர்ணயம்பண்ணியேநீயேநானென்றாண்டி. 14

பாங்கிமாரேயென்னைப்பாங்காயெடுத்தாண்டி ஞான
பாக்கியமென்றென்னைப்பண்பாய்க்கொஞ்சினாண்டி. 15

நேசமேயென்றென்னைநேசித்துப்புணர்ந்தாண்டி மா
நேர்த்தியாய்க்கண்ணொடுகண்ணொத்திக்களித்தாண்டி. 16

ஓதாவிதேகமாயொழுகினான்கேளடி வேறொன்
றொப்பிலாதாக்கியுமுயர்வுசெய்தானடி. 17

ஸந்ததமாமஹாஸகஜகைவல்யண்டி மாயா
தொந்தவினையைத்துடைத்தசமர்த்தண்டி. 18

சுந்தரமொழுகியஸௌகந்தப்பையலேடி மஹா
மந்திரமாவஸ்துந்திரஞ்செய்தாண்டி 19

பேதாகிதமாய்ப்பெருக்கினானென்னோடி அபார
பிரம்மரகஸியம்பேசாப்பேசினாண்டி 20

என்னமோபோங்கடிவின்பப்பையலேடி ஓதா
வென்னாமோவோதிவிரண்டறநின்றாண்டி. 21



ஏகாந்தமென்றோதியென்னைக்கலந்தானடி நீநா
னெப்போதுமுள்ளமாவியர்க்கையென்றானேடி. 22

சதானந்தமென்றென்னைத்தழுவினான்பாரடி
சத்தியம்நாமெனச்சருவினானென்னோடி 23

துய்யசுகாதீதசுபாவப்பையலேடி இவன்
சொல்லுக்குமடங்கிடாஜொலிக்கிறானென்னோடி. 24

உத்திக்குகந்தமாவொருதனிவுரியண்டி அவன்
பத்தியமென்னோபார்பாவித்தாற்பதியாண்டி. 25

முத்தேமுழுதுமாய்முடிந்தபையலேடி மோன
சுத்தவீரனென்னோச்சுட்டாஜோடித்தாண்டி. 26

இவன்செய்ற்கூறவுமொட்டாப்போனதடி பா
ரிந்தப்போராண்மையுமிப்படியாமோடி 27

கருத்திற்கிசைந்தகனிவுள்ளான்பாரடி மாயா
கற்பனைமுற்றுங்கறந்தென்னைக்கலந்தாண்டி. 28

சிறிதுபெரிதற்றுச்சிறந்தபூரதிவ்யண்டி மா
சீமான்நாமமுஞ்செப்பப்படாதடி. 29

அடிபோடிவிவனென்னோவடங்காவதீதண்டி சத்ய
வபாரமதாக்கியுமழுகிட்டுக்களித்தாண்டி. 30

தோஷநாசமற்றசூஸ்திரமாசுகந்தண்டி அபேத
சூடாமணிக்கோவைஜோடித்தானென்னோடி. 31

வாடாக்குளிராவளர்ந்தபையலேடி மஹா
வாடாமலர்ஹாரமௌனமாய்த்தரித்தாண்டி. 32

பூரணப்பட்டாடைபொருத்தினானென்னோடி பரி
பூரணமென்றென்னைபூர்த்திபூட்டினாண்டி. 33

நிராவரணங்கொண்டலங்காரஞ்செய்தாண்டி மா
நேர்த்திநேர்த்தியென்னநேசித்துமகிழ்ந்தாண்டி. 34

என்னடிவிவனென்றோவிருமசப்புக்காரண்டி துய்ய
புன்னகைபுரிந்தும்பொய்யையெரித்தானேடி. 35

ஐயோவிவனென்றோவத்வைதச்செருக்கண்டி மா
வபேதகெம்பீரமடங்காதுபோங்கடி 36

தோழிமாரேயிவன்றோமுன்போல்வந்தாண்டி கொஞ்சந்
தொட்டேனொட்டிவுறைந்திட்டான்போங்கடி. 37

அடிமாதேமாமஹாவசங்கப்பையலேடி இவனை
யடுத்தாலதுவேயவன்கதிதானடி. 38

அடிமாமதிவிவனாண்பெண்ணலியோடி இவ
னடையாளமறையவுமடுக்காதுபோங்கடி. 39

பாவனாதீதம்பதிந்தபையலேடி என்னைப்
பரஸ்பரமாகப்பதித்துப்போட்டானடி. 40

எல்லாமுள்ளும்புறம்பெனையிசைத்தானேடி இவ
னிப்படிச்செய்திடவென்னாமோஞாயங்கேள். 41

வேஷாதிகளெட்டாவிலக்ஷணப்பையண்டி சொரூப
வேடிக்கைகாட்டிவிதேகமாய்ச்செய்தாண்டி. 42

என்னாணைசத்யமாவுண்மைபுகன்றாண்டி அவ
னென்னாமோநிர்விகற்பமென்றுமுகந்தாண்டி. 43

சித்துமயமாய்ச்சிறப்பித்தானென்றோடி நீநான்
சின்மயமென்றென்னைத்தெளிவாய்ஸ்தாபித்தாண்டி. 44

சத்தியமென்றென்னைத்தாக்கினான்காணடி மா
ஸகஜாநுபூதியாய்த்தங்கிட்டிங்கடி. 45



கொஞ்சுங்குணாதீதக்கோமளப்பையண்டி அவன்
கொண்டமாகோலந்தான்கொளிக்குதுபோங்கடி. 46

சுத்தசுகாதீதசுயம்புப்பையல்போடி மௌன
சுபாவசுயமாக்கித்தொடுத்திட்டானென்றோடி. 47

விஷயாகிதமாய்விளக்கிப்பூரித்தாண்டி சுய
விஞ்ஞானமென்றென்னைவிளையாட்டுச்செய்தாண்டி. 48

அஞ்சாப்போராண்மைதானாகுமோவென்றோடி மஹா
வற்புதநிற்பயமாக்கிப்போட்டானேடி. 49

ததாகாரமென்றென்னைத்தழுவினானென்றோடி யபேத
தத்துவஞானமாசைதன்யசத்யண்டி. 50

சிவோஹம்,

## ஞானசித்தி.

வெட்டவெளிதனிலொட்டுக்கனியொன்றாகட்டிகனிந்ததடி
அம்மம்மாமட்டுக்கடங்காதடியம்மம்மாமுத்திப்பழுத்ததடி

கட்டுக்கடங்காக்கனிந்தகனிரஸஞ்சுட்டாமதுரமடி
அம்மம்மாவொட்டிவுறைந்ததடியம்மம்மாகட்டிவமிர்தமடி 2

ஒட்டியுறைந்திட்டகட்டியமிர்தத்தைப்பிட்டிடவெட்டாதடி
அம்மம்மாதொட்டுண்ணச்சுவையீதடியம்மம்மாதட்டில்லா
விளைந்ததடி 3

தொட்டிடார்களியஞ்சோராமதுரங்கமொட்டிடக்கட்டியடி
அம்மம்மாவிட்டுப்பிரியாதடியம்மம்மாகொட்டித்திரண்டதடி

விட்டுப்பிரிந்திடாவிமலமாநித்யமாய்மேவிச்சிறந்ததடி
அம்மம்மாபாவிக்கப்பற்றாதடியம்மம்மாரேசிக்கக்கிட்டுமடி 5.

ரேசித்துப்பூண்டநிரஞ்சனவமிர்தூறல்வாசியோகிக்கிக்கிட்
டாதடி, அம்மம்மாசிவயோகிக்கித்தக்கதடியம்மம்மாதேகோ
கிக்கெட்டாதடி 6

சிவயோகநிலமதிற்றேறித்தெளிந்ததிவ்யவபேதசுயப்பாகடி
அம்மம்மாயேகக்கட்டிச்சாரடியம்மம்மாதாகம்விட்டுப்போமடி

தாகமுங்கெட்டிட்டதத்வப்பிழம்பதுதேங்கித்ததும்புதடி
அம்மம்மாவாங்கிப்பாருமதடியம்மம்மாவோங்கிப்பொங்குமீ
தடி 8

ஓங்கிப்பொங்கியெங்குமொருங்கேவிதேகத்தேனீங்காத்தித்
திப்பீதடி, அம்மம்மாவாங்காத்தோய்வுகாணடி யம்மம்மாப்
பாங்காய்ப்பதமீதடி 9

பாங்காய்ப்பதமாய்ப்பதிந்தஞானத்தங்கம்வாங்காச்சரமீதடி
அம்மம்மாநீங்காமோனமுத்தடியம்மம்மாஞானரத்னநத்தடி

ஞானமெய்ரத்னஹாரம்நாமாயணிந்தழகுவோங்கித்துங்கு
மீதடி, அம்மம்மாவாங்கிப்பூண்பாரடியம்மம்மாநீங்காபொக்
ஷமீதடி 11

நீங்காபொக்ஷமதுநிறைந்துபூரணமாய்ப்பாங்காய்பூண்டதீத
டி, அம்மம்மாதூங்காத்தூக்கமீதடியம்மம்மாநீங்காசொக்கிப்
போமடி 12

சொக்கியசொக்காய்ச்சும்மாவிருந்திடதத்தக்கதுதான்றானடி
அம்மம்மாபக்வபாகஞ்சேரடியம்மம்மாசிக்கெனப்பூண்டதடி

சிக்கெனப்பூண்டமாசெல்வத்ததாகாரமொக்கக்கரைந்ததடி
அம்மம்மாநிற்கச்சந்தமடியம்மம்மாவூக்கச்சீயம்பீதடி 14



ஊக்கநித்யமதாயுறைந்தமஹாமோனமொத்துசித்தியீதடி
அம்மம்மாவுத்திக்குகந்ததடியம்மம்மாதக்கமஹத்வமடி. 15

தக்கமஹத்வசைதன்யவிறுமாப்புவொத்துச்செருக்கீதடி
அம்மம்மாசத்துப்போராண்மையடியம்மம்மாவஸ்துபோதை
யீதடி சிவோஹம். 19

## தத்துவவமிர்தம்.

1. நாலெட்டுமூன்றைக்களைந்தவிடத்தொருரத்னமிருக்குதடா
தனிமுத்துப்பதித்ததடாவேதம்வெட்கிக்களித்ததடாஞான
முத்திஜொலித்ததடாபோதமொப்பிவுகந்ததடாஅபேதஞ்
சொக்கித்தனித்ததடாவிதேகம்பொங்கித்ததும்புதடா
ஜோதிவஸ்துக்கோவையீதடாமோனம்நித்யப்பதக்கமடா
கண்மணியொப்பியணிந்திடடா அடடடா (நாலெட்டு)

2. ஒன்பதுபத்தைந்தைக்கறந்தவிடத்தொருசத்யஞ்ஜொலிக்கு
தடாதெருட்போதம்பழுத்ததடாவருட்ஜோதிவெளிச்ச
மடாபொருட்டேங்கிக்கொளித்ததடாசுயம்பொத்துத்
தனித்ததடாசத்துத்தத்திமருவுதடாமெய்ஞ்ஞானக்கொத்
துமாஹாரமடா குருவுத்திவொத்துக்கோத்திட்டதடா
கண்மணிவொத்துப்பூண்டுநில்லடா அடடடா (ஒன்பது)

3. அகம்பிரம்மமாகவமர்ந்தவிடத்தந்தசுகபிரம்மந்தாமதடா
பொய்ஜகமற்றுப்போனதடாமெய்ச்சுயமுற்றுவாழுதடா
அழியாநிதியுற்றுநின்றதடாமொழியாவிதமுற்றுக்கொண்
டதடாசலியாமதஞ்சொக்கிப்பூண்டதடாமெலியாவருட்
கொட்டிநின்றதடாமதியாப்பதமுற்றுத்துங்குதடா
விதியாக்கதியுற்றுக்கொண்டதடாபதியாப்பதியுற்றுநின்ற
தடாமாறுமதியுற்றுக்கண்டதடாகண்மணிதனியுற்றுப்
பூண்டிடடா. அடடடா (அகம்பிரம்மமாக)

சிவோஹம்.

1 பொருளொன்றாகியபூரணபூர்த்தி.
2 தெருள்பெறவளர்ந்தசிற்பரவஸ்து.
3 அருள்வளரநுபவமத்வைதநித்யம்.
4 பருவமிருந்தவர்பரவும்பராபரம்
5 அருவமலமானவகண்டசொரூபம்.
6 பெருவெளிப்பெருமைபேரின்பவமிர்தம்
7 ஒருநிறைநிறைவுவொப்பில்லாவுணர்வு.
8 இருளறும்மருந்துயேகாந்தவினிது.
9 நிர்விஷயானந்தம்நிஷ்களங்கொளிவு.
10 கற்பனைகடந்தமஹாகாரணவான்மா.
11 அற்புதக்காக்ஷியழிவிறந்தநித்தியம்.
12 செப்பறச்சிறந்தசெல்வச்சிகாமணி.
13 ஒப்பறுமோனமோயாப்பெருவாழ்வு.
14 பற்றறப்பற்றும்பற்றறுங்களிப்பு.
15 உள்ளத்தொடுங்குமொருதனிச்சத்து.
16 கள்ளப்புலனைக்கடந்தருள்கருத்து.
17 தெள்ளித்தெளிந்தசித்தம்நிறைவு.
18 அள்ளக்குறையாவானந்தாதீதம்.
19 சித்தஞ்சலியாசின்மயப்பேரொளிவு.
20 சத்தியமெய்ப்புணர்வுசைதன்யசாஸ்வதம்.
21 சுத்தநிர்மலஞ்சுட்டறும்மந்திரம்.
22 குணங்குறியற்றகுருமணிக்கோவை.
23 தன்பதியரசுதற்பதலக்ஷியம்.
24 துவம்பதப்பொருளதுதோன்றாச்சுகாதீதம்.



25 காண்பதைக்கறக்குங்கரதலாமலக்கனி.
26 நான்மறைபோற்றும்நற்றவவருட்கொழுந்து.
27 பெருந்தவச்சுடரொளிவுபேரின்பமஹாமகிமை.
28 அருந்தவக்கனிரஸமத்துவைதநிஷ்களங்கம்.
29 ஆணவமறவெழுந்தவருட்பெருஞ்சுயஞ்ஜோதி.
30 தனையுணரவளர்ந்தமாதனிச்சின்மாத்திரம்.
31 பொறியைக்கடந்துற்றமாபுத்திநிர்விகற்பம்.
32 காரணாதிகளொடுங்கக்கலந்தவ்ருட்கைவல்யம்.
33 சுட்டிடவொண்ணாத்துரியாதீதச்சுயம்பொருள்.
34 மட்டில்லாமெய்ஞ்ஞானமஹாமௌனமந்திரம்.
35 பதைப்பற்றபரம்பொருள்பரப்பிரம்மமாதேஜசு.
36 சிறப்புறுஞ்செல்வஞ்சிதானந்தக்கனிரஸம்.
37 சொல்லிடாச்சுகாரம்பஞ்சுத்தமெய்ப்பாகு.
38 தேறித்தெளிந்ததிரண்டமாவருட்சுவை.
39 நீங்காப்பரிமளம்நிச்சயமாமெய்ஞ்ஞானம்.
40 தூங்காததூக்கஞ்சும்மாவிருக்குஞ்சொஸ்தம்.
41 சிவயோகம்பொழிமுகில்திவ்யப்பிரவாகம்.
42 தீங்கறுங்கட்டித்தேன்றெவிட்டாத்தெருட்கனி.
43 பரஸ்பரவமிர்தம்பரமார்த்தவோருணர்வு.
44 நிராசைப்பெரும்நிதிநிரந்தரமாசூஸ்திரம்.
45 நிர்விஷயமருஞ்சுவைநிராகாரநியமவின்பம்.
46 நிர்விகாரசுயஞ்சுகம்நிற்தொந்தநிதிவாழ்வு.
47 நிமலபரமேகம்நீங்காவருட்சுதந்திரத்வம்.
48 பெற்றிடாப்பெருமைபெருமைமாமஹத்வம்.

49 வற்றிவ்லாப்பெருக்குமடைதிறந்தசுகவாழாழி.
50 முற்றறிமுத்துமுற்றுணர்ந்தபெரும்பயன்.
51 வித்தில்லாவிளைவுவிளையும்விஞ்ஞானவித்து.
52 சலனமறவெழுந்தசையோகசுயவாழ்வு.
53 ஜோதிமதிவிளக்குசுகவசந்தவெளியொளிவு.
54 சமயாதீதசத்யத்வஞ்சாற்றவொண்ணுமந்திரம்.
55 தடையற்றசுகானந்தந்தட்டற்றநிர்விஷயம் [ம்
56 இடையற்றசிவானந்தமினிதுபொங்குஞ்சதானந்த
57 கொடையுற்றதயாநிதிகுறியழிக்குங்குணதீதம்.
58 அகமற்றவருட்பதிவகம்பிரம்மமானநிதி.
59 ஸமரஸமாசுயபதிசச்சிதானந்ததனிமாபதி.
60 ஆரூடநிரஞ்சனமபரோக்ஷாநுபூதிநிரந்தரம்.
61 யோகத்தின்பொலிவுவொழிவற்றநித்யத்வம்
62 வேதாதீதம்மெய்கண்டதோர்மெய்ச்சத்து
63 சற்குருவருள்சுயவிருந்துசற்சீடர்கொள்ளமிர்து
64 அபேதமருள்விருந்துயத்துவைதஞ்சேர்பாகம்
65 விதேகமஹாவிகிர்தம்விமலமாகைவல்யம்
6e தொண்டர்க்கெளிதுதுய்யசுத்தமெய்ச்சத்து
67 சிறந்தோர்குலக்கொழுந்துதீயவுள்ளமறுந்துறவு
68 பதிபதிந்தசிவபோதம்பரமார்த்தசுயபோதம்
69 தனையறிந்தசையோகந்தனைப்பிரியாவருட்போகம்
70 சினமிறந்தசிவதிவ்யமருள்நிறைந்தபரமபவ்யம்
71 மனமிறந்தசிற்சொரூபம்மாமஹாமௌனசுழுத்தி
72 கனலெணுகாக்கருணைநிழல்கற்பனாகிதத்தினியல்பு



73 சதாவுதயச்சந்திரகாந்திசர்வ்முறுஞ்சித்தசாந்தி
74 வினையிறந்தவிஸ்ராந்திவிதியிறந்தமதிசாந்தம் [ம்
75 பதம்நிறைந்தபரமகதிபதையாதொழுகும்பரமசுக
76 கணம்பிரியாநிஜவிரதங்கதியதுவாயமர்ந்தபதம் [சி
77 அகண்டமென்றசர்வசாக்ஷியயலில்லாஞானசூழ்ச்
78 தொண்டர்கொண்டகோலந்துவிதமற்றமாதுய்யம்
79 ஒட்டுவோரொட்டியொடுங்கிநிற்குந்தனியேகம்
80 ஓமென்றெழுந்தோங்குமோங்காரப்ரணவம்
81 நீங்கர்தவின்பம்நிர்விகாரநியமப்புணர்ச்சி
82 தானென்றமஹத்துவந்தானனமாதனிசத்யம்
83 பேதமற்றபிரம்மம்பிரிவற்றசுயமாவாசு
84 தனித்திருந்ததத்துவந்தனையுணர்ந்தநித்தியம்
85 காட்டொண்ணாரகஸியங்கண்டோரருள்விருந்து
86 நீட்டிமடக்கறியாநிறைந்தமாபரிபூரணத்வம்
87 பாவிக்கப்பற்றிடாப்பருவமுற்றபதமாமலர்ச்சி
88 சோதிக்கச்சுயமாகுஞ்சும்மாவிருக்கும்சுயம்பு
89 ஞானமதுப்போதைநாட்டமற்றஞானமதம்
90 நிகரில்லாவிறுமாப்புநீக்கமற்றபெருஞ்சிறப்பு [தை
91 அரிதரிதுபிரம்மவித்தையதிலொடுங்குமபேதவித்
92 தனித்திருந்தஸகஜநிஷ்டைதானனசொரூபநிஷ்
93 இருளொளிவுகறந்தமாவிடாற்றபோானந்தம்[டை
94 பெருமைசிறுமையற்றபேரின்பமாபோாண்மை
95 கருணைபொழிந்தமழைகரைகடந்தபெருவெள்ளம்
96 சுகதுக்கமறவாழ்ந்தசுத்தநித்தியமாவென்னிறைவு

97 கண்டோரைவிழுங்குங்கற்பூரம்புணர்தீபம் [னம்
98 விண்டாலுமிரண்டாகும்விதேகமுற்றமஹாமௌ
99 தொண்டர்பூண்டபேரின்பம்தோன்றுமாகேவலம்
100 பண்புற்றமாபரம்பொருள்பங்கமற்றமெய்வாழ்வு
101 நீங்காச்சுயஞ்சொக்குநிர்ச்சலனமாநிஷ்கிரியை
102 தன்னையளித்தெழுந்தசச்சிதானந்தப்பாருபதம் [ம்
103 புழுமுதலெல்லாமும்பொருந்திநின்றபொருளேக
104 சுருதிகள்கோடிசொல்லியுந்தோன்றாச்சுயசுத்தம்
105 சொரூபமெய்ஞ்ஞானியோர்சொல்லிலமைவுபாகம்
106 ஆடாதாடுமாட்டமசைவுமற்றபரிபூர்ணத்வம்
107 ஊமென்னுமுரிமையுள்ளமொழிந்தமாவுன்னதம்
108 அதுவதுவாகுமதுகமோகமோசிவோஹம்

சிவோஹம்.

## பேரானந்தக்கண்ணி.

தூய்யசுயவருளாற்சொல்லாமற்சென்னவின்ப
ஐயமறவிழுங்கியதுதான்றானாய்நின்றதுவே 1

பொய்யிறந்தமெய்யாய்ப்பரிபூரணமதாயெழுந்து
பெய்யுங்கருணைவெள்ளம்பெருகிநிறைந்ததுவே 2

பாரொடுபூதமைந்தும்படர்கானல்ஜலமெனவே
நீரொடுபால்போல்நீங்காமற்றோய்வுற்றதுவே 3

வாக்காதிகர்ம்மமைந்தைவந்தணுகிடொட்டாமல்
நோக்கதைநோக்கிமாநுண்ணறிவாய்வாழ்ந்ததுவே 4

காமாதிராகத்வேஷப்பொய்கண்விழித்துப்பாராமற்
றேகாதிபொய்யெனவேதேறித்தெளிந்ததுவே 5



அசைவிறந்தமாமௌனவத்வைதநித்யத்வம்
வஸமாகச்சொக்கிவாக்கிறந்துநின்றதுவே 6

நாமரூபமற்றதுவும்நான்றனியாய்நின்றதுவுங்
கோமானருள்பெருகிவிக்கோலம்புரிந்ததுவே 7

திரிகுணமிறந்ததுவுஞ்சின்மயமாயநின்றதுவு
மரிதெனுமாமெய்ஞ்ஞானமளித்தசுயமிதுவே 8

சொல்லாதேசும்மாவிருசொல்லறவேயென்றசுகங்
கல்லாதமாந்தர்க்குங்காணமல்வாழ்ந்ததுவே. 9

மும்மலமற்றதுவுமுன்னும்பின்னுமிறந்ததுவுங்
கள்ளமற்றவுள்ளங்கனிந்தபெருவாழ்விதுவே. 10

தத்துவக்கூத்தாடினதுந்தானேதானாய்ப்பார்த்ததுவுஞ்
சித்துசித்திநிறைந்ததேசிகனார்மெய்வாழ்விதுவே. 11

பித்தந்தெளிந்ததுவும்பேரின்பம்மூடினதுஞ்
சுத்தநிர்விகற்பஞ்சொரிந்தவருள்மழையே. 12

விதிவிலக்கற்றதுவும்விமலபரமுற்றதுவும்
பதியுற்றமாமோனம்பண்ணிவைத்தகோலமிதே. 13

போக்குவரத்தற்றதுவும்பொருளாகிநின்றதுவும்
நீக்கமற்றவஸ்துவதாய்நின்றநிலையிதுவே. 14

சுட்டற்றுப்போனதுவுஞ்சும்மாவேவைத்ததுவுங்
கட்டற்றமெய்ஞ்ஞானக்கயிற்பொருத்திக்கட்டினதே. 15

சத்துச்சித்தானதுவுஞ்சைதன்யமதாயுற்றதுவுஞ்
சித்துசித்தியால்விளைந்தசெல்வத்திரவியமே. 16

காணதைக்கண்டதுவுங்கண்டதுவாய்நின்றதுவும்
தோணுமௌனநிஷ்டைதொட்டவிக்கோலமிதே. 17

பற்றறப்பற்றினதும்பற்றற்றுத்தனித்ததுவுங்
குற்றமற்றநித்தியத்தின்கோலமற்றகோலமிதே. 18

ஞானமதங்கொண்டதுவுஞ்ஞாலமதைவென்றதுவுங்
காலமூன்றுமற்றதுவுங்கண்டார்கொண்டகோலமிதே. 19

பேதமிறந்ததுவுஞ்சுத்தபிரம்மமாமிஞ்சினதும்
மாதவமீன்றளித்தமஹத்துவத்தின்மர்ம்மமிதே. 20

சத்துச்சித்தானந்தமுஞ்சதானந்தமாயெழுந்து
சுத்தவஸ்துநித்தியமாய்சுயமுற்றுவாழ்ந்ததுவே. 21

அண்டபிண்டசராசரமுந்தனையன்றிவேறுமுண்டோ
கண்டதெல்லாமாபோனக்கருத்தாயிசைந்ததுவே. 22

பண்டமெனும்பொருளேபதைப்பிறந்துநின்றதுவுந்
தொண்டர்க்குத்தொண்டாய்ச்சுயமாய்ச்சுகித்ததுவே. 23

நீங்காச்சையோகத்தால்நிர்விகற்பநிஷ்டையினிற்
றாங்காமற்றாங்கிச்சொக்கித்தனியானதுவே. 24

சத்தியசிற்சுயமேசமயாதீதப்பொருள்தானாய்ச்
சித்திநிறைந்தமாசின்மயமாய்த்தெளிந்ததுவே. 25

தன்னையறிந்ததுவுந்தான்றானாய்நின்றதுவுந்
தன்னைத்தானறிந்துதானுமுற்றகோலமிதே. 26

கற்பனைகளற்றதுவுங்காலாதீதமுற்றதுவுஞ்
சொச்சொரூபமாய்நிறைந்தசூட்சிவிதுவாமே. 27

மதமெல்லாமில்லாததுவும்மதாதீதமானதுவும்
பதம்நிறைந்தபராபரத்தின்பார்வைச்சமர்த்தாமே. 28

விட்டிடத்தைத்தொட்டதுவும்விமலபரமுற்றதுவும்
மட்டில்லாச்சத்தியத்தின்மாமகிமைமஹத்துவமே. 29



எல்லாமாயானதுவுமேகமாய்நின்றதுவும்
வல்லானருளின்மாவல்லபமிதுவாமிதுவே. 30

சுருதிக்கெட்டாததுவுஞ்சொல்லறவதுவானதுவும்
உறுதிவுணர்வொத்துன்னதமதாய்வாழ்ந்ததுவே. 31

இரண்டறக்கலந்ததுவுமேகமாய்மிஞ்சினதுந்
திரண்டவருட்சுவையின்செல்வமதிப்பாகிதுவே. 32

அஞ்சர்ச்சுயவரசுமழிவிறந்தமாமந்திரியும்
மிஞ்சுஞ்சொரூபமெனமேவிக்களித்ததுவே. 33.

நிராசைப்பெருவாழ்வுநிரந்தரமாசுயசம்பத்து
சிறந்தசிவானந்தஞ்ஜெயமுற்றுவாழ்ந்ததுவே. 34

துறந்தோர்க்குப்பேரின்பஞ்சுட்டற்றோர்க்குமெய்ஞ்ஞானம்
அறத்தோர்க்குத்தவக்கொழுந்தாயங்கங்குமுற்றதுவே. 35

துவிதிக்கிதூரமாகுஞ்சுட்டச்சுட்டயெட்டிநிற்கும்
அத்துவிதிசுதந்தரமாயசைவிறந்தமோனமிதே. 36

தோன்றிலயமானதுபோற்றோற்றமின்றிச்சம்பந்தமோ
தான்றனிச்சத்தியமாய்த்தனித்தமஹாசமர்த்திதுவே. 37

கர்ம்மக்கிரியையினிற்கண்டசுகஞ்சிற்றின்பமென
நிஷ்கிரியாநேமமதாய்நேசித்தபேரின்பமிதுவே. 38

அஷ்டாங்கயோகமதிலகண்டசிவயோகமென்றே
நிஷ்டாநுபூதியதாய்நேசித்தபிரம்மஞானமிதே. 39

நிஷ்டையெனும்நிர்விகற்பம்நிறைந்தமெய்ஞ்ஞானத்தா
லஷ்டசித்தியாவுமடங்கிவொன்றாய்ச்சுகித்ததுவே. 40

மறைநான்குந்தேடிவாக்கிறந்துபோனபொருள்
வரையின்றிச்சுதந்திரமாய்வாழ்ந்துசுகித்ததுவே. 41.

பாவபுண்ணியமதைபஸ்பம்பண்ணிமெய்ஞ்ஞானம்
பூரணமாவஸ்துவதாய்பொருந்திநிறைந்ததுவே. 42

அதுவிதுவென்றலடுக்குஞ்சங்கையென்றோர்ந்து
மதுரங்கமாமௌனமதாய்வாழ்ந்துசுகித்ததுவே. 43

சிவோஹம்

## அமிர்தம்.

### இராகம்—பூபாளம்

சுயசுயமாதவந்தோய்வுற்றவமிர்தே
தூயநிஷ்களங்கமாய்ஜொலித்திடுமமிர்தே
நேயானுபூதியில்விளைந்தமாவமிர்தே
நித்யமாநீநானாய்ரேசித்தவமிர்தே. 1

மாயைரகிதமாய்மகிந்தமாவுமிர்தே
மங்களமமங்களமற்றமாவுமிர்தே
ஓயாமெய்வாழ்வதாயுறைந்திடுமமிர்தே
வுத்தமருளமதாயொழுகிடுமமிர்தே. 2

கல்மனர்கண்டிடாக்கனிவுறுமமிர்தே
காலத்திற்கப்பாற்கண்டிடுமமிர்தே
வல்லமாமுனிவோர்கள்மருவிடுமமிர்தே
வற்றாப்பெருகிடாவாய்த்தமாவமிர்தே. 3

இருள்பயிரிடும்பேதற்கிசைந்திடாவமிர்தே
யேகாந்தவினியோர்க்கிசைந்திடுமமிர்தே
தெருளுறும்மயமதாய்த்திரண்டதெள்ளமிர்தே
திவ்யமுத்திசித்திதேக்குமென்னமிர்தே. 4



சித்தசலனமுற்றோர்தெரிந்திடாவமிர்தே
தீரவல்லவர்தானாய்த்தெளிந்தமாவமிர்தே
சுத்தவபேதமாய்த்துலங்கிடுமமிர்தே
துரியநிலமதிற்றோய்ந்திடுமமிர்தே. 5

வஞ்சநெஞ்சகர்ம்மர்க்கெட்டிடாவமிர்தே
வலையின்றிருப்போர்க்குமருவியவமிர்தே
தஞ்சமென்றடைந்தோர்க்குத்தானானவமிர்தே
சங்கர்ப்பர்கண்டிடாத்தத்துவவமிர்தே. 6

தொண்டர்களுண்டிடுஞ்ஜோதிமாவமிர்தே
தொந்தரகிதமாகச்சொக்கிடுமமிர்தே
பந்தவினையர்க்குப்பதிந்திடாவமிர்தே
பாங்குறுமுத்தர்க்குப்பதிவானவமிர்தே. 7

சொல்லுதற்கெட்டாத்துலங்குமாவமிர்தே
துக்கசுகரகிதமுற்றமாவமிர்தே
அல்லும்பகலுமற்றோரருந்துமாவமிர்தே
யகம்புறம்பெங்குமமர்ந்தமாவமிர்தே. 8

போதமயமதாய்ப்பொங்கிடுமமிர்தே.
புருஷார்த்தமோக்ஷமாய்ப்பொருந்தியவமிர்தே
வேதமுடிவினில்விளங்கிடுமமிர்தே
வித்தகமாவித்தாய்விளையாடுமமிர்தே. 9

ஜோதிமாசுயம்பதாய்சொக்கியவமிர்தே
சொரூபமெய்ஞ்ஞானத்தித்திற்றுலங்கிடுமமிர்தே
ஆதிநடுவந்தமற்றமாவமிர்தே
யதீதமயமதாயமர்ந்தமாவமிர்தே 10

ஸந்ததமாகத்தனித்தமாவமிர்தே
சத்தியந்தானாயுகந்திடுமமிர்தே
சொந்தமாமஹத்துவஞ்சொக்கிடுமமிர்தே
சொல்லறுஞ்சொல்லதாய்ச்சூட்டுமாவமிர்தே. 11

சுட்டுதற்கெட்டிடாச்சுகந்தமாவமிர்தே
சுட்டொழிந்தோர்தானாய்ச்சுகித்திடுமமிர்தே
கட்டுக்குமெட்டாக்கடந்தமாவமிர்தே
கட்டற்றோருள்ளங்களிக்குமாவமிர்தே 12

நிராகாரவமலமாய்ரேசித்தவமிர்தே
நீங்காமாநீனாய்நின்றிடுமமிர்தே
புராணமனாகாப்பூண்டவென்னமிர்தே
புண்ணியபாவரகிதமாவமிர்தே. 13

ஸகஜாநுபூதிததும்புமாவமிர்தே
சத்தியநிர்மலமுற்றமாவமிர்தே
ஜெகநேயசகுணமனாகிடாவமிர்தே
திவ்யமாநிற்குணமாகியவமிர்தே. 14

விஷயரகிதமாய்விளங்கிடுமமிர்தே
விருத்திசூனியமாயுற்றமாவமிர்தே
அசையாநிரந்தரமாகியவமிர்தே
யற்புதநிர்விகற்பமாமஹாவமிர்தே. 15

நேசநிர்ச்சின்னமாய்நிறைந்தமாவமிர்தே
நேயவசங்கமாய்நிற்கும்நல்லமிர்தே
கோசங்குலைத்துற்றோர்குலாவுமாவமிர்தே
குறிகுணரகிதமாய்க்கூடும்நல்லமிர்தே. 16



பேதரகிதமாய்ப்பெற்றமாவமிர்தே
பிரம்மமெய்ஞ்ஞானராய்ப்பிரிவற்றவமிர்தே
சாதனசாத்தியமுற்றமாவமிர்தே
ஸாம்பிராஜ்யந்தானாய்த்தனித்தநல்லமிர்தே 17

நிராலம்பவத்வைதநியமமாவமிர்தே
நீக்கமற்றிலங்கியநிர்ஜகவமிர்தே
கூறுவிதேகப்பிழம்பெனுமமிர்தே
கூவுதற்கெட்டிடாக்குலாவுமாவமிர்தே. 18

கோதில்லாநிர்விகாரங்கொண்டமாவமிர்தே
சூரவர்கூட்டுறவதாய்க்கொளிக்குமாவமிர்தே
பேதித்துமயங்குவர்பெற்றிடாவமிர்தே
பெரிதெனும்பெரிதாய்ப்பெருகியவமிர்தே. 19

சுத்தநிஷ்கிரியைசொரிந்தமாவமிர்தே
சொரூபசுயம்பதாயமர்ந்திடுமமிர்தே
சத்ததாய்நின்றிடுஞ்சைதன்யவமிர்தே
சையோகவல்லவர்தரித்தமெய்யமிர்தே. 20

போக்குவரத்தற்றபொக்ஷமாவமிர்தே
பொய்ப்பாவனைக்கும்பொருந்திடாவமிர்தே
தாக்குஞ்சதானந்தந்தங்குமாவமிர்தே
தத்துவப்பிரகாசமானநல்லமிர்தே. 21

எல்லாமுந்தானாயிருந்திடுமமிர்தே
எல்லாமிறந்தமாயேகாந்தவமிர்தே
நல்லாபொல்லாவிரண்டுமற்றமாவமிர்தே
நாநீயுறத்தானாய்நட்டிட்டவமிர்தே. 22

நேரம்விதிவிலக்கற்றமாவமிர்தே
நிற்சின்னமாகிநிறைந்தமாவமிர்தே
வேறொன்றும்பொருந்திடாவிளங்கியவமிர்தே
வித்தில்லாவித்தாய்விளைந்தமாவமிர்தே. 23

சொல்ததுரியாதீதந்தோய்ந்தமாவமிர்தே
சூஸ்திரசுகாரம்பஞ்சூழ்ந்தமாவமிர்தே
வஸ்துவதாயெங்குமமர்ந்திடுமமிர்தே
வரியமாசாதுக்களமர்ந்துறுமமிர்தே. 24

பெரிதுசிறிதற்றபேரின்பவமிர்தே
பெருந்தவருளமாகப்பெற்றிடுமமிர்தே
உரியசுகாதீதமுகந்தமாவமிர்தே
வுண்மைத்ததாகாரமொழுகியவமிர்தே. 25

துய்யநிர்ச்சலனமாய்ச்சொரிந்திடுமமிர்தே
துப்பற்றெங்குந்தோய்ந்திடுமமிர்தே
ஐயமற்றுற்றோர்க்கருளானவமிர்தே
யானந்தாதீதமாயமர்ந்திடுமமிர்தே. 26

சோகாதிமோகர்கள்தொட்டிடாவமிர்தே
தோற்றாகிதமாய்ஜொலித்திடுமமிர்தே
தாகாதிகடந்தமாசத்தியவமிர்தே
சதானந்தமாகத்தனித்திடுமமிர்தே. 27

அரியவந்தர்முகமமர்ந்தமாவமிர்தே
யறியாப்பகிர்முகமெட்டிடாவமிர்தே
நெறியொன்றுந்தவறிடாநித்தியவமிர்தே
நிச்சயமாகியநிரந்தரவமிர்தே. 28



பரிமளசுகந்தமாபக்குவவமிர்தே
பரஸ்பரமகாப்பதிந்திடுமமிர்தே
கரியவிருளொளிகடந்தமாவமிர்தே
கைவல்யமாகக்கலந்திடுமமிர்தே. 29

பாவனாதீதமாய்ப்பதிந்திடுமமிர்தே
பாவிப்போர்கண்டிடாப்பரவியவமிர்தே
தேகாதிக்கப்பாற்றெளிந்தமாவமிர்தே
திக்குமுற்றுமற்றுச்சிறந்திடுமமிர்தே. 30

மெய்ஞ்ஞானகுருவருள்விகிர்தமாவமிர்தே
மெய்யதுதானாய்மேவியவித்தகவமிர்தே
பெய்யுங்கருணைப்பிழம்பென்னுமமிர்தே
பேதாகிதமதாய்ப்பெருகியவமிர்தே. 31

சுயசுயவகண்டசுகந்தமாவமிர்தே
ஜோதிப்பிரகாசமாகியவமிர்தே
ஜெயஜெயவெனத்தேங்கிடுமமிர்தே
சிதானந்தகோமளசித்திமாவமிர்தே. 32

சிவோஹம்.

## பேதம்நீற்றல்.

ஜாதிபேதமுண்மையல்லடா வீண்
சங்கற்பவிதியைத்தள்ளடா
ஓதுமுருவபேதமுண்டோபாரடா வல்
தொன்றோவிரண்டோசொல்லடா. 1

ஆண்பெண்ணலியுமுண்டோபாரடா சுத்த
வபேதவரூபந்தானேடா
தோணுதொடுங்காதுபாரடா நித்ய
சுயம்புதானேதானடா. 2

சுட்டாதிருந்துபாரடா ஜீவா
சுயம்புநீயேகாணடா
விட்டவிடத்திலொட்டடா அது
தொட்டுறவாகும்வஸ்தடா. 3

பஞ்சேந்திரியவுணர்ச்சிவுலகடா வீண்
பாழெனக்கண்டுதள்ளடா
மிஞ்சுஞ்ஜீதேந்திரியம்நாமடா அதை
மேவிக்கொஞ்சிருந்துவாழடா. 4

பட்டப்பகலென்றுமுளதாமடா வீண்
பாழ்பட்டாய்தனையிழந்தடா
கிட்டிவிழித்துக்கொள்ளடா சுத்த
கேவலநித்தியம்நீயடா. 5

கோசவிருள்மயக்கஜகமடா கொடுங்
கொடூரமித்தையாமிதுதானடா
நாசரகிதமுண்மைகாணடா வேறு
நாட்டமின்றிக்கூடிக்கொள்ளடா. 6

அசுத்தவனித்யதுக்கம்பாரடா ஜக
மஞ்சாத்துறந்துநில்லடா
கொஞ்சுமரும்பொருள்பாரடா நிர்ஜக
கோலாகலம்நாமேநாமடா. 7

உள்ளும்புறம்புமொத்துநில்லடா சிவ
யோகமென்னும்பதமீதடா
அல்லும்பகலுமிறந்ததாமடா நித்ய
வகண்டாநுபூதிவித்துகூடடா. 8



சங்கைவிதிகள்பொய்யடா நிற்
சங்கையாகவுற்றுவுய்யடா
யெங்குமுள்ளதுமெய்யடா சும்மா
விருந்தபடிருந்திசையடா. 9

நிஷ்கிரியைஸ்தாபனம்பண்ணடா சத்தியம்
நீங்காநிலைத்துநின்றுபோமடா
அஸ்மியெனும்பொருளுமாமடா சுத்த
வத்வைதமிதுவாகிவாழடா. 10

ரூதுநாமரூபமறைப்படா அத்தை
ரூஸ்திரமாகத்துறந்துதப்படா
சாதுமாமௌனவஸ்தடா அதாய்ச்
சார்ந்துதனித்ததனிமுத்தடா. 11

பஞ்சபூதசையோகஸ்தூலம்பாரடா மா
பரஸ்பரவஸ்துள்ளும்புறம்புந்தாமடா
மிஞ்சும்பாவாதீதமீதாமடா சுத்த
விமலமாகவிசேஷித்துத்துலங்கடா. 12

போதபூமியைத்திருத்திக்கொள்ளடா அதிற்
பூரணவித்தைப்பதித்துநில்லடா
வேதாதீதம்விளையும்பாரடா இத்தை
விட்டிடர்தேகலந்துகாணடா. 13

களங்கரகிதமிதுபாரடா அத்தைக்
கண்டுகண்டுதானுய்க்களியடா
தளதளவெனவொளிவுமாமடா சத்ய
தத்வந்தானதுவாயாளடா. 14

சிறிதுபெரிதற்றுப்போமடா போதஞ்
ஜிலிஜிலுவெனத்துலங்கும்பாரடா
அரிதரியசுகந்தம்பிரியாதாமடா சுத்த
வசங்கம்பொருந்திச்சொக்கிப்போமடா. 15

கூடும்நிர்விகற்பம்பாரடா மாறாக்
குளுகுளுவெனரேசித்துப்போமடா
பாடும்பரமானந்தஞ்சாரடா மஹா
பதைப்பிறந்தமாபாவாதீதமீதடா. 16

சிவோஹம்.

## அங்கக்கூறு,

பூதமைந்தும்ஸ்தூலமாறும்பொருந்தித்தோன்றுங்கூடடா
பொறிகளைந்தைத்தீபமாகவேற்றிருக்கும்பாரடா. 1

புந்திபுலன்கரணம்வாழுமிந்திரியக்கூடடா
போதமென்றயேகராஜன்வீற்றிருப்பான்பாரடா. 2

நாமரூபமற்றகொத்தன்கட்டிக்கொண்டவீடடா
நான்குவைந்துவாயிலுண்டுநாமுலாவுங்கூடடா; 3

உள்ளும்புறம்பேசுமானவோட்டைமோனன்வீடடா
யுள்ளும்புறம்பாகவாழ்கக்கட்டிக்கொண்டகூடடா. 4

வெட்கங்கெட்டகேவலத்திற்றோன்றிநின்றகூட்டா
வேதமுற்றுந்தேடிக்காணுவிதேகன்ஜாலம்பாரடா. 5

சத்துச்சித்தானந்தத்திலுதித்துவந்தகூடடா
சத்துச்சித்துமானந்தமுங்கூடிவாழும்பாரடா. 6

காலாதீதசொரூபஞானன்காரியச்சித்ரக்கூடடா
காலமூன்றுஞ்சகிதமாகுங்களைந்துதள்ளிமிஞ்சடா. 7



ஆதியந்தம்நடுவெனவளவிட்டுமேய்க்குங்கூடடா
யதைக்களைந்துநீக்கிவிட்டாலகண்டமாகும்பாரடா. 8

அனேகனேகரூபமாகக்காட்டிமேய்க்குங்கூடடா
யபேதமாகக்கண்டுநின்றாலேகமாகும்பாரடா. 9

பேதமுற்றபோதடாபோதங்கெட்டுவந்தகூடடா
காதலற்றபோதடாபோதமுற்றிருந்தான்பாரடா. 10

விஷயமுற்றபோதடாமாயாதுவிதங்கட்டுங்கூடடா
விஷயமற்றபோதடாவத்துவைதமுற்றான்பாரடா. 11

விகற்பமுற்றபோதடாவேடமிட்டுத்தோன்றுங்கூடடா
விகற்பமற்றபோதடாவேடங்கெட்டிருந்தான்பாரடா. 12

ஆசையுற்றபோதடாதோஷமுற்றுவந்தகூடடா
நிராசையுற்றபோதடாநிஷ்களங்கமுற்றான்பாரடா.. 13

சோகமுற்றபோதடாமிர்தமிட்டுக்கட்டுங்கூடடா
சோகமற்றபோதடாவமிர்தமுற்றிருந்தான்பாரடா. 14

விகாரமுற்றபோதடாவாலம்பம்பெற்றகூடடா
விகாரமற்றபோதடாநிராலம்பமுற்றதாமடா. 15

சலனமுற்றபோதடாவஞ்ஞானமுற்றகூடடா
சலனமற்றபோதடாநிர்ச்சகமாயுற்றதாமடா. 16

பந்தமுற்றபோதடாதுக்கரூபம்பெற்றகூடடா
[illegible] 17

துவேஷமுற்றபோதடாவனேகநாமமுற்றகூடடா
துவேஷமற்றபோதடாநிர்நாமமுற்றதாமடா. 18

என்னுவென்னுபாரடாமாயர்பிரதிபிம்பக்கூடடா
சொல்லவொண்ணாமடாசும்மாவிருதாமடா. 19

வெட்கம்வெட்கங்காணடாவிள்ளொண்ணுப்போமடா
தக்கதுவேதாமடாசந்தேகமற்றபோதடா. 20

போடாபோடாபொய்யடாப்புழுகளாம்வாழும்புதரடா
நாடாததைக்களைந்துதள்ளிநாம்வேறதாய்ப்பாரடா 21

சீச்சீச்சீபாரடாதுர்விஷயங்கட்டுங்கூடடா
சிந்தித்ததைத்தள்ளடாதீரவல்லன்நாமடா. 22

அடாவடாபாரடாயாச்சரியக்கூடடா
தொடாததைத்துறந்தடாசொரூபமாகத்துலங்கடா. 23

ஞாயஞ்ஞாயம்பாரடாநாமரூபச்சேறடா
நாமும்வேறுமெய்யடாநாமரூபம்பொய்யடா. 24

அவயவத்தினொட்டடாவடிக்கிருக்குங்குட்டடா
யதிலிருக்குந்துப்படாவதைத்துறந்துதப்படா. 25

சொல்லச்சொல்லபோமொடாசூதாய்த்தோன்றுங்கூடடா
நன்றாயுற்றுக்காணடாநல்குஞ்ஞானம்பாரடா. 26

ஆகாகொஞ்சம்பாரடாவனித்யவசுத்தக்கூடடா
வறிவாய்ப்பிஞ்சிப்பாரடாவபேதபோதங்கொஞ்சடா. 27

தேகபந்தம்விட்டடர்சிவதொந்தமுற்றுமொட்டடா
வேதமெட்டாச்சித்தடாவிளங்குந்தன்னைப்பற்றடா. 28

ஆணவத்தின்க[illegible]லைக்கறக்காவி[illegible]டா
மோனத்தோடுமொட்டடாமுன்னிலையைவிட்டடா. 29

சத்தியத்தைப்பாரடாசங்கமற்றதாமடா
நித்யமுற்றுவாழடாவத்துவைதமீதடா. 30

சிவோஹம்.



இராகம்—புன்னாகவராளி தாளம்—ஆதி.

அக்கைச்சிகளே வாங்களடி நம்
மாண்டைநிலத்தைநடுவோமடி. 1

ஒரேயொருவித்தைப்போட்டாரடி அது
வொன்பதுபத்தாறநாத்தானதடி. 2

களையைக்களைந்துநீக்கியடி நாத்தைக்
கட்டியெடுத்தொன்றாய்ச்சேர்ப்போமடி. 3

சுத்தநிரந்தரபூமிதனைக்கிட்டியடி யத்தைச்
சுட்டிடாதுநாத்தைநட்டிடுவோம். 4

பதையாநீரைவிடுவோமடி ஞானப்
பயிர்முதிர்ந்துவிளையுமடி. 5

மலமாதிபறவைகளணுகிடாமல் மர்ம
வஸ்துவில்லாலடிப்போமடி. 6

முன்னும்பின்னுமில்லாதறுப்போமடி முடிவு
கயிற்றிற்கட்டியெடுப்போமடி. 7

சுத்தநிஷ்களங்கங்களந்தனிலே சதிரைச்
சூதானமாகவேவைப்போமடி. 8

காணம்பொறிபுலன்மாடுபூட்டியடி நெல்லைக்
களைந்துவேறுபிரிப்போமடி. 9

ஆகர்ப்பதரைப்போக்கியடி நெல்லை
யழகாய்க்கூட்டிக்குவிப்போமடி. 10

சாதனையாற்செய்தமோனமதுக்காவில் நெல்லை
சத்தியமாகத்தானளப்போமடி. 11

போதமென்றகளஞ்சியத்தில் நெல்லை
பூரணமாகச்சேர்ப்போமடி. 12

அகண்டமென்றயந்திரத்தில் நெல்லை
யரைத்துமரிசியெடுப்போமடி. 13

சமயாதீதடுப்புக்கூட்டியடி அதிற்
சமரசப்பானையைவைப்போமடி. 14

ஆனந்தநீரைக்கொட்டியடி மஹா
வதீதவரிசியிடுவோமடி. 15

ததாகாரமாகக்கரையவிட்டு பதைத்
தானாய்க்கரைத்துக்குடிப்போமடி. 16

இராப்பகலற்றுமிருப்போமடி தனி
யேகாந்தத்தூக்கமுஞ்சொக்குமடி. 17

நீங்காப்போதைகொண்டாடியடி நாம்
நித்தியமாகச்சுகிப்போமடி. 18

காணாதகஞ்சிவிதுவடியோ சும்மா
கலந்துகலந்துகுடிப்போமடி. 19

காலாதீதப்போதைமூடுமடி நாங்
களங்கரசிதமாய்ச்சுகிப்போமடி. 20

சும்மாசும்மாவிருப்போமடி சுய
சுத்தசைதன்யமாவோமடி. 21

ஆண்டானடிமையுமேகமடி சுத்த
வத்துவைதமிதுவாகுமடி. 22

சொல்லவுமொவ்வாதினதடி மௌனம்
சும்மாசும்மாவிருப்போமடி. 23



அக்கைச்சியக்கைச்சிவாங்களடி இந்த
வற்புதரகசியம்பாருங்கடி. 24

வித்துமுளைத்ததோவிகற்பமுளைத்ததோ வித்தைப்
பற்றிப்பகுத்துப்பாருங்கடி. 25

வித்துவித்தாயிருந்ததோடி பொல்லா
விகற்பமுளைத்துப்படர்ந்ததோடி. 26

சத்துக்கள்சத்தானமௌனமடி இத்தைச்
சங்கித்தாற்பொல்லாப்பாவமடி. 27

சுத்தமெய்ஞ்ஞானமிதாகுமடி இத்தைச்
சொல்லவுமொவ்வாதுபாருமடி. 28

சத்தியமானவிதேகமடி இத்தைச்
சாதித்துத்தானாகவாழுமடி. 29

சிவோஹம்.

## கிழவி—கிழவன்

## சீடன் பக்குவமடைந்த மகிழ்வு.

இராகம்—கமாஸ், தாளம்—ஆதி.

என்னபிழைப்பிதாச்சே கிழவா நா
மிருந்தவிருப்பாயிருக்கலாச்சே. 1

வாழ்ந்தவாழ்வுமிப்படியாச்சே கிழவா நாம்
வரத்துப்போக்கற்றிருக்கலாச்சே. 2

விதிவிலக்குமற்றுப்போச்சே கிழவா நாம்
வீட்டுக்குள்முடக்கிருக்கலாச்சே. 3

ஒட்டைப்பிழைப்பதாச்சே கிழவா நா
முள்ளும்புறம்புமுறையலீச்சே. 4

ஆணவாதிகளிறந்துபோச்சே கிழவா நா
மகண்டபோதமாய்மிஞ்சலாச்சே. 5

நிராசையுமுற்றுப்போச்சே கிழவா நாம்
நீக்கமொன்றில்லாநிராகாரமாச்சே. 6

பொறிபுலனிறந்துபோச்சே கிழவா நாம்
பொய்யைநீற்றபிழைப்புமாச்சே. 7

உன்னக்கிடையாதாச்சே கிழவா நா
மொண்டியாயிருககவும்போதமாச்சே 8

அன்னியஞ்சொந்தமிலாதுபோச்சே கிழவா நா
மரூபகேவலமாகிப்போச்சே. 9

ஓதவும்வெட்கமாகிப்போச்சே கிழவா நா
மொப்பிடக்குறியுமிலாதுபோச்சே. 10

சொல்லுக்குமெட்டாதாச்சே கிழவா நாஞ்
சூதுமிலாதபிழைப்பிதாச்சே. 11

வெட்டவெளியாய்ப்போச்சே கிழவா நாம்
விகற்பமற்றநிர்விகற்பமுமாச்சே. 12

சோதிக்கச்சுட்டொழிந்துபோச்சே கிழவா நாம்
சும்மாவிருக்குந்தொழிலிதாச்சே. 13

கற்பனைமுற்றுமிறந்துபோச்சே கிழவா நாம்
காலநேரமுமிறந்ததாச்சே. 14

கர்ம்மமொன்றுமணுகாப்போச்சே கிழவா நாங்
காலாதீதமாய்நிற்கலாச்சே. 15



ஒன்றிலும்பற்றுறிருக்கலாச்சே கிழவா நா
மொருங்கேநீற்றசொரூபமாச்சே 16

சத்தியநிர்க்குணமாகலாச்சே கிழவா நாம்
ஸகஜமாயுற்றபிழைப்புமாச்சே. 17

நாணமுற்றுமிறந்துபோச்சே கிழவா நாம்
நலந்தீங்கிறந்திருக்கலாச்சே. 18

குணதோஷமியாவுமிலாதுபோச்சே கிழவா நாம்
கூவிடவும்நாமமற்றதாச்சே 19

பாஸ்பரமர்னதொழிலாய்ப்போச்சே கிழவா நாம்
பதைப்புக்கிடமின்றிநிற்கலாச்சே. 20

தோற்றமுழுதும்நசித்துப்போச்சே கிழவா நாம்
தொந்தமுமற்றவசங்கமுமாச்சே. 21

தொழிலொன்றுமிலாதுபோச்சே கிழவா நாஞ்
சும்மாவிருப்பாயிருக்கலாச்சே. 22

நட்டணைகளொன்றுமில்லாதுபோச்சே கிழவா நாம்
நாட்டமிறந்தவஸ்துவாச்சே. 23

வேதகுருமுதம்வெட்கிப்போச்சே கிழவா நாம்
விமலசுத்தவிதேகமுமாச்சே. 24

மெய்ஞ்ஞானமதச்செருக்காய்ப்போச்சே கிழவாநாம்
மெய்யாகசுகித்தவிறுமாப்புமாச்சே, 25

கருவிகரணங்களோய்ந்துபோச்சே கிழவா நாங்
களங்கரகிதமாயிருக்கலாச்சே. 26

உண்மை [illegible] ண்மைப்பூண்டதாச்சே. கிழவாநா
மொன்றையுமெ [illegible] ஒவ்வாதுமாச்சே. 27

சும்மாவிருக்குஞ்சுயம்பிதாச்சே கிழவா நாம்
சொல்லுக்குமதீதமாயிருக்கலாச்சே. 28

வீடேவடிவமாய்விளங்கலாச்சே கிழவா நாம்
விஷயமுற்றுந்துறந்ததுமாச்சே 29

போதமிகுத்தபுருஷார்த்தமாச்சே கிழவா நாம்
புனிதபூரணமாகவிருக்கவுமாச்சே. 30

சிவோஹம்.

## வஸ்துமதப்பார்ப்பாத்தி,

இராகம்—புன்னுகவராளி, தாளம்—ரூபகம்.

அக்கமாளெல்லாரும்வாங்களடி ஏ
காமதைச்சேர்ந்துவாழ்வோமடி. 1

அற்றுன்வாழும்வீடுகண்டால் கா
முற்றுமாகியிருப்போமடி. 2

ஏழைந்துபருப்பைக்கழுவியடி யத்தை
யிடித்துமாவாய்ச்சேர்ப்போமடி. 3

அன்புநீரிட்டுபிசைவோமடி அது
வழகாய்ச்சேர்ந்துதிரளுமடி. 4

அத்துவைதப்பலகைப்போட்டுமடி அகண்
டப்பளந்தன்னையிடுவோமடி. 5

வஸ்துமாப்பிள்ளைவருவாரடி சொரூப
வப்பளம்பொரித்திடுவோமடி. ௬

நங்காத்
சும்மாசும்மாவுண்பாரடி
தூங்கருமற்றூங்கியிரு... 7



வெட்டவெளிப்பையலாகுமடி கேவல
வெட்கமுற்றுங்கெட்டவண்டி. 8

சுட்டுக்குமெட்டாக்கள்ளனடி சூக்ஷமஞ்
சுட்டுதற்றவல்லபண்டி. 9

போக்குநீக்கில்லாமுத்தனடி பரி
பூரணமானநித்தனடி. 10

இத்தைவிட்டாலற்றுன்றுண்டி சுத்த
மிருந்தவிடத்திலிருப்போமடி. 11

பார்ப்பதைப்பார்ப்பவள்பார்ப்பாத்தியடி யதைப்
பாராதிழந்தவள்பாமரத்தியடி. 12

வேற்றுமையற்றவள்பிராமணத்தியடி தன்னை
விகற்பித்திருந்தவள்வேடத்தியடி 13

தன்னையுணர்ந்தவள்சைவத்தியடி யுண்மை
தன்னைமறந்தவள்சண்டாளத்தியடி 14

கண்டுதெளிந்தவள்கன்னட்டியடி பொருள்
காணுதிழந்தவள்கைம்பெண்டாட்டியடி. 15

சூஸ்திரமுற்றவள்சூத்திரத்தியடி மா
சூஸ்திரங்கெட்டவள்சும்பத்தியடி 16

கோத்திரமற்றவள்குரத்திதாண்டி பேதக்
குலத்தையுற்றவள்கள்ளக்குறத்தியடி 17

பதைப்பையற்றவள்பட்டாணித்தியடி போதம்
பதைக்கவிட்டவள்பஞ்சமத்தியடி 18

பரத்தையறிந்தவள்பரத்திதாண்டி யபேத
பரத்தைமறந்தவள்பறைப்புலத்திதாண்டி. 19

துவிதமற்றவள்சொரூபத்தியடி மாயா
துவிதமுற்றவள்சுடுபுலத்திதாண்டி 20

ஜாதிகெட்டமாப்பிள்ளைதாண்டி துவித
சமயாதிகட்குமடங்கானடி 21

விஷயமுற்றாற்பற்றானடி நிர்
விஷயமுற்றாற்சுற்றுவாண்டி 22

விகற்பமுற்றாற்கிட்டானடி நிர்.
விகற்பமுற்றாலொட்டுவாண்டி 23

விதிவிலக்குமுற்றுந்துறந்தவண்டி யதை
விள்ளவும்வெட்கமுற்றேனடி 24

குணங்குறியற்றபுருஷார்த்தனடி சொல்லிக்
கூவிடவுஞ்சத்தமில்லாதவண்டி 25

சுருதிக்குமெட்டாச்சூஸ்திரண்டி யங்கே
சும்மாவிருந்தாற்சுதந்திரண்டி 26

உன்னினாலோட்டமெடுப்பாண்டி சும்மா
வுன்னாதிருந்தாலுட்காருவாண்டி 27

பாவனைகெட்டாவதீதனடி சத்யம்
பாவனையற்றாற்பரமார்த்தனடி 28

வேதம்வெட்கத்திரிவானடி யற்றான்
விதேகமுற்றால்விலகானடி 29

எல்லாமாயுமிருப்பானடி தனித்
தெல்லாமற்றுஞ்சுகிப்பானடி 30

தேடினாற்கிட்டாவற்றானடி ஒரு
தேவையுமற்றசத்தனடி 31



என்னைக்கேவலமாக்கினாண்டி தனித்
தென்னைத்தானாக்கியிருத்தினாண்டி 32

அகண்டாநுபவவதீதனடி மஹா
வசங்கமுற்றவமலனடி 33

அடியென்றாலாண்பெண்ணல்லவடி சுத்த
வரூபானந்தமொழியீதடி 34

பேரானந்தமகிழ்ச்சியடி யபேதம்
பெரிதையுற்றபுகழ்ச்சியடி 35

சாராமற்சாருவோம்வாங்களடி நிர்ச்
சந்தேகமுற்றுச்சேருங்கடி 36

அக்கம்மாளக்கம்மாள்பாருங்கடி சுய
வானந்தாதீதத்தைச்சேருங்கடி 37

சம்பூரணமாமெய்ஞ்ஞானமடி நித்ய
ஸகஜநிஷ்டைகூடுங்கடி 38

என்னாணையீதுண்மையாகுமடி தனித்
திருந்துபாரும்தெரியும்டி 39

தன்னாணைசத்யமாகுமடி இத்தைத்
தட்டாதுகூடியேவாழுங்கடி 40

தானவனாகாவிட்டால்டி சித்தஞ்
சலிக்கப்பண்ணிக்கலக்குவாண்டி 41

தானவனாகியிருந்துவிட்டால் சும்மா
ஸகஜமுற்றுச்சுகிப்பானடி 43

அற்றானைகவழிகேளடி சுத்த
அத்துவைதமாயிருப்போமடி 44

போதமெய்ஞ்ஞானமிதாகுமடி போதம்
பொருந்தினைக்காற்சொந்தமடி 45

உள்ளந்துறந்துபாரேகமடி அபேத
மொப்பனைக்கொவ்வாமௌனமடி 46

சிவோஹம்.

## ஆனந்தக்களிப்பு

சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹந் திவ்விய
சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹம்.

ஜகத்தீரேவந்திங்ஙன்சேரு மொரு
ஸங்கதிமட்டுமுற்றுநீர்கேளுங்
கசத்தமேதகந்தானேநீரும் இத்தைக்
கவனித்துற்றுப்பார்த்திட்டுக்கூறும் 1

புருடன்பெண்ணென்பதும்நீரோ பொய்
பொறிபுலனிறைந்திடுமாமிசக்கூடோ
இருள்முளைவீசிடுங்காடோ அத்தை
யின்னதென்றும்விசாரித்தீரோ 2

ஒன்பதுவாயிலுமோட்டை அத்தி
லோடிடும்நீர்மலம்வாய்வின்பாட்டை
பின்னொன்றுக்குமுகந்திடாக்கட்டை இத்தைப்
பிரித்துப்பேரின்பமதமருள்வீட்டை 3

அநித்தியவசுத்தமாதுக்கம் இத்தை
யணிந்துமிருப்பதேமாமஹாவெட்கஞ்
ஜனித்திடுஞ்சுகதுக்கப்பக்கம் இத்தைச்
சந்தேகமற்றுத்துறந்திடுமூக்கம். 4



நாமரூபபந்தமசத்யம் அந்த
நாட்டமிறந்துமிருப்பதேசத்யங்
கூடிடுஞ்சங்கம்பயித்யம் இத்தைக்
குடியோட்டிவிட்டதழியாவயித்யம். 5

பேதந்துறப்பதகத்யஞ் சத்தைப்
பெற்றுமிருப்பதுமாமஹாசத்யம்
போதஞ்சிறப்பதும்பாத்யம் இத்தைப்
பொருந்திவிருப்பதும்புண்யமாவுத்யம். 6

கருவிகரணக்காடு அத்தைக்
களைந்துற்றுப்பாரமைந்திடும்வீடு
சருவியேவானந்தமாடும் இத்தைச்
சார்ந்துபாருஞ்சாஸ்வதங்கூடும். 7

உதித்ததழிந்திடும்வேஷம் அத்தை
யொடுக்கித்தனிப்பதுமௌனப்பிரகாசம்
மதிக்கவெட்டாமர்ம்மமாநேசம் மா
மந்திரம்பூண்டிடுமரிக்காவிசேஷம் 8

கல்நட்டுநீரிட்டாமுளையா மாயா
கர்ம்மத்தாலுண்மையறியவறியா
புல்நட்டால்நெல்லும்விளையா பொய்ப்
பொருத்தமற்றாலன்றோபுருஷார்த்தம்வெளியாம். 9

வித்தன்றிமுளையாதொன்றும் அந்த
வேரன்றித்தளிர்த்திடமாட்டாமரமும்
வத்தன்றிவாய்த்திடாமுத்தி தூய
வறிவின்றித்துவிதமற்றிடமாட்டா. 10

ஞானப்பயிரிடும்பக்குவந் தூரிய
நல்லபூமியில்நட்டிடுவிளையும்
ஊனப்பதருமணுகா சத்ய
முள்ளபடியேவுகந்ததுகாணும். 11

கண்டப்பறவையுங்கிட்டா பொல்லாக்
காமப்புழுவுமணுகிடமாட்டா
பண்டமாயைக்கிளிபெட்டா ஞானம்
பக்குவமாகப்பழுத்திடுங்கட்டா 12

கட்டியமெய்ஞ்ஞானரஸமுஞ் சுத்தக்
கட்டியாகவுறைந்திடுந்தனியாய்ச்
சுட்டொழிந்திட்டதுவாகுஞ் சத்ய
சுயம்பதுவாகத்தோய்வுற்றதாகும். 13

சுயம்பிந்தமுறைமையதாகும் இத்வைதத்
துடர்ந்துவிடாதுசாதித்திடாகுஞ்
ஜெயஜெயசித்தியிதாகுஞ் ஞான
சின்மயந்தானாய்த்தெளிந்துநீயிருக்கும். 14

விகாரவேடத்தையும்நீக்கு தூய
வித்தகவேடத்தைபூண்டதாய்த்தாக்கு
மகாரமற்றும்நசிக்கும் நித்ய
மஹத்துவவஸ்துமருவியேவசிக்கும் 15

மருவிடும்பூரணமாகும் இது
மறுக்கவேறொன்றுமற்றதுவாகு
முருகிடுந்ததாகாரமாகும் இத்வை
வுண்மையென்றுணர்வுகந்திடுமாகும். 16

சிவோஹம்



குறியொன்றுமின்றிலங்குங்குணாதீதவிதேகத்தை
யறிவினொடுபுணர்ந்துமகண்டமதாய்ப்பூஜிப்பதல்லாற்
சிறியதோருருவமதாய்ச்சிருஷ்டித்துப்பாவித்தாற்
கரியவிருளதுவாய்க்காணுமேபாலர்களே. 1

போக்கொடுவரத்தற்றபரிபூரணமாரகஸியத்தை
தாக்கும்மெய்யறிவையூன்றிச்சத்ததுவாய்ப்பூஜிப்பதல்லா
லாக்கமொடுசுட்டிவேறுருப்பண்ணிப்பாவித்தால்
நீக்கமறுமாயையதாய்நிற்குமேபாலர்களே. 2

சுத்தநிஷ்களங்கசுகாதீதநிரஞ்சனத்தை
யத்துவைதமாகவமர்ந்ததுவைப்பூஜிப்பதல்லாற்
றத்தமொருவிதிவகுத்துத்தடைபடுத்திப்பாவித்தாற்
சித்தமதுசலித்துச்சிதறும்பொறிபாலர்களே. 3

வாக்காதிக்கெட்டாமமௌனசுதந்திரத்தை
நோக்காமநேர்க்கிநுட்பமதாய்ப்பூஜிப்பதல்லாற்
கூக்குரலோடுகூத்தாடிப்பாவித்தாலதுவாகா
ஆக்கமொடுமிராகாதியாகிவிடும்பாலர்களே. 4

காலாதீதமானகைவல்யநித்யத்தைக்கலந்தரிய
யேகபோகமாயமர்ந்திரண்டறப்பூஜிப்பதல்லால்
வேகமொடுதாவிவேறொன்றாய்ப்பாவித்தால்
மோகமதுமூடிமுடிவுகாணாப்பாலர்களே. 5

வேதமுடிவதனில்விளங்குகின்றமெய்ஞ்ஞானமதை
போதநீபமேற்றிப்பொருந்திச்சித்தாய்ப்பூசிப்பதல்லாற்
காதலொடுநைப்பரிசங்கட்டியதைப்பாவித்தாற்
பாதகபாவியெனப்பறைசாற்றுமறைபாலர்களே. 6

பாவிக்கவெட்டாதபாவாதீதநிராகாரத்தைப்
பூஜிக்குமுபாயம்பொருந்தும்நிர்விகற்பமல்லால்
நாசிநுகர்வாஸனைப்போல்நாம்வேறாய்ப்பாவித்தால்
நேசிக்கவுமெட்டாநீங்கிநிற்கும்பாலர்களே. 7

சித்தசுத்தநிர்மலமாய்ச்சிறந்துநிற்குஞ்சீர்மையதை
யுத்தமமாயொன்றிவுகந்ததுவாய்ப்பூஜிப்பதல்லா
லத்தாவத்தாவென்னவகலவிட்டுப்பாவித்தால்
சித்தமதுவேறாய்நீங்கிவிடும்பாலர்களே. 8

நிஷ்டாநுபூதியுற்றநிற்றொந்தகேவலத்தைக்
கஷ்டமொன்றின்றிக்கலந்ததுவாய்ப்பூஜிப்பதல்லா
லிஷ்டம்போல்வேறுருவங்கிருத்திப்பாவித்தால்
நஷ்டமதுவாகும்நமைமறைக்கும்பாலர்களே. 9

சித்துஞ்ஜடமுமுற்றுச்சேதனமாய்விளங்குவதை
சத்துசித்தானந்தசையோகமதாய்ப்பூஜிப்பதல்லாற்
சுத்தஜடம்நட்டுச்சுட்டிச்சுட்டிப்பாவித்தாற்
பித்தமலமர்மைமூடிமனப்பேதமாடும்பாலர்களே. 10

நிர்விஷயமுற்றநிராலம்பவமிர்தத்தைச்
சர்வசாக்ஷியெனத்தானதுவாய்ப்பூஜிப்பதல்லாற்
சொற்பவொருநாமரூபஞ்ஜோடித்துப்பாவித்தாற்
றற்போதமெழுந்துந்தனைமறைக்கும்பாலர்களே. 11

நிராவரணமுற்றநிர்சலனவஸ்துவதைச்
சொரூபாகாரமாகத்துணிந்ததுவாய்ப்பூஜிப்பதல்லாற்
கடவாகாரமாகக்காட்டியதைப்பாவித்தால்
ஜடவாகாரமீதாய்த்தனைமூடும்பாலர்களே. 12



வேறு.

பொய்யதுவைமெய்யதாகப்பொருந்தினபொய்புன்மையாவுந்
துய்யமெய்போதமீறிச்சுட்டதைத்தூய்மைசெய்துமாயா
ஐயமொன்றில்லாதந்தவதீதமாநிர்விகற்பவமிர்தம்பொங்கி
வுய்யுமெய்பொருளதாகவோர்வரம்பினுக்கடங்காநானே. 13

குலமொடுசமயபேதங்குறியொடுநாமரூபம்
நலமொடுதீங்கும்பற்றுநனவினுக்கப்பாலாகி
விலகிடாச்சொரூபஞானவிதேகமாபோதைதங்கித்
துலங்கும்நிர்ச்சங்கமாகஜொலித்திடுஞ்சுயம்புநானே. 14

இரவொடுபகலுமின்றியிலங்கிடுஞ்சுத்தமாகப்
பரவியவாகாயம்போற்பதைப்பறும்போதமாகிச்
சரவசரபேதமெல்லாந்தானென்னுமபேதசுயம்
பரசெனும்பிரம்மமாகவமர்த்திடும்பொக்ஷம்நானே. 15

உளதிலவெனவும்நீக்கிவொருந்தனிமௌனமாக
விளங்கியதுரியாதீதவிறுமாப்புப்போதைமூடி
அழகியசுதந்திரவசங்கமாநித்யத்வநிறைவாய்த்
துலங்கியமாவஸ்துவாகத்துணிந்துறுஞ்சுயம்புநானே. 16

வேறு.

1. சத்தியவகண்டசொரூபஞ்சராசரமாகவுருவாய்த்தோன்றியதுபோற்சகமாயமயமாய்த்தனைமறைத்துளதாகினுமதுமாநித்யதத்துவமெய்ஞ்ஞானியைவேறதாய்நீங்கிமறைத்திடல்கூடாததுபோற்சித்தம்வெவ்வேறுறுந்துவிதவஞ்ஞானிகள்மாறாத்தீரராய்க்கர்ம்மஞ்செய்துளராகினுஞ்சத்தப்பரிசரூபரஸகந்தமணுகிடாச்சொரூபஞானத்தைச்சாருவதுமெங்ஙன்

2. பஞ்சபூதங்களைந்துபற்றுபொறிவைந்துமற்றுன்புறும்பஞ்சகோசங்கடந்துதுடர்புலனைந்தறுத்துத்தங்குகரணமலங்குணங்குறிநாமரூபந்தனைநீக்கித்தடையுறுமிராகாதியும்பேர

க்கிவரியசத்தாய்மிஞ்சுமாமஹாசொரூபமெய்ஞ்ஞானியன்றோ விமலபரசிவபூஜைதானாய்மேவுவனில்லால்மாயாமயநஞ்சை யொத்தமலங்காரணம்பொறிபுலனிராகாதிகுணங்களோடுகூடி மயங்குகின்றதேகோகிக்கி மாசஞ்சலமற்றசிவபூஜைசாருவது மெங்ஙன்.

3. பூரணநிர்விகற்பன்புலம்புகின்றமாவாக்கெல்லாங் கூறொண்ணாவிடத்திலன்றோகுவியுமல்லாலத்தைவேறொன் றாய்ப்பிரித்துவிரிக்கலாமோவிரிக்கலாகாததுபோற்றுய்ய காரணமிருந்தன்றோகாரியம்நிகழுமல்லால்வீண்மாயாமன மாயைநீரினிற்குமிழியெனநிச்சயித்தநிமலனந்தப்பரினையும் பரமதுவாய்ப்பார்த்துணர்ந்தோன்றுய்யமாபரமேயாம் பாரும் பக்குவரே.

4 சுத்தசுகாதீதச்சுயமதுப்பாலருந்திநித்தியவத் வைதமாகநிறைந்தருளும்நிர்த்தொந்தனரியசித்தமதுமா றித்திரும்பித்துவிதமதைதீண்டுவனோதீண்டான்றீரசிவமா ய்த்தெளிந்தோன்மாசிவமேயாமதுவன்றிமுத்தமிழ்கற்றுமு ழக்கமொடு புராணத்தையெத்தனைவிதமாயியம்பித்தியானம் பண்ணினுமதுவுத்தமமாகவுனைக்காட்டவறியவறியாத்துவித மதுபோற்சுத்தசித்தமில்லார்சொரூபநிலைதொடருவதுமெங்ஙன்

5. ஆணவப்புல்லர்க்கரியபிரம்மவித்தையதைவேணமட் டுமோதிவிடாதுபுகட்டிவைத்தாலுமந்தஞானங்கெட்டவிஷய த்தையேநாடிநாடிப்போவரல்லால்மாதோனாதற்றமெய்ஞ் ஞானமதைத்துடாரதுபோற்றேனளித்துப்பாற்புகட்டித் தேய்த்துக்குளிப்பாட்டிச்செல்வமுறவளர்ப்பினுமந்தஞான மற்றகுக்கலெனும்நாமமிட்டவவ்வுருவம்நாடுமெச்சற்கலைதா னன்றோநவில்வீர்நண்பரே

6. உதிக்குமனமாயாசங்கற்பவிகற்பங்களொழியும் விதமுரைக்கக்கேளும்பொல்லாமாயாமயமயக்கவிநிவிதித்த நாமரூபபேதங்களறவிடுதலன்றோபாநற்போதவறிவதாயங்ங



ணபேதமுறத்தனிக்குந்தானாயதுவல்லாற்பொய்வினைதாய்ப திக்குமனமாயாபாவனாசங்கற்பவிகற்பங்கள்கொண்டுமாபரஸ் பரமஹாமௌனரகலிய வின்பம் பதிவதுவுமெங்ஙன்பகர்வீர்.

7. நடனமிட்டசைகின்றசேதனத்தைநாடிநீதியானஞ் செய்யுலதுபடமிட்டாடிவிடமீயும்பாம்பதுவேயானாலுமதங்ங னுடன்பட்டுன்னோடுறவுசேருமுணர்வேகமாதலினாலதுவன் றிமடமைஜடமுற்றமண்கல்லையுருவாக்கித்தெய்வமெனசதாத் தியானஞ்செய்யிலதுதரும்பலன்மடமைமிகும்பொருளிழந் தாய்தனைமறந்தாயுடல்சுமந்தாயிருவினையுகந்தாய்,நற்கதி யொழிந்தாய்,காணும்பலனிதுவாங்காணுங்களங்கரகிதரே கருத்தாய்.

8. தன்னையலங்கரித்துத்தன்னழகைத்தாந்தானுணர்ந்து வுன்னுதலுமற்றொருமித்தோங்கிச்சிறந்திடிலந்தமாவெண் ணுதலுமற்றசுகதுக்கரகிதசத்தியமிசைந்தொழுகுமல்லால் வேறுபின்னமதாய்ப்பெரிதைச்சிறிதாக்கிப்பேதப்படுத்தினாக் காலங்ஙனொருசின்னமுமற்றசுயசொரூபமெய்ஞ்ஞானஞ் சித்தியாவதெங்ஙன்.

9. முளையாதவித்தகவித்தாகிமுளையாமல்முளைத்தா னங்குமுளைத்துப்பயிராகியுமெல்லாமாய்த்தளிர்த்தான்பூத்தா ன்காய்த்தான்கனியானான்,கனிந்தொழுகுமிரஸந்திரண்டுஞ் சத்தாய்த்தனித்தான்றான்றானாயிருந்துமுன்னிறந்தான் பின்னுமற்றான்நிலைபெற்றான்நடுவுமற்றான்நீங்காச்சுயஞ் ஜோதியாய்ஜொலித்துமாயாசுட்டொழிந்துகளித்தானன்றோ சுகாதீததெய்வந்தொடர்ந்துகாணேசுயமாய்ச்சுகிர்தரேதூய மதாய்.

10. புருஷார்த்தந்தனியதாம்பொய்வேடம்பலவாய்பொ ருந்தும்பொய்ஜகமாயாமயக்கமனவிகற்பவாழ்வதாய்மாயா மாயைசூழுமிந்தவிருளறமாபுருஷார்த்தமெளிதினுமெளிதா

யிசைந்திலங்குமதுவிழிவல்லனுயர்வில்லன்மாயேகசுய
சித்தன்றேதெய்வமினிதினிதிசைந்துளதாயிருந்திருந்தி
ருந்துகாணேவினிதாயென்னன்பர்களே.

11 சித்தமதுநிரஞ்சனத்திற்சிறந்துநிற்குந்தீரமாவல்ல
புருடனிற்குப்புத்திநிர்விகற்பமங்குபூண்டொழுகாதோவே
ணொழுகாவொழுகுமதுபோல்மத்திபமாயாகாரியத்தைமயங்
கிமாவுத்தமமென்றுறுதியொடுசாதித்தாலரியசத்தியசுத்த
வஸ்துதன்னைச்சாருவதுமெங்ஙன்.

12. உள்ளும்புறம்புமோங்கிப்புணர்ந்துள்ளதெதுவோ
வதுவேமாவருளாலயமதிலோருணர்வாயுகந்தருளுந்திருவுள்
ளமெதுவோவதுவேயதிலுறைந்தருளுமகண்டமாமஹாமர்ம
மமௌனதெய்வமதுதனிதானல்லவோவதுவரிதினுமரிதரிய
வமலமெய்ஞ்ஞானிதானுயமர்ந்தருளுமத்துய்யவுண்மைமா
மஹாவத்தெய்வமதுவுந்தனையன்றியங்ஙனன்னியம்வேறொ
ன்றேது வறிவறியாவறிவிழந்தவசட்டுலகவஞ்ஞானகர்ம்ம
பந்தனரேயறியுந்தன்னையசங்கவதீதநிர்விகற்பமதாய்.

13 அரிதினுமரிதானவத்துவைதவமிர்தமருந்துமுபாய
மதுவுமறையக்கேளுமந்தவறியமாயாகாரியவிருளாகும்பொ
ல்லாமிர்தமெனும்முப்பாழைமுழுதுமறத்துறந்துந்துய்யசுய
வப்பாலுறும்மஹாமாநித்யத்வதுரியாதீதந்தானுபமர்ந்தங்கி
ருவதெங்குமுள்ளவேகாந்தவினியபேரின்பவெள்ளம்பொங்
கித்ததும்பிப்பூரணமஹாவமிர்தந்தானுய்ப்பொருந்தியுறவது
நின்றிலங்குமதுவதுமஹாவரூபவபேதமாய்ப்புணர்ந்திரண்
டறரேசித்தங்கதாயமருமதுதானன்றோவத்வைதவமிர்தமரு
ந்துமழகினுமழகுயதுவநீவாயமர்ந்துமதுதானுய்க்காணுமற்
கருண்பாய்கருத்தாய்.



14. அசத்தெனும்புலாலையருந்துமந்தமாயாமயக்கர்க்
குமாநிஜத்துள்விளைந்தெடுத்தநிர்விகற்பச்சுயம்பாகத்தை
யும்நிறம்பவூட்டினுலுமவர்மாயாமயநோக்கம்பொல்லாக்
கசத்ததேகமாமிசப்புலாலன்றேநோக்குவான்றியரிதினு
மரியவசங்கமுறும்மஹாமௌனமெய்ஞ்ஞானவமிர்தப்பிழ
ம்பினைநோக்கிவாய்மடுத்துண்ணும்வகையவரெங்கறிவரறியா
மாயாவஞ்சகர்வாக்கொன்றுரைக்கும்மனதொன்றைநாடும்
விழிவேறுநோக்கும்விலக்கமற்றிருந்திலங்கும்மாவிமல
மெய்ஞ்ஞானியையும்விகாரவிதிவிதிப்பர்விருதாவீணர்கூட்
டுறவுவேண்டாம்வேண்டாமவரைவெறுத்துவிளையாடும்
விஷயாகிதமதாய்மெய்ஞ்ஞானமே.

15. துவிதவிருள்துறந்துதுரியமின்னல்மிகமின்
னிச்சுகந்ததுய்யமஹாசொரூபசண்டமாருதக்காற்றங்கோ
ங்கிவீசிவரிதரியவதீதமெனுமுகில்திரண்டகண்டவிடிகு
மிரலுடன்மாரூவசங்கமழைபொழிந்தமலவெள்ளம்பொங்கிக்
கரைபுரண்டேகமதாய்ப்புணர்ந்துததும்புதையோவந்துசே
ரும்மாயாபொய்யுலகபந்தனரேபுகலுமித்தேகம்போகுமுன்
பொருந்தியுண்ணலாம்பூரணமாய்.

16. சுத்தநிஷ்களங்கநிர்விகற்பநிஷ்டைநிலைக்குமுபா
யம்நிகழ்த்தக்கேளுமந்ததுய்யமஹாமௌனசத்துமயமாய்
மிஞ்சிவுள்ளும்புறம்புமொருமித்தோராளவின்றிவுகந்து
நில்லதுமாவத்வைதவமலமாயதீதமுற்றுச்சொக்குமதை
நீங்கிவரவழியறியாய்மாயாவசத்தியஜகமொழியும்நித்திய
பரம்வெளியாய்விளங்கிவிளையாடுமரிதரியவிள்ளவொண்ணுப்
பரந்தானுய்மேவிநில்லதுவாகுமதைநீங்காவின்பமதுவதுவாக
வாய்மடுத்துவிழுங்கிடுமதுதானன்றேவதுவாயிருந்திருந்தி
லங்குமரியநிர்விகற்பமதுவிரயமர்ந்துகாண்பாயரூபவதீதம
தாய்.

17 ஒன்றாயுளதுபலவாய்த்தோணுந்தோற்றமதுதானாவரணமதுவென்றுமிலாத்துவிததுக்கவனித்தியமதைத்துறந்து தனித்துநின்றுபார் நீநித்தியநிராவரணசத்தேயாமதுவேறின்றுமாநிராகாரநிமலமன்றோவதுவன்றியும்வேறதாய்நின்றுதுள்ளுமனமாயாவிகற்பங்களைச்சூட்டிநடித்தாலதைத்தானொன்றுமறியமாட்டாய். வீண்குன்றுங்குறியையேகுறிக்குமிருளதுவாய்நின்றுமறைக்குமல்லால்மாநன்றுதீதற்றபொருளாய் நல்குவதிதங்ஙனமன்பர்களே

18. இலங்குகின்றவிவ்வுருக்களினுள்ளும்புறம்புமிருந்துவிளங்குகின்ற பொருளேகமேயாமப்பொருள் யானெனப்பூண்டொழுகுதலாலந்தமெய்யறிவேவிமலமாம் பிரம்மமாம்மெய்ஞ்ஞானமெனுமேகசத்தாம்விகற்பமிறந்ததாம்விஷபரகிதகைவல்யமாம்வேதாதீதவிந்தாம்விகாரசூனியததாகாரமாமிதுதானன்றோவிலகாவிருந்ததுவாய்க்கரைந்து காண்பாய்கருத்தாய்

19. சுருதியுத்தி குருசுவாநுபவத்தாற்றன்னைத்தானுணர்ந்த தத்துவமஹா மெய்ஞ்ஞானியான வல்லபமா புருஷார்த்தன்மருளுறும்மாயாமனமயக்கவிகற்பஜகமெங்கேயவன் காண்பன்காணான்கர்ம்மரகிதன்பொல்லாக்கணித்துறுங்காண்பான்காக்ஷி காணப்படும்பொருளுமவனுக்குமங்குமுண்டோவுரையீரரியமாகளங்கரகிதகாலதீதன்காணாமற்காணுந்தனித் தத்துவமேயன்றிக் கண்டமேகாணான் காணுமே கருதரிய கைவல்யமாமஹாசம்பூரணவஸ்துதானாய்த்தனித்துத்தன்னையேபூஜித்துப்பூண்டோன்பொருந்தும்மஹாநிர்விகற்பநியமபூஷணந்தரித்தொழுகும்புனிதனானவன்போக்குவரத்துமிலன்புண்ணியபாவமிலன்பொருந்திலன்பிரிந்திலன்புனிதபோதமயமாய்ப்பூண்டோன்பொருந்துமின்பதுன்பமிலன் போலிநினைப்புமறைப்புமிலன்பொருளுறும்பொருளாய்ப்புதுப்பித்துப்பூரணசுயஞ்ஜோதிசொரூபமாய்ஜொலித்தோனிவனுமெனச்சுருதிமெச்சியொப்புந்தொடர்ந்துகாண்பீர்தூயமதாய்



20. அத்வைதப்பெட்டகத்திலபேதமஹாப்பரிபூரணப்பொக்ஷந்தன்னையதிலிருத்திச்சிக்கெனவரியமாமௌனமணிப்பூட்டிட்டுத்திறவுகோற்கைக்கொண்டதீரமஹாகைவல்யசுயபுருஷார்த்தன்மாயாபித்தவெறிபிடித்துப்பிறண்டுழலும்பொல்லாப்பேதத்துவிதிகளைத்தழுவியணைத்துந்தனைப்போலுறவுதாக்குந்தயையெனுமரியமாகருணைதனைச்சாற்றவொருவாக்குமுண்டோவம்மம்மாமஹாவுத்தமமாமெய்ஞ்ஞானியர் தங்களுயர்பெருமையிதுவாமெனவேவுறுதியுறும்முமுட்சுகளுணருந்தன்மைதானுமிதுவுகந்துகாணாகனிவாய்.

21 மோக்ஷசாம்பிராஜ்யமாமஹார்விருப்பமுள்ளமுமுட்சுகள்முயலல்வேண்டுஞ்சாதனையைமொழியக்கேட்டுணருமந்தபாவறியசூஸ்திரத்திலுஞ்சூஸ்திரமாரகஸியதுரியந்தொட்டுமாயாதேகோகதுடர்கர்ம்மபந்ததுர்ச்சாதனைமுற்றையுஞ்சுட்டுநீற்றியப்பாற்சாற்றரியவினோதவிலக்ஷணவுகண்டசிவயோகபரப்பிரம்மந்தானென்னவேதணிந்துசதாவுந்தன்னையேதான்பாறுதுமௌனசுபாவசையோகசத்தியமாய்பூஜித்திடலதுமாமஹாமர்ம்மவேற்றறியாத்துரியாதீதத்திலொண்டிமாவிமலததாகாரவிதேகமதீய்விளையுமங்குமெய்ஞ்ஞானம்விள்ளாதுவினோதவாசாமகோசரமாய்மேவிநில்லும்வீற்றமற்றவீறுமஹாமேலோர்களே.

22 அநித்தியமாயாமயக்கதுக்கசாக்ரந்தாண்டுதற்குமோரௌஷதமறையக்கேளுமறியாவசுத்தப்பொல்லாத்துவிதசங்கற்பதேகேந்திரியாதிவிஷயவாசனைவிருத்திமுழுவதுமறத்துறந்துவிடுதலேமுற்றுமுணர்ந்ததிவ்யமாசிவஞானபோதஔஷதமருந்தினவற்புதமாகும். அதுதானல்லவோதன்னையன்றிவேறன்னியமிலாசுத்தகேவலசத்தாய்த் தனிக்குந்தகைமையதுதானன்றோயதின்குணங்குணரகிதம் அதுதானன்றோமா தத்துவப்பிரகாசசையோகந்தனித்துத்தானாயிருந்திருந்திசைந்துகாணேயினிதாய்.

23. தற்போதமிழந்து தனையுணர்ந்த தத்துவத்தோர்
தனிசத்தாய்த்தனித்தமாவியப்பதனாற்பொங்கித்ததும்பிப்
புகழுமரியமாவமிர்தமென்னுமருட்புகழாகியவரியமஹா
வாக்கியத்தையறியாமாயாமயதற்போதங்கொண்டு தனைமறந்த
மயக்கத்துவிதத்தோர்களதையெப்படித்தாகிலுமிலக்கியமில
க்கணத்திற்கிசைப்புற்றுத்திருத்திடல்பொல்லாவிடரீயும்
மாவொப்புவமைகடந்தவவ்வுரைக்கிவங்கோரளவுமுண்டோ
வறையீரவர்கள்செப்புகின்றவாக்கெல்லாம்வாக்கல்லவது
சிதானந்தவதீதமதாய்த்தானே தானான ததாகாரமதைத்தப்பி
தந்தடைவொப்புவமையிசைப்புப்புணர்ப்புமுகப்புமெங்கே
தடுக்கறியுமறியாவரித்ரியவத்வைதமிதுமஹாவினி
தினுமினிதுவிப்பேரின்பமிசைந்துகாணேவினிதாய்.

24. சிவஞானபோதமெனுந்தெளிவுறுந்தீரத்வத்
தங்கமதைத்திரட்டிவரிதரியதொருமாற்றுரைநிரைகடந்ததா
யுருக்கியதில்மாமௌனரத்னக்கல்லழுத்திவபாரமஹாவஸ்து
ப்பதக்கமெனுஞ்சிவமாலைமாருதுதரித்துச்சிறந்தொழுகுமந்த
மாமெய்ஞ்ஞானியானவன்மாயாமயவசத்தெனுஞ்செம்மண்
ணைப்பொன்னெனநாமமிட்டுமதைப்பூஷணமாக்கியும்பொய்
வேடதேகமீதுபோட்டழகுபார்ப்பனோபாரான் பரமகேவல
பண்டிதபக்குவமாநிர்ச்சின்னன். ஆஹாவவன்சிங்காரமபேத
மவன்றெளி, வொளி, தேஜசுவேசுயவழகு, தீரமஹாநிஷ்கிரி
யையவன்திவ்யபுன்சிரிப்பாம், தீர்க்கமுறுஞ்சத்தியமியானெ
னுந்தீரமேதனிமாநிர்ப்பயமரிதற்கரியசின்மயசிதானந்தசிவ
யோகதயாநிதியிவன்றனெனுமியம்பும்வேதமினிதினிதுவிப்
பூஷணந்தேடித்தெளிவுறவிதைப்பூண்டழகுபாரும்புனிதபூர
ணபோதபுத்திரர்களே.

25. அதீதவின்பம்புணரும்மாமஹாவத்வைதசீடனநுஷ்
டிக்குமநுஷ்டானமதைதுமறையக்கேளும்பொல்லாதுஷ்டவா
சனைக்கேதுவானவாக்கிந்திரியத்தைச்சுட்டுநீற்றுதலன்றே



துய்யமஹாசுத்தசுகமீயும்சொரூபசுயமாகுந்தூங்காத்தூக்கம்
பொருந்திநிற்கும்வாங்காம்பதமிதுவாய்வாழ்வுதங்குமரிய
மாமௌனமந்திரமிதுவாம்வாழ்வுகாணேவஸ்துவதாய்.

26 அறிவுகெட்டுமுனுமுனுத்தகங்கரித்துச்சீறி
யாவென்றதட்டிப்பதைபதைத்துப்பதறிவுளறும்பொல்லாப்
போலிப்பொறாமைவெப்பச்சினவசட்டுக்கோவத்தாலங்கழி
யுமாவரும்பொருளையறையக்கேளுமனுஷ்டானவரியமாதவ
மழிந்துபோமரிதினும்மரியவமலமெய்ஞ்ஞானகுருவு
மகன்றிடுவரருமைமிகுமாபோருளுமங்குநீங்குமபேத
மஹாஸாதுசங்கம்பேதித்துப்பிரிந்துவிடுமத்வைதசுருதி
யப்பியாசங்கெடுமஞ்ஞானஜகம்பழிக்குமநித்தியவாசனை
மேலாடுமத்தைமாஹாமௌனவருளென்னுமரியவாளையறி
வோடெடுத்தந்தமாயாமயக்கப்பொல்லாவசுத்தாணவமென்
னுமந்தக்கொடியகோபத்தைவேரறவுமறுத்தாலன்றேவபே
தவருட்சித்திக்குமறிவிழந்தவறிவிலிகாளிங்ஙனறியுங்கள்

27. அரிதரியமாமஹாசிவஞானபக்திவங்குறவாகுமந்த
வுபாயமதையுமதையநுஷ்டிக்குமந்தவநுஷ்டானமதையு
மறைக்கேளுமரியமானிடபுனிதசிரேஷ்டபுத்திமான்களே
பேதமாயாதுவிதமாய்க்குறித்துவேறுவேறாய்க்காண்கின்ற
மன்னுயிராவையுந்தன்னுயிராய்ப்பாவித்திரங்குவதன்றே
வந்தவுரியமாபக்தியெனவமருமங்கதுவன்றேதர்ம்மமது
வன்றேவதன்முறையதுவன்றேமாபுனிதமதுவன்றே
மாவழகுவதுவன்றேமாசுத்தமதுவன்றேவரியகருணை
யதுவன்றேமாபெருமையதுவன்றேமாவொழுக்கமது
வன்றேவழிவிறந்தயாசத்தியமதுவன்றேமாவரியபெரு
ந்தகைமையதுவன்றேமாநீதியதுவன்றிநான்மேலோன்
நான்பக்திமான்நான்சிவபூஜைசெய்வோனிதோசிவபூஜை
செய்யப்போகின்றேன்யாவருமெழுந்துதெரிசிக்கவேண்டு

மெனவும்பிறர்மெச்சப்பெற்றோன்யானென்றுமசுக்தகங்கார
ங்கொண்டுமந்தமயக்கவாளவத்தாற்றேகத்தைச்சிங்காரித்து
க்காட்டுஞ்சிதட்டபக்திமான்களைத்தீரவிசாரித்துத்தெளிந்துசே
ருங்கள்மாஅன்னியமற்றபக்தியிதுவறிவோடமருமறிஞர்
களே.

28. தத்துவமுணர்ந்துதனிச்சைதன்யந்தானெனத்
துணிந்துமாசமரசசுபாவமாய்த்தனித்ததெதுவோவதுவே
மஹாதுரியமத்துரியமாயமர்ந்ததுவாயசைவிறந்ததெதுவோ
வதுவேதுரியாதீதமத்துரியாதீதத்திலொண்டியதெதுவோ
வதுவேயபாரமெனும்மாமௌனமயமறிஞர்களேயறியுங்கள
தீதமதாய்.

29 துரியாதீதமாமெய்ஞ்ஞானதுய்யர்தங்கள்முன்கூட்டி
நிற்கும்மாமஹாமௌனநிஷ்டைதனைத்தொனிக்கக்கேளும்
பொல்லாமாயாமயமாய்விரியுமந்தபொறிபுலனைமீளைந்தைமட்
டுங்குவியப்பாரதங்ஙனரிகண்டமதகுஞ்சரம்போலடங்குமந்த
இந்திரியம்முப்பத்தைந்துமபேதமெய்யறிவோடுகரைந்து
வமலதுய்யமாமஹாசுயவரியஜிதேந்திரியசிவஞானபோத
மீறிவொளிவுகொஞ்சுமதுமாமஹாவழிவிறந்தபேரின்பங்
கொளிக்குமத்வைதமாவமலதேஜசுஜொலித்திலங்குமரிய
மாவருள்பொங்கித்ததும்பிக்களிக்குமதீதமாமெய்ஞ்ஞா
னியுமாமென்றொப்புவாரதுதானன்றொவழிவிறந்தவபே
தநிர்விகற்பஸகஜநிஷ்டையதையறிந்ததுவாயமருமூரிய
மானுடபுனிதசிரேஷ்டபுத்திரர்களேபூரணமாய்.

30. முற்றுமுணர்ந்துமுழுதுறும்பரிபூரணத்வமுத்திமா
குருபரமுனிவோர்தங்கள்முன்பாய்பற்றுறுந்துவிதிகள்போய்
ப்பொய்ப்பாவனையங்குகாட்டிக்கால்மடக்கிக்கைகட்டித்தேக
த்தைநிமிர்த்தித்திடமுடன்மேல்நோக்கிக்கண்மூடிமாநிஷ்டை



யெனச்சதாப்பாவனைகாட்டினாலுமவரவனைமாயாவெருங்
கட்டையெனபுன்சிரிப்புப்புரிவரன்றிவினைவுத்தமநிஷ்ட
னெனநம்புவரோநம்பார்பீருமரியமானிடசிரேஷ்டரேபரிகா
சமிதுவாகும்பாமரவறியாமையாம்வெறுருபாவனையுமின்றி
மாயாமனமிறந்திருமதுபக்குவபாகம்பாலர்களே.

31. தூராக்கிணரெனுந்துக்கசாண்வயிற்றைநோக்கி
மாறுப்பதமொழுகுமிந்தமாமஹாதுறவைமறந்தவற்குமோ
ராப்பேராண்மையதெங்குறையுமுறையாமாகரைகடந்தகால
தீதம்தைக்கலக்கவெண்ணிக்கருதுமாவல்லோன்சாண்வயிற்
பெரிதெனச்சலிப்பனோசலியான்ஜகம்பாழெனப்பழித்துப்
பதைப்பிறந்தோன்சுத்தசிவமாய்நிறைந்தோன்சிற்சொரூப
திவ்யவிலக்ஷணத்தோன்சீர்மைமாமஹாசெருக்குற்றோன்
சிங்காரமௌனமஹாஹாரம்பூண்டோன்தேஜசுமயமுற்றஜி
தேந்திரியதீற்கவல்லமாபுருஷார்த்தோன்சிதானந்தபூரணத்
த்தோன்சிவயோகமாநிஷ்கிரியோன்பரமதாகாரபாக்கிய
முற்றோன்பகாரியபாவனாரகிதமிவனெனப்பறைசாற்றும்
வேதம்பண்பாய்க்காணேபக்குவரே

32. துள்ளும்மனமாயையற்றுத்துரியமஹாபூமியுற்று
ச்சொல்விறந்தமாஜோதிதுரியாதீதமியானெனத்துணிந்தெழு
ந்தசுத்தமஹாதுறவோர்க்குமிந்தவல்லமாபூரணவஸ்துதானு
ய்வாயக்காதோவாய்க்கும்மைந்தனேபார்விள்ளாதிவ்வுலகம்வ
ந்தேவல்செய்யாதோசெய்யும்ஐயமின்மையபாவஞானத்தை
யடையாதவதிதீவிரமாய்த்துறந்துநில்மாவழகுறும்பிரம்ம
ந்தானுய்த்தனித்துநிற்குமங்ஙன்காண்பானுங்காக்ஷியுங்காண
ப்படும்பொருளுங்கறந்ததாகுங்கணிக்கவெட்டாமாமௌனங்
கரதலாமலக்கனிபோற்காணுமந்தக்கருத்தோடிசைந்துங்
காண்பாயென்கண்ணே.

33 சத்தியமாமெய்ஞ்ஞானவரியமஹாசாஸ்வதபூஜை
சார்ந்திடுமுபாயஞ்சாற்றக்கேளுமந்நித்தியமாதெய்வம்
நிற்கும்நிலையதுவுமதுவானலதுநிரஞ்சனம்நிர்க்குணம்நிற்.

தொந்தம்நிராகாரம்நிர்மலம்நிர்விஷயம்நிஷ்கிரியைநிர்விகாரம்
நிராலம்பம்நிராவரணம்நிரந்தரம்நிர்ச்சலனம்நிர்ப்பயம்நிர்
விகற்பம்நிர்நாமம்நிர்ச்சின்னம்நிஷ்பிரபஞ்சம்நிஷ்கண்டம்
நிஷ்களங்கம்நிரவயவம்நிமலபரிபூரணம்நிர்ச்சங்கதுரியாதீ
தம்காலரகிதம்பாவனாதீதம்பகரொவ்வாப்பரமதுய்யபாஸ்பர
மஹாமௌனரகஸ்யமதுவாவதுமாமெய்ஞ்ஞானகுருவருளை
க்கொடுக்கப்பெற்றவ்வருளைத்தனதாகப்பூண்டுமெந்தமஹாமா
வத்துவைதவசங்கவதீதசையோகசாம்பிராஜ்யபுருஷார்த்த
சைதன்யந்தானாய்ஸகஜநிஷ்டைபூர்த்திபூண்டுகளங்காகிதமா
ய்த்தாந்தானைத்தனித்துத்ததாகாரமாய்க்கரைந்ததன்றோமா
சத்தியசொரூபசுயபூஜைசார்ந்தசொக்குமதுவன்றிசத்
தறியாஜடபாவனாதேகோகமாயாஜகக்குருவுகளின்பின்
சென்றுமயக்கமுறுமசத்தியஜடபூஜைபுரிந்திடில்துவஞ்
ஞானமதிகரிக்குமநித்யம்பொருந்திவாழுமறிவுகுன்றி
மனமாய்விரியுமரியதுய்யசித்தஞ்சலித்துத்துணிவுகுன்றும்பு
த்திசிதறும்பொறிபுலன்கள்கலங்கிநானாவிதங்களாய்ப்பேதமு
ற்றுணவம்மெம்மேலாய்மேலாடும்விகாரமிஞ்சிப்பாவும்விகற்
பஞ்சித்தியாகிவிளையாடும்விதிவிலக்குங்கைவல்யமாகிநிற்கும்
நாமரூபஞ்ஜனித்துங்கொஞ்சும்நல்வினைதீவினைபொருந்திக்
களிக்கும்நாணவெட்கம்நல்கும்நஞ்சுறுங்காமியம்நாடிமித
மிஞ்சிமருவிப்பூண்டொழுகுந்துவிதசங்கற்பவிகற்பங்களிடை
விடாதுகூடிச்சுகிக்குந்தொந்தபந்தம்பிரியாதுறவுசேருஞ்சுக
துக்கமழையாதுபுணர்ந்தொழும்மாயாமய துக்கசாகராமமெ
னும்வலையிலகப்பட்டுழலுந்துரும்பதுவாகிப்பேதத்தையே
பூஷணமாகப்பூண்டுகண்டமேகைவல்யமானவன்கண்ணாடி
மண்டபத்திற்புகுந்துமீண்டுகடக்கறியாச்சிசுவைப்போற்
கத்திக்கத்திவேறுபட்டுவிகாரத்தற்றன்னையிழந்தசொக்கு
மல்லால்மாரகஸியநன்றுதீதற்றசுத்தபாவனாகிதபாஸ்பாசிவ
பூஜைதனைப்பற்றிச்சுகிப்பதுமெங்ஙன்சொல்பாலர்களே.

சிவோஹம்.



## ஞானிநிலை.

## பாலன்விவேகம்.

### பாலன் வினா—தாய்விடை.

சம்பாஷணையினாரம்பம்:— என்னை அரிதினுமரிதாகிய தவம்
புரிந்து விவேகமாகிய ஞானபுத்திரன் வேண்டுமென்றுந்தெய்
வத்தைப்பிரார்த்தித்துப்பயின்றாயல்லவோ, அதுவுண்மையே
அதுநிற்க தாயேகேளும் இவ்வுலகின் கண்ணே விளங்கா
நின்ற காரணகர்த்தாவாகிய தெய்வமொன்றுண்டென்றெனச்
சகலமான மனுஷியாள் யாவருமே சொல்லவுங் கேட்டேன்
சம்மதிக்கவும்பார்த்தேன் யானுமொப்புக்கொள்ளுகின்றேன்.
அது அப்படிநிற்க மா மெய்ஞ்ஞானிகளுக்குமட்டும் அந்தத்
தெய்வஞ் சுதந்திரமானதெனவும் அவர்களைநீங்கி அத்தெய்
வமிருக்க முடியாதெனவும் அத்தெய்வத்தை அவர்கள் நீங்கி
யிருக்கமுடியாதெனவும்இரண்டறக்கலந்துபிரேசித்ததே மா
மெய்ஞ்ஞானமெனவும் அதுவே மஹா மௌனமெனவும் அ
துவே மஹா பரிபூரண தெய்வமெனவும் அரிய மா நான்கும
றையுஞ் சத்தியமாகத் தொனிக்கின்றதல்லவோ ஆஹா இது
வென்ன மஹா ரகஸியம் அவர்கள் நம்போன்றொரு தேக
த்தையுடையவர்களாகத்தானே தோணுகின்றனன் அவர்க
ளிடம் என்ன மகிமை பொருந்திநிற்கும் அவர்கள் இரகஸிய
மியாது அறிஞர்கள் அவர்களைத்தொடர்ந்து பூஜிக்கின்றார்க
ளன்றோ மாயா அறிவிலிகள் அவர்கள் தேகத்தை நோக்கித்
தூஷிக்கின்றார்களன்றோ ஆ அதுவென்னகாரணம்? யாது?
எனதுமாதாவே அவர்களிரகஸியத்தை யாராலறியக்கூடும்
யாராலறியக்கூடாதென அதை யெனக்கு நன்றாய் விளங்கும்
படி கருணை கூர்ந்து திருவாய் மலர்ந்தருள்வேண்டுமெனது
தாயே, தாயேயென வணங்கி மைந்தன்றாயை ஸ்தோத்திரம்

பண்ணினான் மா விவேக சிரோமணியாகிய தாயானவள்
என் நற்றவங்கனிந்தகனியே என்னிரு கண்மணியே மைந்
தாவெனத்தூக்கி மார்போடணைத்து அங்கம் புளகாங்கிதமாக
ஆனந்தங்கொண்டு கட்டித்தழுவினள் தேஜஸொழுகிய அரு
ள் முகத்தில் முகம் வைத்து முத்தங்கொஞ்சினள். பாதத்தை
யெடுத்துக் கண்ணிலொத்தினள் மைந்தா; என்னற்றவமின்
றல்லவோ பூர்த்தியாயிற்று என் குறை யின்றல்லவோ நிறை
வேறப்பெற்றேன் குறைவற்ற செல்வமேயெனவும் மைந்தனை
மகிழ்ந்து நோக்கினள். மைந்தன் தாயை நோக்கினன் என்
ஞமந்தனே வருக இதோ கேட்டருளுமென விடையளித்த
னள் என் மைந்தனே உரியமா மெய்ஞ்ஞானியானவர்கள் நிலை
யைக்காண்பதற்கு திரிகுணமாகிய திரிமூர்த்திகளுக்கு மெட்
டாதென மாமறைகளின் வாக்கியம். அவர்கள் தேகியல்ல
விதேகி முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவர்
கள் அரியஜிதேந்திரிய திவ்ய மா மஹா பிரம்மரகஸியமுற்ற
வர்கள் அவர்கள் நிலையை யாராலும் அறிய சாத்தியமன்று
அதோ மா மர்ம்ம மஹா நுட்பம் அது அப்படி நிற்க ஒரு
தேகத்தை நானெனவும் அநித்யப்பிரபஞ்சஞ் சத்யமெனவும்
ஒரு ஸ்திரி தேகத்தை என் பெண்சாதியெனவும் ஸ்திரி புரு
ஷ தேகத்தை என் புருஷனெனவும் அபிமானித்தும் அதி
னால் விளைகின்ற துன்பத்தை யின்பம்போலநுபவித்தும் அது
வின்றியும் சுத்த மடமையாகிய மண் கல்லையுருப்பிடித்து
அத்தைத் தெய்வமெனவும் அந்த ஜடமே சகலபாக்கியமுங்
கொடுப்பதாகவுமெண்ணியும் இன்னும் நானாவித பேதங்க
ளோடுகூடியுமுழலுகின்ற மாயா தேகோகிக்கி மா மஹா
விதேகலக்ஷணமாய் விளங்காநின்ற மெய்ஞ்ஞானியின்னுரிய
மாநிலைமையெப்படி அறியமுடியும். முடியா, அந்தஅஞ்ஞானி
பார்வை விகாரப்பார்வையல்லவோ அவன் மனம் துர்விஷய
த்தையே நோக்கும் அவனுடைய வாக்கு துர்வசனத்தையே
வசனிக்கும் அவன் சித்தஞ் சதாசலிக்கும் அவன் செவி



துக்க வார்த்தைகளையே கிரகிக்கும் அவன்கை துர்விஷயத்
தையே செய்யும் அவன் புத்தி மிகுசிதறுதலுடன் புலம்
புவன் அவனுக்கு போதமே சூனியம் அப்படியவன் குண
தோஷமிருக்க அவன் மெய்ஞ்ஞானிகளைப்பார்த்துத்துவேஷ
ங்கொள்வன், கிறுக்கனென்றுஞ் சொல்லுவன், அவன் மாயா
மயச் செய்கை பூராய் அசுத்தவநித்யதுக்கமானதாலன்றோ
அவன் மெய்ஞ்ஞானிகளையுந் தன்னைப்போல் நினைத்துத்து
வேஷங்கொள்வதற்கேது அதுஎதுபோலெனில் அறிவின்மை
யாகிய ஜெந்துக்களின் கண்ணிற்குச் சந்திரகாந்தி விகாரமாய்
த்தோணிக்கூக்குரல் போடுவதுபோலாம். அவன் கண்ணிற்கு
மெய்ஞ்ஞானிகள் விகாரமாய்த் தோணுவர்கள் அதினால்ல
லவோ அவன் துவேஷங்கொள்ளக்காரணமாயிற்று அவன்
மெய்ஞ்ஞானியுண்மையை யெப்படியுணரமுடியும் முடியா
அந்தப் பாவதோஷிக்கிபாவனாரகித மா ரகஸியந்தோணுமோ
தோணா இதை நன்றாயுணரக்கடவாய் மைந்தனே இதுவிப்
படி நிற்க அறிஞராகிய முமூட்சுகள் மட்டும் மோக்ஷயிச்சை
யுற்றவர்களானதால் மெய்ஞ்ஞானி நிலையையுண்மையென்
றுணர்ந்து அவ்வழியிற் பின்பற்றிச்சென்று அவர்களடைந்
திராநின்ற மெய்ரகஸியத்தைத்தானும் அடைவார்கள் அவர்க
ளன்றோ அந்த பாக்கியத்தையடையப் பாத்தியமுடையவர்
கள். அவர்களன்றி குடும்பசாகர காமவலையிலகப்பட்டு மாயா
மயமாய் மயங்கியுழலும் ஜீவனொருவனுக்கும் மஹா மாசூஸ்
திரத்திலுஞ்சூஸ்திரமாய் விளங்காநின்ற பிரம்மமா இரகஸிய
மெய்ஞ்ஞானிவுரியநிலையதையும்அறியாத அஞ்ஞானமுடைய
துவிதற்கு மறியச்சாத்தியமேயன்றென யுண்மையாய் நம்பு
மைந்தனே, திரிமூர்த்தியாகிய முக்குணத்திற்கு மெட்டாதெ
ன்றால் மும்மலத்தைப் புசிக்குமிந்த மாயாமயக்கப்புழுவுக்கு
மெட்டுமோ எட்டாமைந்தனே மெய்ஞ்ஞானத்துவேஷி அ
ஞ்ஞானவுபாசியெனக்காண்பாய் அஞ்ஞானிநிலை அநித்தியக்
கிரியை மெய்ஞ்ஞானிநிலை நித்ய நிஷ்கிரியை எங்கெட்டும்

என் மைந்தனே இந்த மா இரகசியத்தைநீயேயுணர்ந்து அத
னுண்மையையடையக் கடவாயாக அவர்கள் பாமரனைப்போ
லிருப்பார்கள்பண்டிதத்திறமை காட்டார் கண்டுகொள். அஞ்
ஞானமுடைய துவிதிகளைக்கூடாதே அரியமா அநுபூதிமான்
களைக்கூடி மா நுட்பமாயுள்ள பிரம்மரகஸியத்தையடைந்
தொழுகுவாய் சிலது தமசினர்கள் ஞானிகள் ஊரிலிருக்கப்
படாது மலைவனமிருக்க வேண்டுமென்றுஞ் சொல்லிக்குளறு
வார்கள் அது அஞ்ஞான வதந்தி அறிவிலர் வசனம் பேத
முடையோன் பிதற்றும் புலம்பல் அதை அலக்ஷியம் பண்
ணித்தள் சீச்சீயென்றகற்று சிறுமையுள்ளோர் வசனந்தீதி
னுந்தீது அதைத்திரும்பிப்பாராதே மா மெய்ஞ்ஞானி பேத
ரகிதரல்லவோ. அவர்களுக்குக் காடேது மலையேது ஊரேது
அவர் ஏகாந்தமுற்ற பரிபூரணரல்லவோ அவரகண்ட சொ
ரூபியல்லவோ அவர்கள் தேகமெங்கிருந்தாலென்ன வெங்கு
போனாலென்ன அவர்கள் நிலை போக்குவரத்தற்றதல்லவோ
மைந்தனே அறியாமடமை வசனங்களைக்கேட்டு மயங்காதே
துச்சமாய்த்தள் மா மெய்ஞ்ஞானம் நிர்விகற்பமல்லவோ அ
வர்களுக்கு விதிவிலக்கேது மைந்தனே மடமைமிகுந்தோன்
வார்த்தைக்குப் பொருளேது ஞானமேசூனியமல்லவோ அவ
னையணுகாதே துப்புரவாய் நீக்கிவிடு உண்மையறிஞர்களைக்
கூடி உண்மையறிந்து உண்மையையடையக்கடவாய் அது
வாகவே வாழ்கக்கடவாய் சத்திய நித்தியமாய் ஜொலிக்கக்க
டவாய் சத்திய மெய்ஞ்ஞானமிது இதுவாய்த் தனித்து சம்
பூரணமாய்ச் சுகிக்கக்கடவதெனத் தாயளிக்கப்பெற்றுள்ள
முழுதுறும் மஹா மௌனமந்திரஞ் சிவோஹஞ்சிவோஹம்.

சிவோஹம்.



கும்மியடிபெண்கள்கும்மியடி ஞானக்
கோமானருட்கொண்டுகும்மியடி
சம்மியத்வம்பூண்டுதன்னைக்காட்டு முரிமை
சார்ந்துகும்மிதான்கொட்டுங்கடி. 1

பெண்களுக்குஞானம்பொருந்ாதெென வுலகிற்
பேசுவர்ஜீவோபாதிகொண்டோர்
நுண்ணியமெய்ஞ்ஞானபோதரெல்லாம் இதை
நுந்துதல்பண்ணித்தகுங்கொள்ளென்றார் 2

மாதர்க்குப்பேதமையணிகலமென் றொரு
மாயாமயக்கவதந்தியுண்டாம்
பேதர்மொழியித்தைக்களைந்துதள்ளி யபேத
பேரின்பங்கொளிப்போந்தோழிமாரே, 3

ஆணும்பெண்ணும்பெண்வயற்றுதித்தாகு மந்த
ஆணுக்குமட்டும்பொருத்தமென்னென்
றோணுமித்தேகமும்பூதமைந்தேகா ணதிற்
றுலங்குமன்னன்மாவுமேகமேதான். 4

புருஷன்பெண்ணலியென்றறிவுக்கில்லை அந்தப்
புருஷார்த்தப்பூண்டுபூர்த்திகொள்வோந்
திரிசியமியாவையுஞ்சிவத்திற்கோப்போ மரிய
ஜீதேந்திரியமுற்றுக்கும்மிதட்டுவோம். 5

ஞானத்திற்குநாமரூபமித்தை சுய
நல்லறிஞர்க்குத்துவிதமித்தை
ஊனரகிதமாய்த்தோழிமாரே தூய
வுண்மைபொருத்திக்கும்மிதட்டுவோம்.

விசேஷபோதமாய்விளங்கிடுவோஞ் சுத்த
விமலமுத்துக்கோவைகோத்தணிவோந்
துவேஷபீதியையறத்தறிப்போந் துய்ய
ஜோதிமயமாய்க்கும்மிகொட்டுவோம். 7

அகத்தைப்பிரம்மமதாக்கிசைப்போங் குன்று.
வசங்கநிற்சின்னவரசதாவோம்
இகத்தைப்பரமாக்கிருந்துவாழ்வோம் நல்
லினிமைபூண்டுகும்மிகொட்டுவோம். 8

சமரசசுபாவமாய்த்தங்கிடுவோஞ் சித்தஞ்
சலியாச்சாஸ்வதமாநன்கிடுவோம்
அமரத்வம்பூண்டமர்ந்தாடுவோஞ் சுத்
தாத்வைதானந்தக்கும்மிகொட்டுவோம். 9

எல்லாமுள்ளும்புறப்பொதீந்துநிற்போந் தனித்
தேகாந்தப்பெருந்தகைமையாவோந்
தள்ளாதுகொள்ளாதிருந்துவாழ்வோஞ் ஞான
தாழாமைதாக்கிக்கும்மிகொட்டுவோம் 10

மோகாதிபோகமறமுனிவோந் துவித
முன்னிலைபோக்கிமுழுதுமாவோம்
ஏகாதிபத்தியமிணைத்திடுவோஞ் சுத்த
விறுமாப்புற்றுக்கும்மிதட்டுவோம். 11

உன்னாஸ்தலத்திலும்வீற்றிருப்போஞ் சுய
வுன்னதமாகவொழுகிவாழ்வோஞ்
சின்னாபின்னம்பற்றாச்சிறந்திடுவோந் திவ்ய
சித்ரப்படம்போற்கும்மிதட்டுவோம். 12



பாவனாதீதம்பதிந்துவாழ்வோ மந்தப்
பாக்கியந்தானாயிருந்தானாவோந்
தாவனமறத்தரித்திருப்போம் நித்ய
சாம்பிராஜ்யமாகக்கும்மிதட்டுவோம். 13

பொறிபுலனாதியைபொருளிற்றேய்ப்போந் தத்வப்
போதையுண்டுபொருந்தித்தோய்வோந்
நெறியொடுநிர்ணயநேர்மைகொள்வோ மந்த
நிற்பின்னமுற்றுக்கும்மிதட்டுவோம். 14

துன்பவின்பங்கறந்துநிற்போஞ் சுத்த
சுதந்திரநிஷ்டையுஞ்சூட்டிருப்போந்
தன்பதிதாக்கிமௌனமாவோஞ் சதா
தந்தனம்பாடிக்கும்மிதட்டுவோம. 15

தூயமறைப்பால்கறந்தெடுப்போ மதைச்
சுயமாய்க்காய்ச்சிவுறைக்குத்துவோம்
நேயவுத்தியால்வெண்ணெய்பிரிப்போ மந்த
நித்யநெய்யுருக்கிவுட்கொள்ளுவோம். 16

நாசரகிதமாய்வீற்றிருப்போம் மௌன
ரஞ்சிதப்போதைகொண்டாடிடுவோம்
வேஷமொன்றின்றிவிளையாடுவோஞ் சத்ய
விசேஷம்பூண்டுகும்மிகொட்டுவோம். 17

சுவாநுபூதிமாதூய்மையாவோந் திவ்ய
சுகாந்தமயமாய்ச்சூழ்ந்திடுவோம்
நிவாததீபம்போலசலனறுவோ மந்த
நியாயமுற்றுக்கும்மிகொட்டுவோம். 18

இராப்பகலற்றுமிலங்கிடுவோம் பிரம்ம
விலக்கணம்பூண்டிசைந்தாடுவோம்
ஓராவுன்னதாயுமோங்கிடுவோ மந்த
வுல்லாஸமுற்றுக்கும்மிதட்டுவோம். 19

பேராண்மைபூண்டும்பெரிதுறுவோ மந்தப்
பெருமைமயமாய்ப்பெருகிநிற்போம்
நோதல்கொண்டுநிலைபெறுவோஞ் சுத்த
நிற்குணமுற்றுக்கும்மிகொட்டுவோம். 20

பாவபுண்ணியமும்பற்றாநிற்போ மந்த
பண்பாயுற்றுப்பதைப்பறுப்போம்
தீவிரதிவ்யமாஸ்திரம்பெறுவோ மதீத
சிற்சொரூபமாய்க்கும்மிதட்டுவோம். 21

நிகரற்றசுயம்பிரகாசமாகுவோந் துய்ய
நிராகாரசாதனம்பெற்றிருப்போம்
விகாரமணுகாவினோதமாவோம் நித்ய
விஞ்ஞானமுற்றுக்கும்மிதட்டுவோம். 22

உதியாதொடுங்காவுயர்வதாவோ மந்த
வுண்மைமயமாயொழுகிடுவோம்
மதியாமாமாட்சிமைபூண்டிடுவோந் துரிய
மாடிமீதேறிக்கும்மிதட்டுவோம். 23

கர்ம்மத்திற்கெட்டாக்கடந்தாடுவோ மரிய
கற்பனாதீதத்தேறிப்பாடுவோஞ்
சர்வமுந்தானாய்த்தரித்தாடுவோ மந்த
சாக்ஷாத்காரமாய்க்கும்மிதட்டுவோம். 24



மௌனசுபாவமமதைகொள்வோம் நித்ய
மாக்ஷிமைபெற்றுவசித்திடுவோங்
கமனவடிவமாய்க்கலந்துறுவோ மந்தக்
காலாதீதமுற்றுக்கும்மிதட்டுவோம். 25

ததாகாரநேர்மையாய்த்தாக்கிடுவோஞ் ஞான
சம்பூரணசொஸ்தத்தனிப்புறுவோம்
போதமேவடிவதாய்ப்புணர்ந்திடுவோ மந்தப்
பொக்ஷந்தானாகக்கும்மிகொட்டுவோம். 26

துற்சங்கம்பற்றாத்துறந்திடுவோந் தூய
சுகந்தம்பூண்டுமாசூழ்ச்சியாவோஞ்
நிற்சங்கங்கொண்டுவிளையாடுவோ மந்த
நிர்ணயம்பூண்டுகும்மிதட்டுவோம். 27

மெல்லியரேபாசம்போக்குங்கடி மஹா
மேன்மையையுற்றுற்றுநோக்குங்கடி
நல்லியல்பதையுந்தேக்குங்கடி ஞானம்
நட்டுக்கும்மிதானாய்த்தட்டுங்கடி. 28

பாங்கிமாரேபாராப்பாவையடி சுட்டாப்
பான்மையுற்றுத்தன்னைக்காணுங்கடி
தாங்கிவிரண்டறப்பேணுங்கடி தத்வ
தாளமிட்டுக்கும்மிகொட்டுங்கடி. 29

பூங்கோதைகாளொன்றாய்க்கூடுங்கடி அபார
புதுமையைக்கண்டுகொண்டாடுங்கடி
நீங்காப்பெருவாழ்வுபூண்டாளுங்கடி வஸ்து
நேர்மைகண்டுகும்மிதட்டுங்கடி. 30

அறிவையாரேயருட்கொள்ளுங்கடி மயக்கு
மஞ்ஞானத்தையறவெல்லுங்கடி
சிறுமைபெருமையைத்தள்ளுங்கடி வரிய
சீர்மைச்சித்தாய்க்கும்மிதட்டுங்கடி. 31

இளம்பிடிகாள்மோகம்போக்குங்கடி இனிய
யேகாந்தஸ்தானத்தைநோக்குங்கடி
களங்கமற்றொன்றதாய்த்தேக்குங்கடி அபேத
கருணையுற்றுக்கும்மிகொட்டுங்கடி. 32

கனங்குழைகாள்கருத்தோடுணருங்கடி ஒன்றாலுங்
கணிக்கக்கூடாததைத்தொடருங்கடி
மனங்குலையக்கண்டயர்ந்தாடுங்கடி மஹா
மௌனமுற்றுக்கும்மிகொட்டுங்கடி. 33

பைங்கிளிகாள்பதம்பற்றுங்கடி உரிமைப்
பரஸ்பரமாயுற்றுப்போற்றுங்கடி
மங்கலில்லாத்தீபமேற்றுங்கடி மஹா
மர்ம்மமுற்றுக்கும்மிதட்டுங்கடி. 34

காரிகைகாள்சா[illegible]தைக்காணுங்கடி துவித
கண்டமறவெங்குந்தான்பூணுங்கடி
பேரிகைகொட்டிப்பெரிதாயாணுங்கடி பிரியாப்
பேரின்பமாய்க்கும்மிதட்டுங்கடி. 35

தூய்மொழிகாள்சுயம்பாகுங்கடி தூய
துல்லியசொரூபமாய்க்கூவுங்கடி
ஆய்ந்தறிவாயெங்குந்தாவுங்கடி அடங்கா
வரூபக்கும்மிவிங்குகொட்டுங்கடி. 36



சேயிழைகாள்ஜெயம்பாடுங்கடி ஞான
சிங்காரமிட்டருட்சூடுங்கடி
கோயிலாய்ப்பூரணங்கூடுங்கடி மோக்ஷக்
கொடிகட்டிக்கும்மிதான்றட்டுங்கடி 37

மொய்குழல்காள்முன்னிலைமுனியுங்கடி முழுது
முற்றுமொன்றாகத்தான்கனியுங்கடி
உய்யும்பொருள்கோத்தணியுங்கடி திவ்ய
வுத்தியுற்றுக்கும்மிகொட்டுங்கடி 38

பெய்வளைகாளரிதரிதாகுங்கடி ஒய்வு
பெற்றுப்பிரீதியாய்ப்பாவுங்கடி
துய்யமெய்க்குரவனைப்பேவுங்கடி யூகந்
தொடுத்துத்தானாய்க்கும்மிதட்டுங்கடி. 39

நுண்ணிடைகாள்நோகாநுட்பமடி இத்தை
நோக்கறநோக்கத்தானாக்குமடி
எண்ணரியபொருள்தேக்குமடி வஸ்து
வுற்கத்தானாய்க்கும்மிதட்டுங்கடி. 40

ஆயிழைகாளபாரங்கூடுங்கடி ஆசா
னளித்தமுறைமையையநாடுங்கடி
நேயநிர்விகற்பஞ்சூடுங்கடி சுபாவ
நேமமுற்றுக்கும்மிதட்டுங்கடி. 41

பூவையாரேபூண்டுநில்லுங்கடி தனிப்
போக்குவரத்தற்றுக்கொள்ளுங்கடி
தேவைவேறொன்றில்லைவெல்லுங்கடி பிரம்ம
தேஜசுற்றுக்கும்மிகொட்டுங்கடி. 42

அழகியரோகன்றாய்க்கேளுங்கடி பொரு
ளமைவுற்றுமசையாதாளுங்கடி
பழகிப்பார்த்துப்பண்பாய்வாழுங்கடி அந்த
பதமொழுகிக்கும்மிகொட்டுங்கடி. 43

பேதம்பிறந்ததுமுருவத்திலே அந்தப்
பேதமிறந்ததுமரூபத்திலே
போதஞ்சுறந்ததும்புனிதத்திலே பூரண
பூர்த்தியுற்றுக்கும்மிதட்டுங்கடி. 44

கர்ம்மமுற்றதுமஞ்ஞானத்திலே மாயா
கர்ம்மமற்றதுமெய்ஞ்ஞானத்திலே
நிர்வர்நமுற்றதுஞ்சுஞ்ஞானத்திலே இந்த
சேர்த்தியுற்றுக்கும்மிதட்டுங்கடி. 45

தன்னையறிந்ததுந்தத்வத்திலே சுயந்
தன்னையிசைத்ததுஞ்சத்தியத்திலே
கண்ணைமறித்ததும்நித்தியத்திலே அருட்
கண்விரித்துக்கும்மிகொட்டுங்கடி. 46

மௌனமுற்றதுமாமர்ம்மத்திலே மன
மாயையற்றதுமாபிர்ம்மத்திலே
கமனமுற்றதும்நிஷ்கர்ம்மத்திலே கதி
கலந்தோமென்றுங்கும்மிதட்டுங்கடி. 47

முப்பத்தாறுகவிரிந்ததொன்றே அந்த
முப்பத்தாறையுமொடுக்கவொன்றே
அப்பாற்றுணைகவமர்ந்ததொன்றே இந்த
வற்புதமாங்கும்மிகொட்டுங்கடி. 48



சத்யமெய்ஞ்ஞானியைமேவுங்கடி ஞானஞ்
சத்யமாய்ச்சித்தியுற்றோங்குமடி
பத்யமாய்ப்பக்வம்பதியுங்கடி பாக்யம்
பலிதமென்றுகும்மிகொட்டுங்கடி. 49

காகதாலியநியாயம்போலுஞ் ஜீவ
காருண்யவருட்பொழிந்ததடி
யேகசுபாவசுதந்திரமாய்க் தனித்
திருந்துங்கும்மிகொட்டுங்கடி. 50

சத்தியமெய்ஞ்ஞானமிதானதடி இதைச்
சகலருமடையப்பொதுவானதடி
யுத்தியாலொட்டிவுணருங்கடி மாறு
வுறுதியதாய்க்கும்மிதட்டுங்கடி. 51

அருளேவடிவமாய்ப்பூணுங்கடி நித்ய
வகண்டாகாரமதாய்க்காணுங்கடி
தெருளேமயமதாய்ப்பேணுங்கடி உரிய
தீர்மானமாய்க்கும்மிதட்டுங்கடி. 52

பாங்கிசேயிழைகாளென்றதெலாம் அழைக்கும்
பாங்கையன்றிவுருவநாமமின்றாம்
நீங்கிப்பேதங்கொண்டுமயங்கிடாம லரூப
நிச்சயமாய்க்கும்மிகொட்டுங்கடி. 53

கூவுதற்குக்கணித்தநாமமிதாம் உண்மை
கூறுதற்குத்தொனித்தவுருவமதாம்
மேவுதற்குத்தனித்தவரூபமதாம் அந்த
மெய்ம்மைநாமரூபமற்றதடி. 54

ஆணைப்பிறந்தாற்றான்முத்தியென்று வீ
ணருட்டுதல்பண்ணியேமாற்றுவார்கள்
நாணுதுமதையுதாசனமாய்த்தள்ளி ஞான
நன்குபூண்டுகும்மிகொட்டுங்கடி. 55

மனிதரென்போரெவர்க்கும்பொது முத்தி
மருவிப்பொருந்துதற்குரிமையுண்டாம்
புனிதம்புனிதமிதாணையாணை பதம்
புணர்ந்துகும்மிதான்கொட்டுங்கடி. 56

பெண்ணுருவம்பாவத்தாலமையுமென் றறியாப்
பேதமையோர்சொல்லிப்புலம்புவர்கள்
மண்ணும்வித்துஞ்சையோகமாகாது வித்து
மர்மாகுவதுதானந்தரஸ்தானமோடி. 57

பூமியைப்பாவமென்றோதினுக்கால் அதிற்
பொருந்திவிளைபலன்பாவமாகாதோடி
காமிக்யகர்மமிகலக்கவிதியென்று நன்றாய்க்
களைந்துதள்ளிக்கும்மிதட்டுங்கடி. 58

பூமிக்குச்சமானும்பெண்ணுருவாம் வித்துப்
புதைத்துவிளைபலன்குழந்தைகளாம்
காமியத்தாலமுதூட்டிவளர்ப்பதுநேரா ழியல்பு
கண்டறிந்துகும்மிகொட்டுங்கடி. 59

மாதாபிதாக்குருதெய்வமென்று முதல்
மந்திரவாக்யங்கண்டுணருங்கடி
மாதாவுக்குமுத்தியின்றென்றாக்கால் மாதா
மைந்தனுக்குமுத்திவாய்க்குமோடி. 60



தாலியோடிறந்தாற்சுவர்க்கமென்பா ரத்
தாலியற்றிறந்தால்நரகமென்பார்
போலிமாயாஜகப்பொய்யிதென்று மதைப்
போக்கிநன்றாய்க்கும்மிதட்டுங்கடி. 61

கூடியாடிவிளையாடுங்கடி அருட்
கோமானைப்புகழ்ந்துபாடுங்கடி
நாடாநாட்டமதாய்ச்சாடுங்கடி நீங்கா
நண்புற்றுக்கும்மிதானறட்டுங்கடி. 62

சிவோஹஞ்சிவோஹமென்றாடுங்கடி அபேத
சிங்காரம்பூட்டித்தான்பாடுங்கடி
தவமருள்சிவயோகங்கூடுங்கடி சத்ய
ஸகஜமுற்றுக்கும்மிதட்டுங்கடி. 63

(கருத்து) மேலருளிச்செய்திராநின்ற உரிய இலக்கணமியாதென்றால் பெண்ணுருவங்கள் பாவத்தால் ஜெனித்துவந்த ஜென்மமென்றும் அவர்கள் மோட்சசாதனமடையச் சாத்தியப்படாதென்றும் அறியாமை மிகுத்துள்ளோர் கூறி இழிவு செய்தல் தகாமை என்றும் அடியார்கள் வயிற்றில் கருப்பந்தரித்து ஜனித்துஅவர்கள் அங்கத்தில் ஊறும் அமுதை வுட்கொண்டு வளர்ந்துள்ள ஆணுருவங்களுக்குமட்டும் மோட்சசாதனம் சாத்தியமாகுமென்று கூறுவது ஜீவகாருணியமில்லாதகொடிய செயலென்றதை மறுத்து மோக்ஷ சாம்பிராஜ்யமடைவதற்கு உருவங்காரணமின்றென்றும் உணர்வுகாரணமென்றென்றும இரண்டுவித உருவமாய்த் தோற்றப்பட்ட மனிதர்கள்எல்லோருக்கும் அரியமா முத்தி அடைவதற்குச்சுதந்தரமுண்டென்றும் நிச்சயிக்கும் பொருட்டென்றுணர்க.

சிவோஹம்.

## மருந்து.

சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹந் திவ்ய
சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹம்.

அருள்மருந்துமருந்து நித்
யானந்தமாகிப்பொங்குமருந்து
கருமங்கெடுக்குமருந்து கதி
காட்டிக்கொடுக்குங்கருணைமருந்து. 1

சுத்தசொரூபமருந்து ஞான
சூக்ஷமபாகத்திலீற்றமருந்து
சுத்தங்கெடுக்குமருந்து சுய
சைதன்யமாகத்தனித்தமருந்து. 2

எல்லாந்தானானமருந்து தனி
யெல்லாமதத்திற்குமதீதமருந்து
வல்லபமானமருந்து தூய
மஹாத்துக்கள்வாய்மடுத்துண்ணுமருந்து. 3

புராணமணுகாமருந்து பரி
பூரணமாகிப்பொருந்துமருந்து
பாதீனம்பற்றாமருந்து நிற்
பாசமாகப்பதிந்தமருந்து. 4

முத்தர்களீற்றமருந்து நித்ய
முத்தியளிக்குமோனமருந்து
வித்தகமுற்றமருந்து சுத்த
விமலமாகவிளைந்தமருந்து. 5



குருமுறைப்பாகமருந்து அருட்
கொழுந்துவிட்டெழுந்தமருந்து
பெருமுறைபெற்றமருந்து பேசாப்
பிரம்மவிலக்கணம்பெருக்குமருந்து. 6

ஓமென்றெழுந்தமருந்து குறி
யொன்றுமிலாதுயர்ந்தமருந்து
தாமென்றமர்ந்தமருந்து சுத்த
ததாகாரமாகத்தனித்தமருந்து. 7

மறைநான்குந்தேடுமருந்து மஹா
மர்மம்பூண்டுமகிழ்ந்தமருந்து
கரைகடந்துற்றமருந்து மாயா
கற்பனையற்றுக்களிக்குமருந்து. 8

ஊனமில்லாதமருந்து வே
றொன்றையுமொப்பிடவொண்ணாமருந்து
மோனமுடிந்தமருந்து அறியா
முன்னிலையறமுனிந்தமருந்து. 9

சத்தியமானமருந்து சர்வ
சாக்ஷிக்குந்தானாய்த்தளிர்த்தமருந்து
சித்திசித்தித்தமருந்து திவ்ய
ஜிதேந்திரியமாகத்திரண்டமருந்து. 10

என்னையெந்தன்மருந்து மாயா
விருவினைக்குமெட்டாமருந்து
தன்னைத்தாக்குமருந்து அபேத
ஸந்ததமாகத்தனித்தமருந்து. 11

சித்திரமொத்தமருந்து அருட்
சின்மயபாகத்திற்சேர்த்தமருந்து
யுத்திக்குகந்தமருந்து தனித்
தோருணர்வாகவுருட்டுமருந்து. 12

அருவுருவானமருந்து உரு
வற்றுவாழுமரூபமருந்து
கருதரிதானமருந்து சொரூபக்
கண்ணுமெங்குங்கலந்தமருந்து. 13

பித்தந்தெளிந்தமருந்து அருட்
பித்தருண்டுபேசாமருந்து
தத்துவமானமருந்து தன்னைத்
தானேபூஜிக்குஞ்சர்வமருந்து. 14

தோணுண்ணுதமருந்து சுத்த
சொரூபமயமாய்ச்சொரிந்தமருந்து
ஆணவம்போக்குமருந்து சுய
வறிவதாய்ப்பூட்டியமுத்துமருந்து. 15

இனியவுரிமைமருந்து தனி
யெங்கெங்குந்தானயிருத்துமருந்து
ஜனிப்பிறப்பற்றமருந்து மோன
சாதகமுற்றுமுடித்தமருந்து. 16

உன்னிணுலொட்டாமருந்து சிவ
யோகமிட்டுருக்குமருந்து
நன்னிலைபூண்டமருந்து ஞானம்
நட்டதுவாகநல்குமருந்து 17



உண்டாற்கினியமருந்து ஞானம்
பூண்டாற்பிரியாப்புணருமருந்து
விண்டால்விலகுமருந்து அத்தை
விரும்பியுகந்தாலிசையுமருந்து 18

எண்ணுதற்கெட்டாமருந்து வினிய
வேகாந்தமுற்றுலிணங்குமருந்து
மன்னுயிரானமருந்து மஹா
மாக்ஷிமையுற்றமௌனமருந்து 19

பரஸ்பரமானமருந்து ரகஸ்யம்
பகரப்பட்டாதுபதிந்தமருந்து
திரஸ்திரமெந்தன்மருந்து அதீத
தீர்க்கநிர்ணயமானமருந்து. 21

சிவோஹம்.

## சீடன்வின ஞானச்சிந்து.

இராகம்—செஞ்சுருட்டி தாளம் அடா.

ஆதியுமந்தமுமற்றஜோதியேகுருபரமே
நீதியாய்ப்பணிந்துகொண்டேன்மெய்யனே யருட்
சோதியாக்கியாண்டருளுந்துய்யனே. 1

எத்தனையோதவங்களைப்பண்ணிப்பண்ணிவந்தடுத்தேன்
சித்திநிலைகாணவில்லைமெய்யனே ஞான
சித்திநிலைகாட்டவேண்டுந்துய்யனே. 2

ஆணவமறைப்பொழுங்கறிவுதனைமூடுதையோ
யாணவத்தைநீக்கிப்போடுமெய்யனே என்
னறிவுதனையிட்டிக்கொடுந்துய்யனே. 3

அஞ்சுபஞ்சகோசங்களைநஞ்சுபோற்பறித்தெறிந்து
மிஞ்சினதைத்தந்தருளுமெய்யனே உங்கள்
தஞ்சமென்றுவந்தடைந்தேன்றுய்யனே. 4

மனமதுவைப்பொருளதாக்கிமருளதுவைத்தெருளதாக்கி
மனமிறக்கப்பொருள்சுறக்குமெய்யனே யுன்
னருள்கொடுக்கப்பொருளதாகுந்துய்யனே. 5

சித்தசுத்தியில்லாமலேபுத்தியையடகுவைத்தேன்
சித்தசுத்திபண்ணித்தாருமெய்யனே என்
புத்திதனைமீட்டியாளுந்துய்யனே. 6

திரிகுணவழியதனிற்சென்றுசென்றுவாடுகின்றேன்
றிரிகுணத்தைப்போக்கிவிடுமெய்யனே யறிவைத்
திருத்தியெனையாண்டருளுந்துய்யனே. 7

பஞ்சப்பொறிப்பிரமைமீறிப்பற்றிப்பிடித்தாட்டுதென்னை
பஞ்சப்பொறிபற்றறுப்பாய்மெய்யனே இந்தப்
பஞ்சைதனைக்காத்தளிப்பாய்துய்யனே. 8

புலைச்சேரிப்புலன்களைந்தும்பூரணத்தைமறைக்குதையே
புலைச்சேரிப்புலன்களதைப்போக்கடிப்பாயையனேஎனைப்பரி
பூரணத்திற்சேர்த்திடுவாய்மெய்யனே. 9

தத்துவத்தைமூடுகின்றசங்கமெனுங்கருவிகளை
தத்துவத்தைநீக்கிவையுமெய்யனே தனித்
தத்துவமாயாக்கியாளுந்துய்யனே. 10

அத்துவைதஞானமைந்தாவருளானத.வேநீயுமாச்சு
சுத்தசத்தாய்மட்டுமிஞ்சிநில்லடா மெய்ச்
சூத்திரமேயானபொருள்நீயடா. 11



பதைப்பறப்பரமதாச்சுப்பார்ப்பதெல்லாந்தானதாச்சு
பந்தமோக்ஷமற்றுவாழ்ந்தேன்மெய்யனே பொருள்
சொந்தமுற்றுநிறைந்துகொண்டேன்றுய்யனே. 12

சுத்தப்பிரம்மசுவாமிவுனைச்சுட்டிப்பார்த்தாற்றுவிதமாகுஞ்
சுத்தஞ்சுட்டாவபேதமேகமெய்யனே நித்ய
சொரூபபூஜையாகப்பூண்டேன்றுய்யனே. 13

விஞ்ஞானகுருபூஜைவிமலபரம்பூஜையாச்சு
துய்யபூஜையேகமாகச்சொக்கினேன் மெய்ச்
சுஞ்ஞானபூஜைசொல்லாவிடந்துய்யனே. 14

நாமரூபமற்றுப்போச்சுஞானபூஜைசித்தியாச்சு
நானுநீயுமேகமாச்சுமெய்யனே மெய்ஞ்
ஞானமதேசித்தியாச்சுதுய்யனே. 15

விதேகமென்னும்வீடுமாச்சுவிள்ளாவிடமிருப்புமாச்சு
விவேகபோதநித்யமேமெய்யனே மௌனம்
விளைந்தவிடஞ்சுதந்திரமேதுய்யனே. 16

மெய்ஞ்ஞானபூரணமேமெய்யுணரமெய்யுமாச்சு
ஐயமில்லையசையாதேமைந்தனே மெய்
யானதுவேசத்தியமேதுய்யனே. 17

சிவோஹம்.

## மௌனப்பதிகம்.

மற்றுப்பற்றென்ன என்ற மெட்டு.

பற்றறும்பெரும்பற்றினையருட்பற்றினைத்தன்னைபற்றினேன்
சுற்றமும்பிறரின்றியுஞ்சுயபோதமேவந்துதோன்றினுப்
முற்றுமேதனையன்றியுமொன்றைமுன்னிலையாகக்கண்டிலன்
பெற்றிடும்பெரும்பொருளுமாகியுந்தன்னைப்பேசிடாதென்ன
பெருமையே. 1

மண்ணுமாய்ப்பெரும்விண்ணுமாய்க்குளிரப்புவாய்த்தேய்வு
வாய்வுமாய், பெண்ணுமாயலியுமாயுருப்பேதமுற்றுமே
தோன்றிஞ, யண்ணலேயென்னையன்றியொன்றையுமன்னிய
மாய்க்காண்கிலேன், தன்னையேதன்னைப்பெற்றுப்பின்னையுந்
தன்னைப்பேசிடாதென்னபெருமையே. 2

விதியென்றுளிலக்கற்றனைமெய்ப்பதியென்றுசத்துற்றனை
கதியென்றும்பந்தமற்றனைபருட்காதலேதனியுற்றனை
நிதியென்றபொருள்தானேதானென்றுநிர்மலமதாகியும் [யே
பதியென்றபதிபதிந்துந்தன்னைப்பஜித்திடாதென்னபான்மை

குற்றமற்றாய்குணமுமற்றாய்ஞானக்கோலமுற்றகுரவனீ
பற்றுதற்றாய் விடுதலற்றாய்பரப்பிரம்மமுற்றாய்முற்றுமாய்
சுட்டுதற்றாய்சொரூபமுற்றாயத்வைதமென்னுஞ்சுயமதாய்
தட்டுதற்றபூரணமேதன்னைச்சாற்றிடாதென்னதகைமையே.

சத்துமாய்ச்சிவசித்துமாயருட்பற்றுமாய்ச்சுயமுற்றுமாய்
வித்துமாயொருபயிருமாய்மலர்க்காயுமாய்க்கனியுற்றனை
முத்துமாய்ஞானநத்துமாய்தன்னைப்பெற்றனைவஸ்துற்றனை
வத்துமாமௌனமாகியுந்தன்னைவாழ்த்திடாதென்னவழக்கி
தே. 5

ஆடுவாய்தன்னைபாட்டுவாபாடல்கண்டுமேபதுவாகுவாய் [ய்
தேடுவாய்தானுய்க்காணுவாய்த்திருப்பொருளுமதாயருளுவா
பாடுவாய்தாளம்போடுவாய்தனியிராகமுஞ்சொல்லிநீட்டுவாய்
நாடுவாய்நலந்தீங்குமற்றும்நானுப்பேசிடாதென்னநன்மை
யே 6

ஆணுமற்றுப்பெண்ணுமற்றலியுமற்றுச்சொரூபமாய்
தோணுதற்றொடுங்குதற்றுச்சொல்லிறந்தசொல்லதாய்
வேணுதற்றாய்வீடாயுற்றாய்விஷயாகிதமுற்றமாகேவலம்
பேணுதலுற்றும்பெருமைபெற்றுந்தன்னைப்பேசிடாதென்ன
பெருமையே. 7



வாக்கிறந்துமனங்கறந்துமருபொருள்துறந்துதனியுமாய்
நீக்கிறந்துபோக்கிறந்துநிற்சலனமுற்றும்நிராகாரமாய்
யேக்கமற்றாயினிதாயுற்றாயேகபோகமாவிறுதியாய்த்
தூக்கமற்றுவிழிப்புங்கெட்டுந்தன்னைப்பேசிடாதென்னபெரு
மையே. 8

ஜாதிகெட்டாய்குலமுமற்றாய்தாய்தந்தையின்றிவபேதமாய்
உபாதியற்றாயுறுதியுற்றாயுகந்தமஹாநிஷ்களங்கமாய்
ஜோதியுற்றாய்துவிதமற்றாய்சுயஞ்ஜோதிமாவசங்கமாய்
பீதியற்றும்பிரம்மமுற்றுந்தன்னைப்பேசிடாதென்னபெருமை
யே. 9

போதமுற்றனைபுன்மையற்றனைபோதமேஞானபோதமாய்
பேதமற்றனைபெரிதாயுற்றனைபிரம்மமந்திரப்பெரிதுமாய்
காதலற்றனைகருணையுற்றனைகாலமூன்றுமிறந்துளா
யோதலற்றொழியாதுற்றுந்தனைப்பேசிடாதென்னவுரிமையே.

சிவோஹம்.

## போற்றிப்பதிகம்.

ந்தநிர்மலமேபோற்றிஜோதிப்பிரகாசமேபோற்றி
ந்துவைதவகண்டமேபோற்றியபேதஸ்ரூபமேபோற்றி
தத்துவநிர்க்குணமேபோற்றிசத்தெனுமறிவேபோற்றி
சித்துறுந்தெளிவேபோற்றிசின்மயமணியேபோற்றிபோற்றி

நித்தியப்பொருளேபோற்றிநிர்த்தொந்தநிஜமேபோற்றி
முத்திக்கிமுதலேபோற்றிமுன்னிலைகடந்தாய்போற்றி
சத்தியநிறைவேபோற்றிசாஸ்வதநிதியேபோற்றி
தித்திக்குமமிர்தேபோற்றிதிரண்டவென்னிறுமாப்பேபோற்
றிபோற்றி.

ஏகம்தானாய்ப்போற்றியெல்லாமாயுறைந்தாய்போற்றி
யோகமுங்கடந்தாய்போற்றிவுரியமாவிசேஷமேபோற்றி
தாகமோகந்துறந்தாய்போற்றிசர்வமுமானாய்ப்போற்றி
ஆகமமானாய்போற்றியசங்கவாழ்வேபோற்றிபோற்றி. 3

நிர்விஷயானந்தமேபோற்றிநிர்விகற்பவஸ்துவேபோற்றி
கருதரியவின்பமேபோற்றிகற்பனைகறந்தாய்போற்றி
சுருதிக்குமெட்டாய்போற்றிதுரியாதீதத்திற்றோய்ந்தாய்போ
ற்றி, பெரியமாபிரம்மமேபோற்றிபெருந்தவச்சுடரேபோற்றி
போற்றி. 4

நீக்கமொன்றில்லாய்போற்றிநிர்ச்சலனவறிவேபோற்றி
வாக்காதிவனாகாய்போற்றிவரியநான்மறைமுடிவேபோற்றி
நோக்கரியநிர்நாமமேபோற்றிநுகரரியமாநுட்பமேபோற்றி
தாக்கரியசதானந்தமேபோற்றிஸகஜகைவல்யமேபோற்றி
போற்றி. 5

நிஷ்கிரியைவரசேபோற்றிநிராகாரவுறவேபோற்றி
சிற்சொரூபநிறைவேபோற்றிசிதானந்தவிளைவேபோற்றி
நிச்சயநிஜமேபோற்றிநிரஞ்சனவாழ்வேபோற்றி
அச்சமறப்புணர்ந்தாய்போற்றியகண்டமேபோற்றிபோற்றி. 6

பரஸ்பரரகஸியமேபோற்றிபாவனைக்கொவ்வாய்போற்றி
*கரதலாமலகமேபோற்றிகருத்துணர்கருத்தேபோற்றி
புறமகமானாய்ப்போற்றிபூரணநிறைவேபோற்றி
நிரந்தரமுற்றாய்போற்றிநிர்ச்சங்கமேபோற்றிபோற்றி. 7

சிறிதுபெரிதற்றாய்போற்றிசிவயோகவிளைவேபோற்றி
அரிதரியநிஜமேபோற்றியறிவினிற்பிரியாய்போற்றி
பெரிதெனும்பரமேபோற்றிபிரம்மமாமுத்தேபோற்றி
குறியொன்றுமில்லாய்போற்றிகுன்றிடாவருளேபோற்றி
போற்றி. 8



போதமெய்விளக்கேபோற்றிபொருந்தியமெய்யழகேபோற்றி
சாதனைமகிழ்வேபோற்றிசாதுறுங்களிப்பேபோற்றி
சேதனசிவமேபோற்றிசெப்பறும்விதேகமேபோற்றி
கோதிலருளமேபோற்றிகுலாவுமெய்ஞ்ஞானமேபோற்றி
போற்றி. 9

தானுறவிருந்தாய்போற்றிதானெனுஞ்செருக்கேபோற்றி
தோமணுத்தெருளேபோற்றிசுதந்திரவாழ்வேபோற்றி
பேணுதற்குறுத்தேபோற்றிபிசகிடாநிலையேபோற்றி
ஆனுறுமமிர்தேபோற்றியரூபமேபோற்றிபோற்றி 10

சிவோஹம்.

# மெய்ஞ்ஞான தீபம்.

உபாதியெனுமாயாவிருளைக்கெடுத்திட ஒரு
நீதிவிளக்கேற்றினேன் சத்தியமா
நீதிவிளக்கேற்றினேன். 1

நீதிவிளக்கைநிறுத்தாதுதூண்டிட சத்ய
வேதவிளக்காச்சது சத்யமா
வேதவிளக்காச்சது. 2

வேதவிளக்கைவிட்டிடாதேற்றிட மஹா
ஜோதிவிளக்காச்சது சத்யமா
ஜோதிவிளக்காச்சது. 3

ஜோதிவிளக்கைத்தொடர்ந்துபொருத்திட வருட்
போதவிளக்காச்சது சத்யமா
போதவிளக்காச்சது. 4

போதவிளக்காய்ப்புணர்ந்துற்றிருந்திட ஜோதி
யேகவிளக்காச்சது சத்யமா
யேகவிளக்காச்சது. 5

யேகவிளக்காயிருந்துஜொலித்திட மா
மோனவிளக்காச்சது சத்யமா
மோனவிளக்காச்சது. 6

மோனவிளக்காய்முடிந்துதனித்திட மெய்ஞ்
ஞானவிளக்காச்சது சத்யமா
ஞானவிளக்காச்சது. 7

மெய்ஞ்ஞானவிளக்காய்மேவிச்சுகித்திட. துய்ய
சோராவிளக்காச்சது சத்யமா
சோராவிளக்காச்சது. 8

சோராவிளக்காய்ச்சூட்டிங்கிருத்திட நித்ய
மாறுவிளக்காச்சது சத்யமா
மாறுவிளக்காச்சது. 9

மாறுவிள்க்காய்மகிழ்ந்துநிறைந்திட மா
வோராவிளககாச்சது சத்யமா
வோராவிளக்காச்சது. 10

யோராவிளக்காயுகந்துததும்பிட மஹா
வுன்னுவிளக்காச்சது சத்யமா
வுன்னுவிளக்காச்சது. 11

உன்னுதோராவிளக்காயுள்ளதுள்ளபடி நித்ய
வோயாவிளக்காச்சது சத்யமா
வோயாவிளக்காச்சது. 12



ஓயாவிளக்காயுநியாதொடுங்கா மா
வுறுதிவிளக்காச்சது சத்யமா
வுறுதிவிளக்காச்சது 13

உறுதிவிளக்கதாயொருமித்துப்பூண்டிட வொரு
வொழியாவிளக்காச்சது சத்யமா
வொழியாவிளக்காச்சது 14

ஒழியாவிளக்காயுன்னதமுற்றிட நித்ய
வொருமைவிளக்காச்சது சத்யமா
வொருமைவிளக்காச்சது. 15

ஒருமைவிளக்காயொடுக்கிஜொலித்திட மர்ம்ம
வோதாவிளக்காச்சது சத்யமா
வோதாவிளக்காச்சது 16

சிவோஹம்.

## தத்துவமா மந்திரம்.

### அகவல்.

ஒருபொருளபேதநேசமுரிமைமஹாபத்தியம்.
தெருளுறும்பொருளபேதந்திவ்யமாநித்யபத்வம்.
இருளுருகப்பெருகுமினியபூர்பேரின்பம்.
குருவருள்விளைவுகுறிரகிதசாஸ்வதம்
அருளொழுகுமசங்கமகண்டமாபூரணத்வம்.
பொருளுறும்போதம்புதையாமாமஹாபொக்ஷம்.
ஒருதனியுணர்வுவொப்பிலாபெருஞ்சிறப்பு
தேகாகிதவிலக்ஷணஞ்ஜீதேந்திரியமாமௌனம்.
போகாதிரகிதம்புனிதமஹாபுருஷார்த்தம்.

இராகாதிக்கெட்டாவினியமாநிராலம்பம். 10
சமயாதீதப்பெரும்பொருள்தத்வமஹாபிரகாசம். 11
துரியமஹாஸமரஸந்துய்யமஹாசுகாரம்பம் 12
பெரியமாவபாரம்பெருந்தவர்பெருந்தகைமை 13
உரியமாகலாதீதமுய்யுமஹாதுரியாதீதம். 14
அரியமாபிரம்மவித்தையதீதமஹாசுத்தநித்யம். 15
குணரகிதநிரஞ்சனங்குலாவுமஹாநிர்விகற்பம். 16
இணைபிரியாநிஷ்கிரியையின்பம்பொழியருள்வெள்ளம். 17
நனவணுகாஞானமத்ம்நலந்தீங்கறும்நல்மருந்து. 18
நிர்விஷயமாசுகாந்தசுகிர்தம்நிராகாரமாவாழ்வு. 19
விதேகமஹாமஹத்துவம்விமலமாததாகாரம். 20
அத்வைதமாசுதந்தரமபரோக்ஷமஹாவதீதம். 21
பிரம்மமெனும்பெருஞ்செருக்குப்பிரிவறுமிறுமாப்பு. 22
ஸகஜமஹாவநுபூதிசைதன்யமாமஹாபேரழகு. 23
சிவயோகமஹாதேஜசுசிவானந்தமாசின்மயம் 24
புணரொவ்வும்நிர்ச்சின்னம்புனிதமாபொதுவுணர்வு. 25
பின்னமற்றமாசுயம்புபெருமையுற்றவேதாதீதம். 26
உன்னவெட்டாவ்யோமாதீதமொருமையுற்றசத்யத்வம் 27
விதிவிலக்குக்கொவ்வாமாவித்தகம்விளைந்தவித்து 28
துய்யமஹாநிர்ஜகந்தோன்றுமாசுகாதீதம். 29
திவ்யமஹாகேவலஞ்சிங்காரமாமஹாசுகந்தம். 30
அஞ்சாமஹாநிர்ப்பயமரியமாமஹாநிர்ச்சலனம். 31
துஞ்சுமஹாமெய்ஞ்ஞானஞ்ஜோதிமாபாவாதீதம். 32
சுதந்திரமாநிர்த்தொந்தஞ்சுயசித்துசித்திவபீர்தம். 33



அசைவிறந்தமாசுஸ்திரமதுதாணுசுயசுயஜெயம். 34
சர்வமஹாவதிஷ்டானஞ்சமரசசையோகநிராவரணம். 35
துவிததுர்ச்சங்கரகிதந்துறவுற்றதுய்யமாவாழ்வு 36
நாமரூபசூனியம்நன்குற்றமாநாசரகிதம் 37
பரமமஹாஇரகஸியம்பரஸ்பரநிர்விகற்பம். 38
பாவனாரகிதபோதம்பதையாமஹாபரமார்த்தம். 39
பேராண்மைமாமகிழ்வுபெரியமஹாதனிச்சிறப்பு. 40
மௌனமணிமாஹாரம்மாற்றொண்ணாமாமந்திரம். 41
சிவயோகமஹாபீடந்திவ்யமெய்ஞ்ஞானபோததீபம். 42
மோனமழைபொழிவெள்ளமுத்திமுத்துமணிக்கோவை 43
ஸந்ததமாசமரசநிறைவுசத்யமாமஹாசையோகம். 44
கற்பனாரகிதங்கணிக்கவெட்டாமஹாக்களிப்பு. 45
வஸ்துமதுப்போதைவழியாமசுத்தவத்துவைதம். 46
இம்முறைவொழுகும்பத்திவெண்ணணைவஸ்துசித்தி. 47
ஏகமஹாபாவனையிடர்மாயாபாவனைநகிப்பதற்குத்தி. 48
அவ்வேகபாவனையுமறவிடுதலதீதமாமௌனசித்தி. 49
பந்தமுத்திரகிதம்பாவனாதீதம்பதிந்தொழுகும்முத்தி. 50

சிவோஹம்.

## நிர்க்குணக்கண்ணி.

மாயைச்சுழிகாற்றில்மயங்கிச்சுழலும்பேதையர்க்குந்
தூயைசுத்தநிச்சயத்தைச்சூட்டலாமோநிர்க்குணமே. 1

அழுக்கொடுகூடியுமத்தையகலாச்சாதிப்பவர்க்கும்
பழுக்கும்பிரம்மஞ்ஞானம்பகரலாமோநிர்க்குணமே. 2

ஞேயானுபூதியுற்றநிர்விகற்பநிஷ்டையதனைவறியா
மாயாமயப்பேதையர்க்கும்வழுத்தலாமோநிர்க்குணமே 3

சரியைகிரியையெனச்சலனசித்தமுற்றவர்க்கு
முரிமையுற்றநிஷ்கிரியையோதலாமோநிர்க்குணமே 4

தான்பிடித்தவீண்பிடியைத்தக்கதெனச்சாதிப்பவர்க்குங்
காண்பானாதியற்றதையுங்கணிக்கலாமோநிர்க்குணமே 5

விடக்குத்தாருத்தியதிர்விஷயப்பாரமேற்றவோர்க்குங்
கடக்குங்காலரகிதமதைக்கணிக்கலாமோநிர்க்குணமே. 6

பஞ்சகோசம்நானெனவேபாவித்துப்பாழானவர்க்குந்
துஞ்சுமாசொரூபஞானஞ்சொல்லலாமோநிர்க்குணமே. 7

கண்டங்கண்டமுற்றுக்கர்ம்மபந்தம்பூண்டவர்க்கும்
விண்டறியாமாமெய்ஞ்ஞானம்விளம்பலாமோநிர்க்குணமே 8

துள்ளும்மைக்குரங்கெழுந்துதுடர்ந்துதலைசுற்றுவர்க்கும்
விள்ளுதற்றவிமலவின்பம்விளங்குமோநிர்க்குணமே. 9

பொறிபுலனாதியொடும்பொருந்திச்சுகிப்பவர்க்கும்
நெறியுற்றநிர்ச்சங்கம்நேசிக்குமோநிர்க்குணமே 10

பாசதோஷபந்தனராப்பதைத்துளறல்கொண்டவர்க்கும்
வாசனாரகிதவசங்கம்வாய்க்குமோநிர்க்குணமே 11

உள்ளொன்றிருத்திப்புறமொன்றோதுவர்க்கும்
நில்லென்றால்நித்யத்வம்நிற்குமோநிர்க்குணமே 12

கானல்நீருண்ணவெண்ணிக்காடுமலைபோடுவர்க்குந்
ஞானநீரூட்டுவதும்நன்காமோநிர்க்குணமே. 13

பேடிகையாயிதம்போற்பேசும்வேதாந்தருக்குந்
தேடரியஜிதேந்திரியஞ்சித்திக்குமோநிர்க்குணமே. 14



சொன்னதையேசொல்லித்துடித்தழும்வஞ்சகர்க்கும்
பின்னமற்றபேரின்பம்பிரகாசிக்குமோநிர்க்குணமே. 15

புதர்பந்தப்புலாற்காட்டைப்போற்றிவளர்ப்பவர்க்கும்
விதரணைமாபரஸ்பரமுமேவுமோநிர்க்குணமே. 16

நாமரூபபேதமுற்றுஞானமற்றநன்கிலர்க்கும்
நேமமஹாவத்வைதம்நேசிக்குமோநிர்க்குணமே. 17

உண்மையுரைப்படிநின்றொட்டிவுணரார்க்கும்
நன்மைதின்மைரகிதம்நாடுமோநிர்க்குணமே. 18

சம்சாரசாகரத்தைச்சதமெனவேசாதிப்பவர்க்கும்
அமிசருறும்பேரின்பமமையுமோநிர்க்குணமே 19

நான்பெரியோனென்றுநாடுகின்றநன்கிலர்க்குந்
தாந்தனித்ததத்துவஸகஜஞ்சாருமோநிர்க்குணமே. 20

மெய்ஞ்ஞானகுருவாக்கியத்தைமேவிச்சுகியார்க்கும்
அஞ்ஞானரகிதமங்கமையுமோநிர்க்குணமே 21

நெஞ்சாரப்பொய்பேசிநிலைகெட்டுநிற்பவர்க்குங்
கொஞ்சமாவமிர்துண்ணல்கூடுமோநிர்க்குணமே. 22

மும்மலவழிநாடிமூழ்கியுழலும்முசுடர்க்கும்
நிர்மலமாநிஷ்களங்கமிரேசிக்குமோநிர்க்குணமே. 23

பேராசையுற்றுமாபெருநிதியையிழந்தவர்க்கு
மோராநிராசையிங்குறையுமோநிர்க்குணமே 24

விஷயமுற்றவிகற்பவின்பமேவிச்சுகிப்பவர்க்குந்
துஜம்நாட்டுஞ்சுயசுகந்தஞ்சொக்குமோநிர்க்குணமே. 25

மோனஞானவபேதமதைமுன்னிலைபண்ணுவர்க்குஞ்
ஞானமாஸகஜநிஷ்டைநத்துமோநிர்க்குணமே. 26

அஞ்சனத்தைக்கைக்கொண்டறிவிழந்தவந்தகர்க்குங்
கஞ்சனத்திற்றன்முகம்போற்றனைக்காணுமோநிர்க்குணமே.

பொருமைபூண்டுபோதப்பொக்ஷமிழந்தவர்க்கு
மோராமாவுண்மைநிஷ்டையொழுகுமோநிர்க்குணமே. 28

நினைப்பொன்றுவார்த்தைவேறாய்நிகழ்த்தித்திரிபவர்க்குந்
தனைப்புணருந்தத்வஞானஞ்சாருமோநிர்க்குணமே 29

வேதமுடிவதனிற்விளங்குகின்றவிதேகமதை
வாதமிடுவ்பாதியர்க்கும்வழுத்தலாமோநிர்க்குணமே 30

பிறர்குற்றம்பிதற்றிப்பிரண்டுழலும்பித்தர்க்கும்
புறம்புள்ளுமுற்றவஸ்துபொருந்துமோநிர்க்குணமே. 31

சிறிதுபெரிதெனவுஞ்சிவத்துவேஷமுற்றவர்க்குங்
குறிக்கெட்டாக்குணரகிதங்கூடுமோநிர்க்குணமே 32

துரியமாபீடமேறிச்சுட்டொழிந்துநில்லார்க்கு
மூரியதுரியாதீதமொட்டுமோநிர்க்குணமே. 34

திரிகாலமென்னவகுத்துத்தியங்குகின்றசிதடர்க்கு
மரிதரியகாலாதீதமமையுமோநிர்க்குணமே. 35

சங்கமொடுங்கூடித்தனையிழந்ததமசினர்க்குந்
துங்குமாசுயஞ்ஜோதிஜொலிக்குமோநிர்க்குணமே. 36

ஜாதிபேதத்துவேஷம்பூண்டுசஞ்சலமுற்றிருப்பவர்க்குஞ்
ஜோதிமாவபேதமங்குந்தோய்வுறுமோநிர்க்குணமே. 37

மாதர்மக்கள்மைந்தரெனமயங்குந்துக்கசோம்பர்க்குஞ்
சூதானசமயாதீதஞ்சூழ்ந்திடுமோநிர்க்குணமே. 38

குரவர்குலமொழுக்கங்கூடிச்சுகிக்கமாட்டார்க்கும்
பரமமஹாபக்குவமும்பதியுமோநிர்க்குணமே. 39



இராகாதிசையோகராயின்பதுன்பமிசைந்தோர்க்கும்
நிராகாரவகண்டமதுவும்நேசிக்குமோநிர்க்குணமே. 40

போகம்புசிப்பையெண்ணிப்புரையுற்றிருப்பவர்க்கு
மேகமஹாசைதன்யமிசையுமோநிர்க்குணமே. 41

பஞ்சகோசஞ்சுமந்தும்பாதபதைக்கும்பண்பிலர்க்குங்
கொஞ்சுஞ்சிவராஜயோகங்கொளிக்குமோநிர்க்குணமே. 42

நாக்கடித்துவயிறுகுத்திநவிலுந்துர்ச்சினத்தோர்க்கும்
நீக்கமற்றநிராவரணம்நேசிக்குமோநிர்க்குணமே. 43

அறுசுவைதனைவிரும்பியருட்சுவையற்றவர்க்குந்
தெருளுறுமதீதச்சுவைதித்திக்குமோநிர்க்குணமே. 44

புலால்மதுகஞ்சாவருந்திபோதமற்றுப்புலம்புவோர்க்குங்
குலாவுமாவமிர்தவெள்ளங்கொளிக்குமோநிர்க்குணமே 45

போதவடிவமின்றிப்புருஷவடிவம்பூண்டவர்க்கும்
பேதரகிதசுத்தம்பிரகாசிக்குமோநிர்க்குணமே. 46

அவவேடந்தரித்துமருள்வேடமிழந்தவர்க்குந்
தவவேடசொஸ்தமங்குந்தங்குமோநிர்க்குணமே 47

இக்குணதோஷமுற்றுமெரித்துநீறுசெய்தவர்க்குஞ்
சிக்கெனத்தத்வஞானஞ்சித்திகாண்நிர்க்குணமே. 48

பாவனாதீதமுற்றுபாவாதீதம்பதிந்தவர்க்கும்
வாசனாரகிதசுத்தவஸ்துவவ்வர்நிர்க்குணமே. 49

விதேகமதம்பூண்டுவிள்ளாச்செருக்குற்றவர்க்கும்
பதையாப்பதவிறுமாப்புபற்றினதாம்நிர்க்குணமே. 50

அபாரவசங்கசுயவானந்தாதீதமுற்றவர்க்கே
சுகாரம்பசுகாதீதஞ்சொக்கினதாம்நிர்க்குணமே. 51

சிவோஹம்.

## குருவருட்பிரம்மானந்தச்சுடர்மணிக்கோவை.

இராகம்—இந்துஸ்தான் காப்பி, தாளம் சாப்பு.

அங்குமிங்குமெங்குமுள்ளோனிங்கெழுந்தான்காணீ
ராவலுடன்சென்றேனவனருளைக்கண்டங்கேங்கி. 1

தங்கமேகேளிங்குவந்துதங்கினார்பார்நித்யந்
தற்போதத்தைநாசம்பண்ணித்தனித்தாரிங்குசத்யம். 2

பொங்குதடியின்பந்தானுப்பொருந்திமகிழ்ந்தெங்கும்
போதமீறித்துங்குதடிபூரணமாய்த்தேங்கி 3

கங்குல்பகலற்றவிடங்கலந்ததடிக்கொஞ்சிக்
களங்கமற்றதேஜசுவாய்க்கரைந்ததடிமிஞ்சி 4

கண்ணேகண்ணேபாருங்கடிகற்பனைக்குமப்பாற்
கண்டமொன்றுமில்லாஸ்தலங்கண்டாயோடிதங்காள். 5

என்னடியோவென்னடியோவெந்தோழிப்பெண்கா
ளென்னையெடுத்துரைக்கவோரெண்ணமில்லைகண்காள் 6

சின்னபின்னரகிதமதாய்ச்சேரச்சொன்னான்மின்னாள்
சிற்சொரூபம்நீநானெனச்சிரித்தானடிகண்ணாள். 7

உன்னுவிடம்வீடெனவேவுரைத்தானடிகண்கா
ளுதியாவொடுங்காவிடமிருப்பாயுட்கார்ந்தாண்டிபெண்காள்.

அத்துவைதவீடுகட்டித்தந்தானடிபெண்கா
ளகண்டமதாயதிலிருத்தியழகுமிட்டான்றங்காள். 9

ஸந்ததமாய்வாழ்கவெனச்சத்யமிட்டான்றங்காள்
ஸஹஜநிஷ்டைபூர்த்திபூட்டித்தானுயுற்றான்கண்காள். 10



நாமரூபரகிதமாகநட்டானென்னைப்பெண்காள்
ஞானவனுப்நாட்டியங்கும்நன்குசெய்தான்கண்காள். 11

சூஸ்திரமாயென்னையிருத்திஜோடித்தாண்டிதங்காள்
சொல்லாமஹாமௌனமதாய்ச்சொக்கினேண்டிபெண்காள்

வள்ளல்மஹாவல்லபத்தைவழுத்தவொண்ணாதங்காள்
வாக்காதிக்குமப்பாலன்றேவந்திசைந்தான்பெண்காள். 13

நேசநேசம்நிர்விகற்பனீங்கானென்னைகண்காள்
நிச்சயமாயென்னொடொப்பிரேசித்தாண்டிபெண்காள். 14

எச்சமயசமயத்திற்குமெட்டாகின்றான்றங்கா
ளேகாந்தவிறுமாப்புடனென்னைப்புணர்ந்தான்பெண்காள். 15

சுட்டொழிந்தஹாரஞ்சூட்டிச்சூட்சிசெய்தான்கண்காள்
துய்யமதாயவன்மயக்கிற்றோய்ந்தேனடிபெண்காள். 16

தானேதானேதானேதானேதானடியோதங்காள்
தத்துவனைக்கூடிக்கொஞ்சிதாளம்போடுபெண்காள். 17

வேடமின்றிவிளங்குவண்டிவிதேகன்பாருங்கண்காள்
வித்தகமாய்ப்பூண்டுகொண்டால்விலகானடிபெண்காள். 18

பாடுபாடுபாடுபாடுபாங்குபூண்டபெண்காள்
பதைப்பிறந்தபதம்பதியப்பற்றிநின்றுகண்காள் 19.

எல்லாமுள்ளும்புறம்புமென்னைப்பிசைத்தானடிகண்கா
ளென்னவிவன்பேராண்மைவிப்படியோபெண்காள். 20

ஆதிநடுவந்தமில்லானறிந்தாயோடிதங்கா
ளதீதனென்றேவென்னைப்பிரியானேயோபாரும்பெண்காள் 21

எல்லாத்தோடும்புணர்ந்திருப்பனென்னடியோபெண்கா
ளென்னேவிவன்வரம்புகெட்டானிதைபுணருங்கண்காள். 22

ஐயோவிவனனேகவேடமணிந்திருப்பன்பெண்கா
ளதையும்நம்பிமயங்கிடாதேவகன்றிடுவன்கண்காள். 23

அபாரமிவனொன்றினுக்குமடங்கானென்னோதங்கா
ளரியவேகபாவனைக்குமவனடுப்பன்பெண்காள். 24

இப்பாவனைபதிந்துவிட்டாலிதைவிடடிதங்கா
ளிசைந்துசும்மாவிருந்திடுவனிவனடியோபெண்காள். 25

நிஷ்கிரியாமெத்தையிட்டால்நேசிப்பாண்டிகண்காள்
நீங்கிடாதுறைந்திடுவன்நிச்சயந்தான்பெண்காள். 26

சஞ்சலரகிதனடிஜாதிகெட்டான்பெண்காள்
சங்கைவிதிவிநித்திடாதேசருவமாட்டான்கண்காள். 27

விதிவிலக்குக்கடங்காவல்லான்மெச்சுங்கடிபெண்காள்
விலக்ஷணமாய்விளங்குவண்டிமேவுங்கடிகண்காள். 28

அடிவடியோவானந்தங்கொண்டாடுங்கடிபெண்கா
ளவனைத்தானைப்பூஜித்திடிலணைந்திடுவன்கண்காள். 29

போடிபோடிபோடிபோடிபோதமயன்பெண்காள்
போக்குவரத்தற்றவனைப்பொருந்துங்கடிகண்காள். 30

காலத்திற்குமப்பாற்சென்றுகலந்துகொள்ளும்பெண்காள்
களங்கமற்றமாகனவான்கண்டுசேருங்கண்காள். 31

என்னடிவென்னடிபோடிவிச்சைகெட்டான்பெண்கா
ளிவனோடுமிசைந்தபின்புமின்பாதீதங்கண்காள். 32

மாமௌனவழகுடையோன்மங்களம்பார்பெண்காள்
மஹத்துவத்தைக்கண்டுகண்டுமகிழுங்கடிகண்காள். 33

சத்தியமாபுருஷார்த்தனடிசாருங்கடிபெண்காள்
ஸமரஸமஹாததாகாரந்தங்குமடிதங்காள். 34



என்னையன்றிவிவன்வேறல்லவென்னோவென்னோபெண்கா
ளென்னடியிவனையன்றியணுவுமில்லைகண்காள். 25

சோபனசுகந்தம்பாடிச்சூடுங்கடிபெண்காள்
சுத்தமஹாசாஸ்வதமாய்த்துடர்ந்துநின்றுகண்காள். 36

தில்லாலேலோதில்லாலேலோதில்லாலேலோபெண்காள்
திவ்யமஹாஜிதேந்திரியஞ்சேர்ந்ததென்றுங்கண்காள். 37

தன்னைத்தானேபுணர்ந்தபோதந்தத்துவமேபெண்காள்
தந்தனங்கள்பாடிப்பாடித்தனித்துக்கொள்ளுங்கண்காள். 38

தங்காள்பெண்காள்கண்காளெனச்சாற்றுவதும்பெண்காள்
சத்தியமர்பேரானந்தப்பெருஞ்செருக்காங்கண்காள். 39

துய்யமஹாபிர்ம்மானந்தஞ்ஜொலிக்குமொழிபெண்காள்
துவிதமெனக்கொண்டாயானாற்றோஷமடிகண்காள். 40

தொனிக்குகின்றவாக்கியங்கள்சொல்லிதாகாபெண்காள்
துரியாதீததத்துவமாய்த்தோய்ந்ததடிதங்காள். 41

சிவயோகம்யோகம்பாடிச்சேருங்கடிபெண்காள்
சின்மயமாபரஸ்பரமாய்த்தெளித்துநின்றுகண்காள். 42

இம்முறையின்படிவொழுகியிருந்துபாரும்பெண்கா
ளிசைந்துநிற்கும்பிரம்மந்தானையென்னணைகண்காள். 43

நாசரகிதநித்யத்வம்நன்குபூணும்பெண்காள்
நனவறவேபொருந்திவாழும்நாசமின்றிக்கண்காள். 44

ஜோதிமாமெய்ஞ்ஞானமிதுதொட்டுக்கொஞ்சும்பெண்காள்
சுயசொரூபசுயம்புதானைச்சொக்கிப்பூண்டுகண்காள். 45

சிவோஹம்.

வசனம்.

சுருதிகுருயுக்திசுவாநுபவத்தாற்றன்னையறிந்து அடைந்திரா நின்ற தத்துவஞான அநுபூதிமான்களைப்போல் அஞ்ஞானிகள் நடித்துக்காட்டும் நடிப்பைக்கண்டு மயங்கா திருக்கும்பொருட்டாம்பின்வருஞ்செய்யுளெனக்காண்க.

## பொய்யகற்றிப்பொருள்புணர்த்தல்

சென்றதுவருவதும்நினைந்திடாச்சிதடருஞ்
சிவஞானபோதர்களோ
அன்றதுகண்முன்னின்றதையுண்டிட்டா
லவர்ஞானியாவர்களோ. 1

நன்றுதீதுமறியாநன்கறுந்தமசினர்
நற்கதியுடையார்களோ
அன்றுமாகைவல்யமவர்வாயாலியம்பிட்டா
லவர்ஞானதெய்வர்களோ. 2

முக்காடுந்தாவடமுமுகத்திலும்நீறுமிட்டால்
முடிந்தமாமுனிவர்களோ
துக்கக்களக்கமுடன்சொல்லிறந்திருந்திட்டால்
ஜோதிமாமௌனர்களோ. 3

அஞ்ஞானவநுபவாத்வைதமுரைத்திட்டா
லபேதமெய்ஞ்ஞானிகளோ
சுஞ்ஞானசொரூபர்போல்ஜோடித்துக்காட்டினுஞ்
சுகந்தமாதுய்யர்களோ. 4

சினத்தினுளறித்தியக்கும்பொய்ப்பேதமை
தீரமாவீரர்களோ
மனத்தினுலகைமயங்குவீரானாலும்
மஹாபிரம்மஞானிகளோ. 5



விருத்தாள்நாரிமாபதிவிரதாளெனவு
மேவுவர்விகிர்தர்களோ
கருத்தறிந்தமாரர்கள்கண்மூடிக்காட்டினுங்
கைவல்யநிஷ்டர்களோ. 6

போதம்புணர்ந்தறியார்புருஷனென்றாலும்
புருஷனுமாவர்களோ
பேதமின்னதென்றுமறியாப்பிரமைகொண்டலைபவர்
பெரியமாவபேதர்தங்களோ. 7

நினைத்தபொருள்கிட்டாவிடில்நினைவற்றிருப்பவர்
நிராசையுமுடையார்களோ
இணைக்கப்பந்துவுமற்றுமிருந்துதவிப்பவ
ரேகாந்தவினியர்களோ. 8

உடுக்கதுணியுமின்றுண்கவுணவுமற்றுலர்ந்தோ
ரொருதனியோகிகளோ
படுக்கப்பாயுமிலாப்பாரினிற்புரளுவோர்
பாழ்பந்தவெறுப்பினரோ. 9

பிறர்நோக்கமுணர்ந்தறியாப்பேதமைமந்தர்கள்
பேரறிவாளர்களோ
கரத்தினிற்கனிபோல்வாய்ப்பறைசாற்றினுங்
கடந்தமெய்ஞ்ஞானர்களோ. 10

கண்குருடானதினாற்காலமறியவறிவிலர்
காலத்திற்கதீதர்களோ
புண்புலால்விழியைப்புதையாதுவிழிப்பினும்
போதமாவதனர்களோ. 11

செப்புமிந்திரியச்சேஷ்டைதளர்ந்தவர்கள்
ஜிதேந்திரியராவர்களோ

தப்புசுத்தாசுத்தந்தனையறியவறிவிலர்
ஸகஜாநுபூதிமான்களோ 12

போக்குவரத்துமுறப்பொருந்துகாலிலாமுடவர்
பூரணபூர்த்திமான்களோ
தாக்குஞ்சுகதுக்கந்தனையுணரவுணர்விலார்
தத்துவஞானிதங்களோ. 13

மண்போலறிவின்மைமடமைமிகுதியுளோர்
மாபொறுமையாளர்களோ
பண்புவணுவுமிலார்பஜனைகொண்டாடினும்
பக்திமானாவர்களோ 14

சஞ்சலம்பொறுக்காதுசம்போவெனப்பஜிப்போர்
சத்யமாவிரதிகளோ
மிஞ்சும்பொருள்தானாகார்வேஷங்கள்போடினும்
வித்தகராவர்களோ. 15

துள்ளும்மனதுடையார்தொனிக்கின்றசத்தங்கள்
தோஷவிகாரமல்லவல்லவோ
விள்ளுதற்கரியவள்ளல்விளம்புமாவாக்கியங்கள்
மெஞ்ஞானவமிர்தமென்கொலோ. 16

சஞ்சலதுவிததுக்கர்கள்சாற்றுகின்றவாக்குப்பொல்லாச்
சமுசயசங்கையல்லவல்லவோ
மிஞ்சுஞ்சொரூபஞானர்விளம்புமாவாக்கியங்கள்
வித்தகமுத்துவென்கொலோ. 17

பேதமுடையவர்கள்பிதற்றுமவ்வாக்கெல்லாம்
பேதமயக்கமல்லவல்லவோ
போதமெய்ஞ்ஞானிகள்புகன்றிடும்வாக்கியங்கள்
புருஷார்த்தமயமென்கொலோ. 18



நாசமுடையபாசர்நவினும்பொல்லாவதந்திகள்
நஞ்சுறும்விகற்பமல்லவல்லவோ
நேசாநுபூதிமான்கள்நிகழ்த்துமாவாக்கியங்கள்
நிர்ணயப்பிழம்பாமென்கொலோ. 19

கோசாதிமோகியர்கள்குறிக்கின்றவாக்கெல்லாங்
குற்றமாய்க்குளறுமல்லவல்லவோ
பாசாதிரகிதர்கள்பகருமாவாக்கியங்கள்
பக்குவசொஸ்தமென்கொலோ 20

இன்பதுன்பமுடையோரியம்புமவ்வாக்கெல்லா
மிழிவதுகானுமல்லவல்லவோ
நண்புறுந்துக்கசுகரகிதர்காட்டிடும்வாக்கியங்கள்
நற்கதிதாக்குமென்கொலோ. 21

பக்குவமறிந்திலான்பசப்பும்வேஷங்களெல்லாம்
பாழதாய்முடியுமல்லவல்லவோ
சிக்கறத்தெளிந்தமாதேசிகனார்நிர்வேஷங்கள்
சின்மயமாக்குமென்கொலோ. 22

ஆசாபாசவாசாங்கிரியரறையுமவ்வாக்கெல்லா
மறிவைக்கெடுக்குமல்லவல்லவோ
வாசாமகோசரர்வழுத்துமாவாக்கியங்கள்
வஸ்ததாய்த்தாக்குமென்கொலோ. 23

சஞ்சலசகிதர்கள்சாற்றுகின்றவாக்குப்பொல்லாத்
தற்போதமீயுமல்லவல்லவோ
கொஞ்சுஞ்சஞ்சலரகிதர்கொளிக்குமாவாக்கியங்கள்
கொடுக்கும்பேரின்பமென்கொலோ. 24

அச்சக்கொச்சைத்துவிதரடுக்குமவ்வாக்கெல்லா
மளிக்கும்பதைப்பையல்லவல்லவோ

சொச்சொரூபவள்ளல்சொரியுமாவாக்கியங்கள்
சுகாரம்பந்தோய்க்குமென்கொலோ. 25

அநித்திவசுத்ததுக்காரறைகின்றவாக்கெல்லா
மரிக்காவிஷயமல்லவல்லவோ
தொனிக்கொண்ணுநித்யமாய்த்தோய்ந்தவர்வாக்கியஞ்
ஜோடிக்கும்வஸ்துவாகவென்கொலோ. 26

பேதமுடையகள்வர்பேசும்வேதாந்தமெல்லாம்
பிரமைபிடிக்குமல்லவல்லவோ
ஜாதகமுடைவள்ளல்சாற்றுகின்றவாக்கியங்கள்
தத்துவவமிர்தமென்கொலோ. 27

ஊத்தைமனதுடையோரோதுகின்றவாக்கெல்லா
மொடுங்காவிருத்தியல்லவல்லவோ
மாத்தகைமஹாத்துக்கள்ஸ்மரிக்குமாவாக்கியங்கள்
மாபிரம்மாகலியமென்கொலோ 28

முன்னிலைபூண்டவர்முழக்கிடும்வாக்குப்பொல்லா
மூடமடமையாக்குமல்லவல்லவோ
தன்னிலையறிந்துபூண்டசத்துக்கள்வாக்கியங்கள்
தாக்குப்பிரம்மானந்தமென்கொலோ. 29

அசுத்தவாணவத்தோர்களழுத்துகின்றவாக்கதுவு
மழியும்பெருமையல்லவல்லவோ
பசுத்துவம்பொருந்தியபக்குவர்மாவாக்கியங்கள்
பாவாதீதம்பதிக்குமென்கொலோ. 30

கோசப்பொதிவளர்ப்போர்கூறுகின்றவாக்கது
கொடுக்கும்பந்தமதுவல்லவல்லவோ
மாசறத்துறந்தமஹாத்துக்கள்வாக்கியங்கள்
மஹத்துவந்தங்குமென்கொலோ. 31



போராசையுடையவர்கள்பிதற்றுமவ்வாக்கெல்லாம்
பித்தமதுமீறுமல்லவல்லவோ
யோராகிராசையுள்ளோரோதுமாவாக்கியங்க
ளுண்மைநிலைதாக்குமென்கொலோ. 32

சிவோஹம்.

## தயிர்.

இராகம்-கமாஸ், தாளம்—ஆதி.

தயிர்வாங்கலையோ அம்மம்மா
ஸந்ததத்தயிர்வாங்கலையோ (த) 1

பகிர்முகராகிதமாபசுவின்பதத்தயிர்
பரமசுகிர்தர்கள்பதிவாயுண்ணலாகும் (த) 2

துயர்துக்கத்தாபத்தைச்சுருக்காயறுத்திடுந்
தூயமுற்றதயிர்சோதித்துவாங்கம்மா. (த) 3

துரியவுறிதனிற்ஸொகுசாய்வைத்தெடுத்தது
துய்யவறிவுள்ளோர்சுகிக்கும்தயிரம்மா. (த) 4

மௌனமாமெய்ஞ்ஞானமதுரக்கட்டித்தயிர்
மாற்றுறுஞ்சமயத்திற்கப்பாலுறைந்தது. (த) 5

அநுபவங்கறந்திங்ஙனழகாய்க்காச்சியது
வானந்தவுறைக்குத்திவதுகட்டியானது. (த) 6

புற்பூண்டுநீருண்ணும்போதப்பசுத்தயிர்
நற்பிரம்மானந்தாகலியம்வாங்கம்மா. (த) 7

பண்ணுவுடையாமாபாத்திரத்தமைந்தது
வுன்னுவுணர்வாலுண்ணுந்தயிரம்மா. (த) 8

அத்வைதசுத்தமாயாடைத்தயிரிது
வசங்கசுயவாஸமமர்ந்துசொக்குதம்மா. (த) 9

புருஷார்த்தபுனிதம்பூட்டுங்கட்டித்தயிர்
புரையறப்பூர்த்தியாய்ப்பொருந்திடும்வாங்கம்மா (த) 10

பொங்குமாவமிர்தம்பூண்டகட்டித்தயிர்
போக்குவரத்தறபொருந்தும்பாரம்மம்மா. (த) 11

மோகாதிதோஷங்கள்முற்றுங்கெட்டதயிர்
முன்னிலைரகிதமாய்முடித்திடும்வாங்கம்மா. (த) 12

நாளுவிதபேதங்கள்நசித்தமாநற்றயிரிது
நலந்தீங்கிரண்டறநல்கிடும்வாங்கம்மா. (த) 13

சுதந்திரவஸ்துவாய்த்தோய்ந்தசுத்தத்தயிர்
துய்யமாநித்யத்வந்தோய்த்திடும்வாங்கம்மா. (த) 14

ஏகபோகமதாயிலங்குமின்பத்தயிர்
யின்னவிதமென்றுமியம்பாதுவாங்கம்மா. (த) 15

அஞ்சனருண்டிடாவபேதத்தயிரிது
யஞ்சாதுவாங்கமருங்கதியம்மம்மா. (த) 16

கொஞ்சுமபாரக்குருவருட்தயிரிது
மிஞ்சும்விதேகமாய்விட்டிடாவாங்கம்மா (த) 17

சுட்டற்றுத்திரண்டுற்றசுபாவத்தயிரிது
கட்டற்றிருத்திடுங்கனிந்துறவாங்கம்மா. (த) 18

புளிப்புத்துவர்ப்பற்றபுதுமைமாதயிரிது
புன்மைகெடுத்திடும்புருஷார்த்தம்வாங்கம்மா. (த) 19

அபரோக்ஷாநுபூதிவமைந்தமாதயிரிது
அருட்சுவைக்கட்டியாயாக்கிடும்வாங்கம்மா. (த) 20

தேஜசுபொங்கித்திரண்டசித்துத்தயிர்
திவ்யமதநிர்க்குணஞ்சேர்த்திடும்வாங்கம்மா. (த) 21



நாசாதிதோஷங்கள்நாடாநன்குத்தயிர்
நனப்புமறப்பறநட்டிடும்வாங்கம்மா (த) 22

ஸகஜாநுபூதியாய்ச்சார்ந்துற்றதனித்தயிர்
சையோகநிர்விகற்பந்தாக்கிடும்வாங்கம்மா. (த) 23

சிவயோகரேசிப்பார்ச்சேர்ந்தகட்டித்தயிர்
சிவஞானசித்திமாசின்மயப்பாகம்மா. (த) 24

ஒப்புவமைக்கொவ்வாவுபர்தமாதயிரிது
துப்பறத்துறந்துபார்ஜொலிக்குஞ்சுயம்பம்மா. (த) 25

கொள்ளாக்கொடுக்காமாகோவின்தயிரிது
கொளிக்குஞ்சுயஞ்ஜோதிகூட்டிப்பாரம்மம்மா (த) 26

சுத்தநிஷ்களங்கமாசொரூபத்தயிரிது
சுத்தவத்துவதாய்ச்சூட்டிடும்வாங்கம்மா. (த) 27

அற்புதவகண்டமாவதீதத்தயிர்காணுஞ்
சொப்பிரகாசமாய்த்தேர்ய்த்திடும்வாங்கம்மா. (த) 28

ஸந்ததததர்ககாரஞ்சார்ந்துற்றதனித்தயிர்
சாஸ்வதந்தானதாய்த்தூக்கிடும்வாங்கம்மா. (த) 29

தொந்தரகிதமாய்ஜொலிக்குஞ்சுத்தத்தயிர்
துய்யதுரியாதீதந்தோய்ந்திடும்வாங்கம்மா. (த) 30

சூஸ்திரபூரணஞ்சொரிந்தசொக்குத்தயிர்
சூக்ஷ்மநிற்பயமதாய்ச்சூட்டிடும்பாரம்மா. (த) 31

பாவனாதீதமாய்ப்பதிந்தபாகத்தயிர்
பதைப்பறப்பதித்திடும்பகாதுவாங்கம்மா. (த) 32

இத்தயிருமாப்புவியம்பப்படாதுபார்
சத்தமிறந்ததாய்த்தனித்துச்சாப்பிடம்மா. (த) 33

சிவேழஹம்.

## சுருதிமுடிவினற்புதம்.

இராகம்-பூபாளம்—தாளம்-சாப்பு.

பல்லவி.

இருக்குநிருக்குதென்றேய்த்தது வேதமல்லா
லெடுத்துக்கொடுக்காதென்னடி.

அநுபல்லவி.

கருத்தைப்பெருக்கிப்பொல்லாமனத்தைக்கெடுத்ததுண்டு
விருத்தியொடுக்கிமாயாவிகற்பமெடுத்ததல்லால். (இ)

சரணங்கள்

விருப்புவெறுப்பதையும்விலக்கிக்கெடுத்ததுண்மை
வித்தையாலவித்தையைவேண்டாத்தடுத்ததுண்மை
நெருப்புறும்பதைப்பதைநீக்கித்துடைத்ததுண்மை
நிகழும்பக்ஷாபக்ஷத்தைநெருங்காக்கெடுத்ததல்லால் (இ) 1

வாக்காதிபுலன்களைவாட்டிக்கெடுத்ததுண்மை
வரத்துடன்போக்கதையுமரிக்கப்புடைத்ததுண்மை
நீக்குறுமிராகாதியைநேசிக்காத்துடைத்ததுண்மை
நிர்ணயமர்சொரூபமதாய்நியமித்துக்கொடுத்ததல்லால் (இ)2

விந்தைவினோதங்களைவேண்டாக்கெடுத்ததுண்மை
விஷயமெனும்பாசத்தைவேரோடெடுத்ததுண்மை
ஸந்ததமுமொழியாசத்தாய்த்தொடுத்ததுண்மை
ஸகஜாநுபூதியதாய்ச்சமைத்துக்கொடுத்ததல்லால். (இ) 3

அனித்தியமியாவையுமணுகாக்கெடுத்ததுண்மை
பதிஷ்டானவமலமதாயாக்கிக்கொடுத்ததுண்மை
கணித்தவிதிகளெல்லாங்களைந்துவிடுத்ததுண்மை
காட்டொண்ணுவதீதமதாய்க்கலந்துதொடுத்ததல்லால். (இ)4



குணங்குறிமலமாதியைக்குடியோட்டிவிட்டதுண்மை ;
கூறும்நாமரூபத்தைக்குன்றக்குலைத்திட்டதுண்மை
வினையுமுன்னிலையதைமீளாதோட்டிட்டதுண்மை
வித்தெனும்வஸ்துவதாய்விளைத்துஜோடித்ததல்லால். (இ) 5

இன்பதுன்பமிரண்டையுமிசையாக்கெடுத்ததுண்மை
யேகாந்தவினியதாயிருத்திக்கொடுத்ததுண்மை
முன்பின்முடிவுமற்றமோனமாய்ப்படைத்ததுண்மை
முழுதுறும்விதேகமதாய்முடித்துவைத்திட்டதல்லால் (இ)6

சிவோஹம்.

## வாடாமலர்.

இரர்கம்-சங்கராபரணம், சாப்பு தாளம்.

பல்லவி.

மௌனசிவஞானம்மலர்ந்துற்றபுஷ்பம்
மாருக்கமழுதிங்ஙன்வாங்குமாநுட்பம்.

அநுபல்லவி.

திவ்யமாநிரஞ்சனச்செடிதளிர்த்தெடுத்தது
தீர்க்கதன்றெரிசனத்திலூலகமாய்க்கோத்ததிது.

சரணங்கள்.

போததுரியாதீதநீர்கொட்டிநட்டது
பொங்குஞ்சிதானந்தபூமிமாகட்டது
பேதக்களைகளைந்துபெருக்கிவளர்த்திட்டது
பிரம்மானந்தக்கொம்பிற்பெரிதாய்ப்புஷ்பித்ததிது (மௌ) 1

பாவாதீதமதாய்ப்பருத்தமாசெண்டிது
பரமரகஸியமாஹாரமாய்ப்பூண்டது
ஆகாரரகிதமாயழகாய்ஜோடித்ததிது
வலங்காரம்பண்ணப்பண்ணவத்வைதமோடியிது (மௌ) 2

இனியவிவேகமதாயிணைக்கவாடாதிது
இன்பாதீதவாசங்கூட்டியிசைத்ததிது
புனிதநித்யத்வமாய்ப்பொருந்திநிறைந்ததிது
புருஷார்த்தமென்னுணைபுணர்ந்திட்டாலாமிது (மௌ) 3

உள்ளும்புறம்பு மெங்குமொத்தமாமணமிது
வள்ளபடியமர்ந்துமுகந்துஜொலித்ததிது
விள்ளாவிடத்திலன்றோவிளங்குநிற்குணமிது
வித்தகர்பூட்டிக்கொண்டவிஷயாகிதமிது (மௌ) 4

சிக்கற்றோர்கூந்தலதிற்சேர்ந்துகொளிக்குமிது
சிற்சொரூபசேஷமாய்ச்சேடித்திருந்ததிது
துக்கசுகமற்றிங்கன்றுலங்குமபாரமிது
துய்யமாநிர்விகற்பந்தோய்ந்தசுகிர்தமிது. (மௌ) 5

அங்கமுபுளகாங்கிதமானசுகந்தமிது
வபரோக்ஷாநுபூதிவமைந்தவித்தகமிது
பங்காகிதம்தாய்ப்பாவிவிளைந்ததிது
பதைப்பற்றிச்சூடிடபதிந்தஸந்ததமிது. (மௌ) 6

சிவோஹம்.

## புருஷார்த்த குரு உபதேச மகிமை.

இராகம் ஸஹானா, தாளம் மிஸ்ரம் ஏகம் சாப்பு

பல்லவி.

அம்மாஎனக்குவந்தஅத்வைதபுருடனை
யாருமறிவதரிது அடியம்மா

அநுபல்லவி.

சும்மாசும்மாவிருந்தான்சும்மாவெனையும்வைத்தான்
தம்மாலறியுமென்றான்றன்னைத்தனியேவிட்டான். (அம்மா)



சரணங்கள்.

தன்னையலங்கரித்தான்றன்னழகையும்பார்த்தான்
புன்னகையும்புரிந்தான்போகவிடமுமற்றான்
அன்னையேசொல்லுக்கெட்டானகண்டமாயெனைநட்டான்
பின்னும்பிரிவுமற்றான்பேசாப்பெருமையுற்றான். (அ) 1

வாக்குமனதுக்கெட்டான்மறைக்குமப்பாலுமுற்றான்
றாக்கம்விழிப்புமற்றான்றுரியாதீதத்தில்விட்டான்
ருக்கும்நல்லானந்தத்தான்றத்வசைதன்யமுற்றான்
போக்குவரத்துமற்றான்பரிபூரணமாக்கிப்போட்டான். (அ) 2

சுட்டுக்குமெட்டேனென்றான்சுட்டாதேசுகமென்றான்
கட்டுக்கடங்கேனென்றானருட்கட்டிலேதாலியிட்டான்
விட்டிடாதென்றுஞ்சொன்னான்விதியும்விலக்குமற்றான்
ஒட்டியுறையுமென்றாெனாருதனியாய்விட்டானடி. (அ) 3

என்னினும்வெட்கங்கெட்டானென்னைத்தனியேவிட்டா
னண்ணுசொரூபமுற்றானுமுழுதுங்கெட்டான்
பின்னுமுன்னுமற்றான்பெருமைதானென்னைப்பெற்றா
னுன்னும்பொருளுமற்றானொழியாவெளியில்விட்டான் (அ) 4

குணக்குறியொன்றிலான்குறிக்கவும்பெயரில்லான்
றனையன்றிவேறில்லான்சத்தெனுங்கேவலத்தான்
கணவனெனவும்வந்தான்கண்மணியென்றுஞ்சொன்னா
னுணர்வுறுந்தாமென்றானெண்டியாகின்றேனடி. (அ) 5

சித்தசலனமற்றான்றிரிசியங்காணுதமுற்றான்
பற்றும்பொருளுமற்றான்பற்றறும்மௌனமுற்றான்
சுத்தசுயம்பாயுற்றான்றோன்றாவதீதமுற்றான்
பெற்றோர்பெருமையுற்றான்பிரியாவிடத்தில்விட்டான். (அ) 6

ஒன்றினும்நீக்கமற்றுனொருதனியாயெனைவிட்டா
னன்றுநீதொன்றுமிலான்கைத்துமழைத்தானடி
பண்டிதன்வேடங்கொண்டான்பதையாமருந்தளித்தான்
விண்டிடாதென்றுஞ்சொன்னான்விதேகமாய்விட்டானடி (அ)

என்னையுமூட்டிவிட்டானெல்லாமாயானுமென்றான்
கண்ணுண்மணியென்றான்கட்டித்தழுவிக்கொண்டான்
னொன்னமோசொல்லொண்ணாவெட்டாவின்பமளித்தான்
றன்மயமென்றுஞ்சொன்னான்றதாகாரமாக்கிப்போட்டான்
(அ) 8

சிவோஹம்.

## அபேதகெம்பீரம்.

இராகம்—கல்யாணி அடதாளம்.

பல்லவி

எப்படித்தாகினுமிட்டுவாங்கடியடி
யெந்தன்சுகந்தபோதவதனசுகிர்தனை.

அநுபல்லவி

தப்பிதமல்லடிவுண்மைததாகாரந்தன்றன்மை
கற்பிதங்களொட்டாமேன்மைகைவல்யநிஷ்டையாண்மை (எ)

சரணங்கள்

செப்பாமாமோனமாடியிற்சென்றுபாருமங்கிருப்ப
னப்பாலவன்சமாசமாயங்குமவன்கூடிக்கொளிப்பா
னெப்பானுவமைசொல்லதுரியமாபேரின்பவல்லன்
பற்பலவுபாயம்வேண்டாம்பதையாப்பத்தியம்போதும் (எ) 1

துப்பறத்துறந்துபாருந்துய்யன்சிக்கிசொக்கிடுவ
னெப்பவுமொருபடித்தாயிருக்குமேகாங்கியிவ



னற்புதவபாரனென்னேவங்குசெல்புணர்ந்திடுவ
னுற்பவநாசிப்புமற்றேனொருதன்னிப்பிரியாதுற்றேன். (எ) 2

என்னினுங்கேடுகெட்டானென்னையிங்ஙன்மாலையிட்டான்
சென்னிகாலுடலுமற்றான்சிற்சொரூபஜிதேந்திரிய [ன்
னன்னியமொன்றில்லாதுற்றேனதீதமுள்ளும்புறம்புற்றே
றன்னியமாபெருஞ்செருக்கன்சந்ததவிறுமாப்பனென்னே. 

உன்னினொலொளிர்ந்திடுவனுமைமையொத்தாலுறைந்திடுவன்
மின்னிளையேமேதாவிகாண்விட்டுத்தொடவிணங்கமாட்டான்
புண்ணியபாவரகிதனென்னேபொருந்தினபின்புகன்றால்நீக்கங்
கன்னிமாரேகளங்கமற்றேன்கலந்தபின்காலரகிதம். (எ) 4

சிவோஹம்.

## தீர்த்தம்.

இராகம்—மோகனம் கமாஸ்தாளம் சதுஸ்திரஜாதி திரிபுடை.

பல்லவி.

நீராடப்போகலாமே ஓ அம்மம்மா
நீராடப்போகலாமே (நீ) 1

நீராடப்போகலாம் நிர்மலநதியினி
லாராடினாலுமழுக்கைத் துடைக்குமம்மா (நீ) 2

சுத்தச்சொரூபமழை சொரிந்துதிரண்டநதி
நித்தியநீரம்மா நிறைவுங்குறைவுமில்லா (நீ) 3

முங்கினாற்சுகமம்மா முத்துப்போல்நீரம்மா
தங்கினாற்றனியம்மா சத்தியநதியம்மா (நீ) 4

சோகமோகம்போக்குஞ் சுத்தவறிவுதாக்கும்
வாதம்பித்தந்தீர்க்கும் மந்திரநதியம்மா (நீ) 5

பேதாகிதமாக்கும் பிரம்மசித்தியுறத்தாக்குஞ்
சாதுசங்கமேமுங்குஞ் சற்குணநதியம்மா (நீ) 6

மறைநான்குந்தேடும்மம்மா மஹாமோனநீரம்மா
குரவனுரைமொழியிற் குளிரும்நதியீதம்மா (நீ) 7

சித்தஞ்சலியாதாக்குஞ் சிதாகாசநீரம்மா
சுத்தசைதன்யநதி சும்மாவேவாங்களம்மா (நீ) 8

நீயொருநிமிடம் நீயதாய்முங்குமம்மா
வாராயதைநீங்கி வரவும்வழிகாணாய். (நீ) 9

சோராஜோதிசொரூப சுகந்தநதியீதம்மா
பாராயதுவாகப் பதையாவிழுங்குமம்மா (நீ) 10

என்னாணையெந்தனதி யெல்லார்க்குஞ்சேருமம்மா
தன்னாணைதனியம்மா சத்தியம் வாங்களம்மா (நீ) 11

சிவோஹம்.

## மௌன ஔஷதம்.

இராகம்—எதுகுலகாம்போதி திரிபுடைதாளம்.

பல்லவி.

மௌனமென்கின்றமாமஹாமருந்து
மாயாமாயையைஜெயிக்குமாருதருந்து.

அநுபல்லவி.

சகுணசங்கற்பங்கள் தங்கிடாவிருந்து
ஸகஜநிர்விகற்பஞ்சார்ந்திட்டபொருந்து. (மௌ)



சரணங்கள்.

ஏகபோகதுரியாதீதமாகினவினிவு
இனியகாலாதீதமொழுகியகனிவு
மோகாதிபோகங்கள்முனிந்தமாமுனிவு
முன்னிலைரகிதமாய்முடிந்துற்றதுணிவு. (மௌ) 1

திவ்யமாரகஸியந்தெளிந்தமாதெளிவு
ஜிதேந்திரியமாமஹாதேஜஜொளிவு
பவ்யசிவஞானம்பதிந்தமாபொலிவு
பாவனாரகிதமாய்ப்பரவினகுளிர்வு. (மௌ) 2

அத்வைதபூரணமாகினமகிழ்வு
யானந்தாதீதமாயமர்ந்தமாபுகழ்வு
சுத்தநிராகாரஞ்சூழ்ந்தமாமகிழ்வு
சொரூபஜோதிமயமாய்ஜொலிக்குமாசூழ்வு. (மௌ) 3

ஸந்ததமெய்ஞ்ஞானசாஸ்வதவுணர்வு
சஞ்சலரகிதம்விளைந்தமாவிளைவு
சொந்தமாவபரோக்ஷாநுபூதிவுறவு
சொஸ்தசுகாதீதஞ்ஜோடித்ததுறவு. (மௌ) 4

சிவோஹம்.

## சிவஞான மணிஹாரம்.

இராகம்—சஹானா தாளம் திரிபுடை.

பல்லவி.

சிவஞானமென்கின்றதிவ்யமாசேஷம்
ஜிதேந்திரியதேஜசுமகிழ்ந்திட்டவிசேஷம்.

அநுபல்லவி.

துவேஷதுவிதத்திற்கெட்டிடாவாசந்
துய்யமாவத்வைதந்துடர்ந்துற்றநேசம். (சி)

சரணங்கள்.

அபேதபோதவிளைவுவாகினபோக
மானந்தாதீதமதாயமர்ந்துற்றயோகம்
விதேகமாகேவலமாயாகினசினேகம்
வித்தகமாமௌனம்பெற்றிட்டயேகம். (சி) 1

சுத்தநிராகாரஞ்ஜொலிக்குமாசுகிர்தஞ்
சுயம்பிரகாசமாய்ச்சொரிந்தமாவமிர்தந்
தத்துவசாம்பிராஜ்யந்தரித்தமாவிகிர்தஞ்
சம்பூரணநிர்க்குணந்தங்கிட்டகுளிர்தம். (சி) 2

நாமரூபசூனியமாய்நட்டமாரகஸியம்
நாசரகிதசொஸ்தமாக்கிட்டவசியங்
காமாதிகளணுகாக்கருணைமாகளஞ்சியங்
கண்டாகிதமாய்நின்றநிற்திரிசியம். (சி) 3

கோதறுநித்யத்வங்கொண்டமாசத்யங்
கொஞ்சுமாநிற்விகற்பம்பூண்டமாபத்யம்
வேதாதீதவிமலம்விளங்கியமாநித்யம்
விஷயாகிதபாகம்மேவிநின்றவயித்யம். (சி) 4

சிவோஹம்.

## மெய்ஞ்ஞானப்பால்.

இராகம்—கல்யாணி ஏகதாளம்.

பல்லவி.

பால்பாலம்மா ஓ அம்மா
அருட்பால் பாலம்மா.



அநுபல்லவி.

பாழைக்கடந்தமெய்ஞ்ஞானப்பசுவின்பால்
பாலாய்க்கறந்தபாலினும்பாலம்மா. (பா:) 1

சரணங்கள்.

முன்னிலையற்றபசுவிற்கறந்தது
முக்காலத்திற்குமெட்டாப்பாலிது
நன்னிலைகண்டவருண்ணும்பாலம்மா
நல்வினைதீவினையற்றவிஞ்ஞானப்பால் (பா.) 1

காமக்குரோதங்கடந்தபசுவின்பால்
காமத்தைக்காய்ந்தெரித்தமெய்ஞ்ஞானப்பால்
தாமதமில்லாதேவாங்கியுண்ணம்மா
தானாய்த்தனித்திருக்குஞ்சுஞ்ஞானப்பால் (பா.) 2

சுத்தச்சொரூபநித்யப்பசுவின்பால்
சொல்லுக்குமெட்டாமோனஞ்சுரந்தபா
லஷ்டாங்கயோகமுமடக்கியாளும்பா
லம்மம்மாவாங்கியுண்ணுமுண்ணம்மா (பா.) 3

வாக்குமனமறவளர்ந்தபசுவின்பால்
வாக்குமனமொத்துமகிழ்ந்தபூரணப்பால்
நோக்கறநோக்கிடநோக்குஞ்சைதன்யப்பால்
நோக்காதைநோக்கியேவாங்கியுண்ணம்மா (பா.) 4

தாமதமிராஜதம்போக்கும்பசுவின்பால்
தானேயதுவாய்த்தனித்தெழுந்தபால்
மோனமெய்ஞ்ஞானத்திற்காச்சிவடித்தபால்
முழுதுமேதானாகித்தானுற்றபாலம்மா (பா.) 5

சித்திரம்போலசைவற்றபசுவின்பால்
சின்மயமானவறிவிற்சொரிந்தபால்

சுத்தநிஷ்களங்கவருளிலொழுகும்பால்
சுத்தசத்ததாய்ச்சொக்கித்தளிக்கும்பால் (பா.) 6

நிர்விகற்பப்பசுவிற்கறந்தபாலே
நிஷ்களங்கமாய்வடித்துமெடுத்தபால்
கற்பனையாவுங்கடிந்துமுதைக்கும்பால்
கர்ம்மவினையைக்கடந்தும்நிறைந்தபால் (பா.) 7

நான்குமறைக்குமெட்டாப்பசுவின்பால்
நாமரூபமிறந்தசொரூபப்பால்
தோணுமற்றேணுஞ்சுத்தமெய்ஞ்ஞானப்பால்
சொல்லாதேசொல்லறவாங்கியுண்ணம்மா (பா.) 8

சிவோஹம்.

## நற்கதிமகிழ்ச்சி.

இராகம்—பியாகடை தாளம் ரூபகம்-சாப்பு.

பல்லவி.

என்கதிசொல்லவேவின்பமாய்க்கேளிங்ங
னென்மதிப்பாங்கிநீரே

அநுபல்லவி.

என்னமோவொருபையலென்னைவந்துமாலையிட்டா
னேகாந்தமோர்தனியாயிசைந்ததென்கதிகாணடி (எ)

சரணங்கள்.

ஊருமில்லாப்பையல்பேருமில்லான்றன்னைப்
பாரும்பாருமென்றும்பலதரமொழிந்தாண்டி
சாருஞ்சத்தியமென்றான்ஜாதியுங்கெட்டபையல்
சர்வமுற்றேகமாய்த்தனித்ததென்கதிகாணடி (எ) 1



போக்குவரத்தறப்பூரணமென்றுமறைந்தான்
பொங்கும்பிரம்மானந்தப்பொக்ஷம்பூட்டிநிறைத்தான்
வாக்காதிக்கெட்டாமாவாழ்வுதந்துஸ்தாபித்தான்
வாசாமகோசரமாய்வாய்த்ததென்கதிகாணடி (எ) 2

சுத்தநிர்மலக்காரன்சூட்சாதிசூட்சுமப்பையல்
துக்காதுக்கங்கெடுத்துத்துல்யதோழனாய்நின்றான்
வித்தகமுத்தாயிணைத்தான்வீடிதுவீற்றிருமென்றான்
விஞ்ஞானவிதேகமுற்றுவிளைந்ததென்கதிகாணடி (எ) 3

முழுதணர்பாஞானப்பையல்முடிசூட்டிமுத்தமிட்டான்
மோனமென்றெனைத்தழுவிமுதன்மையுற்றேமேகமென்றான்
பழுதணுகாப்பர்வமேற்றிப்பாவாதீதம்பதித்துவிட்டான்
பகலிரவுமற்றுசத்தாய்ப்பதிந்ததென்கதிகாணடி (எ) 4

சுத்தசைதன்யமென்றான்சுத்தமாசுயம்பாயுற்றேன்
சுத்தாசுத்தமற்றசொரூபமாய்ஜோடித்தமைத்தான்
சத்தியமென்றுமுரைத்தான்சத்தியமேயானதிங்ஙன்
சமரசசுபாவமதாய்த்தரித்ததென்கதிகாணடி (எ) 5

வீட்டிற்கூட்டியமைத்தான்விஸ்ராந்திவிகிர்தமென்றான்
விசேஷசிவபோகமிட்டான்விட்டிடாதுண்டிடுமென்றான்
காட்டித்தன்னையபாரஞ்செய்தான்காலாதீதகமனமென்றான்
கண்டமற்றுப்பூரணமாய்க்கலந்ததென்கதிகாணடி (எ; 6

சிவோஹம்.

## தேசிக இரேசிப்பு.

இராகம்—மத்யமாவதி—ரூபகம் தாளம்.

பல்லவி

போதும்போதுமடியம்மாளிது
போதும்போதுமடி.

அநுபல்லவி.

பூரணப்பூர்த்திபுருஷார்த்தநேர்த்தி
காரணம்பார்த்தீர்கர்ம்மமேநாஸ்தி (போது)

சரணங்கள்.

ஆறுறகற்றியபேதமாய்ப்பொருத்தி
இராகாதிதுறத்தியெல்லாமாயிருத்தி
கோரசதிநிவர்த்திகுணாதீதம்நிறுத்தி
கூறுதுகுரத்திகூட்டினாள்திருத்தி (போது) 1

ஞானமாய்வாழ்த்திநாசாதிதுறத்தி
தோணுதுசுயத்திசுயம்பதாயழுத்தி
தானதாயுணர்த்திஸகஜமாய்ப்புணர்த்தி
கோணுமாகுரத்திகுலாவினாள்சமர்த்தி (போது) 2

நிரஞ்சனமேற்றிநிர்ணயசொஸ்தி
சரசநிஷ்களத்திசங்கற்பநிவர்த்தி
பரமமாபாத்திப்பதைப்பறத்திருத்தி
நிராகாரம்பொருத்திநேசித்தாள்குரத்தி. (போது) 3

என்போலிணைத்தியேகமாயமர்த்தி
யன்பொடழுத்தியானந்தம்பொருத்தி
பண்புள்ளகனத்திபரமதாய்நிமிர்த்தி
யுன்னுதுகுரத்தியொழுகினாள்திர்ப்தி (போது) 4

வாழ்வுறவாழ்த்திமௌனமாயேத்தி
பாழறநிகழ்த்திபாவனாதீதத்தி
காலமுமகற்றிக்கதியூறுங்கருத்தி
சாலவுமுயர்த்தித்தரித்தாள்மாகுரத்தி. (போது) 5



சுகாதீதசுகத்திதுய்யவித்தகத்தி
விகாதநிவிர்த்திவிசேஷநிர்மலத்தி
மஹாமாமஹத்திவாச்சாமகோசரத்தி
சகாமியந்துறத்தித்தரித்தாளென்குரத்தி (போது) 6

சிவோஹம்.

## அயிக்கியசுபாவவுரிமை.

இராகம்-மத்தியமாவதி தாளம்-ரூபகம்.

பல்லவி.

அடியம்மாளிவனேடிணைந்தறுபோதும்

அநுபல்லவி

அடிவிடியற்படாதாமிருட்டக்கூடாதாந்
துடிப்புக்கூடாதாஞ்சோம்பப்பட்டாதாம். (அ)

சரணங்கள்.

அடிநினைக்கப்படாதாமறக்கக்கூடாதாம்
பிணைக்கப்படாதாம்பிரிக்கக்கூடாதாந்
தனைப்புணர்ந்தானுந்தட்டுக்கெட்டானு
மனைத்துமிவனுமடங்காநல்லிவனும் (அ) 1

அடிகுறிக்கப்படாதாம்பஜிக்கக்கூடாதாம்
விரிக்கப்படாதாங்குவிக்கக்கூடாதாம்
உரியர்க்குரியானொருமைக்குகந்தான்
பிரீதிமிகுத்தான்பேராண்மையுள்ளான் (அ) 2

அடிசலிக்கப்படாதாங்களிக்கக்கூடாதா
மழிக்கப்படாதாமமைக்கக்கூடாதாஞ்
ஜொலிக்கச்சொலிக்குந்துரியாதீதத்தா
னளிக்காக்கொடையாயளித்தாண்டிமின்னே (அ) 3

அடிகுறைக்கப்படாதாம்நிறைக்கக்கூடதா
மறைக்கப்படாதாந்திறக்கக்கூடாதாம்
புரையைக்கெடுத்தான்போக்குநீக்கற்றான்
கரையக்கரையக்கலந்தாண்டிகண்ணே (அ) 4

அடிவிழிக்கப்படாதாமூடக்கூடாதாம்
பழிக்கப்படாதாம்புகழக்கூடாதாம்
ஒழிக்கப்படாதவொழிவிலிருந்தான்
றெளிக்கத்தெளிக்கச்சேர்ந்தாண்டிபெண்ணே (அ) 5

அடிசுருவப்படாதாம்ஸகஜங்கூடுமாங்
கருகப்படாதாங்கலவிகூடுமாம்
பெருகாப்பெருக்காய்ப்பெருகிநிறைந்தான்
மருவமருவமகிழ்ந்தாண்டிமின்னே (அ) 6

சிவோஹம்

## அருட்குரு நோக்கத்தாலபேதமுறல்.

இராகம்-ஆனந்தபயிரவி தாளம் மிஸ்ரஜாதியேகம்.

பல்லவி.

என்னடியென்னைக்காணேமேகமாகியநேச
மென்னடி தங்கைமாரே

அநுபல்லவி.

மின்னார்நற்புருஷனைப்போல்மிருதுவாய்வந்திங்
னென்னமோசொல்லாதுசொல்லியெடுத்துவிழுங்கிவிட்டான்

சரணங்கள்

வெட்டவெளியாய்ப்போச்சேவொட்டச்சொரூபமாச்சே
யெட்டாக்கதிபூண்டாச்சேபெண்ணடிமோசம்போச்சே



மட்டுக்கடங்காப்போச்சேமஹாமர்ம்மம்பூண்டதாச்சே
சுட்டுக்குமெட்டாதாச்சேதுறந்தோர்க்குணர்வாய்ப்போச்சே

தன்னந்தனியாய்ப்போச்சேதனித்தோர்க்குறுதியாச்சே
சின்னபின்னமற்றதாச்சேசெப்பாச்சீர்மையாய்ப்போச்சே
உன்னுவுரிமையாச்சேவொப்புவமையற்றுப்போச்சே
சொன்னாற்பிரிவதாச்சேசொச்சொரூபசுயம்பாய்ப்போச்சே.

கண்டார்களிப்பிதாச்சேகருத்திற்கிசைந்துபோச்சே
தொண்டர்தொடுப்பிதாச்சேதுவிதற்கெட்டாதுபோச்சே
கொண்டார்குறிப்பிதாச்சேகுறைவுநிறைவற்றுப்போச்சே
பண்டாய்ப்பதிந்ததாச்சேபாஸ்யமூற்றுப்போச்சே (எ) 3

பத்தியம்பாவியாதாச்சேபாவித்தால்முரிந்துபோச்சே
சத்தியந்தானானதாச்சேசங்கற்பமனுகாப்போச்சே
உத்திகுருக்கொத்ததாச்சேவூமென்னுமுறவாய்ப்போச்சே
சித்திதன்னைப்பெற்றதாச்சேசின்மயமாசித்தாய்ப்போச்சே

சிவோஹம்.

## நிர்விகற்பமே முத்திஸ்தானம்.

இராகம் பியாக்—தாளம் ஆதி சதுர்ஸஜாதி திருபுடை.

பல்லவி.

இதுதானேமுத்திஸ்தானமேகமேயானவிடம்

அநுபல்லவி

இதுவோவதுவோவென்றேங்கியலைவோரை.
கதிதருவேனென்றுங் கைகாட்டிக்கூவிடும் (இ) 1

பதியாஞ்சிவசொரூபங்கதியாம்நிதியருளும்
விதியும்விலக்குமற்ற பதியாம்பதமருளும் (இ) 2

ஜாதிபேதத்தைத்தள்ளும் ஞானபோதத்தைவிள்ளும்
வேதங்காணாததைச்சொல்லும்விஞ்ஞானமந்திரமே (இ)

இருவினைபோக்கடிக்கு மேகாந்தவீடளிக்கும்
அரும்பொருள்தனைக்காட்டுமகண்டொளிவிற்சேர்க்கும்

நித்யநிறைவிற்சேர்க்கும் நிர்மலமாகப்பார்க்கும்
பத்திவைராக்கியமாக்கும் பரமபதமளிக்கும் (இ) 5

ஜோதிசொரூபஞ்சேர்க்குஞ் சுத்தசைதன்யமாக்கும்
ஆதியந்தமுமற்றவதீதமாநித்யமாக்கும் (இ) 6

ஞானவொளியையூட்டும் நாலாம்பதத்தைக்காட்டு
மேலாம்பதியிற்கூட்டும்மெய்மாடியினிற்சேர்க்கும் (இ) 7

துற்குணமறப்போக்குஞ் சுத்தபிரம்மத்திற்சேர்க்கும்
நிர்க்குணநிறைவிற்பூட்டும்நித்யமோனமளிக்கும் (இ) 8

சிவோஹம்.

## தெருட்டேனளித்தல்.

இராகம் காபி தாளம் ஏகம்.

பல்லவி.

தேன்வாங்கலையோ திருவருட்
டேன்வாங்கலையோ.

அநுபல்லவி.

தேகாதியாவும்நீக்கிவடித்தது
சித்தந்தெளிந்தசிற்பரத்தேனிது (தே)



சரணங்கள்.

ஆகமவேதமனுகாக்கடந்தது
யாதியந்தமுமற்றுவாழ்ந்தது
சோகமோகந்துறந்துநின்றது
சொரூபரஸத்திற்பிழிந்தெடுத்தது. (தே) 1

பஞ்சகோசக்குகையைக்கடந்தது
பற்றறப்பற்றிப்பழுத்துப்பிழிந்தது
விஞ்சைப்பறவைஈக்கட்டிநிறைந்தது
விஞ்ஞானக்குகைக்குள்விளைந்துதெளிந்தது. (தே) 2

ஆணவகாமியமற்றுத்தெளிந்தது
யானந்தமாகிப்பொங்கிவடிந்தது
சாதுசங்கமெடுத்துக்கொண்டது
சத்துத்திரண்டசத்தியத்தேனிது (தே) 3

முத்திக்கிவித்தாய்முளைத்துமகிழ்ந்தது
முன்னிலையற்றுமேகமாய்நின்றது
சத்துக்கள்கண்டுமௌனமுற்றது
சஞ்சலமற்றுப்பொங்கிநிறைந்தது. (தே) 4

காலத்தைக்காலாலுதைத்துக்கடந்தது
காமத்தைக்கண்ணாலெரித்தெழுந்தது
நாமரூபத்தைநாடாதொழித்தது
நாணமற்றுச்சொரூபமேயானது. (தே) 5

பூரணமானபொருளிலெடுத்தது
போக்குவரத்தற்றுப்பொங்கிநிறைந்தது
வேதமுற்றுந்தேடியலைந்தது
வித்தகக்கொம்பில்விளைந்ததேனிது (தே) 6

சிவோஹம்.

## பேரின்பம்.

இராகம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

பல்லவி

விரும்பவிரும்பவின்பந்தருமே
மெய்யேபொருளென்றும் (வி)

அநுபல்லவி

அருந்தவமிகுந்தின்பம்பொங்குமே திவ்ய
வற்புதமெய்ஞ்ஞானவீட்டினில்விடுமே (வி)

சரணங்கள்.

ஐம்பூதகாரியமித்தேகமித்தை
யீறிவிட்டறிந்தாலசத்ததாய்நீங்கும்
சும்பும்பாசபந்தங்கள்போக்குமிப்போ
சொரூபமகமென்றூற்சுயம்பதுவாக்கும் (வி) 1

திரிகுணமும்மலம்போக்குந்தன்னைத்
தெரிவித்தொழிவினிற்சேர்த்துறத்தேக்கும்
பொறிபுல்னுதியையுநீக்குமத்துவைத
பூரணமகமென்றூற்பொருளதாய்த்தாக்கும் (வி) 2

இராகத்துவேஷமெல்லாந்துறக்கும்நித்ய
நிராகாரபிரம்மத்திற்சேர்த்துச்சிறக்குஞ்
சராகசமரசமாய்ப்பெருக்குஞ்சத்திய
சர்வமகமென்றூற்சத்ததாயிறுக்கும் (வி) 3

கற்பனைவிஷயத்தைக்கெடுக்குஞ்சுத்த
நிர்விகற்பமதாயாக்கிங்ஙன்கொடுக்குஞ்
சிற்பரசிவமதாய்த்தொடுக்குஞ்ஞான
சிற்பரமகமென்றூல்மௌனமாயொடுக்கும் (வி) 4



இன்பதுன்பங்களறப்போக்குந்தூய
வின்பாதீதமதாயிசைத்துப்பின்காக்கும்
பண்பாய்ப்பதம்பாலித்துச்சேர்க்குஞ்சுய
பரப்பிரம்மமகமென்றூற்பதைப்பறக்கோக்கும் (வி) 5

துவிதபீதியனுகாதொழிக்குந்துல்லிய
துரியாதீதமதாய்ச்சுட்டறக்களிக்கும்
விதிவிலக்கற்றொன்றாய்க்கொளிக்கும்விமல
விதேகமகமென்றூல்வீடதாய்ஜொலிக்கும் (வி) 6

சிவோஹம்.

## சீடனுருகல்.

இராகம்—பியாகடை—தாளம் அட சாப்பு.

பல்லவி.

தேசிகனென்செய்வனோமெய்ஞ்ஞான
தேசிகனென்செய்வனோ

அநுபல்லவி.

திருவுளமிரங்கிக்கருணைபுரிந்திடுவனோ
திரும்பியும்பார்க்காமற்சேற்றினிற்போடுவனோ

சரணங்கள் (தே)

1 தெருளைக்கொடுத்துப்பேரின்பமளிப்பனோ
தெருள்கெடமருளைக்கொடுத்துக்கெடுப்பனோ
கருதரிதாகியகருத்தைக்கொடுப்பனோ
காமக்குரோதத்தையேவிக்கெடுப்பனோ. (தே)

2 கையைப்பிடித்திழுத்தமுத்தங்கொடுப்பனே
காறியுமிழ்ந்துங்காலாலுதைப்பனே
மாறிடாவஸ்துவைக்காட்டிக்கொடுப்பனே
மண்ணிலுங்கேடாய்த்தூற்றிக்கெடுப்பனே. (தே)

3 அண்டையிற்கூவியாதரித்திடுவனே
அருகினிலனுகாமலடித்துத்துறத்துவனே
பண்டறுமாயையைபறித்துமெறிவனே
பாழானதீமையிலாழ்த்திக்கெடுப்பனே (தே)

4 தாமதமிராஜதம்நீக்கிக்கொடுப்பனே
சாத்தியமில்லென்றும்வெறுத்துமுறைப்பனே
ஆனந்தங்கொண்டருளினைப்பொழிவனே
யடாவென்றுமதட்டிக்கோவிப்பனே. (தே)

5 குன்றாப்பொருட்செல்வங்கூட்டிக்கொடுப்பனே
குப்பையிலிழுத்துப்புரட்டியுதைப்பனே
நன்றாய்ச்சமாசனங்குங்கொடுப்பனே
நாசதுற்சங்கத்திலாழ்த்திக்கெடுப்பனே. (தே)

6 பதைப்பைவதைத்தும்பதமுறப்பதிப்பனே
பதைக்கப்பதைக்கவிட்டும்நகைப்பனே
புதைக்கப்படாதமாபொருளிங்களிப்பனே
புதைக்கப்புதையும்பொய்யாக்கிப்பழிப்பனே. (தே)

7 கோதில்லாமெய்ஞ்ஞானக்கண்ணைக்கொடுப்பனே
கோசப்பொய்க்கண்ணைக்கொடுத்துக்கெடுப்பனே
வேதாதீதமதாயாக்கித்தான்கொடுப்பனே
விஷயவிச்சையிற்றோய்த்துக்கெடுப்பனே. (தே)



8 எட்டுத்திசைக்குமப்பாலமைப்பனே
எட்டுத்திசைக்குள்விட்டுக்கெடுப்பனே
மட்டுக்கடங்காவகண்டமளிப்பனே
மட்டுக்கடங்குங்கண்டமாய்க்கெடுப்பனே. (தே)

9 பிரம்மவமுதினையூட்டிக்களிப்பனே
விஷமெனும்பேதத்தைப்புகட்டிக்கெடுப்பனே
பரமார்த்ததிவ்யவபாரந்தருள்வனே
பரமார்த்தம்பற்றாப்பாவியாய்க்கெடுப்பனே. (தே)

10 எல்லாமுந்தானதாயாக்கிக்கொடுப்பனே
யேகமாய்த்தனியாத்துவிதமாய்க்கெடுப்பனே
சொல்லாமற்சொல்லிமௌனத்தைகொடுப்பனே
சொல்லால்முழக்கியேசுகமறக்கெடுப்பனே. (தே)

11 சொரூபசைதன்யமாக்கிக்கொடுப்பனே
ஜோதிமெய்ஞ்ஞானத்தைமாற்றிக்கெடுப்பனே
நிருணயம்பூட்டிந்நித்யமளிப்பனே
நிர்ணயமற்றிட்டவசத்தாய்க்கெடுப்பனே. (தே)

12 திரிகுணரகிதமாயாக்கிக்கொடுப்பனே
திரிவிதமலத்தையும்புகட்டிக்கெடுப்பனே
அரிதென்னுமானந்தாதீதங்கொடுப்பனே
யத்வைதவமலத்திற்சேராமற்கெடுப்பனே. (தே)

13 விதேகநிலத்தைத்தானங்கொடுப்பனே
விஞ்ஞானவித்தைப்பதித்துநீரிடுவனே
ஜிதேந்திரியக்கனியைப்பறித்துமளிப்பனே
திவ்யநிர்விகற்பவமிர்தமுங்கொளிப்பனே. (தே)

14 தத்துவப்பிரகாசமாக்கியும்பார்ப்பனே
சர்வமுந்தானாய்ச்சுகிக்கக்கொடுப்பனே
சத்தியம்நீயென்னஸ்தாபித்திடுவனே
சத்தியஞ்சத்தியமென்றுந்தனிப்பனே (தே)

15 சச்சிதானந்தமென்றும்பெயரிடுவனே
சர்வமேவாவெனத்தழுவியணைப்பனே
நித்தியம்நித்தியமென்றுரேசிப்பனே
நிர்மலமாகச்சாதனங்கொடுப்பனே. (தே)

16 பூரணமென்றும்பட்டங்கொடுப்பனே
போக்குவரத்தறப்பொருத்தந்தொடுப்பனே
நேர்மைதந்திங்ஙனம்நில்லென்றமைப்பனே
நீங்காநீநானென்றும்நிச்சயமளிப்பனே. (தே)

சிவோஹம்.

## தேசிகன்றிருப்பாதத்தின் மஹத்துவம்.

இராகம்—தந்நியாசி தாளம் ஆதி

பல்லவி.

தேசிகன்றிருவடிதெரிசித்தளவினிற்
சின்மயமாக்குதென்னே (ஞான)

அநுபல்லவி.

மாசில்லாமெய்ஞ்ஞானதேசிகனழகடி
மகிமைதானென்னசொல்லுவேன் (ஞான)



சரணங்கள்.

1 நாசச்சரீரமதைநானென்றிருந்தவென்னை
கோசமகற்றிக்காட்டினார்
தோஷமொன்றில்லாமாசுத்தப்பிரம்மமதாய்
நேசமுறவுகூட்டினார்; (ஞான)

2 வந்தவழிகாட்டினார்சொந்தயிடங்கூட்டியே
பந்தமறவோட்டினார்பரமாயெனைநாட்டியே
யெந்தவிதமோதுவேனென்னமாரகஸியஞ்
சொந்தமஹாவின்பஞ்சொல்லவுமொவ்வா (ஞான)

3 சூதாகக்கூவியேதுரியத்தில்நிறுத்தினார்
சாதனையிதெனஸ்தாபித்துறுத்தினார்
ஆதலாலினிவேறறையவோவிடமில்லை
காதலேமாறிடாக்கருணைதானென்னமோ. (ஞான)

4 சுருதிமுடிவில்வைத்தார்துரியாதீதமென்னே
கருதரியாகியகாலாதீதமுமாச்சு
அரிதரிதாகியவபாரவிதேகம்பாரும்
பெரிதுபெரிதென்னேபேசவுமொண்ணா. (ஞான)

சிவோஹம்.

## மௌன அடைக்கலம்.

இராகம்—காபி இந்துஸ்தான் தோடி மிசிறஜாதி ரூபகம்.

பல்லவி.

1 ஓ மோனமே வெனையாளுமே
ஏகமா யெனையாளுமே. (ஓ)

2 ஞானமே சிவயோகமேயருட்
தானமே யென்னையாளுமே. (ஓ)

3 போதமே பொருட்தியாகமேஇருட்
போகுமே வொளிவாகுமேயென்னையாளுமே.

4 பேணுமேபிரம்மந் தானுமேதனைக்
காணுமேதனியாகுமே சர்வமாகுமேயென்னையாளுமே

5 எங்குமேயருட்தங்குமே கருணைபொங்குமேசாது [மே
சங்கமேசத்துத்துங்குமே வெளித்தங்கமேயென்னையாளு

6 பாருமேபதியாகுமே பரந்தானுமேசொரூபஞ்
சேருமேசுயமாகுமே யளிமோனமேயென்னையாளுமே.

7 கேளுமேகிருபைதாருமே கிரமந்தானுமேநீயும்
காணுமேயேகபோகமே தனியானேமே. (ஓ)

8 ஆளுமேயருட்போதமே யகண்டமாகுமேயது
தானுமேசிவமோனமே ஜெயமானேமேயினிவாழுமே.

சிவோஹம்.

## நித்திய விருப்பம்.

இராகம்—எதுகுலகாம்போதி, திருபுடை தாளம்.

பல்லவி.

மெய்யேமெய்யாகவேண்டியேவந்தே
னையயெனையாளுமே.



அநுபல்லவி.

உய்யும்படிக்காகவுன்னையடுத்தேனையே
மெய்யாக்கியாளுமையே.

சரணங்கள்.

1 காமக்குரோதலோபங்கடந்துதனியானேன்
மோனமளித்தாளுமே
நேமவருள்வந்துநேசித்திழுக்குதென்னை
நீக்கிறாற்பாவமையே. (மெய்)

2 உன்னைப்பிரிந்தறியேனுன்னைவுனக்களித்தேன்
றன்னைத்தாறுக்குமையே
என்னைப்பிரிவாயாறெலென்றுணையுன்னைவிடேன்
றன்னைப்பிரியலாகுமோ. (மெய்)

3 நீயேகாரணனதுவும்நிச்சயமாகுமையே
நேயாநுபூதியையே
தூயமாசேவைசெய்துசுயம்பதாய்வாழ்கலாச்சு
துரியாதீதமேயாளுமையே. (மெய்)

4 ஏகபோகமாச்சுயெல்லாமுந்தானதாச்சு
ஞானமிதாகுமையே
தாகமிறந்ததாச்சுசத்தியமுண்மையாச்சு
ததாகாரந்தாக்குமையே. (மெய்)

சிவோஹம்.

## சத்துமணிக்கோவை.

இராகம்—சுருட்டி, தாளம் அட.

பல்லவி.

சபாசு தன்னைப்பாரடா தனக்
கன்னியமுண்டோசொல்லடா.

ஜடத்தைப்பகுத்தறிந்துதள்ளடா தனிச்
சத்தைதவிரத்தான்வேறேசொல்லடா.

1 ஒன்பதுவாயிலுள்ளகூடோடாநீ
வுள்ளும்புறம்புள்ளபொருள்தானேடா
அன்பறுமாணவகாமியமாயைநீயோபாரடாநித்
யானந்தபிரம்மானந்தந்தானேசொல்லடா. (ச)

2 நாமரூபம்நீயோவுற்றுப்பாரடாநித்ய
நாதாந்தமோனந்தானேசொல்லடா
ஈனவிராப்பகலானபொய்நீயோபாரடாதனி
விராப்பகல்ற்றயேகாந்தந்தானேசொல்லடா. (ச)

3 தாமதமிராஜதம்நீயோபாரடாகேவல
சத்துவமானகுணந்தானேசொல்லடா
பேதாபேதங்கள்நாமோபாரடாசுத்த
வபேதமானசைதன்யமோசொல்லடா. (ச)

4 மோகாதிபோகம்நீயோபாரடாமாயா
முன்னிலைரகிதந்தானேசொல்லடா
சோகாதிவிஷயங்கள்நீயோகாணடாநித்ய
சுதந்திரந்தானேதெரிந்துசொல்லடா. (ச)



5 அனித்யப்பிரபஞ்சம்நீயோபாரடா அதற்
கன்னியமானபரவெளிதானேசொல்லடா
ஜனிக்குமாயாகிரியைநீயோபாரடாநித்ய
ஸந்ததமெய்ஞ்ஞானந்தானேசொல்லடா. (ச)

6 கருப்புசிவப்புவெள்ளைநீயோபாரடாநிர்வி
கற்பமானசுயந்தானேவறிந்துசொல்லடா
வரத்துப்போக்குமானமனமோநீபாரடாநித்ய
வரத்துப்போக்கற்றவஸ்துவோதன்னைக்காண்டா. (ச)

7 பந்தமோக்ஷமானமருள்நீயோபாரடாசத்ய
பந்தமோக்ஷமற்றபரந்தானேசொல்லடா
அந்தமாதிநடுவுமுண்டோநீயேபாரடா அரு
ளானந்தந்தானேநீயேவறிந்துகொள்ளடா (ச)

சிவோஹம்.

## பிரம்மமுத்து முடிசூட்டல்.

இராகம்—சுருட்டி தாளம் அட.

பல்லவி

பலேபட்டாணிமாவுத்தன்னைத்தான்பார்குல்லா
பிரம்மமுத்தாலேமுடிசூட்டி.

அநுபல்லவி.

அஷ்டாங்கயோகவருட்கொண்டொட்டி
யடித்தான்பார்மெய்யானந்தம்பூட்டி

சரணங்கள்.

1 காமக்குரோதத்தைக்கட்டிச்சுருட்டி
கர்ம்மவினையைக்கடக்தறவேரிட்டி
காமரூபத்தைநாடாமல்வாட்டிமெய்ஞ்
ஞானமதங்கொண்டசிங்கத்தைப்பூட்டி (பலே)

2 பொறிபுலன்பரவையும்பொருளிற்கூட்டி
பொல்லாதவிஷயத்தைத்துள்ளாமற்கட்டி
குறியூறும்விரதத்தைநிர்க்குணமாகநாட்டி
கோலாகலமாய்ப்பிரம்மானந்தஞ்சாட்டி. (பலே)

3 சின்மயச்சிவிகையிலேறியேயோட்டி
சிற்பரவெளியிலேசைதன்யம்பூட்டி
தன்மயமோங்கப்பூரணத்தைப்பூட்டி
தத்துவமானமாகொடியையும்நாட்டி. (பலே)

4 சத்தியவாசைத்தானெனுங்காட்டி
சைதன்யமந்திரியையூகமாய்க்கூட்டி
நித்தியவஸ்துவைவீடாகக்காட்டி
நிஷ்களவிராஜ்யமுடியையுஞ்சூட்டி. (பலே)

5 கருவிகரணத்தைப்படையாகயிருத்தி
கண்டங்கண்டத்தையகண்டமாய்த்திருத்தி
நிருவிகற்பமாகச்சமாஸப்படுத்தி
நியமமெனும்பிரம்மவருட்கொடிநிறுத்தி (பலே)

6 ஜெயமென்னுமிராஜ்யபேரிகைகொட்டி
சிம்மாஸனமெனுமேகசக்கரமுமாட்டி
சுயமன்னுயிரெல்லாந்தன்னையேகாட்டி
சுதந்திரம்பொருந்தியேயாண்டான்கட்டி. (பலே)

சிவோஹம்.



## மௌனசூடாமணி.

இராகம்—வஸந்தா சாப்பு தாளம்.

பல்லவி

அத்வைதமாஹாரம்வாங்கடியடி
யம்மம்மாதேவையோவாங்கிப்பூணடி

அநுபல்லவி.

வித்தகமதாய்விளைந்தமாரத்னமுத்துத்தானடி
சத்தமறியாததுபார்தனியாய்த்தனித்தநத்தடி (அ)

சரணங்கள்.

1 கொண்டதுகொடுத்ததுமல்லவல்லகேளடி
குரவர்தேடிக்கோத்ததிதுவரிதரிதடி
அண்டபிண்டமாகவலங்கரித்ததுவிதுநேரடி
பண்டமாபதநிதியிற்பதித்துப்பதைப்பற்றதடி (அ)

2 மாற்றுரைவறியாததுமஹாஜோர்ஜோரடி
மங்களமாகத்துங்குமந்தநன்குபேஷ்பேஷடி
நன்றுதீதுமொவ்வாததுநல்லதிதுசொல்லாதடி
நாமேநாமேஜோடித்தாக்கால்நம்மழகுகண்டிடடி (அ)

3 முப்பத்தாறிற்கப்பாலெடுத்தச்சித்துக்கொத்தடியடி
முத்தர்குலாம்போட்டுமாடும்மாஞானநத்துக்காணடி
சுத்தமதாய்ப்புணரவரும்ஸௌகுஸுமஹாதேஜஸடி
ஸுகந்தமஹாவருளருந்துய்யமதைக்கையெடடி (அ)

4 பாரும்பாருஞ்ஜொலிக்கிறமாபக்குவபாகவஸ்துச்சத்தடி
பற்றறுத்துமுற்றுப்பாரும்பதிக்கலேசலேசடி [மடி
சேருஞ்சேருந்தெளிவோடென்னை திவ்யநிர்விகற்பநேம
சிவசிவசிவராஜயோகஞ்ஜெயஞ்ஜெயமெனக்கைபோடடி

சிவோஹம்

## சமரசசுபாவ சையோகம்.

இராகம்—கமாஸ், தாளம் ரூபகம்.

### பல்லவி.

ஏகமாமஹா பாவனையே
இனியமரமரசுகந்தவஸ்துபாசனையே.

### அநுபல்லவி.

தாகமோக போகரகிதவிலக்ஷணமே
ததாகாரமா சம்பூரணலக்ஷணமே. (ஏ)

### சரணங்கள்.

1 பரமபாகதுரியபாகபக்குவபத்தியமே
பதையாமஹாநிர்க்குணபரஸ்பரசத்தியமே
உறவுபகைகெடவுறைந்தயுத்திமாநித்தியமே
யுண்மையுகந்தருளுந்தனிமாவகத்தியமே (ஏ)

2 சாதனபோதவிலாஸகஜமாசையோகமே
சர்வமதாயொழுகியசமயாதீதவிதேகமே
வாசனைகளறவளர்ந்தமாமௌனவபேதமே
வரத்துடன்போக்கறவளங்கியமாவல்லபமே, (ஏ)



3 ஓதுதற்கடங்காவுல்லாஸமாமஹாஸல்லாபமே
யுறுதியிலொழுகியவொளிவிருள்ரகிதமாசுயமே
கோதுமறவிளங்கியகுருகுலாமாமஹாநேயர்நேசமே
கூடாப்பிரியாகுலாவுங்குலபேதமற்றமஹாசேஷமே(ஏ)

4 ஆசாபாசரகிதவத்வைதமாமஹாவபேதமே
யரிதரிதாகியவசங்கமாசுகாதீதசுகிர்தமே
கோசாதிகடந்தமஹாகோமளதேஜசுமயமே
குளுகுளுகுளுவெனவங்கம்புளகாங்கிதமாசுகந்தமே.

சிவோஹம்.

## சாமான்.

இராகம்—எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

### பல்லவி.

எங்களூரிலிருக்கு மினிதினிதுசாமான்பா
ரியல்புவிதன்கொள்கைதானடி அடி.

### அநுபல்லவி

பங்கரகிதமாகும் பாவனைகளற்றிருக்குங்
கண்காள்கற்பனைகாணுக்கருத்தோடுவாங்குங்கடி. (எ)

### சரணங்கள்

திரிசியமாய்க்காண்கவெட்டா செங்கையாலெடுக்கக்கிட்டா
சிறிதுபெரிதாக்கவொட்டா சிங்காரங்கள்பண்ணக்கிட்டா
பிரியஞ்சலிப்பங்குருட்டா பேசிப்போய்ப்பிணைக்கக்கூட்டா
வுரியநெறிபர்வமூட்டிட்டும்மத்தாய்வாங்குங்கடி. (எ) 1

நாசசூனியம்பாரும் நங்காளின்னேசந்தான்கேளும்
வாசமாநியமஞ்சேரும் வாழ்த்திமதிக்காமலாளும்
தோஷரகிதபவுஷியந் தோன்றுதெரீடுங்கவாழும்
பாசதோஷம்பற்றுமேலும் பதைப்பிறந்துவாங்குங்கடி (எ) 2

சத்தியமாமெங்கள்நாடுசமரசமாமதன்சுபாவம்
பத்தியமாம்நிர்விகற்பம் பரஸ்பரமாமதனொழுக்கம்
உத்தியமாம்வ்யோமாதீத முறுதிதான்ஸகஜபோதம்
சித்தியடிசின்மயங்கேள் தேவையுண்டோவாங்குங்கடி (எ) 3

கண்டமற்றதெங்கள்சாமான் கர்ம்மமற்றோருண்ணலாகும்
பண்டப்பன்புமிதனிரகஸ்யம்பருகுவோர்க்கமிர்தமாகும்
விண்டிடாமாவிலக்கணந்தான் விமலசுத்தவிறுமாப்பன்றோ
வுண்டிட்டுத்தான்வேண்டுமானாலுல்லாசமாய்க்கொள்ளுங்கடி.

சிவோஹம்.

## முமூட்சுசுகளை அழைத்தல்.

இராகம்—ஆரபி, தாளம் ஏகம்.

பல்லவி.

எந்தன்வழிகூடிவருபவராரய்யா
யெந்தன்சர்ஜனசங்கமே.

அநுபல்லவி.

பந்தவினையெல்லாம்பாழாய்க்கெடுத்தருட்
சொந்தஞ்சொந்தமெனத்துணிந்ததுறவிகள் (எ)



சரணங்கள்.

1 ஸந்ததமொழியாச்சத்தியம்பூண்டது
ஸகஜமாகவுறைந்துமிருந்தது
சொந்தரகஸியந்துலங்கிவிளைந்தது
துறந்ததுறவோருகந்துகொண்டது. (எ)

2 அந்தமாதிநடுவற்றிருந்தது
யத்வைதராஜாங்கமாளப்புணர்ந்தது
விந்தைவினோதங்களற்றுமமர்ந்தது
வேதாதீதமாய்மேவிவிருந்தது. (எ)

3 போதமயமாய்ப்பொருந்திக்கரைந்தது
பூரணமாகப்பூண்டுநிறைந்தது
சாதனமுற்றுத்தனித்தமர்ந்தது
சாம்ராஜ்யமாமஹாசத்தாயுறைந்தது. (எ)

4 ஏகாந்தவிறுமாப்பிற்கண்டுமெடுத்தது
யெல்லாமுமாகிவிருக்கக்கொடுத்தது
தேகாதிமோகமுனிந்துதொடுத்தது
சிவோஹஞ்சிவோஹமென்றுமடுத்தது. (எ)

5 பந்தமோக்ஷரகிதமாயுற்றது
பரஸ்பரமாகிப்பதிந்துமிருந்தது
தத்தோந்தத்தோமெனத்தனித்துமிருந்தது
தந்தனம்பாடித்தான்வஸ்துவாய்ப்பூண்டது. (எ)

6 வஞ்சகர்க்குபஞ்சப்பொறியாய்விரிந்தது
வாசாங்கிரியர்க்குபாதியாயானது
துஞ்சுமெய்ஞ்ஞானிக்குச்சுதந்திரமானது
துய்யமாமௌனசொரூபநிதியிது. (எ)

சிவோஹம்.

## நித்திய பூஷணம்.

### இராகம்—தேவமனோஹரி தாளம் ஆதி.

பல்லவி.

பூஷணம்வாங்கலையோ அம்மம்மா
புருஷார்த்த. (பூ)

அநுபல்லவி.

வேஷாதிரகிதமாமெய்ஞ்ஞானத்தங்கமிதிற்
தோஷாதிவணுகாச்சுத்தமாய்ச்செய்தது. (பூ)

சரணங்கள்.

1 கோசக்கூட்டினையுருக்கியெடுத்தது
குன்றுக்குறியாமாற்றுரைகடந்தது
நேசமாபோதமாய்நகாசுசெய்தது
நேமந்தவரராணியும்பூஷணமிது. (பூ)

2 அபேதமஹாதட்டானமுகாயமைத்தது
அகண்டமதாகக்கோத்துமிணைத்தது
விதேகமாயிதைப்பழுக்கச்சுட்டெடுத்தது
விமலமாமுத்துப்பதிக்கமாஹாரமிது. (பூ)

3 தத்துவரத்தினம்பூட்டியுமிழைத்தது
ஸந்ததாஸமதிலமிழ்த்தியுமெடுத்தது
சொந்தமாததாகாரந்தோய்த்ததாய்ப்பூண்டது
சுத்தநிர்விகற்பப்பூஷணமாமிது. (பூ)



4 காலாதிதமதாய்க்காட்டிப்பதித்தது
கர்ம்மத்திற்கெட்டாவொட்டிவுகந்தது
கோலாகலசிங்காரமாமஹாமணியிது
கொஞ்சம்வஸ்துப்பதக்கம்பார்பாரிது (பூ)

5 சுத்தமெய்ஞ்ஞானமாய்த்துணிந்தமாமணியிது
துய்யமாதுறவில்ஜொலித்துக்கொளித்ததிது
இந்தாறுமாறுக்குமப்பாலெடுத்ததிது
வபரோக்ஷாநுபூதிரத்தினக்கோவையிது. (பூ)

6 சுட்டொழிந்தமாபூமியில்விளைந்தது
சும்மாவிருக்கஜோதியாய்நிறைந்தது
விட்டுப்பிரியாதாயொட்டியுறைந்தது
வித்தகம்விளைந்தமாமுத்துப்பூஷணமிது. (பூ)

சிவோஹம்.

## ஸகஜநிஷ்டை.

### இராகம் மோகனம் தாளம் ஆதி.

பல்லவி.

என்னடிஸகிமாரேயென்றோழனிங்ஙன்
வந்தாரோவல்லையோசொல்வீர் அடி;

அநுபல்லவி.

என்னடிவருவேனென்றென்மனமறக்கெடுத்தான்
கண்ணுண்மணிபோன்றவண்டிகண்டுமழைத்துவாடி.

சரணங்கள்.

அன்னமேமெசொல்லுக்கிணங்கானரியமாமமதைக்காரன்
உன்னிடாமாமாடிமீதொத்துத்தனித்தங்கிருப்பன்
மின்னலேவென்னடிசொல்வேன்விழியாமூடாபையண்டி
சின்னமறமெல்லப்போடிதீரனங்குசிக்கிடுவன் (எ) 1

நானல்லவென்றுரைப்பன்நம்பிநீபிரிந்திடாதே
ஊனமில்லனென்னுணயுண்மையெனக்கொத்திருப்பன்
ஞானவல்லிபுருஷார்த்தன்பாரீர்நன்குநன்கபாரமுற்றேன்
ஈனமற்றநித்யத்வனென்னையன்றிக்கதிகாணுன். (எ) 2

போனதில்லன்வரவுமில்லன்புன்மைவொன்றுமணுகிடான்
வேணுதில்லன்வேண்டாதில்லன்விதிவிலக்குாகிதன்பாரீர்
ஆனதானவத்துவைதனம்மடிவெனக்கெளியோன்
றுனவினுயுகந்தவனுஞ்சாக்ஷியிவன்கண்டுகொள்ளும் (எ) 3

நாடறியாநற்பரமன்நாணுணநாஞயுகந்தோன்
கூடரியகூட்டுறவன்கூறுமாகொள்கைக்காரன்
றேடரியசிவயோகன்றிவ்யமஹாநிர்க்குணத்தோன்
சூடரியஜோதிமயன்சும்மாபோடீயங்கிசைவன் (எ) 4

அடிவவனைசேருதற்குமபரோக்ஷமெத்தைபோடவன்
முடியடிநடுவுமிலான்மோனமாய்ச்சயனிப்பான்பார்
குடியாக்குடிபோதக்காரன்குன்றுக்குறியாக்கூடிடுவன்
விடிவஸ்தமனமிலன்விலகாவிதேகன்போடி (எ) 5

கண்ணேவென்சகிமாரேகளங்கமிலாமாவின்பன்
பெண்ணுணவியுமிலன்பேருருமுருவுமில்லோன்
யெண்ணுமாவெல்லாமென்பன்யெண்ணிறைற்றனியனடி
சொன்னுற்சொல்லுக்கிணங்கான்சூஸ்திரசுபாவனடி (எ) 6

சிவோஹம்.



# அமிர்த சஞ்சீவி.

இராகம்—மோகனம் ஏகதாளம்.

பல்லவி.

மருந்துண்ணலாஞ்சேருங்கள் ஓ
மாயாஜகத்தீரே. (ம)

அநுபல்லவி.

மருந்துண்ணஜகமாறும் மாதவப்பொருள்சேருந்
தெருளுறும்பயமறுஞ் ஜெயசுயவருளேறும். (ம)

சரணங்கள்.

பொறிபுலன்கரணஸ்தூலம் பொருந்துமிராகாதி
குறிகுணம்நாமரூபங் குலாவும்விகாரமுற்றும்
நெறியொடுவொன்றுசேர்த்து நினைவறத்தூளிசெய்
தறிவுறுந்துரியப்புடமமைத்து நீற்றியதிந்த (ம) 1

பாசதோஷங்களைந்து பதைப்பையுமறப்பறித்து
நாசகண்டம்பிடுங்கி நலந்தீங்கையுங்கெடுத்து
கோசமைந்தையறப்பறித்து குரவனருட்குருவமைத்து
நேசநிர்விகற்பப்புடம் நேர்த்தியாய்வைத்தெடுத்ததிந்த (ம)

தற்போதவேர்களைந்து சந்தேகக்கிழங்கறுத்து
கற்பனையைச்சார்பிரித்து களங்கமறவதைவடித்து
அற்பமுமன்னியங்கெட வதீதக்குகைக்குள்ளமைத்து
நற்பிரம்மானந்தப்புடம்நன்றாய்வைத்தெடுத்ததிந்த (ம) 3

போதம்பொருந்திமிஞ்சும் பூரணவழகுகொஞ்சும்
வேதாதீதவிஞ்ஞானமிஞ்சும் விதேகமாவிமலங்கொஞ்சும்
பேதரகிதங்கொஞ்சும் பேரின்பம்பெருகிமிஞ்சுஞ்
சாதகமிதுசார்ந்துகொஞ்சுஞ்சர்வமுந்தானுயுமிஞ்சும் (ம) 4

சிவோஹம்.

## அடங்கா வியப்பு.

இராகம்—சாவேரி தாளம் சாப்பு.

பல்லவி.

விதேகசையோக விமலவரமபாரம்
வித்தகம்விளைந்த மாசுத்தநிராகாரம்.

அநுபல்லவி.

பதையாப்பாவாதீத பக்குவபோதஹாரம்
பண்பாய்ப்புணர்ந்துறுந் தன்பதிநிர்விகாரம். (வி)

சரணங்கள்.

1 வேதாதீதமஹா விசேஷமாநிராலம்பம்
வேற்றறியாமஹா சூஸ்திரசுகாரம்பம்
நாசாதிரகிதமா ஞானமிகுபேரின்பம்
நிர்மலரூபநாசமாய் நாஹனநற்பிரம்மானந்தம். (வி)

2 நேசாநுபூதிமா நிஷ்கிரியாநேமமநிராகாரம்
நீங்காமாரேசித்த சுத்தநிர்விகற்பவலங்காரம்
பேசாமஹாநுபூதி பெரியதுய்யநிர்விகாரம்
பெருகியவருட்டிரட் பிழம்பெனும்பிரம்மஹாரம். (வி)

3 காலாதீதசுத்தக் களங்கரகிதமாகைவல்லயம்
காரணமாகாருண்யத்வசுய கர்ம்மரகிததுல்யம்
கோசாதிகுலைந்தநித்யமஹா கோலாகலமெல்யம்
குரவர்குலாமொழுகும் நிராசைமஹாநல்யம். (வி)

4 பரஸ்பரகேவலமா பக்குவபாகசுகிர்தசுயரகஸியம்
பாவனாகிதபோதம் பரவியமாமஹாநிர்த்திரிசியம்
புருஷன்பெண்ணவிரகிதபுனிதபுருஷார்த்தவசியம்
போக்கொடுவரத்துமறப்புணர்ந்தமஹாபவுஷியம் (வி)

சிவோஹம்.



## தெருளின்மணி.

இராகம்-மத்தியமாவதி, தாளம்—ஆதி.

பல்லவி.

சின்மயமாமௌனபாஷ்யம்
ஜெகத்தைபரமாக்குமவசியம்

அநுபல்லவி.

தவராஜயோகமஹாதேசிகர்நேசந்
தந்ததிந்தமாதத்துவவாசம் (சி)

சரணங்கள்.

1 ஆணவப்பாழினையறுத்திடும்விசேஷ
மாவாணகோசமகற்றுமுத்தேசந்
தோணுத்தோற்றமாய்த்தோய்க்குமப்பியாசந்
துய்யமாநித்தியமாய்ஜொலிக்குமுல்லாஸம். (சி)

2 பொறிபுலனுதியைப்போக்கும்ஸரசம்
புனிதபுருஷார்த்தந்தாக்கும்நிமிஷங்
குறிகுணமலமறக்கூட்டிடுமமிசங்
கோலாகலமதாய்க்கொளிக்கும்நிர்வேஷம். (சி)

3 நேசாநுபூதியாய்நிறுத்தும்நிற்பாசம்
நிர்விஷயானந்தந்தாக்கும்நிமிஷந்
தோஷாகிதமதாய்த்துலக்குநிர்நாசந்
தூயநிர்விகற்பஞ்சூட்டிடுஞ்ஸகஜம். (சி)

4 காலாதீதமதாய்க்கலப்பிக்கும்நேசங்
களங்கரகிதமாய்க்கமளுமவ்வாசத்
தேகாதிரகிதமாயாக்கும்நிற்துவேஷஞ்
சீதளகோமளதிவ்யமாஸேஷம். (சி)

5 மௌனமந்திரம்மகிழ்ந்தமாரகஸியம்
மாற்றறப்பதிந்துற்றமாகிற்கிரிசியங்
கனவெனுமாயையைக்கறந்திடுங்களஞ்சியங்
கைவல்யமாக்கித்தான்கலக்கும்லக்ஷியம் (சி)

சிவோஹம்.

## துவிதமறுத்தல்.

இராகம்-கல்யாணி தாளம் ஏகம்

பல்லவி.

சிலைமலைமண்களைத்தியானித்திருந்தாலுன்
சித்தம்விரியுமதைப்பறிப்பறிமா
சித்தங்குவிந்திருக்குஞ்சிற்பரஞ்ஜோதியைச்
சிந்தித்திருப்பதேநெறிநெறி (சி) 1

மாயாப்பிரபஞ்சத்தின்வழிதனிற்சென்றாலது
மனமாய்விரியுமதைப்பறிப்பறிமாயா
மனமறவொழிக்குமௌனமாஜோதியை
மருவிக்கொண்டிருப்பதேநெறிநெறி. (சி) 2

குகைதீர்த்தபர்வதங்கூடி [illegible]
குன்றுமறிவுமதைப்பறிபறிமா
குன்றாக்குறியாக்கோதறுஞ்ஜோதியைக்
குலாவிக்கொண்டிருப்பதேநெறிநெறி (சி) 3

ஒருநாட்டிருநாள்திதிவிரதங்களிருந்தாலுன்
னுத்திவுலையுமதைப்பறிபறிவுன்
னுத்தியாவொழிக்குமொருதனிஜோதியை
யொட்டிச்சுகிப்பதேநெறிநெறி. (சி) 4



ஜாதிபேதங்களுற்றுச்சங்கித்துமிருந்தால்மா
சத்தியமறையுமதைப்பறிபறிஉன்
சத்தியமதாயிருக்குஞ்சாஸ்வதஜோதியை
சந்தித்துத்தனிப்பதேநெறிநெறி (சி) 5

ஆண்பெண்ணலியென்றாரோபங்கொண்டால்மா
வபேதமனுகாததைப்பறிபறி அந்த
வாரோபமறவோங்குமபேதமாஜோதியை
வணிந்துகொளிப்பதேநெறிநெறி (சி) 6

போக்குவரத்துற்றுற்றுபுதுமைகள்புரிந்தால்மா
பூரணம்பொருந்தாததைப்பறிபறி அந்த
போக்குவரத்தறும்பூரணஜோதியைப்
புணர்ந்துகொளிப்பதேநெறிநெறி. (சி) 7

சந்யாஸமெனப்பூண்டுஞ்சநபதம்போனால்மாயா
சஞ்சலம்புணருமதைப்பறிபறிமா
சஞ்சலரகிதமஹாததாகாரஜோதியைத்
தழுவிக்கொண்டிருப்பதேநெறிநெறி. (சி) 8

சிவோஹம்.

## தேசிகநிர்ணயம்.

இராகம்—ஆரபி—ரூபகதாளம்.

என்னுள்ளமாயிருக்குமேகநாயகன்ஸகியவ
னெங்கிருப்பனிட்டுவாங்கடி. யடி

அநுபல்லவி.

கண்ணுதலென்வள்ளலடிகருணைமுகில்பாரடி
யென்னரியவின்பாதீதனிருப்பனென்றோடல்லோ

சரணங்கள்.

1 அணுவும்நானென்றிருப்போனழகுபூரணமுள்ளோன்
றணுகரணுதியில்லோன்சமரசபூர்த்தியுள்ளோன்
கமன்ஸ்திதியாயுள்ளோன்காலாதீதமானவல்லோன்.
றபனரகிதமுள்ளோன்சாம்பிராஜ்யசத்தன்கொலோ (எ)

2 போதமாநிர்ணயமுள்ளோன்புனிதகேவலநல்லோன்
வேதங்கடந்தவல்லோன்விசேஷமேதாவிநல்லோன்
சாதனுசாத்தியமுள்ளோன்ஸந்ததவிறுமாப்பனல்லோ
கோதறுமாமௌனனல்லோகூடிக்குலாவுகொலோ. (எ)

3 கொள்ளாவிரதனல்லோகோமளசொஸ்தவல்லோன்
விள்ளாவிதேகனல்லோவியம்பாமமதையுள்ளளோன்.
பல்லுயிராயானல்லோபதையாப்பருவனல்லோன்
நல்லருட்பதவியல்லோஞானச்செருக்கன்கொலோ. (எ)

4 பந்தமோக்ஷரகிதனல்லோபரமசுகிர்தமுள்ளோன்
ஸந்ததசீமர்த்தனல்லோசதாலந்தநித்யவல்லோன்
சொந்தமன்னியமல்லோன்சுகாதீதசூஸ்திரனல்லோ
அந்தவிதமாயல்லோயழைத்தாலமைவன்கொலோ.

5 அசுத்தவாணவமில்லோனகண்டவாணவமுள்ளோன்
பசுத்வமாபண்மையுள்ளோன்பரமசுகிர்தவல்லோன்
நசிப்புஞ்சனிப்புமல்லோன்ஞானரஸமாயுள்ளோன்
புசிப்பும்பசியுமல்லோன்புன்மைக்கடங்கானல்லோ. (எ)

6 வாசாமகோசரனலோவழுத்தாப்போாண்மையுளோன்
நேசாநுபூதியாயுள்ளோன்நிர்ஜகநிஜந்தானல்லோ
கோசாதிக்குமப்பாலுளோன்குறிக்காத்திவ்யமல்லோ
வேஷாதிய்றியானல்லோன்மேவிடுகொஞ்சுவன்கொ
[லோ.



7 சுகந்தசொரூபனல்லோசுத்தநிர்விகாரமுள்ளோ
னுகந்தவுரிமையுள்ளோனுயர்வுதாழ்வுமில்லோன்
றகுந்ததகைமையுளோன்றதாகாரநேர்மையல்லோ.
மிகுந்தகளிப்பாயுள்ளோன்விசேஷம்விரும்புகொலோ.

8 அபாரப்புணர்வாயுள்ளோனபேதவசங்கவல்லோ
னிவாததீபம்போலுள்ளோனிராவரணநியமனல்லோ
சுகாரம்பசுபாவமுள்ளோன்சூதானமாசுத்தவல்லோ
னிராகாரநேமனல்லோநீங்காப்புணருகொலோ. (எ)

சிவோஹம்.

## நிர்ச்சினத்தட்டான் நிராவரணம்புணர்த்தல்.

என்மதிமயிலேபாருங்கடி திவ்ய 1
மெங்களூர்தட்டான்செய்தநகை.

தட்டற்றதட்டானெனக்காகத் தனி 2
தத்துவத்திற்செய்தநிராவரணம்

வரம்புமற்றமாதட்டானடி விவன் 3
வகுப்பறவகுத்தநகைபாரடி.

மெய்ஞ்ஞானமென்கின்றநீரிலிட்டுச் நித்ய 4
மேதாவிநன்றாய்ப்பழுக்கச்சுட்டான்.

சொருசதாய்நகாசுசெய்தானடி யது 5
சூஸ்திரசொஸ்தமாய்ச்சொக்குதடி.

பூட்டிப்பார்க்கவும்பொருந்துதடி யது 6
பூரணவழகுங்கொஞ்சுதடி.

மூக்கற்றமூக்குக்கும்நத்துச்செய்தா ன்து 7.
முன்னிலைரகிதமாஜோதிக்கற்பார்.

காதற்றகாதிற்கோரோலைசெய்தா     னது
கண்டமற்றமாவயிரமடி     8

நெற்றிலாநெற்றிக்கிசுட்டிசெய்தா     னது
நேர்த்திநேர்த்திநிர்விகற்பமடி.     9

பாவனாதீதமெனக்கடியோ     வம்மாள்
பதைபாப்பவுன்மாலைபண்ணினாண்டி.     10

கையற்றகைக்கிவளையல்செய்தா     னது
கைவல்யமாசித்துத்தங்கமடி.     11

ஒட்டியாணமொன்றுசெய்தானடி     யது
வொப்புவமைக்கடங்காதானதடி     12

காலற்றகாலிற்குத்தண்டைசெய்தா     னது
காலாகிமாய்ப்பூண்டதடி.     13

ஞானரத்னத்தளுக்குச்செய்தா     னது
நன்றாயெனக்குத்தான்சேருதடி.     14

ஜடைக்குசமொன்றுசெய்தானடி     யது
சத்துமயம்தாய்த்தாக்குதடி     15

சொரூபமுத்துப்பதக்கஞ்செய்தா     னது
சுதந்திரமாய்ப்பூண்டுகொண்டதடி.     16

கோசரகிதச்சொலுசுசெய்தா     னது
கோலாகலமதாய்மின்னுதடி.     17

ஸகஜபோதச்சரடுசெய்தா     னது
ஸந்ததமாகவேசேர்ந்ததடி.     18

நிர்க்குணத்தங்கமுருக்கியடி     மா
நிர்மலநிலாக்கோடொன்றுசெய்தான்.     19



களங்கரகிதமாவயிரத்திலே     மா
கணையாழியுமொன்றுஞ்செய்தானடி     20

ஜடையில்லையொன்றுமெனக்குச்செய்தா     னது
சஞ்சலரகிதமாய்ச்சார்ந்ததடி.     21

சுகந்தநெற்றிநிலாமணியா     மித்தைச்
சூஸ்திரவஸ்துவிலொட்டினாண்டி.     22

கம்மல்ஜிமிக்கிமுருகுமாட்டலடி     மாயை
கடந்தமௌனசந்திரக்கொழுந்து.     23

கல்லட்டிகைசந்திர ஹாரமடி     இத்தை
கன்மரகிதமாய்ஜோடித்தாண்டி.     24

சரசச்சரப்பளியொன்றுசெய்தா     னது
சமரசதுரியமாய்ச்சார்ந்ததடி.     25

வங்கிநாகொத்துக்கடயஞ்செய்தா     னது
வாசாமகோசரமானதடி.     26

காப்புப்பாட்டில்தோடாச்செய்தா     னது
கணக்கிற்கடங்காமாமாற்றீதடி.     27

பாதசரம்ஞ்சில்மெட்டிலடி     பிரம்மமா
பாடங்காலாழிபீலியிட்டான்     28

ஏகசொரூபமாதங்கத்தாலன்றோ     தா
னித்தியாதிநகையுஞ்செய்தானடி     29

தேசிகமென்றமாசொரூபத்தாட்டானிங்ஙன்.
செய்தமாசத்யநகையீதடி.     30

சுத்தசொரூபதங்கத்தைத்தானீடி     மா
சுயம்புநகையாய்ச்செய்தானடி.     31

இத்தியாதிபூஷணமுற்றையு மிங்ஙனை
மெனக்கலங்காரந்தானாய்ச்செய்தான். 32

நிராசையென்றஸ்தலத்திலடி விது
நீண்டுவிளைந்தமாதங்கமடி. 33

கண்ணற்றகண்ணுக்குமையுமிட்டான் மா
களங்கரகிதமாய்ப்பொட்டுமிட்டான் 34

நிர்விஷயமாபட்டுமிட்டா ணதை
நீங்காதிறுக்கியுங்கட்டிவிட்டான். 35

ஐம்பொன்னுமற்றமாதங்கமடி பா
ரவன்செய்யத்தானதாயானதடி. 36

என்மனமறப்புடம்போட்டா னது
ஏகாந்தத்தங்கமாய்மிஞ்சுத்தடி. 37

என்றோழனாமாதட்டானடி இவ
னென்னைச்செய்தநியாயத்தைக்கேள். 38

ஓதாமலென்னுமோவோதினாண்டி தங்க
மொட்டிவிரண்டறயேகமாச்சு. 39

மதிப்புக்கடங்காமாமௌனத்தட்டா னிவன்
மன்னனுமாதுமலியுமல்லன். 40

தந்தைதாயற்றமாதட்டாப்பைய லிவ்வன்
தகைமையென்றுபெரிதுபாரும். 41

வாக்குமனமறவாய்த்ததட்டா னிவன்
வகுப்படாப்பிரம்மகூஸ்திரண்டி 42

தட்டானைநம்பிப்போய்த்தாலிபண்ணத் தட்டான்
றன்னைத்தானாகவேயொட்டிவிட்டான். 43



தங்கந்தங்கமாயிருக்குதடி தட்டான்
றரித்தநகையோபாரளவில்லடி. 44

நினைத்துநினைத்துப்பார்க்கும்போது தட்டான்
நீட்டினான்கம்பிநீங்கியடி 45

நினைப்புமறப்பற்றுநின்றபோது தட்டா
னேசித்துமென்னோடொட்டினாண்டி. 46

நிரவயவமாய்த்தன்னைக்கண்டா லவன்
நேர்த்திநகைபண்ணிப்பூட்டுவாண்டி. 47

வேண்டுமானால்வாங்கிப்பூணுங்கடி இதோ
விசைந்திடுந்தானதாய்க்காணுங்கடி 48

விருப்பமுண்டானால்வாங்குங்கடி இத்தை
மினிக்கிடத்தானதாய்க்காணுமடி. 49

களங்கமுறும்பொல்லாநெஞ்சருக்கு மிது
கலக்கமிகவுமீயுமடி. 50

கள்ளமற்றமாவல்லபர்க்குப் பார்
கலந்துகூடிச்சுகிப்பனடி 51

எனக்கிசைந்தமாவின்பத்தட்டா னிவ
னென்னைப்பிரிந்துமிருக்கமாட்டான். 52

நாசமற்றமாதட்டாப்பைய லென்னை
நாசரகிதமாய்ப்பண்ணிட்டாண்டி. 53

இந்தமமதைதானாகுமோடி தட்டா
னிறுமாப்புத்தானென்னபாருங்கடி. 54

காலத்திற்குமெட்டாப்போனானடி தட்டான்
கர்மத்திற்குமெட்டாதானடி. 55

கட்டித்தழுவினான்முத்தமிட்டா னென்னை
காலாதீதமதாய்ப்பண்ணிட்டாண்டி. 56

என்னாபோசொன்னாலும்பொல்லாப்படி அவ
னிருந்தயிருப்பிலிசைந்திடுவானடி 57

போதபூரணப்புனிதத்தட்டா னிவன்
பொய்க்கிபொருந்தாமாவல்லபண்டி. 58

ஸகஜமாயென்னோடுந்தழுவினாண்டி யிவன்
றத்துவமாததாகாரமென்னோபோடி. 59

சுத்தசொரூபமாஜோதித்தட்டா னிவனைச்
சூஸ்திரமாய்க்கூடிவாழுங்கடி. 60

இரண்டாய்நாடித்தேடும்போதா மிவ
னென்னோடுமிணங்கமாட்டேனென்றான். 61

இரண்டாறுமியற்கையானேனடி யிவ
னென்னைப்புணர்ந்துமிரேசித்தாண்டி. 62

நிர்விகற்பமாய்நின்றுவிட்டாற் றட்டா
னேசித்துத்தன்னைத்தான்பூஜிப்பண்டி. 63

ஊக்கமுற்றுப்பொருந்திவிட்டால் நம்
மொட்டிற்சிக்கிப்பட்டுக்கொள்வன். 64

ஒன்றும்நிகரில்லாதுயர்ந்ததட்டா னிவ
னுறுதிமஹாமாவபாரம்போடி 65

உடல்பொருளாவியைவாங்கிக்கொண்டான் றட்டா
னொருமையாகவேயுறைந்திட்டாண்டி. 66



கண்ணோடுகண்ணுமொத்தினாண்டி தட்டான் ;
கண்டாகிதமாய்ப்பூண்டிட்டாண்டி. 67

இன்னதென்றுமியம்பக்கூடாதடி தன்
னியல்புவிங்ஙனங்காணுங்கடி. 68

சிவோஹம்

## துவிசர்.

### இரட்டைக்குறள்வெண்செந்துறை.

முத்திக்குகந்தமுனிவோராகில்
முப்பாழ்துறந்தமாமுத்தராகிற்
றித்திக்குந்தெள்ளமிர்தவாராகிற்
றீர்க்கதுவிசரிவராங்காணே. 1

ஆணவாதிகளுமன்றாராகி
லருளேவடிவமாயானாராகிற்
காணப்படாதாய்க்கலந்தாராகிற்
கனிக்குந்துவிசரிவராங்காணே. 2

அறிவிட்டறியாமையற்றாராகி
லறிவுமயமாயமர்ந்தாராகிற்
பொறிபுலனாதிபொருந்தாராகிற்
புகலுந்துவிசரிவராங்காணே. 3

குலபேதமற்றுக்கொளிப்பாராகிற்
குணாதீதமுற்றுக்களிப்பாராகில்
நலந்தீங்கற்றுச்சொலிப்பாராகில்
நவிலுந்துவிசரிவராங்காணே. 4

அங்கந்துறந்தவழகராகி
லகண்டசுபாவமுமானாராகிற்
கங்குல்பகலற்றிருப்பாராகிற்
கடந்ததுவிசரிவராங்காணே. 5

சத்தங்கறந்தசமர்த்தராகிற்
சத்துமயமாய்த்தனித்தாராகிற்
சித்தஞ்சலியாச்சிறந்தாராகிற்
செப்புந்துவிசரிவராங்காணே. 6

அச்சமொன்றின்றிவமர்ந்தாராகி
லரியபிரம்மசித்திவடைந்தாராகிற்
பக்ஷாபக்ஷமற்றுப்பதிந்தாராகிற்
பகருந்துவிசரிவராங்காணே 7

நாசதோஷம்பற்றநண்பாராகில்
நாணவெட்கமறநட்டாராகில்
வேஷங்களொன்றின்றிருந்தாராகில்
விளம்புந்துவிசரிவராங்காணே. 8

கர்ம்மக்கிரியைகளைந்தாராகிற்
கருணைமயமாய்க்கலந்தாராகிற்
பிரம்மஞானமுற்றபெரியோராகிற்
பேசுந்துவிசரிவராங்காணே. 9

அஷ்டசித்தியுந்துடைத்தாராகி
லபேதசித்தியுமடைந்தாராகிற்
துஷ்டவுபாதிதுறந்தாராகிற்
சொல்லுந்துவிசரிவராங்காணே. 10



முற்றும்பற்றற்றுமுடிந்தாராகில்
முழக்குந்திரிபுடிமுனிந்தாராகிற்
சற்றுஞ்சலியாத்தரித்தாராகிற்
சாற்றுந்துவிசரிவராங்காணே. 11

எவ்வுயிருந்தானாயிசைந்தாராகி
லிருள்கறந்தெல்லாமாயானாராகிற்
கவ்வுஞ்சுகதுக்கங்கடந்தாராகிற்
கருதுந்துவிசரிவராங்காணே. 12

கொள்ளரவிரதமுங்கொள்வாராகிற்
கொள்ளும்விரதங்குலைப்பாராகில்
விள்ளாமாமர்ம்மமிசைந்தாராகில்
விளம்புந்துவிசரிவராங்காணே. 13

அண்டத்தனுவதாய்ப்பார்ப்பாராகி
லனுவையண்டமதாய்க்கோப்பாராகிற்
பிண்டமண்டமெலாமாவாராகிற்
பேசுந்துவிசரிவராங்காணே. 14

எண்ணென்கும்நான்குங்கடந்தாராகி
லெண்ணவிடத்திலிருப்பாராகிற்
கண்காணக்கானுங்கருத்தோராகிற்
கடந்ததுவிசரிவராங்காணே. 15

பொய்யாமறைமுடிபூண்டாராகிற்
புருஷார்த்தமயமாய்ப்புணர்ந்தாராகிற்
கொய்யாமலர்ஹாரங்கோத்தாராகிற்
குறிக்குந்துவிசரிவராங்காணே. 16

மாட்சிமைபூண்டமாமௌனராகில்
மாசற்றமஹத்வமமைந்தாராகிற்
சூட்சாதிசூட்சுமந்தொட்டாராகிற்
சுபர்வதுவிசரிவராங்காணே. 17

அத்துவைதசொஸ்தமுமானாராகி
லாண்பெண்ணலியற்றிருப்பாராகில்
வஸ்துமயமுற்றுவாழ்வாராகில்
வாழ்த்துந்துவிசரிவராங்காணே. 18

அறியமாபூரணமானாராகி
லஞ்ஞானந்தீண்டாவமலராகிற்
றுரியாதீதந்தொட்டுறைவராகிற்
றெனிக்குதுவிசரிவராங்காணே. 19

(கருத்து) மேலருளிச்செய்திராநின்ற துவிசரென்னும் இலக்கணமியாதென்றால் துவிசரென்னப்படும் இருபிறப்பாளர் உள்ளத்துறவோர்கள் என்றிடத்தகும். அது எப்படியெனின் தாயின் வயிற்றிற்கருப் பந்தரித்துப்பின்புஜனித்து வளர்ந்து உரிமையாகிய தன்னைமறந்து முப்பாழைப்பொருளாகக்கொண்டு இருளேவடிவமாய் அஞ்ஞானத்தில் அழுந்தி இருக்குங்கால் அது ஒருபிறப்பாம் அதுநிற்க விவேகமுற்று சுருதி குருவுத்தி சுவானு பவத்தாற்றன்னைத் தானறிந்து ஜீவோபாதியறத்துறந்து தனித்தத்துவமாய் மிஞ்சி பிரம்ம நிஷ்டாநுபூதி கைவல்ய மெய்ஞ்ஞானியாய் விளங்குங்கால் அதுஇரண்டாவது பிறப்பாம் இது சுருதியின் சம்மதமுறைமை என்பதாம் இருபிறப்பாளர் துவிசர் என்றபதம் துறவோர்களுக்கே பொருத்தமென்றுணர்க.

சிவோஹம்.



# வாழ்வு.

## இரட்டைக்குறள் வெண்செந்துறை.

தன்னுள்ளேயெல்லாந்தரிக்குமாகிற்
றானேவுள்ளும்புறம்பாகுமாகிற்
பின்முன்னடுவற்றிருக்குமாகிற்
பேசாமுடிவாழ்வுபெற்றிட்டதே. 1

உள்ளந்துறந்துமொழியுமாகி
யுள்ளதுள்ளபடியாகுமாகிற்
றள்ளாதுகொள்ளாதுமாகுமாகிற்
றனிமெய்வாழ்விங்ஙன்றங்கிட்டதே. 2

சுத்தாசுத்தமுங்கறக்குமாகிற்
றுவிதபீதியற்றிறக்குமாகிற்
சித்தாய்த்தெளிந்துசிறக்குமாகிற்
றீர்க்கமென்வாழ்விங்ஙன்சித்தியதே 3

போக்குவரத்தற்றுப்பூணுமாகிற்
பூரணந்தானதாய்க்காணுமாகிற்
றூக்குஞ்சதானந்தமூணுமாகிற்
றானேமுடிந்ததுசத்யவாழ்வே. 4

உன்னுமறைப்பற்றொழியுமாகி
யொன்றிரண்டின்றிக்களிக்குமாகில்
நன்னலப்பொருளாய்நல்குமாகிற்
நசியாமாவாழ்விங்ஙனட்டிட்டதே 5

சின்னாபின்னமற்றிருக்குமாகிற்
சின்மயந்தானாய்ச்சிறக்குமாகிற்

பண்ணுந்துடையாதுமாகுமாகிற்
பதையாமாவாழ்வுபதிந்திட்டதே 6

அறியாமுப்பாழற்றிருக்குமாகி
லரியதுரியம்பெற்றிடுமாகிற்
குறிகுணமலங்கெட்டிருக்குமாகிற்
குன்றாப்பெருவாழ்வுகூடிட்டதே. 7

பாவனையொன்றின்றிருக்குமாகிற்
பாவனாதீதம்பற்றிடுமாகில்
வேதனையொட்டாவிளங்குமாகில்
விசேஷமாவாழ்வுவிளைந்திட்டதே. 8

காலங்கடந்துற்றிருக்குமாகிற்
கர்ம்மசூனியம்பெற்றிடுமாகிற்
கோலங்களொன்றின்றிக்கூடுமாகிற்
குறிக்காச்சுயவாழ்வுகொண்டிட்டதே. 9

ஸந்ததத்தாழாமைதங்குமாகிற்
றதாகாரந்தானதாய்த்தாக்குமாகிற்
சுந்தரசூஸ்திரஞ்சூழுமாகிற்
சுதந்திரவாழ்விங்ஙன்றொட்டிட்டதே. 10

சிவோஹம்.

## குருசிஷ்யர் குரவன்குரத்தி.

### இரட்டைக்குறள் வெண் செந்துறை.

மௌனவமிர்துண்டுமறைப்பறவிருந்த
மாமஹாமதிமந்திரமான்தாரடாகுரவா
மந்தகுணமலமாதிகளறவறிவிட்டறியாமையகற்றிய
மௌனவலங்காரனென்றறியாயோடிகுரத்தி. 1



பொல்லாபொறிபுலன்கரணங்களுக்கப்பாற்
பொருந்திநிறைந்திருந்ததாரடாகுரவா
கொள்ளாவிரதங்கொண்டநிர்விகற்பசந்தத
குறிரகிதனென்றறியாயோடிகுரத்தி. 2

தேகோகசிதடாறியாதிருந்திலங்குகின்ற
தீரமாசித்தானதாரடாகுரவா
கேசதிலாமாசிவோஹங்கொஞ்சுஞ்சிதானந்த
கோமளகோமானென்றறியாயோடிகுரத்தி. 3

மறைகள்தேடிவறியாவரியமதுரங்கநிர்விஷய
மன்னனைமாபெரும்பயனாரடாகுரவா
மானாபிமானரகிதமாமஹாஜிதேந்திரிய
மங்களமாசின்மயனென்றறியாயோடிகுரத்தி. 4

உள்ளும்புறம்புமொருதனியாயோங்கியதா
யொருமித்தொழுகியதாரடாகுரவா
விள்ளுதற்கெட்டிடாமெய்வித்தகவித்துமா
விதேகவிமலனென்றறியாயோடிகுரத்தி. 5

அல்லும்பகலுமற்றவபேதசுயசொரூபமா
வதீதவசங்கவத்துவைதபூரணனாரடாகுரவா
சொல்லும்பொருளுமபேதமாய்த்துலங்கியமா
ஜோதிப்பிரகாசனென்றறியாயோடிகுரத்தி. 6

வரத்துடன்போக்குமற்றுமருவவேறுபொருளிலா
வரம்புகெட்டமாவல்லனாரடாகுரவா
வைத்தெடுக்கப்படாதுற்றமாமஹாசுகந்தவஸ்
தப்பனென்றறியாயோடிகுரத்தி. 7

உழக்கிற்கிழக்குமேற்குதெற்குவடக்குரைக்குங்கற்பனைக்
கொடுங்காவுயர்வுளானாரடாகுரவா

விலக்கமற்றிருந்திலங்கும்மாவிரகிதமாகிய
வீரவிமலனென்றறியாயோடிகுரத்தி. 8

சுத்தாசுத்தமற்றதுய்யதூயநிரஞ்சனமாய்
ஜொலிஜொலிக்குஞ்சுகிர்தனாடாகுரவா
சுட்டுதலுமற்றிருந்திலங்கியமாமெய்ஞ்ஞான
சூஸ்திரனென்றறியாயோடிகுரத்தி. 9

வாசாங்கிரியர்க்கணுடாவமர்ந்திருந்துள
வல்லபமாசுதந்திரசுகிர்தனாடாகுரவா
வேஷாதிகள்துறந்துளவிஞ்ஞானதுய்யசுத்த
வீடுளானென்றறியாயோடிகுரத்தி. 10

சிவோஹம்.

## தேசிகர் திருவருள் பூர்த்தித்தபுதுமை.

இராகம்—செஞ்சுருட்டி—தேசிகம்.

வீடொன்றுகட்டினான்பையலாரிந்த
விசேஷமென்சொல்வேன்றையலார். 1

தூண்டாத்தீபமிட்டான்பையலாரிவன்
றுவிதரகிதமதாய்த்தையலார். 2

ஓமென்றோதினான்பையலாரிது
வுன்மனிவாழென்றான்றையலார் 3

கமனங்கமனமென்றான்டையலாரிப்போ.
கர்ம்மசூனியமதாய்த்தையலார். 4

நிர்ணயமென்றான்காண்பையலாரந்த
நிமிஷம்பூணர்ந்ததேன்காண்டையலார். 5



சத்தியம்நாமென்றான்பையலாரிவன்
சாமர்த்தியமாசூஸ்திரந்தையலார். 6

சத்தங்கெடுத்தான்காண்பையலாரிந்த
தயாளுமாவியல்புபார்தையலார். 7

எனக்குத்தகுந்தமாபையலாரிவ
னென்னைக்கூடிரேசித்தான்றையலார். 8

மருவவேறுபொருளில்லாப்பையலாரென்னை
மதிப்பறவழகிட்டான்றையலார். 9

உயர்வுதாழ்வறச்செய்தான்பையலாரிவ
னொழுக்கமேமாதொண்ணுத்தையலார். 10

பய்யப்பய்யவந்தானென்னோபையலாரிவன்
பண்டிதம்புருஷார்த்தமென்னோதையலார் 11

நுட்பமாரகஸியத்தான்பையலாரிவ
னுண்ணியபோராண்மைபாருந்தையலார். 12

நிகரொன்றுமில்லோமென்றான்பையலாரிவ
னியாயம்நிர்விகற்பந்தான்றையலார். 13

பிரியாப்பெருந்தகைமைபூண்டான்பையலாரிவன்
பெருமைதானென்னோபுதுமைதையலார். 14

அச்சயாப்பூரணமென்றறைந்தான்பையலாரிவ
னற்புதவபாரமென்னென்னோதையலார். 15

ததாகாரமென்றணைத்தான்பையலாரிவன்
றத்துவமெனக்கிசைந்தான்றையலார். 16

ஸந்ததிபாக்கியமென்றான்பையலாரிவன்
சமரசமென்றோழன்காண்தையலார். 17

நாசாதிரகிதம்நாமென்றான்பையலாரிவ
னன்குநவிலக்கூடாதென்றேனைதையலார். 18

நிராசைப்பொடியிட்டான்காண்பையலாரிவ
னேசித்துத்தாழாமைதாக்கினான்றையலார். 19

இனிதினிதுநாமின்பமென்றான்பையலாரிவ
னியர்க்கைபாரின்பாதீதமென்றேனைதையலார். 20

கமழுஞ்சொஸ்தசுகமென்றான்பையலாரிவன்
காலாதீதசுயம்பென்றேனைதையலார் 21

நீங்காபோதையூட்டிட்டான்பையலாரிப்போ
நிச்சயம்நாம்பாரென்றான்றையலார் 22

பதையாப்பண்புபாலித்தான்பையலாரிங்ஙன்
பாவாதீதம்பகரக்கூடாதையலார் 23

வரம்புகேட்டாய்பாரென்றான்பையலாரிவன்
வற்புறுத்திவாழ்த்திவைத்தான்றையலார். . 24

குறிரகிதமென்றெடுத்தான்பையலாரிவன்
கோலாகலமாய்க்கொஞ்சினான்றையலார் 25

தானேதானேயென்றாடினான்பையலாரிவன்
றாந்தானெனத்தங்கித்தனித்தான்றையலார். 26

உரியமாபெருஞ்செருக்கன்பையலாரிவ
னேதினைடங்கானென்றேனைதையலார். 27

என்னைபாரிவன்மமதைப்பையலாரித்தை
யிம்மென்றுகேட்கவிப்புதுமைதையலார். 28

இவன்செயலிதுதானென்றேனைபையலாரிவ
னினியபெருமையிசைர்தான்றையலார். 29



மெல்லமெல்லமேவினான்காண்பையலாரென்னை
மெய்ஞ்ஞானமாய்விளக்கிக்களித்தான்றையலார். 30

உல்லாசகோமாளனென்றேனைபையலாரிவ
னொழுக்கமென்கலவிதான்றையலார். 31

சம்பூரணம்நாமென்றான்பையலாரிவன்
ஸகஜமிதுதானென்றேனைதையலார் 32

அறையாமொழியாலறைந்தான்பையலாரிங்ங
னதீதமதுதானென்றேனைதையலார். 33

மாமௌனமதாய்மகிழ்ந்தான்பையலாரிவன்
மஹாபிரம்மரகஸ்யமென்றேனைதையலார். 34

சிவோஹம்.

## போதவியல்பு.

இராகம்—சுருட்டி புன்னாகவராளி ஆதிதாளம்.

என்றிருக்கோவிலானவருட்போதமே
யெனககிங்ஙனின்பமருள்வாய்
நன்னருள்முத்தியுன்னியல்புவருட்போதமே
நானேநானேயுனக்குத்தகுந்தகுங்கொள். (எ) 1

பண்பொடெனையாளத்தானருட்போதமே
பதிவாய்ப்பதிந்தெழுந்தாய்கே
ளன்போடெனைநீநானெனவருட்போதமே
யனித்தியங்கெடுத்தாட்கொண்டாயரியநீ (எ) 2

உன்மாடிதுரியாதீதங்காணருட்போதமே
வுரியநீமாமௌனமன்றோ
நன்குறுமெனக்கிடமிதுதானருட்போதமே
நட்டிடத்தகுந்தகும்நாண்மிகநன்குகொள். (எ) 3

சுட்டாஸ்தலந்தன்னிருப்புவருட்போதமே
சூதானசொஸ்தமென்வாசங்
கட்டிற்குமெட்டாவபாரம்நீவருட்போதமே
கருத்திற்கிசைந்தேன்கலந்தருள்புரிவாய். (எ) 4

பொய்யாப்பூரணம்நீர்கொலோவருட்போதமே
போதமாபொருத்தம்நான்றானல்லோ
மெய்ஞ்ஞானவிறுமாப்புநீரல்லவோவருட்போதமே
மேகிடநானுரியோனாகுந்தான்மெச்சிடும். (எ) 5

சுத்தநிர்மலம்நீதான்கொலோவருட்போதமே
சுயாதீனமெனக்குத்தகுந்தானல்லோ
சித்தஞ்சலியாச்சின்மயம்நீரல்லோவருட்போதமே
சிவஞானமகிழ்வுன்னன்குநானல்லோ (எ, 6

தானானபெருந்தகைமைதானானநீவருட்போதமே
தத்துவம்நானதற்குத்தகுந்தோன்
பூணாப்பூணும்போதமணிஹாரம்நீவருட்போதமே
பூணும்பொருத்தமெனக்கன்றோபூண்டதுகாண். (எ) 7

நிகரில்லாநிர்ணயம்நீர்தானன்றோவருட்போதமே
நீங்காநானுனைப்புணர்ந்தோன்
றுகிரிகைபோன்றசைவிறந்தாயருட்போதமே
துய்யமதாயான்சூடிடசுதந்திரங்காண் (எ) 8

அதீதமயவமைவுநீர்தானல்லவோவருட்போதமே
யதற்குப்பதிவுநான்றான்கொலோ
விதியாதிரகிதம்நீர்தானல்லவோவருட்போதமே
விலகிடாதமைந்தவுன்விகிர்தம்நான்கொலோ. (எ) 9

என்னபோராண்மைநீர்தானல்லவோவருட்போதமே
யெனக்குமிகவிணக்கமிதுதானல்லோ



தன்னந்தனிப்பெருமைதான்றானல்லோவருட்போதமே
தரித்துறுஞ்சௌபாக்யந்தகுந்தகுமெனக்கல்லோ (எ)

தன்னோடெனையிசைத்தானநீவருட்போதமே
ததாகாரந்தானானதென்கொலோ
சின்னாபின்னரகிதசீர்மைநீரல்லோவருட்போதமே
சிற்சொரூபஜிதேந்திரியம்நாநாம்நான்கொலோ (எ) 11

வாசாமகோசரமதுநீர்தானல்லவோவருட்போதமே
வாய்த்தமௌனமணிநானேர்மைகொலோ
நேசாநுபூதிவிதேகம்நீர்தானல்லவோவருட்போதமே
நிர்ச்சின்னநிர்விகற்பநித்யம்நான்கொலோ (எ) 12

புன்மையறியாப்புதுமைநீரல்லோவருட்போதமே
புணர்ந்துறும்புருஷார்த்தபுனிதம்நான்கொலோ
யுண்மையுனக்கழகுன்னதந்தானல்லோவருட்போதமே
யுறுதிநானதற்குமலங்காரமென்கொலோ (எ) 13

புகன்றிடவுமெட்டாப்புனிதம்நீர்தானருட்போதமே
பொய்யறப்பொருந்துமின்பம்நானினிதுகொலோ
அகன்றிடாவபரோக்ஷமதுதானல்லோவருட்போதமே
யதற்குத்தகும்பிரீதிவமைவுநான்கொலோ. (எ) 14

நிரதிசயானந்தம்நீர்தானல்லோவருட்போதமே
நிஷ்களங்கானந்தாதீதமதுநான்கொலோ
திரஸ்திதிமாரகஸ்யம்பார்தானல்லோவருட்போதமே
தீர்க்கமாபரஸ்பரதிவ்யமிதுநான்கொலோ (எ) 15

ஜெயஞ்ஜெயஞ்ஜெயஞ்ஜெயஞ்ஜெயமிதுவருட்போதமே
தேஜஸொழுகியமாவமிர்தம்நான்கொலோ.
சுயஞ்சுயஞ்சுயஞ்சுயஞ்சுயமாவருட்போதமே
சொஸ்தசுகாதீதம்நம்நாமியல்புகொலோ. (எ) 16

சிவோஹம்.

## ஊர்.

### இரட்டைக்குறள் வெண்செந்துறை.

அறியநான்மறைக்குமடங்காவூரெங்களூ
ரரூபவபேதமாயானவூரெங்களூர்
குறிகுணரகிதமாய்க்கொண்டவூரெங்களூர்
கோசங்கடந்துகொளிக்குமூரெங்களூர். 1

துய்யநிஷ்களங்கமாய்த்தோய்த்தவூரெங்களூர்.
சோகாதிமோகந்துறந்தவூரெங்களூ
ரையமொன்றில்லாதமர்ந்தவூரெங்களூ
ரநித்தியரகிதமாயானவூரெங்களூர். 2

பேசாப்பெருமைபிடித்தவூரெங்களூர்
பேராண்மைபூண்டபெரியவூரெங்களூர்
வாசாங்கிரியாக்கடங்காவூரெங்களூர்
வாசாமகோசரமானவூரெங்களூர் 3

போதமயமாய்ப்பொருந்துமூரெங்களூர்
புருஷார்த்தபுனிதமாய்ப்புணருமூரெங்களூர்
பேதங்கறந்துபெருக்குமூரெங்களூர்
பேரின்பம்பொங்கித்ததும்புமூரெங்களூர். 4

அத்வைதகோமளமமைந்தவூரெங்களூ
ராறுக்குமப்பாலானவூரெங்களூர்
சத்துமயமாய்த்தரித்தவூரெங்களூர்
சதானந்தமுற்றுத்தனித்தவூரெங்களூர். 5

சுட்டுந்துவிதத்திற்கெட்டாவூரெங்களூர்
சொரூபசுயம்பதாய்த்துலங்குமூரெங்களூர்
கட்டுக்கடந்தோர்காணுமூரெங்களூர்
காணாதுகண்டுகளிக்குமூரெங்களூர். 6



உபாதிரகிதமாயோங்குமூரெங்களூ
ரோர்நிறைவாகவுறைந்தவூரெங்களூர்
வேஷாதிகளற்றுமேவுமூரெங்களூர்
வித்தகவிஞ்ஞானர்க்குற்றவூரெங்களூர். 7

சிறிதுபெரிதுமரியாவூரெங்களூர்
சித்துமயமாய்த்தெளிந்தவூரெங்களூ
ருரியாதீதமாய்ஜொலிக்குமூரெங்களூ
ருய்யசுகாதீதஞ்சொக்குமூரெங்களூர் 8

தேஜசுவுற்றுத்தெளிந்தவூரெங்களூர்
ஜிதேந்திரியதிவ்யமாய்த்தீர்ந்தவூரெங்களூ
ரூயநிர்ப்பயமதாய்த்துணிந்தவூரெங்களூ
ரோஷாதிமுற்றுந்துறந்தவூரெங்களூர். 9

எடுக்கப்பகுக்கவிசையாவூரெங்களூ
ரேகாந்தசுத்தவினியவூரெங்களூ
ரடுக்கப்பகையற்றசத்யவூரெங்களூ
ரத்துவஞானந்தரித்தவூரெங்களூர். 10

சிவோஹம்.

## இறையின் பெருந்தகைமை.

### இரட்டைக்குறள் வெண்செந்துறை.

திரிகுணங்கட்குந்தெரியானோர்பையல்
பிரியாதேபார்த்திங்ஙன்பிரம்மம்நீயென்றானே. 1

துரியாதீதமதாய்த்தோய்ந்ததோர்பையல்
விரியாக்குவியாமாவித்தாலேவிசைத்தானே 2

ஓராவுன்னாதாயுயர்ந்ததோர்பையல்
சேராதென்னமோசேர்த்தானென்செய்வேன். 3

கூறாவிடத்திலும்கொளிக்குமிப்பையல்
வேறாகாதொன்றாலிசைத்தானென்செய்வேன். 4

போக்குவரத்தற்றபோதப்பொக்ஷப்பையல்
வாக்கைக்கெடுத்திங்ஙன்வாழ்கநீயென்றானே. 5

ஜோதிசுயம்பாய்த்துலங்குமோர்பையல்
நியதிபுரிந்திங்ஙனீயேநானென்றானே. 6

உபாதிக்கறியாமொழுகுமோர்பையல்
மோகாதிபோக்கிங்ஙன்முன்னிலைபறித்தானே. 7

நீதிவழுவாநிறைந்ததோர்பையல்
கோதில்லாதாக்கிங்ஙன்குறியைக்கறந்தானே. 8

மண்ணாவர்தன்னைமருவாவோர்பையல்
சின்னாபின்னமறச்செய்தானென்செய்வேன். 9

அடியும்நடுவுமந்தமுமற்றபையல்
பிடியாய்ப்பிடித்துப்பிணைத்தானென்செய்வேன். 10

நாசரகிதமதாய்நன்குபூண்டபையல்
பேசாதுபேசிப்பிழையைக்கறந்தானே. 11

உள்ளும்புறம்புமொழுகுமோர்பையல்
வள்ளலாய்வந்தும்வாய்த்தானென்செய்வனே. 12

கட்டுக்குமெட்டாக்கடந்தவோர்பையல்
சுட்டாதெனையுந்தொட்டானென்செய்வேன். 13

பேசாப்பெருமைபிடித்ததோர்பையல்
கூசாதெனைத்தான்கூடினானென்செய்வேன். 14



எல்லாமுந்தானாயிருந்ததோர்பையல்
மெல்லவும்வந்தென்னைமேவினானென்செய்வேன். 15

முப்பாழுக்கப்பால்முழங்குமோர்பைய
லப்பாலெனையுமணைந்தானென்செய்வேன். 16

ஜோராய்ஜொலித்தசுகந்தமோர்பையல்
நேராகவந்தும்நேசித்தானென்செய்வேன். 17

அஞ்சாப்போராண்மையமைந்தவோர்பையல்
கொஞ்சாதுகொஞ்சிக்குலாவினானென்செய்வேன். 18

எட்டாஸ்தலத்திலிருப்பானோர்பைய
லொட்டாவொட்டிட்டொட்டினானென்செய்வேன். 19

தோன்றாதொடுங்காத்துலங்குமிப்பையல்
நான்றானாகவும்நட்டானென்செய்வேன். 20

அஞ்ஞானங்காணாவறிஞனோர்பையல்
மெய்ஞ்ஞானமாக்கியுமெச்சினானென்செய்வேன். 21

மானாபிமானமறியாததோர்பையல்
பூணாதுபூட்டிப்புணர்ந்தானென்செய்வேன். 22

சித்துமயமாய்த்தெளிந்தவோர்பையல்
சுத்தசிவமாய்ஜோடித்தானென்செய்வேன். 23

வேஷாதிக்கப்பால்விளங்குமோர்பையல்
தோஷாதிபோக்கியுந்தொட்டானென்செய்வேன். 24

ஆண்பெண்ணலியற்றவத்துவைதப்பையல்
காண்பானாதிபறக்கலந்தானென்செய்வேன் 25

ஆறாறுக்கப்பாலமர்ந்ததோர்பையல்
பேரானந்தமாய்ப்பிணைத்தானென்செய்வேன். 26

சத்துமயமாய்த்தகைமைபூண்டபையல்
ஸந்ததமாயென்னைஸ்தாபித்தானென்செய்வேன் 27

விந்தைவினோதங்கள்வேண்டாவிப்பையல்
சொந்தசுயம்பாய்த்தொடுத்தானென்செய்வேன். 28

குன்றாக்குறியாக்கோமளமோர்பைய
லொன்றாயேகோபித்தொழுகினானென்செய்வேன். 29

ஆரோபசங்கைக்கடங்காவோர்பைய
லாராவின்னாதாயொடுக்கினானென்செய்வேன் 30

புன்மைக்கடங்காமாபூரணவிப்பையல்
நன்மைதின்மையறநட்டானென்செய்வேன். 31

பாவனாதீதம்பதிந்தவோர்பையல்
பதையாப்பதமாய்ப்பதித்தானென்செய்வேன் 32

ஆனந்தாதீதமாயானதோர்பைய
லதீதமயமாயமைத்தானென்செய்வேன். 33

புருஷார்த்தம்புருஷார்த்தமென்றமாபையல்
பூரணம்பூர்த்தித்துப்பொருந்தினானென்செய்வேன். 34

வாசாமகோசரமாய்வாய்த்தவும்பையல்
நேசமாய்வந்தின்னியாயம்பண்ணிட்டானே. 35

சிவோஹம்.

## அறிவீனங்கறத்தல்

அடியிரண்டாய்த்தம்மிலொத்துவந்த

குறள்வெண்செந்துறை.

நான்கிரண்டொருசன்னல்நாசவடிவத்தை
நானென்னக்கொண்டிடாதே
ஊன்பொதிப்பாரமென்றொழித்தவரன்றன்றோ
வுறுதியிலொடுங்கிவாழ்வர். 1



சுப்பிதமானவிண்ஜடத்தைத்தானழுகிட்டுத்
தன்னைநீமறந்திடாதே
துப்புரவாயித்தைத்துறந்தவரன்றன்றோ
துய்யமெய்ப்போதமாவர். 2

இன்பதுன்பத்திற்கேதுறும்ஸ்தூலத்தை
யினிதென்னக்கொண்டிடாதே
துன்பவின்பமறத்துடைத்தவரன்றன்றோ
துலங்குமெய்யறிவதாவர். 3

துள்ளுமனத்தொடுதுணர்ந்துழண்டுவீண்
துக்கத்தழுந்திடாதே
விள்ளுதலறவுமித்தைவிலக்கினரன்றன்றோ
வித்தகசொஸ்தமாவர். 4

பொல்லாக்கொலையாதிபுரிந்துதிரிந்துன்
போதமிழந்திடாதே
வல்லபமுற்றித்தைமாற்றினான்றன்றோ
வாய்மைமாவுரிமையாவர். 5

அனித்தியநாமரூபவஞ்ஞானபூண்டுற்
றடாவொத்தென்றிடாதே
தொனிந்திடாதுமித்தைத்துறந்தவரன்றன்றோ
துல்லியமாபொருளதாவர். 6

மூன்றுகாலங்குளித்துமுழுநீறணிந்துநான்
முதல்வனென்றோதிடாதே
ஆன்றவர்பின்சென்றித்தையகற்றினான்றன்றோ
வத்வைதபோதமாவர். 7

இல்லாப்பொய்யதையிருப்பதாயெண்ணிநீ
யேங்கியுமிழிவுறாதே

நில்லாதென்றுணர்ந்தித்தைநீக்கினான்றன்றோ
நிர்ணயப்பிழம்பதாவர் 8

துற்சங்கத்துக்கதோஷனர்கூட்டத்தைத்
தொட்டுப்பின்பற்றிடாதே
சற்சங்கமுற்றத்தைத்தறித்தவரன்றன்றோ
சமரசசையோகமாவர். 9

புருடன்பெண்ணலியெனப்புருஷார்த்தமறியாவீண்
போலியைப்பொருந்திடாதே
பருவருடன்பழகிப்பரஸ்பரமானான்றன்றோ
பரப்பிரம்மநிஷ்டராவர். 10

கட்டணைபூண்டுபொய்நாட்டைமயக்கிநீ
நான்மேலோனென்றிடாதே
விட்டதைத்துறந்துவிலக்கமொன்றில்லான்றோ
விசேஷமெய்ஞ்ஞானிராவர் 11

நன்றென்றுமறியாவீணஞ்சுறுந்துவிதரை
நாடிப்போய்நன்கிடாதே
இன்றேயவருறவையிழந்தவரன்றன்றோ
விருவினைதுறந்தோராவர் 12

குன்றுங்குறியைக்குறிக்குங்குருடரைக்
குருவென்றுகொண்டிடாதே
நன்றுதீதறவும்நட்டவரன்றன்றோ
நற்குருசுவாமியாவர். 13

பந்துப்பெருக்கத்தைப்பதவியாகவெண்ணிநீ
பாழினிற்பதிந்திடாதே
சந்தைப்பெருக்கிதென்னத்தள்ளினான்றன்றோ
சத்யநல்விரதியாவர். 14



அலைகடற்றுரும்பென்றலைகின்றகுடும்பமை
யடுத்துற்றுறவிடாதே
நிலைகெடுமாமித்தைநீக்கினான்றன்றோ
நிர்த்தொந்தநேசராவர். 15

பெண்பெண்மாயையெனப்பிதற்றியுளறுகின்ற
பித்தரையிணங்கிடாதே
தன்மயமெல்லாமெனத்தரித்தவரன்றன்றோ
தத்வதாழ்மையாவர் 16

எவ்வுருத்தோற்றத்தையுமிவ்வுருக்கீழென்று
மிழிவதுகூறிடாதே
அவ்வுருள்ளும்புறம்புமாகினான்றன்றோ
வற்புதவகண்டமாவர். 17

சுருதிகளொப்பிடாத்தோஷவசனங்களைச்
சூட்டிநீபுலம்பிடாதே
உறுதியாயுணர்ந்தொத்துரைப்பவரன்றன்றோ
வுண்மையறிந்தோராவர். 18

ஜாதிநான்மேலென்றுஞ்சங்கித்துளறிநீ
சத்யமிழந்திடாதே
சோதித்தறிந்துண்மைதொடுத்தவரன்றன்றோ
சொச்சொரூபசுயம்பதாவர். 19

அந்தரசுவற்கமென்றாரோபங்கொண்டுநீ
யயர்ந்துமேல்நோக்கிடாதே
மந்திரம்பண்ணியுமிம்மயக்கற்றான்றன்றோ
மஹாபிரம்மமர்ம்மவாவர். 20

சுத்தஞ்சுத்தமென்றுசுடுகாடுபோம்பிணத்தைத்
துலக்கிநீயழகிடாதே

சுத்தாசுத்தமறத்துறந்தவரன்றன்றோ
சுகாந்தமாசுகிர்தமாவர். 21

கர்ம்மவிதியொழுகிக்கக்கத்தில்வேதாந்தமேந்துங்
கசடனைப்பொருந்திடாதே
பருவமிலிவன்றன்னைப்பற்றுத்துறந்தாரன்றோ
பரிசுத்தபக்வமாவர் 22

போதம்புணரறியான்புலம்பும்பொய்ஞ்ஞானமதை
புனிதமெனப்புணர்ந்திடாதே
நீதமில்லாவென்னநீக்கினான்றன்றோ
நிற்குணநியமமாவர். 23

சஞ்சலசகிதனொடுதழுவியிணங்கிப்போய்ச்
சுமமென்றொழுகிடாதே
மிஞ்சுதலறவவனைவிலக்கினான்றன்றோ
மெய்ஞ்ஞானவிகிர்தமாவர். 24

பந்தவுபாதியினாற்பதைத்துமுளறுகின்ற
பாழனையணுகிடாதே
சொந்தம்பற்றுவவனைத்துறந்தவரன்றன்றோ
சுத்தநிஷ்களங்கமாவர். 25

சங்கங்களொடுகூடிதடஸ்தம்நானென்றுஞ்
சாமர்த்தியஞ்சாற்றிடாதே
பங்கமறவுமத்தைப்பறித்தெறிந்தாரன்றோ
பாராதீதனமற்றோராவர். 26

அகமுகமானோர்போலலறியுளறுகின்றபொய்
யசத்தனையுறவிடாதே
ஜகவாசனிவனைநன்றாய்த்தள்ளினான்றன்றோ
ஸந்ததசையோகமாவர், 27



இருளொடுகூடியிழிவுறும்விகற்பனை
யிணங்கிநீயுறவிடாதே
அருளொடுகுலாவியவபேதசுஞ்ஞானரோ
டழுந்திநீவபாரமாவாய். 28

சிவோஹம்.

## மாணாக்கன்வினா ஆசிரியன்விடை.

பள்மெட்டு.

தன்னானநானநன்னாதானநன்னானேநன்னா
தானநன்னாநானநன்னாதானநன்னானே.

முப்பாழின்காடுவெட்டவந்தபள்ளனேபள்ளா
மோனமதாய்முடிந்திருந்தமுறைமையென்னடா. 1

அப்பாழ்கடந்துமிங்ஙனறிந்துகொள்ளடிபள்ளி
யாறாறுக்கப்புறத்தேயமர்ந்தபள்ளனே. 2

ஆறாறுக்கப்புறத்தேயமர்ந்தபள்ளனேபள்ளா
வாறாறுமகற்றும்வழியறியவிள்ளடா. 3

ஆறாறுமகற்றும்வழியறையவேண்டுமோபள்ளி
யமிழ்த்தடியாறாறையுமரூபத்திலங்ஙன். 4

ஆறாறென்னும்ஸ்தூலமாதியைப்பள்ளனேபள்ளா
வரூபத்திலமிழ்த்திடப்பின்னறையாநானேடா. 5

அறையாவிடம்நம்மிருப்புவமர்ந்துநில்லடிபள்ளி
யானந்தமாமயமதாயுமழுந்திக்கொள்ளடி 6

என்னடாவெனக்குகந்தவின்பப்பள்ளனேபள்ளா
வேகாந்தவினிதாயென்னையிசைத்தவல்லனே. 7

ஏகாந்தமாவிறுமாப்புவிசைந்தபள்ளியேபள்ளி
யிங்கிதமாநிர்விகற்பவியல்புநாமேடி. 8

இங்கிதமாநிர்விகற்பமிசைந்தபள்ளனேபள்ளா
வினியசத்யஸகஜநிஷ்டைவிணக்கஞ்ஜோரடா. 9

இனியசத்யஸகஜநிஷ்டையிசைந்தபள்ளியேபள்ளி
யெல்லாமுள்ளும்புறம்புமாகியிருந்துவாழடி 10

எல்லாவுள்ளும்புறம்பிருக்குமிறுதிப்பள்ளனேபள்ளா
வீனங்கெட்டதன்னுரியவியற்கைதானோடா. 11

ஈனங்கெட்டவெந்தனுக்குமிசைந்தபள்ளியேபள்ளி
யிழிவுயர்வுமற்றுமென்னையிருந்துகாணடி 12

இழிவுயர்வுமற்றவென்னையிணைந்தபள்ளனேபள்ளா
வினியூமர்ம்மந்தன்னியாயமியல்புநன்கேடா. 13

இனியமர்ம்மம்பூண்டுளவென்னிலக்கணப்பள்ளிபள்ளி
யிருவினைரகிதசொஸ்தமென்செருக்கேடி. 14

இருவினையுமற்றிருக்குமெந்தன்பள்ளனேபள்ளா
விறுவரையமற்றமஹாவியல்புசொல்லடா. 15

இறுவரையமற்றிருப்பைவியம்பவேண்டுமோபள்ளி
யெங்குந்தானாயிருந்துபாருமிசையுமங்கேடி. 16

எங்குந்தானாயிருத்திவிட்டவெந்தன்பள்ளனேபள்ளா
விரிகுநினைப்புமறைப்பறுக்குமியல்பைக்கூறேடா. 17

இரிகுநினைப்புமறைப்புமறுமியல்பைக்கேளடிபள்ளி
யேகசத்தாயெங்குந்தானாயிருந்தேகொள்ளடி. 18

ஏகசத்தாயென்னையிருத்தியவெந்தன்பள்ளனேபள்ளா
வென்னாவுந்தன்பெருந்தகைமைவியம்பாவண்ணமே 19



என்னடிபெருந்தகைமைக்கேற்றபள்ளியேபள்ளி
யிவ்விருப்பேயிருப்பாயுற்றுமிருந்துகொள்ளடி, 20

இவ்விருப்பேயிருப்பாயுற்றவெந்தன்பள்ளனேபள்ளா
இலங்கும்போதம்பதையாநிற்குமியல்பைக்கூறடா 21

இலங்கும்போதம்பதையாநிற்குமெந்தன்பள்ளியேபள்ளி
யின்பதுன்பமணுகாநிலுமிறக்கும்பதைப்படி. 22

இன்பதுன்பமற்றிருக்குமெந்தன்பள்ளனேபள்ளா
வின்மமதையின்போதலக்ஷணமியல்புவென்னடா 23

இன்மாமமதைப்போதலக்ஷணவெந்தன்பள்ளியேபள்ளி
யின்னபேதபூரணமாயிலங்குந்தான்றாண்டி 24

இன்னபேதபூரணமாவெந்தன்பள்ளனேபள்ளா
வியல்பாம்பிரம்மபூரணமாயென்னையுந்தாக்கடா 25

இயல்பாம்பரிபூரணத்வவெந்தன்பள்ளியேபள்ளி
யின்பாதீதவியல்புதானாயிருந்துவாழேடி 26

இன்பாதீதசுயம்பதானவெந்தன்பள்ளனேபள்ளா
என்னைக்காலாதீதமதாயிருத்தித்தோயேடா; 27

என்னையுன்னையென்றதற்றுமெந்தன்பள்ளியேபள்ளி
யிரண்டறவிரேசித்தொன்றாயிருந்துகொள்ளடி. 28

இரண்டற்றகண்டமானவெந்தன்பள்ளனேபள்ளா
இன்னியாயமிருந்தபடிவிருந்ததென்னேடா 29

இன்னியாயப்படிவமைந்ததெந்தன்பள்ளியேபள்ளி
யிம்மாமௌனமந்திரமாயிருந்துகொள்ளடி. 30

இம்மாமௌனமந்திரத்வவெந்தன்பள்ளனேபள்ளா
வென்னாவுந்தன்னிரதிசயமியம்பர்தாச்சேடா. 31

என்னடிமர்நிரதிசயத்வவெந்தன்பள்ளியேபள்ளி
யினியமஹாமர்ம்மசொஸ்தமிதுவேநாமடி. 32

இனியமஹாமர்ம்மசொஸ்தவெந்தன்பள்ளனேபள்ளா
இன்னியாயமெனைத்தான்செய்யவியர்க்கைதானோடா 33

இன்னியாயப்படியுமானவென்சுதந்திரப்பள்ளிபள்ளி
வின்பாதீதமிரகஸியம்நம்மிருப்பேவாழடி. 34

(கருத்து) மேலருளிச்செய்திரா நின்ற செய்யுளின் கண் பள்ளா பள்ளி, என்ற இலக்கணமாவது ஒரு வகுப்பு இன்றெனக்காண்கவும் பள்ளமென்னும் தாழ்ந்த ஆழாழியின் கண் நீர் நிறைந்து வற்றாப்பெருகா நிற்பதுபோன்று அருள் நிறைந்துளமெய்ஞ்ஞான ஆசிரியரும் அம்மயமாயதில் மீளாது தோய்ந்துமூழ்கின மாணாக்கருமென் றுணர்ந்துகொள்க.

சிவோஹம்.

## சொச்சொரூபானந்தக்களிப்பு.

சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹந் திவ்ய
சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹஞ்சிவோஹம்.

அடிமுடிநடுவற்றவதீதந் தன்போ
லகண்டமதாயெனையாக்கவெழுந்து
துடிப்பறுஞ்சுயம்பதாயமுத்தி அது
தொடுத்தமாமர்ம்மஞ்சொல்லாதுஜோதி. (சி) 1

சொல்லாமாமர்ம்மவித்திட்டு அதிற்
சூழுந்துவிதமணுகாக்கெடுத்து
விள்ளாவருள்நீரைவிட்டு நன்றாய்
விளைவித்தவாசாமகோசரஞ்ஜோதி (சி) 2



வாசாமகோசரவிளைவில் வந்த
வரவுமடங்காமாக்ஷிமைமகிழ்வு
நேசாநுபூதிக்களஞ்சியம் பூரண
நேர்மைபூண்டுநிறைந்ததுஜோதி (சி) 3

நிறைந்தநிர்மலக்களஞ்சியஞ் சதா
நிர்ணயமுற்றுநின்றதுகுன்றா
குறைவுநிறைவற்றவிலக்ஷியம் இத்தை
குறிக்கப்படாதகுசலங்காண்ஜோதி. (சி) 4

குறிக்காப்பசிககாமாநுட்பம் இத்தைக்
கூடுமுபாயமும்நிர்விகற்பம்
சரிக்கிச்சமமொத்தபுஷ்பம் மஹா
சாமர்த்தியமுற்றஸகஜமாஜோதி (சி) 5

ஸகஜாநுபூதிமாசத்யம் இதிற்
சார்ந்ததகைமைசாஸ்வதநித்யஞ்
சுகாசுகாகிதமிப்பத்யம் அச்
சுகாதீதமுற்றசுதந்திரஞ்ஜோதி. (சி) 6

சுதந்திரசுபாவமிச்சுயம்பில் வேறு
சோர்வுறுநினைப்புமறைப்புமணுகா
பதந்திரண்டுற்றவிப்பாகம் இப்
பர்வமிகுத்துப்பதிந்ததுஜோதி (சி) 7

பதிந்தமாவாழ்க்கையின்பாக்யம் வேறு
பகுக்கெடுக்காப்பதிந்துளயோக்யம்
புதினம்புதினமிச்சிலாக்யம் அபேத
பூர்த்தியுற்றமாபூரணஞ்ஜோதி (சி) 8

பூரணம்பூர்த்தித்தபொருத்தம் அதிற்
பூட்டப்பிரிந்திடாப்பூண்டதிருத்தம்

காரணாகாரியாகிதமின்னாருத்தம் ஏகக்
களங்காகிதமாய்க்கலந்ததுஜோதி (சி) 9

களங்காக்கலப்பன்றேகமனம் அதிற்
கலந்துறைந்துரையாமாமௌனம்
அளவிடடங்காமாநிபுணந் தாயு
வறிவாலடக்கதடங்குமாஜோதி (சி) 10

அறிவையறிவோடடக்க அந்த
யறிவென்னுமருள்வாளறுத்தவிடுக்கம்
பரிநாமகருவிகாரணம் வீண்
பாழாய்த்துறந்ததுபாரென்றேஜோதி. (சி) 11

பாழாமுன்னிலைபாழாச்சு காணும்
பாராதீதனமுற்றும்பற்றதுபோச்சு
மேலாமதீதமென்றாச்சு அதில்
மேவிமுடிந்த்விசேஷமாஜோதி. (சி) 12

மேவியவிசேஷமதனிற் றாய
மெய்யதுவாயுற்றவிலக்கணமதுதான்
சேவிக்கசெயலற்றதுகாண் இந்தச்
சீர்மையின்றுல்லபஞ்சேர்ந்ததுஜோதி (சி) 13

சேர்ந்துளசேர்க்கையின்சீர்தான் மஹா
சின்மயசிங்காரஞ்ஜெயமுற்றதுகாண்
சோர்வற்றதூயசுயந்தான் றய்ய
சொச்சொரூபமுற்றுத்தொட்டதுஜோதி. (சி) 14

தொட்டதன்சொரூபமதனைத் தான்
றொட்டதுவிட்டதுதோணாச்சூசனை
கட்டொன்றுமில்லாச்சாதனை மாயா
கட்டறக்கலந்துகமழ்ந்ததுஜோதி. (சி) 15



கமழுமாநிரதிசயந்தான் பேதக்
கர்ம்மத்திற்குமணுகிடாதுகாண்
நிமலநேமமுற்றதுதான் இந்த
நிற்குணநேசிப்புநீங்காதுஜோதி. (சி) 16

நீங்காநிர்ணயம்நித்யத்வம அந்த
நிற்பின்னநியமநேசபசுத்வம்
தூங்காத்தூக்கந்துடர்ந்தமஹத்வம் இந்தத்
தூயசுபாமிச்சொக்கதுஜோதி. (சி) 17

சொக்கியசொக்கேசுஞ்ஞானம் அந்தச்
சூத்திரநுட்பசுவாநுமெய்ஞ்ஞானம்
ஒப்பிடொண்ணாவுரியவிஞ்ஞானம் அந்த
வுறுதிமயமுற்றுறைந்ததுஜோதி. (சி) 18

உறுதிமயமானவொழுக்கம் இந்த
வுரிமைதானாயொத்துபழக்கம்
இறுதியிலிசைந்தமாதுலக்கம் இந்த
யேகாந்தவினிதாயிணைந்ததுஜோதி. (சி) 19

இனிதினிதேகாந்தமினிமை நன்றா
யிசைந்துறுமகண்டபேரின்பத்தனிமை
அநிர்வசனியமானவினிமை அந்த
வமைப்பேயதுதானாயமைந்ததுஜோதி (சி) 20

அமைப்பேயதுவதுகாணும் அந்த
யத்துவைதமதனைத்ததுபூணும்
இமைப்புமயமாயிருந்ததுபேணும் இன்
னிறுமாப்புற்றவலங்காரஞ்ஜோதி. (சி) 21

அலங்காரவபேதபோரண்மை மெய்
யாசனருளளித்தமாகூர்மை

விளங்கிடும்வியப்பானநேர்மை இந்த
விசேஷம்பூண்டவீறுகாண்ஜோதி. (சி) 22

வீறென்னுமிலக்கணந்தனிமை இத்தை
விலகாவிணங்கிட்டவித்தகமகிமை
நேரென்னும்நிற்சின்னப்புதுமை இந்த
நிர்மலசித்திபாய்நிறைந்ததுஜோதி. (சி) 23

நிறைந்தநிறைவுநிற்சலனம் அந்த
நிச்சயம்பூண்டநிஷ்டைநிர்மலினம்
முறைப்படிமுடிந்தமாபலினம் மோன
முற்றுத்தானமுழக்கமென்ஜோதி. (சி) 24

முழக்காமுழக்காய்முடிந்தமாமுத்து மஹா
மோனவிதேகமுற்றவிச்சித்து
கலக்கமற்றுக்கலந்துளவத்து தூய
காலாதீதமதாய்க்கனிந்ததுஜோதி. (சி) 25

கனிந்தகருணைகைவல்யங் அக்
காருண்யம்பெருகிக்கமழுமாமெல்யங்
துனியொன்றுமணுகிடாத்துல்யம் இத்
தூய்மையுற்றசுயாதீனஞ்ஜோதி. (சி) 26

சுயாதீனமாமௌனபாஷ்யம் இத்தைச்
சூழ்ந்துணரும்பிரம்மவிரகஸ்யம்
ஜெயமாகுஞ்சிவஞானமவஸ்யம் இந்தச்
சீர்மைமாசொஸ்தஞ்சேர்ந்ததுஜோதி. (சி) 27

ஜோதிஜோதிசுயஞ்ஜோதி தன்னைச்
சுட்டாதுசும்மாவிருமாசுயாதி
நீதிவின்னிஷ்டைநியமசமாதி சுத்த
நித்யநிர்ணயநேர்த்திபார்ஜோதி. (சி) 28

சிவோஹம்.



## சீடன்முறைமை.

### குருவணக்கம்

என்னையெடுத்தளிப்பதற்கினியமானுடவேடம்போ
லெடுத்துளதாயிருந்திலங்குஞ்சுயமாசொரூபஞான
வன்னையெனும்மாமௌனதேசிகனாமலவருட்கோமள
வதீதமாமதிமலர்ந்தமலாதனைமகிழ்ந்துணர்வாய்ச்
சின்னபின்னமறவெடுத்துமரியஜிதேந்திரியதிவ்யதீர
ஜெயஹார்மதாய்த்திரட்டிவொன்றாயிணைத்ததையுமிங்ஙன்
றன்னைத்தானலங்கரித்தழகுபூர்த்திபூண்டருளியதனித்
தத்துவமௌனசூடாமணிப்பதக்கந்தரித்துவணங்குவோமே

### போற்றிப்பதிகம்.

பொன்னொடுதேகாதியாவும்பொய்யெனப்புகன்றாய்போற்றி
போதமெய்ஞ்ஞானவஸ்துநீமெய்யெனப்புரித்தாய்போற்றி
கண்ணொடுமொளிவுபோன்றுகருத்தொடுமிணைந்தாய்போற்றி
நுண்ணியவிளைவேபோற்றிமாநுட்பரஸியமேபேற்றிபோற்றி

சஞ்சலமறுத்தாய்போற்றிசமரசம்ஸ்தாபித்தாய்போற்றி
மிஞ்சுமாநற்பொருளேபோற்றிமெய்வீடிங்களித்தாய்போற்றி
அஞ்சலளித்தாண்டாய்போற்றியற்புதமெய்யாசேபோற்றி
கொஞ்சுமென்னருளேபோற்றிகுருமௌன்மணியேபோற்றி
[போற்றி 2

எங்குமாயிருந்தாய்போற்றியென்னிருதயங்கோவில்கொண்
டாயபோற்றி, சங்கமறவெனைவிங்ஙனமைத்தாய்போற்றிசர்வ
முமாய்ச்சமைத்தாய்போற்றி,மங்களமாமகிழ்வேபோற்றிமதி
ப்பறவெனையுமதித்தாய்போற்றி, தங்குமாமஹாமஹத்துவ
மேபோற்றிதத்துவதேசிகமேபோற்றிபோற்றி. 3

பொய்யிருள்கறந்தாய்போற்றிபுருஷார்த்தம்பொழிந்தாய்
போற்றி, மெய்யதாயெனைவிளைவித்தாய்போற்றிவித்தகமும்
புரிந்தாய்போற்றி, பெய்யுங்கருணைநல்முகிலேபோற்றிபிரம்ம
மாய்ப்பிணைத்தாய்போற்றி, உய்யுமாமொக்ஷமேபோற்றிவோ
ம்பரமதேசிகமேபோற்றிபோற்றி 4

ஸந்ததவுணர்வே போற்றிஸாதுறுஞ்சத்யத்வசத்தேபோற்றி
பந்தமறுத்தென்னைப்பதித்தாய்போற்றிபதைப்பறும்பதமே
போற்றி, சொந்தமுறவென்னொடுஜொலித்தாய்போற்றிசொச்
சொரூபகேவலமேபோற்றி, மந்திரமாமதியேபோற்றிமஹா
மௌனதேசிகமேபோற்றிபோற்றி. 5

என்னுள்ளங்கறந்தாய்போற்றியேகமாய்க்கோத்தாய்போற்றி
உன்னுதலொழித்தாய்போற்றிவொப்புவமைக்கடங்காய்போ
ற்றி, நண்ணுமாநண்பேபோற்றிநனப்புமறப்பறநட்டாய்போ
ற்றி, கண்ணுதல்மாவள்ளலேபோற்றிகதிக்குகந்ததேசிகமே
போற்றிபோற்றி 6

தன்னையெனக்களித்தாய்போற்றிதன்பதியுந்தந்தாய்போற்றி
சின்னுபின்னங்கறந்தாய்போற்றிதிவ்யமாதேஜஸேபோற்றி
நிர்ணயப்பிழம்பேபோற்றிநிற்பயஞ்சொரிந்தாய்போற்றி
புன்னகைப்பொலிவேபோற்றிபுனிதமாகைவல்யமேபோற்றி
போற்றி. 7

சிறிதுபெரிதற்றாய்போற்றிஜிதேந்திரியசுயஜெயமேபோற்றி
குறியறக்கொளித்தாய்போற்றிகுறைவுநிறைவற்றாய்போற்றி
நெறியுறப்புணர்ந்தாய்போற்றிநீக்கமொன்றில்லாய்போற்றி
பரிபூரணமாபக்குவமேபோற்றிபரப்பிரம்மதேசிகமேபோற்
றிபோற்றி 8

சொல்லறத்துறந்தாய்போற்றிசொஸ்தமாசுயம்பேபோற்றி
பல்லுயிராய்ப்பரந்தாய்போற்றிபாவனாதீதமாய்ப்புதிந்தாய்
போற்றி, ஸல்லாபமாசைதன்யமேபோற்றிசையோகசாம்பி



ராஜ்யமேபோற்றி, விள்ளாமாமௌனமேபோற்றிவிதேக
மெய்த்தேசிகமேபோற்றிபோற்றி. 9

சுகிர்தமாசுபிக்ஷவயிர்தேபோற்றிதுய்யமஹாதுரியாதீதமே
போற்றி. பகிர்முகம்பரித்தாய்போற்றிபற்றறவெனைப்பதித்
தாய்போற்றி, விகிர்தமாநிர்விகற்பமேபோற்றிவிஷயரகித
நேமமேபோற்றி, நிகரொன்றில்லாவிறுமாப்பேபோற்றிநிமல
பரமதேசிகமேபோற்றிபோற்றி. 10

சிவோஹம்

# குருமணித் தாலாட்டு.

## இராகம்—நீலாம்புரி.

எச்சங்கெடவிருந்தாயேகாந்தக்கள்ளுகந்தா
யச்சமறச்சுகித்தோயென்னருட்டேசிகமேகண்வளரீர் 1

என்பொருட்டாயெழுந்தோயென்னையெடுத்துகந்தோய்
மன்னுமுயிர்முற்றுமுற்றோயென்மாமுனிவாகண்வளரீர் 2

நான்மறைக்கடங்காதுற்றோய்நனப்புமறப்பறஜொலித்தோய்
காண்பான்காக்ஷியிறந்தோயென்காரணதேசிகமேகண்வளரீர்

என்னையுகந்தளித்தோயென்னுளமாயின்பமுற்றோய்
தன்னைப்புணர்ந்துகந்தோயென்றத்வதேசிகமேகண்வளரீர். 4

சொல்லிற்கெட்டாதிருந்தோய்தூங்காத்தூக்கமாயுகந்தோய்
வல்லற்குருகுலத்தோயென்வாய்மைதேசிகமேகண்வளரீர். 5

உள்ளும்புறம்புமொத்தோயொழிபாநிரஞ்சனத்தோய்
கள்ளரகிதமுற்றோயென்கருணைதேசிகமேகண்வளரீர். 6

சுட்டுதற்கெட்டாதிருந்தோய்ஜோதிமதியெனக்குகந்தோய்
விட்டுவிலகாதுற்றோயென்மெய்ஞ்ஞானதேசிகமேகண்வளரீர்.

போக்குவரத்துமற்றோய்பரிபூரணமாய்த்தனிப்புற்றோய்
நீக்கமறவிரேசித்தோயென்னிர்க்குணதேசிகமேகண்வளரீர். 8

நலந்தீங்குமிரண்டுமற்றோயென்னிரகசியமாயிருப்புற்றோ
யுளதிலதறவுமுற்றோயென்னொளிதேசிகமேகண்வளரீர். 9

பார்த்துணர்ந்தபரத்தோய்பரப்பிரம்மமுற்றபிராமணத்தோய்
வேற்றறியாவிமலத்தோயென்வித்தகதேசிகமேகண்வளரீர்

அழியாமுடிதரித்தோயென்னானந்தாதீதமுறைந்தோய்
மொழியாமௌனத்தோயென்முத்திதேசிகமேகண்வளரீர்

பதையாப்பதமாயுற்றோயென்பாக்கியமாய்ப்பதிந்துற்றோய்
உதையஸ்தமனமற்றோயென்னுத்தமதேசிகமேகண்வளரீர் 12

காலரகிதமுற்றோய்க்கணிக்கவோர்குறியுமற்றோய்
கோலாகலவிதேகத்தோயென்குருதேசிகமேகண்வளரீர். 13

ஆறாறுக்கப்புறத்தோயசங்கநிர்விகற்பமுறைந்தோய்
சேராச்சேர்க்கையுமுற்றோயென்செல்வதேசிகமேகண்வளரீர்

சமயத்திற்கப்பாலுமுற்றோய்சாஸ்வதமாமகிமைபெற்றோய்
விஷயரகிதத்தோயென்விஞ்ஞானதேசிகமேகண்வளரீர். 15

அற்புதமாவிரகஸியத்தோயென்னான்மாவாயகலாதுற்றோய்
சிற்பரஜெயம்பெற்றோயென்சின்மயதேசிகமேகண்வளரீர்

புருஷன்பெண்ணலியுமற்றோயென்புருஷார்த்தமாகவுற்றோ
யரசெனும்பிரம்மமுற்றோயென்னபாரதேசிகமேகண்வளரீர்.

என்னிருதயங்கோவில்கொண்டோயினியவிருப்புற்றோய் [ர்.
தன்னிறுமாப்புத்தகைமையுற்றோய்சர்வதேசிகமேகண்வளரீ

கண்டார்க்குத்தனதாயுற்றோய்காணார்க்குத்துவிதமுற்றோய்
விண்டார்க்குவேறுற்றோயென்விசேஷதேசிகமேகண்வளரீர்



உறுதிக்குகந்துநின்றோயொன்றாயெனையும்பெற்றோய்
கருதரியகருத்திற்கிசைந்தோயென்கதிதேசிகமேகண்வளரீர்

நிஷ்கிரியாயோகத்தோய்நித்யத்வப்பிரம்மஞானத்தோய்
சொஸ்தமாசுஸ்திரத்தோய்ஜோதிதேசிகமேகண்வளரீர். 21

நிர்ச்சின்னகேவலத்தோய்நிர்ச்சங்கநிச்சயத்தோய்
சொச்சொரூபசுத்தத்தோயென்சுயதேசிகமேகண்வளரீர் 22

ஜிதேந்திரியவழகழகோய்சிதானந்தசிங்காரத்தோய்
நசியாப்பேரின்பத்தோயென்னன்குதேசிகமேகண்வளரீர். 23

துரியாதீதமுகந்தோய்துய்யமஹாமௌனமுற்றோ
யரிதரியவெனைப்புணர்ந்தோயகண்டதேசிகமேகண்வளரீர். 24

ஸமரஸசுபாவமமைந்தோய்சைதன்யநிராலம்பத்தோய்
பரஸ்பரநிர்ச்சலனத்தோயென்பக்வதேசிகமேகண்வளரீர். 25

அபரோக்ஷாநுபூதியமைந்தோயென்னானந்தாதீதமுற்றோய்
விபரீதசங்கைதுறந்தோயென்விநோததேசிகமேகண்வளரீர்.

பேராண்மையாய்க்கொளித்தோய்பிரம்மமாபொக்ஷத்தோ
யோராவுன்னுப்பதிந்தோயென்னுரியதேசிகமேகண்வளரீர்

ஸகஜாநுபூதிபுணர்ந்தோய்ஸந்ததமாய்த்தனிப்புற்றோய்
சுகாந்தசுதந்திரமுற்றோயென்ஜோதிதேசிகமேகண்வளரீர் 28

தேஜசுமயமாய்ச்சிறந்தோய்திவ்யமாசெருக்குற்றோய்
தோஷரகிதத்துய்யத்தோயென்சுகந்ததேசிகமேகண்வளரீர். 29

இராகாதிக்கெட்டாதோயின்பதுன்பமொட்டாதோய்
பாராதிபற்றாதோயென்பண்புறுமாதேசிகமேகண்வளரீர். 30

ஒப்புவமைக்கொவ்வாதோயொழியாவொற்றுமையுற்றோய்
செப்பரியசிவமாயமைந்தோயென்சிற்பரதேசிகமேகண்வளரீர்

போதமாபூஷணத்தோய்பொய்பாமணிச்சிம்மாஸனத்தோய்
பேதர்கிதசூஸ்திரத்தோயென்பிரம்மதேசிகமேகண்வளரீர்

காமரூபரகிதத்தோய்நானேநீயாய்நட்டுரித்தாயுகந்தோய்
மாரூப்பதமளித்தோயென்மாமௌனதேசிகமேகண்வளரீர்

பந்தமறுக்கும்பண்டிதத்தோய்பரமளிக்கும்நித்யத்தோய்,
சுந்தரபாசுயாதீனத்தோயென்றாயதேசிகமேகண்வளரீர். 34

சுத்தநிராகாரத்தோய்சும்மாவிருக்குஞ்சுதந்திரத்தோ
யத்வைதநியமத்தோயென்னானந்ததேசிகமேகண்வளரீர் 35

நிற்பின்னகேவலத்தோய்நீங்காமாநிர்ணயநேசத்தோய்
பொற்புமாபுனிதத்தோயென்பூரணதேசிகமேகண்வளரீர் 36

சிவோஹம்.

## சீடனருள் விருப்பம்.

### கண்ணிகள்.

காணாதகண்ணளிக்கவேண்டுமென்பிரானே என்
கண்ணுயெல்லாமிருக்கவேண்டுமென்பிரானே. 1

உள்ளதுள்ளதாகவேண்டுமென்பிரானே நா
னில்லாதொன்றுமிருக்கக்கூடாவென்பிரானே. 2

அபாரசத்தாயடைக்கவேண்டுமென்பிரானே அங்
காரோபமும்நாடக்கூடாவென்பிரானே. 3

நானேநீயாயிருக்கவேண்டுமென்பிரானே வேறு
நாட்டம்வந்தணுகக்கூடாவென்பிரானே 4

எட்டாமாடிகாட்டவேண்டுமென்பிரானே அங்
கெனைவைத்துப்பூட்டவேண்டுமென்பிரானே. 5



பதையாப்பதித்தமைக்கவேண்டுமென்பிரானே ஒரு
பாவனையுமுதிக்கக்கூடாவென்பிரானே 6

போததீபமேற்றவேண்டுமென்பிரானே அங்கண்
பொறிபுலனுகரக்கூடாவென்பிரானே. 7

நாசமற்றுமிருத்தவேண்டுமென்பிரானே பொல்லா
நனப்புமறப்பணுகக்கூடாவென்பிரானே. 8

வரத்துப்போக்கின்றிருக்கவேண்டுமென்பிரானே தீய
வாக்காதியுந்தொனிக்கக்கூடாவென்பிரானே. 9

சித்தஞ்சலியாதொளிக்கவேண்டுமென்பிரானே வேறு
சின்னபின்னமணுகக்கூடாவென்பிரானே 10

ஜோதிமயமாக்கவேண்டுமென்பிரானே மாயா
துன்பமின்பமொட்டக்கூடாவென்பிரானே 11

தேஜஸங்குஜொலிக்கவேண்டுமென்பிரானே வேறு
சிதடவிருளணுகக்கூடாவென்பிரானே. 12

புருஷார்த்தம்புணர்த்தவேண்டுமென்பிரானே பொய்ப்
புன்மையொன்றும்பொருந்தக்கூடாவென்பிரானே. 13

மெய்ஞ்ஞானமதஞ்சூட்டவேண்டுமென்பிரானே கள்ள
வேடமொன்றும்நாடக்கூடாவென்பிரானே 14

ஜிதேந்திரியஜெயம்வேண்டுமென்பிரானே துவித
சேஷம்வந்தணுகக்கூடாவென்பிரானே. 15

நீயேநானாயிரசிக்கவேண்டுமென்பிரானே வேறு
நீக்கமொன்றுமிருக்கக்கூடாவென்பிரானே. 16

தத்துவமாய்த்தாக்கவேண்டுமென்பிரானே மாயா
சங்கம்வந்தணுகக்கூடாவென்பிரானே. 17

இராப்பகலற்றிருக்கவேண்டுமென்பிரானே பொல்லா
விராகாதியுமணுகக்கூடாவென்பிரானே. 18

துரியபீடமமைக்கவேண்டுமென்பிரானே அங்கு
தூங்கார்த்தூக்கஞ்சொக்கவேண்டுமென்பிரானே. 19

பேரின்பம்புணர்த்தவேண்டுமென்பிரானே ஞான
பிரம்மநிஷ்டைமூட்டவேண்டுமென்பிரானே. 20

துரியாதீதமேற்றவேண்டுமென்பிரானே வேறு
தோற்றமங்குதிக்கக்கூடாவென்பிரானே 21

அகண்டமாயமைக்கவேண்டுமென்பிரானே மாயா
வாவரணமணுகக்கூடாவென்பிரானே 22

ஸகஜநிஷ்டைதாக்கவேண்டுமென்பிரானே வேறு
சங்கையொன்றுமொட்டக்கூடாவென்பிரானே. 23

ஏகபோகமளிக்கவேண்டுமென்பிரானே அங்
கிடரொன்றுமணுகக்கூடாவென்பிரானே 24

விதேகவின்பஞ்சூட்டவேண்டுமென்பிரானே பொல்லா
விஷயமங்குநுகரக்கூடாவென்பிரானே 25

சுருதிக்கப்பாலிருத்தவேண்டுமென்பிரானே என்னைத்
தொட்டுவிட்டுமாறக்கூடாவென்பிரானே. 26

அபேதவின்பந்தாக்கவேண்டுமென்பிரானே அங்
கச்சமொன்றுமணுகக்கூடாவென்பிரானே. 27

நிர்ப்பயமாய்நிறுத்தவேண்டுமென்பிரானே வேறு
நீக்கமொன்றுமிருக்கக்கூடாவென்பிரானே. 28

ஸந்ததமாயமைக்கவேண்டுமென்பிரானே மாயா
சஞ்சலமங்கணுகக்கூடாவென்பிரானே. 29



தூய்யஜோதியாக்கவேண்டுமென்பிரானே ஏக
சொரூபமாயிலயிக்கவேண்டுமென்பிரானே. 30

நிர்விகற்பமாக்கவேண்டுமென்பிரானே திவ்ய
நிர்ப்பயமாய்க்கோக்கவேண்டுமென்பிரானே. 31

தானேதானாய்ப்புணர்த்தவேண்டுமென்பிரானே சுத்த
ததாகாரமாக்கவேண்டுமென்பிரானே 32

சுட்டொழித்தமைக்கவேண்டுமென்பிரானே தூய்ய
சுகாதீதமாக்கவேண்டுமென்பிரானே. 33

நீநானுயிரேசிக்கவேண்டுமென்பிரானே பொருள்
நீயேநானாய்நிறுத்தவேண்டுமென்பிரானே. 34

சத்தியமாசத்தியமென்னேவென்பிரானே தூய்ய
சங்கற்பாகிதமானேமென்பிரானே. 35

எனைப்புணர்ந்தவஸ்துதானேவென்பிரானே நித்ய
மெனைப்பிரியாவியற்கையோவென்பிரானே. 36

சர்வமுள்ளும்புறம்புந்தானேவென்பிரானே ஞான
சத்தியஞ்சத்தியமென்னேவென்பிரானே. 37

சொச்சொரூபவிமலமென்னேவென்பிரானே மா
சொல்லிறந்தமௌனமிதோவென்பிரானே. 38

மஹாபிரம்மவித்தைதானேவென்பிரானே ஒரு
மதிப்புக்கடங்காதானேமென்பிரானே. 39

பிரானேயென்றருத்தமென்னேவென்பிரானே மா
பெரிதாயுற்றவிறுமாப்பென்னேவென்பிரானே. 40

சொல்லாவிடம்நம்மிருப்போவென்பிரானே மௌன
சூஸ்திரஞ்சும்மாவிருந்தோமென்பிரானே. 41

சிவோஹம்.

## அபயம்

அடிநான்காய்த்தம்மிலோத்துவந்த
இரட்டைக்குறள்வெண்செந்துறை

பகைகொடுதுவிதம்பாழதுவாகிடருட்
பாராப்பார்வைபார்க்கவும்
பங்கமொன்றில்லாத்துரியத்தைப்பூட்டிப்
பேதையாப்பதித்திடவும்
நகைப்பொடெதிரிலாவேகராஜ்யக்கொடி
நாட்டிமுடிசூட்டவும்
நன்குறும்மாமௌனதேசிகமேவிங்ஙன
ஞானவபயமேந்தும்

ஸ்தூலமொடுபொறிபுலனுதிதுறப்பித்துத்
துய்யசிவமாக்கவுந்
துர்ப்பந்தமுற்றும்நசித்திடத்தூயமா
சொரூபக்கனவிடவுங்
காலமொடுபொல்லாவிராகாதியணுகிடாக்
கருக்கிரீறுக்கிடவுங்
கருணைமாமௌனதேசிகமேவிங்ஙன்
கதிரீயபயந்தாங்கும். 2

ஒருநிறைவாகியலகஜநிஷ்டைதாக்கி
வொளிவோடொட்டிடவு
மொன்றிரண்டென்னுவபேதமமைத்தென்னை
வொருமித்தொழிவாக்கவுங்
கருமமயமாய்க்கலங்காதிருத்திவபேதக்
கண்ணைத்திக்களித்திடவுங்
கைவல்யமாமௌனதேசிகமேவிங்ஙன்
காத்திடுமெக்கபயம்.



நன்றுதீதற்றநிர்விகற்பம்நாட்டிமா
நன்காய்ப்பொருத்திடவும்
நானேதானென்றுயிரண்டறப்பூட்டியும்
நழுவாதிருத்திடவுங்
குன்றுவதீதக்கொடிகட்டிக்கோதறக்
கூடிக்கொளித்திடவுங்
குருபரமாமௌனதேசிகமேவிங்ஙன்
குடிவுன்பதமபயம். 4

போதனமேற்றிபொருளைப்பெருக்கிமா
புருஷார்த்தமிசைத்திடவும்
பூரணமாமஹாவமிர்தினையூட்டிப்பொய்ப்
புன்மைகெடுத்திடவுஞ்
சாதனுசாத்தியமுற்றுமளித்தோங்கச்
சர்வமாயமைத்திடவுஞ்
சைதன்யமாமௌனதேசிகமேவிங்ஙன்
சார்ந்தேனுனக்கபயம் 5

பந்தரகிதமாபரமதுய்யபாக்கியம்
பதிவாய்ப்புணர்த்திடவும்
பாவனாதீதவபாரமாய்ப்பூட்டிட்டுரிய
பண்போடமர்த்திடவும்
விந்தைவினோதாகிதமுற்றும்விசேஷ
வித்தகவித்தாக்கவும்
விதேகமாமௌனதேசிகமேவிங்ஙன
மிசைந்தேனுனக்கபயம். 6

அசைவற்றவானந்தாதீதமமைத்தபேதமா
வலங்காரமாக்கிடவு
மாரோபசங்கைவந்தணுகாதகற்றியு
மையங்கெடுத்திடவுங்

தோஷாதியற்றமாசயஞ்ஜோதியாக்கிப்பின்
சுட்டறத்தோய்த்திடவுந்
துய்யமாமௌனதேசிகமேவிந்நன்
றொட்டேனுனக்கபயம். 7

என்னுளங்கோவிலாயிருந்திரேசித்தொன்றா
யென்னைப்பூர்த்திபூட்டவு
மெல்லாமும்நானாயிருக்கவிருத்திசைத்துமா
வேகாந்தவினிதாக்கவும்
உன்னுதற்கெட்டாவொருதனியுணர்வாக்கிங்
குன்னுறவைத்திடவு
மொப்பறும்மாமௌனதேசிகமேவிந்ந
னுனக்கேவபயங்கொள்ளும் 8

ஞானமதம்நாட்டிநானேநீயென்றாக்கி
நவிலாஹாரஞ்சூட்டவும்
ஏண்பழினவரவேணநகைத்தழைத்துத்தன்னை
நாட்டமறநாட்டவுங்
காணுக்காணுமர்ம்மவாஸனமிட்டுரியாற்
களிப்புறக்களித்திடவுங்
கண்டாகிதமாதேசிகமேவிங்ஙன்
கலந்தேனுனக்கபயம். 9

சொல்லுக்குமிணங்காத்துரியாதீதமேற்றிச்
சூட்டியழகிட்வுஞ்
சொரூபசுயதுய்யவஸ்துவதாக்கியுமதாய்த்
தோய்த்துச்சொக்கவைக்கவும்
வல்லமாமௌனசாத்தியந்தந்துமேல்
வள்ளலாய்வைத்திடவும்
வல்லமஹாமௌனதேசிகமேவுன்னை
யடைந்தேனபயந்தாங்கும். 10

சிவோஹம்.



## திருப்பள்ளியெழுச்சி.

இராகம் பூபாளம்.

சிவசிவநமநமசிவஞானவிளைவா
திருவருள்ததும்பியவமிர்தெனுமினிதா
நிஜநிஜம்பரிசளிபரிமளசுகந்தா
நீங்கிடாதுறைந்தருள்நிர்மலக்கொழுந்தா
வசிவசிவசியமாய்மகிழ்ந்தமாவதீதா
வழகியமாமஹாயங்களதேவா
பிசகிடாப்பேரொளிக்குருமணிகோவா
பிரம்மதேசிமேபள்ளியெழுந்தருளாயே. 1

உலகாதிவில்தெனப்பரமளிவலிதா
யொழிவரநிறம்பியவரிதெனும்பெரிதா
மலமாதிகருகிடவிழிநிறபுனிதா
மலங்கெடமருவியமாமோனசுகிர்தா
சொலவேறுபொருளிலாவரமருளெளிதா
தூயமாசுதந்திரவசெனுந்துறவா
கலகலவெனக்கொளிக்கதியெனும்பதிவா
கருணாதேசிகமேபள்ளியெழுந்தருளாயே 2

அசைவறவுகந்தருளதீததமாமுனிவா
வசங்கமாதீவிரசுகிர்தவென்றேழா
இசையதுபுணர்ந்திடுமினியமாவினிதா
யென்னுளங்கோவிலாயிருந்திடுஞ்சொரூபா
விஷயாதிவெரியுறச்சிரிபுரிவுரியா
வீடதுபெருகியவித்தகவேடா
துஜங்கொடுமருவியசுகாரம்பத்துணிவா
துய்யதேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 3

உதையவஸ்தமனமொன்றில்லாவுரியா
வோதறுமோனமாயோங்கியதனியா
பதையாமாபதமிடவெளிவந்தபிரியா
பாவனுதீதமாய்ப்பதந்தந்தநெறியா
புதைவறப்பொருந்தியபொக்ஷமாவரியா
போக்குவரத்தறும்பொருளருள்பெரியா
விதையிலாவிளைந்தவென்பிரம்மமாதுரியா
விகிர்ததேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 4

சமயாதிபுணராமாதத்துவஸகஜா
ஸாதுருஞ்சாத்தியசாஸ்வதஸரஸா
அவயாதிகளொன்றுமறியாவிதேகா
வரிதினுமரிதானவத்வைதநெறியா
பகையாதிவணுகிடாபரஸ்பரக்குரவா
பகைகெடவிருந்துறும்பருவமாபிரியா
துரியாதீதபீடந்தந்தமாசுகந்தா
தூயதேசிகமேபள்ளியெழுந்தருளாயே 5

சிவயோகதேஜசுவொழுகியவொளிவா
தீரச்சின்மயமதாய்ச்சிறந்தமாதிவ்யா
உபமானரகிதமாயுகந்தவென்னுறவா
வுண்மைமாவுணர்வதாயொளிவிடுமுதல்வா
அவவேடமறிந்திடாவதிஷ்டானவரசா
வபரோக்ஷாநுபூதிக்குகந்திடுந்தனதா
சுபஜெயஜெயமானசுத்தநிர்மலநியமா
சுகந்ததேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 6

மாதவர்பக்தியிற்மருவியமஹத்வா
மறுவவேறுபொருளிலாதமர்ந்தசுயம்பா
பேதரகிதமாய்ப்பெற்றமாவபாரா
பேதித்திருப்பவர்பெற்றிடாபிரம்மா.



சாதனமுற்றுமேதந்தவென்றுணைவா
சத்தியமாகியசைதன்யவெளியா
வேதத்திற்கப்பால்விளங்கியவரியா
விதேகதேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 7

நாசரகிதமாய்நட்டவென்னன்கா
நனப்பரவொழுகியநானெனுஞ்சுகந்தா
கோசாதிகுலைத்துளகோமளதூயா
கோலாகலமதாய்க்குலாவியநேயா
தோஷாதிரகிதமாய்த்துலங்கியசுகிர்தா
சுதந்தரவேகாந்தந்தொடுத்தவென்னுரியா
பேசாமாரகஸியப்பெற்றபாசெருக்கா
பேரின்பதேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 8

கூடாப்பிரியாமற்கூடிடுங்கூட்டா
கூடாமற்கூடிடக்குலமறும்நித்யா
வாடாக்குளிராமலர்ந்தமாமலரா
வாக்காதிக்கப்பால்வாய்த்துளவமிர்தா
சூடாதுசூட்டுஞ்சுகாதீதசுகந்தா
சூக்ஷ்மமதாகியசூஸ்திரநுட்பா
நாடாமற்நாடிடும்நண்புறும்நண்பா
நன்குநற்றேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 9

எட்டாவிடத்தினிவிருப்புருமிருப்பா
வெல்லாமாயிருக்கவுகந்தமாசிறப்பா
கட்டொன்றுமின்றிக்கடந்தகளிப்பா
கண்ணருள்கண்ணைக்கலந்தவென்கண்ணை
விட்டதுதொட்டதுவிரண்டறும்வித்தா
விள்ளாவிடத்தில்விளங்கியமுத்தா
வொட்டியுணர்வோர்க்கொட்டிடுமுறவா
வொழியாமாதேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 10

சிவோஹம்.

## திருப்பள்ளியெழுச்சி.

### இராகம்—பூபாளம்.

பொங்குமாபூரணந்திரண்டநற்கனிகண்
 போதமொழுகிவுறைந்தருளமிர்தங்
கங்குல்பகலறத்தெளிந்துளவினிமா
 கருணையங்கழலிணைத்தொழுதருள்பெருவோ
மெங்ஙகங்குந்தானாயிலங்கியமகிழ்வா
 வென்னுளமாகியுமிருப்பிறுந்தேவா
மங்கிடாச்சத்தியமாமணிக்கோவா
 மௌனதேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 1

சஞ்சலரகிதத்தெருளுறுந்தெருள்நன்
 சர்வமேதனியதாய்நிறைந்தருள்நிறைவா
மிஞ்சுமாசொரூபமாய்மேவிடும்நீயான்
 விளங்கிடுமானந்தமீதென்னேவறியேன்
நஞ்சுறுமனமாயையறமுனிமுனிவே
 நஞ்சறப்பொருந்தியநற்றவவிளைவே
வஞ்சங்கெட்டென்னைவளித்தருள்விருந்தே
 வல்லபமேபள்ளியெழுந்தருளாயே. 2.

மாசறுமஹத்துவக்களங்கரகிதம்
 மானிடச்சட்டையிட்டெழுந்தருளொளிவரய்த்
தோஷமெறன்னைச்சுயஞ்ஜோதியாக்கிநன்
 றொருந்தரகிதமுற்றுமிருந்ததுமென்னே
நாசறுமெய்ஞ்ஞானச்சுடர்மணிக்கோவே
 காமாதியணுகிடாநற்றவப்பிழம்பே
நேசாநுபூதிக்குகந்துறுமஹத்தே
 நித்தியமாதேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 3



திரிகாலரகிதத்திரட்ஞானவடிவஞ்
 சிறந்தநல்லேகமாயமர்ந்துளதுளதாய்க்
கரியுறுமிருளினைக்கடிந்துறவுருக்கிக்
 காலரகிதமுற்றிருந்ததுமென்னே
உரியமாமுனிவோர்க்குமுகந்திடுமுணர்வே
 வொப்பிலாவிளைந்தமாசெப்பறுமணியே
குறிகுணமணுகிடாகுணாதீதப்பொருளே
 கோமளத்தேசிகமேபள்ளியெழுந்தருளாயே. 4

சத்தியமாமௌனநித்தியவஸ்துத்
 தனித்துறுஞ்ஸகஜமாநிஷ்டையுகந்து
முத்திவபாரவிரத்னமகுடமுஞ்சூட்டி
 முன்னிலைபோக்கியமுறைமையீந்தனையே
உத்திமஹாமறைவுயர்குருவாகி
 வொழுகியமாபெருஞ்சத்தெனுமழகின்
பத்திபமாமௌனபதையாப்பதமே.
 பரம்மதேசிகமேபள்ளியெழுந்தருளாய். 5

சிவோஹம்

## குருமணிஹாரம்.

### அகவல்.

சிவோஹஞ்சிவோஹஞ்ஜிதேந்திரியஞ்சிவோஹம்.
என்னையெடுத்தளிப்பதற்குமெழுந்தமஹாநித்யத்வம்
போததீபமெனக்கேற்றிபொருந்திநின்றபுருஷார்த்தம்
அசுத்தவாணவம்போக்கிங்ஙனுட்கொண்டவத்துவைதம்
அன்பாயென்னையுகந்தவகண்டமாமஹாவசங்கநிராலம்பம்
உள்ளும்புறப்புமென்னையொளிவுசெய்தவோர்தனிமை.
அல்லும்பகலறுத்துமென்னைவபேதீமிட்டவருட்ஜோதி.

துள்ளுமனமாதிமுற்றுந்துடைத்தெரித்தசுயஞ்ஜோதி 8
கள்ளமுறுமிராகாதியைக்காய்ந்தவென்கருணைவெள்ளம் 9
சுட்டுதலெனக்கொழித்ததுய்யமஹாதுரியாதீதம் 10
என்னைவிட்டுநீங்காவென்னருள்மணிக்கோவை 11
தத்துவமாயென்னையழுத்தித்தாலாட்டுஞ்சதானந்தம் 12
உதியாவொடுங்காவென்னையுறுதிசெய்தவுயர்பெருமை 13
துவிதத்துடக்கைவேரறுத்தசுத்தமாநிர்விகற்பம் 14
ஸந்ததமாயென்னைக்கொடுத்தசத்தியமாநிர்க்குணம். 15
பந்தவினைபறிக்கவந்தபக்குவமெய்ஞ்ஞானபண்டிதம் 16
என்னிருதயங்கோவிலதாயிடங்கொண்டவென்பெருமை 17
தற்போதமறக்கெடுத்தவென்ஸ[illegible]பாவகேவலம். 18
நாமரூபங்கறந்[illegible]னகுசெய்தநற்பிரம்மம் 19
[illegible]ருசங்காசரகிதம்பரமமஹாவென்பரஞ்சுடரொளிவு. 20
பெரிதுசிறிதுமற்றபேரின்பமாபேராண்மைப்பெருக்கு. 21
அவவேடமறுத்துமெனக்கருளளித்தவபாரசுத்தம். 22
மங்களமமங்களமுமற்றிருக்குமாழஹாசெருக்கு 23
சொல்லறுஞ்சொல்லளித்தசுகந்தமென்னிறுமாப்பு 24
வரம்புகெட்டமஹத்துவம்வகுக்கெட்டாப்பெருஞ்சிறப்பு 25
உன்னவெட்டாவோர்சூஸ்திரமொய்யற்றவென்றனிப்பு 26
நன்குதீங்குமறக்கெடுத்தஞானப்பண்டிதவௌஷதம் 27
வேதநான்குந்தேடிக்காணவித்தகம்விளைந்தமாவித்து. 28
சர்வமும்நானெனவருளியமாஸந்ததமென்மாக்ஷிமை. 29
பதையாப்பதமளித்தவென்பக்குவபாகநிர்ச்சின்னம். 30
மாற்றறியாப்பொக்ஷமதிக்கவெட்டாவென்னழகு 31
வேற்றறியாவிதேகம்விஷயமற்றவென்னிர்ச்சலனம். 32
நாணவெட்காகிதம்நனப்புமற்றவென்னகமகிழ்வு. 33
விதிவிலக்குமறவிருந்தவென்விஞ்ஞானமாசுதந்திரம். 34
கதிபந்தமறஜொலித்தவென்காலாதீதகைவல்லியம். 35
அருள்கொளிக்குங்கருணைவெள்ளமபரோக்ஷமாவநுபூதி 36
தெருளளித்ததேஜசுவென்சிற்சொரூபமாசின்மயம். 37



கள்ளமனக்கள்வர்கண்டிடாவென்கருத்தருள்கருத்து 38
கொள்ளல்தள்ளலற்றகோதில்லாவென்பெருஞ்சிறப்பு 39
வள்ளலாயெனக்குவந்தவல்லபமாமதிமந்திரவாழ்வு 40
எல்லையற்றவென்னிருப்புயேகாந்தவென்னினியவினிது 41
சொல்லுதற்றசுயஞ்சொக்குசொப்பிரகாசமென்னொளிவு 42
ஸரஸவுல்லாசநேசஞ்ஸகஜமென்நிஷ்களங்கசமத்வம் 43
போக்குவரத்திறந்தவென்புனிதமஹாபூரணத்வம். 44
உத்தமநிராகாரமொருமையுற்றவென்மதிமஹாமகிழ்வு. 45
முத்தர்குலக்கொழுந்துமொழியவொண்ணாமோனமூர்தம் 46
ஸந்ததநிராலம்பஞ்சையோகமென்னுரியநிஷ்கிரியாநிஜம். 47
விந்தைவினோதமற்றவென்விளக்கமுற்றசதாவுதயம் 48
ஒப்பொன்றுமில்லாவென்னுன்னதமாசத்யத்வம். 49
தூங்காததூக்கவின்பந்துலங்குமென்றுய்யவஸ்து 50
பூதாதிபொருந்தாவென்புதுமைமிகுமாபொருள்நிறைவு 51
தோஷாதிபற்றாவென்றுய்யமாமஹாவலங்காரம். 52
நாசமற்றவென்சத்துநாணமற்றவெளியொளிவு 53
சஞ்சலமணுகவொண்ணாவென்சைதன்யமாதிவ்யம். 54
முன்பின்நடுவுமற்றவென்முத்தரணிரத்தினக்கோவை 55
சங்கையொட்டாவென்ஸல்லாபஞ்சர்வமுற்றமாதுய்யம் 56
சத்தியவதிஸ்டானவொழுக்கந்தன்பதிமஹாசாஸ்வதம். 57
பண்புறும்பரமார்த்தம்பற்றிறந்தமாதுறவுதுய்யம் 58
நிராசையுற்றநிற்தொந்தம்நிரஞ்சனமென்பரஞ்ஜோதி. 59
காலமொன்றில்லாதுற்றமாகருணைபொழிந்தநிதி 60
ஒளிபாயொழிவிலொடுக்குமொருதனிவ்யோமாதீதம் 61
சுகிர்தசுகந்தசுகாரம்பஞ்சூக்ஷமமாநுட்பசுகந்தம். 62
சுத்தாசுத்தமற்றவென்சூடாமணிப்பதக்கமாபண்பு 63
தோணாத்தோற்றவுணர்வுசுயவாழ்வெனுமுபசாந்தம். 64
ஸல்லாபலீலைதன்பதிமாதனிச்சின்மாத்திரத்வம் 65
எண்ணரியபெரும்பயனினிதினிதுவென்சுகாதீதம். 66
பெண்ணெனவியப்பிலாவென்பிரிவிறந்தபிராமணத்வம். 67

பொய்கறந்தநிராவரணம்புன்மையற்றவென்புதுமை. 68
சோகமோகாகிதந்துணிவுற்றவென்மாசுதந்திரம் 69
எவ்வுயிருந்நானெனவுமிருந்தருளுமென்னிருப்பு 70
துற்சங்கநிவர்த்திதூய்மையுற்றவென்சொகுஸு. 71
நிகரில்லாவோராசுநித்தியமாவென்சிம்மாஸனம் 72
மெய்ஞ்ஞானமாமாடிவிமலமஹாவென்றெருள்மெத்தை 73
கூடிப்பிரியாமாகுதர்க்கமற்றவென்கொள்ளாக்கொள்கை. 74
விருப்புவெறுப்பற்றவென்விஞ்சையென்னுமதிமந்திரம் 75
என்னைப்புணர்ந்திருந்தவென்னினியமாவிரகஸியத்வம் 76
சிவயோகத்தின்பொலிவுசிவஞானமருள்மெய்விருந்து 77
அன்புருக்கித்திரண்டவென்னபேதவகண்டப்பாகுபதம் 78
கொஞ்சுமஹாவிரஞ்சித்குமவரிடுமென்னுரிமையுயர்வு 79
நிர்ப்பாசநிச்சயமென்னிமலமுற்றநேமமுறைமைவழகு 80
அற்புதமாவதீதம்வகளாவென்பெருவாழ்வுறுமியல்பு 81
சாதனமரசத்தியமென்றடையற்றதோர்நிறைவு 82
அளவுபடாப்பெரும்பெருக்குவதிசயிக்குமோரொளிவு 83
ஜீவஜீவத்தசிவவிரத்தினந்திக்குமற்றவென்சூதானம் 84
தன்னையன்றியணுவுமிலாதளிர்த்தோங்குமென்சாத்வீகம் 85
கண்டார்பூண்டபூஷணமென்கரதலாவமலக்கனியினிரதம் 86
தொண்டர்மாவிளையாட்டுவென்சுத்தர்க்குத்தோழர்மயம் 87
மானாபிமானமற்றவென்மறுமையிம்மைநிதவாழ்வு 88
நேசர்க்குகந்திணைந்தவென்னிற்பின்னநிர்விகாரம் 89
ஓயாமணிவிளக்குவென்னொளிநிறைந்தவோர்சுயம்பு 90
சமயங்கடந்திலங்குமென்சாராச்சையோகமதம் 91
அருட்போகவிளைவுவென்னமிர்தம்புசிக்குமானந்தம். 92
அவயவமொன்றுமிலாவென்னரூபமாவோரின்பம். 93
கோலாகலகோமளமென்குறிகிதகுருவிருந்து 94
விழியாமுடர்விலக்ஷணமென்னைவிட்டிடாமெய்யுறவு. 95
படையாதவோர்படைப்புவென்பரியாருப்பதவுணவு 96
குறைவுநிறைவற்றவென்குன்றுச்சயஜெயமாவீரம், 97



மௌனமணிப்பெட்டகமதிப்புக்கெட்டாநற்பூட்டு. 98
இகபரமுங்கடந்தவென்னினியபாட்டைமாகப்பல், 99
குருவருள்பூண்டோர்தன்கூடுமென்குலாவுநடை. 100
முப்பாழுங்கடந்தவென்முடிந்துவிளைந்தமுத்து 101
துக்கசுகங்கடந்தவென்சுத்தநித்தியசுகிர்தம் 102
பொறுமைபொங்குமென்களிப்புபுணர்ந்திருந்தமாபுனி 103
அசைவிறந்தவென்கோலமறிவிட்டறியாமையற்றல் [தம் 104
புழுமுதலாயிருந்துற்றவென்புதுமைபூண்டமாபுகழ்ச்சி 105
மறைகுருவுத்தியொத்துவடித்தெடுத்தவென்பாகம். 106
புரைகறந்தபோதநிதிப்போட்டெடுக்காப்பொருட்பணிதி 107
சிவயோகயோகஞ்ஜெயஜெயந்திவ்வியமாசும்மாவிருப்பு. 108

சிவோஹம்.

## தேசிகன் மகிமை.

பியாண்டு மெட்டு.

தன்னன தன்னன தன்னன தன்னன
தன்னன தன்னன தன்னன தன்னனே.

எல்லாவுயிருமாயிருந்தபையலேடி
யென்னுளமெய்ஞ்ஞானபுருடனையுகந்தாண்டி, 1

உள்ளதில்லாதென்னதோர்பையலேடி
வொண்டியாய்வந்துமொருமொழிபுகன்றாண்டி. 2

மறைதேடிக்கண்டிடாமௌனப்பையலேடி
மனமறமருவியும்வாக்காதிகெடுத்தாண்டி. 3

ஒன்றுவிரண்டெனவுமோதாப்பையலேடி
யும்மத்தனுக்கிவொன்றாய்ப்புணர்ந்தாண்டி

புருடன்பெண்ணலியற்றடேழக்கற்றபையலேடி
போக்குவரத்தறப்பூட்டினன்பாரடி. 5

பார்த்தவிடமெலாம்பரவும்பரப்பையலேடி
பரக்கோலமாக்கிப்பதைப்பறவைத்தாண்டி. 6

நனைப்புமறப்பற்றஞானப்பையலேடி
நன்றுதீதுமறநன்குசெய்தான்பாரடி. 7

சங்கையொன்றுமிலாஜாதிகெட்டபையலேடி
மங்கையேயெனைமதிப்பறச்செய்தானடி 8

ஆறாறுங்கடந்தவசையாப்பையலேடி
சோராவின்பமாய்த்தோய்த்தானிங்குபாரடி. 9

காலமூன்றுங்கடந்தபையலேடி
கர்ம்மரகிதமாய்க்கணித்தான்பாரடி. 10

சுட்டொழிந்தமாசூஸ்திரப்பையலேடி
சூதாயிருத்திங்ஙன்சூட்டினான்பாரடி 11

பேதரகிதமாபெரியதோர்பையலேடி
பிரம்மமதாக்கிப்பிரிவறவிருந்தாண்டி. 12

சின்னமொன்றில்லாச்சின்மயப்பையலேடி.
சித்ததுவாக்கிச்சிரித்துமகிழ்ந்தாண்டி 13

விஷயமற்றிருந்தவித்தகப்பையலேடி
விதேகமாக்கிவிட்டுநகைத்தாண்டி. 14

நாணமொன்றில்லாநல்லபையலேடி
நாமரூபமறநட்டிட்டான்பாரடி. 15

என்முறைதவராதிசைந்தபையலேடி
என்னாணையெனக்குமுகந்தசுகந்தண்டி. 16

புன்மைக்கெட்டாபுருஷார்த்தப்பையலேடி
பூரணமாக்கிப்பொருந்தினான்பாரடி 17

ஒன்றையுமொப்பிடவொவ்வாப்பையலேடி
வொழியாப்பேராண்மையொட்டினான்பாரடி. 18

சிவோஹம்.



## தேசிகனுபதேச மகிழ்வு

இராகம்—கமாசு தாளம்—ஆதி.

பல்லவி.

இனியிவனுறவுநீங்குமோவினியவென்னை
மீட்டிப்புணர்ந்தபின் இனி

அநுபல்லவி.

தன்னந்தனிப்பையலோடுதழுவித்தழுவிங்ஙன்
றானேதானேதானேத்தனியாய்த்தனித்தபின் இனி

சரணங்கள்.

நிர்ணயமாகவேநீசங்களைந்தான்
நீதான்மிச்சமென்றெடுத்துத்தந்தான்
கர்ம்மரகிதங்காணெனக்கலந்தான்
காலாதீதமதாய்க்கணித்துமமைத்தான் இனி 1

சொர்ணமேயென்னோடுதோய்ந்துகளித்தான்
றாயமாவின்பமாய்ச்சொக்கிக்கொளித்தா
னற்பமுமன்னியமில்லாத்தொடுத்தா
னானந்தாதீதமாயாக்கிக்களித்தான். இனி 2

போக்குவரத்தறப்பூரணஞ்செய்தான்
புண்ணியபாவமிரண்டறக்கொய்தான்
றுக்குஞ்சுகாதீதந்திங்ஙன்றோய்த்தான்
ஸந்ததம்நில்லெனச்சாதனமீய்ந்தான் இனி 3

மஹாமௌனமென்றுவாரியணைத்தான்
மாமங்களமாகத்தாளமும்போட்டான்
சோசோபனம்பாடிச்சொரூபமேயென்றான்
சூஸ்திரசொந்தசுயமாய்ச்சூட்டிட்டான் இனி 4

கோமளசொஸ்தகொண்டாட்டமுமிட்டான்
கோதில்லாநிர்மலவாஸனம்போட்டான்

சீதளபுஷ்பவிதேகஞ்சொரிந்தான்
ஜிலுஜிலுஜிலுவெனக்குளிரக்கொளித்தான் இனி 5
அருளமுதூட்டியணைத்துப்பூரித்தா
னகம்புறமொத்துமடித்துநகைத்தான்
றெருளுருவமிர்தெனத்தேக்கித்திளைத்தான்
றிவ்யலோகந்தமாஜெயமாய்ஸ்தாபித்தான் இனி 6

சிவோஹம்.

## தத்துவதரிசனம்.

இராகம்—கமாஸ் தாளம் ரூபகம்—அக்ஷரம்.

பல்லவி

சிவஞானமென்கிற மாசிவோஹமே
தீயமாயையைஜெயிக்கின்ற தீரமிதுபாயமே

அனுபல்லவி

தவசிவராஜயோக தனிமாமெய்ஞ்ஞானமே
தத்துவந்தானுனபொது நடனமிதுகாணுமே.

சரணங்கள்

1 பதவிபூண்டமஹா பரமசுயம்பாகமே
பாக்கியமான நிராகாரவருட்டிரட்போகமே
உதவியொழுகிய ஸமரஸசையோகமே
யுண்மையுறைத்துறுந் தெருள்மிகுமேகமே சிவ.
2 மஹாமௌனமென்கின்ற மதிமாமந்திரமே
மாமகிமைநிறம்பிய சுயமஹாசுதந்திரமே
சுகாதீதரூதான சுகந்தமாநிரஞ்சனமே
சுகாந்தம்விளைந்தெழுந்தத்துய்யமாபேரின்பமே சிவ.
3 கோமளபூரண சீதளவமிர்தபாகமே
குரவர்குலாமணி ஹாரமாகோலாகலமே.



பூமழைவருள்பொழிந்தபோதமாநிர்மலமே
புதுமைபொருந்தியசாதகஸாரஸசமமே சிவ
4 தோற்றந்துறந்திலங்குந்துவிதசூனியமே
ஜோதிப்பிரகாசபர்நிர்ச்சலனநிர்ச்சங்கமே
வேற்றறியாபிரம்மமாமஹாஜெயஜெயமே
விதேகபுனிதமஹாவிஞ்ஞானசுதந்தரமே சிவ

சிவோஹம்

## சாதனைவிருப்பம்.

இராகம்—எதுகுலகாம்போதி தாளம் சாப்பு.

பல்லவி.

உன்னைப்பிரிந்திடாமருந்ததுவுங்கொஞ்ச
முகந்தெனக்கூட்டுமையா.

அநுபல்லவி

என்னைவிதோவளித்தேனின்னையெனக்களித்தென் (உ)
கண்ணேயெனவெடுத்துக்கட்டிமுத்தங்கொடுத்து.

சரணங்கள்

அன்னையேவுன்னையன்றியாருந்துணையும்வேண்டே
னிர்ணயமாகுமிதுநிச்சயஞ்சொன்னேன்சொன்னேன்
பின்னமில்லாத்தந்தையேபெருமைக்குகந்தபாவா
யென்னையெனக்கறியவிழுத்துமடியிலிட்டும் (உ) 1

சரியைகிரியையோகஞ்சலனமனுதும்வேண்டேன்
சங்கையறவெழுந்தசத்தியமெய்ஞ்ஞானம்பூண்டே
னெங்கெங்குங்காணவொண்ணுவின்பம்பேரின்பம்பொங்க
தங்குஞ்சொரூபபீடந்தனிற்நீதெனையணைத்தும். (உ) 2

வாக்குமனதிற்கெட்டாவமிர்தவாரிதனைவாரியூட்டி
போக்குவரத்துமற்றபரிபூரணமாயாக்கிக்கூட்டி
தாக்கும்பிரம்மானந்தத்தத்துவவிரஸம்புகட்டி.
நீக்கமற்றதொட்டிவிட்டுநீகாணவுமாட்டி. (உ) 3

ஆ[illegible]வெனும்பிரியாவதீதமுடியுஞ்சூட்டி
யகண்டவமலமானவசங்கக்கொடியுநாட்டி
வாவாவாவெனமதிப்புக்கடங்காக்காட்டி
மாமௌனரகஸியமருந்தைநிறம்பவூட்டி. (உ) 4

சிவோஹம்.

## மௌனமணிப்பதிகம்.

தெருள்பெருகுமிருளுருகுந்திருவடியைப்புணர்ந்திடவே
குருவருளுமனுகிநிற்குங்குன்றுமனங்கரைந்துமறுங்
கருமவினைமுழுதுங்கெடுங்காணொண்ணைப்பொருள்புணரு
முறுதிதரும்மௌனமணியொளிவேமாசிவயோகம். 1

அத்வைதமறிவிக்குமஞ்ஞானமறப்பறிக்குஞ்
சித்தமலக்களைகளையுஞ்சின்மயமாபொருளாக்குஞ்
சுத்தமஹாமௌனமெனச்சொல்லாமற்சொல்லளிக்குஞ்
சத்தருளுமௌனமணிஸகஜநிஷ்டைசிவயோகம் 2

ஒழிவுதரும்பிரம்மமாக்குமொருதனிமாவீடளிக்கு
மழிவுறும்பவவீதியனைத்தையுமேவறவொழிக்குந்
தெளிவுதரும்மெய்ஞ்ஞானஞ்சித்திபெருஞ்சத்தியமே
குளிர்கருணைமௌனமணிகொஞ்சுமஹாசிவயோகம் 3

அகமதுவைவஸ்துவாக்குமகண்டமதாயிருத்திவிடு
மிகபரமுமறநோக்குமேகமதாயிசைத்துப்போடுந்
தகும்பெருமைதந்தருளுஞ்சர்வமுள்ளும்புறம்பிருத்துஞ்
சுகந்தங்கமழ்மௌனமணிசுடரொளிவேசிவயோகம். 4

தத்துவமேபோதிக்குஞ்சந்தேகமறக்கெடுக்குஞ்
சுத்தபரிபூரணமாய்த்துரியநிலைநிலைநாட்டு
முத்தமமாயுண்மையோதுமொருபொருளாயாக்கிவிடு
மத்துவைதமௌனமணியருட்ஜோதிசிவயோகம். 5



விடையமெலாம்விலக்கிவிடும்விமலபரஞ்சுயமருளுந்
தடையயிலும்பரிசமதைசாம்பலெனத்தூற்றிவிடும்
படையுடையபூதம்பொறிபுலன்களையும்போதமாக்கு
மடையும்பதிமௌனமணிவகண்டொளிவேசிவயோகம். 6

ஸந்ததமாவருளளிக்குஞ்சைதன்யமயமதாக்குஞ்
சுந்தரம்போலுறவுசேர்க்குஞ்ஜோதிதத்வமாக்கிவிடுந்
தந்திரமாநிஷ்டைதருஞ்சதானந்தமாக்கித்துங்குஞ்
சொந்தமஹாமௌனமணிசுயஞ்ஜோதிசிவயோகம். 7

ஆணவத்தையறக்கெடுக்குமதீதமதாயாக்கிநிற்குங்
காமியத்தைவேறுக்குங்கர்ம்மமதையாட்டியோட்டு
மாயைதனைச்சுட்டுநீற்றும்மாமதிமாதீபமேற்றுந்
தூயமஹாமௌனமணிசுடர்க்கொழுந்தேசிவயோகம். 8

சதுர்மறைக்குமப்பாலிருத்துஞ்சாஸ்வதமாய்த்தந்தருளும்
பகிர்முகத்தைப்பாழதாக்கும்பதவியந்தர்முகமதாக்கும்
விதிவிலக்கைரகிதமாக்கும்மேவும்பந்தமறக்கறக்குங்
கதியருளும்மௌனமணிகண்ணொளிவேசிவயோகம். 9

இருளறுக்குமௌனவாளளிக்குமேகாந்தவின்பந்தருந்
அருள்ஜொலிக்கவிழிநோக்குமபேதமஹாவழகுமிடும் [க்குந்
பொருள்பதிக்கும்பொருளாக்கும்பூரணமாய்ப்புணர்த்திவை
தெருள்கொளிக்கும்மௌனமணிஜெயவொளிவேசிவயோகம்

நிஜஞ்சிறக்குங்கல்மஷந்துறக்கும்நித்தியமாய்நின்றிலங்குந்
துஜம்பெருக்குஞ்சுயங்கொடுக்குஞ்சுதந்திரமாநிலையளிக்கும்
வலமணைக்கும்மாமஹத்தாக்கும்மாற்றில்லாவமிர்தூட்டும்
விஷங்கறக்கும்மௌனமணிவித்தகமாசிவயோகம். 11

சிவோஹம்

## தேசிகனருளைச்சேர்ந்துகொளித்தல்.

இராகம்—ஆரபி தாளம்—ஆதி.

பல்லவி.

வாரானோவல்லையோவிவன்கேளடி
வாக்காதிக்குமொவ்வானிப்போ. (வா)

அநுபல்லவி.

சேரானோவென்னைச்சொல்லுந்திவ்யமாபேரின்பந்தங்க
ஜோராயெனக்கிணங்கித்துய்யமதாயிங்குவிப்போ. (வா)

அங்கம்புளகாங்கிதமாயழகாய்ப்பூரித்ததிங்க
ளானந்தம்பெருகிப்பொங்கித்ததும்பிமகிழுதிங்க
ளெங்கெங்கும்பூரணமாயிசைந்துஜொலிக்குதுகா
ணென்னடியெனக்குகந்தானிங்குவினிதுறவிப்போ. (வா) 1

சொர்ணமேனிவுளமுருச்சொக்குதிங்கனபேதமதாய்
நிர்ணயமென்றுணைநீங்காப்போதைநிர்விகற்பன்
சர்வமுமெனப்புகழ்ந்தான்சையோகமாக்கிக்கொண்டான்
கர்மசூனியனைப்பார்கைவல்யமாய்விப்போவிப்போ (வா) 2

ஸாஸவுல்லாஸமுற்றோன்சாதனங்கள்முற்றும்பெற்றோன்
புருஷன்பெண்ணலியற்றோன்போக்குவரத்தறவுற்றோன்
பாசம்பற்றுக்கறந்தோன்பரம்பரையானகொற்றோன்
வேஷாதிரகிதமுற்றோன்விமலமஹாதேசனிப்போ. (வா) 3

மானாபிமானமற்றோன்மங்களசுயம்பாயுற்றோன்
றோணுத்தோற்றமதாயுற்றோன்ஜோதிசொரூபமுற்றோன்
காணமறப்புணர்ந்தோன்ஞானமாமதங்கொளித்தோ
ஞானமறவுமிரசித்தோனெப்புறவுமிப்பவிப்போ (வா) 4

ஆறாறுக்கப்புறத்தோனதீதமஹாமௌனத்தோன்
பாராதியற்றுற்றோன்பதைப்பறும்நிர்க்குணத்தோ



னோராவுன்றுமுற்றோனொளியுமிருளுமற்றோன்
போராப்போராண்மையுற்றோன்பெரிதினும்பெரியனிப்போ 5

தேஜஸ்மயமாயுற்றோன்சின்மயசுதந்திரத்தோ
னேசாநுபூதியுற்றோனிச்சலனசிங்காரத்தோன்
கோசாதியணுகாதுற்றோன்கோலாகலநித்தியத்தோன்
பேசாநிராகாரமுற்றோன்பிரம்மதுரியாதீதனிப்போ (வா) 6

சிவோஹம்.

## போதவிளக்கம்.

இராகம்—சாவேரி, தாளம்—சாப்பு

பல்லவி.

அபேதப்போதவரியன்பேரிலாவல்கொண்டதுமிக
வழகாமோபோடிகண்ணே கண்ணே.

அநுபல்லவி.

தேகோகரகிதமாஸ்திரமாபோராண்மையுற்றோன்
போதோகபூரணத்தோன்போடிவிவனோடென்னோ அ.

சரணங்கள்.

தன்னந்தனியேகன்சங்கமிழந்தோனையோ
சின்னபின்னமறியான்றேடாவிடத்திருப்போ
னுண்ணியசூஸ்திரத்தோனுட்பார்க்குகந்திருப்போ
னன்னியமற்றவண்டியசங்கனிவனோடென்னோ அ.

வாக்காற்றொனிக்காவென்னோமனதிற்கிசையானின்னோ
நீக்கம்புணர்வுமற்றோன்நிர்க்குணகேவலசொஸ்தோன்
றாங்காத்தூக்கமிலண்டிசுத்தநிர்ப்பாசனையான்
பாங்காப்பதையாப்பையல்பக்ஷமிவனோடென்னோ. அ.

போடிபோடிபொய்யிழந்தான்புருஷன்பெண்ணலியுமிலான்
கூடியவனோடென்னோகுறைவோநிறைவோமின்னோ

வாடிவனுறவுவைத்தால்வந்துதுஜங்கட்டிடுவ
னாடிடாமாநாட்டக்காரனன்குதிங்குமற்றானென்றோ. அ.

காலநேரங்கெட்டுவுற்றோன்கர்ம்மத்துவேஷிபோடி
கோலங்கெட்டகோமளண்டிகுன்றுமாவாணவத்தோன்
சாலவுற்றசத்தியனுஞ்ஸகஜமித்தொழில்தானென்றோடி
வாழாவாழ்வுபெற்றானொடுமருவிபென்றோவின்பம்போடி. அ.

சிவோஹம்.

## பொருளிலக்கணம்.

அரியவுரிமையையறிந்தமாவறிவுள்ளார்
புரிந்தபுதுமைகாண்பொய்யறப்பொருந்தினர்
விரிந்தமனதுடன்மேவிச்சுழல்வோரித்தைத்
தெரிந்துமறுமொழிசெப்புவதெங்ஙனம். 1

ஞானநெறியுற்றாகிலுமன்னேர்மைகே
ளானாகிதமாயொழுகும்மெய்ஞ்ஞானந்தான்
ஈனசகிதமாயிருக்கும்பொய்க்கர்மமியுமித்தைக்
காணப்படுமோசொல்கற்பனாதீதமே. 2

உள்ளத்துறவோருரைக்குமாவாக்கியங்கள்
விள்ளப்படாதவிதேககோமளமானதன்றோ
கள்ளப்புலனதியொடுகலங்குந்துவிதத்தோரித்தை
சொல்லற்கெளிதோமாதுரியாதீதப்பிழம்பே. 4

அல்லல்கறந்துள்ளவமலமெய்போதத்தோர்
சொல்லிக்கொளிக்குஞ்சுகாரம்பவமிர்தத்தை
நெல்லினுட்பதாதுபோல்நின்றுறும்பேதத்தோரித்தை
தெள்ளிவடிவத்தெடுத்துப்பொருள்செப்புவதுமெங்ஙனம். 5



வாசாமகோசரார்வழுத்துமாவாக்கியங்கள்
நேசாநுபூதியதாய்நிற்கும்பெருந்தகைமையன்றோ
ஆசாபாசம்தாஷமடைநதுள்ளவஞ்ஞானரித்தைப்
பேசத்தான்படுமோசொல்பெரியமாமௌனமே. 5

அத்துவைதப்போதைமீறியறையுமஹாவாக்கியங்கள்
சித்துமயமாய்ச்சிறந்துநிற்குஞ்சிங்காரசீர்மையன்றோ
புத்துறுமீசற்போற்பொய்நீரில்விழும்புழுககளிதன்
வித்துறுமிக்கருத்துணர்ந்துவிளம்புவதுமெங்ஙனம். 6

காலங்கடந்துள்ளோர்கனிந்தொழுகுங்கனிவதுவுங்
கோலாகலமான்மாகுணாகிதக்கொஞ்சுதல்தானன்றோ
பாழானமூன்றைநம்பிப்பதைத்துழலும்பருவமிலரிதனைச்
சாலவுமறிந்துற்றுபொருள்சாற்றுவதுமெங்ஙனங்காண்

வரம்புகெட்டிருந்துள்ளமஹாத்துக்கள்மகிழ்வுகே
ளுறவுற்றுணர்வாயொழுகும்வியோமாதீதமன்றோ
புறம்புற்றதேகாதிபொருளெனப்போற்றுந்தேகோகி
வுறழ்வுற்றுபருபொருளேயோதுவதுமெங்ஙன்சொல். 8

ஆறாறுக்கப்புறத்தேயமர்ந்துளோரறையுமம்மொழியும்
வேறாகாப்பேராண்மைவிஞ்ஞானவிகிர்தவிளக்கமன்றோ
மாறுடுதலுற்றுவநந்துகின்றவஞ்சநெஞ்சகரித்தைப்
பூராயமுற்றறிந்துபொருளெடுத்துரைப்பதெங்ஙன். 9

பாவனாதீதமுற்றோர்பகரும்பாஸ்பராரகஸியத்தைக்கேள்
தாவனமாசத்தியமாய்த்தங்கிநிற்குஞ்சம்பூரணமானதன்றோ
கோவணம்நழுவுதலறியாக்குடும்பக்கவலைகொண்டலைவரிதை
யாவணம்பண்ணியுமதனுட்பொருளறிந்துரைப்பதெங்ஙன்

சிவோஹம்.

## தேசிகவின்பம்.

வள்ளலேநாமுறமருவினவின்பமே
மாறுதுவந்தருளும்
வாசாமகோசரவாழ்வதுதந்துற்ற
வற்புதமேவிருந்தருளும். 1

உல்லாசபேரின்பமொழியாகமூத்தியமா
ஆரியதேசிகமேவந்தருளுஞ்
சல்லாபஸந்ததஸகஜமாயிணைத்திட்ட
சத்தியமேவிருந்தருளும். 2

போதமயமதாய்ப்புணர்ந்துளதிவ்யமா
பொக்ஷமேவந்தருளும்
பேதமதறியாப்பிரம்மமாமௌனப்
பெரும்பொருளேவிருந்தருளும் 3

தேஜஸ்மயமதாய்த்திருவருள்சொரிந்தவென்.
சின்மயமேவந்தருளும்
நாசாதிரகிதமாய்நட்டிட்டபேராண்மை
நன்குறவேவிருந்தருளும். 4

இருவினைரகிதமாயெனையுமழுத்தியவென்
னேகாந்தமேவந்தருளுந்
தெருளினைபெருக்கிச்சிவமாய்ப்பொருத்திட்ட
திவ்யமாமயிலேவிருந்தருளும் 5

என்னைப்பிரியாதிலங்குஞ்ஜிதேந்திரிய
வினியமாவின்பமேவந்தருளுந்
தன்னைபபுணர்ந்துற்றஸகஜநிஷ்டாநுபவ
சமரசமேவிருந்தருளும். 6



கண்ணொடுகண்ணொத்திக்கருணைசொரிந்தவென்
கைவல்யமாமதிவந்தருளும்
மண்ணொடுமியாவையுமதியாமற்றுறந்துற்ற
மௌனசுபாவமேவிருந்தருளும் 7

சின்னபின்னமறச்சிவமதாய்ச்செய்தவென்
சிற்சொரூபமேவந்தருளும்
உன்னவுயர்வதாயொழிவினிலொடுக்கிட்ட
வொருதனியேயிருந்தருளும் 8

பதையாப்பதவியாய்ப்பதித்தென்னைத்தாங்கிட்ட
பரமதேசிகமேவந்தருளு
முதையமஸ்தமனமொன்றிலாவொளிதந்த
வோம்பிரம்மமேவிருந்தருளும். 9

சொஸ்தசுதந்திரசுயம்பதுவாக்கிட்டவென்
சூஸ்திரமேவந்தருளும்
வஸ்துவசமுறவாக்காதிகெடுத்தவென்
மௌனதேசிகமேவிருந்தருளும். 19

சிவோஹம்

## ஆனந்தக்களிப்பு.

மௌனம் மௌனம் மௌனம் மஹா
மௌனம் மௌனம் மௌனம் மௌனம்.

ஓமென்றிருந்தமாமௌனம் எனக்
குரூவெடுத்துவந்துகந்துமிங்ஙன்
றூமென்றுந்தன்னைத்தந்தாள சுத்த
தத்துவமென்றோர்தனித்ததுசுகந்தம். 1

ஐந்தாறைந்தைக்களைந்து துய்ய
வமலதத்துவமாக்கிவைத்து
அந்தாறுக்குமப்பா லென்னை
யமைத்திருத்தினவழகென்றோசுகந்தம் 2

உடல்பொருளாவியைக்கேட்டான் சரி
யொப்பியேனுந்தேன்மறுக்காதிங்ஙன்
ஜடமின்றிவுள்ளும்புறம்பும் விதேக
சத்தாயமைத்தமாஸகஜம்பார்சுகந்தம். 3

துரியசமரசந்தேரய்த்தான் மஹா
சூஸ்திர துரியாதீதமீதென்றான்
பிரியாமாபேரின்பமிதுசேரென்றான் றய்ய
பிரம்மாகவியமென்கொளேலாசுகந்தம். 4

பரமிகமிரண்டறப்பரவிடுவென்ற னித்தைப்
பரவாப்பாவிடப்பகரொண்ணுதென்றான்
புறம்பகம்பூண்டுநில்பூரணமென்று னபேதப்
பூர்த்தியாகிப்பூண்டதுசுகந்தம். 5

மாமெய்ஞ்ஞானமாசொஸ்தம் மஹா
மௌனசுபாவம்மலர்ந்தற்றபுஷ்பந்
தேகாதிகள்பற்றுமெய்ப்பஸ்ப மென்னை
திவ்யவஸ்தெனசிரித்ததுசுகந்தம் 6

நேர்த்திநிர்விகற்பநேர்மை மஹா
நிஷ்களங்கசொரூபமாமகிமை
சத்தியவநுபூதிஸகஜமாகூர்மை திவ்ய
சங்கற்பரகிதக்கலவிமாசுகந்தம். 7

சிவராஜயோகத்தின்கண்ணே மஹா
சின்மயபொக்ஷந்திரண்டதுமின்னே
யவவேடமணுகொண்ணுதென்னே சுத்த
வதீதவசங்கவழகென்னேசுகந்தம். 8

நிராசையென்றொருஸ்தான மதில்
நித்தியவித்திட்டருள்நீர்நிறைத்தான்



பரஸ்பரமாக... ர்ந்தா சத்ய
பக்குவக்கனியதிற்பழுத்ததுசுகந்தம். 9

ஆண்டான்விளைவித்திக்கனிபார் மஹா
வழகாக்கனிந்தமாகனிரஸமமிர்தம்
பூண்டதுமாபோதப்பிழம்பா யிந்தப்
புதுமையைப்புகன்றிடபொருந்தாமாசுகந்தம். 10

போக்குவரத்தற்றபுதுமை இத்தைப்
புணர்ந்திடவரியவிறுமாப்புமகிமை
தாக்கும்மௌனமாபெருமை சத்ய
ததாகாரவுரிமைதரித்ததுசுகந்தம். 11

ஓர்விதிவிலக்கொன்றுமொப்பான் வேரா
றொப்பில்லாவத்வைதமாகவிருப்பான்
வேறுமுன்னிலையறுப்பான் றன்னை
விலகிடாவிசைத்தணைத்தான்பார்சுகந்தம். 12

மொழியாமொழியால்மொழிந்தான் சுத்த
மொழியாமொழியால்மூண்டதைக்கேளும்
விழியாமூடாதுற்றுக்களிததா னிந்த
விளையாட்டுமாகுயோர்விளம்பிடாய்சுகந்தம். 13

என்னையுணர்ந்தபின்னென்னே இவ
னென்னைக்கூடிக்கொளித்திட்டான்மின்னே
சின்னுபின்னமிலையென்னே மஹா
திவ்யதேஜஸ்... திநிதிசுகந்தம். 14

அபாரபாவாதீதமென்னே சுத்த
வபரோக்ஷாநுபூதிபானதுவென்னே
நிராவரணநிர்க்குணமின்னே மா
நிராகாரமஹாநேர்த்திபார்சுகந்தம். 15

ஆகல்லவென்றிடவமைப்பு பொல்லா
வாரோபசங்கைகடங்காக்களிப்பு
பெற்றுப்பேராண்மைத்தனிப்பு மஹா
பேசாச்செருக்கிதுவாகுமோசுகந்தம். 16

மலடிபிள்ளையிலாப்பெண்ணு மவள்
மக்கள்மாவல்லவரென்றதுபோலாம்
விலகிடாமாயைவிரிந்ததென்றிடல் வெறும்
வீணெனக்கண்டமாவிளையாட்டுசுகந்தம் 17

என்னுமோபேச்சற்றபேச்சு இத்தை
யிம்மென்றுகேட்டிடவிப்பொருளாச்சு
உன்னுவுயர்வுற்றதாச்சு மஹா
வொழியாக்காலாதீதமுற்றதுசுகந்தம் 18

முப்பாழும்பாழாகிப்போச்சு அத்தை
முனிந்தவப்பர்லன்றேவுணர்வதுமாச்சு
அப்பாலதுவன்றேவறையாத்தாச்சு இந்த
வடங்காப்பேராண்மைதானுகுமோசுகந்தம். 19

சுகந்தஞ்சுகந்தமென்றாச்சு சுத்த
சுகாதீத்மாகத்தோய்ந்துளதாச்சு
இகபாசகிதமுற்றிருந்திடலாச்சு இந்த
வினியமாமமதையிதாகுமோசுகந்தம். 20

சிவோஹம்.

226828